ஜல தீபம்
சாண்டில்யன்
ஜல தீபம்
பாகம் 3
சாண்டில்யன்
வானதி பதிப்பகம்

சாண்டில்யன்

மூன்றாம் பாகம்

இந்நூலாசிரியரின்
பிற நூல்கள்

கடல் புறா I, II & III
யவன ராணி I, II
ராஜ முத்திரை I, II
ராஜ திலகம்
ராஜ பேரிகை
வசந்த காலம்
மன்னன் மகள்
மலைவாசல்
கன்னிமாடம்
புரட்சிப் பெண்
ராஜ்யஸ்ரீ
பாண்டியன் பவனி
நாகதேவி
விலை ராணி
சேரன் செல்வி
கவர்ந்த கண்கள்
அவனி சுந்தரி
மங்கல தேவி
ஜலமோகினி
கடல் ராணி
மோகினி வனம்
மலையரசி
மோகனச் சிலை
ராஜயோகம்
ராணா ஹமீர்
நீலவல்லி
சந்திரமதி
ஜீவ பூமி
மஞ்சள் ஆறு
ராணியின் கனவு
செண்பகத் தோட்டம்
மதுமலர்
மூங்கில் கோட்டை
இளைய ராணி
நங்கூரம்
உதயபானு
நாகதீபம்
பல்லவ திலகம்
நீள்விழி
நிலமங்கை
மனமோகம்
இந்திரகுமாரி

வானதி பதிப்பகம்
தியாகராய நகர் — சென்னை-17

மூன்றாம் பாகம்

அத்தியாயம் 1

கவர்னர் ஏஸ்லாபி

பிரிட்டிஷாரின் கிழக்கு இந்தியக் கம்பெனியின் கவர்னரான வில்லியம் ஏஸ்லாபி துறைமுகத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த தமது மாளிகையின் மாடி அறையில் மிகுந்த மனச் சஞ்சலத்துடனும் எரிச்சலுடனும் உலாவிக் கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கொருமுறை மேற்குச் சாளரத்தண்டை சென்று அதன் மூலம் எதிரே இருந்த கடல் பகுதிகளை நோக்கிக் கொண்டுமிருந்தார். இப்படி இரண்டு மூன்று முறை கடலை நோக்கிவிட்டு அறையின் நடுவுக்கு வந்த கவர்னரைப் பார்த்தவண்ணம் அறை யிலிருந்த அவரது மேஜையிலிருந்து நாலைந்தடி தள்ளி நின்றிருந்த வில்லியம் கிப்போர்ட், "தங்கள் மனவருத்தத் திற்குக் காரணம் தெரியவில்லையே" என்றான் மெதுவாக. அவன் குரலில் போதிய அளவு பயமும் ஒலித்தது.

கவர்னர் ஏஸ்லாபி நீண்ட நேரம் அவன் கேள்விக்குப் பதில் சொல்லவும் இல்லை, அவனைத் திரும்பிப் பார்க்கவு மில்லை. துறைமுகத்தில் நின்றிருந்த கிரந்தாம், ஸாமர்ஸ் என்ற கப்பல்களை மட்டுமே ஊன்றி ஊன்றிப் பார்த்தார். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு, ''என்ன சொன்னாய் கிப்போர்ட்?'' என்று வினவினார்.

''தங்கள் மன வருத்தத்திற்குக் காரணம் தெரியவில்லை யென்று சொன்னேன்'' என்று மீண்டுமொருமுறை தான் கூறியதைத் திருப்பிச் சொன்னான் கிப்போர்ட்.

கவர்னர் ஏஸ்லாபி சாளரத்தின் பக்கத்திலிருந்து உள்ளுக்குள் நடந்து வந்ததும் நடுவிலிருந்த தமது நாற்காலியில் அமர்ந்து மேஜைமீது கையை ஊன்றிக் கொண்டு, ''காரணம் தெரியவில்லை உனக்கு?'' என்று வினவியதன்றி, தமது கண்களை அவன்மீது நிலைநாட்ட வும் செய்தார். கவர்னர் ஏஸ்லாபி நல்ல உயரமும் பருமனுமாய் இருந்ததன்றி அவர் பார்வையில் தீட்சண்ய மும் தீர்க்காலோசனையும் இருந்தது. பம்பாயின் மிகச் சிறந்த கவர்னர்களில் ஒருவரெனப் பெயர் பெற்ற ஏஸ்லாபியின் தீர்க்கதரிசனத்தைப் பற்றியும், விஷயங் களை நுண்ணறிவோடு ஆராயும் திறனைப் பற்றியும் மகாராஷ்டிர மன்னர் வட்டாரங்களில்கூடச் சிலாகிக்கப் பட்டு வந்தது. அவருடன் அலுவல் புரிந்த வெள்ளைக் காரர்கள், இந்தியர்கள் அனைவருமே அவரை மதித்து வந்தனர். கனோஜி ஆங்கரேகூட அவரிடத்தில் சற்று எச்சரிக்கையுடன் நடந்து வந்தார். 'கவர்னரின் பார்வைக்கும், பேச்சுக்கும் எப்பொழுதும் ஒரு பொருள் உண்டு' என்று எல்லோரும் கருதி வந்தனர். ஆகவே, அவர் கிப்போர்ட்டின் கேள்வியைத் திருப்பி அவனை உற்றுப் பார்த்ததும் கிப்போர்ட் சிறிது சலனமே அடைந்தான்.

''தெரியவில்லையே பிரபு'' என்று அடக்கமாக உரைக்கவும் செய்தான்.

கவர்னர் ஏஸ்லாபியின் அழகிய உதட்டின் மேல் புறத்தில் சீராகக் கத்தரித்து விடப்பட்ட மீசை லேசாக ஒருபுறம் இழுபட்டது. ''கிப்போர்ட்! வரவர உனக்குப் பல விஷயங்கள் புரிவதில்லை. மனிதர்களுடைய சக்தியை எடை போடுவதிலும் சற்றுக் கவனக்குறைவுடன் இருக் கிறாய்'' என்று கூறி, அவன் மணிக்கட்டிலிருந்த காயத்தின் கட்டை லேசாகப் பார்த்தார்.

கிப்போர்ட்டின் முகம் வெட்கத்தால் சிவந்தது. கவர்னர் எதைக் குறிப்பிடுகிறாரென்பதை அவன் நன்றாக உணர்ந்து கொண்டான். கொலாபாவின் நிகழ்ச்சிகளை அவன் பூர்ணமாக மறைப்பதற்கு வேண்டிய முன்னேற் பாடுகளைச் செய்து கொண்டுதான் பம்பாய்க்குள் நுழைந் தான். நடந்ததைச் சொல்லுவதில்லையென்று காதரை னிடமும் தனது மெய்க்காவலரிடமும் உறுதிமொழி வாங்கிக்கொண்ட பிறகே பம்பாய் கவர்னர் மாளிகைக்குள் நுழைந்தான்.

உண்மையில் மெய்க்காவலர் யாரும் சொல்லவில்லை விஷயத்தை என்பது அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. தனது மையலில் கட்டுண்டு கிடந்த காதரைனும் சொல்ல வில்லையென்பதும் அவனுக்கு நிச்சயம். அப்படியிருக்க நடந்ததை யார் சொல்லியிருப்பார்கள் கவர்னருக்கு என்று சென்ற பதினைந்து நாட்களில் அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

ஒருவேளை கவர்னருக்குத் தெரிந்து விட்டதாக நினைப்பது தனது பிரமையோ என்றுகூடச் சிந்தித்தான். ஆனால் அது இருக்காது என்பதற்குச் சான்றுகளைக் கவர்னர் அவ்வப்பொழுது அளித்துக் கொண்டிருந்தார். காதரைனைக் கொண்டுவந்து கவர்னரிடமும் ஒப்படைத்து விட்டு, கெட்ச் ஆனும், கவர்னர் ஆயுதக் கப்பலும் இரண்டு மூன்று நாட்களில் வந்து சேருமென்று செய்தி கூறியபோது கவர்னரின் கண்கள் தனது மணிக்கட்டை நோக்குவதைப்

பார்த்தான். அந்தக் காயத்துக்குக் காரணம் கேட்கவில்லை கவர்னர். காதரைனை ஏற்றுக்கொண்டு அவள் தமது மாளிகையில் தங்க இடமளித்தார். கிப்போர்ட்டின் மெய்க் காவலரை வேறு அலுவல்களுக்கு நியமித்தார். அன்றைய பேட்டி பதினைந்து நிமிடங்களில் முடிந்துவிட்டது.

அன்றைக்குப் பிறகு பல நாட்கள் கவர்னரைச் சந்தித்த போதெல்லாம் அவர் பேச்சு மிக இடக்காயிருப்பதைக் கவனித்தான் கிப்போர்ட். கொலாபா நிகழ்ச்சிகளை அவர் எப்படியோ அறிந்து கொண்டு விட்டார் என்பது புலனாயிற்று அவனுக்கு. மெள்ள மெய்க்காவலரை அணுகி அவர்களை விசாரித்தான் காரணம் அறிய.

தாங்கள் மூச்சு விடவில்லை என்று மெய்க்காவலர் கூறி விட்டார்கள். காதரைனையும் விசாரித்தான், சரசமாடிய சமயங்களில். அவளும் சொல்லவில்லையென்பதைப் புரிந்து கொண்டான். அப்படியானால் கவர்னர் என்ன மந்திர வாதியா என்று தன்னைத்தானே பலமுறை கேட்டுக் கொண்டும் விடை கிடைக்கவில்லை அவனுக்கு. விடை கிடைக்க வேண்டுமானால் ஒருவரை விசாரிக்கலாம். ஆனால் அவர் வாயைத் திறக்கமாட்டாரே!

அவர்தான் கவர்னரின் அந்தரங்கக் காரியதரிசியான வால்டர் ப்ரௌன். எப்பொழுதும் கவர்னரின் அந்தரங்க அறையில் ஒரு மூலையில் இருந்த மேஜைக்கருகில் உட்கார்ந்து குனிந்த தலை நிமிராவண்ணம் ஏதோ எழுதிக் கொண்டிருக்கும் ப்ரௌன், எதையும் கவனிக்காதது போலிருந்தாலும் எல்லாவற்றையும் கவனிப்பவரென்பதை எல்லோரும் அறிந்திருந்தனர். ஆனால் அவரிடமிருந்து வார்த்தையைப் பிடுங்குவது நடக்காத காரியமென்பதும் பிரசித்தம். அது மட்டுமே போதும் கிப்போர்ட்டுக்கு அவரிடம் வெறுப்பு உண்டாக்க. போதாக்குறைக்கு கவர்னர் தன்னைப் பார்த்து இகழ்ச்சியுடன் பேசும்போ தெல்லாம் மிஸ்டர் ப்ரௌன் கண்களை மெல்லத் தூக்கிப் பார்ப்பதைக் கவனித்த கிப்போர்ட் முடிந்தால் அவரைக்

கொன்றிருப்பான். முடியாத தோஷத்தால் உள்ளூர அவரைச் சபித்துக் கொண்டிருந்தான். அந்த ப்ரௌன் இன்றும் அதே மூலையில் உட்கார்ந்திருந்தார். கவர்னர் ஏஸ்லாபி கிப்போர்டின் மணிக்கட்டைப் பார்த்த போதெல்லாம் அவரும் பார்த்துவிட்டுத் தலை குனிந்தார்.

தனக்கு விஷயங்கள் பல புரிவதில்லையென்றும், மனிதர்களை எடை போடுவதிலும் சக்தி குறைந்துவிட்ட தென்றும் கவர்னர் கூறியபோது காரியதரிசி ப்ரௌன் மீண்டும் நிமிர்ந்து பார்த்துத் தலைகுனிந்ததைக் கண்ட கிப்போர்டின் முகம் வெட்கத்தினால் மட்டுமின்றிச் சீற்றத்தினாலும் சிவந்தது. அந்தச் சீற்றத்துடன் சொன் னான், ''கவர்னர் மகாப்பிரபு! எனக்கு விஷயங்கள் புரியா திருக்கலாம். ஆனால் தங்கள் வருத்தத்திற்குக் காரணம் இப்பொழுது ஏதும் இருக்க முடியாதென்பது மட்டும் புரிகிறது எனக்கு. பிரிட்டிஷ் கப்பல்கள் எதையும் மடக்கி முறியடித்துவிடும் கனோஜி ஆங்கரேயையும் முறியடித்துத் துரத்திவிட்டு, நமது போர்க் கப்பல்கள் கிரந்தாமும், ஸாமர்ஸும் வந்திருக்கின்றன. போரில் வெற்றியே மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயம். தவிர வேறொரு நுட்ப மும் இதில் இருக்கிறது'' என்று.

கவர்னர் ஏஸ்லாபியின் கண்களில் விஷமம் தாண்டவ மாடியது. ''அந்த நுட்பத்தை நாம் அறியலாமா?'' என்று அவர் கேட்ட கேள்வியிலும் கேலி இருந்தது.

அதை லட்சியம் செய்யாத கிப்போர்ட், ''அரபிக் கடலில் ஆங்கரேயையும் துரத்தி பிரிட்டிஷ் கப்பல்கள் வருவது இதுதான் முதல் தடவை. இதிலிருந்து என்ன தெரிகிறது!'' என்றான்.

''என்ன தெரிகிறது கிப்போர்ட்?'' என்றார் கவர்னர் சர்வ சாதாரணமாக.

''அரபிக் கடலில் கனோஜியின் வலு குறைகிறதென்று தெரிகிறதல்லவா?'' என்று வினவினார் கிப்போர்ட்.

''தெரிகிறதா!'' என்ற கவர்னர் கிப்போர்ட்டை நோக்கிப் புன்முறுவல் செய்தார். அதுவரையில் அவர் முகத்திலிருந்த கவலையும் சிறிது அகன்றது. ''கிப்போர்ட்!'' என்று மீண்டும் அழைத்தார்.

''என்ன பிரபு?'' என்ற சந்தேகத்துடன் கண்களை உயரத் தூக்கிக் கவர்னரைப் பார்த்தான் கிப்போர்ட்.

''கிரந்தாம், ஸாமர்ஸ் இந்த இரண்டு கப்பல்களின் தலைவர்களைச் சந்தித்தாயா நீ'' என்று வினவினார் கவர்னர்.

''இல்லை பிரபு'' என்றான் கிப்போர்ட், எதற்காக அதை கவர்னர் கேட்கிறார் என்பது புரியாமல்.

''நான் சந்தித்தேன்'' என்று சுட்டிக் காட்டினார் கவர்னர்.

''தாங்கள் கவர்னராதலால் அந்த வசதியிருக்கிறது'' என்று குத்தலாகப் பேசினான் கிப்போர்ட்.

''ஆம் கிப்போர்ட். வசதியிருப்பதால் ஊகங்களுக்கு அவசியமில்லை. தவிர எனது ஊகங்களும் அவ்வளவு தவறாயிருப்பதில்லை'' என்ற கவர்னர் மீண்டும் அவனது மணிக்கட்டை உற்றுப் பார்த்தார். அறைக் கோடியிலிருந்த மிஸ்டர் ப்ரௌனும் இம்முறை அனாவசியமாகச் சிரித்தார்.

கிப்போர்ட் சங்கடத்தால் நின்ற நிலையில் சிறிது அசைந்தான். ''தங்கள் ஊகங்கள் தவறுமென்று யாரும் சொல்லவில்லையே'' என்று சலிப்புடன் கூறவும் செய்தான்.

''இல்லை. யாரும் கூறவில்லை'' என்று ஆமோதித்த கவர்னர், ''கிப்போர்ட்! இங்கிலாந்திலிருந்து வந்துள்ள கப்பல் தலைவர்கள் எழுதிக் கொடுத்த ரிப்போர்ட் இதோ இருக்கிறது... படி'' என்று கூறித் தமது மேஜை

டிராயரிலிருந்த ஒரு நீண்ட கவரை எடுத்து மேஜைமேல் போட்டார்.

அதை எடுத்து உள்ளிருந்த நாலைந்து தாள்களைப் படிக்கப் படிக்க கிப்போர்டின் முகத்தில் கவலை அதிகமாயிற்று. படித்து முடித்தபின் பணிவுடன் கவர்னரிடம் நீட்டிய கிப்போர்ட், ''ஆனால் வதந்தி வேறுவிதமாயிருக்கிறதே'' என்றான்.

''இருக்கும். ஆனால் கவர்னர் வதந்திகளைக் கொண்டு கம்பெனியை நடத்த முடியாதல்லவா?'' என்ற கவர்னர், ''கிப்போர்ட்! கனோஜி ஆங்கரே தனது ஒரு குராப்பையும் இரண்டொரு காலிவாத்துக்களையும் கொண்டு கிரந்தாம், ஸாமர்ஸ் போன்ற இரு பெரும் பிரிட்டிஷ் கப்பல்களைத் தாக்கியிருக்கிறாரென்றால் கடற்போரில் அவரது துணிவையும் திறமையையும் நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. தவிர...'' என்று கூறிச் சிறிது சிந்தனையிலும் இறங்கினார்.

சிறிது நேரம் கிப்போர்ட் மௌனம் சாதித்தான். பிறகு கேட்டான், ''தவிர?'' என்று.

''எப்பொழுது இரு பெரும் கப்பல்களை ஆங்கரே தாக்கியிருக்கிறாரோ அடுத்துவரும் கப்பல்களையும் அவர் தாக்குவார். அடுத்த முறை ஒரு குராப்பைக் கொண்டு தாக்கமாட்டார். சரியான பலத்துடன் தாக்குவார்'' என்று சுட்டிக்காட்டினார் கவர்னர்.

''அப்படியானால் அபாயந்தான்'' என்று இழுத்தான் கிப்போர்ட்.

''மகிழ்ச்சி'' என்றார் கவர்னர்.

''எதற்கு மகிழ்ச்சி?''

''மெள்ள மெள்ள உனது புத்தியிலும் விஷயம் ஏறுவது பற்றி. அதில் லாபமிருக்கிறது.''

''என்ன லாபம் இருக்கிறது?''

''உனது புத்தியில் உண்மை ஏறினால் நான் சொல்லாமலே எனது மனவருத்தத்துக்கும் கவலைக்கும் காரணம் புரியுமல்லவா?'' என்ற கவர்னர் ஆரம்பத்தில் கிப்போர்ட் கேட்ட கேள்வியைத் திரும்பவும் வலியுறுத்தினார்.

கிப்போர்டின் முகம் குங்குமக் குழம்பாகச் சிவந்தது, கவர்னரின் ஏளனத்தால். ''அப்படியானால் கனோஜியிடம் சரணாகதி அடைந்துவிட வேண்டியதுதானா?'' என்று வினவவும் செய்தான் கிப்போர்ட் மிகுந்த எரிச்சலுடன்.

கவர்னரின் உதடுகள் இகழ்ச்சியை அதிகமாகக் காட்டின. ''அடைந்தால் சரணாகதி, இல்லையேல் போர், இந்த இரண்டைத் தவிர வேறு வழிகள் இல்லையா கிப்போர்ட்?'' என்று வினவினார்.

''என்னை ஏன் கேட்கிறீர்கள்?'' என்று வினவினான் பதிலுக்கு கிப்போர்ட்.

''நீ பெரிய வர்த்தகன். தவிர எனது கௌன்சில் மெம்பர். அதுவுமின்றி ஆங்கரேயின் முக்கிய தளமான கொலாபாவுக்கே போய்வந்த அனுபவமும் உனக்கு இருக்கிறது. ஆகவே உன்னைக் கேட்காமல் யாரைக் கேட்பேன்'' என்றார் கவர்னர்.

கவர்னரின் ஒவ்வொரு சொல்லிலும் ஏளனமிருப்பது புரிந்தது கிப்போர்ட்டுக்கு. ''சண்டை அல்லது சமாதானம் என்ற இரண்டு வழியைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது?'' என்று வினவினான் ஆத்திரத்துடன்.

''இப்பொழுது ஒரு புதுச் சொல்லை நீயே சொல்லியிருக்கிறாயே'' என்றார் ஏஸ்லாபி.

''என்ன சொல்?''

''சமாதானம்.''

''சமாதானமா! ஆங்கரேயுடனா!''

''ஆம்.''

இதைக் கேட்ட கிப்போர்ட்டின் முகத்தில் வியப்பு மிதமிஞ்சி விரிந்தது. சினமும் அதில் கலந்து கிடந்தது. ''சமாதானமா! கொள்ளைக்காரனுடனா!'' என்று கேட்டான் கிப்போர்ட் ஆத்திரத்துடன்.

''ஆம்'' என்ற ஏஸ்லாபி அவனை விஷமத்துடன் நோக்கினார்.

''கொள்ளைக்காரனுடன் சமாதானத்தை நாடினால் பிரிட்டிஷ் கௌரவம் என்ன ஆகும்?'' என்று கேட்டான் கிப்போர்ட்.

''தோல்வியடைவதைவிட அதிக கௌரவக் குறைவிருக்காது'' என்றார் ஏஸ்லாபி. அத்துடன், ''கிப்போர்ட், பிரிட்டிஷ் சரித்திரம் படித்திருக்கிறாயா?'' என்றும் கேட்டார் கிப்போர்ட்டை நோக்கி.

''சரித்திரப் பாடத்தில் முதன்மையாகத் தேறியவன். மெடல் வாங்கியிருக்கிறேன்'' என்றான் கிப்போர்ட்.

''அப்படியானால் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே ஸர் வால்டர் ராலே முதலிய பிரிட்டிஷ் கடற்கொள்ளைக் காரர்களைப்பற்றி?'' என்றார் கவர்னர்.

''தெரியும்'' என்றான் கிப்போர்ட்.

''அவர்களைப் போல்தான் ஆங்கரேயும் நாட்டுக்காகப் போராடுபவர். கோழையான சில பிரிட்டிஷ்காரர்களைவிட வீரனான ஆங்கரேயை நம்பலாம். தவிர, கிப்போர்ட், மகாராஷ்டிரத்தில் இன்னும் மூன்று மாதங்களுக்குள் பெரும் போர்கள் ஏற்படும். பெரும் குழப்பங்கள் உண்டாகும். இந்த நிலையில் ஆங்கரேயின் பாதுகாப்பு பிரிட்டிஷ்

கப்பல்களுக்கு அவசியம். ஆங்கரேக்கு நமது உறவு அவசியம். அவரிடமிருந்து ஒரு தூதன் வந்திருக்கிறான்'' என்று விஷயத்தை மெள்ள அவிழ்த்தார்.

''யாரவன்?'' என்று வினவினான் கிப்போர்ட்.

கவர்னர் பதில் சொல்லவில்லை. வாயிற்படியில் நின்ற ஆர்டர்லியைக் கூப்பிட்டு, ''வரச்சொல்'' என்றார்.

சற்று நேரத்திற்கெல்லாம் கவர்னர் அறைக் கதவைத் திறந்துவிட்ட ஆர்டர்லி, ''இதயசந்திரன்! ஸார்கேல் கனோஜி ஆங்கரேயின் தூதர்'' என்று அறிவித்தான்.

அத்தியாயம் 2

விருந்துக்கு அழைப்பு

ஆங்கரேயின் தூதன் பெயரை ஆர்டர்லி அறிவித்ததும் கிப்போர்ட் மிதமிஞ்சிய கலவரத்துக்கும் குழப்பத்துக்கும் உட்பட்டானென்றால், அறிவிப்பைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த இதயசந்திரன் குழப்பத்துக்கோ கலவரத்துக்கோ ஆளாகவில்லை எனினும் ஓரளவு வியப்பின் வசப்படவே செய்தான் அவன். அந்த வியப்பை அரை வினாடியில் மறைத்துக்கொண்டு ராணுவ முறையில் கவர்னருக்குத் தலைவணங்கி தனது பாதங்களை ஒன்று சேர்த்து விறைத்து நின்றான்.

இதயசந்திரன் பெயர் உச்சரிக்கப்பட்டதும், கிப்போர்ட்டுக்கு ஏற்பட்ட குழப்பத்தையும் கவர்னர் கவனிக்கத் தவறவில்லை. உள்ளே நுழைந்த இதயசந்திரனின் முகத்தில் விரிந்து அரை வினாடியில் மறைந்துவிட்ட வியப்புச் சாயையையும் அளவெடுக்கத் தவறவில்லை. தன் முன்னால் பிரிட்டிஷ் ராணுவப் பாணியில் நின்ற இதயசந்திரனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார் கவர்னர், நாற்காலியில் உட்கார்ந்தவண்ணமே. பிறகு மெல்ல உதடுகளில் புன்னகையொன்றைப் படரவிட்டுக் கொண்ட கவர்னர் ஏஸ்லாபி, ''உங்களைப்பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று இதயசந்திரனை நோக்கிக் கூறிவிட்டு, கிப்போர்ட்டின் மணிக்கட்டிலும் கண்களைத் திருப்பினார் ஒரு வினாடி. மேற்கொண்டும் சொன்னார் தமிழனைப் பார்த்து, ''உங்களைக் சுண்டதில் ஓரளவு மகிழ்ச்சியும் ஏற்படுகிறது எனக்கு'' என்று.

இதயசந்திரன் விறைத்தவண்ணம் ராணுவத் தோரணையில் நின்றான். ''தங்கள் சொற்கள் தங்கள்

பரந்த நோக்கத்தைக் காட்டுகின்றன'' என்று மிகுந்த மரியாதையுடன் சொற்களை உதிர்த்தான்.

கவர்னர் ஆர்டர்லியை நோக்கிக் கண்களைத் திருப்பி, ''தூதருக்கு ஓர் ஆசனம் கொடு'' என்று உத்தரவிட ஆர்டர்லி ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டான். மீண்டுமொரு முறை தலை தாழ்த்திவிட்டு அடக்கத்துடன் ஆசனத்தில் உட்கார்ந்த இதயசந்திரனை நோக்கிக் கவர்னர் கேட்டார், ''எனது பரந்த நோக்கத்தைப்பற்றி ஏதோ கூறினீர்களே?'' என்று.

''யுவர் எக்ஸலென்ஸி'' என்று ஆங்கிலத்தில் துவங்கிய இதயசந்திரன், மேற்கொண்டு கவர்னரைப் போலவே மராட்டியில் பேச முற்பட்டு, ''கவர்னர் அவர்களுக்கு என்னைக் குறித்து மகிழ்ச்சி எதுவுமிருக்கக் காரணமில்லை. கவர்னரவர்களுக்கு எத்தனையோ தீங்குகளை இழைத்தவன் நான். இருப்பினும் அதைக் கவர்னர் பாராட்டாது என்னைக் கௌரவப்படுத்துவதும் என்னிடம் மகிழ்ச்சி காட்டுவதும் பெருந்தன்மையல்லவா?'' என்றான்.

கவர்னர் கண்களில் வியப்பு மலர்ந்தது. கைதேர்ந்த ஒரு பேர்வழியுடன் தாம் பேச வேண்டியிருப்பதை உணர்ந்தார் அவர். ''எனது யந்திரக் கப்பலையும் கெட்ச் ஆனையும் நீங்கள் கைப்பற்றியது போரில். உங்கள் நிலையிலிருந்தால் நானும் அதைத்தான் செய்திருப்பேன். போர்களின் வழியே அது. அதற்காக வீரர்களிடம் விரோதம் பாராட்டுவது தவறு. அவர்கள் எதிரி வட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் மதிக்க வேண்டியது வீரனாயிருப்பவன் கடமை. அதுவும் பொறுப்புள்ள வேலைகளில் ஈடுபடுபவர்கள் தங்கள் சொந்த உணர்ச்சிகளுக்கு இடங்கொடாதிருப்பது மிகவும் முக்கியம்'' என்று கூறிய கவர்னர் ஒரு முறை தூரத்தே நின்றிருந்த கிப்போர்ட்டின் மீதும் கண்களைச் செலுத்தினார்.

அந்த அறைக்குள் நுழைந்தபோதே அங்கிருந்தவர்களை அளவெடுத்துவிட்ட இதயசந்திரன், கிப்போர்ட்

இருந்ததைக் கவனித்திருந்தாலும் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. கவர்னர் தமது கடமையை விவரிப்பது போல் கிப்போர்ட்டைக் குத்திக் காட்டுவதையும் தமிழன் உணர்ந்தானானாலும், அதைப்பற்றி அறியாதவன் போலவும் கிப்போர்ட்டைப் பார்க்காதவன் போலவும் நடந்து கொண்டான். ஆகவே கவர்னருக்குப் பதில் கூறும் முறையில் பொதுவாகவே பேசத் தொடங்கி, ''தங்கள் போதனையை மனத்தில் கொள்வேன். சில சமயங்களில் பொது வேலைகளில் ஈடுபடும்போது சொந்த உணர்ச்சிகள் மேம்படுகின்றன எனக்கும். தங்கள் அறிவுரை இனி என்றும் மனத்தில் இருக்கும்'' என்று சொன்னான்.

கவர்னர், ''வெரிகுட், வெரிகுட்'' என்று ஆங்கிலத்தில் பாராட்டிவிட்டு மராட்டியில் பழையபடி கேட்டார், ''உங்கள் மராட்டி நன்றாயிருக்கிறது, தஞ்சையிலிருக்கும்போது இந்த மொழி பழக்கமோ?'' என்று.

அதுவரை உணர்ச்சிகளைக் காட்டாத இதயசந்திரனும் சற்றுக் கண்களை வியப்புடன் நிலைக்கவிட்டான் கவர்னர் மீது. கவர்னர் தன்னைப்பற்றிய விவரங்களைப் பூராவாக அறிந்திருப்பது அவனுக்குப் பிரமிப்பைத் தந்தது. ''இந்த ஏழையைப்பற்றிக் கவர்னர் அவர்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறினான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்திருப்பவன் கண்களையும் காதுகளையும் தீட்டி வைத்துக் கொள்வது அவசியமல்லவா?'' என்று கவர்னர் கேட்டார்.

''ஆம், அவசியம். மிக அவசியம்'' என்றான் தமிழன். ''அதனால்தான் நான் அனைவரைப் பற்றியும் சிறிது தெரிந்து கொள்கிறேன். தெரிந்த விஷயங்களை அலசிப் பார்த்துக் காரணங்களையும் அறியப் பார்க்கிறேன். அதனால்தான் கடல் வழிப்பறி செய்யும் கனோஜி விஜயதுர்க்கத்திலிருந்து தலைமைத் தளத்தைக் கொலாபாவுக்கு

ஏன் மாற்றினார் என்றும் யோசிக்கிறேன்'' என்றார் ஏஸ்லாபி.

தமிழனின் வியப்பு உச்சநிலைக்குச் சென்றது. ''என்ன சொன்னீர்கள்!'' என்று உணர்ச்சியைப் பெரிதும் காட்டிக் கேட்டான் இதயசந்திரன்.

கவர்னர் இரண்டு வினாடிகள் யோசித்தார். பிறகு கிப்போர்ட்டைச் சுட்டிக்காட்டி, ''நீங்களிருவரும் ஏற்கனவே அறிமுகமானவர்கள். கனோஜியின் தூதர் கிப்போர்ட்டுக்கு விடை கொடுத்தால் அவர் வெளியே செல்லத் தயாராயிருக்கிறார்'' என்று கூறினார் கவர்னர்.

கவர்னரின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட இதயசந்திரன் நாற்காலியிலிருந்து எழுந்திருந்து கிப்போர்ட்டுக்குத் தலை வணங்கினான். கை குலுக்குவதற்குத் தனது கையையும் நீட்டினான். பெரும் கோபத்துக்குள்ளாகியிருந்த கிப்போர்ட் பதிலுக்குத் தான் தலை வணங்காமலும், இதயசந்திரன் நீட்டிய கையைத் தனது கையால் பற்றாமலும் வெளியேற அடியெடுத்து வைத்தான். ''கிப்போர்ட்!'' என்ற கவர்னரின் அதிகாரக் குரல் அவனைச் சட்டென்று நிற்க வைத்தது.

''யுவர் எக்ஸலென்ஸி...'' என்று குழறினான் கிப்போர்ட்.

''தூதுவர்களுக்கு மரியாதை காட்ட நாம் பழகிக் கொள்ளவேண்டும். மணிக்கட்டில் வாள் காயமிருப்பதால் கை குலுக்கக் கஷ்டப்படும். தலை வணங்கலாமே? அதற்கு என்ன வலி வந்துவிட்டது இப்பொழுது?'' என்றார் கவர்னர் அதிகாரத்துடன்.

கிப்போர்ட் மிகுந்த கர்வத்துடன் இதயசந்திரனை நோக்கித் தலை வணங்கிவிட்டு, 'கட் கட்' என்று பூட்ஸ் சத்தம் ஒலிக்க அறையைவிட்டு வெளியேறினான். அவன் அகன்றதும் கவர்னர் முகத்திலிருந்த வெறுப்பு அகன்றது.

சரிய எண்ணங்கள் புத்தியில் ஓடுவதற்கான அறிகுறிகள் அவரது முகத்தில் தெரிந்தன. சிறிது நேரம் மௌனமாய் இருந்த கவர்னர் நாற்காலியிலிருந்து எழுந்திருந்து அறைக் கோடியில் ஏதுமறியாததுபோல் உட்கார்ந்திருந்த மிஸ்டர் ப்ரௌனிடம் சென்று, ''எங்கே, அந்த வர்த்தகர்கள் அனுப்பிய கடிதத்தை எடுங்கள்'' என்று கூறினார்.

மிஸ்டர் வால்டர் ப்ரௌன் மேஜையின் அறையிலிருந்து ஒரு நீண்ட கடிதத்தை எடுத்துக் கவர்னரிடம் நீட்டினார். கவர்னர் அதைக் கையில் வாங்கவில்லை. ''படியுங்கள் அதை'' என்று உத்தரவிட்டார்.

முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாத ப்ரௌன் படித்தார் உறுதியான குரலில். ''மேன்மை தங்கிய கவர்னர் பெருமானுக்கு, கொலாபாவுடன் வர்த்தகம் செய்யும் அடியிற் கையொப்பமிட்டவர்கள் தெரிவிப்பதாவது:

''ஜலதீபத்தின் தளபதியான இதயசந்திரன், என்ன காரணத்தாலோ தரைப்படை உபதளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரது தலைமையில் ஆலிபாக்கிலும் சுற்று வட்டத்திலும், பெரிய தரைப்படையொன்று உருவாகி வருகிறது. சுமார் ஐயாயிரம் காலாட்களும் இரண்டாயிரம் புரவி வீரர்களும் இப்பொழுதே அப்படையிலிருக்கிறார்கள். இன்னும் தினசரி கடல் மூலமும், ஜன்ஜீரா ஹிராகோட் பக்கங்களிலுள்ள காடுகளிலிருந்தும் தரை மூலமாகவும் வீரர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். கனோஜியின் கடற்படையில் பாதி இப்பொழுது கொலாபாவில் இருக்கிறது. கொலாபாவுக்கும் பம்பாய்க்கும் இடையிலுள்ள காண்டேரித் தீவிலும் சில போர்க் கப்பல்கள் நிற்கின்றன. அந்தத் தீவிலும் பாதுகாப்பு வலுத்திருக்கிறது... இப்படிக்கு...'' என்று படித்த ப்ரௌன்

கடைசிப் பகுதியைப் படிக்காமலே விட்டுவிட்டார், விவரமெழுதியவர்கள் யாரென்று தெரியாதிருக்க.

ப்ரௌன் அதைப் படித்து முடிக்கும் வரையில் அவரது மேஜையருகிலேயே நின்றிருந்த கவர்னர் மீண்டும் தமது மேஜையருகில் வந்து நாற்காலியில் அமர்ந்து, ''இப்பொழுது உங்களுக்கு என்ன புரிகிறது'' என்று கேட்டார்.

''உங்களுக்கு நிலைமை பட்டவர்த்தனமாகத் தெரிந்திருக்கிறது என்பது புரிகிறது'' என்றான் இதயசந்திரன்.

கனோஜியைப் போன்றவர்கள் உலகத்தில் மிகச் சிலர். எப்பொழுதோ ஒருமுறை நாடுகளின் வரலாறுகளில் அத்தகைய பெரும் வீரர்கள் தோன்றுகிறார்கள். கனோஜி இப்பொழுது தரைப்படை திரட்டுவதற்குக் காரணம் மகாராஜா ஷாஹுவிடமிருந்து ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்க்க. தரையில் போர் சரியாகவும் திறமையுடனும் நடக்கவேண்டுமானால் கடல் பகுதியில் அவருக்கு நிம்மதி வேண்டும். அந்த நிம்மதியை நான்தான் அளிக்க முடியும். ஆகவே, உங்களைத் தூது அனுப்பியிருக்கிறார். நீங்கள் தூது வந்தது எனக்கு மிகுந்த திருப்தி'' என்று கூறினார் கவர்னர் ஏஸ்லாபி இதயசந்திரனை நோக்கி.

''நான் வந்தது அவ்வளவு பெரிய விஷயமா?'' என்று வினவினான் தமிழன்.

''ஆம். தூது செல்பவன் திறமையானவனாயிருக்க வேண்டும். எதிரி சொல்வதைப் புரிந்துகொள்பவனாயிருக்க வேண்டும். நிலைமையை உள்ளபடி ஆராய்ந்து சிந்தித்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்பவனாயிருக்க வேண்டும். உங்களுக்கு இந்தத் தகுதிகள் அனைத்துமிருக்கின்றன. நீங்கள் அறிவாளி. அறிவாளிகளுடன் பேசுவதில் எப்பொழுதும் எனக்கு மகிழ்ச்சி உண்டு'' என்று கூறிய

ஏஸ்லாபி தமது ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்துகொண்டு ''மிஸ்டர் ப்ரௌன்'' என்று அழைத்தார். அருகில் வந்த மிஸ்டர் ப்ரௌனை நோக்கி, ''தூதரிடமுள்ள கடிதத்தை வாங்கிப் படியுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

''பிரிட்டிஷ் கவர்னர் மிஸ்டர் வில்லியம் ஏஸ்லாபிக்கு மகாராஷ்டிரா ஸார்கேல் எழுதுவது:

''தங்கள் கப்பல்கள் எனது தஸ்தக் இன்றி கடற்பகுதியில் அலைவதால் அவற்றுக்குச் சேதம் ஏற்படுவதை நீங்கள் அறிவீர்கள். பிரிட்டிஷ் வர்த்தகத்தைத் தடுக்கவோ நியாயமான வர்த்தக உரிமைகளை மறுக்கவோ நமக்கு எண்ணமில்லை. இருப்பினும் அரபிக்கடல் மகாராஷ்டிரர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதால், சில கட்டுத்திட்டங்களை வெளிநாட்டார் அனுஷ்டிக்க வேண்டும். அப்படி அனுஷ்டித்தால் பகாராஷ்டிர கடற்படை தங்கள் கப்பல்களைத் தாக்காதிருக்கும். அத்தகைய நிலைமையை ஏற்படுத்தப் பின்வரும் நிபந்தனைகளை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

''அவசியமான சமயங்களில் பிரிட்டிஷார் நமக்கு ராணுவ உதவி அளிக்க வேண்டும். பம்பாயிலுள்ள கடலோடிப் பரம்பரைகளிலிருந்து மாலுமிகளைப் பொறுக்கி நமது கப்பற்படையில் சேர்த்துக் கொள்ள வசதியளிக்க வேண்டும். நமக்குத் தேவையான வெடிமருந்துகளையும் குண்டுகளையும் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். வெடிமருந்து உற்பத்திச்சாலை ஒன்று அமைக்க பம்பாயில் இடம் தரவேண்டும், இவற்றுக்கு நீங்கள் ஒப்புக் கொண்டால் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு இடைஞ்சலேதும் ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
கனோஜி ஆங்கரே

கடிதத்தைத் தெளிவாகவும் எந்த இடத்திலும் இடறாமலும் படித்த மிஸ்டர் ப்ரௌன், கவர்னர் மேஜை மீது அதை வைத்து, அது பறக்காமலிருக்க அதன்மீது ஓர் அழகிய இரும்புத் துண்டையும் வைத்தார். கவர்னர் அந்தக் கடிதத்தை ஊன்றிப் பார்த்தார். நீண்ட நேரம் சிந்தனையில் இறங்கினார். பிறகு, ''இதைப்பற்றிச் சிந்தித்துப் பதில் கூற மூன்று நாட்களாகும்'' என்றார்.

''மூன்று நாட்கள்வரை நான் இங்கு தங்கியிருக்க வேண்டுமா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''இருந்தால் உத்தமம்'' என்றார் கவர்னர். ''ஆனால் உங்கள் தலைவர் உத்தரவு எப்படியோ?'' என்றும் கேட்டார் சிறிது யோசனைக்குப் பிறகு.

''விரைவில் திரும்புமாறு உத்தரவு எனக்கு. இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுத்துவிட்டுப் பதிலைப் பொறுப்புள்ள ஓர் ஆங்கிலேயரிடம் கொடுத்தனுப்புமாறு கேட்டுக் கொள்ளவும் உத்தரவு'' என்றான் இதயசந்திரன்.

''பொறுப்புள்ள என்றால்?''

''ஸார்கேலுக்குத் தங்கள் ஒப்பந்த விதிகளில் ஏதாவது இரண்டொன்றில் ஆட்சேபணையிருந்தால் அதை அங்கேயே சரிசெய்து தங்களுக்குப் பதிலாகப் பேசக்கூடிய அதிகாரம் வாய்ந்த பிரதிநிதி தேவை. இதனால் ஒப்பந்தம் காலதாமதமாவதைத் தவிர்க்கலாமென்பது ஸார்கேலின் கருத்து.''

கவர்னர் ஏஸ்லாபி புன்னகை பூத்தார். ''அதுவும் நல்லதுதான்'' என்றும் கூறினார். பிறகு ஸார்கேலின் கடிதத்தை எடுத்து மிஸ்டர் ப்ரௌனிடம் கொடுத்து அதைப் பத்திரப்படுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார். அடுத்து கேட்டார் இதயசந்திரனை நோக்கி, ''நீங்கள் எங்கு தங்கியிருக்கிறீர்கள்?'' என்று.

''எங்கும் தங்கவில்லை. நேரிடையாக வருகிறேன். இனிமேல்தான் ஏதாவதோர் இடம் பார்க்கவேண்டும்'' என்றான் இதயசந்திரன்.

''இங்கு கூடத் தங்கலாம்'' என்றார் கவர்னர்.

''இல்லை. வெளியிலேயே தங்குகிறேன்.'' இதயசந்திரன் பதிலில் பணிவிருந்தது, உறுதியுமிருந்தது.

''வேறு அலுவலும் பம்பாயிலிருக்கிறதா?'' கவர்னர் அசட்டையாகத்தான் இக்கேள்வியைக் கேட்டார். இருப்பினும் அதில் பொருள் புதைந்திருப்பதை இதயசந்திரன் உணர்ந்து கொண்டான்.

''ஏதுமில்லை, இருப்பினும் பம்பாயைச் சுற்றிப் பார்க்கலாம்'' என்றான் இதயசந்திரன்.

கவர்னர் கண்களில் விஷமச் சாயை தெரிந்தது. ''மிஸ்டர் ப்ரௌன்!'' என்று அழைத்தார். ப்ரௌன் வந்ததும், ''நாளை நடன விருந்துக்குத் தூதருக்கும் ஓர் அழைப்புக் கொடுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

மிஸ்டர் ப்ரௌன் ஒருமுறை பேந்த விழித்தார். பிறகு விடுவிடு என்று சென்று மேஜை அறையிலிருந்து ஓர் அழைப்பு அட்டையை எடுத்து, இதயசந்திரன் பெயரை அதில் எழுதிக் கொண்டு வந்து இதயசந்திரனிடம் நீட்டினார்.

''இது எதற்கு எனக்கு?'' என்று வினவினான் தமிழன்.

''இதயசந்திரா!'' என்று அன்பாகவும் சொந்தம் காட்டியும் அழைத்த கவர்னர், ''இதனால் உனக்கு அனுகூலமுண்டு. நீ சந்திக்கப் பிரியப்படுபவர்களும் இந்த விருந்துக்கு வருகிறார்கள்'' என்றும் கூறினார்.

''யாரை நான் சந்திக்கப் பிரியப்படுகிறேன்?'' இதய சந்திரன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

அந்தப் பேட்டியின்போது முதன் முதலாகக் கவர்னர் லேசாக நகைத்தார். ''உதாரணமாக...'' என்று கூறி வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

''உதாரணமாக? சொல்லுங்கள்?'' என்று வினவினான் இதயசந்திரன் உணர்ச்சிகள் மேலோங்க.

கவர்னர் சர்வ சாதாரணமாகப் பதில் கூறினார் ''பானுதேவி'' என்று.

அத்தியாயம் 3

கடற்கரை அதிர்ச்சி

கவர்னர் ஏஸ்லாபியிடம் நடந்த அந்த அரை மணிப் பேட்டி முழுவதும் உணர்ச்சிகளைப் பெரிதும் அடக்கிக் கொண்டும் தனது சித்தத்தில் ஓடும் எண்ணங்களைச் சிறிதும் காட்டாமலும் வெகு சாமர்த்தியத்துடன் தனது தூதுப் பணியை நிறைவேற்றிய இதயசந்திரன், கவர்னர் கடைசியாக பானுதேவியின் பெயரை உச்சரித்ததும் அத்தனை நேரம் கையாண்ட எச்சரிக்கையை அடியோடு உதறி முகத்தில் அதிர்ச்சி தாண்டவமாட, ''என்ன, பானு தேவியா! ஷாஹுவின் மருமகளா!'' என்று வினவினான், அதிர்ச்சியின் பிரதிபலிப்பு குரலிலும் பூரணமாக துலங்க.

கவர்னர் ஏஸ்லாபியின் உதடுகளில் புன்னகை விரிந்தது, கண்களில் விஷமம் சொட்டியது. ''ஆம்'' என்ற அவர் பதிலில் ஆயிரம் அர்த்தங்கள் தொனித்தன.

இதயசந்திரன் உணர்ச்சிகள் கட்டுமீறிச் சென்றதால், ''மகாராஷ்டிர அரச மகளிர் இத்தகைய நடன விருந்துகளுக்கு வரமுடியாதே. அது அரச குல கட்டுப்பாட்டுக்கும் விரோதமாயிற்றே?'' என்று கூறினான்.

கவர்னர் தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து இதய சந்திரன் அருகில் வந்து அவனைச் சில விநாடிகள் உற்று நோக்கினார். பிறகு சற்றுச் சங்கடத்துடன் கூறினார். ''இதயசந்திரா! சாதாரணமாக ஒரு கவர்னர் சொல்லக் கூடிய விஷயமல்ல இது; இருப்பினும் நீ பெரிய வீரன். ஒரு மகாவீரனின் தூதுவன் என்பதால் கூறுகிறேன்...'' என்று. பிறகு கவர்னர் சற்று நிதானித்தார்.

''சொல்லுங்கள் பிரபு!'' என்று கேட்டான் இதய சந்திரன் அவர் நிதானத்தைத் தாங்க முடியாதவனாய்.

''ஷாஹ¨வின் மருமகள் தனித்து வரவில்லை இந்த விருந்துக்கு...'' என்று கூறி மறுபடியும் ஏதோ சிந்தித்தார்.

கவர்னர் தன்னிடமிருந்து எதையோ மறைக்கப் பிரியப்படுகிறார் என்பதை உணர்ந்த இதயசந்திரன், ''கவர்னர் பிரபு! எதுவாயிருந்தாலும் சொல்லுங்கள், மறைக்க வேண்டாம்'' என்று சற்று வலியுறுத்தி வினவினான். வினவிய குரலில் பணிவுமிருந்தது, கெஞ்சலுமிருந்தது. கெஞ்சலில் பெரும் சந்தேகமும் ஊடுருவிக் கிடந்தது.

கவர்னர் அவன் உணர்ச்சிகளின் திருப்பம் எதையும் கவனிக்கத் தவறவில்லையென்றாலும், தான் கவனித்ததற்கு அறிகுறியாக முகத்திலோ பேச்சின் தோரணையிலோ எந்தவித மாறுபாட்டையும் காட்டாமல், ''பானுதேவியுடன் இரண்டு தோழிகளும் வருகிறார்கள் விருந்துக்கு'' என்றார்.

''அது இயற்கைதானே'' என்றான் சற்று ஆசுவாசப் பெருமூச்சு விட்ட இதயசந்திரன்.

கவர்னர் தொடர்ந்தார், ''அது இயற்கைதான். ஆனால் ஹிந்து மகளிர் வெள்ளைக்காரர் விருந்துக்கும் நடனத்துக்கும் வருவது அபூர்வம். எங்கள் நடன முறைக்கும் ஹிந்துக்களின் வாழ்க்கை நோக்குக்கும் வேறுபாடுகள் உண்டு. அதுவும் ஒரு ஹிந்து அரசகுல மகள் வெள்ளைக்காரர் விருந்துக்குப் போனாளென்றால் வதந்தி விரும்பத் தகாததாயிருக்கும். அப்படியிருக்க இந்த விருந்துக்கு பானுதேவி வர ஒப்புக்கொண்டது விசித்திரம். தோழிகள் உடன் வருவது சம்பிரதாயம். அதனால் சமுதாய ஆட்சேபணை அதிகமாக நீங்கிவிடா...'' இந்த

இடத்தில் சற்றுப் பேச்சை நிறுத்தினார் கவர்னர், தான் சொல்வதன் பொருள் தமிழன் இதயத்தில் நன்றாக உறைக்கட்டுமென்று.

அவர் சொல்வதன் பொருள் முழுவதும் விளங்கிற்று இதயசந்திரனுக்கு. மன்னர் ஷாஹ¨வின் மருமகள் வெள்ளைக்காரர் விருந்துக்குச் சென்றாள் என்றாலே ஹிந்துஸ்தானத்தில் பெரும் அபவாதம் அவளுக்கு ஏற்பட்டுவிடும் என்பதை அவன் சந்தேகமற உணர்ந்தான். அத்தகைய அபவாதம் ஏற்படுமென்று கவர்னருக்குத் தெரிந்துமா கண்ணியவானான கவர்னர் அவளை விருந்துக்கழைத்தார் என்று சிந்தித்தான் கனோஜியின் உபதலைவன். அவர் அழைத்தாலும் இத்தகைய அபவாத அலுவலுக்கு பானுதேவி எப்படி ஒப்புக்கொண்டாள் என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளவும் செய்தான் அவன்.

இத்தகைய சிந்தனை அவன் மனத்திலோடுவதைப் புரிந்துகொண்ட கவர்னர் கேட்டார்: ''ஒரு பெண்ணுக்கு அபவாதம் விளையக்கூடிய செயலில் நான் ஏன் இறங்கினேன். எதற்காக அழைப்பு விடுத்தேன் என்று யோசிக்கிறாயா?'' என்று.

வியப்பு மண்டிய இதயசந்திரன் விழிகள் அவரை நோக்கி எழுந்தன. ''ஆம் பிரபு! அதைத்தான் யோசிக்கிறேன்'' என்று உதிர்த்தன சொற்களை அவன் உதடுகள்.

''நானாக அழைக்கவில்லை அரச மகளை. அவள் வேண்டுகோளின் மேல் அழைப்பு விடுத்தேன்'' என்றொரு பெரு வெடியை எடுத்து வீசினார் ஏஸ்லாபி.

''நீங்களாக அழைக்கவில்லையா?'' இதயசந்திரன் கேள்வியில் வியப்பு இருந்தது.

''இல்லை.'' கவர்னர் சர்வசாதாரணமாகப் பதில் கூறினார்.

''அப்படியானால்...?''

''ஒருவன் மூலம் செய்தி வந்தது பானுதேவியிட மிருந்து!''

''என்னவென்று?''

''தான் இந்த விருந்தில் கலந்துகொள்ள விரும்பு வதாக.''

''யார் மூலம் வந்தது அந்தச் செய்தி?''

கவர்னரின் அடுத்த பீரங்கி வெடித்தது. ''மானுவல் டீ காஸ்ட்ரோ என்பவனை உனக்குத் தெரியுமென்று நினைக் கிறேன்'' என்ற கவர்னரின் சொற்கள் இதயசந்திரன் இதயத்தின் மீது பெருவேகத்துடன் பாய்ந்தன.

இதயசந்திரன் கண்களில் தீப்பொறி பறந்தது: ''தெரியும் அவனை'' என்றான் சீற்றத்துடன்.

''அவன் மூலம்தான் செய்தி வந்தது'' என்றார் கவர்னர்.

''அவனுக்கும் பானுதேவிக்கும் உள்ள சம்பந்தம்?'' என்று சீறினான்.

''அதை நீதான் கண்டுபிடிக்க வேண்டும்'' என்ற கவர்னர் முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது.

''அவன் பரம அயோக்கியன்'' என்று சுட்டிக்காட்டி னான் இதயசந்திரன்.

''சில காரியங்களுக்கு அயோக்கியர்கள் தேவையா யிருக்கிறது'' என்ற கவர்னர் பொருள் துலங்கும் பார்வையொன்றை வீசினார் இதயசந்திரன்மீது.

''இருக்கலாம். ஆனால், அயோக்கியர்கள் பணி, முடிவில் விபரீதப் பலனைத்தான் அளிக்கும்.''

''சற்று எச்சரிக்கையுடன் இருந்தால் விபரீதப் பலனைத் தடுக்கலாம். அறிவைத் தீட்டி வைத்துக் கொண்டால் அயோக்கியர்களை உபயோகப்படுத்திக் கொள்ளவும் செய்யலாம்.''

''அப்படியானால் நீங்களும் டி காஸ்ட்ரோவை உபயோகப்படுத்திக் கொள்வீர்களா?''

''கொள்வீர்களா என்பதைவிட கொள்கிறீர்களா என்று கேட்பது பொருந்தும். காஸ்ட்ரோ இப்பொழுது எனது கடற்படையில் ஒரு கப்பலின் தலைவன்.''

இதயசந்திரன் அப்படியே கல்லாய் சமைந்து நின்றான். சில வினாடிகள் கழித்துக் கேட்டான், ''இத்தகைய அயோக்கியனை ஏன் கப்பல் தலைவனாக்கினீர்கள்?'' என்று.

''முன்னமே சொன்னேனே, எந்த அயோக்கியனும் சில அலுவல்களுக்கு உபயோகப்படுவானென்று'' என்று கவர்னர் மீண்டும் சுட்டிக்காட்டி இளமுறுவல் கொண்டார்.

இதயசந்திரன் சற்று நேரம் சிந்தித்தான். பிறகு கேட்டான், ''கவர்னர் பிரபு! நான் வெளிப்படையாக ஒன்று கேட்க விரும்புகிறேன். கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்று.

''கேள் இதயசந்திரா! வீரர்களிடத்தில் எதைக் கேட்டுக் கொள்வதும் தவறாகாது!'' என்ற கவர்னர் அந்தக் கேள்வியை எதிர்பார்க்கும் பாவனையில் நன்றாக நிமிர்ந்து நின்றுகொண்டார்.

''நீங்கள் எதற்காக பானுதேவிமீது இந்த காஸ்ட்ரோவை ஏவியிருக்கிறீர்கள்?'' என்று வினவினான் இதயசந்திரன் தனது கண்களைக் கவர்னர் கண்களுடன் துணிவுடன் சந்திக்கவிட்டு.

''உன் ஊகம் இங்குதான் தவறிவிட்டது இதய சந்திரா'' என்றார் கவர்னரும் கம்பீரமான குரலில்.

''தவறிவிட்டதா பிரபு?''

''ஆம் தமிழா.''

''பின் உண்மையென்ன?''

கவர்னர் சொற்கள் அழுத்தமாக வெளிவந்தன. ''பானுதேவிதான் எங்கள் மீது டீ காஸ்ட்ரோவை ஏவியிருக்கிறாள். உண்மையில் அவன் பானுதேவிக்காக எங்கள்மீது வேவு பார்க்கிறான். ஆனால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை'' என்றார்.

''வேறு எதற்குக் கவலைப்படுகிறீர்கள் பிரபு?''

''கையும் களவுமாக டீ காஸ்ட்ரோ கிடைத்தால் அவனைத் தூக்கில் போடுவேன். சதியில் பானுதேவி ஈடுபட்டால் சட்டப்படி அவளையும் நான் தண்டிக்காமல் விடமுடியாது. அத்தகைய நிலை ஏற்பட்டால் அது எனக்கு மிகவும் சங்கடம். பெண்களைத் தண்டிப்பது என் சுபாவத்துக்கு விரோதம். தவிர ஒரு பெரிய ஹிந்து ராஜ குடும்பத்துக்கு நான் மாசு விளைவிக்கவும் விரும்பவில்லை'' என்றார் அவர் ஒரே சீரான, ஆனால் உறுதியான குரலில்.

கவர்னரின் பெருந்தன்மை, ஆனால் கடமையில் உள்ள உறுதி இரண்டும் இதயசந்திரன் இதயத்தைப் பெரிதும் கவர்ந்ததால் அவன் நன்றி ததும்பிய கண்களை அவர்மீது நிலைக்கவிட்டான். பிறகு மெல்லக் கேட்டான், ''பிரபு! இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறீர்கள்?'' என்று.

''நீ அவளை ஒரு காலத்தில் காதலித்ததாக வதந்தி இருக்கிறது. இப்பொழுதுகூட அவளை நீ காப்பாற்ற லாம். வேவுத் தொழிலைவிட்டு அவளை ஸதாராவுக்குப் போகச் சொல். டீ காஸ்ட்ரோவை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார் கவர்னர்.

இதயசந்திரன் நன்றியுடன் தலை வணங்கினான். அவன் புறப்பட எத்தனிக்கையில் ஏஸ்லார்பி அவனை நோக்கிக் கேட்டார், ''அரச மகள் இருப்பிடம் உனக்குத் தெரியுமா?'' என்று.

''கனோஜி சொல்லியிருக்கிறார்.''

''அப்படியானால் போய் வா!'' என்று தமிழனுக்கு விடை கொடுத்த கவர்னர், ''வெளியே தங்குவதானாலும் நான் உனக்கு இடம் தர முடியும்'' என்று அன்புடன் கூறவும் செய்தார்.

''வேண்டாம் பிரபு! நானே இடம் பார்த்துக் கொள் கிறேன்'' என்று கூறிவிட்டு மீண்டுமொரு முறை கவர்னருக்குத் தலைவணங்கி அறைக் கோடியில் எதுவு மறியாத பூனைபோல் உங்கார்ந்திருந்த மிஸ்டர் ப்ரௌ னுக்கும் தலை தாழ்த்திவிட்டு அந்த இடத்தைவிட்டு வெளியேறிய இதயசந்திரன் புத்தி பலவிதமாகக் குழம்பிக் கிடந்தது.

மகாராஷ்டிர அரச குடும்ப விரோதங்களுக்குப் பம்பாய் பெரிய சதிக்கூடமாகிவிட்டதை நினைத்து மனம் புழுங்கியவண்ணம் நீண்டநேரம் தனது புரவியின்மீது ஏறாமல் அதன் பக்கத்திலேயே நின்றிருந்தான். பிறகு ஒரு பெருமூச்சுவிட்டு அதன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்த போதும் கவலை அவன் சித்தத்தை உடைத்துக் கொண்டிருந்தது. மகாராஜா ஷாஹூவிட மிருந்து அரசு பறிபோகக் கூடாதென்று கனோஜியின் மனைவி கஹினா கொடுத்த கடிதம் அப்பொழுதும் அவன்

இடைக் கச்சையிலிருந்ததால் அதைத் தட்டிப் பார்த்துக் கொண்டான். 'கனோஜி ராஜாராமின் இளைய மனைவி தாராபாயின் பக்கம், கனோஜியின் மனைவி கஹினா மகாராஜா ஷாஹுவின் பக்கம். ஷாஹு எதிர்க்க கனோஜி பிரிட்டிஷ் சமாதானத்தை நாடுகிறார். அதற்கு முன்பே இங்கு பானுதேவி வந்து ஏதோ சதி செய்கிறாள். இப்படியே அரசர்களின் உட்பகையே ஹிந்து சமுதாயத்தை அழிக்க முற்பட்டுவிட்டால் மாற்றார் அதை அழிப்பது எத்தனை சுலபம்?' என்று எண்ணினான்.

அத்துடன் தான் தமிழகத்திலிருந்து வந்த காரியத்தையும் எண்ணிப் பார்த்தான். 'நான் வந்தது மகாராஷ்டிர சாம்ராஜ்ய மூன்றாவது வாரிசைத் தேட. ஆனால் இரண்டரை ஆண்டுகளில் அது பற்றிய முயற்சி குறைவு. மற்ற ஈடுபாடுகள் அதிகம்' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான். இத்தனைக் குழப்பத்திற்கும் காரணம் மூன்று பெண்களேயென்பதும் அவனுக்குத் திட்டமாகத் தெரிந்தது. 'பானுதேவியின் ஏவலில்லாவிட்டால் கனோஜியிடம் சிக்கியிருக்க மாட்டேன். மஞ்சுவின் உறவு இல்லாவிட்டால் ஜலதீபத்தின் தளபதியாயிருக்க மாட்டேன். ஜலதீபத்தின் தளபதியாயிராவிடில் காதரைனைச் சந்தித்திருக்க மாட்டேன். சந்தி சிரித்திருக்கவும் மாட்டேன். பம்பாய்க்கு வந்ததும் அவளால்தானே' என்று மூன்று பெண்கள் மேலும் குற்றத்தைச் சுமத்திவிட்டுப் புரவியைப் பிடித்த வண்ணம் காஸில் என்று பெயர் பெற்ற கவர்னர் மாளிகையிலிருந்து சிறிது தூரத்திலிருந்த கடலோடிகளின் குடிசைக் கூட்டத்துக்கு வந்தான்.

மகாராஷ்டிர பரம்பரை மாலுமிகளின் சதுக்கத்தில் ஏராளமான குடிசைகளிருந்தன. சில சிறு கட்டிடங்களுமிருந்தன. அந்தக் கட்டிடங்களை நோக்கி நடந்த இதய சந்திரன் அவற்றை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வந்து ஒரு சிறு கட்டிடத்துக்கு எதிரே நீண்ட நேரம்

நின்றான். ''இதுவாகத்தானிருக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டு புரவியை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான். அந்தக் கட்டிடத்தின் முதல் உள் கூடம் மிகப் பெரிதாயிருந்தது. பல நாட்டு மாலுமிகளும் இதர வழிப் போக்கர்களும் அதில் தங்கியிருந்தார்கள். அந்தச் சத்திரத்தின் முதல் கூடத்தில் புகுந்த இதய சந்திரன் ''இந்தச் சத்திரத்தின் நிர்வாகி யார்?'' என்று விசாரித்தான் அங்கிருந்த ஒருவனை நோக்கி.

அங்கு தரையில் ஒரு மரப்பெட்டிக்கருகில் உட்கார்ந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தவன் இதயசந்திரனை ஏற இறங்கப் பார்த்தான் ஒருமுறை. பிறகு எழுந்து வந்து, ''உங்கள் அறை இந்தக் கட்டிடத்தின் பின்கட்டிலிருக்கிறது'' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு சென்று அறையைக் காட்டினான். ''உங்கள் புரவியை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் நீராடி இளைப்பாறுங்கள்'' என்று பணிவுடன் கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றான்.

இதயசந்திரன் இதயத்தைச் சொல்லவொண்ணா வியப்பு ஆக்கிரமித்துக் கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் நீண்ட நேரம் அறையில் படுத்துக் கொண்டான். மாலை நேரம் வந்ததும் மேலைக் கடற்கரைக்குச் சென்றான், அலைகளில் அமிழ்ந்து நீராடி உடலின் ஆயாசத்தையும் உள்ளக் குழப்பத்தையும் ஒரு நிதானத்துக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன்.

கடலலைகள் அன்று பெரிதாக இருந்தன. முதன் முதலாகத் தன்னைக் கொங்கணித் தரையில் உருட்டிவிட்ட அந்த அலைகளின்மீது கோபப்பட்டவன்போல அவற்றை எதிர்த்து எதிர்த்து நீந்தினான். அலைகள் அவனை நோக்கி உருண்டோடி மலைபோல் எழுந்து இரைந்து, 'ஹோ' என்று நகைத்தன. நீண்ட நேரம் எதிர் நீச்சலிட்டு அவன் கரையேறி, தலை துவட்டக் கீழ்ச் சராயை மட்டும்

அணிந்து தோள்மீது அங்கியையும் துண்டையும் போட்டுக் கொண்டு கிளம்பினான். அப்பொழுது நன்றாக இருட்டி விட்டதனாலும், சற்றுத் தூரத்தில் மாலுமி குடிசைகளின் விளக்குகளும், கட்டிட விளக்குகளும் அவனுக்கு அடையாளம் காட்டி. இப்படி வரலாமென்று அழைத்தன. இருப்பினும் அவன் கட்டிடங்களை நோக்கிச் செல்லாமல் கடற்கரையோரமே நடந்தான். நடந்தவன் காலில் ஏதோ இடரவே கீழே குனிந்து நோக்கினான். நோக்கியவன் மிதமிஞ்சிய திகிலுக்குள்ளாகி, கல்லாய்ச் சமைந்து நீண்ட நேரம் நிலைத்து நின்றான். ''குற்றம், குற்றம், பெரும் குற்றம்'' என்ற சொற்கள் பெரும் பீதியுடன் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. அவன் கண்டது அவன் சிந்தையிலிருந்தும் அறவே அகன்றுவிட்ட ஒரு பேரற்புதம்.

அத்தியாயம் 4

பழைய நினைவுகள் புதிய திருப்பங்கள்

மேலைக் கடற்கரையில், மாலைவேளை முடிந்து இருள் புகுந்துவிட்ட அந்தச் சமயத்தில், பின்புறம் வேகமான காற்றும் உக்கிரமான அலைகளும் சீறிக் கொண்டிருந்த சூழ்நிலையில், காலில் இடறிய அந்தப் பொருள், இருளிலும் நெருப்புப்போல் சுடர் விட்டதைக் கண்டதால் மட்டுமல்ல, அந்தப் பொருளுடன் இணைந்த தனது வாழ்க்கைச் சிக்கல்களின் நினைப்பினாலும் பல வினாடிகள் மலைத்து நின்றுவிட்டான் தமிழக வீரன். அவன் காலில் இடறியது கொங்கணத்தின் கடற்கரையில் முதன்முதலாக அவன் இழந்துவிட்ட புலிநக ஆபரணம். சிவாஜி மகாராஜாவின் கங்கணத்திலாடிய இரு புலிநக ஆபரணங்களில் ஒன்றும், சிவாஜி மகன் ராஜாராமினால் தஞ்சையிலிருந்த அவரது ரகசிய மனைவிக்குக் கொடுக்கப்பட்டதும், அந்த மனைவியால் மகனைக் கண்டுபிடிக்கத் தன்னிடம் அளிக்கப்பட்டதுமான சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்த ஆபரணத்தைப் பார்த்தவண்ணம் நீண்டநேரம் இதய சந்திரன் நின்று விட்டானே தவிர, அதை எடுக்கவும் துணியவில்லை அவன். காலில் அது இடறிவிட்டதே என்ற திகிலில், 'குற்றம், குற்றம்,' என்று கூவிவிட்டானேயொழிய அடுத்த வார்த்தை ஏதும் பேசச் சக்தியற்றவனானான் ஜலதீபத்தின் தளபதி. அப்படி அந்த ஆபரணத்தை நோக்கி, மலைத்து நின்றுவிட்ட இதய சந்திரனை, ''எடுத்துக் கொள்ளுங்கள், மலைக்க வேண்டாம்'' என்ற சொற்கள் இக உலகத்துக்குக் கொண்டுவரவே, சரேலெனக் குனிந்து அந்த ஆபரணத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகுதான் அவனுக்கு முழுச் சுரணையும் வந்தது. அதை எடுக்கச்

சொன்னது யார் என்று தலைநிமிர்ந்து நோக்கினான். எதிரே புன்முறுவலுடன் நின்றிருந்தாள் ஷாஹ்வின் மருமகள் பானுதேவி.

முதன் முதலாகக் கொங்கணியின் கடற்கரையில் பார்த்தபோது இருந்த அந்தக் கம்பீரத் தோற்றம், அந்த அசட்டையான பார்வை, யாரையும் மயக்கும் அதே அழகிய புன்முறுவல், முதல்நாளில் சந்தித்த அதே நிலையில் நின்றிருந்தாள் ஷாஹ்வின் மருமகள். இதய சந்திரன் கண்களில் விரிந்த பிரமிப்பைப் பார்த்த பானுதேவி மெல்ல நகைத்து, ''மண்டியிட்டு உட்காரட்டுமா வீரரே?'' என்றும் வினவினாள், முதல் சந்திப்பின் நிலையை மீண்டும் நினைவுபடுத்த.

இதயசந்திரனின் மனம் ஒரே குழப்பத்திலிருந்தது. அந்தக் குழப்பத்துக்கு அழகுச்சிலையென நின்றிருந்த பானுதேவியின் கவர்ச்சி கண்கள் மேலும் மேலும் சுருதி கூட்டவே, இதயசந்திரன் அந்தப் பழைய நாட்களுக்குச் சென்றான். கொள்ளைக்காரரிடம் அகப்பட்ட அந்தப் பெரும் மரக்கலம், அதன்மீது பாய்ந்து வந்த பீரங்கிக் குண்டுகள், மரக்கலம் தீக்கிரையாகி வெடித்ததால் தன்மீது பாய்ந்துவிட்ட சிலாம்புகள், அத்துடன் கடலில் நீந்தி, கைசோர்ந்து தரையில் ஒதுங்கிவிட்ட நிர்க்கதியான நிலை, இவையனைத்தும் நினைவுக்கு வரவே, அந்த முதல் சூழ்நிலையில் ஜீவித்தான் தமிழன். உடலில் பாய்ந்த அந்த சிலாம்புகள் அப்பொழுதும் உடலிலிருந்தன போலவும் மரண வலியை விளைவிப்பது போலவுமிருந்தது அந்த வீரனுக்கு. சுவாமி அங்கு ஓடி வந்தது, தான் ஆண்டவனை நினைத்து அவரை அழைத்தது, அவர் சங்கெடுத்து ஊதி அரசன் மருமகளையும் மற்றப் பணிமகளிரையும் அழைத்தது, அத்தனையும் மனத்திலே எழுந்து உலவவே பெருமூச்சுவிட்டான் தமிழன்.

அந்தப் பெருமூச்சைக் கவனித்தாள் பானுதேவி. அவன் சங்கடத்தையும் கவனித்தாள், உறுதி தளர்ந்த அவன்

நிலையையும் கவனித்தாள். அவன் மனத்திலோடும் எண்ணங்களையும் புரிந்து கொண்டாள். ''மண்டியிட்டு உட்காரட்டுமா வீரரே?'' என்று மீண்டும் கேட்டு நகைக்கவும் செய்தாள்.

எண்ணத்திலெழுந்த அந்தப் பழைய கனவை உதறிக் கொள்ளத் தலையை இருபுறமும் ஆட்டிய இதயசந்திரன் அவளை ஏற இறங்கப் பார்த்தான். ''மண்டியிட அவசிய மில்லை தேவி. உடலில் காயங்களில்லை. ஆனால் உள்காயமிருக்கிறது'' என்று கூறினான் அவளை நோக்கி.

பானுதேவியின் இதழ்களிலிருந்த புன்னகை சட்டென மறைந்தது. புன்னகையிருந்த இடத்தைச் சினம் ஆக்கிரமித்துக் கொண்டது. ''வீரரே! அந்தப் பழைய புரட்டு மீண்டும் அவசியமில்லை. அவ்வப்பொழுது கண்களில் தென்படும் பெண்களிடம் உமது உள்ளக் காயத்தை வெளிப்படுத்தி அதற்குச் சாந்தியைத் தேடிக்கொள்வது உமது மரபாக இருக்கலாம். எனது மரபு வேறு'' என்றாள் பானுதேவி சற்றே கடுமையுடன்.

அவள் சொற்களின் கருத்தை நன்றாகப் புரிந்து கொண்ட தமிழன், ''தேவி! உங்களைப் புண்படுத்தப் பழைய கதையை எழுப்பவில்லை நான். வாழ்வின் திருப்பங்கள் விதியைப் பொறுத்தவை. தனிமனிதன் நோக்கத்தை பொறுத்தவையல்ல'' என்று சுட்டிக் காட்டினான்.

''விதி என்ற சொல் தனிமனிதன் சௌகரியத்துக்கு உபயோகப்படுகிறது. தனிமனிதன் சபலங்களை மறைக்கவும் அது ஒரு சாதனம்'' என்றாள் பானுதேவி.

இதயசந்திரன் பதிலேதும் சொல்லச் சக்தியற்றவனானான். எதிரே நின்றிருந்த அவள் கண்கள் கடலை நோக்கின. நட்சத்திரங்கள் வீசிய மங்கிய ஒளியில் அவள் கண்கள் தனி ஒளி பெற்றதால் அவள் கடல் தேவதைபோல் விளங்கினாள். அந்தத் தோற்றத்தையும் முன்பொருநாள்

பரசுராமபுரம் நோக்கிச் செல்லுகையில் காட்டில் அளித்த மோகனாகரத்தையும் இணைத்துப் பார்த்தான் இதய சந்திரன். அத்துடன் பரசுராமபுரத்தில் தானும் அவளும் நள்ளிரவில் புரவிகள் மீதமர்ந்து பரசுராம மலையின் சரிவில் வேகமாகச் சென்றதையும் அங்கிருந்த காட்டில் ஒரு சிறு பாறைமீது அவள் உட்கார்ந்திருந்த தோற்றத்தையும் எண்ணினான். ஒவ்வொரு தோற்றத்திலும் ஒவ்வொரு வித்தியாசம் இருந்தது என்றாலும், எல்லாத் தோற்றத்திலும் பொதுக் கம்பீரமொன்று களை விட்டதைப் புரிந்து கொண்டான் இதயசந்திரன். கடற்கரையில் அவள் எதிரே நின்ற அந்த நேரத்தில் அந்தப் பழைய நிலைகள் ஒவ்வொன்றிலும் அவன் திளைக்கவும் செய்தான்.

காட்டு மரத்தின்மீது அவள் சாய்ந்து நின்றது, காட்டுத் தரையில் மலர்கள் உடல்மீது தூவிக் கிடக்க அவள் படுத்திருந்தது, பரசுராம மலைக்காட்டில் அவள் தன்னிடம் நெருங்கி வந்தது, அத்தனைக் காட்சிகளும், அவை சம்பந்தமான சின்னஞ்சிறு சம்பவங்களும் அவன் மனத்தில் விவரமாக வலம் வந்தன. அப்படி வலம் வந்ததால், 'மனித புத்தியில் மற்றப் புராணங்களோ தத்துவங்களோ நிலைத்து நிற்காமல் போனாலும் காதல் சம்பவங்கள் நிலைத்து நிற்கவே செய்கின்றன' என்று தன்னுள் சொல்லிக் கொண்டான்.

இப்படி தீர்க்காலோசனையில் திளைத்துவிட்ட இதய சந்திரனை நோக்கி, ''தமிழக வீரர் பழைய காலத்துக்கு ஓடிவிட்ட மாதிரி தெரிகிறது'' என்று கூறினாள் பானுதேவி.

''ஆம்!'' இதயசந்திரன் பதில் ஒற்றைச் சொல் லாயிற்று உணர்ச்சிகளின் மிகுதியால்.

''யார் யாரைப் பார்க்கிறீர்களோ அவ்வப்பொழுது அவரவர்கள் நினைப்பு வருகிறது உங்களுக்கு?'' பானுதேவி யின் கேள்வியில் இகழ்ச்சி இருந்தது.

அந்த இகழ்ச்சியைக்கூட கவனிக்கவில்லை இதய சந்திரன். ''வாழ்க்கை யாத்திரையில் மனம் பல விஷயங் களில் மோதுகிறது. சிலவற்றை மறக்க முடிவதில்லை; சிலவற்றை நினைக்க முடிவதில்லை'' என்று கூறினான்.

''வீரரே...'' என்று மெள்ள அழைத்தாள் பானுதேவி குழைந்த குரலில்.

''தேவி...''

''எதெதை மறக்க முடிவதில்லை?''

''பலவற்றை...''

''உதாரணமாக?''

''ஏதும் சொல்ல இயலவில்லை.''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள் தேவி.''

பானுதேவி சற்று நிதானித்துவிட்டுக் கேட்டாள், ''என்னை விலக்கிச் சொல்லட்டுமா? சேர்த்துச் சொல்லட்டுமா?'' என்று.

''விலக்கி விட்டுச் சொல்லுங்கள்.''

''சரி, நீங்களே விலக்கிவிட்டதால் விலக்கி விட்டே சொல்கிறேன். முதலில் மஞ்சு...''

''உம்.''

''பிறகு வெள்ளைக்காரி.''

''உம்.''

''மீண்டும் மஞ்சு.''

''உம்.''

''மீண்டும் நாளை வெள்ளைக்காரி.''

இதயசந்திரன் நெருப்புத் துண்டைப் பிடித்ததுபோல் ''என்ன! என்ன!'' என்று வேதனையுடன் கேட்டான்.

''மீண்டும் நாளை வெள்ளைக்காரி'' என்று அழுத்திச் சொன்னாள் பானுதேவி.

''நாளைக்கா! காதரைனா!'' என்று தடுமாறினான் இதயசந்திரன்

''ஆம் வீரரே!'' என்ற பானுதேவி சற்று நிதானித்தாள். பிறகு திட்டமான குரலில் கூறினாள், ''நாளை அவளும் கவர்னர் விருந்துக்கு வருகிறாள்'' என்று.

இதயசந்திரன் மலைத்து நின்றான். 'நாளைக்கு கவர்னர் விருந்து நடக்கப்போவது தேவிக்குத் தெரிந்திருக்கலாம். அதற்குக் காதரைன் வரப்போவதும் தெரிந்திருக்கலாம்— அழைப்புப் பட்டியலைப் பார்த்திருந்தால். ஆனால், நான் அழைக்கப்பட்டது ஷாஹுவின் மருமகளுக்கு எப்படித் தெரியும்' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். இருப்பினும் அதை நன்றாயறிந்து கொள்வதற்காகக் கேட்டான், ''தேவி, கவர்னர் விருந்துக்கும் அவள் வருவதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று.

''நீங்களும் அதற்கு வருவதால் அங்கு அவளைச் சந்திக்கலாமல்லவா'' என்று வினவினாள் பானுதேவி அவளை உற்று நோக்கி.

இதயசந்திரன் சப்த நாடியும் ஒடுங்கி நின்றான். ''தேவி! கவர்னர் எனக்கு அழைப்புக் கொடுத்தது நடுப்பகல் நகர்ந்த பிறகு. அதன் பின்னர் இப்பொழுது எட்டு நாழிகைகளே ஆகியிருக்கின்றன. இடையில் நான் யாரையும் சந்திக்கவுமில்லை, பேசவுமில்லை. எனக்குக் கிடைத்த அழைப்பு உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று வினவினான் வியப்பும் கவலையும் கலந்தொலித்த குரலில்.

பானுதேவியின் பதில் திடமாகவும் தெளிவாகவும் வெளிவந்தது. ''கவர்னர் ஏஸ்லாபியைப் புரிந்து கொண்டால் இதை ஊகிப்பது கஷ்டமாகாது'' என்ற பானுதேவி மேலும் சொன்னாள்: ''வீரரே, கவர்னர்

ஏஸ்லாபியின் அறிவு மிகக் கூர்மையானது. பின்னால் வருவதை முன் கூட்டி ஊகிக்கக் கூடியவர் கவர்னர். அவரைப்போல் சிறந்த ராஜதந்திரிகள் மிகக் குறைவு நீங்கள் வரப் போவதை முன்கூட்டி அறிந்தே எனக்கு விருந்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். நீங்கள் வந்ததும் உங்களுக்கும் அழைப்புக் கடிதம் அளித்திருக்கிறார். வெள்ளைக்காரி என்ற முறையில் காதரைன் கண்டிப்பாய் வருவாள். அதுமட்டுமல்ல வீரரே! இன்னொரு பெரிய செயலிலும் கவர்னர் இறங்கியிருக்கிறார்.''

இந்த இடத்தில் பேச்சை நிறுத்திக் கூர்ந்து நோக்கினாள் தமிழனை ஷாஹுவின் மருமகள். அந்தக் கூரிய விழிகளைச் சந்தித்த இதயசந்திரன் கண்கள், அவற்றில் அந்தச் சமயத்தில் காதல் ஏதுமில்லாததையும் ராஜதந்திரியின் ஊகமும் ஊடுருவும் சக்தியுமே இருந்ததையும் கவனித்தன. ஆகவே அவன் கேள்வி தடுமாற்றத்துடன் எழுந்தது. ''தேவி! வேறென்ன செயலில் இறங்கியிருக்கிறார் கவர்னர்?'' என்று வினவிய குரலும் தழுதழுத்தது.

''இந்நகரிலிருக்கும் மகாராஷ்டிரப் பிரபுக்கள் பலரை விருந்துக்கு அழைத்திருக்கிறார்'' என்று சுட்டிக் காட்டினாள் பானுதேவி.

''அதனாலென்ன?'' என்று கேட்டான் தமிழன்.

''புரியவில்லையா உங்களுக்கு?''

''இல்லை.''

''வெள்ளைக்காரர்கள் விருந்தில் நடனத்தில் சுதேசிகளுக்கு எப்பொழுதும் அழைப்புக் கிடையாது. சுதேசிகளுடன் பழகுவதை வெள்ளைக்காரர் விரும்புவதில்லை.''

''ஆம்.''

''அப்படியானால் இந்தக் கலப்பட விருந்தை ஏன் நடத்துகிறார் கவர்னர்?'' என்று வினவிய பானுதேவி, ''கவர்னர் ஏதோ காரணத்தால்தான் இதைச் செய்திருக்

கிறார். இப்படி நடக்கவிருக்கும் நடன விருந்து இதுதான் முதல் தடவை. இதன் காரணத்தை என்னால் ஊகிக்க முடியவில்லை. கவர்னரின் ஏற்பாட்டில் ஏதோ உள்மர்மம் இருக்கிறது. அது நாளை தெரியும்'' என்று கூறினாள்.

பெரும் ராஜதந்திரச் சிக்கலில் தான் நன்றாக அகப் பட்டுக்கொண்டு விட்டதை உணர்ந்தான் இதயசந்திரன். ஆகவே பதிலேதும் கூறாமல் சிலையென நின்றான் பல வினாடிகள். ''சரி, வாருங்கள்'' என்று கடைசியில் அழைத்த பானுதேவி, சட்டென்று திரும்பி தூரத்தில் தெரிந்த குடிசைக் கூட்டத்தை நோக்கி நடந்தாள். இதயசந்திரன் ஏதும் பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தான். குடிசை களுக்கு அப்பாலிருந்த சாலையில் ஒரு வண்டி நின்றிருந்தது. அதில் இதயசந்திரனை ஏறச் சொல்லித் தானும் ஏறிக் கொண்டு, ''விடு வண்டியை'' என்று உத்தரவிட்டாள்.

வண்டிக்காரன் புரவிகளை முடுக்க சாலையில் வண்டி பறந்தது.

அத்தியாயம் 5

அரசியல் தர்க்கம்

இந்தியாவுக்கு வந்த ஒரிரு ஆங்கிலப் பிரபுக்கள், முக்கியமாக கவர்னர்கள் உபயோப்படுத்தி வந்த பீட்டன் வகையில் அமைக்கப்பட்ட புரவி வண்டியில் தன்னை ஏறி உட்காரச் சொல்லிப் பிறகு தானும் ஏறி உட்கார்ந்து கொண்ட பானுதேவி, வண்டியின் சாரதியிடம் போக வேண்டிய இடத்தைப்பற்றி ஏதும் சொல்லவில்லை யென்பதைக் கவனித்த இதயசந்திரன், அதைப்பற்றிச் சிறிது முதலில் ஆச்சரியப்பட்டாலும், 'போக வேண்டிய இடம் பானுதேவியின் இருப்பிடம்தானே. அதைப்பற்றிச் சொல்வானேன்?' என்று சமாதானம் செய்து கொண் டான். ஆனால் அந்த வண்டி சென்றது அவள் இருப் பிடத்திற்கில்லை என்பதையும், தனது இருப்பிடத்திற் கருகில் வந்து அது நின்றுவிட்டதையும் கவனித்த இதய சந்திரன் மீண்டும் வியப்பின் வசப்பட்டு, ''இங்கு ஏன் வந்திருக்கிறது வண்டி?'' என்று வினவினான் பானு தேவியை நோக்கி.

''நீங்கள் போய் வேறு ஆடை அணிந்துவர. இந்த நனைந்த ஆடையுடனும் குளித்த உடலுடனும் என்னிருப் பிடம் நீங்கள் வரமுடியாதல்லவா?'' என்றாள் பானுதேவி மிக அலட்சியமாக. நனைந்த ஆடையைப் பற்றியும் குளித்த உடலைப் பற்றியும் அவள் பேசியபோது அந்தப் பேச்சில் பழைய அன்போ, காதலோ, வேறுவித இன்ப ஒலியோ காணப்படவில்லை. பட்டவர்த்தனமாக உள்ள நிலையை எடுத்து வேலைக்காரனுக்கு விளக்கும் அதிகாரமே இருந்தது அந்த அரசகுல மகளின் பதிலில்.

அவள் குரலிலிருந்த அலட்சியத்தையும் அதிகாரத்தை யும் கவனிக்கவே செய்த இதயசந்திரன், அவள் தன்

மனத்தைச் சுற்றிப் பெரிய இரும்பு வேலியைப் போட்டுக் கொண்டுவிட்டாள்— காதல் சம்பந்தப்பட்டவரை, என்ப தைப் புரிந்துகொண்டான். 'அப்படி என்னை அடியோடு அலட்சியப்படுத்துவது அவசியமானால், என்னை அழைத்துவர யாராவது ஒரு காவலனை ஏவியிருக்க லாமே? தானே நேரில் வரவேண்டிய காரணமென்ன? அதுவும் நீராடுமிடமறிந்து அங்கு வந்து புலி நக ஆபரணத்தை என் காலடியில் வீசிவிட்டுத் தள்ளி நிற்பா னேன்?' என்றெல்லாம் யோசித்தான். எதற்கும் விடை காண சக்தியில்லாதவனாய் ஏதும் பேசாமல் சாலையி லிருந்து சத்திரத்துக்கு நடந்து சென்று வேறு ஆடை புனைந்து, கனோஜியின் மூன்றாவது மனைவி கஹினா கொடுத்த கடிதத்தையும் எடுத்துக்கொண்டு வந்து வண்டி யில் ஏறிக்கொண்டான். வண்டி மறுபடியும் பறந்தது.

சுமார் இரண்டு நாழிகைப் பயணத்துக்குப் பிறகு, ஒரு மேட்டு நிலத்திலிருந்த தோப்புக்கருகில் வண்டி வந்து நின்றதும், சாரதி கதவைத் திறந்துவிட கீழே இறங்கிய பானுதேவி இதயசந்திரனையும் கீழே இறங்கும்படி சைகை காட்டினாள். கீழே இறங்கிய இதயசந்திரன் ஓர் அடர்த்தி யான தோப்பின் முன்பு தான் நிற்பதை உணர்ந்தான். அந்தத் தோப்பும் சிறு குன்று ஒன்றின்மீது இருந்ததையும் அந்தக் குன்றிலிருந்து சற்றுத் தூரத்தில் பெரிதாகக் கடல் சீறிக் கொண்டிருந்ததையும் கண்டான். அப்பொழுது நன்றாக இருட்டிவிட்டதால் தூரத்தே தெரிந்த கடல் கன்னங்கரேலென்று பயங்கரமாகக் காட்சியளித்தாலும், அலைகள் திட்டமாகத் தெரியாத காரணத்தாலேயே அதன் பயங்கரம் அதிகமாயிருந்தாலும் அவன் முன்பிருந்த தோப்புக்குள் விளக்குகள் சிறுகச் சிறுகத் தெரிந்தனவாகை யால், பயங்கரத்திலும் ஒரு சாந்தியிருந்தது அந்தச் சூழ்நிலையில். தோப்புக்குள் இரண்டு மூன்று வீடுகள் விட்டுவிட்டு இருந்ததும் புரிந்ததால், பானுதேவி மேற்கு

நோக்கிக் கையைக் கூப்பிவிட்டுத் தோப்புக்குள் நுழைந்த தால் அவளைப் பின்பற்றி இதயசந்திரனும் நுழைந்தான்.

மலைச்சரிவில் கரடுமுரடான பாறைப் பகுதியில் சிறிது தூரம் சிரமப்பட்டு அந்தத் தோப்புக்குள் குன்றின் உச்சியி லிருந்த ஒரு வீட்டின் முன்பு பானுதேவி வந்ததும், கதவுகள் தாமாகவே திறந்தன. உள்ளே பானுதேவியுடன் நுழைந்த தும் கதவைத் திறந்துவிட்டு அதன் பின்புறம் நின்றிருந்த காவலன் பானுதேவிக்கும் தனக்கும் வணங்குவதைக் கண்ட இதயசந்திரன் 'இந்த விடுதியை நோக்கி வருபவர்களை முன்கூட்டிப் பார்க்க இங்கு ஏற்பாடு ஏதோ இருக்க வேண்டும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவனை பானுதேவி உள்கூடத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஆசனங்களில் ஒன்றில் அமரச் செய்தாள். அந்த விடுதி பெரிய மாளிகையுமில்லாமல் சிறிய சாதாரண விடுதியாகவுமில்லாமல் நடுத்தரமாயிருந்ததை வீட்டின் முன்பு வரும்போதே கவனித்திருந்த இதயசந்திரன் அதன் உட்கூடமும் எந்தவித ஆடம்பரமுமில்லாமல் இரண்டொரு ஆசனங்களுடன் கீழே சாதாரண விரிப் பொன்றுடனுமிருந்ததைப் பார்த்தான். கூடத்தில் அதிக ஆசனங்களோ திண்டு திவாசுகளோ இல்லாது போனா லும் கூடம் மிக அழகாகக் காட்சியளித்தது. கூடத்தி லிருந்து சென்ற உள்ளறை வாயிற்கதவுகள் அழகிய திரைச் சீலைகளில் மறைக்கப்பட்டிருந்தன. கூடத்தின் சாளரங் களை வாசனை மலர்க்கொடிகள் மறைத்திருந்தனவாத லால், மலர்களின் நறுமணம் கூடத்தில் பரவியிருந்தது. கூடத்தின் கூரையிலிருந்து தொங்கிய ஒரு மண்ணெண் ணெய் 'பவர் விளக்கு' கூடத்திற்குச் சுமாரான ஒளியை அளித்திருந்தது. அந்த விளக்கு தான் உட்கார்ந்திருந்த ஆசனத்திற்கு நேர் உயர இருந்ததை அறிந்த இதய சந்திரன், 'அறைக்குள்ளிருப்பவர்கள் யாராயிருந்தாலும் என்னைத் தெளிவாகப் பார்க்க முடியும். வெளிச்சத்தி லுள்ள நான் அறை இருட்டிலுள்ளவர்களைப் பார்க்க

முடியாது. அறையிலிருந்து வீசப்படும் எந்த ஆயுதத்துக்கும் நான் பலியாக முடியும்' என்று நினைத்துப் புன்முறுவல் செய்தான்.

அவனைக் கூடத்தில் விட்டு அறை ஒன்றுக்குள் சென்று யாரிடமோ ஏதோ பேசிவிட்டுத் திரும்பிவந்த பானுதேவி, அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். ''வேண்டுமானால் விளக்கைவிட்டுத் தள்ளிச் சாளரத்தின் மூலையில் ஆசனத்தை இழுத்துப் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறவும் செய்தாள்.

இதயசந்திரன் சற்று லேசாக நகைத்துவிட்டுச் சொன்னான், ''தேவி! மனிதர்களின் உட்கருத்தை அறிவதில் உங்களைவிடச் சிறந்தவர் ஒருவர்தானிருக்கிறார்!'' என்று.

பானுதேவி சிரித்தாள். பவள இதழ்கள் திறந்து நல் முத்துக்கள் தெரிந்தபோது அவள் முகம் மோகனாகாரமாயிருந்ததை இதயசந்திரன் கவனித்தான். சிரித்த நிலையில் கன்னத்திலேற்பட்ட சிறு குழியும், கண்களில் அதிகப்படியாகத் தெரிந்த ஒளியும் அவள் அழகு இணையற்றதென்பதை நிரூபித்தன. அப்பொழுதுதான் அவள் தலை முக்காட்டை நழுவவிட்டிருந்ததால் வைரச் சுட்டியைச் சுற்றிக் கலைந்து குழல்கள் அவள் அழகுக்கு ஓர் எல்லையை நிர்ணயிக்க முடியாதென்பதை எடுத்துக்காட்டின. பவர் விளக்கின் ஒளி வீச்சில் தெரிந்த அவள் உடலின் ஒவ்வொரு பகுதியும் காமக்கணைகளை அள்ளிச் சொரிந்தன. ஆனால் உதடுகள் அள்ளிச் சொரிந்தது, காமக்கணைகளை அல்ல; அரசியல் விவரங்களை எடுத்துக் கூறின. அவள் சிரிப்பை அடுத்து எழுந்தது கேள்வி, ''யாரந்த மனிதர்? கொள்ளைக்காரரா?'' என்று.

இதயசந்திரன் முகத்தில் கடுமை சற்றே படர்ந்தது. 'மகாராஷ்டிர கடற்படைத் தலைவரைக் கொள்ளைக்காரரென்று அழைப்பது நியாயமல்ல. பகைவராயிருந்தாலும் மதிப்புக் கொடுப்பது பண்பு'' என்றான் கடுமையுடன்.

பானுதேவி மிகக் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றாள். ''வீரரே! ஒரு நாட்டின் பகைவன் அந்நாட்டு மன்னனுக்கு எதிராகச் செயல் புரிபவன். இப்பொழுது நாட்டு மன்னர் ஷாஹு. மன்னனை எதிர்ப்பவன் பிற நாட்டினனாயிருந்தால் அவன் பகைவன் எனப்படுவான். உள்நாட்டவனாகயிருந்தால் அவன் துரோகி எனப்படுகிறான். கடலில் மன்னர் ஆக்ஞாபத்திரம் பெற்றவனும் மன்னரால் நியமிக்கப்பட்டவனுமான ஒருவனுடைய அதிகாரத்தின் கீழ் உலவும் கப்பல்கள் நாட்டின் கப்பல்களாகும். அவற்றைத் தலைமை தாங்கி நடத்துபவன் கடற்படைத் தலைவனாகிறான். அரசர் அனுமதியின்றி நாட்டு விரோதிகளுடன் இணைந்து இஷ்டப்படி தானே தஸ்தக் கொடுத்துக் கப்பல்களைத் தாக்கிச் சொத்துக்களைப் பறிப்பவன் கொள்ளைக்காரனாகின்றான். இந்த தத்துவத்தின் அடிப்படையில் கனோஜியைப் பாருங்கள்'' என்று கூறினாள் பானுதேவி, நிதானமான குரலில், பெரிய உத்திரவுகளைப் பிறப்பிக்கும் அரச தோரணையில்.

அவள் முகத்தில் அதிக உணர்ச்சிகள் பிரதிபலிக்காததையும், கம்பீரமாகவும் அமைதியாகவும் முகம் இருந்ததையும் இதயசந்திரன் கண்டான். பிரிட்டிஷ் ஆதரவைப் பெறவோ தனது சார்பாக வேறு எந்த ஏற்பாடுகளில் முனையவோ ஷாஹு மன்னர் பானுதேவியைவிடச் சிறந்த ராஜதந்திரியைப் பம்பாய்க்கு அனுப்பியிருக்க முடியாதென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான். ஆகவே மிகுந்த எச்சரிக்கையுடனே பதிலும் கூறினான், ''தேவி! உங்கள் தத்துவங்கள் பொதுவில் சரி. ஆனால், உள்ள நிலைமைக்கு ஒவ்வாத தத்துவங்கள் அவை. மகாராஷ்டிரத்துக்கு மன்னன் ஒருவன் மட்டுமிருந்தால் அவனை எதிர்ப்பது குற்றமாகும். எதிர்ப்பவன் துரோகியாவான். எதிர்ப்பவன் கடற்பகுதியில் இருந்தால் அவன்

கொள்ளைக்காரனாகவும் ஆவான். ஆனால், இப்பொழுது மகாராஷ்டிரத்துக்கு இரண்டு வாரிசுகள் இருக்கிறார்கள். நான் வேறு மூன்றாவது வாரிசைத் தேடி வந்திருக்கிறேன். மூன்றாவது வாரிசின் இருப்பிடம் தெரியவில்லையாதலால் அவரை ஒதுக்கி விட்டாலும் தெரிந்த வாரிசுகளில் இருவரில் ஒருவர் கனோஜியை ஸார்கேலாக நியமித்திருக்கிறார். ஆகவே ஷாஹு மகாராஜாவின் பார்வைக்கு கனோஜி கொள்ளைக்காரரானாலும் இன்னொருவர் பார்வையில் அவர் கடற்படைத் தலைவரல்லவா?'' என்று கேட்டான்.

கலகலவென நகைத்தாள் பானுதேவி பதிலுக்கு. ''தமிழக வீரரே! கனோஜியைக் கடற்படைத் தலைவராக இன்னொரு வாரிசு நியமிக்கவில்லை. நியமித்தது அவர் தாயார். அரசு ஆசை பிடித்த ஒரு பெண்'' என்று சுட்டிக் காட்டினாள் நகைப்புக்கிடையே.

இதயசந்திரன் இதழ்கள் இளநகை பூத்தன. ''தேவி! மகாராஷ்டிரத்தின் ஒவ்வொரு வாரிசுக்கும் முன்னால் இருப்பது ஒரு பெண்தான். முதல் வாரிசுக்கு வாதாடத் தாங்கள், இரண்டாவது வாரிசுக்கு வாதாட மகாராணி தாராபாய். மூன்றாவது வாரிசுக்கு மகனைத் தேட என்னை அனுப்பிய தஞ்சையிலுள்ள ராஜாராமின் ரகசிய மனைவி. இந்த மூன்று பெண்கள் இல்லாவிட்டால் இந்த வாரிசுகளின் கதி அதோ கதிதான்'' என்றான் இதய சந்திரன் புன்முறுவலுக்கிடையில்.

அவன் சொற்களில் புதைந்து கிடந்த ஏளனத்தைப் புரிந்துகொள்வதில் எந்தச் சிரமுமில்லை பானுதேவிக்கு.

''வீரரே, எந்தச் சர்ச்சையிலும் பெண்கள் இடையில் தான் வருகிறார்கள். ஆரம்பக் காலத்திலிருந்து, புராணக் காலத்திலும் அப்படித்தான். பிற நாட்டார் இங்கு காலடி எடுத்து வைத்துள்ள இந்தக் காலத்திலும் அப்படித்தான்.

ஆனால் எதுவும் நிலையான நியாயாநியாயங்களையும் தர்மாதர்மங்களையும் பொறுத்திருக்கிறது. இப்பொழுது மகாராஷ்டிரத்தில் சிவாஜி மகாராஜா நிறுவிய ஸதாரா வின் அரியணையில் வீற்றிருப்பது ஷாஹு மன்னர். அவர்தான் இப்பொழுது மன்னராவார்!'' என்று சுட்டிக் காட்டினாள் பானுதேவி.

''அரியணைகளில் அமருபவர்களையெல்லாம் நாடு மன்னரென்று ஒப்புக்கொள்வதில்லை. அவுரங்கசீப்பும் டில்லி அரியணையில் அமர்ந்துதானிருந்தார். அவரை நாட்டு மன்னராக ராஜஸ்தானமும் ஒப்புக் கொள்ள வில்லை, மகாராஷ்டிரமும் ஒப்புக் கொள்ளவில்லை. அரியணை ஒரு சின்னம். அந்தச் சின்னம் குறிப்பிடும் கொள்கைக்கு மன்னன் தகுந்தவனா என்பதை நாட்டு மக்கள் ஆராய்கிறார்கள்'' என்றான் இதயசந்திரன்.

''ஷாஹு மன்னரிடம் என்ன குறை கண்டீர்கள்?'' பானுதேவியின் கண்களில் லேசாகச் சீற்றம் துளிர் விட்டது.

''ஏதும் குறை காணவில்லை. அவர் அவுரங்கசீப் பிடம் வளர்ந்தவர். எந்த மொகலாயர்களை எதிர்க்க அவர் பாட்டனார் சிவாஜி ஆயுள் முழுவதும் போராடி னாரோ அதே மொகலாயர்கள் ஆதரவால் அரியணை ஏறியிருப்பவர். ஆகவே சில தேச பக்தர்கள் அவரை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்'' என்றான் இதய சந்திரன்.

''அந்தப் பக்தர்களில் கனோஜியும் ஒருவரா?'' என்று கேட்டாள் பானுதேவி.

''அது தெரியாது எனக்கு, தேவி! ஒன்று மட்டும் தெரியும். சொன்னால் உங்களுக்குப் பிடிக்காது.''

''சொல்லுங்கள்.''

''இன்றைய நிலையில் மகாராஷ்டிரத்தையும் பரத கண்டத்தையும் காக்க ஒரே ஒரு மனிதனால்தான் முடியும். அவர்தான் கனோஜி. அவர் ராஜத் துரோகியா யிருக்கலாம். நாட்டுத் துரோகியல்ல. கொள்ளைக்கார ராயிருக்கலாம். நாட்டுச் சொத்தைக் கொள்ளையடிக்க வில்லை. அவர் கொள்கையால் நாட்டுக்குச் சொத்து சேருகிறது, அவர் பலத்தால் நாட்டின் பயம் குறைகிறது. மிக புத்திசாலிகளான ஒரு கூட்டத்தார், அதுவும் ராஜ தந்திரத்தால் இணையிலாத கூட்டத்தார், இன்று நாட்டில் அடியெடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் பிரிட்டிஷார். அவர்களிடமிருந்து நாட்டைக் காக்க கனோஜி ஒருவரால்தான் முடியும். இல்லையேல் இந்த நாடு காலக்கிரமத்தில் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு விடும்'' என்று வேகத்துடனும், உணர்ச்சிப் பெருக்குடனும் கூறினான் இதயசந்திரன்.

அந்தச் சமயத்தில் வந்தது ஓர் இடையீடு. ''அப்படி நாட்டை விழுங்குபவர்களுடன் சமாதானம் பேச நீ ஏன் வந்தாய் இங்கு'' என்ற குரலொன்று ஊடுருவி வந்தது பக்கத்திலிருந்த அறையிலிருந்து. குரல் வந்த திசையை நோக்கிய இதயசந்திரன் வாயடைத்து நின்றான். திடீரென ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கவும் செய்தான். ''உட்கார் அப்படியே!'' என்ற அந்தக் குரல் அதட்டவே மீண்டும் செயலற்றுப் பதுமைபோல் ஆசனத்தில் உட்கார்ந்தான் தமிழக வீரன்.

அத்தியாயம் 6

பிரும்மேந்திரர் தலையீடு

அதட்டலான குரல் வந்த திசையை நோக்கியதும் இதயசந்திரன் அதிர்ச்சியுற்று, வாயடைக்க எழுந்திருக்க முயன்று மீண்டும் ஆசனத்தில் விழுந்து பதுமை போல் உட்கார்ந்து விட்டான் என்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அவன் அந்த இடத்தில் முற்றும் எதிர்பாராத மனிதர் பக்கத்தறையின் திரைச் சீலைகளை விலக்கிக்கொண்டு அதன் வாயிற்படியில் நின்றதன்றி பவர் விளக்கில் பளிச்சிட்ட தமது கூரிய விழிகளைத் தமிழன் மீது நிலைக்கவும் விட்டார். எங்கோ இருப்பதாகத் தான் நினைத்துக் கொண்டிருந்த பிரும்மேந்திர ஸ்வாமி திடீரென்று அந்த இடத்தில் தோன்றியதும், எழுந் திருக்கவோ வணங்கவோ கூடச் சக்தியற்ற நிலையில் உட்கார்ந்து விட்டான் இதயசந்திரன். அந்த இடத்தில் சுவாமிகள் தோன்றியது ஒருபுறமிருக்க என்றும் எந்தக் காரணத்தைக் கொண்டும் சீற்றத்தையோ வேறெந்த உணர்ச்சிப் பெருக்கையோ காட்டாத அவர் விழிகளில் அன்று பெரும் கோபம் ஒளிவிட்டதும் இதயசந்திரன் இதயத்துக்குள் பெரும் அச்சத்தைப் பரவவிட்டது.

சுவாமிகள் ஆஜானுபாகுவாய் அப்பொழுதும் அந்தப் பழைய தடியை ஊன்றிக்கொண்டுதான் நின்றார். முதல் முதலாகக் கொங்கணக் கடற்கரையில் காட்சியளித்த தோற்றத்துக்கும் அன்றைய தோற்றத்துக்கும் முக உணர்ச்சியில் தவிர வேறெதிலும் வித்தியாசமில்லாதிருந்த தைக் கவனித்த இதயசந்திரன் மெள்ளத் துணிவை வரவழைத்துக் கொண்டு, ''சுவாமிகளை இங்கு நான் எதிர்பார்க்கவில்லை'' என்று மெதுவாகக் கூறினான்.

பிறகு எழுந்து இரண்டடி எடுத்து வைத்து பாதங்களில் வணங்கவும் செய்தான். சுவாமியும் அறை வாயிற்படியை விட்டுக் கூடத்தின் நடுவுக்கு வந்து, ''தமிழா! உட்கார் அந்த ஆசனத்தில்'' என்று பழைய ஆசனத்தையே சுட்டிக் காட்டி, தானும் அறையிலிருந்த மற்றோர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார். பிறகு முதலிலிருந்த கோபத்தையும் உதறித் தள்ளிவிட்டு மெல்லவே கூறினார். ''தமிழா! என்னை இங்கு எதிர்பார்க்காதது நீ மட்டுமல்ல. இங்குள்ள கவர்னர் எதிர்பார்க்கவில்லை, உன் ஸார்கேல் எதிர்பார்க்க வில்லை, எல்லோரையும் விழுங்கக் கூடிய அந்த மிஸ்டர் ப்ரௌன்கூட எதிர்பார்க்கவில்லை'' என்று.

இதயசந்திரன் முகத்தில் வியப்புக் குறி பெரிதும் படர்ந்தது. மற்றவர்களைக் குறிப்பிட்டது அவனுக்கு எந்த வியப்பையும் தரவில்லையானாலும் ப்ரௌனைக் குறிப்பிட்டது பெரும் விசித்திரமாயிருந்ததால், ''ப்ரௌன் என்ன, சாதாரணக் குமாஸ்தாதானே? கவர்னரின் காரியதரிசி தானே?'' என்று வினவினார்.

பிரும்மேந்திர ஸ்வாமி தமது கையிலிருந்த பெரும் தடியை மடியில் குறுக்கே போட்டுக் கொண்டு அதை இரண்டு மூன்று தடவை தடவினார். அதைத் தடவிய முறையிலிருந்து அவர் யாரையோ அழைக்க முயலுகிறாரென்று முடிவுக்கு வந்தான் தமிழன். அவன் முடிவும் சரியென்பதை பிரும்மேந்திர ஸ்வாமியின் அடுத்த சொற்கள் நிரூபித்தன. ''தமிழா! பிரிட்டிஷாருக்கும் மகாராஷ்டிரருக்கும் ஒருநாள் போர் மூளுமானால் அதற்கு மிஸ்டர் ப்ரௌன்தான் காரணமாயிருப்பான். அவன் தலையைக் குனிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவன் புத்தி குனிவதில்லை, கண்களும் குனிவதில்லை. இரண்டும் எப்பொழுதும் எந்தப் பக்கத்தையும் ஆராயும். ஆனால் இன்று சாதாரணக் காரியதரிசியானாலும் கவர்னரின் முடிவுகள் எல்லாமே அவன் முடிவுப்படிதான் எடுக்கப்படு கின்றன'' என்று கூறினார் பிரும்மேந்திர ஸ்வாமி.

''என்ன! கவர்னர் ஏஸ்லாபி மிஸ்டர் ப்ரௌனின் கைப்பாவையா?'' என்று வினவிய இதயசந்திரனின் குரலில் வியப்பு அதிகமாக ஒலித்தது.

''இல்லை இதயசந்திரா! கவர்னர் பிரபு மிஸ்டர் ப்ரௌனின் கைப்பாவையல்ல. சுயேச்சையாக நினைத்து முடிவெடுக்கத் திறமையுள்ளவர். எடுக்கும் முடிவெல்லாம் அப்படித்தான் எடுக்கிறார். ஆனால், அவருக்கும் தெரியாமல் பல சிறு விஷயங்களை முன்கூட்டித் தொகுத்து வைப்பான் ப்ரௌன். இறுதியில் எந்த முறையில் முடிவு தேவையோ அந்த முடிவு கிடைக்கும். நீ ஆங்கரேயின் சமாதானத் தூதனாக வந்திருக்கிறாய். ஆனால், ப்ரௌன் இஷ்டப்படாவிட்டால் உன் தூது பயனளிக்காது,'' என்று கூறினார் பிரும்மேந்திர ஸ்வாமி.

மிஸ்டர் ப்ரௌன் சிறந்த அறிவாளி என்பதையும் அவன் அடக்கத்திலும் ஆழம் இருப்பதையும் இதயசந்திரன் கவர்னர் மாளிகையிலேயே புரிந்துகொண்டிருந்தானானா லும், பிரிட்டிஷ் இந்தியக் கொள்கைகளை இஷ்டப்படி திருப்புமளவுக்கு அவனுக்குச் செல்வாக்கோ சக்தியோ உண்டென்று நினைக்கவில்லை. ஆகவே பிரும்மேந்திர ஸ்வாமி அவன் திறமையைச் சிறிது மிகைப்படுத்திக் கூறுவ தாகவே பட்டது தமிழனுக்கு. அவன் இதயத்திலோடிய எண்ணங்களை சுவாமியும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஆகவே இதயசந்திரன் ஏதும் கேட்காமலே இருக்கையில் அவரே கேட்டார், ''தமிழா! நீ கடலோடிகள் இருக்குமிடத்திலுள்ள சத்திரத்தில் தங்கியிருப்பது எங்களுக்கு எப்படித் தெரியுமென்பதைப் பற்றிச் சிந்தித்தாயா?'' என்று.

அதைப்பற்றி உண்மையில் சிந்தித்துக் கொண்டு தானிருந்தான் இதயசந்திரன். தான் கேட்க வேண்டிய கேள்வியை சுவாமிகளே தொடுத்துவிட்டதால், ''ஆம் ஸ்வாமி! எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

சுவாமிகள் அவனை உற்று நோக்கிய வண்ணம், ''மிஸ்டர் ப்ரௌன் தெரிவித்தார்'' என்று கூறினார்.

''மிஸ்டர் ப்ரௌனா!'' வியப்பிருந்தது தமிழன் கேள்வியில்.

''ஆம்.''

''மிஸ்டர் ப்ரௌன் கவர்னருக்கு எதிராகச் சதி செய்கிறாரா?''

''சதி என்று அதைச் சொல்ல முடியாது.''

''பின் வேறென்ன?''

''மிஸ்டர் ப்ரௌனுக்கும் பிரிட்டிஷ் நலத்தில் அக்கறை உண்டு.''

''அதற்காக?''

''அதற்குத் தேவையானதைச் செய்கிறார்.''

''என்னை வேவு பார்ப்பது அந்தத் தேவைகளில் ஒன்றா?''

இதயசந்திரனின் கேள்வியில் உண்மையிருந்ததால் சற்று நிதானித்துவிட்டே பதில் சொன்னார் சுவாமிகள். ''இதயசந்திரா! அரசியல் சதுரங்கத்தில் பெயர்களுக்கு அதிகப் பொருளிருப்பதில்லை. ஓர் அரசில் ஒரு சிலரால் ஒருவன் துரோகியென்றும், இன்னும் சிலரால் அவனே தேசபக்தனென்றும் அழைக்கப்படுகிறான். பெயர்களைப் பற்றிச் சர்ச்சை செய்ய வேண்டாம். மிஸ்டர் ப்ரௌன் எங்கள் பக்கலில் இருக்கிறார். எங்களுக்குத் தேவையான தைச் செய்கிறார்'' என்று சொன்ன ஸ்வாமிகள் சற்று நிதானித்துவிட்டு, ''நீ யார் பக்கம்?'' என்று வினவினார் உறுதி நிறைந்த குரலில்.

சுவாமிகள் கடையில் கேட்ட கேள்விகள் மிக விசித்திர மாக இருந்தது இதயசந்திரனுக்கு. ''நான் யார் பக்கமா!'' என்று அவன் கேட்ட கேள்வியில் வியப்பும் ஒலித்தது.

''ஆம். யார் பக்கம்?''— பிரும்மேந்திர ஸ்வாமி கேள்வியைத் திருப்பினார் கடுமையான குரலில்.

இதயசந்திரன் உடனடியாகப் பதிலேதும் சொல்ல வில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். தான் யார் பக்கமென்பது, அவர்களுக்குத் தெரிந்திருந்தும் கேள்வி யொன்றைத் தொடுப்பதால் அத்தக் கேள்விக்கு அஸ்திவார மான காரணம் ஏதோ இருக்கிறதென்று ஊகித்துக் கொண்டான் அவன். பிரும்மேந்திர ஸ்வாமி, பானுதேவி, மிஸ்டர் ப்ரௌன் அனைவருமே தன்னிடத்தில் அதிக அக்கறை காட்டுவதில் ஏதோ விசேஷமிருக்க வேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது. இருப்பினும் அது எதுவா யிருக்கக்கூடும் என்பது மட்டும் விளங்கவில்லை அவனுக்கு. பானுதேவி தன்மீது வேவு பார்ப்பதாகக் கவர்னர் கூறு கிறார். கவர்னர் தன்மீது வேவு பார்ப்பதாகவும், அதற் காகவே விருந்துக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும், பானுதேவி கூறுகிறாள். இடையே இதில் பிரும்மேந்திர ஸ்வாமியும் தலையிடுகிறார். இன்னொருவன் அந்த அயோக்கியன் மானுவல் டீ காஸ்ட்ரோவும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறான். பலர் சேர்ந்திருக்கிறார்கள் பம்பாயில். எல்லோரும் பிரிட்டிஷ் நயலை நாட்ச் சேர்ந் திருக்கிறார்களா அல்லது வேறு உத்தேசமா? என்று இப்படிப் பலவிதமாகச் சிந்தித்த இதயசந்திரன் கடைசி யாகக் கேட்டான் நிதானமான குரலில், ''சுவாமி! தங்கள் கேள்வி விசித்திரமாயிருக்கிறது. தங்கள் சீடர் உத்தரவுப் படிதானே நான் இங்கு வந்திருக்கிறேன்'' என்று.

பிரும்மேந்திர ஸ்வாமியின் கண்களில் ஒரு வினாடி பெருமையின் சாயை படர்ந்து மறைந்தது. அவர் சொற்கள் வருத்தத்துடன் உதிர்ந்தன. ''தமிழா! கனோஜி என் சீடன்தான். ஆனால் அவன் இப்பொழுது ஈடுபட்டுள்ள பணி மகாராஷ்டிரத்தை அழித்துவிடும். தனது மன்னனுக்கு எதிராகப் போருக்குச் சித்தமாகி விட்டான்'' என்று கூறினார் ஸ்வாமிகள்.

இதயசந்திரன் சற்று நிதானித்துவிட்டுச் சொன்னான்: ''மன்னனும் ஸார்கேலை அழிக்கப் படை திரட்டிவிட்டதாகத் தெரிகிறது.''

''நாட்டுக்கு எதிராக நடப்பவர்களை அடக்குவது மன்னன் கடமை'' என்றார் ஸ்வாமி.

''நாட்டு விரோதிகளின் தயவால் மன்னனாகி, அவர்கள் உதவி கொண்டு தன்னை நசுக்க முற்படும் மன்னனிடத்தில் தனிப்பட்ட வீரன் எப்படி நடந்து கொள்வான்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

பிரும்மேந்திர ஸ்வாமிக்கு இதயசந்திரன் சொற்களின் பொருள் நன்றாகப் புரிந்திருந்தது. மொகலாயர் துணை கொண்டு ஷாஹு அரியணை ஏறியதை அவன் குறிப்பிடுகிறானென்பதையும் இன்னும் ஷாஹுவுக்கு மொகலாயரிடம் சாய்கால் இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறானென்பதையும் உணர்ந்து கொண்டதால் கூறினார்: ''இதயசந்திரா! சரித்திரப் பிரவாகத்தை, அந்தப் பிரவாகத்தில் வரும் சக்திகளை யாரும் திடீரென உதறிவிட முடியாது. நீ நினைக்கிறபடி ஷாஹு மன்னர் இப்போது மொகலாயர் பரிவாலும், துணையாலும் அரசாளவில்லை. தவிர, தாராபாயின் சக்தியும் நிலத்தில் அடங்கிவிட்டது. சத்ரபதி சிவாஜியின் நேர் வாரிசான ஷாஹுவுக்கு இப்பொழுதிருக்கும் ஒரே விரோதி கனோஜி தான். ஒன்று அவர் அகப்படவேண்டும், அல்லது அழிக்கப்பட வேண்டும். மகாராஷ்டிரம் ஒரே அரசாக, பலமுள்ள அரசாக நிலைபெறுவதற்கு வேறு வழியில்லை'' என்று.

இதயசந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்து சுவாமிகளை நெருங்கி வந்து நின்றுகொண்டு, ''ஸார்கேலை அழிப்பதோ, அடக்குவதோ சாத்தியமென்று நினைக்கிறீர்களா?'' என்று வினவினான்.

''சாத்தியமா அல்லவா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நாட்டு நன்மைக்கு இரண்டிலொன்று அவசியம். கனோஜி கடற்போரில் நிகரற்றவர். நிலப் போரிலும் ஓரளவு நிகரற்றவராயினும் நிலப்போரின் சூட்சுமங்களை உணராதவர். ஆனால் நீ ஒருவன் வந்து சேர்ந்தாய் அக் குறையை நிவர்த்திக்க. ஆகவே...'' என்ற சுவாமிகள் வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

''ஆகவே?'' இதயசந்திரன் கேள்வியில் சந்தேகம் ஒலித்தது.

''நீ ஒன்று எங்கள் பக்கம் சேரலாம்...''

''அல்லது?''

''இங்கு சிறையிருக்கலாம்.''

''இங்கா?''

''ஆம்.''

''என்னைச் சிறைப்படுத்திப் பாதுகாக்கப் போதிய காவலர் இருக்கிறார்களா?''

''இந்த வீட்டில் இல்லாவிட்டாலும் துறைமுகத்திலுள்ள கப்பலில் இருக்கிறார்கள்.''

''கப்பலில் கொண்டுபோய்ச் சிறை வைப்பீர்களா?''

''ஆம்'' என்றார் ஸ்வாமிகள் சர்வ சாதாரணமாக. அதுவரை அந்தக் கூடத்தின் மூலையிலுள்ள ஆசனத்தில் சிலைபோல் அமர்ந்திருந்த பானுதேவியும், ''ஆம்'' என்று கூடப் பாடினாள்.

''என்னைப் பிடித்துக் கப்பலுக்குக் கொண்டு செல்லத் தேவையான மாலுமிகள் இருக்கிறார்களா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

இதயசந்திரன் சுவாமிகள்மீது இருந்த கண்களைப் பானுதேவியை நோக்கி நிலைக்கவிட்டான். ''அப்படியே

என்னைச் சிறை செய்தாலும் கவர்னர் சும்மா இருப்பாரா? விசாரிக்க மாட்டாரா?'' என்று வினவினான்.

''அதைப்பற்றிக் கவலையில்லை. தேவையான சமாதானத்தை மிஸ்டர் ப்ரௌன் சொல்லிக் கொள்வார்'' என்றாள் பானுதேவி.

''என்ன சொல்வார்?''

''உங்களை உடனே திரும்பி வரும்படி ஸார்கேல் உத்தரவிட்டிருந்ததால் நீங்கள் திரும்பிப் போய்விட்டதாகவும் மன்னிக்கச் சொன்னதாகவும் தெரிவித்து விடுவார்.''

இதயசந்திரன் இதழ்களில் இளநகை அரும்பிற்று. ''பானுதேவி! ஏற்பாடுகள் திட்டமாகத்தானிருக்கின்றன. அரசியலுக்காக உங்கள் காதலனைக்கூட ஒழித்து விடுவீர்கள் போலிருக்கிறது'' என்று கூறினான் இகழ்ச்சியுடன்.

இந்தச் சமயத்தில் பிரும்மேந்திர ஸ்வாமி குறுக்கிட்டு, ''அந்தப் பேச்சை நிறுத்து'' என்றார்.

''ஏன்?'' என்று சீறினான் இதயசந்திரன்.

''காரணங்கள் இரண்டு'' என்றார் ஸ்வாமி.

''ஒன்று?''

''நீ சபல சித்தன், நிலை கெட்டவன், அரசகுமாரியின் அன்பை மதிக்காதவன்.''

''இரண்டு?''

''அவளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.''

''யார் அந்தப் பாக்கியசாலி?'' என்று வினவினான் இதயசந்திரன் கோபத்துடன்.

பிரும்மேந்திர ஸ்வாமிகள் பதிலை மெள்ளக் கூறினார். சொற்களை நிதானமாக உச்சரித்தார். உச்சாடனத்தில்

மதிப்பிருந்தது, மரியாதையும் தொனித்தது. ஆனால் அதைக் கேட்ட இதயசந்திரன் இதயத்தில் சொல்லொணா வியப்பு பிறந்தது. மகாராஷ்டிரத்தில் போரை நிறுத்த முடியாதென்று தீர்மானமும் உதயமாயிற்று.

''மகாராஷ்டிரத்தின் கதியை நீங்களே தீர்மானித்து விட்டீர்கள் ஸ்வாமி'' என்று அந்தக் கூடமே அதிரும்படியாக இரைந்து கூவினான் தமிழன்.

அத்தியாயம் 7

யார் அவள்? அங்கு எப்படி வந்தாள்?

'பாஹிராவ் பிங்களே!' இந்தப் பெயரை நிதானத்துடனும், மரியாதையும் மதிப்பும் நிறைந்த குரலிலும்தான் பிரும்மேந்திர ஸ்வாமி கூறினார். ஆனால் அந்தச் சொற்கள் இதயசந்திரன் இதயத்தைச் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தன. அவன் உடலில் விவரிக்க இயலாத உணர்ச்சியொன்று ஊடுருவிச் சென்றதால் உடல் லேசாக ஒருமுறை நடுங்கி அடங்கவும் செய்தது.

சில வினாடிகள் ஏதும் செயலற்று திக்பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டவன் திடீரெனக் கூவினான் பிரும்மேந்திரரைப் பார்த்து, ''மகாராஷ்டிரத்தின் கதியை நீங்களே தீர்மானித்துவிட்டீர்கள் ஸ்வாமி'' என்று.

இதயசந்திரன் சொல்வதை அந்தக் கட்டிடம் ஆமோதிப்பது போல் தனது சுவர்களைக் கொண்டு பல முறை எதிரொலியும் செய்தது. அறை மூலையில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த பானுதேவி அதற்கு மேலும் அந்த விபரீத நிலையைத் தாங்கமாட்டாமல் உள்ளே சென்றுவிடத் திடீரென எழுந்தாள். இத்தனைக்கும் எந்தவித உணர்ச்சியையும் காட்டாத பிரும்மேந்திர ஸ்வாமி அவளைப் பழையபடி ஆசனத்தில் உட்காரும்படி சைகை செய்து விட்டு, எதிரே நின்ற இதயசந்திரனை இகழ்ச்சி ததும்பும் கண்களுடன் நோக்கி, ''தமிழா! நீ சொல்வது உண்மை.. மகாராஷ்டிரத்தின் கதியை நான் நிர்ணயித்துத்தான் விட்டேன். அதன் கதி முன்னேறிச் செல்லும் கதி. சத்ரபதி சிவாஜியின் வம்சம் அரியணையில் திடமாக உட்கார்ந்து அதன் பேரரசு எங்கும் விரிந்து, ஹிந்து தர்மம், ஹிந்துக்கள் மானம்

இவற்றைப் பாதுகாக்கும் வழிதான் அதன் கதி. அந்தக் கதியை நான் மட்டுமல்ல, இந்தப் பாவையின் தியாகமும் நிர்ணயிக்கிறது. பாரதப் பெண்மணிகளின் தியாகத்தால் தான் இன்றும் பல படையெடுப்புக்குப் பின்பும் பாரதத்தின் அஸ்திவார தர்மங்கள் காக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பானுதேவி உன்னிடம் மையல் கொண்ட அந்தப் பழைய பானுதேவியல்ல, தமிழா! மகாராஷ்டிரத்துக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் தியாகி, புரிந்து கொள்'' என்று தங்கு தடையில்லாமலும் அனாவசியமாக உணர்ச்சியைக் காட்டாமலும் கூறினார்.

சுனைநீர் போல் தங்குதடங்கலின்றித் தெளிவாக உதிர்ந்த பிரும்மேந்திர ஸ்வாமியின் சொற்களால் சிறிதும் பாதிக்கப்படவில்லை இதயசந்திரன். அவர் பாரதத்தைப் பற்றிக் கூறிய சொற்களோ, பானுதேவியின் தியாகத்தை எடுத்துக் காட்டிய பகுதியோ அவனைத் தொடவும் சக்தியற்றதாயிற்று. அவனும் சுவாமிகளை நோக்கிச் சற்றும் பயமின்றிக் கூறினான்: ''சுவாமி! இந்த நாட்டில் காதலை மாற்றிக் கொள்ளும் கன்னிகைகள் கிடையாது. தாங்கள் சில நாட்களாக உறவு கொண்டுள்ள மிஸ்டர் ப்ரௌனின் நாட்டில் அது சகஜமாயிருக்கலாம். காதல் கிட்டாத போது உயிரிழந்த கன்னிகைகள்தான் இந்த நாட்டில் உண்டு. நாட்டுக்காக உயிர் விட்ட காரிகைகளின் எண்ணிக்கையைவிட காரிகைகளுக்காக நிகழ்ந்த போர்களின் எண்ணிக்கை இந்த நாட்டில் அதிகம். ஆகையால் தங்கள் தியாக வாதம் அர்த்தமற்றது.''

பிரும்மேந்திர ஸ்வாமியும் சிறிதும் சலனமில்லாத பார்வையை அவன்மீது வீசினார். ''வேறு எது அர்த்தமுள்ளது இதயசந்திரா? அவ்வப்பொழுது கிடைக்கும் பெண்களுடன் உறவாடுவது, பிறகு அவர்களை நட்டாற்றில் விட்டு ஓடிவிடுவதா?'' என்ற சுவாமிகள் மேலும் கேட்டார், ''இதயசந்திரா! பானுதேவி உன் மையலை மறந்துவிட்டாளென்று கூறுகிறாய். அவளை

இன்னொருவருக்கு மணமுடிக்கக் கூடாதென்றும் சுட்டிக் காட்டுகிறாய். சரி, இதயசந்திரா! நீ அவளை மணமுடித்துக் கொள்ளத் தயாராயிருக்கிறாயா?'' என்று.

இதயசந்திரன் பதிலேதும் சொல்லத் தெரியாமல் வாயடைத்து நின்றான். அவன் கண்முன்பு ஜலதீபமும், அதன் தலைவியின் அறையும், அதிலிருந்த பஞ்சணையில் தன்னை அணைத்து இணைந்துவிட்ட மஞ்சுவும் எழவே, தலையைத் தானாகவே அர்த்தமில்லாமல் ஆட்டிக் கொண்டான் அவன். பானுதேவியிடம் அவன் ஆரம்பத்தில் கொண்டது உண்மையில் வாலிபத்தின் வேட்கை தூண்டிய ஆசையே தவிர, நிரந்தரக் காதலல்லவென்பதை அவன் மனம் உணர்த்தியது. ஆகவே, பிரும்மேந்திர ஸ்வாமிக்குப் பதில் சொல்லத் தெரியாமல் சிறிது நேரம் திணறிய பிறகு, ''பேஷ்வா பிங்களேக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் பெண்ணை நான் மனத்தாலும் நினைக்க முடியுமா?'' என்று வினவினான்.

அவன் சொற்களில் உரமில்லாததைக் கவனித்த பிரும்மேந்திர ஸ்வாமிகளின் முகத்தில் இகழ்ச்சிச் சாயை பெரிதும் படர்ந்தது. ''இதயசந்திரா! உன்னை அன்று கடற்கரையில் ஏன் சாக விடவில்லையென்று இன்று என் மனம் கேட்கிறது. அறமோ, நெஞ்சுரமோ இல்லாத மனிதர்கள் பூமிக்குச் சுமை. மனித சமுதாயத்தில் எத்தனையோ காமுகர்கள், கொள்ளைக்காரர்கள், சமயோசித சுயநலக்காரர்கள் தோன்றுகிறார்கள். தோன்றிய படி, யாரும் ஏனென்று கேட்காமல், யாரும் கண்ணீர் விடாமல் மறைந்து போகிறார்கள். அந்தக் கூட்டத்துக்கு நீ விதிவிலக்கு என்று நினைத்தேன். சரித்திரத்தில் புதிய அடிச்சுவடுகளைப் பதிய வைக்கத் தமிழகத்திலிருந்து வந்தவன் நீ என்று எண்ணினேன். ஆனால் பின்பு புரிந்து கொண்டேன்— நீ அந்தக் கணக்கற்ற சாதாரண மனிதர்களில் ஒருவன் என்று. உன்னிடம் போர்த் திறமை இருக்கலாம். படைகளை நடத்தும் சக்தியிருக்கலாம். அது

நாட்டுக்குத் தீமை பயக்குமானால் நீ சரித்திரத்தில் வாழ மாட்டாய். வாழ்ந்தாலும் நல்ல பெயருடன் வாழ மாட்டாய். இன்று மகாராஷ்டிரத்தின் இருபெரும் சக்திகள் மோதுகின்றன. அதில் நீ கனோஜியின் கட்சியில் இருப்பதனால் அதர்மத்தின் கட்சியிலிருக்கிறாய். உன்னை இங்கிருந்து வெளியே விடுவது நாட்டுக்கு நல்லதல்ல'' என்ற பிரும்மேந்திர ஸ்வாமி கைகளை இருமுறை தட்டினார். பக்கத்து அறைகளிலிருந்து திபுதிபுவென்று வந்த நான்கு வீரர்களை நோக்கி, ''ஜலதீபத்தின் தளபதியைக் கைது செய்யுங்கள்'' என்று உத்தரவிடவும் செய்தார்.

அவர் உத்தரவிட்டவுடன் தன்னை நெருங்குவதற்குத் தயாராகி வந்த வீரர்களை இடது கையின் சைகையாலேயே தேக்கினான் இதயசந்திரன். பிறகு பிரும்மேந்திர ஸ்வாமியை நோக்கிக் கூறினான்: ''சுவாமி இந்த நான்கு வீரர்களைச் சுட்டுவிட்டு வெளியேற இதோ எனது இடையில் செருகியிருக்கும் கைத்துப்பாக்கியே போதும். ஆனால் அதை உபயோகப்படுத்த இஷ்டப்படவில்லை நான். எந்தச் சிரமமுமில்லாமல் என்னைச் சிறை பிடிக்கலாம். எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம். என் ஒருவனை நீக்குவதால் மட்டும் போரைத் தேக்கிவிடலாமென்று மனப்பால் குடிக்காதீர்கள். கட்டாயம் கனோஜி ஷாஹுவை முறியடிப்பார். தம் இஷ்டத்துக்கு இணங்கவும் வைப்பார், சந்தேகம் வேண்டாம். என் தூது விஷயங்களை ஏற்கெனவே ஏஸ்லாபியிடம் கூறிவிட்டேன். நான் மறைந்தாலும் என் தூதின் பலன் போகாது. அதற்கும் ஏற்பாடு செய்து விட்டேன். என்ன ஏற்பாடு என்பதை உங்கள் ஒற்றரிருக்கிறாரே மிஸ்டர் ப்ரௌன். அந்த நுழை நரியைக் கேட்டுக் கொள்ளுங்கள். கவர்னரின் அதிகாரம் பெற்ற தூதுவர் ஒருவரைக் கொலாபாவுக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறேன் கவர்னரிடம். ஆகையால் என் மறைவு கனோஜியின் தரைப்படைத் தலைமைக்குச்

சிறிது இடைஞ்சலாகலாம். ஆனால் கனோஜி வெறும் மாலுமி மட்டும் அல்ல. பெரிய தரைப்படை வீரர்கூட. நானில்லாவிட்டாலும் இந்தப் போர் நடக்கும். இதில் ஒன்றுதான் நான் விசனப்படும் விளைவு.''

இந்த இடத்தில் சற்றுத் தன் பேச்சை நிறுத்தி பிரும்மேந்திர ஸ்வாமியை உற்று நோக்கினான் இதய சந்திரன். சுவாமிகள் வியப்புத் ததும்பிய கண்களை அவன் கண்களுடன் இணையவிட்டார். ''எதற்கு விசனம்? என்ன அந்த விஷயம்?'' என்று வினவினார்.

''இந்தக் கிளியைப் பிடித்து அந்தக் கிழட்டுப் பூனையிடம் கொடுக்கிறீர்களே என்ற விசனம்தான் என்னை வாட்டுகிறது'' என்று பானுதேவியைக் கையால் சுட்டிக் காட்டிய இதயசந்திரன், ''சுவாமி, இந்த ஓர் அநீதிக்கு மட்டும் இடம் கொடுக்காதீர்கள்'' என்று கெஞ்சவும் செய்தான்.

இதைக் கேட்ட பிரும்மேந்திர ஸ்வாமிகள் நெஞ்சு கூடச் சிறிது நெகிழ்ந்தது. ஆனால் அந்த இருவர் பேச்சிலும் சிறிதும் உட்புகாமலும், குனிந்த தலை நிமிராமலும் உட்கார்ந்திருந்த பானுதேவி தலையைச் சிறிது உயர்த்தினாள். பிறகு உறுதி மிகுந்த அவள் குரல் ஒலித்தது. ''தமிழக வீரரே! சொற்கள் சிறிது நிதானத்துடன் வரட்டும். எனக்குக் கணவராகப் போகும் பேஷ்வாவைப் பற்றி மரியாதைக் குறைவாகப் பேசுவதை நான் விரும்பவில்லை'' என்ற பானுதேவி அரச தோரணையில் நின்றாள்.

இதயசந்திரனின் பிரமிப்பு உச்சநிலைக்குச் சென்றது. புத்தம் புதிய பானுதேவி— தன் கண்களுக்கும் எட்டாத ஒரு பானுதேவியை— அவன் அந்தப் பவர் விளக்கின் வெளிச்சத்தில் கண்டான். பிரிட்டிஷார் இந்தியாவில் இறக்குமதி செய்த அந்தப் பவர் விளக்கு அவளுக்குக் கொடுத்துள்ள மெருகைக் கண்டு பல வினாடிகள் பிரமித்து

நின்று விட்டான். பிறகு மெல்லச் சொன்னான்,
''மன்னன் மருமகளே, மன்னிக்க வேண்டும். பேஷ்வாவைப் மதிப்புக் குறைவாகப் பேசும் நோக்கமில்லை. பழைய நினைவுகள் நம்மிருவர் வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாறுதல்களை மறைத்து விட்டதால் மதிமயக்கத்தில் பேசி விட்டேன். இனி நான் உங்கள் கைதி'' என்று தலை குனிந்து கொண்டான்.

வீரர்கள் அவனை நெருங்கி அவன் இடையிலிருந்த கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு வாளையும் அவிழ்த்தனர். பிறகு ''இப்படி வாருங்கள்'' என்று அவனை அழைத்துக்கொண்டு கட்டிடத்தின் உட்புறம் சென்றனர். கட்டிடத்தின் உட்புறத்தில் ஏழெட்டு அறைகளுக்கு மேலிருந்ததையும் அறைகளின் கதவுகள், பூட்டுகள் எல்லாம் வலுவாயிருந்ததையும் கவனித்த இதயசந்திரன் அந்த அறைகள் பூட்டப்பட்டால் தப்புவது சாத்தியமல்ல வென்பதைப் புரிந்துகொண்டான். வீரர்கள் அவனை அந்தக் கட்டிடத்தின் கோடி அறையொன்றில் அடைத்துப் பூட்டிவிட்டுச் சென்றார்கள்.

அறைக்குள் அடைப்பட்ட இதயசந்திரன், அறையின் அமைப்பைக் கவனிக்கலானான். அந்த அறையின் நடுவில் பிரிட்டிஷார் உபயோகப்படுத்தும் நாற்காலியொன்றும், சாதாரணக் கட்டிலொன்றும் போடப்பட்டிருந்தன. மேல் புறத்தில் நல்ல உயரத்தில் ஒரு சாளரம் மட்டுமிருந்தது. அந்தச் சாளரத்தின் வழியாகத் தப்பினாலென்ன என்று நினைத்த இதயசந்திரன், கட்டிலைச் சாளரத்துக்காக இழுத்துப் போட்டு, நாற்காலியை அதன்மீது வைத்து ஏறிப் பார்த்தான். அந்தச் சாளரத்தின் கீழே மலை கிடுகிடுவென்று இறங்கிக் கொண்டிருந்தது. கால் சற்று வழுக்கினாலும் பரலோகப் பிராப்தி நிச்சயமென்பதைப் புரிந்து கொண்டான் இதயசந்திரன். தவிர அறையின் வெளிப்புறச் சுவர் ஒரே சீராகக் கட்டப்பட்டிருந்ததாலும் பல இடங்களில் கட்டிடக் கருங்கற்கள் பாசி பிடித்திருந்த

தாலும் வழுக்கி விழுவதும் நிச்சயமென்பதைப் புரிந்து கொண்டான். இந்த நினைப்பின் விளைவாக தப்பித் செல்லும் எண்ணத்தை விட்டு நிம்மதியாகக் கட்டிலில் கைகால்களை நீட்டிப் படுத்துக்கொண்டான். படுத்தவன் பல சிந்தனைகளில் இறங்கினான். 'நான் சந்தித்த மூன்று பெண்களில் ஒருத்தி என்னை இந்தியனென்பதால் புறக் கணித்து விட்டாள். இன்னொருத்தி ராஜ துரோகியென்ற காரணத்தால் விலக்கி விட்டாள். இன்னொருத்தி இருக் கிறாள். மஞ்சு. அவள் எந்தக் காரணத்தைச் சொல்லி என்னை விட்டு விலகிச் செல்லப் போகிறாளோ! அது முடியாது. அவள் செல்ல முடியாது. அன்று கடைசி நாள் அவளும் நானும் ஒன்றாகி விட்டோமே. அது சாசுவதம். தன்னையே எனக்கு அர்ப்பணித்து விட்டாளே மஞ்சு. அவளைக் கைவிடமாட்டேன் இதயசந்திரா? நீ அவளைக் கைவிட்டால் நானே உன்னைக் கொன்று விடுவேன்' என்று சொல்லிக் கொண்டான்.

நிம்மதியும், மஞ்சுவின் நிலவு முகமும், மலரனைய அவள் அழகு உடலும் அவன் மனத்தில் நிரம்பின. மிகுந்த நிம்மதியுடன் கண்களை மூடினான் தமிழக வீரன். கண்களை மூடிய பின்பு கனவிலும் மஞ்சு வந்தாள். அவன் பக்கத்தில் உட்கார்ந்து ஏதேதோ பேசினாள். அப்பொழுதும் முதல் நாள் பார்த்த சராயையும் சொக்கா யையும் அணிந்திருந்தாள். தலையில் ஒரு துணியும் கட்டி யிருந்தாள். சாட்சாத் அதே மாலுமிக் கோலம். கால் சராயில் கையை வைக்க முயன்றவனை அவள் கைகள் வெட்கத்துடன் அகற்றின. இன்னும் ஏதேதோ நினைப்பு கள், சரசங்கள் அவனை வாட்டின. கனடசியாக அவனை இறுகப் பிடித்துக் கட்டினாள் அவள். ''இரு மஞ்சு! சே! சே! யாராவது பார்க்கப் போகிறார்கள்!'' என்று வாய் விட்டுக் கூறினான்.

கண்களைத் திறக்கவும் செய்தான். அவனைக் கட்டிக் கொண்டிருந்தாள் ஒரு கட்டழகி, ஆனால் அது மஞ்சு வல்ல. யாரவள்? அங்கு எப்படி வந்தாள்?

அத்தியாயம் 8

மிஸ் எமிலி

கட்டழகியொருத்தி, தன்னைக் கட்டியணைத் திருப்பதையும், அது மஞ்சு அல்லவென்பதையும் உணர்ந்து கொண்ட பிறகு, தான் காண்பது கனவா அல்லது தனக்குச் சுயநினைவு இருக்கிறதா என்று பெரிய சந்தேகத்தில் திளைத்த இதயசந்திரன், கண்களை மறுபடியும் மூடிமூடி இரண்டு முறைகள் திறந்து பார்த்தான். கட்டியணைத் திருந்தவள் அதுவரையில் தான் கண்டிராதவள். புத்தம் புதியவள் என்பதை உணர்ந்ததும் அவள் பிடியிலிருந்து விலகப் பார்த்தான். ஆனால், அவள் கைகள் பலமாக அவனை அணைத்ததன்றி அவன் தலையை மார்பின்மீது அழுத்திச் சார்த்திக் கொள்ளவும் செய்தன. பருவத்தால் திண்மையுற்றிருந்த அந்த மார்பின்மீது சார்ந்த நிலையில் உணர்ச்சிகள் வாலிபன் உடலில் கொந்தளித்ததால் எப்படியாவது அவள் பிடியிலிருந்து மீள எண்ணிக் கைகளிலொன்றை அவள் மடியில் வைத்து ஊன்றி எழுந்திருக்க முயன்ற பிறகுதான், தான் மிகுந்த அசதியி லிருப்பதையும் தனது உடல் வலு எங்கோ ஓடிவிட்டதை யும் அவன் உணர்ந்துகொண்டான். தவிர தலையில் ஏதோ விண் விண்ணென்று தெறிப்பதையும் அறிந்ததால் தனக்குப் பலமான காயம் ஏற்பட்டிருப்பதையும் புரிந்து கொண்டான். அந்தக் காயத்தின்மீது அந்தக் கட்டழகியின் கையொன்று பதிந்திருப்பதையும் அறிந்துகொண்ட இதயசந்திரனுக்குத் தனது நிர்க்கதியான நிலை புரிந்தது, எங்கோ யாராலோ தனக்குத் தீங்கு நேரிட்டிருக்கிற தென்பதையும், வேறு யாரோ தன்னைக் காத்திருக்கிறார் களென்பதையும் ஊகித்துக் கொண்ட தமிழன் கண்களை மறுபடியும் மூடிக் கொண்டான்.

அவன் படுத்திருந்த நிலை அவன் உடல் வலிக்கும் தலை நோவுக்கும் மிக இதமாயிருந்தது. அவன் தலையைத் தாங்கிய தலையணையும் உடலின் ஒரு பகுதியிலிருந்த மடியும், உடலின் குறுக்கே வளைந்து சிறைப்படுத்தியிருந்த இன்பக் கைகளும் அவனுக்கு மிகுந்த நிம்மதியை அளித்தன. அத்தனை நிம்மதியிருந்தும் கூட அதை அனுபவிக்கும் சக்தியை அறவே அவன் இழந்து கிடந்தானாகையால் அவன் புத்தியில் இரவின் சிந்தனைகள் வலம் வந்து கொண்டிருந்தன. பானுதேவியும் பிரும்மேந்திர ஸ்வாமியும் தன்னைச் சிறை செய்து அடைத்தது அவனுக்கு நினைவிருந்தது. அறையில் உணவு உண்டது, மஞ்சுவை நினைத்துப் பஞ்சணையில் படுத்தது, ஆகிய யாவுமே நினைப்பில் இருக்கத்தான் செய்தன. படுத்தபின் கண்ட இன்ப நினைவுகள்கூட மறையவில்லை தமிழக வீரன் சிந்தையிலிருந்து. அதற்குப் பிறகு எல்லாம் சூன்யமாயிருந்தது. ஆகவே என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியாமல் மீண்டும் கண்களைத் திறந்த கனோஜியின் உபதளபதி அந்த அறையைச் சுற்றுமுற்றும் நோக்கினான். அந்த அறை தான் ஏற்கனவே அடைக்கப்பட்ட அறையல்லவென்பதையும், ஏதோ வேறு பெரிய அறையென்பதையும் புரிந்துகொண்டதும் தன்னை அணைத்திருந்த பெண்ணை நோக்கி ஏதோ சொல்ல இதழ்களைக் கூட்டினாலும் சொற்களை உதிர்க்க முடியவில்லை அவனால்.

அவன் பேச முயன்றதையும், கண்ணைத் திறந்து மிரள மிரள விழிப்பதையும் கண்ட அந்தக் கட்டழகி மெள்ள அவனை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள். ''சற்று நிதானமாகப் படுங்கள்'' என்று கூறிவிட்டுத் தன் கைகளை அதிகமாக அகற்றாமல் அவனைப் பஞ்சணையில் படுக்க விட்டாள். இருபெரும் தலையணைகளை இழுத்துத் தலை சற்று உயரமாயிருக்கும்படியும் செய்துவிட்டு எழுந்திருந்து அறைக்கோடிக்குச் சென்று கண்ணாடிக் குப்பியொன்றைக் கொண்டு வந்து அதை அவன் வாயில் வைத்துச் சிறிது

திராவகத்தைப் புகட்டவும் செய்தாள். ஏதோ சிறந்த மதுதனக்குப் புகட்டப்பட்டிருக்கிறதென்பதை உணர்ந்த இதயசந்திரன் அதை நன்றாக சுவைத்தே உட்கொண்டான். குப்பியை எடுத்துக்கொண்டு மீண்டும் பழைய இடத்தில் வைக்கச் சென்ற அந்தப் பெண் குப்பியை வைத்ததும், அறைக் கதவைத் திறந்து வெளியே தலை நீட்டி ''நீங்கள் வரலாம்'' என்று யாரிடமோ கூறினாள். சற்று நேரத்திற்கெல்லாம் பூட்ஸ் ஒலிகள் கேட்டன. இரண்டு வெள்ளைக்காரர்கள் அறைக்குள் வந்து அவன் கட்டிலை அணுகி அவனை உற்று நோக்கினர். அவர்களில் ஒருவர் கவர்னர் ஏஸ்லாபி.

''இதயசந்திரா! தலையில் வலி எப்படி இருக்கிறது? என்று வினவினார் ஏஸ்லாபி அன்புடன்.

இதயசந்திரன் தலையணையும் தொட்டு, சற்று எட்ட நின்றிருந்த அந்தப் பெண்ணையும் நோக்கினான். அவள் பருவப் பெண்ணாயிருந்ததையும் நல்ல வெளுப்பாக ஆடை அணிந்திருந்ததையும், அவள் கண்களில் மிதமிஞ்சிய அனுதாபமும் கருணையும் சுடர்விட்டதையும் கண்டான். பிறகு கண்களை கவர்னர் மீது திருப்பி, ''எந்த வலிக்கும் சாந்தி அளிக்கும் மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறதே'' என்று கூறினான்.

கவர்னர் ஏஸ்லாபியின் இதழ்களில் இளநகை அரும்பியது. ''இதயசந்திரா! பெண்களை நீ விரும்புவதாகவும் பெண்களும் உன் வலையில் வீழுவதாகவும் கேள்விப்பட்டேன். அது உண்மையென்று இப்பொழுது புரிகிறது. இந்த நர்ஸ் உனக்குச் சரியாகத்தான் சிகிச்சை செய்திருக்கிறாள்'' என்று கூறிவிட்டு நர்ஸை நோக்கி, ''எமிலி! இந்தத் தமிழனை நம்பாதே! இவன் ஒவ்வொரு பெண்ணாகத் தொட்டுத் தொட்டு நட்டாற்றில் விடுகிறான்'' என்று சொல்லி லேசாகக் கண்களையும் சிமிட்டினார். அவர் பக்கத்திலிருந்த வெள்ளைக்கார ஆர்டலியும் மெள்ளப் புன்முறுவல் செய்தான்.

இதயசந்திரன், சங்கடத்தால் ஒரு வினாடி கட்டிலில் அசைந்தானானாலும் பிறகு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டான், ''நான் இந்த இடத்துக்கு எப்படி வந்தேன்?'' என்று.

கவர்னர் சிறிதும் சிந்திக்காமல், ''நீயாக வரவில்லை இங்கு. என்னால் கொண்டு வரப்பட்டாய்'' என்று கூறி விட்டுக் கேட்டார், ''பானுதேவியின் இருப்பிடத்திற்குச் சென்ற பிறகு என்ன நடந்ததென்று நினைவிருக்கிறதா?'' என்று.

இதயசந்திரன் பதில் சொல்லுமுன்பு சற்று சிந்தித்து விட்டுத் தன் கச்சையைத் தடவினான். கஹினா கொடுத்த ஓலையைக் காணாததால் தான் நினைவிழந்திருந்த சமயத்தில் அதை யாரோ எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், அநேகமாக பிரும்மேந்திர ஸ்வாமி அல்லது பானுதேவியின் கையில் அது சேர்ந்திருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான். ஆகையால் நினை விழந்தது பானுதேவியின் மாளிகையில்தானென்பதையும் சந்தேகமறத் தெரிந்து கொண்டான். 'அப்படி அங்கு நினைவிழந்திருந்தால் எப்படி நினைவிழந்திருக்க முடியும்? எனக்கு மயக்கம் வர மருந்தேதும் கொடுக்கப்பட வில்லையே' என்று நினைத்துப் பார்த்து ஏதும் தெரியாத தால் சுருக்கமாக நடந்ததைச் சொன்னான் கவர்னரிடம்.

அவன் கதையைக் கேட்ட கவர்னர் ஏஸ்லாபி சில வினாடிகள் பேசவில்லை. பிறகு கூறினார்: ''இதயசந்திரா! நீ எப்பொழுது என்னிடம் தூது வந்தாயோ அந்த வினாடியிலிருந்து என் பாதுகாப்பிற்குள்ளாகி விட்டாய். உன்னைக் கவனிக்க வேண்டியது என் கடமையாகி விட்டது. ஆகையால் நீ என்னிடம் பேசிவிட்டுக் கிளம்பியதி லிருந்து உன்னை என் ஒற்றர்கள் கண்காணித்தார்கள். நீ சத்திரத்தில் தங்கியது, மாலையில் கடற்கரையில் நீராடியது, பானுதேவி உன்னை அங்கு சந்தித்தது,

வீட்டனில் அழைத்துச் சென்றது அனைத்தும் எனக்கு அறிவிக்கப்பட்டது. பிறகு அந்த மாளிகையை இரவில் கண்காணிக்கவும் ஒருவனை நியமித்தேன்; அவனுக்கு உதவவும் இருவர் நியமிக்கப்பட்டார்கள்.''

''பிறகு என்ன நடந்தது பிரபு?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''நள்ளிரவு தாண்டியதும், நீ வெளியில் இருவரால் தூக்கி வரப்பட்டாய். நீ ஏறிச் சென்ற பீட்டன் வண்டி வெளியில் நின்றிருந்தது. அதில் உன்னை ஏற்றிக்கொண்டு இரு மகாராஷ்டிர வீரர்கள் காவலுடன் வண்டி புறப் பட்டது. எனது ஒற்றர்கள் புரவிகளில் வண்டியைக் கண்காணித்துத் தொடர்ந்தார்கள். பானுதேவியின் காவலாட்கள் உன்னைப் பழையபடி சத்திரத்தில் கொண்டு வந்து இரு வெள்ளைக்காரர்களிடம் ஒப்படைத் தார்கள்.....''

''உம்...''

''அவர்களில் ஒருவன் டூ காஸ்ட்ரோ'' என்று அறிவித்தார் கவர்னர் சாவதானமாக.

''என்ன!'' என்று வியப்புடன் வினவினான் தமிழன்.

''ஆம். டூ காஸ்ட்ரோவிடம்தான் நீ ஒப்படைக்கப் பட்டாய். விடியற்காலையில் உன்னைக் கப்பலுக்குக் கொண்டு போவதாகச் சொல்லிய டூ காஸ்ட்ரோ, நீ எழுந்திருக்காதிருப்பதற்காக உன் தலையில் தன் கைத் துப்பாக்கியின் பிடியால் ஓங்கி அடித்தான். பிறகு சத்திரத்துக்குள் தூக்கிச் செல்லப்பட்டாய்.''

பிறகு நடந்ததை கவர்னர் சொல்லாவிட்டாலும் புரிந்துகொண்டான் இதயசந்திரன். இருப்பினும் கவர்னர் சொல்லவே செய்தார். ''இதயசந்திரா! சத்திரத்தின் நிர்வாகி மகாராஷ்டிரர்களின் ஊதியம் பெற்றவன். நீ

இங்கு வருவதை அவன் மூலமாக பானுதேவியும் காஸ்ட்ரோவும் முன்கூட்டியே அறிந்திருக்கிறார்கள். நீ வந்ததும் உனக்கு அறை கொடுக்கப்பட்டதும் அவர்கள் உத்தரவின் மேல்தான். ஆகவே அவனை எனது சோல்ஜர்கள் இருவரை விட்டு மிரட்டி உன்னை இங்கு கொணர்ந்தேன். உன்னைப் பரிசோதித்த டாக்டர் உனக்கு அதிக ரத்தசேதம் ஏற்பட்டிருப்பதாகவும், நீ பலஹீனமாயிருப்பதாகவும் உன்னை இரவு பூராவும் பார்த்துக் கொள்ள ஒரு நர்ஸ் தேவையென்றும் கூறி இவளை இங்கு விட்டுப் போனார். மிஸ் எமிலியின் கை மிகுந்த ராசியுடையது. அந்த ராசிக் கரம் படாத பிரிட்டிஷ் சோல்ஜர்கள் மிகக் குறைவு. அவளை நாங்கள் தேவதையாகப் பாவிக்கிறோம். உன்னைக் காக்க அவள் கிடைத்தது உன் பாக்கியம்'' என்று கூறினார் ஏஸ்லாபி.

இதயசந்திரன் நன்றி ததும்பும் கண்களை அவர்மீது திருப்பினான். கடுமை நிரம்பிய குரலில் கூறினான், ''நான் காஸ்ட்ரோவைச் சந்திக்க வேண்டும்'' என்று.

''இன்றிரவு சந்திக்கலாம்'' என்று கூறிய கவர்னர் மெல்ல நகைத்தார்.

''இன்றிரவா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''இன்றிரவு நடன விருந்தல்லவா?''

''ஆமாம்''

''அதற்குத்தான் உனக்கு அழைப்பிருக்கிறதே. அதற்கு வரும்போது காஸ்ட்ரோவைச் சந்திக்கலாம். அவனுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறேன்.''

இதயசந்திரன் நகைத்தான். ''கவர்னர் பிரபு! இந்தப் பம்பாயில் உள்ள அத்தனை விரோதிகளையும் விருந்து மண்டபத்தில் கூட்டுகிறீர்கள்?'' என்று கேட்கும் செய்தான் நகைப்பின் ஊடே.

கவர்னர் ஏஸ்லாபி பெரிதாக நகைத்துவிட்டு, ''இதய சந்திரா! ஏஸ்லாபியின் நடன விருந்தில் விரோதிகள் நண்பர்களாகத்தான் இருக்க முடியும். புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும் அறநிலைதான் அங்கு நிலவும். சண்டையை நினைத்தாலுங்கூட அங்கு சரிப்பட்டு வராது. அங்குள்ள விதிகளை மீறுபவன் யாராயிருந்தாலும் அவன் உடனே சிறைக்கு அனுப்பப்படுவான். எனது சோல்ஜர்கள் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள்'' என்று கூறினார். ''நான் எத்தனையோ விருந்துகளை நடத்தியிருக்கிறேன் இதயசந்திரா! ஆனால் இத்தகைய விருந்தை இதுவரை நடத்தியதில்லை. இந்த நடன விருந்து ஒரு புரட்சி விருந்து. வெள்ளையரைத் தவிர வேறு யாரும் வரமுடியாத விருந்தில் இன்று சுதேசிகள் கலந்துகொள்கிறார்கள். ஒரு கடற் கொள்ளைக்காரன், ஓர் அரசகுல மகள், சதி செய்பவர்கள், சதியைக் குலைக்கத் தீர்மானமுள்ளவர்கள், பிரிட்டிஷாரை நாட்டைவிட்டுத் துரத்த இஷ்டமுள்ளவர்கள், நாட்டில் நிரந்தரமாகக் காலூன்றத் தீர்மானித்திருக்கும் பிரிட்டிஷ் பிரஜைகள்— அனைவரும் கலந்துகொள்கிறார்கள். இந்த நடன விருந்து பிற்காலத்தில் இங்கு பிரிட்டிஷாரும் சுதேசிகளும் கலந்து வாழ்வதற்கு ஒரு முன்னோடி'' என்று விளக்கி விட்டுக் கவர்னர் ஏஸ்லாபி வெளியே சென்றார் ஆர்டர்லி பின்தொடர.

அவர் சென்றபின் பெரும் சிந்தனையிலிறங்கினான் இதயசந்திரன். இவ்வளவு சீரிய சிந்தனை உள்ள ஏஸ்லாபியை, பெரும் ராஜதந்திரியை, இணையிலா அறிவாளியை, பிரும்மேந்திர ஸ்வாமியோ, ஷாஹுவோ யாருமே அடக்க முடியாதென்பதையும், அடக்குவதானால் கனோஜிதான் அடக்க முடியுமென்பதையும் புரிந்து கொண்டான் தமிழக வீரன். பிரிட்டிஷாரின் நட்பைக் கனோஜி நாடுவதற்குள்ள பல காரணங்களில் கவர்னர் ஏஸ்லாபியும் ஒருவர் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தது இதய

சந்திரனுக்கு. கவர்னர் ஏஸ்லாபி தொடர்ந்து பம்பாயில் இருந்தால் பம்பாயைத் தவிர இன்னும் பல இடங்களும் பிரிட்டிஷ் வசப்படும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளவும் செய்தான். இந்த நிலையில் போர்ச்சுகீஸியர் பலம் அதிகமாயிருந்தாலும் அவர்கள் கொலையாலும், கொள்ளையாலும் மக்களின் வெறுப்பைப் பெற்றுவிட்டதால் பாரதத்தில் காலூன்றுவது கஷ்டமென்பதையும், ஆனால் ஏஸ்லாபி பாதி கருணையாலும் பாதி ராணுவ பலத்தாலும் நாட்டை அடிமைபடுத்தும் சக்தி வாய்ந்தவ ரென்பதையும் உணர்ந்து கொண்டான். ஏஸ்லாபிக்குச் சமதையான அறிவுடைய கனோஜியால்தான் நாடு மீள முடியுமென்பதையும், ஆகையால் கனோஜி சொல்லும் எதையும் நிறைவேற்றுவது தனது கடமையென்றும் தீர்மானித்துக் கொள்ளவும் செய்தான்.

அவன் சிந்தனையிலாழ்ந்து விட்டதைக் கண்ட எமில அவன் கட்டிலை அணுகி அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் தலையைத் தொட்டுப் பார்த்தாள். ''பலஹீனமா யிருக்கிறீர்கள். படுத்துக்கொள்ளுங்கள்'' என்று அவனை இரு கைகளாலும் கட்டிப்பிடித்து மெல்லப் படுக்க வைத்தாள். சுயநினைவு பூர்ணமாக வந்துவிட்டதால் அவள் தன்னைத் தொடுவதும் கட்டிப் படுக்கவைப்பதும் பெரும் சங்கடமாயிருந்தது தமிழனுக்கு. ஆகவே சொன் னான், ''எமிலி, இனி நானே படுப்பேன், எழுந் திருப்பேன்'' என்று.

''ஏன், நான் படுக்க வைத்தாலென்ன? கசக்கிறதா?'' என்று கேட்டு நகைத்தாள் எமிலி.

இதயசந்திரன் அதற்குப் பதில் எதுவும் கூறவில்லை வேறு கேள்வி கேட்டான், ''உனக்குக் கல்யாணமாக வில்லையா?'' என்று.

''மில் எமிலி என்று கவர்னர் கூப்பிட்டதை நீங்கள்

இதயசந்திரன் அவளை நோக்கிப் புன்முறுவல் செய்தான். ''மன்னிக்க வேண்டும். எனக்கு ஆங்கிலம் அதிகமாகத் தெரியாது'' என்று கூறவும் செய்தான்.

''ஆனால்...'' வாசகத்தை முடிக்காமல் நகைத்தாள் எமிலி.

''ஆனால் என்ன?''

''எதுவும் குறைவில்லை.''

''எது குறைவில்லை?''

''மொழி தெரியாவிட்டாலும்...''

''உம்...?''

''வெள்ளைக்காரிகளை வசப்படுத்தத் தவறுவ தில்லை.''

''என்ன! என்ன சொல்கிறாய் எமிலி?'' என்று பதட்டத்துடன் கேட்டான் இதயசந்திரன்.

எமிலி அவன் நெற்றியில் முத்தமிட்டாள். ''நான் காதரைனல்ல'' என்று கூறி நகைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டாள்.

அன்று பகல் முழுவதும் அடிக்கடி வந்து இதய சந்திரனைக் கவனித்துக் கொண்டாள் எமிலி. அவன் துணிகளை மாற்றிக் கொள்ளவும் உதவி புரிந்தாள். உடலை அவளே பஞ்சு கொண்டு வெந்நீரில் நனைத்துத் துடைத்து விட்டாள். டாக்டர் கொடுத்த மருந்தையும் இரண்டு மூன்று முறை புகட்டினாள்.

இரவு வந்ததும் புத்தாடைகளைக் கொண்டு வந்தாள் எமிலி. அவனுக்கு அவளே அவற்றை அணிவித்து, தலைக் கட்டை மறைக்க ஒரு சிவப்புத் துணியையும் கட்டி முடிக்குக் குறுக்கே முகத்தைக் கால்வாசி மறைத்தாள். ''இப்பொழுது அசல் கடற்கொள்ளைக்காரன் மாதிரி இருக்கிறீர்கள்'' என்று அவனைப் பார்த்துப் பரிகசித்து

விட்டு அவனுடன் கையைக் கோத்துக் கொண்டாள். "வாருங்கள்" என்றும் அழைத்துக் கையை இழுத்தாள்.

"எங்கு?"

"நடன விருந்துக்கு."

"அதற்கு நீ என் கையைக் கோத்துக் கொள்வானேன்?"

"இதுதான் வழக்கம்."

"நல்ல வழக்கம்!"

"வேறொரு காரணமும் இருக்கிறது."

"என்ன காரணம்?"

"முதல் டான்ஸ் என்னுடன்."

இதயசந்திரன் விழித்தான், "என்ன டான்ஸா?" என்று.

"நாம் இருவரும் இணைந்து ஆடுவோம்" என்ற எமிலி அவனை வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு சென்றாள்.

அத்தியாயம் 9

நடன மண்டபம்

பிரிட்டிஷ் சராயும், மகாராஷ்டிர சட்டையும், தலையின் கட்டை மறைக்கச் சிவப்புத் துணியைக் குறுக்கிலும் அணிந்து, அந்த தலைச் சிவப்புத் துணி பாதி ஒருபுறம் தொங்க சாட்சாத் கடற்கொள்ளைக்காரன் போல் விளங்கிய இதயசந்திரன், எமிலியின் அழகிய கை தன்னுடைய கையுடன் கோத்துக்கொள்ளவே பெரும் சங்கடத்துடன் அறையிலிருந்து நடந்தான். நாலைந்து அடிகள் நடப்பதற்குள்ளாகவே எமிலியின் வளைந்த கையில் நுழைந்து பிணைந்து கிடந்த தனது கையின் பகுதி அவளது விலாவிலும், விலாவை அணுகியிருந்த அழகுப் புடைப்பிலும் பட்டுவிட்டதையும் அதைப்பற்றி எமிலி சிறிதும் லட்சியம் செய்யாமல் தன்னை நெருங்கியே நடந்ததையும் பார்த்த அந்தத் தமிழக வீரன் மனநிலை பெரிதும் சிதறத் தொடங்கியது. அறைவாயிலைத் தாண்டியதும் எமிலி அவனை அழைத்துக்கொண்டு மாடித் தாழ்வாரத்தின் முகப்புக்குச் சென்று, "வீரரே! சற்று எட்டிப் பாருங்கள். விருந்துக்கு யார் யார் வருகிறார்கள், எப்படி எப்படி வருகிறார்கள் என்பது புரியும்" என்று கூறி அவனுடன் இணைந்து நின்றாள் கோத்த கை கோத்தபடி.

இதயசந்திரன் மாடித் தாழ்வாரத்தின் கைப்பிடியில் சார்ந்த வண்ணம் சற்றுக் குனிந்து பார்த்தான், பார்த்தவன் பிரமித்து நின்றான் பல விநாடிகள். கீழே கவர்னர் மாளிகைக்கும் மாளிகைக் கோட்டைச் சுவருக்கும் இடையே இருந்த திறந்த வெளியில் வண்டிகள் சாரிசாரியாக ஊர்ந்து வந்தன. முறைப்படி ஒரே சீராக ஒரே நிதானத்துடன் செலுத்தப்பட்ட பீட்டன் கோச் வண்டிகள்

ஒவ்வொன்றாக நடன மண்டப வாயிலுக்கெதிரில் வந்ததும் பூர்ண ராணுவ உடையணிந்த வெள்ளைக்காரர் இருவர் வண்டிக் கதவுகளைத் திறந்தார்கள். அவற்றிலிருந்து முதலில் இறங்கிய வெள்ளைக்காரர்கள் கைலாகு கொடுத்து வெள்ளைக்காரிகளை வண்டியிலிருந்து மிக மரியாதையாகக் கீழே இறக்கினார்கள். அப்படி இறக்கிய பின் அடுத்த வண்டி அந்த இடத்துக்கு வந்தது. இப்படி ஒவ்வொரு வண்டியாக குறித்த இடத்துக்கு வந்து வந்து வெள்ளைக்காரர்கள் ஆண்கள் பெண்களாக ஜோடி ஜோடியாக வந்து இறங்கியதையும் ஒவ்வொன்றிலும் ஓர் ஏற்பாடும் திட்டமும் இருந்ததையும் கவனித்த இதய சந்திரன், ''எப்படி இந்த மனிதர்கள் ஒரே மாதிரியாக யந்திரங்கள்போல் இயங்க முடிகிறது!'' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான், வியப்பும் அடைந்தான்.

பத்து வெள்ளைக்காரர்கள் வண்டிகள் போனதும் நாலைந்து மகாராஷ்டிரப் பிரபுக்களின் வண்டிகள் வந்தன. அதிலிருந்தும் ஜோடியாகவும் உதிரியாகவும் மகாராஷ்டிரர் இறங்கினார்கள். அவர்களில் சிலர் வர்த்தகர். சிலர் பிரிட்டிஷ் ஏஜெண்டுகள். இன்னும் சிலர் துபிபாஷிகர் என்ற மொழிபெயர்ப்பாளர்கள் என்பதை அவர்களுடைய விதவிதமான உடைகளிலிருந்தே புரிந்து கொண்டான் இதயசந்திரன். தவிர, கோட்டைச் சுவருக்கும் கவர்னர் மாளிகை வாயிற்படிக்கும் இடையிலிருந்த திறந்த பகுதியில் பிரிட்டிஷ் சோல்ஜர்களின் காவல் மிகப் பலமாயிருந்தது. நீண்ட துப்பாக்கிகளைத் தாங்கிய பிரிட்டிஷ் சோல்ஜர்களும் அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட இந்திய சிப்பாய்களும் மதிலோரங்களிலும் மாளிகை முன்னிலையிலும் அணிவகுத்து நின்றிருந்தார்கள். கோட்டைப் பெருமதிலின் வாயிலுக்கருகில் பெரும் புரவிகளில் ஏறிய இரண்டு பிரிட்டிஷ் சோல்ஜர்கள் காவல் புரிந்தனர். கோச்சோ, பீட்டனோ, வேறு புரவிகளில் பிரபுக்களோ வரும்போது புரவிகளிலிருந்தவர்கள் தங்கள் தலையில் இருந்த

ஹாட்டுகளின் முகப்பைக் கையால் தொட்டு மரியாதை காட்டினார்கள். மாளிகை வாயிலை அதே வண்டிகளோ புரவிகளோ வந்தடைந்தபோது அங்கிருந்த பிரிட்டிஷ் சோல்ஜர்கள் ஹாட்டுகளைக் கழற்றி மார்பில் வைத்துத் தலை வணங்கி மரியாதை செய்தார்கள். எல்லாம் ஒரு திட்டமான ஏற்பாடுடனும், மரியாதையுடனும் நடப்பதைக் கண்ட இதயசந்திரன் இத்தகைய கட்டுத்திட்டங்களுடன் நடந்து கொள்ளும் நாட்டினரிடமிருந்து இந்த நாட்டைக் கனோஜி ஒருவர்தான் காக்க முடியும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டதன்றி அந்த எண்ணத்தின் விளைவாகப் பெருமூச்செறியவும் செய்தான்.

அவன் பெருமூச்செறிந்ததைக் கண்ட எமிலி நகைத்தாள். சற்று நெருங்கி அவன் உடலுடன் அவள் உடலை இழைக்கவும் செய்தாள். இதயசந்திரன் அந்த இழைப்பை ஏற்கவுமில்லை, துறக்கவுமில்லை. சிலையென நின்றபடி கேட்டான், ''எமிலி, எதற்கு நகைக்கிறாய்?'' என்று.

எமிலி மறுபடியும் நகைத்தாள். இம்முறை சற்றுப் பெரிதாக, ''எதற்கு எமிலி சிரிக்கிறாய்?'' என்று மீண்டும் வினவினான் தமிழன் சினம் மிகுந்த குரலில்.

''உங்கள் சுபாவத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டீர்களே என்று நகைத்தேன்'' என்று கூறிய எமிலி, அவன் கைக்குள் அகப்பட்டிருந்த தனது கையைச் சிறிது அழுத்திக் கொடுத்தாள்.

''என் சுபாவமா?'' என்று வினவினான் இதயசந்திரன் ஏதும் புரியாமல் அவளை நோக்கித் திரும்பி.

அவள் சற்றுத் திருப்பித் தன் கண்களை அவன் கண்களுடன் உறவாட விட்டாள். அந்தக் கண்களில் பெரும் காந்த சக்தியிருந்தது அவனுக்குப் புரிந்தது. அவள் அழகிய உருண்டைமுகம் அசாத்ய வெள்ளையாயிருந்ததன்றி வெட்கப்பட்ட ஓரிரு சமயங்களில் திடீரெனக் குங்குமச்

சிவப்பாகச் சிவக்கவும் செய்தது. கன்னங்கள் சிவந்து ரோஜாக் கன்னங்களாயின. அவள் இதழ்கள் அப்பப்பா எத்தனை சிவப்பு? விளக்கொளியில் அப்படித் தெரிகிறதோ? இல்லை, இல்லையே! உள் ரத்தமே அப்படி வெளியில் வந்து ஒளியுடன் கலந்து விளையாடுவது போன்ற பிரமை! அவற்றின் சிவப்பில்தான் எத்தனை நீரோட்டம்! இப்படி நினைத்துப் பிரமித்த இதயசந்திரனை நோக்கிய எமிலி கேட்டாள்: ''என்ன சிலை போலாகி விட்டீர்கள்!'' என்று.

''சிலையொன்று கண்டேன்...''

''என்ன சிலை?''

''அழகுச் சிலை.''

''அதனிடம் மோகம் கொண்டீர்கள்.''

''இல்லை இல்லை. அழகை வியந்தேன்.''

''வியந்தீர்கள். ரசித்தீர்கள். பிறகு உறவும் கொண்டாட முற்பட்டீர்கள்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை எமிலி.''

மீண்டும் நகைத்தாள் அவள். ''என்ன பெயர் சொல்லி அழைத்தீர்கள்?'' என்றும் கேட்டாள்.

''எமிலி என்று அழைத்தேன்'' என்றான் இதய சந்திரன்.

எமிலி அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள்.

''வீரரே!'' என்று இழுத்தாள் மெதுவாக.

''என்ன எமிலி?''

''என்னை எமிலி என்றழைக்கும் உரிமை என்னை மணம் செய்துகொள்ளப் போகிறவருக்குத்தான் உண்டு.

இதயசந்திரன் திகைத்தான். மெள்ள மெள்ள அவனுக்கு நினைவு வந்தது. அப்பொழுது, 'காதரைனும் இதையேதான் சொன்னாள். இவளை நான் மிஸ் எமிலி என்று கவர்னர் அழைப்பதுபோல் அழைக்கவேண்டும். அடாடா, ஏதாவது இவள் தவறாக நினைத்துக்

கொள்ளப் போகிறாளே?' என்று உள்ளூர எண்ணமிட்ட இதயசந்திரன், ''மிஸ் எமிலி. மன்னிக்கவேண்டும்'' என்றான்.

எமிலி தன் அழகிய கையை அவன் கையுடன் நன்றாக இணைத்துக்கொண்டாள். ''இதில் மன்னிப்பதற்கு ஏது மில்லை'' என்று கூறினாள்.

இதயசந்திரன் சிந்தனை நிரம்பிய கண்களை அவள் முகத்தில் நிலைக்கவிட்டான். ''நீ சொல்வது புரியவில்லை எமிலி'' என்றும் கூறினான்.

''வீரரே! நீங்கள் எமிலி என்றழைப்பதில் எனக்கு ஆட்சேபணை இருந்தாலல்லவா நீங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும்'' என்று மெள்ளக் கூறினாள், வேறு பக்கம் பார்த்தவண்ணம்.

இதயசந்திரன் மென்று விழுங்கினான். ''மிஸ் எமிலி'' என்று மெள்ள அழைக்கவும் செய்தான்.

''என்ன வீரரே?'' என்றாள் அவள் தாழ்வாரக் கைப் பிடியில் சாய்ந்து வெளியே கண்களை ஓட்டியவண்ணம்.

''நம் உறவு பரஸ்பர நட்புக்குமேல் போகக்கூடாது'' என்றான் இதயசந்திரன், தன் கையை அவள் கையிலிருந்து விலக்கி அவள் இடையில் செலுத்திய வண்ணம். எமிலி யின் இடை மிகவும் வழவழப்பாக இருந்தது. அதன் அடி மிக உறுதியாகவும் கடினமாகவும் இருந்தது.

எமிலி உள்ளூர நகைத்துக்கொண்டாள். அவன் கை தனது இடையில் ஊர்ந்து வளைத்துக் கொள்வதையும் உணர்ந்து கொண்டதால் உள்ளே உதிர்ந்த சிரிப்பை மறைத்து, ''ஏன் அதற்குமேல் உறவு கூடாதா?'' என்று கேட்டாள் சரளமான குரலில்.

துணிவான அந்தக் கேள்வி இதயசந்திரனைத் தூக்கி வாரிப்போட்டது. அவள் இடையை நன்றாக அணைத்து இழுத்துக்கொண்ட அவன் அவள் காதுக்கருகில் குனிந்து,

''எமிலி! நீ எனக்குச் சிகிச்சை செய்தவள். உன்னிடம் எனக்கு அபரிமித நன்றியிருக்கிறது'' என்று கூறினான்.

''அந்த நன்றியை எப்படிக் காட்டப் போகிறீர்கள்?'' என்று வினவினாள் எமிலி.

''என் இதயத்தில் உனக்கு நிரந்தரமாக இடமிருக்கும் எமிலி.''

''வீரரே.''

''என்ன எமிலி?''

''உங்கள் இதயத்தில்...''

''சொல்.''

எமிலி ஏதோ யோசித்தாள். பிறகு திடீரெனப் பேச்சை மாற்றி, ''பெண்கள் கூட்டம் மிக அதிகமாயிருக்கிறது. அதில் நெருக்கியடித்துக் கொண்டுதான் புக வேண்டும்'' என்று கூறிவிட்டு, ''வாருங்கள் போவோம். நடனம் துவங்கும் சமயமாகிவிட்டது'' என்று அவன் கையுடன் தனது கையை மீண்டும் இணைத்துக் கொண்டாள்.

இதயசந்திரன் இதயத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்துலாவ அவளுடன் நடந்து சென்றான். எமிலியின் அற்புத அழகு அவனைப் பிரமிக்க வைத்திருந்தது. தான் சம்பந்தப்பட்ட பானுதேவி, மஞ்சு, காதரைன் இவர்களுடன் எமிலியையும் சேர்த்து நிற்க வைத்தான் மனப் பீடத்தில். அந்த மூவருக்கும் எமிலி எந்தவிதத்திலும் குறைந்தவளல்லவென்பதையும் நான்கு பெண்களும் நான்குவித அழகுப் பிறவிகளென்பதையும் உணர்ந்து கொண்டதால் அவன் மனம் பலபடி சலித்தது. புத்தி ஓரளவு குழம்பியும் கிடந்தது. இத்தகைய நிலையில் எமிலியுடன் கையுடன் கைகோத்து வெள்ளைக்காரப் பாணியில் மாடிப்படிகளில் இறங்கி நடன கூடத்திற்கருகாமையில் வந்த இதயசந்திரன் கீழே கண்ட காட்சியைக் கண்டு மாடிப்படியிலேயே ஸ்தம்பித்து நின்றான்.

கீழே திரண்டு நின்றது கந்தர்வ உலகமா, அப்சர உலகமா, தேவலோகமா, பூலோகமா என்பது புரியவில்லை தமிழனுக்கு. நாலாவிதமான வர்ணங்களில் பலப்பல ஆடைகள் அணிந்து வந்திருந்தார்கள் பிரிட்டிஷ் அதிபதிகள் பலர். ஆண்களில் சிலர் மாலுமிகளாகக் காட்சியளித்தார்கள். இன்னும் சிலர் கறுப்பு சூட்டும் கழுத்தில் 'போ' என்றழைக்கப்படும் சிறு டையும் அணிந்திருந்தார்கள். வெள்ளைக்காரப் பெண்மணிகள் உடல் பூராவும் மறைக்க நீண்ட உடைகளை மேலே அணிந்திருந்தாலும், அந்த ஆடைகளை ஆடவர்கள் மிகுந்த பணிவுடன் கழற்றிக் கதவருகில் நின்ற காவலரிடம் கொடுக்கவே அவர்கள் அவற்றைப் பயபக்தியுடன் வாங்கிப் பக்கத்தில் பத்திரப் படுத்தினார்கள். மேலாடை நீங்கியதும் உள்ளேயிருந்த அலங்கார கௌன்களில் அப்சரஸ்கள்போல் காட்சியளித்த வெள்ளைக்கார மாதர் அதிக ஆபரணங்களை அணிய வில்லையென்றாலும் அவர்கள் அணிந்திருந்த ஒற்றைக் கழுத்து ஆபரணங்கள் பளீரென அங்கிருந்த பவர் விளக்குகளில் மின்னின.

விருந்துக்கு வந்திருந்த மகாராஷ்டிரப் பிரபுக்கள் தங்கள் சம்பிரதாய உடைகளை அணிந்து வந்திருந்ததால் அந்தக் கூட்டத்திலிருந்து தனியாகப் பிரிந்து தெரிந்தாலும் அவர்களிடையும் கண்ணியம் இருக்கவே செய்தது. அவர்கள் தலையில் பிரிமணைபோல் சுற்றப்பட்டிருந்த தலையணிகளை அவர்கள் மெல்ல எடுத்ததும் அவற்றையும் வெள்ளைக்காரக் காவலர் மிகுந்த மதிப்புடன் வாங்கித் தனியாக வைத்தனர். இப்படிப் பலபடி உள்ளே வந்தவர்களுக்குச் சிற்றுண்டிகளும் மது வர்க்கங்களும் வழங்க நடனமண்டபத்தின் கோடியில் பட்லர்கள் பலர் நீண்ட மேஜையின் பின்புறத்தில் நின்றிருந்தனர். அங்கு தாங்களாகவே சென்ற வெள்ளைக்காரப் பிரபுக்களும் பெண்மணிகளும் சிற்றுண்டிகளைச் சிறிது அருந்தி மது வர்க்கங்களைச் சிறு கண்ணாடிக் கோப்பைகளில் உறிஞ்சினார்கள். சுதேசிகளில் சிலர் மட்டும் அவர்களைப் பார்த்து ஏதோ

குடித்தாலும் பெரும்பான்மையானவர்கள் விலகி ஒரு பக்கமாக இருந்த சோபாக்களில் அமர்ந்திருந்தார்கள்.

கவர்னர் ஏஸ்லாபி அனைவரையும் வரவேற்கத் தமது மனைவியுடன் அந்த நடன மண்டபத்தின் முகப்பிலேயே நின்றிருந்தார். ஒவ்வொரு ஜோடி வந்தபோதும் தனி நபர் வந்தபோதும் அந்தரங்கக் காரியதரிசி அவர்களை அறிமுகப் படுத்தியதும் கவர்னர் தம்பதிகள் அவர்களுடன் கை குலுக்கி நல்லவரவு கூறினார்கள். மாடிப்படியிலிருந்து இவைகளைக் கவனித்துக்கொண்டிருந்த இதயசந்திரன் தனக்குத் தெரிந்தவர்கள் யாரும் அதுவரை வராததைக் கவனித்தான். கவர்னர் எல்லோருக்கும் ஒரேவிதமான வரவேற்பை அளித்ததைக் கண்டு பிரமித்தான். சற்று நேரத்திற்கெல்லாம் மானுவல் டீ காஸ்ட்ரோ வந்த போதும் சரி, அவனைத் தொடர்ந்து இரண்டு தோழிகளுடன் பானுதேவி வந்தபோதும் சரி, கடைசி யாகக் காதரைனும் கிப்போர்ட்டும் வந்தபோதும் சரி, கவர்னர் எந்தவிதமான முக மாறுதலையும் காட்டாததைக் கண்ட இதயசந்திரன் ஏஸ்லாபியின் மன உறுதியை எண்ணிப் பெரு வியப்படைந்தான்.

டீ காஸ்ட்ரோ வழி காட்ட, தனியான ஓர் ஆசனத்தில் சென்று பானுதேவியும் அவள் தோழிகளும் அமர்ந்து கொண்டார்கள். அதற்கு அடுத்த ஆசனத்தில் காதரைனும், கிப்போர்ட்டும் அமர்ந்தார்கள். இவர்கள் வந்ததும் அதுவரையில் அந்தக் கூட்டத்தின் பக்கமே வராமல் தூர நின்ற மிஸ்டர் ப்ரௌன், கவர்னரை அணுகிக் காதில் ஏதோ சொன்னார். கவர்னர் பதிலுக்குத் தலையை மட்டும் லேசாக அசைத்தார். அடுத்த விநாடி மிஸ்டர் ப்ரௌன், தூர இருந்த வாத்திய கோஷ்டிக்குச் சைகை காட்டவே வாத்தியங்கள் திடீரென உயர்ந்து கோஷித்தன. ஒரே சுருதியில் பெரிதாக எழுந்து ஒலித்த சுமார் ஏழெட்டு வாத்தியங்கள் அந்த நடன அறையை இசை மயமாக அடித்தன.

நடன மண்டபத்தின் சலவைக்கல் சுவர்களில், கூட்டத்தில் இணைந்து நகர்ந்த வெள்ளைக்கார ஜோடிகளின் பிரதி பிம்பங்கள் ஊர்ந்தன. பல லஸ்தர் விளக்குகளாலும், கூரையிலிருந்து தொங்கிய பட்டை தீட்டிய கண்ணாடி குஞ்சல விளக்குகள் பரப்பிய நீலம், ஊதா, பச்சை, மஞ்சள் ஆகிய பல வர்ணங்களாலும், யாரையும் மயக்கும் வண்ண மிருந்தது அந்த நடன மண்டபம். ஆண் பெண் ஜோடி பரஸ்பரம் தழுவிக்கொண்டு இசைக்குத் தகுந்தபடி ஊர்ந்தார்கள். மிஸ் எமிலி, ''வாருங்கள். நடனம் துவங்கி விட்டது'' என்று இதயசந்திரனை இழுத்துக் கொண்டு மண்டபத் தரைக்கு வந்தாள். அவள், ''உங்கள் இடது கையால் என் இடையை அணையுங்கள். வலது கையை என் தோளில் வைத்துக் கொள்ளுங்கள். ஆம் அப்படித் தான். இப்பொழுது வாருங்கள்'' என்று கூறி, அவனுடன் அசைந்து சென்றாள் நடன மண்டபத்தில். வயலின் ஒன்று தனிப்பட எழுந்து பேரொலி கிளப்பியது. எமிலி அவன் உடலுடன் ஒன்றினாள். தலையை அவன் தோள்மீது சாய்த்துக்கொண்டாள். கால்கள் கால்களுடன் சேர்ந்தும் இழைந்தும் நடன உலாவலில் சென்றன.

இசையும் நடனமும் இன்பமும் நிறைந்த அந்தச் சூழ்நிலையில் இருவர் உள்ளங்கள் மட்டும் கொதித்துக் கொண்டிருந்தன. கண்களும் பார்த்தன சுட்டுவிடுவன போல். காதரைன், பானுதேவி ஆகிய இருவர் கண்களே அவை. அந்தப் புது ஜோடியின் பார்வையில் வெறுப்பும் பொறாமையும் கலந்து கிடந்தன. இருவரிடமிருந்தும் பெருமூச்சொன்றும் வெளிவந்தது. அவர்கள் இருவர் மட்டுமல்ல அந்த ஜோடியை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தது, இன்னும் இருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த நடன மண்டபத்தின் கோடியில் நின்று கொண்டிருந்த மிஸ்டர் ப்ரௌன், டீ காஸ்ட்ரோவிடம் தமிழனையும் எமிலியையும் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னார். தலையசைத்த காஸ்ட்ரோ தமிழனிருந்த இடத்தை அடைய மெல்ல நடன கூடத்துக்குள் புகுந்தான்

அத்தியாயம் 10

மிஸ்டர் ப்ரௌன் அளித்த பரிசு

மிஸ்டர் ப்ரௌனின் தூண்டுதலின் பேரில் மானுவல் டீ காஸ்ட்ரோ நடனமாடிக் கொண்டிருந்தவர்களின் கூட்டத்திற்குள் புகுந்துவிட்டானென்றாலும், மிக சாமர்த்தியமாக ஜோடிகளின் மேல் படாமல் இடைவெளிகளில் நுழைந்து நுழைந்து முன்னேற முயன்றானென்றாலும் அது அத்தனை எளிதில் முடிகிற அலுவலாயில்லை.

கவர்னர் ஏஸ்லாபி அன்று வழக்கத்திற்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்திருந்தார். சாதாரணமாக விருந்துக்கு விடும் அழைப்புகளை விட இரட்டை மடங்கு அழைப்பு விடுத்திருந்தபடியாலும், போதாக் குறைக்குச் சுதேசியான இதயசந்திரனை வெள்ளைக்காரப் பெண்ணுடன் நடனமாட அனுமதித்திருந்தபடியாலும், நடன மண்டபத்தில் கூட்டம் அதிகமாயிருந்ததோடு நடனமாடியவர்கள் அடிக்கடி இதயசந்திரனையும் எமிலியையும் திரும்பத் திரும்பப் பார்த்ததால், கூட்டத்துக்குள் நுழைந்த டீ காஸ்ட்ரோ மிகுந்த கஷ்டத்துடன் முன்னேற வேண்டி வந்ததன்றி, மற்ற வெள்ளைக்கார ஜோடிகளின் பார்வைக்கும் இலக்கானான். சிலர் அவனை வியப்புடன் பார்த்தனர். சிலர் வெறுப்புடன் பார்த்தனர். அவன் அப்படி நுழைவது சரிதானா என்று வினவுபவர் போல் சிலர் தூரத்தே மனைவியுடன் நின்று கொண்டிருந்த கவர்னர் மீதும் கண்களை ஓட்டினர். இது எதையும் லட்சியம் செய்யாமலே டீ காஸ்ட்ரோ முன்னேறினான். எதையும் லட்சியம் செய்யாமலே இதயசந்திரனும் மிஸ் எமிலியைத் தழுவிய வண்ணம் நடனமாடினான்.

முதலில் நடன கூடத்துக்குள் புகுந்து மிஸ் எமிலியின் சொற்படி அவள் இடையைத் தழுவியும் தோளை ஒரு கையால் அணைத்தும் இசைக்குத் தகுந்தபடி அசைந்து செல்ல முயன்ற அவனுக்கு ஆரம்பம் பெரும் பிரமையாக இருந்ததன்றிச் சிறிது சங்கடமாகவும் இருந்தது. அழகியொருத்தி தனது கையில் வளைய வருகிறாளேயென்ற பிரமை மட்டுமின்றி, கூடத்துக் கூட்டத்துள் ஊர்ந்து சென்றபோது தங்களை அணுகி வந்த இதர நடன ஜோடிகளில், சில பெண்களின் திறந்த முதுகுப் பகுதிகளும், சில பெண்களின் இடைகளும், சில பெண்களின் கழுத்தும் மார்பும் கண்களில் பட்டதாலும், தமிழனைப் பெரும் மயக்கமும் ஆட்கொண்டிருந்தது.

எதிரே தெரிந்த எமிலியின் அழகிய கழுத்தும் கழுத்திலிருந்து கீழே கௌன் சற்று இடைவெளி கொடுத்ததால் தெரிந்த அழகு பிம்பங்களும், அவனைப் பெரிதும் சங்கட மடைய வைத்திருந்ததென்றால், அவற்றிலிருந்து தப்பக் கீழே கண்களை ஓட்டினால், வெள்ளைக்காரிகளின் கௌன்கள் மேலேறியதன் விளைவாக அவர்கள் முழங்கால்களுக்கு மேல் அரை அடி தள்ளியே தெரிந்த கால் பிரதேசங்களின் கவர்ச்சி அவனை எங்கெங்கோ கொண்டு சென்றது. அந்த நிலையிலிருந்து தப்ப அவன் நடனமாடியவண்ணம் தூரத்தே உட்கார்ந்திருந்த பானுதேவியைக் கவனித்தான். பானுதேவி தன்னைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்ததையும், அவள் பக்கத்திலிருந்த காதரைனைக் காணாததையும் பார்த்த இதயசந்திரன் மீண்டும் எமிலியின் மோகனாஸ்திரத்தில் கட்டுண்டான். அப்படி மீள முடியாமல் கட்டுண்ட அவன் உணர்ச்சிகளைக் குலைக்கவோ என்னவோ வயலின் திடீரென்று துரித காலத்தில் ஒலித்தது. அதன் விளைவாக அவன்மீது நன்றாக இணைந்து, ''என்னை இறுகப் பிடியுங்கள். அதோ பக்கத்திலிருப்பவர்களைப் பாருங்கள்'' என்று கூறித் தன் உடலை எமிலி

அழுத்தவே, வேறு வழியின்றி அவன் கைகள் அவளை இறுக அணைத்துக் கொண்டன.

நடன மண்டபத்தில் ஜோடிகள் அதிகமாக இணைந்தும் அணைந்தும் வேகமாகச் சுழன்றார்கள். வயலின் உச்சக் கட்டத்தை எட்டியபோது, எமிலி அவன் தோள்மீது தலையைப் புதைத்துக் கொண்டு அவனுடன் ஒன்றி இழைந்தாள். அவள் உடல் அவன் உடலுடன் குழைந்து குழைந்து ஆடியதால் இதயசந்திரனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சுரணையும் காற்றில் பறந்தது. தோளில் சாய்ந்த எமிலியின் தங்கத் தலைமயிர் அவன் கண்களுக்கெதிரில் பச்சை, ஊதா நிற ஒளி வீச்சில் பளபளத்தது. அவன் நாசியில், அவள் லேசாகக் கழுத்திலும் தலையிலும் தடவியிருந்த மொகலாயர் ரோஜா அத்தர் புகுந்து சித்தத்தை மயக்கிக் கொண்டிருந்தது

ஏதும் புரியாத சொர்க்கத்தில் உலாவினான் அவன். நடனமாடிய நிலையில் அடிக்கடி அவனுக்கருகில் வந்து அவன் பிரமையைக் கவனித்த காதரைனையோ அவளுடன் ஆடிய கிப்போர்ட்டையோ அவன் கவனிக்கவில்லை. உண்மையில் நடன மண்டபம் மறைந்துவிட்டது அவன் கண்களிலிருந்து. விரிந்தது ஜலதீபத்தின் தலைவியறை. அவன் கை அணைப்பிலிருந்து எமிலி மறைந்து மஞ்சுவுக்கு இடம் கொடுத்தாள். மஞ்சுவின் அலட்சியச் சிரிப்பு அவன் இதயத்துக்குள் கேட்டது. ஆகவே, இறுக்கி அணைத்தான் இதயசந்திரன் கையிலிருந்த ஏந்திழையை. அவன் உதடுகள் அவள் தலைக்குழலை லேசாகத் தொட்டன. கன்னங்களையும் தடவின. மிஸ் எமிலி அதையெல்லாம் கவனிக்கவே செய்தாலும், அதைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. தமிழன் லேசுப்பட்டவனல்லவென்று உள்ளூரச் சொல்லிச் சிரித்துக் கொண்டாள். அருகில் நடனமாடிக் கொண்டிருந்த காதரைனைப் பார்த்து மெல்லப் புன்முறுவலும் கோட்டினாள்.

வயலின் இன்னும் துரிதமாக ஒலிக்கவே நடன வேகம் அதிகப்பட்டது. ஜோடிகள் பரபரவென்று சுழன்றார்கள். ஏதோ வெறி அதிகப்பட்டு விட்டதற்கான அறிகுறி எங்கும் தென்பட்டன. அத்தகைய சூழ்நிலையில் சிக்கிக் கொண்ட டூ காஸ்ட்ரோவால் எளிதில் அடைய முடியவில்லை இதய சந்திரன் இருந்த இடத்தை. இருப்பினும் அவன் சமாளித்துக்கொண்டு முன்னேறத் தொடங்கியதைக் கண்ட எமிலி மெள்ள மெள்ள இதயசந்திரனை மண்டபத்தின் பின்புற வாயிலை நோக்கி இழுத்தாள். இதயசந்திரனுக்கிருந்த சித்தப்பிரமையில் அவன் அவள் சொல்படி நகர்ந்தான். நடனமாடிய வண்ணம் மெள்ள மெள்ள அவனை வாயிற் படியை நோக்கி இழுத்துச் சென்ற எமிலி, ''உம்... சீக்கிரம் இப்படி வாருங்கள்'' என்று காதுக்கு மட்டும் கேட்கும் படியாகச் சொல்லி நடன மண்டபத்தின் பின்புற வாயிலைத் தொட்டுக் கொண்டிருந்த மாடிப்படியின் கீழ் மறைந்தாள்.

அவள் எதற்காக அப்படி மறைகிறாளென்பதை நினைத்த பின்பே சற்றுச் சுரணையடைந்த இதயசந்திரன் சற்றுத் தூரத்தில் டூ காஸ்ட்ரோ தன்னை அணுகி வருவதைக் கவனித்தானாகையால், அவள் விருப்பத்துக்கு இடம் கொடாமல் நின்ற இடத்திலேயே நின்றான். டூ காஸ்ட்ரோ மெள்ள நடன மண்டபத்தின் பின்புறக் கோடிக்கு வந்ததும் இதயசந்திரனைச் சில வினாடிகள் உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றான். இதயசந்திரன் இதயத்தில் சிறிது சினமும் இதழ்களில் அந்தச் சினம் கலந்த புன்னகையும் ஒரு வினாடி அரும்பியது. ''காஸ்ட்ரோ, என்னை அடைய மிகுந்த சிரமப்பட்டிருக்கிறாய் நீ'' என்று உரையாடலைத் துவக்கவும் செய்தான்.

காஸ்ட்ரோவின் கண்களில் விஷமம் தாண்டவமாடியது. ''சிரமப்பட்டது என் இஷ்டத்தாலல்ல'' என்றான் காஸ்ட்ரோ.

இதயசந்திரன் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது. ''உன் இஷ்டத்தாலல்லவா?'' என்று வினவியபோது குரலிலும் சந்தேகம் ஒலித்தது.

''இல்லை'' என்றான் காஸ்ட்ரோ திட்டமாக.

''வேறு யார் துடிக்கிறார்கள் என்னைப் பார்க்க?'' என்று வினவினான் தமிழன்.

''இம்முறை துடிப்பது பெண்ணல்ல'' என்று சுட்டிக் காட்டினான் காஸ்ட்ரோ விஷமத்துடன்.

''பெண்ணாயிருந்தால் நீ தூது வரமாட்டாய் காஸ்ட்ரோ'' என்று கூறி நகைத்தான் இதயசந்திரன்.

''ஏன்?''

''பெண்கள் உனக்குத் தேவையாயிற்றே? அதற்காக நீ நம்பிக்கையைத் துறப்பாய், நாணயத்தைத் துறப்பாய், நாட்டைத் துறப்பாய், சகலத்தையும் துறப்பாயே!''

''ஆம் தமிழா துறப்பேன். உண்மை அதுதான். நான் உண்மையே பேசுகிறேன். உன்னைப்போல் நாணயம் கண்ணியம் இவற்றை மேலுக்குச் சொல்லிக்கொண்டு போகுமிடங்களிலெல்லாம் மாறுபட்டு நடப்பது என் வழக்கமில்லை. அது கிடக்கட்டும். இப்பொழுது நான் நமது பரஸ்பர குற்றங்களைப்பற்றிப் பேச வரவில்லை'' என்றான் காஸ்ட்ரோ.

''வேறு எதைப்பற்றிப் பேச வந்திருக்கிறாய்?'' என்று வினவினான் தமிழன்.

''பேச நான் வரவில்லை. ஒருவருக்குத் தூது வந்திருக்கிறேன்.''

''யாருக்காகத் தூது?''

''என்னைத் தொடர்ந்து வா. தெரிந்து கொள்வாய்'' என்று கூறிவிட்டுத் திரும்பி மண்டபத்தின் மாடிப்படியில் ஏறிச் சென்றான் டீ காஸ்ட்ரோ.

''எமிலி! இங்கேயே இரு. இதோ வந்து விடுகிறேன்'' என்று மாடிப்படியின் அடியில் பதுங்கியிருந்த எமிலியிடம் கூறிவிட்டுப் படிகளில் ஏறி டீ காஸ்ட்ரோவைத் தொடர்ந்து சென்றான் இதயசந்திரன்.

மாடிப்படிகளின் உச்சிக்குச் சென்றதும் தன்னைத் தொடரச் சொல்லிச் சைகை செய்து மாடித் தாழ்வாரத்தின் கோடிக்கு நடந்த டீ காஸ்ட்ரோ அங்கிருந்த ஒரு சிற்றறைக்குள் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து அந்த அறைக்குள் நுழைந்த இதயசந்திரனை நோக்கிய மிஸ்டர் ப்ரௌன், ''தூதரே! வாருங்கள்'' என்று பணிவுடன் வரவேற்றார்.

அறை மிகச் சிறியதாயிருந்தாலும் கச்சிதமாயிருந்தது. நடுவில் ஒரு மேஜை. நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அறைச் சுவர்களில் இருந்த அலமாரிகள், உயர்ந்த வகை மது வர்க்கங்கள், கோப்பைகள் இருந்தன. மிக உயர்ந்த பானங்களைச் சிறிதளவில் குடிக்கக் கண்ணாடிச் சிமிழ்களும் வைக்கப்பட்டிருந்தன.

மிஸ்டர் ப்ரௌன் இதயசந்திரனை வரவேற்றுவிட்டு ஒரு சீசாவையும் மூன்று கண்ணாடிச் சிமிழ்களையும் எடுத்து வந்து மேஜை மீது வைத்து அவற்றில் பளபள வென்று மதுவர்க்கத்தை ஊற்றித் தாம் ஒன்றை எடுத்துக் கொண்டு, ''உம்...எடுத்துக் கொள் காஸ்ட்ரோ, எடுத்துக் கொள்ளுங்கள் தூதரே'' என்றார்.

''இப்பொழுது தேவையில்லை'' என்றான் இதயசந்திரன், இத்தனை உபசாரம் எதற்கென்று புரியாமல்.

இதயசந்திரனின் நிராகரிப்பை ஆட்சேபிக்காது மிஸ்டர் ப்ரௌன் காஸ்ட்ரோவுடன் தானும் அருந்தினார்

மதுவை. பிறகு இதயசந்திரனை உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்தார்.

அப்பொழுதுதான் மிஸ்டர் ப்ரௌனை நன்றாகப் பார்த்தான் இதயசந்திரன். கவர்னர் அறையின் கோடியில் கூனிக் குறுகிக் குனிந்து உட்கார்ந்திருந்த ப்ரௌன் அந்தச் சிற்றறையில் மிக உயரமாகவும் கம்பீரமாகவும் இருந்தார். அவரது பச்சை நிறக் கண்மணிகளும் பழுப்பு மீசையும் அவருக்கு நல்ல தோற்றத்தைக் கொடுத்தனவானாலும் அவர் முகத்தில் பெரும் தந்திரச் சாயை விரவிக் கிடந்ததைக் கவனித்த இதயசந்திரன், அவருடன் தான் வெகு எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தான்.

மிஸ்டர் ப்ரௌன் நேரம் கடத்தாமல் சட்டென்று விஷயத்திற்கு வந்தார். ''தமிழக வீரரே! நாம் பேச வேண்டியதைச் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும். நடனம் முடிந்தால் கவர்னர் நாம் மண்டபத்தில் இல்லாததைப் புரிந்து கொள்வார்...'' என்று துவக்கினார் மிஸ்டர் ப்ரௌன்.

இதயசந்திரன் புரிந்து கொண்டான் கவர்னருக்குத் தெரியாமல் விஷயங்கள் கவர்னர் மாளிகையில் நடப்பதை. மிஸ்டர் ப்ரௌள் தங்கள் பக்கத்தில் இருப்பதாக பிரும்மேந்திர ஸ்வாமி ஏற்கெனவே சொல்லியிருப்பதை நினைத்துப் பார்த்த இதயசந்திரன், தான் ஏதும் பேசாமல் மிஸ்டர் ப்ரௌனைப் பேச விட்டான்.

மிஸ்டர் ப்ரௌன் மேற்கொண்டு பேசினார். ''தூதரே! உமது தூது பலிக்காது என்பதை முன்கூட்டிச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் கொண்டு வந்திருக்கும் நிபந்தனைகளை நான் ஒப்புக்கொள்ள முடியாது. கவர்னரைச் சரிக்கட்டி விடலாமென்று மனப்பால் குடிக்காதீர்கள். கௌன்ஸிலின் பூரண ஒத்துழைப்பின்றிக் கவர்னர் ஏதும் செய்ய முடியாது. கௌன்ஸில் நான் சொல்வதுபோல்

ஆடும்'' என்ற ப்ரௌன் சிறிது பேச்சை நிறுத்திவிட்டு இதயசந்திரனை உற்றுப் பார்த்தார்.

''சொல்லுங்கள் மிஸ்டர் ப்ரௌன்'' என்று ஊக்கினான் இதயசந்திரன்.

''நான் சம்பந்தப்பட்டவரையில், கௌன்ஸில் சம்பந்தப்பட்டவரையில், சுதேச அரசியலில் தலையிடுவது எங்கள் உத்தேசமல்ல. சட்டபூர்வமான அரசாங்கங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு இங்கு வர்த்தகத்தை அதிகரிப்பது எங்கள் நோக்கம். கனோஜி சட்டபூர்வமான மகாராஷ்டிர அரசரின் விரோதி. ஆகவே நாங்கள் ஒரு பொழுதும் அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டோம். தவிர, காஸ்ட்ரோ எங்களிடம் சேர்ந்தபிறகு எங்கள் கடற்படையும் வலுத்திருக்கிறது. காஸ்ட்ரோவுக்கும் கனோஜியின் கப்பல்கள், தங்கும் ரகசிய இடங்கள், கோட்டை நுணுக்கங்கள், அனைத்தும் தெரியுமென்பதை நான் கூறத் தேவையில்லை'' என்ற இதயசந்திரன் மீது தமது கண்களை நிலைநாட்டினார்.

''தேவையில்லை'' என்றான் இதயசந்திரன்.

''போதாக் குறைக்கு மன்னர் ஷாஹு கனோஜியை ஒழிக்கப் பெரும் படை திரட்டிவிட்டார்'' என்றும் ப்ரௌன் சுட்டிக் காட்டினார்.

''ஆம்.''

''அதற்குப் பேஷ்வா பிங்களே தலைவர்.''

''அப்படித்தான் கேள்வி.''

''சுமார் பதினையாயிரம் வீரர் கொண்ட படை சில நாட்களில் நகரும் கனோஜியை நோக்கி.''

''உம்...''

''கடலில் பிரிட்டிஷ் எதிர்ப்பு, தரையில் ஷாஹுவின் மாபெரும் படையின் எதிர்ப்பு. கனோஜி சந்தேகமின்றி அழிக்கப்படுவார்.''

''அப்படியா?''

''ஆம்.''

இதயசந்திரன் சற்றுச் சிந்தித்துவிட்டுக் கேட்டான், ''இந்தப் பெரிய அரசியல் குமுறல்களுக்கும் என்னைப் போன்ற சாதாரண தூதனுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று.

மிஸ்டர் ப்ரௌன் தொண்டையைக் கனைத்தார். பிறகு கூறினார் சற்றுச் சங்கடத்துடன், ''தங்களை அந்த அழிவிலிருந்து பாதுகாக்க ஒருவர் விரும்புகிறார்'' என்று.

''யார் அது?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''பானுதேவி'' என்றார் மிஸ்டர் ப்ரௌன்.

''எப்படிப் பாதுகாக்க உத்தேசம்'' என்று வினவினான் இதயசந்திரன்.

''கனோஜியின் படையிலிருந்து உம்மை வெளியே இழுத்து உமக்கு மன்னர் ஷாஹுவிடம் மன்னிப்பு வாங்கித் தருவார். வேறு பரிசும் உண்டு'' என்ற மிஸ்டர் ப்ரௌன் சற்றுத் தொண்டையைக் கனைத்தார்.

''வேறு என்ன பரிசு!'' என்று வினவினான் இதய சந்திரன் கடுமையான குரலில்.

மிஸ்டர் ப்ரௌன் மேஜை டிராயரைத் திறந்து ஒரு பெரும் முடிப்பை எடுத்து மேஜைமீது வைத்தார். ''இதில் பதினாயிரம் தங்க மொகராக்கள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு இரண்டு கப்பல்களை நீங்கள் சொந்தமாக வாங்கிக் கொள்ளலாம்'' என்றும் கூறினார்.

இதயசந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான். மிஸ்டர் ப்ரௌனும் எழுந்திருந்தார். ''உங்கள் பதில்'' என்றும் வினவினார்.

''இதோ பதில்'' என்ற இதயசந்திரனின் குரலைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் அவன் கை முஷ்டி பிடித்து நீண்டு மிஸ்டர் ப்ரௌனின் முகத்தில் பாய்ந்தது.

மிஸ்டர் ப்ரௌன் நிலை தவறி நாற்காலியில் விழுந்து அது சாய தரையில் உருண்டார். அதே சமயத்தில் இதயசந்திரன் பின்புறமிருந்த டி காஸ்ட்ரோ தன் கைத் துப்பாக்கியை ஓங்கினான். தமிழன் மண்டைமீது தாக்க. ஓங்கிய கை ஓங்கியபடி நின்றது, ''போதும்'' என்ற ஏஸ்லாபியின் குரல் வாயிற்படியில் ஒலித்ததால்.

அத்தியாயம் 11

இரண்டாவது சிகிச்சை

சிறிதளவு சினமோ வேறு உணர்ச்சியோ இன்றி, கவர்னர் ஏஸ்லாபியின் உதடுகளிலிருந்து உதிர்ந்த 'போதும்' என்ற ஒற்றைச் சொல்லே அந்தச் சிற்றறையிலிருந்த மூவரையும் திக்பிரமையடையச் செய்யப் போதுமானதாயிருந்ததால், காஸ்ட்ரோவின் கையிலிருந்த கைத்துப்பாக்கி மெல்ல அவன் இடைக் கச்சையிலிருந்த தோல் உறைக்குள் சென்று பதுங்கிற்று. தரையிலிருந்து எழுந்திருந்த மிஸ்டர் ப்ரௌன், உதட்டிலிருந்த ரத்தத்தைப் பையிலிருந்த கர்ச்சிப்பை எடுத்துத் துடைத்துக் கொண்டு, சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டு நேராகக் காலுடன் கால் சேர்த்து நின்றார். இதயசந்திரன் அசல் பிரதிமையாகி கவர்னர்மீது பிரமை தட்டிய கண்களை ஓட விட்டான்.

மூவர் நிலையையும் கவர்னர் ஏஸ்லாபி கண்டாரானாலும் மேஜைமீது இருந்த பணமுடிப்பின் மீதும் அவர் கண்கள் ஒரு வினாடி நிலைத்தனவென்றாலும் அவர் எந்தவித உணர்ச்சியையோ பதட்டத்தையோ காட்டாமல், ''மிஸ்டர் ப்ரௌன், நீங்கள் சென்று நடனத்தில் கலந்து கொள்ளுங்கள். காஸ்ட்ரோ, நீயும் சென்று பானுதேவியை அவர்கள் மாளிகையில் விட்டுவிடு'' என்று ஏதோ படைத் தலைவன் தன் வீரர்களுக்குக் கட்டளையிடுவதுபோல் கட்டளையிட்டுக் கடைசியாக இதயசந்திரனை மட்டும் ஒரு விநாடி உற்று நோக்கினார். பிறகு ''கனோஜியின் தூதுவனே! தூதுவன் என்ற முறையில் உனக்கு சகல பாதுகாப்புகளையும் அளிக்க வேண்டியது என் கடமை. இருப்பினும் இன்று நீ பம்பாய் கவர்னர் கௌன்ஸிலின்

முக்கிய மெம்பரொருவரைத் தாக்கியிருக்கிறாய். இனி உன் கதியை நிர்ணயிக்க வேண்டியது எங்கள் நீதிஸ்தலம். விசாரணை வரையில் நீ சிறையிலிருப்பாய். வா என்னுடன்'' என்று கூறி அவனைத் தம்முடன் அழைத்துச் சென்றார்.

அவர் சென்ற பிறகு பரஸ்பரம் பார்த்துக்கொண்டு மிஸ்டர் ப்ரௌனும் காஸ்ட்ரோவும் மௌனமாகவே நீண்ட நேரம் நின்றனர். பிறகு மௌனமாகவே அறையை விட்டு வெளியே நடந்து நடன மண்டபத்துக்குச் சென்றனர். அவர்கள் படிகளில் இறங்கும்போது இரண்டு பிரிட்டிஷ் சோல்ஜர்கள் மண்டபத்தின் பின்புற வழியாக இதயசந்திரனை அழைத்துச் செல்வதையும் கண்டனர். சற்றுத் தூரத்தில் கவர்னர் ஏஸ்லாபி தமது மனைவியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட மிஸ்டர் ப்ரௌன், ''பார்த்தாயா கவர்னரை. காஸ்ட்ரோ?'' என்று சீறினார்.

டீ காஸ்ட்ரோவும் கவர்னரின் உற்சாக நிலையைக் கவனிக்கவே செய்தான். ''பார்த்தேன் ப்ரௌன், நல்ல நெஞ்சழுத்தம் கவர்னருக்கு'' என்று கூறினான், வெறுப்பும் கோபமும் கலந்த குரலில்.

''கவர்னர் நமது உரையாடல் முழுவதையும் கேட்டிருப்பாரென்று நினைக்கிறாயா?'' என்று வினவினார் மிஸ்டர் ப்ரௌன் மீண்டும்.

''அவர் வந்ததே தெரியவில்லை எனக்கு?'' என்றான் டீ காஸ்ட்ரோ.

''எனக்கும் தெரியவில்லை. பூனைபோல் வந்திருக்க வேண்டும்.''

''ஆம்.''

''வந்து எத்தனை நேரம் வாயிற்படியில் நின்றிருப்பார்?''

''அதுதான் தெரியவில்லை'' என்று மிஸ்டர் ப்ரௌன் வெறுப்புடன் நோக்கினார் கவர்னரை. ''காஸ்ட்ரோ! கவர்னர் சில நாட்களாகப் பல விஷயங்களில் அனாவசியமாகத் தலையிடுகிறார். கௌன்ஸில் செய்ய வேண்டிய முடிவுகளைத் தாமே செய்கிறார். இதைப் பிரிட்டனிலுள்ள கம்பெனி நிர்வாகிகள் ஒப்பமாட்டார்கள்'' என்று கூறினார்.

மிஸ்டர் ப்ரௌன் சிந்தனையில் ஓடிய எண்ணங்களை ஓரளவு புரிந்துகொண்டான் காஸ்ட்ரோ. கௌன்ஸிலில் உள்ள பெரிய விஷமி மிஸ்டர் ப்ரௌன்தானென்பதையும் சில ரகசிய கடிதங்களை அவர் பிரிட்டனிலுள்ள கம்பெனியின் நிர்வாகிகளுக்கு அனுப்பி விடுகிறாரென்பதையும் டி காஸ்ட்ரோ உணர்ந்திருந்தான். மற்ற வெள்ளைக்காரர்களிடையே மிஸ்டர் ப்ரௌனின் ரகசிய நடவடிக்கைகள் வெறும் வதந்திகளாக உலாவினாலும், அந்த வதந்திகள் பொய்யாயிருக்க முடியாதென்பதை மிஸ்டர் ப்ரௌனுடன் நேரில் பழகிய சில நாட்களுக்குள்ளாகவே டி காஸ்ட்ரோ, புரிந்து கொண்டான். பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல் மிஸ்டர் ப்ரௌனின் எண்ணங்களைச் சில நாட்களுக்குள்ளாகவே எடை போட்டுவிட்ட காஸ்ட்ரோ பிற்காலத்தில் கவர்னர்களை ஆட்டவல்ல சக்தி மிஸ்டர் ப்ரௌனுக்கு ஏற்படுமென்ற காரணத்தால் அவருடைய அடிமைபோல் நடித்து, அவர் துணிந்த காரியங்களை நிறைவேற்றவும் முயன்றான். அப்படி முயன்ற காரணத்தால் அவருடைய நம்பிக்கைக்கும் ஓரளவு பாத்திரமாகி அவரை மிகச் சாமர்த்தியமாக பானுதேவியின் பக்கத்திலும் இழுத்தான். இத்தகைய நெருக்கடியான உறவால் மிஸ்டர் ப்ரௌன் மனப்போக்கை அறிந்திருந்த காஸ்ட்ரோ, ''ஆம் மிஸ்டர் ப்ரௌன்! கவர்னர் வரம்பு மீறித்தான் நடக்கிறார்'' என்று ஒத்துப் பாடினான்.

''உதாரணமாக மகாராஷ்டிர வல்லரசுக்கும் கடற் கொள்ளைக்காரன் ஆங்கரேயுக்கும் உள்ள சச்சரவிலும்,

போரிலும் கொள்ளைக்காரன் பக்கம் சாய்வதைச் சட்டத்தில் கண்ணும் கருத்துமுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் ஒப்பாது'' என்றார் மிஸ்டர் ப்ரௌன்.

''ஆம் ஒப்பாது'' என்றார் காஸ்ட்ரோ.

''கனோஜியின் தூதனை, வந்ததும் சிறை செய்திருக்க வேண்டும்.''

''ஆம்.''

''அவனோடு பேசுவது பிரிட்டிஷ் கௌரவத்துக்குக் குறைவு.''

''ஆம், ஆம்.''

''அவனை நடன விருந்துக்கு அழைத்தது...''

''மிகமிகத் தவறு. இங்கு வந்துள்ள பல பிரிட்டிஷ் கனவான்கள் அவன் ஒரு பிரிட்டிஷ் பெண்ணுடன் நடனமாடியதை வெறுக்கிறார்கள்.''

மிஸ்டர் ப்ரௌன் அதற்குமேல் பேசவில்லை. நீண்ட நேரம் சிந்தனையில் இறங்கினார் ''சரி, பிறகு பார்ப்போம் காஸ்ட்ரோ. பானுதேவியிடம் சொல், கனோஜி ஒப்புக் கொள்ளாத நிபந்தனைகளாக நான் எழுதியனுப்புவதாக'' என்று கூறிவிட்டு, காஸ்ட்ரோவைப் போகச் சொல்லிவிட்டுத் தானும் நடன மண்டபத்திலிருந்து வெளியே சென்றார். வெளியில் வந்ததும் சற்றுத் தூரத்திலிருந்த கவர்னர் இருப்பிடத்தை நோக்கிச் சென்று மாடியறையை அடைத்து தமது பழைய ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டு, மேஜை அறைகளிலிருந்த பல தஸ்தாவேஜிகளை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். பிறகு இதயசந்திரன் கொண்டு வந்த தூதுக்கடிதத்தை எடுத்து நீண்ட நேரம் படித்தார். படித்ததும் சிந்தனையில் இறங்கினார். அவர் மனத்தில் பம்பாயில் பிரிட்டிஷார் நிலை, பிரிட்டனில் உள்ள கம்பெனி நிர்வாகிகளின் மனப்போக்கு இவையனைத்தும் வலம் வந்தன. சீரிய சிந்தனைக்குப் பிறகு ஒரு

நீண்ட காகிதத்தை எடுத்து அதை மயிலிறகுப் பேனாவினால் விடுவிடு என்று நீண்ட நேரம் எழுதினார். பிறகு காகிதத்தை மடித்து ஓர் உறையில் போட்டு விலாசமெழுதி, மெழுகுவத்தியைக் கொளுத்தி அரக்கைக் காய்ச்சி முத்திரையையும் வைத்தார். இதை முடித்ததும் அவரது உதடுகளில் அதுவரை காணாத புன்முறுவல் தோன்றியது. ''இது சென்றால் ஏஸ்லாபியின், பதவி பறிபோகும்'' என்றும் சொல்லிக் கொண்டார். ''ஏஸ்லாபி, பிரபுக் குலத்தில் பிறந்த கர்வம் போகவில்லை உனக்கு. ஆனால் கர்வத்தைவிடத் தந்திரம் சிறந்த சாதனமென்பதைச் சீக்கிரம் புரிந்துகொள்வாய்'' என்று கறுவினார். பிறகு அந்தக் கவரை மேஜைக்குள் வைத்துவிட்டு வேறொரு தாள் எடுத்து அதில் சில குறிப்புகளை எழுதினார். அதையும் மடித்து மேஜையில் வைத்து டிராயரைப் பூட்டிக் கொண்டு வெளியே சென்றார். வாயிற்படியில் காவலிலிருந்த ஆர்டர்லி அவருக்குத் தலைவணங்கி வழிவிட்டான்.

மிஸ்டர் ப்ரௌன் எங்கு சென்றார், என்ன செய்தாரென்பதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாத கவர்னர் ஏஸ்லாபி நடன மண்டபத்திலேயே கடைசிவரை நின்றிருந்தார். டூ காஸ்ட்ரோ பானுதேவியை அழைத்துக் கொண்டு கிளம்பியதும், ''மகாராஷ்டிர மன்னர் குலமகள் வரவால், பிரிட்டிஷ் தளம் பெருமையடைகிறது'' என்று கூறித் தலைதாழ்த்தி அவளையும் தோழிகளையும் அனுப்பி வைத்தார்.

பானுதேவியின் உள்ளத்தில் உணர்ச்சிகள் ஏதேதோ ஓடிக் கொண்டிருந்தாலும் அவள் எதையும் வெளிக்குக் காட்டவில்லை. மிகுந்த கண்ணியத்துடன் கவர்னரை நோக்கிப் புன்முறுவல் செய்துவிட்டு வெளியேறினாள். மகாராஷ்டிரப் பிரபுக்கள் பலரும் வெளியேறுவதற்கு அவள் வெளியேறியதே காரணமாயிற்று. மற்ற வெள்ளைக்காரர் விருந்தினரும் கவர்னரிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டுச் சென்றுவிடவே சுமார் இரவு

பன்னிரண்டு மணிக்கு மண்டபம் யாருமின்றிச் சூன்ய நிலையை அடைந்தது.

அப்பொழுதும் மண்டபத்தை விட்டுச் செல்லவில்லை கவர்னர் ஏஸ்லாபி. தமது மனைவியை மட்டும் தமது ராணுவக் காரியதரிசியுடன் செல்லப் பணித்துவிட்டு, தனது மெய்க்காவலன் ஒருவனை மட்டும் நிறுத்திக் கொண்டு. மண்டபத்தின் ஒரு கோடியிலிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு, ஆழ்ந்த சிந்தனைக்குள்ளானார். சிற்றறையில் நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் மனக்கண்ணில் வளரவிட்டு நுட்பங்களையும் ஆராய்ந்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராய் மெய்க்காவலனை அழைத்து, ''ராபர்ட்! கிளம்பு'' என்று கூறி உத்தரவிட்டு நடன மண்டபத்தின் வாசலுக்கு வந்து தமது மாளிகையை நோக்கிச் செல்லாமல் நேர் எதிர்ப்புறம் நோக்கிச் சென்றார். நல்ல உயரத்தின் காரணமாகவும் கால்கள் மிக நீண்டிருந்ததன் விளைவாகவும் வெகு வேகமாக நடந்த ஏஸ்லாபியுடன் ஓடவே செய்தான் மெய்க்காவலன். கவர்னர் நேராகச் சிறைக் கூடத்தை நோக்கிச் சென்றார். சிறைக் கூடத்தை அடைந்ததும், ''எங்கே அந்தக் கைதி?'' என்று அதட்டினார் காவலரை.

''உள்ளறையில் பூட்டி வைத்திருக்கிறோம்'' என்றான் காவலரில் ஒருவன்.

''திற கதவை'' என்று உத்தரவிட்ட ஏஸ்லாபி, காவலன் கதவைத் திறந்ததும் உள்ளறைக்குச் சென்று அங்கு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த இதயசந்திரனைச் சில விநாடிகள் நோக்கிவிட்டு, ஈட்டி செருகிய துப்பாக்கியுடன் தனக்குக் காவலாகத் தன் பின்னால் நின்ற சிறைக் காவலனையும் நோக்கினார். பிறகு சிறைக் காவலனை வெளியே செல்ல உத்தரவிட்டு ''இதயசந்திரா!'' என்று அழைத்தார்.

இருப்பிடத்திலிருந்து மெல்ல எழுந்திருந்த இதய சந்திரன், ''பிரபு!'' என்ற ஒற்றைச் சொல்லை மெல்ல தயக்கத்துடன் கூறினான்.

அந்த அறையின் சிறு விளக்கில் ஏஸ்லாபியின் கண்கள் பளபளத்தன. ''நீ இன்று புரிந்தது பெரும் குற்றம்'' என்ற கவர்னர் சொற்களில் கவலை தெரிந்தது.

''ஆம் பிரபு. ஆனால், வேறு வழியில்லை. நடந்தது என்னவென்பது தங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ'' என்றான் இதயசந்திரன்.

''முழுதும் தெரியாது. உனக்கு லஞ்சம் கொடுக்க மோகரா முடிப்பை ப்ரௌன் எடுத்து மேஜைமீது வைத்த போதுதான் நான் அங்கு வந்தேன்'' என்றார் கவர்னர்.

''பிரபு! மிஸ்டர் ப்ரௌன் கனோஜியிடமிருந்து விலக எனக்கு லஞ்சம் கொடுத்தார். அந்த மோகரா முடிப்பைக் கொண்டு இரண்டு கப்பல்களை வாங்கலாமென்றும் சொன்னார். நான் பல கப்பல்களைக் கொள்ளையடித் திருக்கிறேன் பிரபு. போரிட்டுக் கப்பல்களையும் பெரும் பணத்தையும் கைப்பற்றியிருக்கிறேன். ஆனால் நாணயம் தவறி, கேவலமான வேலைக்காகக் கை நீட்டிப் பணம் வாங்கியதில்லை. ஆகவே ப்ரௌன் பணம் கொடுத்தபோது நிதானமிழந்தேன் தவிர, அந்தப் பணம் என்னை மாலுமி யாக்கி, ஜலதீபத்தின் உபதளபதியாகவும் பிறகு தளபதி யாகவுமாக்கிய ஆங்கரேயிடமிருந்து என்னைப் பிரிப்பதற் காகத்தான் கொடுக்கப்பட்டதென்ற நினைப்பு என்னை அடியோடு நிலைகுலையச் செய்தது. ஆகையால்தான்...'' இத்துடன் நிறுத்தினான் இதயசந்திரன். வாசகத்தை அவன் மேலே முடிக்கவில்லை.

''ஆகையால்தான்?'' கவர்னர் கேள்வி சகஜமாக எழுந்தது.

''அந்தச் சம்பவம்'' என்றான் இதயசந்திரன்.

அவன் 'அந்தச் சம்பவம்' என்று குறிப்பிட்டதை கவர்னர் கவனித்தார். ''அதைக் குற்றமென்று நீ நினைக்க வில்லையா?'' என்று வினவினார்.

''இல்லை. அயோக்கியனுக்கு நான் அளித்த தண்டனை அது'' என்றான் இதயசந்திரன்.

கவர்னர் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. முகத்தில் கவலை படர்ந்தது. ''இதயசந்திரா! நாளை கௌன்ஸிலில் இந்த விஷயம் விசாரணைக்கு வரும்போது நான் உன் பக்கம் ஏதும் பேசமுடியாது. வெள்ளைக்காரர் நடனத்தில் உன்னை நுழைய விட்டதாலேயே பலர் என்மீது சீற்றம் கொண்டிருக்கிறார்கள். தவிர, நீ எனது கௌன்ஸிலின் முக்கிய மெம்பரை அடித்திருக்கிறாய். நீ தண்டனையிலிருந்து தப்புவது கஷ்டம்'' என்று கூறிய கவர்னர் பெருமூச்சு விட்டார்.

இதயசந்திரன் அவரது கவலையைக் கவனித்தான். ''பிரபு! எனக்காக வருந்தாதீர்கள். கொள்ளைக்காரர் வாழ்க்கையில் இத்தகைய முடிவுகள் சகஜம். தண்டனை எதுவாயிருந்தாலும் ஏற்கத் தயாராயிருக்கிறேன்'' என்றான் தமிழன்.

அவன் துணிவைக் கண்டு பெரிதும் வியந்தார் கவர்னர். பிறகு திடீரென அவரது முகத்தில் கோபம் துளிர்த்தது. ''தண்டனை எதுவாயிருந்தாலும் ஏற்கத் தயாராயிருக் கிறாயா?'' என்று வினவினார்.

''தயாராயிருக்கிறேன்'' என்றான் தமிழன்.

கவர்னர் ஏஸ்லாபி காரணமில்லாமல் திடீரெனக் கூறினார், ''என்னை எதிர்த்துப் பேச உனக்கு என்ன துணிவு'' என்று. அதே சமயத்தில் கையிலிருந்த சோல்ஜர் பிரம்பின் தங்கப் பிடியால் அவன் தலையில் பலமாக அடிக்கவும் செய்தார். முன்பு காயம்பட்ட இடத்தில்

மீண்டும் அடிபட்டதால் இதயசந்திரன் காயத்திலிருந்து ரத்தம் பிரவகித்தது. அதைக் கண்ட ஏஸ்லாபி மெய்க் காவலனை அழைத்து, "இவனை மிஸ் எமிலியிடம் அழைத்துச் சென்று காயத்தைச் சரியாகக் கட்டச் சொல்" என்று உத்தரவிட்டு வெளியே சென்றார்.

கவர்னர் உத்தரவுப்படி இதயசந்திரன் மிஸ் எமிலியின் சிகிச்சை அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ரத்தத்துடன் வந்த அவனைப் படுக்கையில் படுக்க வைத்துக் காயத்தைக் கழுவி மீண்டும் கட்டுப் போட்டாள் எமிலி. பிறகு அவனுக்குச் சிறிது மருந்தையும் புகட்டினாள். மருந்துண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் இதயசந்திரன் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். மெய்க்காவலனைப் போகச் சொல்லிவிட்ட எமிலி இதயசந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். இதயசந்திரன் உலகை மறந்து கிடந்தான். அவன் முகத்தைக் கவலையுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் மிஸ் எமிலி.

அத்தியாயம் 12

காயமில்லாத இடத்தில் கட்டு

நினைவிழந்த நிலையில் இதயசந்திரன் எத்தனை நேரம் படுத்துக் கிடந்தானோ, அது அவனுக்கே தெரியாது. ஆனால் கண்விழித்த போது அவன், மலர் மடியொன்றில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தான். அதைத் தவிர லேசாக ஆட்டங் கொடுத்த ஏதோ ஓர் இடத்தில் தான் இருப்பதையும் உணர்ந்தான். 'ஏன் இப்படித் தரை ஆடுகிறது? தரையின் ஆட்டத்தினால்தான் இந்த அழகிய மடியும் ஆடுகிறது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். ஆட்டத்திற்குக் காரணமானது எதுவாயிருப்பினும் அது தன்னிடத்தில் மிகுந்த அனுதாபமுள்ளது என்றும் நினைத்தான். 'இல்லாவிட்டால் வழவழத்த அழகிய கால்களின் இணைப்பு சிருஷ்டித்த இந்த மடியில் தலை புரளும் பாக்கியத்தை அளிக்குமா அது?' என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அந்த ஆட்டத்தினின்றும் தலையை ஒரு நிலையில் நிறுத்தவோ, அல்லது வேறு எண்ணத்தாலோ மெள்ளக் குப்புறத் திரும்பி முகத்தை அந்த மலர் மடியில் புதைத்துக் கொண்டான் தமிழன். அந்தக் கால்களின் உருண்ட மேற்பகுதிகள் இணைந்த இடத்திலிருந்த மடியின் இடம் மிக இதமாயிருந்தது அவனுக்கு. இதம் தலைவலிக்கா மனவலிக்கா என்பது மட்டும் புரியாமல் தவித்தான் அவன்.

குப்புறப் படுத்த அவன் முகத்தின் ஒரு கன்னத்தை ஒரு மலர்க்கரம் தடவியது. தலைவியின் குழலைப் பிரித்து ஆசுவாசப்படுத்தியது மற்றொரு கரம். அந்தக் கரத்திலிருந்த ஒரு பெரிய வளையத்தின் கடுமையான பகுதியும் அவன் தலையில் சற்று அழுத்தினாலும் அப்படி அழுத்திய

தால் தலைகூட மெல்ல வலித்தாலும், அந்த அழுத்தத்தை யும் பொருட்படுத்தவில்லை மனம். அத்தனை வலிக்கும் சாந்தியை முகம் புதைந்த இடம் அளித்துக் கொண் டிருந்தது. அவன் முகத்தை மடியில் புரட்டியதால் லேசாகக் கலைந்த ஆடையும் நல்ல பட்டிலிருந்ததால் அது கூட அவன் நிலைக்கு மிக இதத்தையே அளித்தது. அந்த மடியே சொர்க்கமாகக் கிடந்தான் அவன் பல வினாடிகள், சொர்க்கத்தை விட்டு அசைய இஷ்டமில்லாததால்.

திடீரென அவர்கள் இருந்த இடம் பெரிதாக ஆடிய தால் அவள் மடி அசைந்து கால்களும் சிறிது இடைவெளி கொடுத்தன. 'ஏன் இப்படித் தரை ஆடுகிறது? எங்கிருக் கிறேன் நான்?' என்று மறுபடியும் சிந்தையில் கேள்வி எழும்பவே, குப்புறப் படுத்த நிலையிலிருந்து திரும்பி மல்லாந்து படுத்தான். கண்களைத் திறந்தால் அந்த இன்பக் கனவு மறைந்து விடுமோ என்ற எண்ணத்தால் கண்களை மூடியவண்ணம் ''எமிலி!'' என்று மெல்ல அழைத்தான் உதடுகளைத் திறந்து. அந்த அழைப்புக்குப் பதிலேதும் வராது போகவே சற்றுக் கோபத்துடன், ''எமிலி! மிஸ் எமிலி!'' என்று அழுத்தமாக இருமுறை அவள் பெயரை உச்சரித்தான்.

எமிலியிடமிருந்து பதிலேதும் வரவில்லை. அதற்குப் பதில் பயங்கர நகைப்பு ஒன்று ஒலித்தது அந்த இடத்தில். கண் விழித்த இதயசந்திரன் பிரமிப்பின் எல்லையை அடைந்தான், அச்சத்தின் உச்சத்தையும் அடைந்தான். அந்த அச்சத்துடன் கண் விழித்த அவனெதிரே கனோஜி யின் பயங்கர உருவம் எழுந்தது. அவர் வாயிலிருந்து திரும்பத் திரும்ப உதிர்ந்த பயங்கரச் சிரிப்பு, சூழ்நிலை யைப் பயங்கரமாகவும் கேலிக் கூத்தாகவும் அடிக்கத் தொடங்கியது. அடுத்த விநாடி மலர் மடியிலிருந்து தலை தாட்சண்யமின்றி அவன் தலையை இரு கைகள் எடுத்து ஒரு தலையணையில் த்ள்ள, பஞ்சணையிலிருந்து எழுந்த மஞ்சு விடுவிடுவென நடந்து வெளியே சென்றாள்.

கனோஜியின் சிரிப்பினாலும் தனது தலை அலட்சிய மாக எடுத்துத் தலையணைமீது விசிறப்பட்டதாலும் தான் இருக்குமிடத்தையும், தலையிருந்த மடிக்குச் சொந்தக் காரியையும் சந்தேகமறப் புரிந்துகொண்ட தமிழன் நிலை பரிதாபமாயிருந்தது. அதுவரை ஆட்டங்கொடுத்துக் கொண்டிருந்தது ஜலதீபமேயென்பதையும், தான் படுக்க வைக்கப்பட்டிருந்த இடம் ஜலதீபத்தின் தலைவி அறை யென்பதையும் உணர்ந்து கொண்டதால் கனோஜியை நோக்கி மிரள மிரள விழித்தான் அவன். கனோஜி அவனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினார், விஷமமாக. அவருடைய பயங்கர மீசை, இதழ்களின் கோடியில் விஷமத்துடன் இழுபட்டது. அந்த அறைக்கதவுக்கு வெளியே கண்களை ஓட்டிய கனோஜி, விடுவிடுவென்று அவன் படுத்திருந்த பஞ்சணையின் முகப்புக்கு வந்து, ''தமிழா! உனக்கு இன்னும் பயம் போகவில்லை?'' என்று கூறினார், புன்முறுவல் செய்து.

பயமெதற்கு என்பது புரியவில்லையாதலால் இதய சந்திரன் கேட்டான், ''எதற்குப் பயம்?'' என்று.

''அனுபவிப்பதற்கு'' என்றார் ஸார்கேல்.

''எதை அனுபவிப்பதற்கு?'' என்று கோபத்துடன் மீண்டும் கேட்டான், இதயசந்திரன்.

''சுகத்தை.''

''எந்தச் சுகத்தை?''

''நல்ல தமிழில் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''இன்பத்தை'' என்று கூறிய கனோஜி பலமாக நகைத் தார் ஒரு விநாடி. மறுவிநாடி குரலைத் தாழ்த்தி, ''இதய சந்திரா! அந்த வெள்ளைக்காரியைத்தான் கோட்டை விட்டாய். இந்தப் புது வெள்ளைக்காரியையும் விட்டு

விட்டாயே. இவள் அவளைவிட நன்றாகயிருக்கிறாளே!'' என்று ரகசியமாகக் கேட்டார் ஆங்கரே.

இதயசந்திரனுக்குக் கோபம் தலைக்கேறியதால் அவரைச் சுட்டுவிடுபவன்போல் பார்த்தான். ''தலைவரே!'' என்று சீறி அழைக்கவும் செய்தான்.

''என்ன தமிழா?'' என்று கேட்டார் ஆங்கரே மிக விஷமமான குரலில்.

''வீணாக விளையாடுகிறீர்கள்...'' என்றான் தமிழன்.

''நான் விளையாடவில்லை, தமிழா!''

''அப்படியானால் நான் விளையாடுகிறேனா?''

''ஆம்.''

''யாரிடம்?''

''பெண்களிடம். சாதாரணமாக விளையாடுவதோடு நிறுத்திக்கொள்கிறாய்.''

இதயசந்திரன் அவர் சுபாவத்தை அறிந்திருந்தாலும் அவனுக்கு அவர் சொன்ன விஷயம் ஆத்திரத்தையே அளித்தது. ''நீங்கள் பேசுவது உங்கள் அந்தஸ்துக்குச் சரியில்லை'' என்று சீறினான்.

கனோஜி அவன்மீது வேடிக்கை விரிந்த பார்வை யொன்றை வீசினார். ''இதில் அந்தஸ்து எங்கிருந்து வருகிறது!'' என்று வினவவும் செய்தார்.

''பெண்களை நான் ஏன் கெடுக்கவில்லை என்று கேட்கிறீர்களே?'' என்று கேட்டான் கோபத்துடன் தமிழன்.

''சே! சே! நான் அப்படிக் கேட்கவில்லை.''

''விளையாடுவதோடு நிறுத்திக் கொள்கிறாய் என்று சொன்னதற்கு என்ன பொருள்?''

''வீணாக அவர்களையும் இம்சைப்படுத்தி நீயும் இம்சைப்படுகிறாயே என்று சொன்னேன்.''

''தலைவரே!'' என்ற இதயசந்திரன் குரல் அழுத்தத் துடனும் ஆங்காரத்துடனும் ஒலித்தது.

''என்ன தமிழா?'' என்ற கனோஜியின் கேள்வியில் அலட்சியமிருந்தது. அவரே மேற்கொண்டு ஒரு கேள்வி போட்டார். ''நீ சிறந்த மாலுமிதானே?'' என்று.

''ஆம்'' என்றான் தமிழன்.

''கப்பல் போரில் திறனுள்ளவன்'' என்றார் ஆங்கரே.

''தங்கள் தயவால் திறமை பெற்றிருக்கிறேன்.''

''அது கிடக்கட்டும். இந்த ஜலதீபம் கடலில் போய்க் கொண்டிருக்கையில் இரண்டு கப்பல்கள் எதிர்ப்படு கின்றன. என்ன செய்வாய்?''

''அவற்றை நோக்கிச் செல்வேன், ஒவ்வொன்றாகத் தாக்குவேன். பிறகு இரண்டையும் கைப்பற்றுவேன்.''

''ஏன் ஜலதீபத்தைத் திருப்பிக்கொண்டு தப்பினா லென்ன?''

''அது ஆண்மையல்ல. தவிர, ஓடினால் அந்தக் கப்பல் களும் விரட்டும் என்னை.''

கனோஜி ஆங்கரே தமது பெரும் உருவம் குலுங்கக் குலுங்கச் சிரித்தார். அந்த நகைப்பைச் சிறிதும் ரசிக்காத இதயசந்திரன் கேட்டான், ''எதற்கு நகைப்பு?'' என்று.

கனோஜி மீண்டும் நகைத்தார். ''உன் நிலைக்குக் காரணம், பரிகாரம் அனைத்தையும் நீயே கூறிவிட்டாய். இதயசந்திரா! கப்பல்களும் பெண்களைப் போலத்தான். அகப்படுமானால் நாம் எதிர்கொண்டு தாக்கிக் கைப்பற்ற வேண்டும். இல்லையேல் அவர்கள் நம்மை விரட்ட நாம் ஓடவேண்டும்'' என்று விளக்கினார்.

இதயசந்திரன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு அவரை நோக்கி இகழ்ச்சி நகை புரிந்தான். ''நல்ல உவமை!'' என்றும் கூறினான் இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

கனோஜி அந்த இகழ்ச்சியைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் கூறினார். ''இதயசந்திரா! என் லட்சியம் வேறு. உன் லட்சியம் வேறு. என் லட்சியம் மகாராஷ்டிரத்தின் உன்னதப் பதவி! யாரும் தொடமுடியாத அரசை மகாராஷ்டிரத்தில் நிறுவுதல். மற்ற விஷயங்கள் எனக்குச் சாதாரணம். பெண்கள், என் வாழ்க்கையில் சோறு மாதிரி. கிடைத்த போது நன்றாக உண்ண வேண்டியது. இல்லையேல் கவலைப்படாமல் இருப்பது. ஆண் பெண் உறவு மனித வாழ்க்கையில் ஒரு சிறு அங்கம். அந்தப் பணியில் சகல ஜீவராசிகளும் ஈடுபடுகின்றன. ஆனால் குறிக்கோள் உள்ளவன் பெண் உறவை லட்சியம் செய்வ தில்லை. வந்தால் அனுபவம், இல்லையேல் கவலையில்லை. பெண்ணையே நினைத்து நினைத்துப் பிராணனை விடுபவன் அவளுக்கும் திருப்தியளிப்பதில்லை; நாட்டுக்கும் உதவுவதில்லை...'' என்று சொல்லிக் கொண்டு போன ஆங்கரே சிறிது தாமதித்துவிட்டு, ''இப்பொழுது என்னைக் கவனி. எனக்கு மூன்று மனைவியர் இருக் கின்றனர். மூன்றும் மூன்று விதம். அதில் ஒருத்தி எனக்கெதிராகச் சதி செய்பவள். நான் சற்றுப் பல்லிளிப்பவனாயிருந்தால் நானும் அவள் பக்கம் இழுபட்டிருப்பேன். ஆனால் என் வழி தனி வழி. நான் இங்கு பார்ப்பது மகாராஷ்டிரம் ஒன்றுதான். என் கண்ணில் படுவது அதன் எதிரிகள். அந்த எதிரிகள் யாராக இருந்தாலும் என்னால் அழிக்கப்படுவார்கள். நீயும் இந்த முறையில் வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்'' என்று கூறி முடித்துவிட்டு, அவனை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு வெளியே செல்ல முற்பட்டார்.

''சற்று இருங்கள்'' என்று தடுத்தான் தமிழன்.

காலை எடுத்து வாயிற்படியை நோக்கித் திரும்பிய கனோஜி தலையை மட்டும் திருப்பினார். ''நான் தூது சென்ற விஷயத்தைப்பற்றி ஏதும் கேட்கவில்லையே?'' என்றான் தமிழன்.

''அந்த நர்ஸ் சொல்லிவிட்டாள்'' என்று சொல்லி விட்டு வெளிநடந்தார் ஆங்கரே.

அவர் சென்ற சில விநாடிகள் கழித்து மிஸ் எமிலி அந்த அறைக்குள் நுழைந்தாள். அன்று அவள் பிரிட்டிஷ் ராணுவ நர்ஸுக்கான வெள்ளை உடையை அணிந்திருந் தாள். கௌன் முழங்காலுக்குமேல் அளவுக்குச் சற்று அதிகமாகவே ஏறி இருந்தது. கழுத்துப் பகுதியிலும் துணி அளவுக்கதிகமாகவே வெட்டியெடுக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதில் பெரிய காட்டு ரோஜா ஒன்றை அணிந்திருந்தாள். அந்தக் காட்டு ரோஜா மிகச் சிவப்பா யிருந்தது. ஆனால் அவள் அழகிய கன்னத்தின் சிவப்பு காட்டுரோஜாவின் சிவப்பைத் தோற்கடித்திருந்தது. இந்தக் கோலத்தில் மிஸ் எமிலி பஞ்சணையை நெருங்கி ஒய்யார நடை நடந்து வந்தாள். வந்து பஞ்சணை முகப்பில் உட்காரப் போனாள்.

''உம், உம். உட்காராதே'' என்றான் இதயசந்திரன்.

''தலைக்கட்டைப் பரிசோதிக்க வேண்டும்'' என்று கூறி அவனைப் பார்த்துச் சிரித்தாள் எமிலி.

''பரிசோதிக்க வேண்டாம்.'' தமிழன் குரலில் பிடிவாதம் இருந்தது.

மிஸ் எமிலி மெல்லப் புன்முறுவல் கோட்டினாள். ''ஏன் பரிசோதிக்க வேண்டாம்?'' என்று வினவினாள் புன்முறுவலின் ஊடே. தனது இடது கையை அவன் தலையிலும் வைத்தாள்.

''எடு கையை'' என்று சீறினான் தமிழன்.

''ஏன்?''

''தலையில் ஒன்றுமில்லை.''

''தெரிகிறது.''

''என்ன தெரிகிறது உனக்கு?''

''உங்கள் தலையில் ஏதுமில்லையென்பது. இல்லாவிட்டால் காயத்துக்குக் கட்டுப்போடவிடாமல் பிடிவாதம் செய்வீர்களா?''

இதயசந்திரன் கூறினான் சிறிது நேரங்கழித்து. ''என் தலையை நீ தொட்டால் என் தலையே போய்விடும்'' என்று.

''உங்கள் மனைவி அத்தனை கோபக்காரியா?'' என்று வினவினாள் எமிலி.

''உஸ்! உஸ் மெதுவாகப் பேசு'' என்று கெஞ்சினான் தமிழன்.

''ஏன்?''

''அவள் காதில் விழப்போகிறது?''

''உங்கள் மனைவியின் காதிலா?''

''இல்லை இல்லை. அடக் கஷ்டமே? அவள் என் மனைவியல்ல.''

மிஸ் எமிலியின் கண்கள் வியப்பால் மலர்ந்தன. ''உண்மையாகவா?'' என்ற கேள்வியும் அவள் சிவந்த இதழ்களிலிருந்து ரகசியமாக உதிர்ந்தது.

மிஸ் எமிலியின் ரகசியக் கேள்வியில் புதைந்து கிடந்த பொருளைப் புரிந்து கொண்ட இதயசந்திரன் நிலை பெரும் சங்கடத்திலிருந்தது. ''உண்மைதான். ஆனால் நீ நினைக்கிறபடியில்லை விஷயம்'' என்று விளக்கினான் அவனும் மெல்ல.

''உங்கள் மனைவியல்ல. ஆனால்...'' என்று மிஸ்

''ஐயோ! அப்படியெல்லாம் எதுவுமில்லை'' என்றான் இதயசந்திரன் கிலியுடன்.

மிஸ் எமிலி சற்றுச் சிந்தித்துவிட்டு, ''உங்களை பம்பாயிலிருந்து நான் இங்கு கொணர்ந்தபோது என்ன நடந்தது தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

இதயசந்திரன் கண்களில் ஆவல் உதயமாயிற்று. ''பம்பாயிலிருந்து எப்படி இங்கு வந்தேன்?''

''அதைப் பிறகு சொல்கிறேன். உங்களை நான் கப்பலுக்குக் கொண்டு வரவில்லை. கொலாபாவுக்குத் தான் கொண்டு வந்தேன். அங்கு இருந்தாள் இந்தப் பெண் மஞ்சு. உங்களைப் பார்த்ததும் பதைபதைத்தாள். பிறகு உங்களை ஜலதீபத்திற்குக் கொண்டு வரச்சொல்லி எனக்கு உத்தரவிட்டாள். முதலில் நான் மறுத்தேன். கப்பலின் ஆட்டத்தைவிடக் கொலாபா அரண்மனையின் அறை உங்கள் நிலைக்கு நல்லதென்று கூறினேன். 'உன்னைவிட எனக்குத் தெரியும்' என்று கூறி உங்களை ஜலதீபத்திற்குள் கொண்டு வந்து தன் அறையில் வைத்துக் கொண்டாள். நான் உங்கள் தலைக்குக் கட்டுப்போட்ட நேரம் போக பாக்கி நேரம் உங்கள் தலை அவள் மடியில்தானிருந்தது. அதாவது நான் பார்த்த சமயங்களைச் சொல்கிறேன். பார்க்காத சமயங்களில்...'' என்ற எமிலி மேற்கொண்டு வாசகத்தைத் தொடராமல் பேச்சை அரைகுறையாகவே விட்டாள்.

அரைகுறையாக அவள் நிறுத்தினாலும் மீதியுள்ளதை அவன் பூர்த்தி செய்து கொண்டான். அத்தனை தூரம் தன்னைப் பாதுகாத்த மஞ்சு, தான் மிஸ் எமிலியின் பெயரை உச்சரித்ததால் மடியிலிருந்த தலையைத் தலையணையில் எறிந்துவிட்டுச் சென்றதையும் உணர்ந்து கொண்டான். எப்படி அவளை மீண்டும் சமாதானப் படுத்துவது என்று நினைத்துப் பார்த்து வழி தெரியாமல் சிந்தித்தான். ஏதும் புரியாமல், ''மிஸ் எமிலி! நீ சென்று மஞ்சுவை அனுப்பு'' என்று கூறினான் அவளிடம்.

''அவசியம் அவளைத்தான் அனுப்ப வேண்டுமா?''

''ஆம்.''

''தலைக்குக் கட்டு?''

''இப்பொழுது வேண்டாம்.''

''ஏன்?''

''நான் வேறு கட்டுப் போட்டுக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்.''

''வேறு எங்கும் காயமில்லை?''

''காயமில்லாத இடத்தில் கட்டுப் போட்டுக்கொள்ளப் போகிறேன்.''

''எங்கு?''

''காலுக்கு.''

''காலுக்கா?''

''ஆம். கால்கட்டுப் போட்டுக் கொள்ளப் போகிறேன். நீ போய்ச் சீக்கிரம் மஞ்சுவை அனுப்பு'' என்று கூறிய இதயசந்திரன் பஞ்சணையில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரங் கழித்து மஞ்சு வந்தாள் உள்ளே. கோபச் சாயை அவள் முகத்தில் விரிந்து கிடந்தது. ''எதற்குக் கூப்பிட்டீர்கள்?'' என்று வினவினாள்.

''திருமணம் எனக்கு'' என்றான் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து.

''சரி போகிறேன்'' என்று திரும்பினாள் மஞ்சு.

''எதற்குப் போகிறாய்?''

''மிஸ் எமிலியை அனுப்ப.''

''தேவையில்லை.''

''யாரை அனுப்ப?''

''கனோஜியை'' என்ற இதயசந்திரன் சொற்கள் அவன் வாயிலிருந்து அழுத்தந்திருத்தமாக வந்தன.

அத்தியாயம் 13

போர்ப் புயல்

மஞ்சுவின் அழகிய பெருவிழிகள் அவனை வியப்புடன் பார்த்தன. அவள் செம்பவள உதடுகளும் வியப்பின் காரணமாக லேசாக மெல்லத் திறந்து மூடின. அந்தக் கண்களும் உதடுகளும் இதயசந்திரனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாலும் இதயத்தின் சீற்றம் மட்டும், அடங்காமலிருக்கவே, ''போய் அனுப்பு கனோஜியை'' என்று இரண்டாம் முறையும் இரைந்தான் அவன்.

மஞ்சுவின் முகத்தில் வியப்பு, சந்தேகம் ஆகிய இரண்டின் சாயையும் கலந்து உலாவின. ''எதற்குத் தந்தை?'' என்று வினவினாள் அவள் குரலிலும் சிறிது சந்தேகத்தைக் காட்டி.

இதயசந்திரன் பார்வை முரட்டுப் பார்வையா யிருந்தது. ''அதை நீ கேட்கத் தேவையில்லை'' என்ற அவன் பதிலிலும் முரட்டுத்தனம் சொட்டியது.

மஞ்சு நன்றாகத் திரும்பி நின்று கொண்டு அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள். ''உங்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்று வினவவும் செய்தாள்.

அவள் என்ன கேட்கிறாளென்பது இதயசந்திரனுக்கும் புரிந்ததால், ''எனக்குப் பைத்தியமில்லை'' என்று தெளிவு படுத்தினான்.

''சில பைத்தியங்கள் இப்படியும் சொல்வதுண்டு.'' சற்று சினத்துடன் பேசினாள் மஞ்சு.

''இன்னும் சிறிது நேரம் நீ இங்கு இப்படிப் பேசிக் கொண்டே நின்றால் எனக்குப் பைத்தியம் நிச்சயமாகவே பிடித்துவிடும்.''

''ஓகோ!''

''ஆமாம். அப்புறம் என் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாளியல்ல.''

''என்ன செய்துவிடுவீர்கள்?''

''பைத்தியம் பிடித்த நிலையில் என்னென்ன செய்வேனோ எனக்கென்ன தெரியும்?''

மஞ்சு அவனை உற்று நோக்கினாள், அவள் இதழ்களில் இகழ்ச்சிக்குறி பெரிதும் மண்டியது. ''ஆம் உண்மைதான்'' என்றாள் சிறிது நேரம் கழித்து.

''என்ன உண்மையைத் தெரிந்துகொண்டு விட்டாய்?'' என்று கேட்டான் இதயசந்திரன் கோபம் மங்காத குரலில்.

''உங்களுக்குப் பைத்தியம்தான் என்பது'' என்றாள் மஞ்சு.

''புரிந்து கொண்டதுபற்றி சந்தோஷம்.''

''உங்களுக்கு இருப்பது ஒரே பைத்தியம்தான்.''

''அது என்னவோ?''

''பெண் பித்து'' என்று பதில் கூறிய மஞ்சு அதிக வேகத்துடன் நடந்து அறைக் கதவைத் தடாலென்று சாத்திக் கொண்டு சென்றாள்.

இதயசந்திரன் பஞ்சணையில் உட்கார்ந்த நிலையில் ஜலதீபத்தின் அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த அறைக் கோடியிலிருந்தன இரு மரத்தூண்கள். அந்தத் தூண்களிலொன்றில் ஆணியில் மாட்டியிருந்த ஒரு பிரிட்டிஷ் அரிக்கேன் விளக்கு, இன்னொரு மூலையில் ஆணியில் மாட்டிக் கிடந்த மஞ்சுவின் மேலாடை, இன்னொரு மூலையில் மூடப்பட்டுக் கிடந்த

தளபதியின் பெரிய மரப்பெட்டி, இவையனைத்தும் எத்தனையோ கதைகளைக் கூறின. எத்தனையோ நினைப்புகளைக் கிளப்பி விட்டன. அவன் உட்கார்ந்திருந்த அந்தப் பஞ்சணைகூட எத்தனை விதமான, எத்தனை வித உணர்ச்சிகளுள்ள சம்பவங்களை எடுத்துக் கூறியது!

அதே பஞ்சணையில்தான் காதரைனும் கிடந்தாள். மஞ்சுவும் கிடந்தாள்! ஆனால் இருவரிடமும் எத்தனை மாறுபட்ட அமைப்பு! 'நல்லவேளை! இதே பஞ்சணையில் மிஸ் எமிலி கிடக்கவில்லையே, தப்பினேன்' என்று முந்திய சம்பவங்களுடன் அடுத்தபடி ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியை நினைத்துப் பெருமூச்சு விட்டான் தமிழன். ஆனால் இனிமேல், தான் மனத்தைத் திடப்படுத்திக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் தன் வாழ்வே பயனற்றதாகி விடுமென்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அவன்.

அத்தனை நினைப்பிலும் மஞ்சுவின் நினைப்பைப் போல் தனக்கு இன்பம் தருவது வேறு ஏதுமில்லை யென்பதை உணர்ந்தான் இதயசந்திரன். அவளும் தானும் வாசிஷ்டி நதிக்கரையில் அக்கம்பக்கத்தில் படுத்திருந்த நாள், அதே ஜலதீபத்தின் மரத்தளத்தில் அவள் கிடந்த நாள், பின்பு அதே பஞ்சணையில் அவள் அடியோடு தன்னை அர்ப்பணித்துவிட்ட நாள், இவையனைத்தும் அவன் மனத்தில் வலம் வரவே, மற்றப் பெண்கள் தன் வாழ்வில் மோதியதற்கும் மஞ்சு தனது வாழ்வில் தலையிட்டதற்கும், சூறாவளிக்கும் தென்றலுக்குமிருந்த மிகுந்த வேறுபாடிருந்ததை அவன் சந்தேகமறப் புரிந்து கொண்டான். மஞ்சுவின் உடல், ஆத்மா இரண்டும் தன் உடல் ஆத்மாவுடன் ஒன்றிவிட்டதைப் புரிந்துகொண்ட தால் பஞ்சணையிலிருந்து எழுந்து அறையின் மரத்தடியில் நின்றும் கொண்டான்.

நின்றவன் உணர்ந்தான் தன் கால்கள் திடப்பட்டு விட்டதை. பழைய மயக்க நிலை அகன்றுவிட்டதையும்

புரிந்து கொண்டான். இருமுறை அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து தனக்குப் பலவீனம் ஏதுமில்லை யென்பதையும் அறிந்து கொண்டதால் மகிழ்ச்சிப் பெருமூச்சும் விட்டான். பலவீனம் அகன்றதற்கு மஞ்சுவின் நினைப்புத்தான் காரணம் என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டு மகிழ்ச்சிப் புன்முறுவலொன்றையும் இதழ்களில் படரவிட்டுக் கொண்டான். அந்தச் சமயத்தில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த கனோஜி அவனைப் பார்த்து, ''பலே, பேஷ்!'' என்று சிலாகித்தார்.

இதயசந்திரன், அவர் உட்கார ஓர் ஆசனத்தை எடுத்துப் போட்டான். ''தயவுசெய்து உட்கார வேண்டும்'' என்று வணக்கத்துடன் கூறினான். அவன் பேச்சும் வணக்கமும் கனோஜிக்கே சிறிது குழப்பமாயிருந்தது. ''சரி சரி. அதுவும் சரிதான்'' என்று கூறிக்கொண்டு உட்கார்ந்து கால்களைப் பரப்பிக்கொண்டு தொடைகளில் நமது பெரும் கைகளை அழுத்திக் கொண்டார்.

அவர் சகஜ தோரணையைக் கவனித்தான் இதய சந்திரன். 'சரி, சரி; அதுவும் சரிதான்' என்று அவர் சொன்னதில் ஏதோ பொருளிருப்பதையும் புரிந்து கொண்டான். அது என்னவென்பதைத் திட்டமாக அறிந்து கொள்ளக் கேட்டான், ''முதலில் பலே பேஷ் என்று பாராட்டினீர்கள். பிறகு அதுவும் சரிதான் என்கிறீர்கள். என்ன இதெல்லாம்?'' என்று.

கனோஜி சொன்னார்: ''இதயசந்திரா! நோயாளி போல் படுத்திருப்பவனைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. ஆகவே, நீ அச்சத்தை உதறி எழுந்து உலாவியதைக் கண்டதும் நீ ஆண்மகன்தான் என்பதை அறிந்து பாராட்டினேன். நீ எனக்கு ஆசனம் போட்டு உபசரித்ததும் முழுக்க முழுக்க நீ ஆண்மகன்தான் என்ற உறுதி ஏற்பட்டு, நீ எனக்கு மரியாதை செய்தது நியாயம் என்று உற்சாகமடைந்தேன்...'' இவ்வளவுதான் கனோஜி

சொன்னார். ஆனால் அவர் கண்களில் சொட்டிய விஷமம் இன்னும் ஏதேதோ சொல்லியது.

அவர் பேச்சு இதயசந்திரனுக்கு வெறுப்பை அளித்தது. ''என்னை ஆண்மகனென்று தீர்மானித்து விட்டீர்கள்?'' என்றான் வெறுப்புடன்.

''ஆம்.'' கனோஜி குரல் பழையபடி விஷமமாகவே இருந்தது.

''என் உபசரணையையும் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்?''

''ஆம்.''

''எதற்காக உபசரணை செய்தேன் என்று கேட்க வில்லையே?''

''அவசியமில்லை.''

''ஏன் அவசியமில்லை?''

பதிலுக்குப் பெரிய வெடியை எடுத்து வீசினார் ஸார்கேல். ''மாமனாருக்கு உபசாரம் செய்வது கலியுக தர்மம்'' என்று கூறிய ஸார்கேல் அந்த அறை இடிந்து விழும்படியாக நகைத்தார்.

''ஸார்கேல்'' என்று எரிச்சலுடன் கூவினான் இதய சந்திரன்.

ஸார்கேல் தமது அசுரச் சிரிப்பைச் சிறிது தளர்த்தி, ''இதயசந்திரா! மஞ்சுவைக் கல்யாணம் செய்து கொள்ள அனுமதி கேட்கிறாய்...'' என்று துவங்கினார் சற்று ரகசியமாக.

ஸார்கேலுக்குச் சோதிடம் தெரியுமோ என்று நினைத்ததால் அவரைப் பிரமிப்புடன் நோக்கினான் இதயசந்திரன். அவன் பிரமிப்பைக் கவனித்த ஸார்கேல், ''இதயசந்திரா! இது பெரும் விந்தையல்ல. சிறு ஊகம். நீயும் மஞ்சுவும் சதிபதிகளாகிவிட்டது எனக்குத் தெரியும்.

இடையில் மறுபடியும் ஒரு பெண் வந்ததால் சிறு சபலம் ஏற்படுகிறது உனக்கு! அதிலிருந்து தப்ப மஞ்சுவை மணக்கப் பார்க்கிறாய்'' என்று கூறியதன்றி, ''அப்படித் தானே விஷயம்?'' என்றும் வினவினார்.

பிரமை தட்டிய விழிகளை இதயசந்திரன் ஸார்கேல் மீது நிலைக்கவிட்டான். ''ஆம் ஸார்கேல்! தகுந்த வயதில் ஒரு கால்கட்டுப் போட்டுவிட்டால் ஆண்மகன் நெறியா யிருப்பான் என்று எங்கள் ஊரில் சொல்கிறார்கள்...'' என்று சொல்லிச் சிறிது தயங்கினான்.

ஸார்கேலின் பதில் தடங்கலின்றி வந்தது. ''இதய சந்திரா! கட்டு காலில் கூடாது, மனத்தில் இருக்க வேண்டும். ஒன்று ஒரே பெண்ணிடத்தில் மன உறுதி யுடனிரு, அல்லது இரண்டு மூன்று பேரைத் திருமணம் செய்து கொள். வீணாக இந்தச் சிறு விஷயத்தில் மனத்தை அலையவிடாதே'' என்றார் ஸார்கேல்.

இதயசந்திரன் சற்றுச் சிந்தித்துவிட்டுச் சொன்னான், ''ஸார்கேல்! பிரமைகள் மனிதனுக்குப் பல முறை ஏற்படலாம். ஆனால் காதல் ஒரு முறைதான் ஏற்படு கிறது'' என்று.

''பிரமை வேறு, காதல் வேறு அல்ல'' என்றார் ஸார்கேல்.

''இரண்டுக்கும் வித்தியாசமிருக்கிறது.''

''அறிவு நூல்களில் இருக்கலாம். அனுபவத்துக்கு ஏற்றதல்ல. பெண்ணைக் கண்டால் மனிதனுக்குச் சபலம். எத்தனை பெண்களை அனுபவித்தாலும் அந்தச் சபலம் குறைவதில்லை.''

''இது தங்கள் அனுபவமாயிருக்கலாம். ஆன்றோர் அப்படி நினைக்கவில்லை.''

கனோஜி இடியென நகைத்தார். ''இதயசந்திரா! நமது ஆன்றோர்கள் சமயத்துக்கு நமக்கு உபயோகப்படு

சிறார்கள். ஆன்றோரைச் சுட்டிக் காட்டுபவன் பரம அயோக்கியன். தன் குற்றங்களை மறைக்க ஆன்றோர் இழுக்கிறான். தன் பலவீனத்துக்குச் சப்பைக் கட்டு கட்ட ஆன்றோர்களை வாதத்தில் புகுத்துகிறான்'' என்றார்.

இதயசந்திரன் அவரை மிகுந்த சீற்றத்துடன் நோக்கி, ''அப்படியானால் நான் அயோக்கியனா!'' என்று கேட்டான், கோபக் கனல் குரலில் கொழுந்துவிட.

கனோஜி ஆசனத்தை விட்டு எழுந்தார். ''சந்தேக மென்ன? இப்பொழுதுகூட ஒரு எமிலியை இழுத்து வந்திருக்கிறாய்?'' என்று கூறினார் அவனை நோக்கி.

''அபாண்டம். நான் இழுத்து வரவில்லை அவளை'' என்று மன்றாடினான் இதயசந்திரன். அவன் முகத்தில் சஞ்சலம் படர்ந்தது.

கனோஜி பரிதாபத்துடன் அவனை நோக்கினார். பிறகு அவன் பஞ்சணைக்குச் சென்று உட்கார்ந்தார். அவர் பளுவைத் தாங்காமல் பஞ்சணையின் கால்கள் கரகரவென்று சத்தம் போட்டன. ஆங்கரே அவனை நோக்கிக் கூறினார்: ''இதயசந்திரா! பம்பாயில் நடந்தது அனைத்தையும் கவர்னர் ஏஸ்லாபி மிஸ் எமிலியிடம் கூறியனுப்பியிருக்கிறார். உன் தலையில் அவர் பிரம்பு கொண்டு அடித்ததற்கு மன்னிப்புக் கேட்டிருக்கிறார்'' என்று.

இதயசந்திரன் நினைப்பில் அந்தச் சிறை சம்பவம் நினைவுக்கு வந்தது. அந்தப் பிரம்படி பட்டுப் பழைய காயத்தின் கட்டுத் திறந்துரத் தம் கொட்டிய பிறகு, தனக்கு எதுவும் அதிகமாக நினைப்பில்லையென்பதும், மிஸ் எமிலி கட்டுப் போட்டு ஏதோ மருந்து கொடுத்ததும் தூங்கி விட்டதும் தெரிந்தது அவனுக்கு. அப்புறம், தான் ஜலதீபத் திற்கு வந்ததைப் பற்றி மிஸ் எமிலி சொன்ன இரண்டொரு வார்த்தைகளைத் தவிர வேறெதுவும் தெரியாததால் கேட்டான், ''மிஸ் எமிலி என்ன சொன்னாள்'' என்று.

''மிஸ்டர் ப்ரௌனை நீ அடித்ததால் பெரும் விவாதமும் சர்ச்சையும் பம்பாய் கௌன்ஸிலில் ஏற்படுமென்று அஞ்சினார் ஏஸ்லாபி. கௌன்ஸிலில் இஷ்டப்பட்டால் உன்னைத் தூக்கிலும் போட முடியும் என்பதை அவர் உணர்ந்திருந்ததால் அவர்களறியாமல் உன்னைத் தப்புவிக்க உன்னை முதலில் சிறையில் தள்ளினார். பிறகு தலையிலடித்துக் காயத்தை மீண்டும் ரத்த விளாறியாக அடித்தார். அதைச் சாக்கு வைத்து மிஸ் எமிலியிடம் அழைத்துச் சென்றார் உன்னை. உனக்கு மருந்தில் மயக்கம் சேர்க்க உத்தரவிட்டு இரவோடு இரவாக வர்த்தகர் வண்டியொன்றில் உன்னையும் மிஸ் எமிலியையும் அனுப்பிவிட்டார் இங்கு. மறுநாள் மிஸ் எமிலி உன்னை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டதாகவும் வதந்தி பரப்பப்பட்டது...'' என்று கூறிய கனோஜி ஆங்கரே, மெல்ல நகைத்தார்.

இதயசந்திரன் கல்லாய்ச் சமைந்து நின்றான். ''இப்படி வதந்தியிருப்பது மஞ்சுவுக்குத் தெரியுமா?'' என்றான்.

''பாவம், தெரியாது'' என்று அனுதாபப் பெருமூச்சு விட்டார் ஆங்கரே.

''இதில் அனுதாபப்படுவதறகு என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் இதயசந்திரன் சற்று சினம் துளிர்க்க.

''என் பெண் கல்மிஷமற்றவள். கண்ட பெண்களை இழுத்துக்கொண்டு ஓடும் ஓர் அயோக்கியனிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறாள்...'' என்றார் கனோஜி.

இதயசந்திரன் கெஞ்சினான், ''ஸார்கேல், இது அழகல்ல'' என்று.

''அழகென்று யார் சொன்னது? கண்ட பெண்களை இழுத்துக்கொண்டு ஓடுவது அழகா?'' என்று பொய்க் கோபம் காட்டினார் ஸார்கேல்.

''ஸார்கேல்! ஸார்கேல்!'' என்று கெஞ்சினான் பரிதாபத்துடன் இதயசந்திரன்.

''என்னைக் கெஞ்சிப் பயனில்லை. என் முடிவை நான் மாற்றிக்கொள்ள முடியாது'' என்றார் ஸார்கேல்.

''என்ன முடிவு?''

''மஞ்சுவை உனக்கு மணமுடித்துத் தர முடியாது.''

''ஏன்?''

''காரணங்கள் பல இருக்கின்றன.''

''காரணங்களெல்லாம் பொய்யென்பது உங்களுக்கே தெரியும்.''

''எனக்கேதும் தெரியாது.''

''ஒன்றுமறியாத குழந்தை நீங்கள். என்னைக் கெடுத்ததெல்லாம் நீங்கள்தான்'' என்று சீறிய இதயசந்திரன், ''நீங்கள்தான் என்னை மஞ்சுவிடம் ஜலதீபத்தில் பணிபுரிய நியமித்தீர்கள். நீங்கள் விஜயதுர்க்கத்தில் மஞ்சுவை எனக்கு மணமுடித்துத் தர மறுத்தீர்கள். நீங்கள்தான் என்னைக் காதரைனோடு தனித்து ஜலதீபத்தில் அனுப்பினீர்கள்'' என்று குற்றமும் சாட்டினான் கடைசியாக.

கனோஜியின் இதழ்களில் விஷமப் புன்னகை படர்ந்தது. ''நான்தான் மிஸ் எமிலியிடம் உன்னைத் தனித்து விட்டேனா?'' என்று வினவிய கனோஜி, லேசாக நகைக்கவும் செய்தார்.

தனது மனச் சபலத்துக்குக் கனோஜி எந்த விதத்திலும் பொறுப்பாளியல்ல என்பதைப் புரிந்து கொண்டான் இதயசந்திரன். ஆனால், மஞ்சுவை மணம் முடித்துத் தராததற்கு இவையல்ல காரணங்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, உண்மைக் காரணத்தை அறியக் கேட்டான், ''ஸார்கேல்! ஏன் எனக்கு மஞ்சுவை அளிக்க மறுக்கிறீர்கள்?'' என்று.

கனோஜியின் முகத்தில் திடீரெனப் பெரு மாறுதல் படர்ந்தது. ஆழ்ந்த சிந்தனை புத்தியில் உலாவுவதும் முகத்தில் பளிச்சிட்டது. சிறிது நேரங்கழித்து அவர் எழுந்திருந்து இதயசந்திரனருகில் வந்து அவன் தோள்மேல் ஒரு கையை வைத்தார். ''தமிழா! மஞ்சுவை மணமுடித்துத் தர நான் மறுத்தாலும் அவள் மசியமாட்டாள். அவள் உனக்குத்தான். ஆனால் உடனடியாக அவளை மணமுடிப்பதில் சில கஷ்டங்களிருக்கின்றன. அவளுக்கென்று ஒரு தகப்பன் ஏற்பட்டிருக்கிறான். அவன் தகப்பனல்ல வென்பது எனக்குத் தெரியும். ஆனால் ருசுக்கள் அவனிடம் அதிகமிருக்கின்றன. அந்த ருசுக்களை அளித்தவர்கள் ஸித்திகள். அவளுடைய உண்மைத் தந்தையோ, தந்தையைப் பற்றிய தகவலோ அவர்களிடம் சிக்கிக் கொண்டிருப்பது தெளிவு. அவற்றைக் கொண்டு இந்தப் போலியை இங்கு அனுப்பியிருக்கிறார்கள், என்மீது வேவு பார்க்க. மஞ்சுவின் நிலை இப்பொழுது பரிதாபமானது. தந்தை என்ற உரிமையால் அவளை அழைத்துச் செல்ல இந்தப் போலி அடிக்கடி என்னிடம் உத்தரவு கேட்கிறான். நான் மறுத்துவிட்டேன். இருப்பினும் அந்த உரிமையை வலியுறுத்தி அவன் ஸித்திகளுக்கு எழுதலாம். ஸித்திகள் அதை ஒரு காரணமாகக் கொண்டு என்னிடம் சண்டைக்கு வர ஏற்பாடு செய்யலாம். ஸித்திகள் நிலை இப்படியென்றால் பம்பாயிலிருந்து ஒரு தூதுவனை அனுப்புவதாக ஏஸ்லாபி மிஸ் எமிலியிடம் சொல்லியனுப்பியிருக்கிறார். அந்தத் தூதுவன் சொல்வதை ஒப்புக்கொள்ளும் படியும் வேண்டிக் கொண்டிருக்கிறார். அவன் என்ன சொல்லப் போகிறானோ எனக்குத் தெரியாது. தவிர, மன்னர் ஷாஹூவும் போர் முரசு கொட்டி விட்டார்'' என்று கூறினார்.

இதயசந்திரன் பிரமிப்பு உச்ச நிலையை அடைந்தது. ''என்ன, மன்னர் போர் முரசு கொட்டிவிட்டாரா?'' என்று வினவினான் அதிர்ச்சியுடன்.

''ஆம். பேஷ்வா பிங்களே புறப்பட்டுவிட்டார் பெரும் படையுடன்'' என்று கூறினார் ஆங்கரே.

''அப்படியானால் போர் மூண்டுவிட்டது'' என்றான் இதயசந்திரன்.

''ஆம். இந்த நிலையில் கடலில் என் மரக்கலங்களை நடத்த இரு தளபதிகளாவது தேவை. ஒருவன் என் புதல்வனிருக்கிறான், இன்னொரு தலைவன் இல்லை. தலைவி மஞ்சுதான் இருக்கிறாள். ஆகையால் திருமணம் இப்பொழுது சாத்தியமில்லை'' என்றார் கனோஜி ஆங்கரே.

மகாராஷ்டிரத்தைப் போர் சூழ்ந்த நிலையில் திருமணம் சாத்தியமில்லையென்பது இதயசந்திரனுக்கும் புரிந்ததால் அவன் பதிலேதும் சொல்லவில்லை. தவிர, அன்றைக்குப் பிறகு திருமணப் பேச்சை எடுக்க அவனுக்கு அவகாசமும் இல்லை. போர் ஏற்பாடுகள் துரிதமாகத் தரையிலும் கடலிலும் நடந்தன. குலாபிக்குத் திருமஞ்சனமும் அர்ச்சனைகளும் நடந்தன. மூன்றாவது நாள் பெரிய அர்ச்சனையொன்று நடத்த உத்தரவு கேட்டார் கனோஜி, அம்மாளிடம். 'போர்க்குப் போ!' என்று திருவுள ஓலை கிடைத்தது. அப்பொழுது மகாராஷ்டிரத்தில் புயலில்லா காலம். ஆகவே போர்ப் புயல் மூண்டது.

அத்தியாயம் 14

மணவரைப் பாறை

ஜலதீபத்தின் தளபதியின் அறையில் பேஷ்வா பிங்களே பெரும் படையுடன் நம்மை நசுக்கப் புறப்பட்டு விட்டதாக கனோஜி ஆங்கரே அறிவித்த நாளிலிருந்து மூன்றாவது நாள் குலாபிக்கு மகாபிஷேகம் நடந்தது. அது நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே கொலாபா தீவு அமர்க்களப்படுவதை ஜலதீபத்தின் தளத்திலிருந்தே கவனித்தான் இதயசந்திரன். கொலாபாவின் தோர்லாவாடாவின் ஐந்தாவது உப்பரிகையின் பெரு விளக்குகள் இரவு முழுவதும் எரிந்ததையும், பல பந்தங்களும் பிரிட்டிஷ் அரிக்கன் விளக்குகளும் தீவு முழுவதும் நடமாடியதையும் அவன் கண்டதன்றி காலை நேரங்களில் சதா குலாபி கோயிலில் மணி அடிக்கப்படும் அரவத்தைக் கவனித்தான்.

பகலிலும் சரி, இரவிலும் சரி, சதா படகுகள் பல கரைக்கும் ஜலதீபத்துக்கும், அதனருகே நின்றிருந்த மற்றுமிரண்டொரு மரக்கலங்களுக்குமாகப் போய் வந்து கொண்டிருந்ததும் புலனாயிற்று தமிழன் பார்வைக்கு. அத்துடன் மெல்லத் தனது முழு பலமும் இரண்டு நாட்களில் திரும்பிவிட்டதும் தமிழக வீரனுக்கு மிகுந்த திருப்தி அளித்தது. கரையிலும் கடலிலும் துரித நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தபோது, தான் மட்டும் தலைக் கட்டுடன் சிறகொடிந்த பட்சிபோல் ஜலதீபத்தில் இருந்து கொண்டிருந்தது பெரும் வேதனையாக முதலில் இருந்தாலும், மிஸ் எமிலி இரண்டாவது நாள் அவன் தலைக்கட்டைப் பிரித்துப் பார்த்து காயம் பூரணமாக ஆறிவிட்டதென்றும், இனி கட்டு வேண்டியதில்லை

யென்றும் கூறியதும் மகிழ்ச்சியால் நிதானத்தை அறவே இழந்தான் இதயசந்திரன்.

தளபதியின் அறையில்தான் அவள் அவன் கட்டை அவிழ்த்துப் பரிசோதித்தாள். அந்தப் பழைய பஞ்சணையில் உட்கார வைத்துத்தான் கட்டை அவிழ்த்தாள். கட்டை அவிழ்த்தவள் உடனடியாகக் காயத்தைப் பார்க்காமல் நீண்ட நேரம் அவன் முரட்டுக் குழல்களில் கையை விட்டுத் துழாவிக் கொண்டிருந்தாள். அப்படி அத்தனை நேரம் அவள் பரிசோதித்ததைக் கவனித்த இதயசந்திரன், ''மிஸ் எமிலி! இன்னும் காயம் ஆறவில்லையா? மீண்டும் கட்டுப்போடப் போகிறாயா?'' என்று வினவினான் குழந்தையைப் போல்.

குழலைப் பிரித்துக் கொண்டிருந்த எமிலி மெள்ள அவன் தலையை இழுத்துத் தன் மார்பில் சாத்திக் கொண்டாள். ''என்ன குழந்தை மாதிரி கேள்விகள் கேட்கிறீர்கள்? காயத்தை நன்றாகப் பார்த்துத்தானே சொல்லவேண்டும்'' என்று கூறி மெல்ல நகைத்தாள்.

மார்பில் முகம் புதைந்து கிடந்ததால் உணர்ச்சிகளை மெல்ல மெல்லப் பறக்கவிட்டுக் கொண்டிருந்த இதயசந்திரன், ''எத்தனை நேரம் காயத்தைப் பார்ப்பாய் எமிலி? அதில் ஆராய்ச்சிக்கு என்ன இருக்கிறது?'' என்று வினவினான். மெல்லத் தலையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளவும் செய்தான்.

''உம். சும்மா இருங்கள். இப்பொழுதுதான் காயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பஞ்சை எடுக்கப் போகிறேன்'' என்றாள் எமிலி.

'காயத்தில் ஒட்டியிருக்கும் பஞ்சை எடுக்கத் தலையை அத்தனை தூரம் மார்பில் ஒட்டுவானேன்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட இதயசந்திரன், தான் ஏன் அந்த நிலையை அனுமதிக்க வேண்டும் என்று மற்றொரு கேள்வியையும் மனத்துக்குள் எழுப்பிக் கொண்டான்.

அவன் அந்த நிலையிலிருந்து விலகுவதை எமிலி யொன்றும் அதிகமாகத் தடை செய்துவிடவில்லை. தலையையும் லேசாகத்தான் கையால் அழுத்தியிருந்தாள். இஷ்டப்பட்டால் தமிழன் திமிறி எழுந்து சென்றிருக்க லாம். அப்படிச் செல்லத் திராணியில்லையோ, அல்லது பிணைத்த அழகுகளில் அந்த இணைப்பு, அவள் மூச்சு விட்டபோது பக்கங்களில் அவை கன்னங்களைத் தடவித் தடவி நீங்கிய இதம், இவை அவனுக்குத் தேவையாகத் தானிருந்ததோ, அவனுக்கே தெரியவில்லை. ஆகவே அர்த்தமில்லாமல் அவன் கேள்விகளைக் கேட்டான். அவளும் அர்த்தமில்லாமல் பதில்களைச் சொன்னாள்.

''மிஸ் எமிலி...!'' என்று மெல்லக் கூப்பிட்டான் தமிழன்.

''என்ன வீரரே?'' என்றாள் அவளும் அவன் தலைமீது குனிந்து காயத்தைப் பார்த்த வண்ணம். அவள் அப்படி நன்றாகக் குனிந்ததால் அவன் முகத்தில் அழகுகளின் அழுத்தம் அதிகமாயிற்று. தலையில் அவள் விட்ட மூச்சு தலைக்குழல்களை லேசாக அலைக்கழித்தது.

''பஞ்சு, காயத்தில் நன்றாக ஒட்டிக்கொண்டிருக் கிறதா எமிலி?'' இது அவன் அடுத்த கேள்வி.

அந்தக் கேள்வியில் 'மிஸ்' உதிர்ந்து விட்டதைக் கவனித்தாள் எமிலி. ''ஆம், நன்றாக ஒட்டிக் கொண் டிருக்கிறது'' என்றாள்.

''சிறிது நீர் தெளித்து வலிக்காமல் எடுக்க முடியாதா?''

''எடுக்கலாம். ஆனால் சிறிது காயமிருந்தாலும் நீர் பட்டால் மீண்டும் அது சிறும்.''

''அப்படியானால் என்ன செய்யப் போகிறாய்?''

''ஆம்.''

''செய்தால் சும்மா இருப்பீர்களா?''

''அப்படியென்றால்?''

''கத்தாதிருப்பீர்களா?''

''நான் என்ன குழந்தையா?''

''சில வேளைகளில் குழந்தை மாதிரி இருக்கிறீர்கள். சில வேளைகளில் பெரிய ஆண்மகனாகக் காட்சியளிக் கிறீர்கள். உங்களைக் குழந்தையென்றும் கண்டிக்க முடியாது, வாலிபரென்றும் விலக்க முடியாது. பெரிய தர்மசங்கடம் நீங்கள்.''

இதற்கு மேல் அவளும் பேசவில்லை, அவனும் பேச வில்லை, தர்மசங்கடம் அதிகமாகிக் கொண்டிருந்தது. காயத்தை அவள் நீண்ட நேரம் பரிசோதித்தாள். பஞ்சை வெகு லாவகமாக எடுத்தாள். பிறகு அறைக்கு வெளியே சென்று பஞ்சை எறிந்துவிட்டு வந்தாள். அந்த இடைக் காலத்தில் முழுச்சுரணையையும் வரவழைத்துக்கொண்ட இதயசந்திரன் அறையில் எழுந்து நின்றான். பிறகு வெளியே செல்ல முயன்றான். வழியில் எமிலி நின்றிருந் தாள், நின்ற இடத்தைவிட்டு அசைய மறுத்தாள்.

''எமிலி, வழி விடு!'' என்று கெஞ்சினான் தமிழன்.

''நான் குறுக்கே நிற்கிறேனா?'' என்று கேட்டாள் அவள் கோபத்துடன்.

''ஆம்.''

''உங்களுக்கும் உங்கள் காதலிக்குமா?''

''சேச்சே. இரையாதே. மஞ்சுவின் காதில் விழப் போகிறது.''

''விழுந்தால் என்ன செய்வாள்?''

''ஜலதீபத்தை விட்டு ஓடிவிடுவாள்.''

''அவ்வளவுதானே?''

''இல்லை. இந்தப் பிராந்தியத்திலிருந்தே ஓடி விடுவாள்.''

''அதுதான் முடியாது'' என்று திட்டமாகச் சொல்லிய எமிலி, சரேலெனத் திரும்பி, அந்த அறையை விட்டு வெளி யேறினாள். அவள் சொல்லும் போக்கும் அடியோடு புரிய வில்லை இதயசந்திரனுக்கு. பம்பாய் கவர்னர் மாளிகையில் சிகிச்சைக்காகவே நியமிக்கப்பட்டிருக்கும் எமிலி எத்தனை நாள் கொங்கணியிலிருக்க முடியும் என்று நன்னைத்தானே வினவிக் கொண்டான். ஒருவேளை அவள் தன்னை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டதாக வதந்தி இருப்பதால் திரும்பப் பம்பாய் செல்ல அஞ்சுகிறாளோ என்றும் எண்ணினான். காரணம் அதுவாகத்தானிருக்கும் என்றும் தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்தால் சிறிது தைரியமும் அடைந்து, எந்தக் காரணத்தாலும் எமிலியைத் தன்னை அணுக விடாமலிருக்கவும், மஞ்சுவை மணக்கும்போது நிர்மலமான மனது தனக்கு இருக்கும்படி தனது நடத்தையை மாற்றிக் கொள்ளவும் முடிவு செய்து கொண்டான். திரும்பவும் படைத் தளத்துக்குப் போவதே இதற்கெல்லாம் வழி என்ற தீர்மானத்துக்கும் வந்தான்.

அந்தத் தீர்மானத்துக்கு வந்த விநாடி முதல் தனது நடை உடை பாவனைகளை மாற்றிக் கொண்டான். நீராடி மாலுமிச் சராய் புனைந்து கொலாபாவிலிருந்து வந்துகொண்டிருந்த படகுகளில் ஜலதீபத்திலிருந்து ஏற்றப்பட்ட துப்பாக்கிகள், பீரங்கிகள் முதலியவற்றை ஏற்ற, மற்ற மாலுமிகளைப்போல் தானும் உதவினான். அடிக்கடி ஜலதீபத்தின் படகொன்றில் ஏறி, மற்றக் கப்பல் களுக்குச் சென்று, அங்கிருந்த கரைக்குச் செல்லும் ஆயுத வகையறாக்களையும் உணவு வகையறாக்களையும் மேற் செய்து உபதளபதி அறையில் உட்கார்ந்து மகாராஷ்டிரப் பகுதிகளுக்குப் பிரிட்டிஷார் தயாரித்த தேசப்பட மொன்றைப் பிரித்து வைத்துக்கொண்டு நள்ளிரவு வரை ஆராய்ந்து கொண்டிருந்தான். நள்ளிரவுக்குப் பிறகு தூக்கம் வரவே அந்தப் படத்தின்மீதே தலையை வைத்துத் தூங்கிவிட்டான்.

மறுநாட் காலையில் அவன் அறைக்கு வந்த மஞ்சு அந்த நிலையில் அவனைப் பார்த்தாள். தலை படத்தின்மீது கிடந்ததால் குழல்களுக்கிடையே இருந்த காயத்தின் வடு அவள் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. மெல்லத் தன் கையால் அவன் குழல்களைத் தடவினாள். பிறகு தலையை அசைத்து, ''எழுந்திருங்கள். நேரமாகிவிட்டது'' என்றும் கூறினாள்.

இதயசந்திரன் கண் விழித்து மஞ்சுவை நோக்கினான். அவள் அப்பொழுது பூராவாக மாலுமி உடை அணிந் திருந்தாள். காலில் அரபு நாட்டுச் சராயும், மேலே பிரிட்டிஷ் ஷர்ட்டும், தலையில் குழல் கலையாதிருக்க சிவப்புத் துணிக்கட்டும் அவள் அழகை அபரிமிதமாகக் காட்டின. முதன் முதலில் அவள் தன்னைப் பரசுராம புரத்தின் மலையில் அந்தப் பெரிய பாறைக்கருகில் சந்தித்த அதே கோலத்தை அணிந்திருந்ததால் இதயசந்திரன் அவளை நோக்கி, ''மஞ்சு! இது பரசுராமபுரமா, கொலாபாவா?'' என்று வினவினான்.

''இருப்பிடம் வைகுந்தம்'' என்றாள் அவள் பதிலுக்கு.

இதயசந்திரன் அவள் அழகிய இடையில் தன் கையைச் செலுத்தி தன்னை நோக்கி இழுத்துக் கொண்டான். ''என் மனைவிக்குப் பொறாமை போய்விட்டதா?'' என்று வினவவும் செய்தான்.

''மனைவியைக் கேளுங்கள்'' என்றாள் அவள் நகைத்து.

''அவளைத்தான் கேட்கிறேன்'' என்றான் இதயச் சந்திரன்.

''அப்படியாக நீண்ட காலம் இருக்கிறது.''

''ஏன் நீண்ட காலம் இருக்க வேண்டும்?''

''தந்தைதான் சொல்லிவிட்டாராமே?''

''ஆம் சொன்னார். அதை உன்னிடமும் சொல்லி விட்டாரா?''

''ஆம்.''

''போர் முடிந்துதான் திருமணமா?''

''ஆம்.''

இதயசந்திரன் சிறிது யோசித்தான். ''இல்லை'' என்று கூறினான் முடிவாக.

''என்ன இல்லை?'' என்று கேட்டாள் மஞ்சு துடிப்புடன்.

''போர் முடியும்வரை காத்திருப்பதற்கில்லை'' என்ற இதயசந்திரன் முகத்தில், சிந்தனையின் சாயை பெரிதாகப் படர்ந்தது.

மஞ்சுவின் முகத்தில் காதல் சொட்டியது. வெட்கமும் கலந்தது அத்துடன். ''ஏன்? அவசரமா? காத்திருக்க முடியாதா?'' என்று வினவினாள் அவள், இதயசந்திரன் கன்னத்துடன் தன் கன்னத்தை இழைத்து.

படுத்த நிலையைவிட்டு, கன்னத்துடன் கன்னமிழைய எழுந்திருந்து உட்கார்ந்துகொண்ட இதயசந்திரன் கை மஞ்சுவின் இடையை நன்றாக அழுத்தியது. ''மஞ்சு!'' என்று அழைத்த அவன் குரலில் அன்பு பெருகி வழிந்தது.

''ஏன்?'' என்றாள் அவளும் இன்பம் சொட்டிய குரலில்.

''இப்பொழுது நடைபெறப் போவது முந்திய போர்களைப் போன்றதல்ல'' என்றான் இதயசந்திரன்.

''என்ன வித்தியாசம் இந்தப் போரில்?'' என்று கேட்டாள் மஞ்சு.

''மஞ்சு! கடலில் போர்க்கலங்களைத் திருப்பி எப்பொழுதாவது வரும் கப்பல்களுடன் போரிடுவது ஒரு வகை. பயிற்சி பெற்ற அணிவகுத்த பெரிய படை நகரும் போது நிலத்தில் நடக்கும் போர் முறை வேறு வகை. அந்த வகையை நான் அறிவேன். இன்று நாம் ஏதோ ஒரு எதிரிக் கப்பல்களுடன் மோதவில்லை. போர் பயிற்சி பெற்ற மகோன்னத சாம்ராஜ்யப் படைகளுடன் மோதப் போகிறோம். அந்தப் படையில் பாரதத்தை அடிமைப்படுத்திய மொகலாயர் இருக்கிறார்கள். அடிமைப்படுத்த விரும்பும் போர்ச்சுக்கீசியர் இருக்கிறார்கள். அத்துடன் மகாராஷ்டிரத்தின் சிறந்த குதிரைப் படையும் இருக்கிறது. இத்தகைய ஒரு படையுடன் மோதும்போது வெற்றி தோல்வி எப்படியென்று கூற முடியாது. இப்போரில் நான் கொல்லப்பட்டாலும் படலாம்.''

இதை இதயசந்திரன் சொன்னதும் அவன் வாயைப் பொத்தினாள் மஞ்சு. ''சே சே! இந்தப் பேச்சை விடுங்கள்'' என்றாள்.

அவன் மேலே சொன்னான்: ''அப்படி நான் இறந்தால் எனக்கொரு மனைவியுண்டு கண்ணீர் சிந்த என்ற நினைப்பில் இறக்க வேண்டும். போரிடும்போது மனைவி யிருக்கிறாள். அவளுக்காக நான் திரும்பவேண்டும் என்ற உறுதி வேண்டும். இரண்டுக்கும் மனைவி வேண்டும். அந்த மனைவியை அடைய நிச்சயம் செய்துவிட்டேன்'' என்று கூறிய இதயசந்திரன், அவள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு காலைக் கடன்களை முடித்துக் கொள்ளச் சென்றான்.

அப்பொழுது பொழுது விடிந்து நேரமாகி விட்டதால் கதிரவன் ஆட்சி எங்கும் நடந்து கொண்டிருந்தது.

தூரத்தே தெரிந்த தோர்லாவாடாவும் மஹாதர்வாஜாவும் மிகக் கம்பீரமாயிருந்தன. கொலாபாவின் கோட்டைத் துளையிலிருந்து. பீரங்கிகள் நாலா பக்கமும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்த வண்ணம் நீராடி ஆடை புனைந்து ஒரு படகை எடுத்துக் கொண்டு கொலாபாவை அடைந்தான் இதய சந்திரன். நேராகக் குலாபியின் ஆலயத்துக்குச் சென்றான்.

அவனுக்கு முன்பே கனோஜி அங்கு நின்று கொண்டிருந்தார். குலாபிக்குத் திருமஞ்சனம் முடிந்து தீபாராதனை நடக்கும் வரையில் யார் வந்திருப்பதையும் கவனிக்காத கனோஜி கடைசியாகத்தான் இதயசந்திரன் அருகில் நிற்பதைக் கவனித்தார். ''நல்ல சமயத்திற்கு வந்தாய். திருவுள ஓலை போட்டிருக்கிறோம்'' என்று வரவேற்றார் அவனை. வழக்கம் போல் தீபாராதனை நடக்க, மணியோசை கொலாபாவை ஊடுருவிச் செல்ல, சங்கம் முழங்க காற்றடித்து ஓலை ஒன்று புரண்டது. ஓலையை எடுத்துக் கொடுத்தார் அர்ச்சக்கர். வாங்கிப் பிரித்துப் படித்துப் பார்த்த கனோஜியின் முகத்தில் மகிழ்ச்சிக் குறி படர்ந்தது. ''உத்தரவு கிடைத்து விட்டது, இந்தா'' என்று ஓலையை இதயசந்திரனிடம் நீட்டினார். போருக்கு உத்தரவு கிடைத்திருந்ததைக் கண்ட இதய சந்திரன் தலைவணங்கினான் குலாபிக்கு.

''உன் படைகள், ஆலிபாக்கில் காத்திருக்கின்றன தமிழா'' என்றார் ஆங்கரே. அத்துடன் பக்கத்திலிருந்த தனது மகனை அழைத்து, ''சேகோஜி! கடற்படையில் பாதியை என் கப்பலில் இருந்து நீ தலைமை வகித்து நடத்து. மீதிப் பாதியை மஞ்சு நடத்துவாள்'' என்று ஆணையிட்டார்.

''தாங்கள்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''உன்னுடன் வருகிறேன்'' என்றார் கனோஜி.

அன்று அவருடன் ஆலயத்திலிருந்து சென்ற இதய சந்திரன் ஆலிபாக்கில் கனோஜி திரட்டியிருந்த தரைப் படையைக் கவனித்து வியப்பின் எல்லையை எய்தினான். படை, பெரும் படையுமல்ல சிறு படையுமல்ல, மத்தியமா யிருந்தது. ஆனால் அவர் அதை இயக்கி வைத்திருக்கும் முறை பயங்கரமாயிருந்தது. ஆலிபாக்கில் அணிவகுத்து நின்ற படைகளின் ஒரு பகுதியை நோக்கி ஆகாயத்தில் கைத்துப்பாக்கியால் சுட்டார் கனோஜி. அடுத்த வினாடி ஒரே ரோக மின்னல் வேகத்தில் அந்தப் படை இயங்கியது. அடுத்த பிரிவு அடுத்தபடி, அதற்கடுத்த பிரிவு அதற்கும் அடுத்தபடி, இப்படி ஆறு பிரிவுகள் இயங்கின. மிகப் பலமான ராணுவ இயந்திரத்தை ஆங்கரே சிருஷ்டித்து விட்டதைப் புரிந்துகொண்டான் இதயசந்திரன்.

அந்தப் படைகள் அளித்த மயக்கம் அவனுக்கு அன்று பூராவும் தீரவில்லை. ஜலதீபத்துக்குத் திரும்பிய பிறகும் அதையே நினைத்துக் கொண்டிருந்தான். தீபங்கள் ஏற்றப் பட்ட பிறகுதான் முக்கிய விஷயம் நினைவுக்கு வந்தது. மஞ்சுவின் அறையை நோக்கி நடந்து, ''மஞ்சு! இந்த மாலுமி உடையைக் கழற்றிவிட்டு நல்ல சேலை அணிந்து புறப்படு'' என்றான்.

''எங்கு?'' என்று கேட்டாள் மஞ்சு வியப்புடன்.

''குலாபியைத் தரிசிக்க'' என்றான் இதயசந்திரன்.

''இப்பொழுது எதற்கு?''

''சொல்கிறபடி செய்.''

அவன் கண்டிப்புக்குக் காரணம் அவளுக்குப் புரிய வில்லை. இருப்பினும் அவன் சொன்னபடி சேலையுடுத்தி முக்காடிட்டு அவனுடன் குலாபி ஆலயத்துக்குச் சென்றாள்.

குலாபியின் அபிஷேக ஆராதனைகள் முடிய அர்த்த ஜாமம் ஆகிவிட்டது. பூஜை முடிந்ததும் அர்ச்சகரைக்

கேட்டான் இதயசந்திரன், ''மஹிஷேஸ்வரியின் மஞ்சள் கயிறு ஒன்று வேண்டும்'' என்று.

அர்ச்சகர் மஞ்சள் கயிறு ஒன்றை எடுத்து அம்பிகையின் பாதத்தில் வைத்து புஷ்பமும் கயிறுமாகக் கொடுத்தார் இதயசந்திரன் கையில். புஷ்பத்தை அவன் மஞ்சுவின் தலையில் செருகினான், கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டினான். பிறகு, ''குலாபியின் ஆணை, நீ இன்று முதல் என் மனைவி'' என்று கூறி, ''வணங்கு மஞ்சு'' என்று கூறித் தானும் வணங்கினான்.

மஞ்சுவின் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் இருந்தன. எதற்கும் அஞ்சாத அவள் இதயத்தில் ஏதோ அச்சம் உதயமாயிற்று. மார்பு, பயத்தால் படபடவென அடித்துக் கொண்டது. ஏதும் பேசாமல் மௌனமாக அவனைப் பின்பற்றி வெளியே நடந்தாள் மஞ்சு. ஆலயத்துக்கு வெளியில் வந்த பின்பும் அவள் பேசவில்லை. சிறிது தூரத்தில் யாருமற்ற இடத்திலிருந்த பாறையின் மறைவுக்கு அவளை அழைத்துச் சென்ற போதும் அவள் பேசவில்லை. பேச்சை மீறிய சந்தர்ப்பம் அது.

பாறையின் மறைவிலிருந்த மற்றொரு பாறையில் அவனுடன் உட்கார்ந்தாள் அவள். அவனும் பேசாமல் பக்கத்தில் உட்கார்ந்தான். வானில் நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. தூரத்தே விளக்குகள் எரிந்தாலும் அந்தப் பாறை வரையில் எட்டவில்லை விளக்குகளின் வெளிச்சம். உணர்ச்சிகளின் மிகுதியால் உட்கார மாட்டாமல் பாறையில் படுத்தாள் மஞ்சு.

அந்தப் பாறையின் மறைவு மணவரையாயிற்று. பாறையே பஞ்சணையாயிற்று. ஒன்று கடினம், ஒன்று மென்மை. ஒன்றை ஒன்று புரிந்துகொள்ள முயல்வது வாழ்க்கை.

அத்தியாயம் 15

களைத்த உடல்கள், சலன சித்தங்கள்

மலைப்பாறையின் மறைவு சிருஷ்டித்த மணவரையில் மகிழ்ந்து இணைந்துவிட்ட காதலர் இருவரும் மறுகாலையில் வெவ்வேறு திக்குகளையும் வெவ்வேறு அலுவல்களையும் நோக்கிச் சென்று விட்டார்களென்றாலும், அவ்விருவர் மனங்களும் முந்திய இரவின் இன்ப நினைப்புகளிலேயே ஈடுபட்டுக் கிடந்ததால் அவ்விருவரும் அடுத்த நாள் முழுவதும் சற்றுத் தடுமாற்றத்துடனேயே நடந்து கொண்டார்கள். இரவில், பாறையிலேயே உறங்கிவிட்ட இருவரில், பொழுது புலருவதற்கு வெகு நேரமிருக்கையிலேயே கண் விழித்துவிட்ட மஞ்சு, நட்சத்திர ஒளியில் அருகே கிடந்த ஆடவன் மீது கண்களை ஓட்டினாள். அவன் அலுத்துக் களைத்து உறங்குவதைக் கண்டதும் அவள் முகத்தில் ஒரு புதுப் பொலிவும் பெருமையும் துலங்கின. சற்றுத் தடுமாறி எழுந்து உட்கார்ந்து கொண்ட அவள் பல வினாடிகள் தன் முழந்தாளைக் கட்டிக் கொண்டு அந்தக் கட்டிளங்காளையைப் பார்த்த வண்ணமே உட்கார்ந்திருந்தாள். பிறகு மெல்ல ஒரு முறை அவன் உடல் மீது கையை வைத்து உலுக்கிப் பார்த்தாள். அவன் சிறிதும் அசையாமல் அயர்ந்து தூங்குவதைக் கண்டதும் சிறிது புன்முறுவல் கொண்டு தலையை அண்ணாந்து பின்னலைப் பிரித்துக் குழல்களை முடிந்து கொண்டு எழுந்திருந்து பாறைகளில் தன்னந் தனியே நடந்து சென்றாள்.

எத்தனையோ இன்ப எண்ணங்கள் மனத்தில் அலைபாய அந்த எண்ணங்களால் உடல் பலவிதமாய் ஓய்யார அசைவு அசைய, இடை துவள, கால்கள் சரியாக நடக்க முடியாமல் பின்ன, பாறைகளைத் தாண்டிக் கடற்கரைக்கு

வந்து, அங்கிருந்த படகொன்றை எடுத்துக் கொண்டு ஜலதீபத்தை நோக்கிச் சென்றாள் மஞ்சு. படகில் துடுப்பு களைத் துழாவியபோதுதான் அவளுக்குத் தன் பூரா அசதியும் தெரிந்தது. பெரிய அலைகள்மீது அனாயாச மாகப் படகைச் செலுத்தவல்ல மஞ்சு, தனது கைகள் துடுப்புகளைத் துழாவ முடியாமல் தடுமாற்றமடைவதைக் கண்டு வியந்தாள். உடலெங்கும் ஏற்பட்டிருந்த வலியும் அசதியும் அவளுக்கு இன்பமாகவே இருந்ததென்றாலும், படகை ஜலதீபத்தின் அருகில் கொண்டு போய்ச் சேர்க்க முடியாதோ என்ற பேரச்சம் அவளைப் பற்றிக் கொள்ளவே, மூச்சைப் பிடித்துக் கொண்டு துடுப்புகளைத் துழாவி மெள்ளப் படகை ஜலதீபத்திற்குக் கொண்டு வந்து இணைத்து ஏணியில் ஏறித் தளத்தை அடைந்து தனது அறையை நோக்கிச் சென்றாள்.

அப்படி அவள் சென்ற சமயத்தில் உபதலைவன் அறை யிலிருந்து வெளியே வந்த மிஸ் எமிலி அவளை உற்று நோக்கினாள். மஞ்சுவின் துவண்ட இடை, தளர்ந்த நடை, நெகிழ்ந்த ஆடை மூன்றும் முதலிரவின் கதையைச் சந்தேகமற நர்ஸுக்கு உணர்த்தி விட்டதால் அவள் முகத்தில் சற்றே துயரத்தின் ரேகை படர்ந்தது. அத்துடன் மஞ்சு நடந்து சென்ற பாதையில் இருந்த ஒரு விளக்கின் ஒளி அவள் கழுத்தில் படவே கழுத்திலிருந்த மஞ்சள் கயிறு எமிலியின் கண்களுக்குப் புலனாகவே அவள் விஷயத்தைப் பூராவும் புரிந்து கொண்டு சிறிது பெருமூச்சும் எறிந்தாள். பிறகு அழைத்தாள் மஞ்சுவை, ''அம்மா!'' என்று.

மஞ்சுவின் நினைப்பெல்லாம் முந்திய இரவின் நிகழ்ச்சிகளிலிருந்ததால் அவள் காதில் அந்த அழைப்பு விழாத காரணத்தால், அவள் பதிலேதும் சொல்லாமலே நடந்தாள். அதைக் கண்ட எமிலி சற்று அழுத்தமாகவே அழைத்தாள், ''அம்மா!'' என்று.

தனது அறையை அணுகிக் கொண்டிருந்த மஞ்சு சற்று நின்று திரும்பிப் பார்த்தாள் எமிலியை. ''ஏன் எமிலி?'' என்று வினவினாள் மேலுக்கு சாதாரணமாக. ஆனால் அவள் உள்ளே சற்று பயம் இருந்தது; பயம் எதற்காக என்று அவளுக்கே புரியவில்லை.

எத்தனை சாதாரணமாக அவள் பதில் கூறினாலும் குரலில் லேசாகத் தொனித்த பயத்தை நொடிப் பொழுதில் உணர்ந்தாள் எமிலி. அந்தப் பயத்தின் காரணம் அவளுக்கு ஏற்கனவே தெரிந்திருந்ததால் அதைத் தான் அறிந்து கொண்டதாக வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''இன்னும் பொழுது விடியவில்லையே அம்மா'' என்றாள்.

''ஆம். ஆம். விடியவில்லை'' என்றாள் மஞ்சு.

''இந்த அகாலத்தில் தன்னந்தனியாகவா படகில் வந்தீர்கள்?'' என்று வினவிய எமிலி மஞ்சுவை நெருங்கி வந்தாள்.

அவள் நெருங்கிவருவதைக் கண்ட மஞ்சுவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. தவிர, பயமும் அதிகமாயிற்று. அவள் ஏதாவது கண்டுபிடித்து விட்டால் என்ன செய்வதென்று திகில் பட்டாள் மஞ்சு. 'என்ன கண்டு பிடித்து விடுவாள்? இவளிடம் எதற்காக நான் பயப்பட வேண்டும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண் டாலும் தைரியம் உள்ளத்தில் பிறக்கவில்லை. திருட்டுக் கல்யாணத்துக்கும் பல பேரறியப் பெரியவர்கள் நடத்திக் கொடுக்கும் நல்ல திருமணத்துக்கும் உள்ள வித்தியாசம் அவளுக்கு இப்பொழுது புரிந்தது. ஆனால் 'இது எப்படித் திருட்டுக் கல்யாணமாகும்! குலாபியின் அனுமதியுடன் நடந்தது, குலாபியின் மஞ்சள் கயிறும் கழுத்திலிருக் கிறதே!' என்று எண்ணினாள் அவள். இருப்பினும் அவள் மனத்தில் விவரிக்க இயலாத பயம் இருந்ததால் எமிலியை நோக்கி, ''என்ன கேட்டாய் எமிலி?'' என்று வினவினாள்.

''இந்த அகாலத்தில் தன்னந்தனியாகவா படகில் வந்தீர்கள் என்று கேட்டேன்'' என்று எமிலி முகத்தில் பொய்யான அச்சத்தைப் படரவிட்டுக் கொண்டாள்.

''ஆம் எமிலி! தனியாகத்தான் வந்தேன். வந்தா லென்ன?'' என்று வினவினாள் மஞ்சு, அசட்டுத் தைரியத்தை முகத்தில் பரப்பிக்கொண்டு.

''என்ன அப்படிக் கேட்கிறீர்கள் தலைவி? இந்த நேரத்தில் பெண்கள் இப்படி வருவது விரும்பத் தக்கதல்ல. ஆமாம், உங்களோடு உபதலைவர் வந்தாரல்லவா?'' என்று கேட்டாள் எமிலி கோபத்துடன்.

''ஆம்.'' உரமில்லாத குரலில் எழுந்தது பதில், மஞ்சு விடமிருந்து.

''அவர் எங்கே?''

''அவர்... அவர்... எனக்கெப்படித் தெரியும்?''

''உங்களுடன்தானே வந்தார்?''

''ஆமாம் வந்தார், கொலாபா கோட்டையில் பிரிந்து விட்டார்.''

இதைக் கேட்ட எமிலி நகைத்தாள். ''பிரிந்து விட்டாரா. உங்களை விட்டா?'' என்று வினவினாள் விஷமத்துடன்.

மஞ்சுவுக்குக் கோபம் துளிர்த்தது உள்ளத்தில். துருவித் துருவி என்னைக் கேட்க இவள் யார் என்று எண்ணினாள். இருப்பினும் அதைக் கேட்க முடியாமல், ''ஏன் என்னை விட்டுப் பிரிந்து விட்டாலென்ன?'' என்று வினவினாள்.

மிஸ் எமிலியின் கண்கள் மஞ்சுவை நன்றாக அளவெடுத்தன. ''பிரியலாம். ஆனால் பிரிந்ததாகத் தெரிய வில்லை'' என்றாள் மெல்ல அவளை நெருங்கி, அவள் தோள்மேல் கையை வைத்து.

மஞ்சுவின் விழிகள் நெருப்பைக் கக்கின. ''எப்படித் தெரியும் உனக்கு?'' என்று கேட்டாள் குரலிலும் சினம் தெறிக்க.

பதிலுக்கு மிகுந்த துணிவைக் காட்டினாள் எமிலி. ''மஞ்சு!'' என்று பெயர் சொல்லியே அழைத்து, ''பின்னிய

கூந்தலை அவிழ்த்துக் கட்டியிருக்கிறாய்?'' என்று கூறி வாசகத்தை முடிக்காமல் விட்டாள்.

''அதனாலென்ன; தலை சிறிது கலைந்து சிக்கி விட்டது'' என்று மஞ்சு பதில் சொன்னாள்.

மிஸ் எமிலி லேசாக நகைத்தாள். ''அப்படித்தான் கலையும் மஞ்சு. அது மட்டுமல்ல, சேலையும் கலைந்திருக் கிறது. போய்ச் சரியாகக் கட்டிக்கொள்'' என்று கூறிவிட்டு மறுபடியும உபதலைவன் அறையை நோக்கி நடந்தாள். மஞ்சு அவள் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றாள் சில விநாடிகள். அவள் அப்படி நிற்பதைப் பார்த்துவிட்ட பர்னாண்டோ அவளை நாடி வந்து, ''ஏதாவது தேவையா தலைவி?'' என்று வினவினான்.

''ஆம்.''

''கட்டளையிடுங்கள்.''

''உன் வேலையைப் போய்க் கவனி.''

''உங்களுக்கு ஏதோ தேவையென்று சொன்னீர்களே?''

''சொன்னேன்.''

''என்ன தேவை?''

''ஓய்வு'' என்று எரிந்து விழுந்த மஞ்சு, தனது அறைக்குள் சென்று கதவைத் தடாலென்று அவன் முகத்தில் சாத்தினாள். அவள் போக்குப் பெரும் புதிராயிருந்தது பர்னாண்டோவுக்கு. எதற்காகத் தன்மீது அவள் எரிந்து விழுந்தாளென்பது புரியாததால் குழப்பத்துடன் திரும்பத் தானிருக்க வேண்டிய இடத்துக்குச் சென்றான்.

அறைக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்ட மஞ்சு தடாலென்று பஞ்சணையில் விழுந்தாள். மிக மிருதுவா யிருந்த பஞ்சணையில் அத்தனை இன்பமில்லாததைக் கவனித்தாள். முரடான அந்த மலைப் பாறையிலேயே சாய்ந்திருந்ததை உணர்ந்து சிரித்துக்கொண்டாள் உள்ளூர. தன்னுடைய மாறிய நிலையை நினைத்து ஒரு வழியில்

பெருமிதமும் இன்னொரு விதத்தில் பயமும் கொண்டான். தன்னைப்பற்றி ஏற்பட்டது பெருமிதம், உலகத்தைப்பற்றி ஏற்பட்டது பயம் என்பதையும் புரிந்து கொண்டான். 'இதென்ன உலகம்! என்னையே பயமுறுத்தும் உலகம்!' என்றும் அலுத்துக் கொண்டாள்.

ஆனால் அதே சமயத்தில் பாறையில் கண் விழித்துக் கொண்ட இயதசந்திரன் மனத்தில் அத்தகைய அலுப்பு ஏதுமில்லை. உலகத்தின் முறையில் இன்பத்தையே கண்டான். அவன் உள்ளத்தில் ஆனந்தத்தின் பூர்த்தி இருந்தது. புது அனுபவத்தின் சந்துஷ்டி இருந்தது. அதில் ஆனந்தத்தின் பூர்த்தியிருந்தாலும், அனுபவத்தின் பூர்த்தி ஆரம்பத்தில் ஏற்படுவதில்லையென்பதையும் நாளா வட்டத்தில்தான் அது ஏற்படுமென்பதையும் உணர்ந்து கொண்டான். இருப்பினும் சந்துஷ்டியையும் இஷ்ட பூர்த்தியையும் அளித்த பவானியை மனத்தால் வணங்கினான். பிறகு திரும்பி மஞ்சுவைத் தேடினான். அவள் காணாததைக் கண்டு ஒருகணம் திகைத்தான், மறுகணம் புன்முறுவல் கொண்டான். பின் தூங்கி முன்னெழுவது கற்புடைய மகளின் ஒழுக்கு என்ற தமிழகப் பழமொழியை நினைத்து, ''எனக்கேற்ற மனைவி இவள்'' என்று ஒருமுறை சொல்லிக் கொண்டான். அதைச் சொல்லிக் கொள்வதிலேயே அவனுக்கு இன்பமிருந்தது.

அந்த இன்பத்துடன் எழுந்திருந்து பாறையில் அங்குமிங்குமாக நடந்தான். பிறகு தோர்லாவாடாவை நோக்கிச் சென்று அதன் படிகளில் ஏறி, தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த தனியறைக்குச் சென்று படுத்துக் கொண்டான்.

படுத்த பின்பு தூக்கம் வரவில்லையென்றாலும் வலுக்கட்டாயமாகக் கண்களை மூடிக் கொண்டிருந்தான். கண்களை மூடிவிட்டதால் ஒரு மனிதனுக்குச் சாந்தி கிடைப்பதில்லையென்பதை அன்று அவன் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.

கண்களை மூடியதும் அவன் கண்கள் முன்பு மஞ்சு எழுந்தாள். மெல்லப் புன்முறுவல் கோட்டினாள். அவன் கைகளில் சுழன்றாள். 'அப்பப்பா! அந்தக் கூந்தல்தான் எத்தனை வாசனை! பச்சைக் கற்பூர வாசனையுடன் கூடிய குலாபியின் அந்த மஞ்சள் கயிற்றின் நறுமணம் எத்தனை மயக்கம் தருகிறது! ஆம். எதற்காக மஞ்சு எனக்கு மூதுகையே காட்டி நிற்கிறாள்? அவள் வெண்மைக் கழுத்தை நான் பார்க்கவா? அல்லது கைகளைப் பிடித்து நான் திருப்பவா? இப்படித் திரும்பு மஞ்சு' என்று இப்படியெல்லாம் நடந்தது நாடகம் அவன் சித்தத்தில். வேறு பல நிகழ்ச்சிகளும் எழுந்தன. அவன் அனுபவம் அது, சொல்லுக்கு அப்பாற்பட்டது, எழுத்துக்கு ஒவ்வாதது.

இப்படி நினைத்து நினைத்து நன்றாக விடியும்வரை காலங் கழித்த தமிழக வீரன் கடற்கரை சென்று நீராட்டத்தை முடித்துக்கொண்டு தோர்லாவாடா திரும்பினான். தனது உடையை அணிந்து சிற்றுண்டியும் அருந்தினான். அவன் சிற்றுண்டி அருந்தி முடிப்பதற்கும் கனோஜியிடமிருந்து அழைப்பு வருவதற்கும் நேரம் சரியாயிருந்தது. ''உபதளபதி! வரலாமா?'' என்று கேட்டு, பதிலுக்குக் காத்திராமல் உள்ளே நுழைந்த வீரனொருவன், ''ஸார்கேல் தங்களை உடனே பார்க்க விரும்புகிறார். முழு ராணுவ உடையணிந்து வரும்படி உத்தரவு'' என்று கூறினான்.

''ஸார்கேல் எங்கிருக்கிறார்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''மந்திராலோசனை அறையில்.''

''வேறு யார் வந்திருக்கிறார்கள்?''

''தெரியாது. அறை சாத்தியிருக்கிறது. கதவைப் பாதி திறந்து கனோஜி அறிவித்தார் உத்தரவை.''

வீரன் பதிலிலிருந்து ஏதோ முக்கியமான தகவல் தளபதிக்கு எட்டியிருக்கிறதென்பதைப் புரிந்துகொண்ட இதயசந்திரன் மேற்கொண்டு ஏதும் பேசாமல் வீரனை

அனுப்பிவிட்டு, துரிதமாக ராணுவ உடை அணிந்து புறப்பட்டான். ஸார்கேலின் மந்திராலோசனை அறையில் அவனுக்குப் பெருவியப்பு காத்திருந்தது. கனோஜியின் புதல்வர்களும் மாபெரும் கடல் வீரர்களுமான சேகோஜி, மானாஜி இவர்களைத் தவிர நாலைந்து உபதலைவர்களும் அறையிலிருந்தார்கள். இவர்களைத் தவிர, அறவே ராணுவ உடையணியாத வெள்ளைக்காரர் ஒருவரும் அங்கிருந்தார்.

இதயசந்திரன் உள்ளே நுழைந்ததும பெரிய மேஜையின் நடுவில் அமர்ந்திருந்த ஸார்கேல், இதயசந்திரனைச் சுட்டிக் காட்டி, ''என் தரைப்படையின் உபதலைவர் இதயசந்திரன்,'' என்று வெள்ளைக்காரருக்கு அறிமுகப் படுத்தினார். ''இவர்தான் கவர்னர் ஏஸ்லாபியின் தூதர்,'' என்று வெள்ளைக்காரரையும் சுட்டிக்காட்டினார் ஸார்கேல். அடுத்து மேற்கொண்டு ஏதும் பேசாமல், ''உங்கள் நிபந்தனைகளைச் சொல்லுங்கள்'' என்ற ஸார்கேல் பக்கத்தில் நின்றிருந்த பரஸ்னிஸை* நோக்கி, ''அவர் சொல்வதை மொழி பெயர்த்துச் சொல்'' என்றார்.

கவர்னரின் தூதர் தமது தோல் கச்சையிலிருந்து கவர்னரின் கடிதத்தை எடுத்து பரஸ்னிஸிடம் கொடுத்து, ''நீங்களே படித்து மொழிபெயர்த்துச் சொல்லுங்கள்'' என்று ஆங்கிலத்தில் கூறினார்.

பரஸ்னிஸ் மொழி பெயர்த்தார். அந்த மொழி பெயர்ப்பைக் கேட்கக் கேட்க ஸார்கேலின் முகம் கறுத்தது. அந்தத் தூதுச் செய்தியில் சில இடங்கள்தான் இதயசந்திரன் காதில் விழுந்தன. மீதி இடங்களை முந்திய இரவு நிகழ்ச்சிகள் ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. ஆகவே,

---

* துவிபாஷிகர், மொழி பெயர்ப்பாளர். பரஸ்னிஸின் பணியைப் பற்றி இக்கதையின் முதல் பகுதியில் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தூதுச் செய்தியைப் படித்து முடிந்ததும், ''இதயசந்திரா! இது என்ன?'' என்று எதற்கும் சிற்றத்தைக் காட்டாத ஸார்கேல் சிற்றத்தைக் காட்டினார்.

திடீரென்று முந்திய நாளிரவுக் கனவுகளிலிருந்து விழித்துக் கொண்ட இதயசந்திரன், ''ஏன்? என்ன?'' என்று வினவினான்.

''என்னவா?'' ஸார்கேல் குரலில் ஆத்திரமிருந்தது.

''என்ன?'' என்றான் மீண்டும் இதயசந்திரன் குழப்பத்துடன்.

''நீ எங்கிருக்கிறாய் இதயசந்திரா?'' என்று வினவினார் ஸார்கேல்.

''இங்குதாவிருக்கிறேன்'' என்று சமாளித்துச் சரியாக எழுந்து உட்கார்ந்த இதயசந்திரன், ''இன்னொரு முறை நிபந்தனைகளைப் படிக்கச் சொல்லுங்கள்'' என்றான்.

கனோஜி கண்காட்ட பரஸ்னிஸ் நிபந்தனைகளைப் படித்தார். நிபந்தனைகள் மிகக் கடுமையாயிருந்தன. ஆயுதசப்ளை செய்யவும் மாலுமிகளைப் பம்பாயில் திரட்டவும் ஏஸ்லாபி அனுமதி கொடுத்திருந்தாலும் கப்பல் போக்குவரத்து சம்பந்தமான நிபந்தனைகள் மிகக் கடுமையாயிருந்தன. ஏற்கனவே பிடிக்கப்பட்ட பிரிட்டிஷ் கப்பல்களுக்கும், பொருள்களுக்கும்கூட நஷ்ட ஈடு கேட்டிருந்தார் கவர்னர்.

இதயசந்திரன் அந்த நிபந்தனைகளைப்பற்றிச் சிந்தித்து விட்டு கவர்னரின் தூதுவரை நோக்கி அரைகுறை ஆங்கிலத்தில் கேட்டான், ''இந்தக் கடிதம் வருவது மிஸ்டர் ப்ரௌனுக்குத் தெரியுமா?'' என்று.

''தெரியும். கவுன்ஸிலில் வைத்துத் தீர்மானிக்கப் பட்டது'' என்றார் தூதர்.

''இந்தக் கடிதத்தில் இல்லாத செய்தி ஏதாவது உண்டா கவர்னரிடமிருந்து?'' என்று வினவினான் இதய சந்திரன்.

''இதை ஒப்புக்கொள்ளும்படி உங்களிடம் சொல்லச் சொன்னார். காரணம் உங்களுக்குத் தெரியும் என்று கூறினார்'' என்று விளக்கினார் தூதர், முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல்.

''இதை ஒப்புக் கொள்ளலாம் ஸார்கேல்'' என்று கூறினான் இதயசந்திரன் ஆங்கரேயை நோக்கி.

ஆங்கரேயின் முகத்தில் விவரிக்க இயலாத ஏதோ ஒரு சிந்தனைச் சாயை படர்ந்தது. ''சரி, ஒப்புக் கொள்வோம்'' என்ற அவர் குரலில் உறுதியிருந்தது.

அவர் முடிவு அறிவிக்கப்பட்டதும் கவர்னரின் தூதர் அந்த அறையைவிட்டு வெளியே சென்றார். தமது புதல்வர்களுக்கும் பரஸ்னிஸுக்கும் போக அனுமதி கொடுத்த கனோஜி, கவர்னரின் கடிதத்தை மேஜைமீது வைத்து அது காற்றில் பறக்காதிருக்கத் தமது குறுவாளை அதன் நடுவில் செங்குத்தாகக் குத்தி வைத்தார். கடைசியாக இருவரும் தனிமையிலிருந்தபோது கனோஜி ஆங்கரே இதய சந்திரனை நோக்கிக் கேட்டார், ''உடல்நிலை சரியாயில்லையா உனக்கு'' என்று.

''சரியாயிருக்கிறது'' என்றான் இதயசந்திரன்.

''மனநிலை?''

''ஏன்? அதற்கென்ன?''

''அது சரியில்லை.''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

இதற்குப் பதில் கூறவில்லை கனோஜி பல விநாடிகள். கடைசியாக ஒரு கேள்வி கேட்டார்: ''நேற்றிரவு நீ எங்கிருந்தாய்?'' என்று.

அத்தியாயம் 16

மத்தளம்

மந்திராலோசனையில் கலந்து கொண்ட மற்றவர்களனைவரையும் போகச் சொல்லிவிட்டு இதயசந்திரனும் தானும் மட்டும் தனித்திருந்த சமயத்தில், ''நேற்றிரவு எங்கிருந்தாய்'' என்று கனோஜி திடுதிப்பென வினவியதால் பேரதிர்ச்சியடைந்த இதயசந்திரன், நீண்ட நேரம் அவர் கண்களைச் சந்திக்காமலும் பதிலேதும் சொல்லாமலும் மௌனம் சாதித்தான். பிறகு ஏதோ செய்ய வேண்டுமென்பதற்காக கவர்னர் தூதுவர் கடிதத்தின்மீது செங்குத்தாக இருந்த கனோஜியின் கத்தியைப் பிடித்து ஆட்டினான். கடைசியாகச் சொன்னான், ''இங்குதான் இருந்தேன்'' என்று.

கனோஜி மீண்டும் வினவினார், ''இங்கு என்றால்?'' என்று.

''இங்குதான் கொலாபாவில்'' என்று கூறினான் இதய சந்திரன் அவரை ஏறெடுத்துப் பார்க்காமலே.

கனோஜியின் கண்கள் அவனைக் கூர்ந்து நோக்கின. ''தோர்லாவாடாவுக்கு நீ வரவில்லை. உன் அறையில் இல்லை'' என்று சுட்டிக் காட்டினார் கனோஜி.

''இல்லை.''

''வேறெங்கு இருந்தாய்?''

''வெளியில் படுத்திருந்தேன்.''

''வெளியிலென்றால்?''

''மலைப்பாறையில்.''

''மலைப்பாறையில் படுக்க வேண்டிய அவசியமென்ன?''

''வெப்பம் அதிகம். வெளியிடம் இதமாயிருந்தது. கடற்காற்று சுகமாயிருந்தது.''

கனோஜி பதில் சொல்லவில்லை நீண்ட நேரம். பிறகு பதில் கூறியபோது அதில் சற்றுக் கடுமையிருந்தது, ''ஒரு வகையில் அவளும் கடற் காற்றுத்தான்'' என்றார் கனோஜி.

இதயசந்திரன் திடுக்குற்று அவரை நோக்கினான். ''நீங்கள் சொல்வது...'' என்று ஏதோ குழறினான்.

கனோஜியின் இதழ்கள் இகழ்ச்சியால் மடிந்தன. அவரது பெருமீசையின் அசைவிலும் ஒரு வெறுப்பு இருந்தது. ''நேற்றிரவு நீயும் மஞ்சுவும் ஜலதீபத்தை விட்டுக் கொலாபாவுக்கு வந்திருக்கிறீர்கள், குலாபி மாதாவின் கோவிலுக்குப் போயிருக்கிறீர்கள், இன்று காலை நீ மட்டும் தோர்லாவாடாவில் உன் அறையிலிருக்கிறாய்'' என்ற கனோஜி ஆங்கரேயின் சொற்களிலும் இகழ்ச்சி ஒலித்தது பலமாக. மேலும் கனோஜி கூறினார்: ''என் வளர்ப்பு மகளை நீ ஏற்றுக் கொள்வதுபற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஜலதீபத்திலுள்ள மஞ்சுவிடம் போகும்படி உன்னை நானே அனுப்பியிருக்கிறேன். மஞ்சு உன்னிடம் உயிரை வைத்திருக்கிறாள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே உங்கள் உறவுக்கு நான் குறுக்கே நிற்க வில்லை. ஆனால் உன்னிடம் இந்த விஷயங்களில் ஒரு கோழைத்தனத்தையும், அச்சத்தையும் பார்க்கிறேன். ஒருத்தியை மணக்க வேண்டுமென்றால் பகிரங்கமாக மணக்கலாம்.''

கனோஜியின் சொற்களைக் கேட்டதால் உணர்ச்சி யால் தூண்டப்பட்ட இதயசந்திரன், ''ஸார்கேல்! நீங்கள் தானே திருமணத்திற்கு ஆட்சேபித்தீர்கள் முன்பு?'' என்று கேட்டான்.

''நிரந்தரமாக ஆட்சேபிக்கவில்லை. அந்தச் சமயத்தில் திருமணத்துக்கு ஆட்சேபித்தேன். நீ விஜயதுர்க்கத்துக்கு போர்கள் லேசாகத்

தலை காட்டின. போர்க் குறிகளும் இருந்தன எங்கும். திட்டமான நிலைமை உருவாகவில்லை. அந்தச் சமயத்தில் நல்ல தலைவன் ஒருவன் பாதுகாப்பில் காதரைனை அனுப்ப வேண்டியிருந்தது. அதற்குத் தகுந்தவன் நீதானென்று முடிவு செய்தேன். ஆகவே, திருமணத்தை நடத்த அப்பொழுது முடியவில்லை. இன்றைய நிலை வேறு. போர் மகாராஷ்டிரத்தில் மூண்டு விட்டது. இன்னும் பதினைந்து நாட்களில் நமது படைகள் அலிபாக்கிலிருந்து நகரும். இப்பொழுது மஞ்சுவின் அனுமதி யோடு நீ போர்க்களம் போவதுதான் முறை'' என்ற கனோஜி ஆங்கரே, ''சரி சரி. அது சிறிய விஷயம். கொங்கணியிலுள்ள லட்சக்கணக்கான மக்களில் இரண்டு ஆத்மாக்களைப் பற்றியது. இனி நாம் தூது விஷயத்தைக் கவனிப்போம்'' என்றார்.

அதைச் சொன்னதோடு மட்டுமில்லாமல், ''கவர்னரின் பதிலைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவி, தமது பெரும் விழிகளைக் கவர்னர் கடிதத்தின்மீது நிலைக்க விட்டார்.

இதயசந்திரனுக்குக் கனோஜியின் போக்குப் பெரும் புதிராயிருந்தது. மகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு, முந்திய இரவு நடந்ததை ஊகித்துவிட்டு, சிறிதும் கொந்தளிப்பின்றிக் கவர்னர் தூது விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டதைக் கண்ட இதயசந்திரன், 'இவர் மனிதர்தானா? தன் மகளுடன் உறவாடிய ஒருவன் எதிரே உட்கார்ந்திருக்கிறான். அவனை வெட்டிப் போடா மலிருப்பதே விந்தை. அந்த விஷயத்தைச் சாதாரண விஷயமாக உதறிவிட்டுப் போர் விவகாரங்களில் இறங்கும் இவருக்கு இதயம் என்று ஒன்று உண்டா?' என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அவன் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட ஆங்கரே சொன்னார், ''தமிழா! உனக்கும் மஞ்சு வுக்கும் உள்ள ஆசாபாசங்கள், உறவு முறைகள்,

இன்றுள்ள கொங்கணியின் போர் நிலையில் கவனிக்கத் தகாதவை. இன்று நான் இந்தக் கொலாபாவிலிருந்து கொண்டு சிந்திப்பது உங்கள் இருவரை மட்டுமல்ல; மகாராஷ்டிர சாம்ராஜ்யம், குஜராத்திகளும், மகாராஷ்டிரர்களும் கொங்கணிகளும் கோளிகளும் கொண்ட பெரும் ஜனசமூகம். அதைத் தவிர, சதா நசுக்கப்பட்டு வரும் ஹிந்து சமுதாயம். அந்தப் பெரும் கூட்டத்தில் நீங்கள் சிறு துரும்புகள். மஞ்சுவிடம் எனக்குள்ள ஆசையும் அன்பும் அதிகம். ஆனால் மகாராஷ்டிர சமுதாய ஆசைக்கு அந்த ஆசையும் அன்பும் அடங்கியவைதான்'' என்று அத்துடன் அப்பேச்சை நிறுத்திவிட்டு, ''கவர்னர் நிபந்தனைகளைப் பற்றிக் கேட்டேன் உன்னை'' என்று மறுபடியும் பழைய விஷயத்திற்கு வந்தார்.

இதயசந்திரன் நீண்ட நேரம் சிந்தித்துவிட்டு, ''ஸார்கேல்! நிபந்தனைகள் கடினம். சந்தேகமில்லை'' என்றான்.

''இதுவரை எங்களிடமிருந்து கைப்பற்றிய அனைத்தையும் திருப்பித் தரவேண்டும் என்று கவர்னர் கேட்கிறார்'' என்றார் கனோஜி.

''ஆம். அதுதான் ஆரம்ப நிபந்தனை'' என்று ஒப்புக் கொண்டான் இதயசந்திரன்.

''ஆரம்பத்திலிருந்து கைப்பற்றியதையெல்லாம் திருப்பிக் கொடுக்க முடியுமா?'' என்று வினவினார் ஆங்கரே.

''முடியாது. எங்கிருக்கிறது நம்மிடம்? அல்வப் பொழுது பொருள்களை விற்று விடுகிறோம்'' என்று தெரிவித்தான் இதயசந்திரன்.

''இதயசந்திரா! இரண்டாவது நிபந்தனை என்ன தெரியுமா?''

''தெரியும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரிட்டிஷ் கப்பல்களைத் தடை செய்யக்கூடாது. பிடிக்கக்

கூடாது. தவிர, சென்னை, வங்காளம் முதலிய இடங்களிலுள்ள பிரிட்டிஷ் தொழிற்சாலைகளின் சார்பாக பிரிட்டிஷார் அதிகாரத்துக்கு உட்பட்டு இயங்கும் எந்தக் கப்பலையும் தொடக்கூடாது.''

''அதாவது பிரிட்டிஷ் கொடி போட்ட அல்லது பிரிட்டிஷ் ஆதரவு பெற்றதென்று சொல்லிக்கொள்ளும் எந்தக் கப்பலையும் நாம் தொட முடியாது.''

''ஆம்.''

''ஸித்திகளோ, போர்ச்சுகீஸியரோ பிரிட்டிஷ் கொடியுடன் கப்பல்களை நடத்தினாலும் நாம் அணுகக் கூடாது.''

''ஆம்.''

கனோஜி மெல்ல நகைத்தார். ''சரி, மூன்றாவது நிபந்தனையைப் பார். மாஹிமுக்கும் காண்டேரிக்கு மிடையிலுள்ள கடற்பகுதியில் எந்த நாட்டுக் கப்பல் வந்தாலும் அதையும் நாம் தொடக் கூடாதாம்'' என்றார் நகைப்பின் ஊடே.

''அப்படித்தான் கூறுகிறது தூது வாசகம்'' என்று ஒப்புக்கொண்டான் தமிழன்.

''நான்காவது நிபந்தனையில் கவர்னர் கூறுவது மிகவும் விசித்திரம். அவர்களுடைய கப்பல்களுக்குப் பாதுகாப்பளிக்க நமது கடற்படை இயங்கவேண்டுமாம். நமது அதிகாரத்துக்குட்பட்ட துறைமுக நகரங்களில் அவர்கள் தாராளமாக வர்த்தகம் செய்ய அனுமதி தேவையாம்.''

''ஆனால் அதற்குத் தக்க சுங்கத்தைக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள்.''

''அந்தச் சுங்கப்பணம் எதற்கு? நாம் பிடிக்கக்கூடிய கப்பல்களில் கிடைக்கும் செல்வத்தில் ஆயிரத்திலொரு பங்கு சுங்க வரியில் கிடைக்காது'' என்று சுட்டிக்காட்டிய ஆங்கரே, ''ஐந்தாவது ஆறாவது நிபந்தனைகளின்படி நமக்கு ஆயுத வசதி கொடுக்கவும், மாலுமிகளைத் திரட்

வும், பம்பாய் துறைமுகத்தைக் கட்டணம் ஏதுமின்றி நமது கப்பல்கள் உபயோகப்படுத்திக் கொள்ளவும் கவர்னர் அனுமதிக்கிறாராம்'' என்று கூறி, இடிஇடியென நகைத்து, மேஜைமீது குத்தி நின்ற கத்தியைப் பிடுங்கி கவர்னர் காகிதத்தை நாலைந்தாகக் கிழித்தெறிந்தார். பிறகு ஆசனத்திலிருந்து எழுந்துவிட்ட ஆங்கரே, இதய சந்திரனை நோக்கி, ''இதயசந்திரா! நமக்கு அனுப்பப் பட்டுள்ளது தூதுக் கடிதமல்ல. நமக்காகச் சிருஷ்டிக்கப் பட்ட அடிமைச் சாஸனம்'' என்று கூறினார்.

இதயசந்திரனும் ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து கூறினான், ''ஸார்கேல், இந்த நிபந்தனைகளைக் கவர்னர் விதிக்கவில்லை'' என்று.

''பின் யார் விதித்தது?'' என்று வினவினார் ஸார்கேல்.

''பம்பாய் கௌன்ஸில்'' என்றான் இதயசந்திரன். ''அப்படிச் சொல்வதைவிட மிஸ்டர் ப்ரௌன் என்று கூறுவது பொருந்தும்'' என்றும் கூட்டினான் சொற்களை.

''யார் அந்தப் ப்ரௌன்? கவர்னரின் காரியதரிசி என்று சொன்னாயே அவனா?''

''ஆம்.''

''காரியதரிசிக்குக் கவர்னரைவிட அத்தனை அதிகாரமா?''

''மிஸ்டர் ப்ரௌன் காரியதரிசி மட்டுமல்ல. பெரிய சூழ்ச்சிக்காரன். கவர்னருக்கு எதிராக அடிக்கடி இங்கிலாந்துக்குக் கடிதங்களும் அனுப்பி வருவதாகச் சொல்கிறார்கள்.''

''அப்படியானால் மிஸ்டர் ப்ரௌன் வைத்ததுதான் சட்டம், கவர்னர் ஏஸ்லாபி வெறும் பதுமைதான்...''

''இல்லை, இல்லை. கவர்னர் மிக உறுதி உள்ளவர் கண்ணியமானவர். ஆனால் கௌன்ஸிலின் தீர்மானத்தை அவர் நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. மிஸ்டர் ப்ரௌன் தன் சாமர்த்தியத்தால் கௌன்ஸிலைத் தன்னிஷ்டப்படி திருப்பியிருப்பான். ஆனால் கவர்னர் வாய் வார்த்தையாகச் சொல்லியிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்'' என்று கூறினான் இதயசந்திரன்.

''நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளும்படி வாய் வார்த்தையாகக் கவர்னர் சொல்லியனுப்பியதையா?'' என்று கேட்டார் கனோஜி.

''ஆம். கவர்னர் அனாவசியமாக வார்த்தைகளை உதிர்ப்பவரல்ல'' என்று சுட்டிக் காட்டினான் இதயசந்திரன்.

''அப்படித்தான் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டுவிட்டேன்'' என்ற ஆங்கரே சிறிது சிந்தித்துவிட்டு, ''தமிழா! நான் ஒப்புக்கொண்டு விட்டதற்குக் கவர்னரின் கண்ணியம் மட்டும் காரணமல்ல'' என்றார், பொருள் மிகுந்த பார்வையொன்றை அவன்மீது வீசி.

''புரிகிறது'' என்றான் இதயசந்திரன்.

''என்ன புரிகிறது தமிழா?'' என்று வினவினார் ஆங்கரே அவன்மீது நிலைக்கவிட்ட கண்களை அகற்றாமலே.

''உங்களுக்குத் தற்சமயம் கடல்பகுதியில் அமைதி வேண்டும். இதை முன்பே கூறியிருக்கிறீர்கள்'' என்ற இதயசந்திரனை திடீரென அணுகிய ஆங்கரே, அவன் முதுகில் தட்டிக்கொடுக்கும் பாவனையில் ஒரு பேயறையாக அறைந்து, ''பலே!'' என்றும் கூவினார். ''ஆம் தமிழா! தரையில் பெரும் போர் துவங்க இருக்கும் தருவாயில் கடலிலும் நாம் போரை வைத்துக்கொள்ள முடியாது. கடற்பகுதியில் பாதுகாப்பு முறைகளை மாத்திரம் கையாளுவோம். காண்டேரி, கொலாபா, விஜயதுர்க்கம் முதலிய கேந்திர ஸ்தானங்களில் நமது கடற்படை அளவுடன் பிரிந்து நிற்கும். கோட்டைகளில் பலமான பீரங்கிகளும் அவசியமான அளவுக்கு வீரர் பிரிவுகளும் இருக்கும். நிலத்தில் நாம் முன்னேறுவோம்.

இல்லாவிட்டால்...'' என்று சொல்லிக்கொண்டு போன கனோஜியை இடைமறித்த இதயசந்திரன், ''மத்தள மாவோம்'' என்றான்.

''மத்தளமாவோமா?'' என்றார் ஆங்கரே, அவன்மீது வியப்புத் ததும்பும் விழிகளைத் திருப்பி.

''ஆம், மத்தளத்துக்கு இரு பக்கங்களிலும் இடி யென்று தமிழ்ப் பழமொழி உண்டு'' என்றான் இதயசந்திரன்.

இதைக் கேட்ட கனோஜி பலமாக நகைத்தார். ''பேஷ் பேஷ்! மத்தளத்துக்கு இரு புறமும் இடி. நாம் மத்தளமா னால் நீரிலும் இடி. நிலத்திலும் இடி. அப்பா! தமிழர்கள் எத்தகைய பழமொழிகளைச் சிருஷ்டித்திருக்கிறார்கள்!'' என்று சிலாகித்தார் நகைப்புக்கிடையே. அத்துடன் சொன்னார், ''தமிழா! கடலில் இடிபடாதிருக்க ஏஸ்லாபி யின் நிபந்தனைகளை ஏற்போம். நிலத்தில் நாம் இடிபட மாட்டோம். ஏனென்றால் இடிக்கப்போவது நாம். இன்னும் பதினைந்தே நாட்கள், நமது படைகள் நகரும்'' என்று.

''பதினைந்து நாட்கள் எதற்கு?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''சற்றுப் படைகளை மாற்றியமைக்க. அடுத்தபடி எதிரிக்கு இடங்கொடுக்க'' என்றார் ஸார்கேல்.

இதயசந்திரன் வியப்பு எல்லையை எட்டியது. ''எதிரிக்கு இடங்கொடுப்பதா!'' என்று வினவினான் வியப்புக் குரலில் ஒலிக்க.

''ஆம் எனக்கு பாஹிராவ் பிங்களே நெருங்கிய நண்பர்...''

''அதற்காக!''

''அவர் நன்றாகக் கொங்கணியின் எல்லைக்குள் வரட்டும்?''

''வந்ததும்...''

வந்ததும் செய்வதென்ன என்பதைப்பற்றி மிகத் துணிகரமான திட்டத்தை விவரித்தார் ஆங்கரே.

அத்தியாயம் 17

பழையன கழிதலும் புதியன புகுதலும்

மகாராஷ்டிர சாம்ராஜ்யாதிபதியான ஷாஹுவின் பேஷ்வா பாஹிராவ் பிங்களேயை முறியடிக்க ஸார்கேல் கனோஜி ஆங்கரே விவரித்த திட்டத்தைக் கேட்டதும் வியப்பால் வாயைப் பிளந்தான் இதயசந்திரன். திட்டம் துணிகரமாகவும் இருந்தது, தெளிவாகவும் இருந்தது, வெற்றி சந்தேகமில்லையென்பதை நிரூபிக்கும் வகையிலும் இருந்தது. ஸார்கேல் தமது திட்டத்தை விவரிக்கத் துவங்குமுன்பு ஒரு கேள்வியைப் போட்டுகொண்டு துவங்கினார். ''தமிழா! ஒரு சிங்கத்தைப் பிடிக்க நீ என்ன செய்வாய்?'' என்று வினவினார் ஆரம்பத்தில்.

''பெரும் வலையைத் தயார் செய்வேன்'' என்று பதில் கூறினான் இதயசந்திரன், அவர் கேள்வி அவர் விவரணத் துக்குப் பூர்வாங்கமென்பதை உணர்ந்து.

''பிறகு?'' என்று அடுத்த கேள்வி எழுந்தது ஸார்கேலிடமிருந்து.

சிங்கத்தைப் பிடிக்கும் வழிகள் சகலத்தையும் தான் சொல்லியாக வேண்டுமென்று புரிந்துகொண்ட தமிழக வீரன் விடுவிடுவென்று கூறினான்: ''வலையைச் சிங்கத்தின் கண்களுக்குப் புலப்படாமல் தரையில் விரிப்பேன். அதைத் திடீரென்று தூக்கும் கயிறுகளைப் பக்கப்புதர்களில் செலுத்தி மரக்கிளைகளில் கட்டுவேன். சிங்கம் வலைப் பகுதியில் கால் வைத்ததும் கயிறுகள் இழுக்கப்படும், வலை எழுந்து கண்மூடி கண் திறப்பதற்குள் சிங்கம் வலையில் சிக்கிவிடும்.''

பலே என்று அவன் விவரித்ததைக் கேட்டுச் சிலாகித்த கனோஜி ஆங்கரே, ''நமது திட்டமும் மகாராஜா விஷயத்

தில் அதுதான். ரகசியமான வலை தரையில் விரிக்கப்படும். அது விரிக்கப்பட்டிருப்பது தெரியாமலே பிங்களே அதன் எல்லைக்குள் நுழைந்து காலை வைக்கவேண்டும். பிறகு கயிறு இழுக்கப்படும்'' என்றார்.

தான் சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்வதில் என்ன பொருளிருக்கிறது என்று புரியவில்லை இதய சந்திரனுக்கு. ஆகவே கேட்டான், ''வலை எது? எப்படி மறைந்திருக்கும்? எப்படிக் கயிறுகள் இழுக்கப்படும்'' என்று.

கனோஜி ஆங்கரே தமது ஆசனத்தை விட்டுத் திடீரென எழுந்து ஓர் அலமாரியிலிருந்த பெரிய மகாராஷ்டிர நாட்டுப் படத்தை எடுத்து மேஜைமீது விரித்தார். ''இப்படி வா'' என்று இதயசந்திரனை அழைத்து, ''இதைப் பார்'' என்று கூறினார். இதயசந்திரன் தானிருந்த இடத்திலிருந்து எழுந்து மேஜையைச் சுற்றிச் சென்று ஸார்கேலின் பக்கத்தில் நின்றுகொண்டான். ஸார்கேல் அந்தப் படத்தில் தனது ஆள்காட்டி விரலால் சில இடங்களைத் தொட்டுக் காட்டினார். ''நாம் இருக்கிறோம். இங்கிருந்து ஸதாரா எங்கிருக்கிறது பார்'' என்றும் சொன்னார்.

இதயசந்திரன் நாட்டுப் படத்தை நன்றாக நோக்கினான். அவரது கைவிரல்கள் சென்ற இடங்களையும் கவனித்தான். அவர் கேட்ட கேள்விக்கும் பதில் சொன்னான்: ''கொலாபாவிலிருந்து நேர் தென்கிழக்கில் இருக்கிறது ஸதாரா'' என்று.

''ஸதாராவிலிருந்து பிங்களே கிளம்பிவிட்டதாகத் தெரிகிறது'' என்று மேலும் கூறிய கனோஜி, ''அவர் இந்த மார்க்கத்தில்தான் வரவேண்டும்'' என்று சொல்லி விரலால் அந்தப் பாதையையும் இழுத்துக் காட்டினார்.

''ஆம். அதுதான் வழி. வேறு வழியில்லையே'' என்றான் இதயசந்திரன்.

''வேறு வழி இருக்கிறது.''

''எங்கிருக்கிறது?''

''ஸதாராவிலிருந்து சுவர்ண துர்க்கம் வந்து மலை வழி வரலாம்.''

''அது கடினமாயிற்றே.''

''கடினம்தான். ஆனால் அந்த வழியில் யாருமறியாமல் வரலாம். ஆனால் பிங்களே படாடோபத்துடன் பலரறியக் கிளம்பியிருக்கிறார். அவர் புறப்பாடு முன்னதாக அறிவிக்கப்பட்டு, மங்கையர் திலகமிட, மேளதாளங்கள் முழங்க, மாலை போட்டுக் கொண்டு மாப்பிள்ளை புறப்படுவது போல் கிளம்பியிருக்கிறார் பிங்களே. புறப்பட்டு சம்பிரதாய வழியான பூனா மார்க்கம், அங்கிருந்து பம்பாய் வழியான காட்மார்க்கம், இப்படிப் பவனி வரப் போகிறார் படையுடன்'' என்று ஆங்கரே நகைத்தார்.

''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று வினவினான் இதய சந்திரன்.

கனோஜி மீண்டும் நாட்டுப் படத்தை உற்றுப் பார்த்தார். ''பிங்களே மட்டும் படைகளை இரு பிரிவாகப் பிரித்து, ஒன்றைப் பகிரங்கமாகப் பூனா பம்பாய் ரஸ்தாவிலும் இன்னொன்றை மலைக்காட்டு வழியிலும் செலுத்தியிருந்தால், ஆலிபாக்கில் நம்மை இருவழியிலும் தாக்கலாம். நல்ல வேளை பிங்களேயைப் படைத்த ஆண்டவன் அவருக்கு மூளையைப் படைக்கவில்லை'' என்று சற்று இரைந்து கூறிக் கொண்டார். மேலும் அவரே பேசிக் கொண்டார்: ''பிங்களேயின் படை பிரதான ரஸ்தாவில் பவனி வருகிறது. ஆகவே நாம் குறுக்கு வழியாகச் செல்வோம். சென்று இந்த இடத்தைக் கைப்பற்றுவோம். பிறகு இப்படிச் சென்றால் உச்சியிலிருப்போம்...'' இப்படிச் சொல்லி நிறுத்தி மீண்டும் சிந்தனையில் இறங்கினார்.

அவர் கைவிரல் சென்ற மார்க்கங்களைக் கவனித்த இதயசந்திரன், அவர் போர்த் தந்திரத்தை நினைத்துப் பெருவியப்பு அடைந்தான். சற்று நேரம் கழித்து அவர் சிந்தனையிலிருந்து மீண்டு, ''உபதளபதி! புரிகிறதா உனக்கு?'' என்றார்.

''புரிகிறது ஸார்கேல்'' என்றான் இதயசந்திரன்.

''என்ன புரிகிறது? சொல் பார்ப்போம்'' என்று கேட்டார் ஸார்கேல்.

மேஜை மீதிருந்த படத்தைத் தன்னை நோக்கி இழுத்துக் கொண்ட இதயசந்திரன் அவர் விரல் வைத்த இடங்களில் தானும் விரலை வைத்துக் காட்டினான். ''இங்கிருப்பது கொலாபா. இங்கிருந்து தென்கிழக்கில் ஸதாராவும், வடமேற்கில் பம்பாயுமிருக்கின்றன. ஸதாராவிலிருந்து பூனா வந்து நேராக பம்பாய் மார்க்கத்தில் நம்மை நோக்கி வருவது பிங்களேயின் திட்டம். அவர் திட்டத்தை நாம் கத்தரிப்போம், இந்த இடத்தில்'' என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினான் தமிழன்.

''பேஷ் பேஷ். அந்த இடம் எது தெரியுமா?'' என்று கேட்டார் ஆங்கரே.

''கல்யாண்'' என்றான் தமிழன்.

''அங்கு ஒரு கோட்டையிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினார் ஆங்கரே.

இதயசந்திரன் தொடர்ந்து கூறினான், ''ஆம். பிங்களேயைக் கொங்கணிக்குள் வரவிட்டுக் கல்யான் கோட்டையை நாம் பிடித்துக்கொண்டால் பிங்களேக்கும் ஸதாராவுக்கும் இடையில் ஒரு கத்தி செருகப்படும். அவரது படைகள் தலைநகரப் பாறையிலிருந்து துண்டிக்கப்படும்'' என்று.

''பலே பலே.'' கனோஜியின் உற்சாகம் அதிகரித்தது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

''பிறகு நீங்கள் அங்கிருந்து ராஜ்மச்சிக் கோட்டையைப் பிடிக்கலாம்.''

''உம்.''

''அது காட்மாதாவின் உச்சியிலிருக்கிறது.''

''உம்.''

''அங்கிருந்து கொங்கணியையே பார்க்க முடியும்.''

''ஆம்.''

''அதையும் பிடித்துவிட்டால் பிங்களேயும், அவர் படைகளும் சிறைப்பட்ட மாதிரி.''

''பலே தமிழா பலே'' என்று கூறிய ஆங்கரே ஆர்வ மிகுதியால் அவன் முதுகில் பேயறையாக அறைந்தார் தமது பெரும் கரத்தைக் கொண்டு.

பெருவலியால் முகத்தைச் சுளித்துக் கொண்ட இதயசந்திரன் தலை நிமிர்ந்து, ''அது எல்லாம் சரி! ஆனால் நமது படைகளை எப்படி ரகசியமாக நடத்திக்கொண்டு போக முடியும் வலை விரிப்பது. போல்?'' என்று வினவினான்.

கனோஜி ஆங்கரே அதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது யோசித்துவிட்டு, ''வா, அதையும் காட்டுகிறேன்'' என்று கூறி அவனையும் அழைத்துக் கொண்டு தோர்லாவாடாவை விட்டுக் கிளம்பினார். இருவருமாகப் புறப்பட்டுக் கொலாபாவிலிருந்து படகு மூலம் ஆலிபாவுக்கு வந்ததும் புரவிகளிலேறிப் படைமுனை முகாமுக்குச் சென்றனர்.

தரையில் அவர்கள் கால்வைத்த இடத்திலிருந்து புரவி வீரர்கள் காவலிருந்தது. உதிரி உதிரியாகப் பல இடங்களில் கண்ணுக்கு எட்டும் தூரம் மட்டும் சிறுசிறு கூடாரங்கள் தெரிந்தன. கூடாரங்களை அடுத்தடுத்து இருந்த காடுகளில் வீரர்கள் படுத்தும் சூதாடிக் கொண்டுமிருந்தார்கள். அவர்களில் சிலர் மாலுமிகளென்பதும்,

சிலரே தரைப் படை வீரர்களென்பதையும் கவனித்தான் இதயசந்திரன். இருவரும் புரவியில் பாதை நெடுகப் பயணம் செய்தபோது இடையிடையே ஒவ்வொரு புரவி வீரர் வந்து ஏதோ செய்திகளை ஆங்கரேயிடம் சொல்லி விட்டுப் போனதையும் கண்டான் இதயசந்திரன். முதலில் ஒரு சிறு கூடாரத்தை அவர்கள் அணுகியதும் எந்தவித அறிவிப்புமில்லாமலே அக்கூடாரத்திலிருந்த உப தலைவன் வெளியே வந்து ஆங்கரேயையும் உபதளபதியையும் வணங்கி நின்றான். ஆங்கரே அவனிடம் ஏதும் பேசாமலே புரவியை நடத்திச் சென்றார்.

ஆங்கரேயுடன் அன்று பகல் பூராவும் பயணம் செய்த இதயசந்திரன், தான் பம்பாய்க்குப் போகுமுன்பு இருந்த படையைவிட நான்கு மடங்கு படையை ஆங்கரே தயாரித்துவிட்டதை உணர்ந்ததால், ஷாஹுவுக்குப் பதில் ஸார்கேல் மகாராஷ்டிரத்தின் மன்னராக இல்லாதது மகாராஷ்டிரத்தின் துர்பாக்கியம் என்றே எண்ணினான். அவர்கள் பார்த்த இடங்களிலெல்லாம் இருந்த படைப் பிரிவுகளிலிருந்தவர்கள் சரியாகப் பயிற்சி பெறாதவர்களென்றாலும் பெரு வீரர்களென்பதையும், வாட் போரிலும் துப்பாக்கிப் பிரயோகத்திலும் இணையற்றவர்களென்பதையும் இதயசந்திரன் சந்தேகமறப் புரிந்து கொண்டான். இப்படிப்பட்ட மலைவாசிகள், பலதரப் பட்ட குணங்களுள்ளவர்களை, ஒரு கட்டுப்பாட்டுக்கும் உட்படாதவர்களை, சிவாஜி மகாராஜா எப்படி ஒழுங்கு செய்து கட்டுப்பாடுள்ள பெரிய ராணுவமாக்கினார் என்று வியந்தான் தமிழன். சிவாஜிக்குப் பிறகு அந்தத் திறமை கனோஜிக்குத்தான் இருக்கிறதென்பதிலும் சந்தேக மில்லை அவனுக்கு.

அந்தச் சந்தேகமற்ற உறுதியான உள்ளத்துடன் அன்று அந்தப் படைத்தளத்தைப் பார்த்த அவன் அவர்கள் இயங்குவதைப் பார்க்கவும் முடிந்தது மாலையில். மாலை நேரம் வந்ததும் படையின் நடுப்பகுதியில் வந்த கனோஜி

புரவியை நிறுத்தித் தமது கச்சையிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தில் இருமுறை சுட்டார். திடீரென எதிரேயிருந்த காடுகளில் சரசரவென்ற ஒலி கிளம்பியது. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஐந்நூறு புரவி வீரர் கொண்ட படை வெகு துரிதமாக அவர்களை நோக்கி வந்தது. காது செவிபடும் குளம்பொலிகளுடன் காற்றைப்போல் வந்த அந்தப் புரவிப்படை ஆங்கரேக்குச் சற்று முன்னதாகவே பட்டென்று நின்றது.

''படையின் சிறு பகுதி இது. இதை அழைக்க இதுதான் முறை'' என்ற கனோஜி, இதயசந்திரனை நோக்கினார்.

இதயசந்திரன் முகம் பிரமை தட்டிக் கிடந்தது. அதைக் கண்ட ஆங்கரே மெல்ல நகைத்தார். அவர் நகைத்ததால் பிரமையிலிருந்து மீண்ட இதயசந்திரன், ''இவர் சுபேதாரா?'' என்றான் அந்தப் புரவிப் படைத் தலைவனைச் சுட்டிக் காட்டி.

''இல்லை'' என்றார் அவர்.

''பின் இவர்?'' என்று வினவினான் வியப்புடன் இதயசந்திரன்.

''அந்தப் பழைய முறையை மாற்றிவிட்டேன்'' என்றார் ஆங்கரே.

''சம்பிரதாய முறையையா? சிவாஜி மகாராஜா வகுத்த முறையையா?'' என்று வினவினான் தமிழன்.

''ஆம். சில சம்பிரதாயங்கள் உடைக்கத் தகுந்தவை'' என்ற கனோஜி, வந்த குதிரைப் படையைப் பிரிந்து போகச் சொல்லிவிட்டுக் காடுகளிலிருந்த பீரங்கிப் படை முதலிய வற்றையும் இதயசந்திரனுக்குக் காட்டிவிட்டு இரவு சூழ்ந்ததும் கொலாபாவுக்குத் திரும்பினார்.

அன்று பகல் பூராவும் இருவரும் சரியாக உண்ணாத தாலும், ஆங்காங்குப் படைத்தளத்திலிருந்த உணவுகளை லேசாக உண்டதாலும், மிகக் களைத்திருந்தனர். ஆகவே

ஆடு கோழி இறைச்சிகளுடன் கூடிய ஆகாரத்தையும் சப்பாத்திகளில் சுமார் இருபத்தைந்தையும் விழுங்கிய பிறகு நீரை மடமடவென்று குடித்தார் கனோஜி. ராட்சசன் போல் அவர் உணவு உண்டதைப் பார்த்த இதயசந்திரன், 'இதனால்தான் பகல் முழுவதும் இந்த மனிதனால் திரியமுடிகிறது லட்சியமில்லாமல்' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

உணவை முடித்துக்கொண்டதும் கனோஜி சொன்னார்: ''இதயசந்திரா! எதையும் சரியாகச் செய்ய வேண்டும், குறைவற ஆகாரமுண்பவன் குறைவற சகலத்தையும் செய்கிறான்'' என்று. பிறகு சட்டென்று படைப் பிரிவுகளைப் பற்றிய விஷயத்துக்கு வந்தார். ''இன்று படைப் பிரிவுகளைப்பற்றி ஏதோ கூறினாயே?'' என்று வினவினார்.

இதயசந்திரன் சொன்னான், ''படைப்பிரிவு பழைய முறையில் இருக்குமென்று நினைத்தேன்'' என்று.

''பழைய முறை எது?'' என்று கேட்டார் ஸார்கேல்.

''சிவாஜி மகாராஜாவின் முறை, எங்கள் தஞ்சையிலும் அம்முறைதான் கையாளப்படுகிறது'' என்றான் இதயசந்திரன். அத்துடன் அந்த முறையையும் விவரித்தான். ''ஸார்கேல்! சிவாஜி மொகலாயர் பலத்தை உடைத்தவர். தனி ராஜ்யத்தை மகாராஷ்டிரர்களுக்குச் சிருஷ்டித்தவர். அந்த முறையைத் தவறென்று சொல்லமுடியாது'' என்ற பூர்வாங்கத்துடன் சொன்னான். ''சிவாஜி மகாராஜா 25 புரவி வீரர்களுக்கு ஒரு ஹவில்தாரையும் 125 பேர் கொண்ட புரவிப் படைக்கு ஒரு ஜூம்லாதாரையும் ஐந்து ஜூம்லாக்களுக்கு அதாவது 625 குதிரை வீரர்களுக்கு ஒரு சுபேதாரையும் நியமித்திருந்தார். 6250 வீரர்களுக்கு அதாவது ஐந்து சுபேதார்களுக்கு ஒரு பஞ்ச் ஹஜ்ஸரியிருந்தார். 6250 வீரர்கள் ஐயாயிரம் வீரர்களாகக் கணக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் அவருக்கு பஞ்ச் ஹஜ்ஸரி எனப் பெயர் இருந்தது. அந்த பஞ்ச் ஹஜ்ஸரியுடன் ஒரு மஜூம்தார் அதாவது ஒரு பிராம்மணக் கணக்கு ஆய்வாளரும் இருந்தார். அந்த இருவருடன் கணக்குப் பதிவாளரான அமீன் ஒருவரும் இருந்தார். ஸர்னபோத் என்பவர் பிரதம தளபதி. குதிரைப்படைக்கு ஒரு ஸர்ன போத்தும் காலாட் படைக்கு ஒரு ஸர்ன போத்தும் உண்டு. இப்படிப் படை பிரிக்கப்பட்டதால் அதன் இயக்குமுறையில் திட்டமும், கணக்கு விவகாரங்களும் ஒழுங்காயிருந்தன.

இந்த விவரங்களை நிதானமாகக் கேட்டுக் கொண்ட கனோஜி, மகாராஷ்டிரப் படை அமைப்பு முறைகளை நன்றாகக் கற்றிருக்கிறாய் தமிழா!'' என்று சிலாகித்தார். அத்துடன் கூறினார்: ''தமிழா! சிவாஜி மகாராஜா ஓர் அவதார புருஷர். எப்போதோ ஒரு முறை நாட்டுக்காகப் பிறக்கும் அபூர்வப் பிறவிகளில் ஒருவர். அவர் படைப் பகுப்புமுறை முக்காலும் மொகலாயர் படையமைப்பு முறையைப் பின்பற்றியது. தரைப்படைக்கு அது சரியாக இருக்கலாம். ஆனால் இந்த காலத்துக்கும் மாலுமிகளையும் புரவி வீரர்களையும் காட்டுவாசிகளையும் கொண்ட கலப்படமான படைக்கும் அது சரியாகாது. ஆகையால் நான் அந்த முறையைச் சற்று மாற்றிவிட்டேன்'' என்றவர், ''உங்கள் நாட்டில் புதுமையைப் புகுத்துவது பற்றி ஏதோ பழமொழி சொல்வதாகக் கேள்வி'' என்றும் கேட்டார் முடிவில்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்றான் தமிழன்.. அதன் பொருளையும் விளக்கினான்.

''அதுதான் சரி'' என்ற ஸார்கேல், தமது படையமைப்பு முறையை மெள்ள மெள்ள விவரிக்கத் தொடங்கினார் தமிழனுக்கு.

அத்தியாயம் 18

போர்த் திட்டம்

தோர்லாவாடாவின் மந்திராலோசனை அறையிலேயே உணவு உண்ட பிறகு தமது படையை மாற்றியமைத்த முறைபற்றி விவரிக்கத் துவங்குமுன்பு நீண்ட நேரம் மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் பலர் விளக்கை ஊன்றிக் கவனித்த வண்ணம் ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தார் ஸார்கேல். பிறகு அவர் மௌன நிலையைக் கலைத்துப் பேசத் துவங்கியபின்பும் மிகுந்த யோசனையுடன் மெள்ளவே பேசினார். அவர் பேச்சிலிருந்து மகாராஷ்டிரம் முழுவதுமே அவர் நினைப்பில் எழுந்து புரளுவது நன்றாகத் தெரியும் இதயசந்திரனுக்கு.

''இதயசந்திரா! மகாராஷ்டிரம் பெரும்பாலும் மலைகளடங்கிய பிரதேசம். அதன் ஒரு பகுதியான கொங்கணில் முழுக்க முழுக்க பிரும்மாண்டமான மலைகள்தான். மலைகளுக்கும் கடலுக்கும் இடையிலுள்ள பிரதேசங்கள் மிகக் குறைவு... அவற்றின் அகலமும் அதிகமல்ல. இத்தகைய இடத்திலிருந்துகொண்டு சத்ரபதி சிவாஜி மகாராஷ்டிர ராஜ்யத்தை நிறுவினார். அவர் எப்பொழுதும் மலைகளிலும் மலைக் காடுகளிலும் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். திடீரென மலைகளிலிருந்து சின்னஞ்சிறு படைகளுடன் இறங்கி மொகலாயர் படைகளைத் தாக்கித் தாக்கி மீண்டும் மலைக்காட்டுக்குள் போய்விட வேண்டிய அவசியம் அவருக்கிருந்தது. காட்மாதாவின் கடினமான மலைச்சரிவுகள், குகைகள், யாரும் அணுகமுடியாத கோட்டைகள்— இவை அவர் இருப்பிடங்களாயின. ஆகவே, அவர் ஆரம்பத்தில் பல இடங்களில் படைப் பிரிவுகள் வைத்திருந்தார். அப்படை சின்னஞ்சிறு படைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

பெரும் போர்களில் அவர் ஈடுபட்டிருந்த காலம் தவிர மற்றக் காலங்களில் சிறு படைகளே அவர் இயக்கிய ஆயுதங்களாயின. ஒரு மொகலாயப் படை சுமார் ஆயிரம் பேர் கொண்டதென்று வைத்துக் கொள், அது பம்பாய் நோக்கிச் செல்கிறதென்று வைத்துக்கொள், அதைத் திடீரென்று தாக்க வேண்டும், என்ன செய்வாய்? அதே ஆயிரம் படை வீரர்களைக் கொண்டு அதை நேருக்கு நேர் எதிர்க்கலாம். அல்லது முன்னும் பின்னும் எதிர்க்கலாம். சிவாஜி மகாராஜா சுதந்திர நிவர்த்தியைக் கையிலேந்தியபோது ஏது அவ்வளவு பயிற்சி பெற்ற வீரர்கள் மகாராஷ்டிரத்தில்? கிடையாது, இருந்தவர்கள் மலைவாசிகள், காட்டுமிராண்டிகள். அந்தக் காட்டு மிராண்டிகளிலிருந்து, மலைவாசிகளிலிருந்து இருநூறு முந்நூறு என்று ஆங்காங்கு பொறுக்கிப் பயிற்சி அளித்தவர் சத்ரபதி. அப்படிப் பயிற்சி அளிக்கப் பெற்றவர்கள் முந்நூறு, ஐந்நூறு என்று பலப் பல மலைகளில் பிரிந்து கிடந்தார்கள். அந்தப் பலவகைப் படைகளெனும் மலர்களுக்குச் சத்ரபதிதான் தொடுநூல். எந்தப் பகுதியில் மொகலாயர் படைப் பிரிவு இயங்குகிறதோ அந்தப் பகுதிக்குச் சிவாஜி மகாராஜா செல்வார். அங்குள்ள இருநூற்று ஐம்பது அல்லது முந்நூறு படை வீரர்களுடன் எதிரிப் படைப் பிரிவு மீது மலையிலிருந்து இறங்குவார்...'' என்று சொல்லிக் கொண்டு போன கனோஜி, சற்றுப் பேச்சை நிறுத்திக் கனவில் பேசுவது போல் பேச்சைத் தொடர்ந்து, ''ஆயிரம் பேர் கொண்ட மொகலாயர் படைப் பிரிவு மலைப் பகுதிக்குள் கிழுள்ள பாதையில் அணிவகுத்து, ஆயுதமேந்தி, சரியான ராணுவ நடை போட்டுச் செல்கிறது. மலை மேலிருந்து திடீரென ஒருவன் அதைப் பார்த்துக் குதிரை மேல் ஓடுகிறான். சிறிது நேரத்திற்கெல்லாம் சிவாஜி மகாராஜா சுமார் முன்னூறு வீரர்களுடன் மலைச் சரிவில் நிற்கிறார். பிறகு கத்தியை உயர்த்தி, ''ஹரஹர மகாதேவ் ஜெய்பவானி!'' என்று கூவிக் கொண்டு புரவியைத் தட்டி விடுகிறார்.

அதேபோல் காற்று வேகத்தில் அவரைத் தொடர்ந்து வருகிற இருநூறு அல்லது முந்நூறு புரவிகளின் தடதடவென்ற குளம்பொலிகள் எதிர்ப்படைப் பிரிவின் காதுகளில் விழுகின்றன. சட்டென்று திரும்பிப் போருக்குத் தயாராகிறது படை, ஆனால் அது அணிவகுத்துத் திரும்புமுன்பு அதன் இடையில் சிவாஜி மகாராஜாவின் சிறு படை ஊடுருவிச் சென்று விடுகிறது. துப்பாக்கிகளை எடுக்கக் கூட அவகாசமில்லாத நிலையில் கத்திப் போர் நடக்கிறது. படை நிர்மூலமாகிறது. சரண்டைந்தவர் காப்பாற்றப்படுகிறார்கள். அப்படைகளிலிருந்த பொருள்கள் கைப்பற்றப்படுகின்றன. இப்படி நடந்தது போர்முறை. இந்தப் படைக்கும் சின்னஞ்சிறு பிரிவுகள் இருந்தமையால், 25 பேருக்கு ஒரு சுபேதாரும், 125 பேருக்கு ஒரு ஜும்லாதாரும் தேவையாயிருந்தது. சிவாஜி மகாராஜா இறக்கும் தருணத்தில் விரிந்து கிடந்தது சாம்ராஜ்யம். விரிந்து கிடந்தது பெரும் படை நீரிலும் நிலத்திலும். ஆகவே, அவருக்குப் பின்பு படைகளை மாற்றி அமைக்க அவசியமிருந்தது. ஸம்பாஜி மாற்றவில்லை. ஷாஹு மன்னர் மாற்றவில்லை. நான் மாற்றி விட்டேன்'' என்று. இதைச் சொல்லி விளக்கையே உற்றுப் பார்த்தார் கனோஜி.

இதயசந்திரன் அவர் விவரத்தைக் கேட்டு அசந்து போனான். அவர் கண்ட அந்தப் பழைய படைத் தாக்குதலின் கனவில் அவனும் நீண்ட நேரம் சிக்கியிருந்தானாகையால் அவனும் உடனடியாகப் பேசவில்லை. பிறகு கேட்டான், ''ஷாஹு மன்னர் மாற்றவில்லையா?'' என்று.

கனவிலிருந்து விழித்துக் கொண்டவர் போல் சொன்னார் கனோஜி, ''இல்லை'' என்று.

''ஏன்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''ஷாஹு மன்னர் மொகலாயர் அரண்மனையிலேயே நீண்டகாலம் வளர்ந்தவர், அவர்களால் ஆதரிக்கப்பட்டு மகாராஷ்டிர அரியணை ஏறியவர். அவர்கள் படைவகுப்பு முறைதான் ஷாஹு மன்னராலும் பின்பற்றப்படுகிறது. சிவாஜி மகாராஜா சின்னஞ்சிறு பிரிவுகளைப் படையில் அவசியத்தால் வைத்தார். ஆனால், மொகலாயர் தங்கள் படைகளில் பலருக்குப் பதவி கொடுப்பதற்காக வைத்திருந்தார்கள். அதனால் தலைவர்கள் அதிகமாகி, படை துரிதமாக இயங்க முடியவில்லை. காலத்துக்குத் தகுந்தபடி ஷாஹு மன்னர் படை முறையை மாற்றியமைக்கவில்லை, நான் மாற்றியமைத்திருக்கிறேன் பிரிட்டிஷ் முறையில்'' என்றார் கனோஜி.

''பிரிட்டிஷ் முறையிலா?''

''ஆம்.''

''ஏன்? அது மிகவும் சிலாக்கியமா?''

''சிலாக்கியம்தான். தவிர, இனி உண்மையான எதிரி பிரிட்டிஷ் வர்க்கந்தான்.''

''அதெப்படிச் சொல்கிறீர்கள்?''

கனோஜி விளக்கிலிருந்து கண்களை அகற்றி இதயசந்திரனை நோக்கினார். ''நாம்—நமது நாட்டிலிருக்கிறோம்'' என்று கூறினார்.

அதை எதற்காக கனோஜி சொல்கிறாரென்பதைப் புரிந்து கொள்ளாத இதயசந்திரன், ''ஆம்'' என்றான்.

''அவர்கள் தொலை தூரத்திலிருந்து, பல காதங்களுக்கு அப்புறமிருந்து வந்திருக்கிறார்கள்.''

''ஆம்.''

''அவர்களது ராணுவ உதவியை நாம் நாடுகிறோம்,'' என்ற கனோஜி சற்றுச் சீற்றத்துடன் பேசினார். ''பம்பாய், சூரத், சென்னை, கல்கத்தா, சந்திரநாகூர் சில இடங்களில்தான் இந்தப் பெரிய பாரத பூமியில் அவர்கள் இருக்கிறார்கள். இருப்பினும் இங்குள்ள மொகலாய வல்லரசுகூட அவர்களைத் தொட முடியவில்லை. அவர்கள்

புறக்கணிக்கத் தக்கவர்களல்ல. பெரும் பலமுடையவர்கள், தந்திரமுடையவர்கள். புதுவகை ஆயுதங்களையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் படைகள் நமது படைகளை விடத் துரிதமாக இயங்குகின்றன. அவர்களிடம் முக்கியமாக இரண்டே பிரிவுகள், புரவிப்படை, காலாட்படை. காலாட்படைக்குள் ஒரு பிரிவு பீரங்கிப் படை. இந்த மூன்று பிரிவுகள் நமது ஆயிரம் பிரிவுகளுக்குச் சமானம். ஆகவே இப்பொழுது நாம் பிரிவினைகளைக் குறைக்க வேண்டும். நானும் அப்படிப் பிரித்திருக்கிறேன்.''

இதயசந்திரன் தீர்க்காலோசனையில் இறங்கினான். ''ஆம்; அது ஒரு விதத்தில் சௌகரியம்தான்'' என்றும் கூறினான்.

''பல விதங்களிலும் சௌகரியம்'' என்ற கனோஜி, ''தமிழா! ஆலிபாக்கிலுள்ள படை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அதாவது புரவிப்படை பாதியாகவும், காலாட்படை பாதியாகவும் பிரிக்கப்படும். பீரங்கிகளையும் பாதியாகப் பிரிப்போம். இப்படிச் சரிபாதியாகப் பிரிக்கப்பட்ட பிரிவில் ஒரு பகுதியை அழைத்துக்கொண்டு நீ செல் கல்யாண் கோட்டையை நோக்கி நேர் வழியில்...'' என்று கூறினார்.

இதயசந்திரன் பதில் சொல்லவில்லை. ஸார்கேல் கட்டளையிடுகிறார் என்பது அவனுக்குத் தெரிந்தே யிருந்தது. கனோஜி மேலும் சொன்னார், ''இன்னொரு பகுதியை அழைத்துக் கொண்டு மலை வழியாகவும் காட்டு வழியாகவும் நான் வருகிறேன். இருவரும் கல்யாணியில் சந்திப்போம்.''

''இடையில் பிங்களே எதிர்ப்பட்டால்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''எதிர்ப்பட மாட்டார். இங்கிருந்து நீ கிளம்புவதற்குள் பிங்களே கல்யாணைத் தாண்டிவிடுவார். நீ கல்யாண் அழல் அறிந்ததும் திரும்புவார்

உன்னை நோக்கி. அப்பொழுது...'' என்று கூறிய ஆங்கரே புன்முறுவல் காட்டினார்.

''அப்பொழுது?'' கேட்டான் இதயசந்திரன்.

''அவருக்குப் பின்புறத்தில் நான் இருப்பேன்'' என்ற கனோஜி சற்று மெல்ல நகைக்கவும் செய்தார்.

திட்டம் மிகக் கச்சிதமாயிருந்ததை உணர்ந்தான் இதயசந்திரன். அந்தத் திட்டப்படி எல்லாம் நடந்தால் வெற்றி நிச்சயமென்பதும் அவனுக்குப் புரிந்திருந்தது. இருப்பினும் ஒரு கேள்வி கேட்டான், ''பிங்களே என்னை நோக்கித் திரும்பாமல் தனது திட்டப்படி பம்பாய் நோக்கிப் போனால் தாங்கள் எதிர்ப்படுவீர்கள். தங்களைத் தரைப்படை தாக்கினால் தங்கள் பாடு திண்டாட்டம். ஏனென்றால், பிங்களேயின் படை மிகப்பெரியது. தங்களை முறியடித்த பிறகு அவர் ஏன் திரும்பிவந்து என்னைக் கல்யாணியில் சந்திக்க முடியாது?'' என்று வினவினான்.

கனோஜி வியப்புத் ததும்பிய விழிகளை அவன்மீது நிலை நாட்டினார். ''என்னைப் பிடித்த நல்ல காலம் நீ பிங்களேயின் படையில் இல்லை'' என்றும் கூறினார். ''ஆனால் தமிழா! பிங்களேயை நீ அறியமாட்டாய். பிங்களேக்குப் போர் அனுபவம் அடியோடு கிடையாது; ராஜதந்திரத்தில் சூன்யம், ஷாஹுவுக்கு வேண்டியவர் என்பது தவிர மற்றபடி திறமை ஏதுமில்லாதவர். போர்களில் படைபலம் மட்டுமல்ல முடிவைத் தீர்மானிப்பது, படைத் தலைவனும் நிச்சயிக்கிறான். பிங்களே படைத் தலைவராயிருக்கும்வரை எந்தப் பயமும் இல்லை. நீ சொல்கிற திட்டத்தை அவர் கனவில்கூட நினைக்க மாட்டார்'' என்று தெளிவாக்கினார்.

இதயசந்திரன் விடவில்லை. ''அவருக்குத் தோன்ற வில்லை. அவர் உபதலைவன் ஒருவனுக்குத் தோன்று கிறது?'' என்று கேட்டான்.

கனோஜி சிந்தித்தார். ''அதையும் நான் நினைத்துப் பார்த்ததில்லை தமிழா'' என்றார் முடிவில். ''அதற்கும் வழி வைத்திருக்கிறேன்'' என்றும் தெரிவித்தார்.

''என்ன வழி ஸார்கேல்?''

கனோஜி புன்முறுவல் காட்டிவிட்டுச் சொன்னார்: ''தமிழா! பிங்களே என்னை நோக்கி வந்தால் நான் பின்னடைவேன். கொலாபாவுக்கருகிலோ காண்டேரிக் கருகிலோ அவர் படைகளை இழுத்துவிடுவேன். பிறகு என் படை மலைக்காடுகளில் மறைந்துவிடும். கொலாபாவின் பீரங்கிகள் அப்படைகள் மீது சீறும். மலைக்காடுகளில் மறைந்த எனது படை சுற்றுவழிகளில் வந்து அவரைப் பின்புறம் தாக்கும். அப்பொழுதும் அவர் நிலை பெரும் சங்கடமானது. இருபுறமும் பீரங்கிகள் அவர் படைகளை நாசம் செய்யும்.''

''அப்பொழுது அவர் பீரங்கிகள் சும்மா இருக்குமா?''

''இருக்காது, ஆனால் நமது படையின் வேகம் அவர் படை வேகத்தைவிட அதிகம். நீ பார்த்தாயல்லவா இன்று புரவிப் படையின் ஒரு சிறு பிரிவு காற்றுபோல் வந்ததை?'' என்று சுட்டிக் காட்டினார் ஸார்கேல். ''தமிழா! போரில் முதலில் யார் தாக்குகிறார்கள், எப்படித் தாக்குகிறார்கள் என்பது முக்கியம். தவிர எதிரிப்படைத் தலைவனை எப்படிக் குழப்பலாம், திகைக்க வைக்கலாம் என்பதும் முக்கியம். இப்பொழுது நான் வகுத்திருக்கும் போர்த் திட்டத்தின் முக்கிய அம்சம் பிங்களேயைக் குழப்பித் திகைக்க வைப்பதுதான். இதைத் தவிர, இன்னொரு யோசனையும் இருக்கிறது'' என்றார்.

''அது என்ன?''

''பிங்களேயைச் சிறைப் பிடிப்பது.''

''போர்க்களத்தில் நீ காண்பாய்'' என்ற ஸார்கேல் அதுபற்றி மேற்கொண்டு சொல்லாமல், ''நாளைக்குப் படைகளை இரண்டாகப் பிரிப்போம். ஒன்றை நீ நடத்திப் பயிற்சி அளித்துப் பழகிக்கொள். இன்னொன்றை நான் கவனித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு படைப் பிரிவுக்கும் மருத்துவரும் வேண்டும்'' என்று விளக்கிய கனோஜி, திடீரென ஆசனத்தைவிட்டு எழுந்து, ''அந்த விஷயத்தில் நீ அதிர்ஷ்டசாலி'' என்றார்.

''என்ன அதிர்ஷ்டம் எனக்கு?''

''உன்னுடன வரப்போவது யார் தெரியுமா?''

''சொல்லுங்கள்.''

கனோஜி அவன் அருகில் வந்து, ''அந்த வெள்ளைக் காரி'' என்றார்.

''யார்?''

''அதுதான் எமிலி.''

''எதற்காக?'' இதயசந்திரன் சீறினான்.

பதில் கூறவில்லை ஸார்கேல். கடகடவெனப் பெரிதாக நகைத்தார்.

அத்தியாயம் 19

குழைவு, குறைவு, நிறைவு

பேஷ்வா பிங்களேயின் படைகளை இருபுறத்திலும் தாக்கிப் பேஷ்வாவைச் சிறைப்பிடிக்கும் பெரும் போர்த் திட்டத்தை வகுத்த ஸார்கேலுக்குச் சிற்றின்ப விஷயமாகப் பேசும் அந்தச் சின்னப்புத்தி மட்டும் போகாததைக் கண்டு சற்று சீற்றமே கொண்டான் இதயசந்திரன். தன்னுடைய படைப் பிரிவுடன் வர இந்து மருத்துவர்கள் பலர் இருந்தும் எலிமியை இந்தப் பணிக்கு வேண்டுமென்றே ஸார்கேல் நியமித்திருக்கிறாரே என்று புரிந்து கொண்டதால், ''அந்த வெள்ளைக்காரியை நீங்களே அழைத்துச் செல்லுங்கள்'' என்று சினத்துடன் பதிலும் சொன்னான்.

இதயசந்திரன் இப்படிச் சொன்னதும் ஸார்கேலின் சிரிப்பு இன்னும் பெரிதாயிற்று. ''முடியாது தமிழா, முடியாது'' என்று நகைப்பின் ஊடே கூறினார் அவர்.

''ஏன் முடியாது?'' என்று கேட்டான் இதயசந்திரன் எரிச்சலுடன்.

''என்னுடன் வரமாட்டாள் அவள்.''

''ஏன் வரமாட்டாள்?''

''எனக்கு வயதாகிவிட்டது. வயோதிகர்களைக் கண்டால் சில பெண்களுக்கு வெறுப்பு.''

''எலிமியைக் காதலிக்க அழைத்துப்போக உத்தேசமா, அல்லது மருத்துவச் சிகிச்சைக்கா?'' எரிச்சல் உச்ச நிலையை அடைந்தது இதயசந்திரனுக்கு.

''இரண்டுக்கும் அதிகமாக வித்தியாசமில்லை. போர்ப் படைகள் இயங்கும்போது இரண்டும் நடைபெறுவது

உண்டு'' என்று ஆங்கரே தமிழனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டி ''தமிழா!'' என்று மெல்ல அழைத்தார்.

இதயசந்திரனுக்கு அவர் கண் சிமிட்டலும் பார்வையும் சிறிதும் பிடிக்கவில்லையாயினும், ''என்ன ஸார்கேல்?'' என்று மரியாதைக்குக் கேட்டான்.

ஸார்கேல் அவனருகில் வந்து ரகசியமாக, ''இரண்டும் ஒன்றுதான்'' என்றார்.

''எந்த இரண்டும் ஸார்கேல்?''

''காயமும் காதலும்.''

''எப்படி?''

''இரண்டுக்கும் சிகிச்சை தேவை'' என்று கூறிப் பெரிதாக நகைத்து விட்டு அந்த அறையை விட்டு வெளியேறினார் கனோஜி ஆங்கரே.

அவர் சென்ற பிறகு நீண்ட நேரம் அந்த அறையில் சிந்தனையில் திளைத்து நின்றிருந்தான் இதயசந்திரன். கனோஜி ஆங்கரேயின் போர்த் திட்டத்தை ஒரு முறை மனத்தில் மீண்டும் புரட்டிப் பார்த்தான். பலவித ஆட்சேபணைக்கும் அந்தத் திட்டத்தில் பதிலிருந்தது. திட்டம் எந்தவிதக் குறைபாடுமில்லாமல் மிகத் தெளிவாயிருந்தது. அத்தகைய திட்டத்தைத் தயாரிக்கச் சீரிய சிந்தனை தேவையென்பதை உணர்ந்த தமிழக வீரன், இந்திய வரலாற்றின் மிகப் பெரிய வீரனிடம் தான் சேவை செய்ய நேர்ந்தது தனது பாக்கியமென்று நினைத்தான். இருப்பினும், அடுத்து அவர் எமிலியைப் பற்றிச் சொன்னதும் சிரித்ததும் அவனைச் சிறிது குழம்பச் செய்தது. 'பெரிய விஷயங்களும் அற்ப விஷயங்களும் ஒரே மனிதன் மனத்தில் எப்படி உதயமாகின்றன!' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். தவிர தனக்கும் மஞ்சுவுக்கும் உறவு முற்றிவிட்டதை உணர்ந்த பின்னர்கூட எமிலியைத் தன்னுடன் அனுப்பும் காரணம் அவனுக்கு அடியோடு துலங்கவில்லை. 'முன்பு விஜய

துர்க்கத்தில் கேட்டேன் மஞ்சுவைத் திருமணம் செய்து கொள்ள அனுமதி. முடியாது என்று மறுத்துக் காதலனுடன் தனிமையில் ஜலதீபத்தில் என்னை அனுப்பினார். பெரிய கண்டத்தில் சிக்க வைத்தார். அதிலிருந்து தப்பி, திரும்ப மஞ்சுவின் அன்பைப் பெற்று மணமும் செய்து கொண்டேன் குலாபி சாட்சியாக. மறுபடியும் இன்னொரு வெள்ளைக்காரியை என் கழுத்தில் கட்டுகிறார் ஸார்கேல். என்ன வேடிக்கை பார்க்கிறாரா என்னை, அல்லது சோதிக்கிறாரா?' என்று நினைத்துப் பார்த்து வெகுண்டான். வெகுண்டானே தவிர, விடையேதும் காணவில்லை. அவன் மனம் குழம்பிய காரணத்தால் சாந்தியைத் தேடிக் குலாபி கோவிலை நாடிச் சென்றான் அவன். குலாபியின் சேவை அன்று அவன் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது. அர்ச்சகர் அன்று குலாபியின் உடல் முழுவதும் சிவந்த புஷ்பங்களைச் சாத்தியிருந்தபடியால் ரத்த ஸ்நானம் செய்தது போலிருந்தாள் மஹிஷேஸ்வரி. அவள் கைவாள் வெண்மையாகப் பளபளத்ததால், சிவந்த புஷ்ப ஜாலங்களுக்கு அதிக மெருகு ஊட்டி இருந்த சிவப்பைவிட அதிகச் சிவப்பாகக் காட்டியது. கிரீடத்தில் கற்கள் பளபளத்தன. ஆனால் அருள் நிறைந்த அந்த மகாசக்தியின் விழிகள் பளபளத்த அளவுக்கு எதுவுமே பளபளக்க வில்லை. தேவியின் அந்த அலங்காரத்தில் அழகிய விழிகளில் லயித்து நின்றான் அவன். அர்ச்சகர் அவன் நிஷ்டையைக் கவனித்ததால் மந்திரோச்சாடனமோ அர்ச்சனையோ எதுவுமே புரியவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு, ''எடுக்கட்டுமா?'' என்று கேட்டார் மெல்ல.

இதயசந்திரன் தூக்கத்திலிருந்து விழித்தவன் போல் அர்ச்சகரை நோக்கினான். ''எதை?'' என்று வினவினான் அதிர்ச்சியடைந்தவன் போல்.

பதிலுக்கு, தேவியின் ஒரு கரத்தைச் சுட்டிக் [illegible] அந்தக் கரத்தில் இரட்டை வட

மஞ்சள் கயிறு ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட இதயசந்திரன், ''மஞ்சள் கயிறா?'' என்றான் ஏதும் புரியாமல்.

'ஆம்'' என்று பதில் சொன்னார் அர்ச்சகர் பயபக்தியுடன்.

''எதற்கு அது?'' என்று வினவினான் தமிழன் அவர் சொல்வதன் பொருள் புரியாததால்.

''எனக்குத் தெரியாது'' என்றார் அர்ச்சகர்.

''எனக்குத் தெரியாதென்றால்?''

''இதைத் தேவிக்குச் சார்த்தச் சொல்லி உத்தரவு.''

''யார் உத்தரவு?''

''ஜலதீபத்தின் தலைவியார் உத்தரவு.''

''எதற்குச் சார்த்தச் சொன்னார்கள்?''

''அதுதான் முன்பே கூறிவிட்டேனே, எனக்குத் தெரியாதென்று'' எனக் கூறிய அர்ச்சகர் மேலும் சொன்னார்: ''சற்று முன்பு ஸார்கேலின் புதல்வி இங்கு வந்து இந்தக் கயிற்றைக் கொடுத்துத் தேவியின் கையில் சார்த்தி அர்ச்சனை செய்யச் சொன்னார்கள். அர்ச்சனை செய்தேன். பிறகு நீங்கள் வருவீர்களென்றும், வந்தால் இந்தக் கயிற்றை உங்கள் கையில் கொடுத்து அனுப்பும் படிக்கும் உத்தரவிட்டார்கள்.''

இதயசந்திரன் மேலும் சிந்தித்தான். ''தேவிக்கு மங்கல சூத்திரம் கழுத்தில் சாத்துவார்களா? கையில் சாத்துவார்களா?'' என்று வினவவும் செய்தான்.

''அது பிரார்த்தனையைப் பொறுத்தது.''

''ஜலதீபத்தின் தலைவி, என்ன பிரார்த்தனைக்காக கையில் சாத்தச் சொன்னார்கள்?''

''அவர்களைத்தான் கேட்க வேண்டும். இதை எடுத்துக் கொண்டு நேரே தானிருக்கும் இடத்திற்கு வரச் சொன்னார்கள் உங்களை.''

எங்கிருக்கிறார்கள் தலைவி?''

''இடம் உங்களுக்குத் தெரியுமாம்'' என்ற அர்ச்சகர் மேலே ஏதும் பேசாமல் மஞ்சள் கயிற்றை எடுத்து இதய சந்திரனிடம் நீட்டினார். அதில் ஒரு சிவந்த அலரிப்பூவை யும் வைத்துக் கொடுத்தார். அலரிப் புஷ்பத்துடன் தரப் பட்ட தேவி பிரசாதமான அந்த மங்கலக் கயிற்றைப் பய பக்தியுடன் வாங்கிக் கொண்டு தேவியை வணங்கிவிட்டு வெளியில் வந்த இதயசந்திரன், எங்கு போவதென்று தெரியாததால் கோயில் வாசலிலேயே சிறிது நேரம் நின்றான். 'எங்கிருக்கிறாள் அவள்? இடத்தை அர்ச்சக ரிடம் சொல்லியிருக்கக் கூடாதோ?' என்று நினைத்து அவனுக்குத் திடீரென உண்மை புலனானதால், 'அடடா! என்ன முட்டாள் நான்!' என்று கூறிக் கொண்டு முதல் நாள் மஞ்சுவைச் சந்தித்த மலைப்பாறையின் மறைவை நோக்கிச் சென்றான். அந்த மலைப்பாறையின் மறைவில், முதல்நாள் பஞ்சணையாயிருந்த தரைப்பாறையில் அழகெல்லாம் துலங்க உட்கார்ந்திருந்தாள் மஞ்சு. முதல் நாள் போலவே அன்றும் அவள் சேலை அணிந்திருந்தாள். தலையில் மகாராஷ்டிர பாணியில் முக்காடும் அணிந் திருந்தாள். அவள் கழுத்தைச் சுற்றிக் கிடந்த ஒரு முத்து மாலை அவனை நோக்கிச் சிரித்தது. அவள் உடலில் ஒரு புது வனப்பு அன்று உதயமாகியிருந்ததாகத் தோன்றியது இதயசந்திரனுக்கு. திருமணமான பின்பு அப்படி ஒரு தனிப் பொலிவு பெண்களுக்கு ஏற்படுமென்பதும் அவனுக்குத் தெரியாததால் அன்று ஏதோ அவள் ஒரு புது அழகுடன் விளங்குகிறாள் என்ற பொதுக் கருத்தே எழுந்தது அவன் உள்ளத்தில். அவள் உட்கார்ந்த தோரணையில், சற்றே இடை ஒரு பக்கமாக ஒடிந்த நிலையில், அதன் விளைவாக உட்காரும் அழகுகள் ஒரு பக்கமாகத் துள்ளிப் பெரிதாகத் தெரிந்த விந்தையில், முக்காலும் நெகிழ்ந்து கிடந்த மேலாடை மார்பகத்தைப் பேருக்கு மறைத்து வித்தை காட்டிய விபரீதத்தில், அவன் தனது மனத்தைச் தில

வினாடிகளில் பறிகொடுத்தான். சற்றே கமலவிழிகளைத் தூக்கி அவனைப் பார்த்தாள் மஞ்சு.

அந்த விழிகளில் அழைப்பு இருந்தது. அதுவரை காணாத துணிவு இருந்தது. அவன் தனக்குச் சொந்தம் என்ற உரிமையுமிருந்தது. ஒரு வினாடிதான் பார்த்தாள் அவள். அந்த வினாடி கொள்ளைக் கதைகளை, ஆசை களை— ஆர்வங்களை எடுத்துரைத்ததால், இதயசந்திரன் ஏதும் பேசாமல் அவளை நெருங்கி உட்கார்ந்தான். அவள் முக்காட்டை நீக்கி, தேவியின் பிரசாத மலரை அவள் பின்னலில் சூட்டினான். ''இதோ கயிறு'' என்று மஞ்சள் கயிற்றை அவளிடம் நீட்டினான்.

பதிலேதும் சொல்லாமல் அந்த மங்கலக் கயிற்றைக் கையில் வாங்கிக் கொண்டாள், கண்களில் ஒற்றிக் கொண்டாள். பிறகு, ''உங்கள் வலது கையை நீட்டுங்கள்'' என்றாள்.

இதயசந்திரன் வலது கையை நீட்ட அதில் அந்தக் கயிற்றை இருமுறை சுற்றி நன்றாக முடிபோட்டாள் மஞ்சு. ''தேவி உங்களைப் பாதுகாப்பாள்'' என்று கூறினாள் மெல்ல.

இதயசந்திரன் அது தனக்குக் 'காப்பு' என்று புரிந்து கொண்டான். இருப்பினும் கேட்டான், ''இது எதற்கு மஞ்சு?'' என்று.

''இது கங்கணம். உங்களைப் பாதுகாக்கும் வல்லமை யுள்ளது'' என்றாள் மஞ்சு.

''இதற்கு முன்பு நீ எப்பொழுதுமே இப்படிக் கட்டிய தில்லையே எனக்கு?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

மஞ்சு தலையைக் கவிழ்த்துக் கொண்டு பாறையை நோக்கிய வண்ணம் கூறினாள், ''அப்பொழுதெல்லாம் எனக்கு உரிமையில்லை, உங்களுக்குத் தேவையுமில்லை'' என்று.

''எனக்குத் தேவையிருந்ததா இல்லையா என்பது இருக்கட்டும். உனக்கு ஏன் உரிமையில்லை?'' என்று வினவினான் இதயசந்திரன். அப்படிக் கேட்ட சமயத்தில் அவன் கை அவள் தோளைப் பிடித்துத் தன்னை நோக்கிச் சாய்த்துக் கொண்டது அவள் உடலை.

''காரணம் இதுதான்'' என்றாள் மஞ்சு.

''எது?''

''இப்பொழுது எந்தத் துணிவுடன் என்னைத் தொடுகிறீர்கள்?''

''ஏன் இதில் துணிவுக்கு என்ன இருக்கிறது? நீ என் மனைவியில்லையா?''

''அதைத்தான் நானும் சொல்கிறேன். இப்பொழுதுள்ள உரிமை அப்பொழுது இல்லையென்று.''

''ஓகோ!'' என்று மெல்ல விஷயத்தைப் புரிந்து கொண்ட இதயசந்திரன் மகிழ்ச்சியில் பெருமூச்சு விட்டான்.

அவள் அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி, ''உங்களைத்தான்'' என்றாள்.

''என்ன?''

''இந்தப் பாதுகாப்புக் கங்கணம் போருக்குச் செல்லும் கணவர்களுக்கு மனைவிமார்களால் அணிவிக்கப்படுகிறது.''

''அப்படியா?'' என்ற இதயசந்திரன் அவள் கைகளிலொன்றை எடுத்துத் தன் கையில் வைத்து அழுத்திக் கொண்டு, ''மஞ்சு! இன்று நானும் உன் தந்தையும் நீண்ட நேரம் போர்த் திட்டங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்'' என்றான்.

அர்த்தமற்ற பேச்சு இது என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. சரசமாடும் சமயங்களில் சந்தர்ப்பமில்லாமல் அளவளாவி வார்த்தைகளைப் பேசுவது ஆண்களின் வழக்கம்

மென்பதைத் தோழிகள் சொல்லக் கேட்டிருந்ததால் மெல்ல நகைத்தாள் மஞ்சு.

''ஏன் நகைக்கிறாய் மஞ்சு?'' என்று வினவிய இதயசந்திரன் அவள் கைகளை நன்றாக அழுத்திக்கொடுத்தான்.

''ஒன்றுமில்லை'' என்ற அவள் சற்றே அசைந்தாள்.

''பின் ஏன் நகைக்கிறாய்?''

''நகைக்கக் கூடாதா?''

''கூடாது.''

''நகைத்தால் என்ன செய்வீர்கள்?''

''கன்னத்தைத் திருகிவிடுவேன்.''

''திருகுங்கள், பார்ப்போம்.''

அவள் கன்னத்தில் கை விரல்களிரண்டை வைத்து இழைத்தான் இதயசந்திரன்.

அவள் மேலும் நகைத்தாள். ''இன்னும் உறைக்கவில்லையா உனக்கு?'' என்று பொய்க்கோபம் காட்டினான் அவன்.

''இல்லை.''

''இன்னும் அழுத்திக் கிள்ளுவேன்.''

''கிள்ளுங்கள்.''

அவன் அவள் கன்னத்தைச் சற்று அழுத்தியே கிள்ளினான். அவள் பதிலுக்கு அவனுடன் அதிகமாக இழைந்தாள். ''என்ன, இவ்வளவுதான் கிள்ளுவீர்களா?'' என்று கேட்டாள்.

அவன் அவள் கன்னத்தைத் திரும்பிப் பார்த்தான். கிள்ளிய இடத்தில் சிறிது வட்டமாகக் கன்னிச் சிவந்திருந்தது கன்னம். ''சே! சே! நிஜமாகவே அழுத்திக் கிள்ளிவிட்டேன்'' என்று வருந்தினான் இதயசந்திரன்.

''பின் பொய்யாகவா கிள்ளுவீர்கள்?''

''அப்படித்தான் கிள்ள நினைத்தேன்.''

''அதிலென்ன பிரயோஜனம்?''

''வலிக்கக் கிள்ளினால்தான் உனக்குப் பிடிக்குமா?''

''ஆம்.''

''ஏன்?''

''கணவன் கணவனாயிருக்க வேண்டும். கணவன் மனைவியைக் கிள்ளுவதும் இன்பம், அடிப்பதும் இன்பம்.''

இதைச் சொன்ன மஞ்சு அவனிடமிருந்து நீங்கிப் பாறையில் படுத்துக் கொண்டாள்.

''தூங்கு மஞ்சு'' என்று அவள் உடலைத் தடவிக் கொடுத்தான் இதயசந்திரன்.

''தூக்கம் வரவில்லை எனக்கு. நீங்கள் தூங்குங்கள்'' என்றாள் மஞ்சு.

இதயசந்திரன் அவளைப் பார்த்தான். படுத்திருந்த அவளை நெருங்கி அவள் காதில் மெள்ளக் கேட்டான், ''எனக்கு மட்டும் வருமா மஞ்சு?'' என்று.

''எது?''

''உறக்கம்.''

இந்தப் பதிலைக் கேட்ட மஞ்சு மெல்ல நகைத்தாள். இரகசியமாகச் சொல்லவும் செய்தாள். ''உம்... வராது வராது'' என்று.

அவள் சொற்களில் குழைவிருந்தது. சொற்களில் குறைவிருந்தது. அடுத்து வந்த ஆனந்தத்தில் நிறை விருந்தது.

அத்தியாயம் 20

படை பிரித்தல்

மணவரைப் பாறையில் இரண்டாவது இரவும் தொடர்ந்த மங்கள நிகழ்ச்சிக்குப் பிறகு மனோதிடத்தை முன்னைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகப் பெற்றுவிட்ட இதயசந்திரன், அடுத்த இரண்டு மூன்று நாட்களில் படை களைப் பிரிப்பதிலும் ஒழுங்கு செய்வதிலும் அதிக தூரிதத்தையும் இடைவிடா உழைப்பையும் காட்டினான். மணவரைப் பாறையிலிருந்து இரண்டாவது நாள் எழுந்திருந்ததுமே கடலில் சென்று நீண்ட நேரம் நீராடி விட்டு ஈர ஆடையுடனேயே குலாபி கோவிலுக்குச் சென்று அங்கு அர்ச்சகர்களிடமிருந்து குங்குமப் பிரசாதம் வாங்கி நெற்றியிலணிந்து ஜகதீச்வரியை வணங்கிவிட்டு, விடுவிடு என்று தோர்லாவாடாவுக்கு வந்த தமிழக வீரன் தனது அறைக்குச் சென்று புத்தாடை புனைந்தான். கச்சை கட்டி வாள் தரித்துத் தன் இரு கைத்துப்பாக்கிகளையும் இடையில் செருகிக் கொண்டான். பிறகு வெற்றி நடை நடந்து கனோஜியின் அறைக்குச் சென்று அங்கிருந்த காவலரிடம் ஸார்கேலை உடனடியாகப் பார்க்க வேண்டு மென்று கூறினான். அவன் வேண்டுகோளை அறிவிக்க உள்ளே சென்று திரும்பிய காவலன் அவன் செல்லலா மென்பதற்கு அறிகுறியாகத் தலைவணங்கிச் சைகைக் காட்டியதும், உள்ளே சென்ற இதயசந்திரன் அப்பொழுதும் ஸார்கேல் படுக்கையை விட்டு எழுந் திருக்காததையும், அரைத் தூக்கத்துடனேயே அவனை ஏறிட்டு நோக்கியதையும் கண்டு ''மன்னிக்க வேண்டும்...'' என்று மெல்லத் துவங்கினான் பேச.

ஸார்கேல் தலையணையிலிருந்து தலையை சிறிது தூக்கி வலது கையில் முட்டுக் கொடுத்துக் கொண்டு

அரைக் கண்ணாலேயே அவனை நோக்கி, ''என்ன குற்றம் செய்துவிட்டாய்?'' என்று வினவினார் தமது சுயமான கரகரத்த குரலில்.

ஏதோ ரம்பம் அறுப்பதுபோல் எழுந்த அந்த இன்பக் குரலைக் கேட்ட இதயசந்திரன், ''குற்றம் செய்ததாக யார் சொன்னது'' என்று வினவினான் உள்ளே எழுந்த சினத்தைச் சாதாரணக் குரலில் மறைத்து.

ஸார்கேல், ''ஹாவ்!'' என்று பெரிதாகக் கொட்டாவி விட்டார். பிறகு, ''நீதான்'' என்றும் கூறினார்.

''குற்றமேதும் செய்ததாக நான் கூறவில்லை'' என்று சுட்டிக்காட்டினான் இதயசந்திரன்.

''அப்படியானால் மன்னிப்பு ஏன் கேட்டாய்?'' என்ற ஸார்கேல் அந்த அறையே அதிரும்படி இடியிடியென நகைத்துப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கால்களிரண்டையும் தொங்கவிட்டுக் கொண்டார்.

''ஸார்கேல்! நான் கேட்டது மன்னிப்பு அல்ல'' என்று சங்கடத்துடன் கூறினான் இதயசந்திரன்.

''வேறு என்னவோ?'' என்ற கனோஜியின் குரலில் விஷமம் இருந்தது. கண்கள் அவன் வலது கையிலிருந்த கங்கணத்தை ஒரு வினாடி கவனித்து அகன்றன.

''ஸார்கேல்! மன்னிப்பு என்ற வார்த்தை சில சமயங்களில் சம்பிரதாயத்துக்காக உபயோகப்படுத்தப்படுகிறது...'' என்று துவங்கினான் தமிழன்.

''ஆமாம். முக்கால்வாசிச் சொற்களில் உண்மை கிடையாது. சம்பிரதாயத்துக்கே பேசப்படுகிறது'' என்று இடக்காகப் பேசினார் ஸார்கேல்.

''அப்படியல்ல ஸார்கேல்! நான் தங்களை இந்த அறையில் வந்து எழுப்புவது தவறு. இஷ்டப்பட்டால் தாங்கள் [illegible]'' என்று

மேலும் ஏதோ சொல்லப்போன இதயசந்திரனை, ''அது முடியாது'' என்று குறுக்கிட்டு மறுத்தார் ஸார்கேல். அத்துடன் லேசாகச் சிரிக்கவும் செய்தார்.

இதயசந்திரன் சித்தம் சிறிது குழம்பவே செய்தது. ''ஏன் முடியாது ஸார்கேல்? நீங்கள் இங்கு எங்களனை வருக்கும் தலைவரல்லவா?'' என்று வினவினான் அந்தக் குழப்பத்துடன்.

''எனக்கும் பெரிய தலைவியிருக்கிறாள்'' என்றார், ஸார்கேல்.

''யாரோ?''

''குலாபி?''

''குலாபியா?''

''ஆம். அவள் கங்கணம் உன் கையிலிருக்கும் வரையில் உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. தெரியாமலா என் பெண் உனக்கு மங்கலக் கங்கணம் கட்டியிருக்கிறாள்'' என்ற கனோஜி கட்டிலைவிட்டு தரையில் குதித்து அவனருகே வந்து அவன் முதுகில் அறைந்து சிரித்தார் கடகடவென்று. பிறகு அவன் காதுக்கருகில் குனிந்து, ''இன்றும் அதே இடந்தானா?'' என்றும் கேட்டார்.

இதயசந்திரன் மிதமிஞ்சிய வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டான். அந்த முரட்டு மனிதருக்கு என்ன பதில் சொல்வதென்று அவனுக்குப் புரியவில்லை. 'சொந்தத் தந்தையல்லவென்றாலும் இவர் வளர்ப்புத் தந்தைதானே? கொஞ்சங்கூட வெட்கமின்றிப் பேசுகிறாரே. எதைப் பேசலாம், எதைப் பேசக்கூடாது என்ற விவரணையே தெரியவில்லையே இவருக்கு' என்று உள்ளுரச் சொல்லியும் கொண்டான்.

அவன் பதில் பேசாமல் தலை கவிழ்ந்து நிற்பதைக் கண்ட கனோஜி, ''இதயசந்திரா! இப்படியெல்லாம்தான் நீ

அசல் மாலுமியாகிவிட்டாய். கொள்ளைக் கப்பல்களில் செல்லும் மாலுமிகள், அனுபவத்துக்கு இடம் ஏவல் பொருள்களைப் பற்றிக் கவனிப்பதில்லை. அவனுக்குக் கட்டாந்தரையும் கட்டில்தான்!'' என்று சொல்லிச் சிரித்தார். பிறகு கேட்டார், ''இத்தனை காலையில் எங்கு வந்தாய்?'' என்று.

''ஆலிபாக் செல்ல அனுமதி கேட்க வந்தேன்'' என்றான் இதயசந்திரன் கடினம் நிரம்பிய குரலில்.

''அவசர அலுவல் இருக்கிறதா ஆலிபாக்கில்?'' என்று வினவினார் கனோஜி.

''ஆம். படைகளைப் பிரிக்கவேண்டும். ஒழுங்கு செய்ய வேண்டும். தங்கள் உத்தரவு அப்படித்தானே?'' என்று இதயசந்திரனும் பதிலுக்குக் கேள்வியை எழுப்பினான்.

கனோஜி அவனருகாமையிலிருந்து சிறிது விலகி அறையின் சாளரத்தை நோக்கிச் சென்று அங்கிருந்த வண்ணம் ஆலிபாக்கைப் பார்த்தார். ''ஆம் இதயசந்திரா! படைகளைப் பிரித்து உனக்கும் எனக்கும் பாதிப்பாதியாக்கிக் கொள்ள வேண்டியதுதான்'' என்று கூறிவிட்டு, ''அப்பா! மனைவியென்று ஒருத்தி ஏற்பட்ட பின் மனிதனுக்கு எத்தனை சுறுசுறுப்பு! எத்தனை கடமை உணர்ச்சி!'' என்றும் சொன்னார் விஷமமாக. திடீரென அவர் குரல் உறுதியுடனும், அதிகாரத்துடனும் ஒலித்தது. ''ஆம், இன்று துவங்கினால்தான் இன்னும் பத்து நாட்களிலாவது நாம் புறப்பட முடியும். சென்று உன் பணியைக் கவனி. நடுப்பகலில் நான் வந்து கலந்து கொள்கிறேன்'' என்று உத்தரவிட்டார் அதிகாரக் குரலில் இதயசந்திரனுக்கு.

அவருக்குத் தலை வணங்கி வெளியேறிய இதயசந்திரன் கொலாபாவின் நீர்க்கரைக்கு வந்து படகொன்றை எடுத்துத் தானே துழாவிச் செலுத்திக் கொண்டு அக்கரை அடைந்தான். அக்கரையில் சதா காவல் புரிந்துகொண்

டிருந்த வீரர் இருவர் அவன் படகைக் கரையில் இழுத்து விட, படகிலிருந்து குதித்த தமிழன், வீரனொருவனின் புரவியை இரவல் வாங்கிக்கொண்டு அங்கிருந்து கால் காத தூரத்தில் இருந்த பிரதான படைத்தளக் கூடாரத்துக்குச் சென்றான். கூடாரத்திலிருந்த உபதலைவர் நால்வரும் அவன் உள்ளே வந்ததும் எழுந்து நின்று வணங்க அவர்களை உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்த இதயசந்திரன் அவர்களை நோக்கி, ''இன்று முதல் ஆலிபாக்கிலுள்ள படைகளை இரு கூறாகப் பிரிக்கப் போகிறோம்'' என்று அறிவித்தான்.

எப்பேர்ப்பட்ட செய்தியையும் எந்த அதிர்ச்சியோ உணர்ச்சியோ இன்றி வரவேற்கப் பக்குவப்பட்ட கனோஜியின் உபதலைவர் நால்வரும் சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார்கள்.

இதயசந்திரனே மேலும் தொடர்ந்தான்: ''இப்பொழுது நமது படையில் சுமார் பத்தாயிரம் பேருக்குக் குறைவாகவே இருக்கிறார்கள். இதை இரண்டாகப் பிரித்தால் படைப் பிரிவு ஒன்றுக்கு ஐயாயிரம் பேருக்குக் குறைவாகவே தேறலாம்'' என்று கூறி அவர்களை உற்று நோக்கினான்.

உபதலைவர்கள் மீண்டும் தலையையே அசைத்தார்கள் அவன் கூறியதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக. அவர்கள் மௌனத்தைக் கவனிக்கவே செய்தான் தமிழன். ஆகவே அதைக் கலைக்கும் எண்ணத்துடன், ''இந்த ஐயாயிரத்தில் புரவிப்படை எவ்வளவு பேர் கொண்டதாயிருக்கும்?'' என்று ஒரு கேள்வியைத் தொடுத்தான்.

முதன் முதலாக அந்த உபதலைவர்களில் வாலிபனாய் இருந்தவன் வாயைத் திறந்து, ''இரண்டாயிரம் பேர் இருப்பார்கள்'' என்று பதில் கூறினான்.

அந்தப் பதிலைக் கேட்ட இதயசந்திரன் பிரமித்தான், 'இரண்டாயிரம் பேர் கொண்ட புரவிப் படையைக்

கொண்டு பேஷ்வாவின் பெரும் புரவிப் படையை எப்படி எதிர்க்க முடியும்?'' என்று உள்ளூர எண்ணவும் செய்தான். இருப்பினும் அந்த எண்ணத்தை உதறி, ''உங்கள் நால்வரில் இருவர் என்னுடன் வரவேண்டும். இன்னுமிரு வர் ஸார்கேலுடன் செல்ல வேண்டும். என்னுடன் யார் வருகிறீர்கள்?'' என்று வினவினான் அவர்களை நோக்கி.

நால்வரும் வாயைத் திறக்கவில்லை. அவர்களை ஒரு முறை உற்று நோக்கினான். அவர்களில் மூவர் கனோஜி யைப் போல் நடுத்தர வயதுடையவர்கள். கனோஜியுடன் நிலத்திலும் நீரிலும் போர்களைக் கண்டவர்களென்பதை அவர்கள் முக உறுதியும் கண்களும் நிரூபித்தன. கூடாரத்தின் மூலைகளில் தொங்கிக் கொண்டிருந்த அவர்களது வாட்களும் பெரிய முண்டாசுகளுங்கூட அவர்கள் அனுபவத்துக்குச் சான்று கூறின. வாலிபன் மட்டும் சற்றுத் துடுக்குடனிருந்தான். அவன் உடையும் கிட்டத்தட்ட மாலுமிகள் உடை மாதிரியிருந்தது. மகாராஷ்டிரச் சராயும் சட்டையும் மட்டுமே அணிந் திருந்தான் அவன். அவன் வாயைத் திறக்காவிட்டாலும் அவன் கண்களில் இதயசந்திரனுடன் செல்ல வேண்டு மென்ற ஆவலிருந்தது. ஆனால் அந்த ஆவலையும் மற்ற உப தலைவர்களின் பார்வை அடக்கிவிட்டது. அவர்களிட மிருந்து எந்தப் பதிலும் வராது என்பதை இதயசந்திரன் புரிந்துகொண்டதால் அவன் முகத்தில் கோபம் துளிர்த்தது. ''நான் கேட்பதற்குப் பதில் ஏதுமில்லையா?'' என்று வினவினான் சீற்றத்துடன்.

உபதலைவர்களில் சற்றுப் பெரியவனாயிருந்தவன் எழுந்திருந்து இதயசந்திரனை நோக்கிக் கூறினான். ''படைகளைப் பிரிப்பது முக்கியமான முடிவுகளில் ஒன்று. அப்படிப் பிரிக்கப்பட்டாலும் தங்களுடன் யார் செல்வது என்பது அதைவிடப் பெரிய முடிவு. இந்த முடிவுகளைச் செய்யக் கூடியவர் தளபதி ஒருவர்தான். நாங்கள் இதில்

இதயசந்திரன் கோபம் அதிகப்பட்டதை அவன் முகம் உணர்த்தியது. ''கனோஜியின் அனுமதி பெற்று நான் வந்திருக்கிறேன்'' என்றான் தமிழன்

''அத்தாட்சி ஓலை இருக்கிறதா?'' என்று வினவினான், அந்த உபதலைவன்.

''என் வார்த்தை போதாதா?'' என்று சீறினான் தமிழன்.

''போதாது'' என்று திட்டமாக அறிவித்தான் உபதலைவன்.

இதயசந்திரன் புரிந்துகொண்டான் திட்டமாக, கனோஜி தனக்குத் தலைமைப் பதவி அளித்த பிறகுதான் தன்னிடம் யாரும் பணிவார்களென்பதை. கனோஜி உபதலைவர்களை எப்படித் திட்டப்படுத்தி வைத்திருக் கிறாரென்பதை எண்ணி வியப்படைந்தான். இத்தகைய படைக்குள் யாரும் நுழைவதோ கனோஜி சொன்னதாகச் சொல்லிக் காரியத்தைச் சாதிப்பதோ முடியாத காரிய மென்பதை உணர்ந்து கொண்ட இதயசந்திரன் கூடாரத்தைவிட்டு வெளியே சென்று புரவி ஏறிப் படைத்தளத்தின் ஊடே சென்றான்.

பத்தடி பத்தடி தூரத்திற்கொருமுறை சிறுசிறு கூடாரங்கள் இருந்தன. சாலையில் இருபுறமும் கூடாரங் களும், மரங்களின் அடிகளில் அமைக்கப்பட்டிருந்ததால் சிலர் கூடாரங்களுக்கு உள்ளும் சிலர் வெளியிலு மிருந்தார்கள். புரவிகள் கூடாரங்களுக்கு வெளியே சவாரிக்குத் தயாராக நின்றுகொண்டிருந்தன. அப்பொழுது காலை வேளையாதலால் புரவிகளின் முதுகு கைகால்களைக் காசாரிகள் உருவி விட்டுக் கொண்டிருந்தார்கள். வேறு சில வீரர்கள் புரவிச் சேணங்களையும் கடிவாளங்களையும் துடைத்துக் கொண்டிருந்தார்கள். இவைகளைத் தவிர காலையில் காவலைத் துவங்கிய புரவி வீரர்களும் காலாட் படையினரும் வாள்களையும் வேல்களையும் தாங்கி, வழி நெடுகச் சற்று விட்டுவிட்டு

படைவீரர் எங்கும் ஜரூராக இருப்பதைக் கண்ட இதய சந்திரன், படையை கனோஜி எந்தத் துடிப்பில் வைத்திருக்கிறாரென்பதை எண்ணி வியப்பின் வசப்பட்டுக் கொண்டு படைத்தளம் முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டு உச்சி நேரத்துக்கு முதலில் தான் பிரவேசித்த கூடாரத்துக்கு வந்து சேர்ந்தான். கூடாரத்தைக் கண்டதும் ஸ்தம்பித்துப் புரவியில் உட்கார்ந்து கொண்டுவிட்டான். நீண்ட நாளாகத் தான் பார்க்காததும், கனோஜி முதன் முதலாகப் பரசுராமபுரத்தருகில் ஏறி வந்ததுமான அந்த வெண்ணிறப் புரவி, வாயிலில் நின்றிருந்தது. அவன் வந்த ஒலி கேட்டதும் சற்றுத் திரும்பிக் கம்பீரமாக அவனைப் பார்த்தது.

கூடாரத்துக்குள் கனோஜி இருப்பதை அந்தப் புரவியே அறிவித்து விட்டதால் இதயசந்திரன் தன்து புரவியிலிருந்து கீழே குதித்து அந்தக் கூடாரத்துக்குள் சென்றான். அங்கு கனோஜி நடு ஆசனத்தில் பூரண போருடை அணிந்து உட்கார்ந்திருந்தார் ''வா, உபதளபதி. வா!'' என்று இதயசந்திரனை முகமன் கூறி வரவேற்கவும் செய்தார். கூடார வாயிலிலிருந்து இதயசந்திரன் மெல்ல அவர் உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அவரைச் சுற்றிலும் நின்றிருந்த அந்த நான்கு உபதளபதிகளும் அவனுக்குச் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள். இதயசந்திரன் பதிலுக்குத் தலைதாழ்த்தினான். பிறகு கனோஜியை நோக்கி, ''தளபதி அவர்கள் உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்'' என்றான்.

கனோஜி, அவன் உட்கார ஓர் ஆசனத்தைக் காட்டினார். அவன் உட்கார்ந்த பிறகும் நீண்ட நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். பிறகு, அவனை நோக்கி, ''இதயசந்திரா! இந்தப் படையைப் பிரிக்க இந்த உபதலைவர்கள் உனக்கு உதவுவார்கள்'' என்று கூறிய தன்றி, அவர்கள் யாரென்பதை வலியுறுத்த, அந்த [illegible] வாலிபனாயிருந்தவனையும் மற்றோர்

உபத்தலைவனையும் கையால் சுட்டியும் காட்டினார் கனோஜி.

''ஒரு வேண்டுகோள்'' என்றான் இதயசந்திரன்.

''சொல் இதயசந்திரா!'' என்ற கனோஜியின் கண்கள் நிலைத்தன அவன் முகத்தில்.

''எனக்கு இரு உபதளபதிகள் தேவையில்லை'' என்றான் தமிழன்.

''நல்லது.''

''ஒருவர் போதும்.''

''யாரைக் கேட்கிறாய்?''

''இந்த வாலிபன் போதும்.''

''சரி, அழைத்துச் செல்.''

''இன்னொரு வேண்டுகோள்.''

''என்ன வேண்டுகோள்.''

''படையைத் தாங்களே பிரித்துத் தருவது நல்லது.''

''சரி. அப்படியே செய்வோம்'' என்ற கனோஜி, அங்கேயே உட்கார்ந்து கொண்டு காகிதமும் எழுது கோலும் கொண்டு வரச்சொன்னார். காகிதத்தில் விடுவிடு என்று பல குறிகளைப் போட்டார். சில இடங்களைச் சுழித்தார். பிறகு நான்கு உபதலைவர்களையும், இதய சந்திரனையும் அழைத்து, ''நன்றாகக் கவனியுங்கள். இதோ சுழிக்கப்பட்டிருக்கும் இடங்களிலுள்ள படைப் பிரிவுகளை விட்டு மற்றப் பிரிவுகளை ஒன்று சேர்த்தால் படை பாதியாகப் பிரிந்துவிடும். சுழித்த இடங்கள் எனக்கு. சுழியா இடங்கள் உபதளபதிக்கு'' என்று மிகச் சுலபமாகக் கூறி அந்தக் காகிதத்தை உபதலைவர்களிடம் கொடுத்தார்.

அவர் கூறியபடி படை அடுத்த 'இரண்டு நாட்களுக்குள் பிரிக்கப்பட்டது. இரண்டு நாளும் இதயசந்திரன்

ஆலிபாக்கிலேயே தங்கினான். தனக்கென்று தனிக் கூடாரமும் அடித்துக் கொண்டான். மூன்றாவது நாள் தனது உபதலைவனான வாலிபனை அழைத்து, "உன் பெயரென்ன?" என்று வினவினான்.

"சுகாஜி" என்றான் வாலிபன்.

"சுகாஜி! நமது படைகளை ஆலிபாக்கில் வடகோடிக்கு நகர்த்திவிடு. கொலாபாவை அடுத்து தளபதியின் பிரிவு மட்டும் இருக்கட்டும்" என்று உத்தரவிட்டான்.

அவன் உத்தரவை உடனடியாக நிறைவேற்றினான் சுகாஜி. மூன்றாவது நாளிரவு தனது படைக் கூடாரத்திலிருந்து கண்ணுக்கெட்டியவரை விரிந்து கிடந்த தனது படைப் பிரிவையும் ஆங்காங்கு எரிந்த தீப்பந்தங்களையும் பார்த்து இதயசந்திரன் பெரும் பூரிப்படைந்தான். அப்படிப் பூரிப்படைந்து கொண்டிருந்த சமயத்தில் தூரத்தே இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியொன்று வந்தது. அந்த வண்டி தூரத்திலேயே நிறுத்தப்பட்டதும் அதிலிருந்து இறங்கிய உருவம் அவன் கூடாரத்தை நோக்கி நடந்து வந்தது. அதைக் கண்ட இதயசந்திரன் பேரதிர்ச்சி அடைந்தான். கனோஜியை மனமார சபிக்கவும் செய்தான். தன் போர் முயற்சிக்கு அதைவிடப் பெரிய இடையூறு ஒன்றுமிருக்க முடியாதென்றும் சொல்லிக் கொண்டான் தன்னுள்.

அத்தியாயம் 21

உரிமையுள்ளவள்

இரட்டைக் குதிரை வண்டியிலிருந்து குதித்த எமிலி முழங்காலுக்கு மேல் தொடையின் அரைப் பாகம் வரை ஏறியிருந்த மஞ்சள் நிறக் கௌனுடனும், கழுத்திலிருந்து மார்புவரை அர்த்த சந்திர வடிவமாக வெட்டி விடப்பட்ட கௌனின் மேற்பகுதியுடனும், அறவே கையில்லாததால் தோள்களை மட்டுமே தழுவி நின்ற உடையின் பக்கப் பகுதிகளுடனும், தனது கூடாரத்தை நோக்கி வெகு சுந்தரமாக நடந்து வந்ததைக் கண்டதும் இதயசந்திரன் பேரதிர்ச்சியடைந்து கனோஜியைச் சபிக்கவும் செய்தானென்றால் அதற்குக் காரணங்கள் பலவல்ல, இரண்டேதான். ஒன்று தனது சொந்தப் பலவீனம், இன்னொன்று மஞ்சு என்ன நினைத்துக் கொள்வாளோ என்ற பயம். ஆனால் அந்த இரண்டையும் அத்தருணத்தில் அவன் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. திருமணமாவதற்கு முன்பு தனது நிலை எப்படியிருந்தாலும், திருமணமான பின்பு தனது மனம் கண்டபடி அலையாது என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டான் தமிழக வாலிபன். 'இனி அந்தப் பயமில்லை. ஆனால் ஒரு பெண் தனித்துப் படையுடன் வந்தால் படை வீரர்கள் அவளையே சுற்றுவார்களே! சில சமயங்களில் அத்துமீறியும் நடப்பார்களே! இதற்கு என்ன செய்வது?' என்று உள்ளூரக் கேள்விகளை எழுப்பிக் கொண்டாலும், உண்மைக் காரணங்கள் அவையல்ல வென்பதைப் புத்தியின் ஒரு பகுதி அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தது. மிஸ் எமிலி மட்டும் அளவுக்கு அதிகமாகத் தன்னை நெருங்கினால் தன் உறுதி காற்றில் பறந்துவிடும் என்பதை அவன் உணர்ந்தேயிருந்தானென்றாலும் அதை அவன் மனம் ஒப்புக்கொள்ளாமல்,

'வரட்டும் எமிலி, இனி யார் வந்தாலென்ன? நான்தான் மஞ்சுவுக்குச் சொந்தமாயிற்றே' என்று வீம்பு பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அவன் கண்கள் மிஸ் எமிலியின் நடை ஒய்யாரத்தைக் கவனிக்கவும், அவற்றை வாங்கி மனத்திற்கு அனுப்பி வைக்கவும் தயங்கவில்லை. வண்டியிலிருந்து குதித்தபோது அவள் கௌன் வண்டி முகப்பில் சிக்கிச் சற்று ஏறிவிட்டதால் அவள் கால்களின் பரிமாணம் இடுப்புவரை பூராவாகத் திடீரென்று தெரிந்துவிட்டதைக் கண்கள் பார்த்தன. ஆடையை வண்டி சிக்கலிலிருந்து அரை விநாடியில் அவள் கழற்றிச் சரி செய்துகொண்டு விட்டாலும், அந்த அரை விநாடியில் தெரிந்த ஜோதியைத் தமிழனின் கூரிய கண்கள் அள்ளிப் பருகத் தயங்கவில்லை. இறங்கிய பின் அவள் நடந்தபோது கௌனின் கீழ்ப்புறம் அவள் பூந்தொடைகளைத் தழுவிப் பக்கவாட்டில் நகர்ந்ததையும், மார்பு மட்டும் திண்மையின் காரணமாக அதிகமாக அசங்காமல் மெல்ல கௌனுக்குள் உராய்ந்ததையும், கண்கள் காணத் தவறவில்லை.

இந்த நிலையில் கையிலொரு பெட்டியையும் ஏந்தி இதயசந்திரன் கூடாரத்தை நோக்கி வந்த எமிலி, கூடாரத்தை அடைந்ததும் வாயிலில் நின்ற வண்ணமே வாயிலுக்கு நேராக உட்கார்ந்து கொண்டிருந்த உபதளபதியை நோக்கி, ''உட்கார்ந்த இடத்திலிருந்து உபதளபதியவர்கள் எழுந்திருக்க மாட்டாரோ?'' என்று வினவினாள் கிள்ளைக் குரலில்.

இதயசந்திரன் உட்கார்ந்த நிலையிலேயே மிஸ் எமிலியை நோக்கித் தனது மனத்தை இரும்பாக்கிக் கொண்டு கடினமான குரலில் கேட்டான், ''உன்னை யார் வரச் சொன்னது இங்கே?'' என்று.

''படைத் தளபதி, மகாராஷ்டிர ஸார்கேல், ஸர்ன [illegible] அவர்கள்'' என்று கனோஜியின்

சகல விருதுகளையும் சேர்த்தும், கால்களைக் குறுக்கி பிரிட்டிஷ் சோல்ஜர் போல் நின்று தலையை ஆணவத்துடன் நிமிர்ந்தும், மிகக் கடினமான குரலில் பதில் கூறினாள் மிஸ் எமிலி.

அப்பொழுதும் இதயசந்திரன் ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கவுமில்லை, கடுமையை முகத்திலிருந்தோ குரலிலிருந்தோ தளர்த்தவுமில்லை. ''எதற்காக வரச் சொன்னார்?'' என்று அடுத்த கேள்வியும் முரட்டுத்தனமாக எழுந்தது தமிழனிடமிருந்து.

மிஸ் எமிலியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியுமில்லை. வரண்டு கிடந்த முகம்போல வரண்ட குரலும் எழுந்தது. ''படைத்தளத்துக்கு நர்ஸை எதற்காக அனுப்புவார்களோ அதற்காக'' என்று பதில் கூறினாள்.

இதயசந்திரன் அப்பொழுதும் அசைந்தானில்லை. மேலும் பிடிவாதத்தைக் காட்டி, ''அவரது படைப் பிரிவுக்கே நர்ஸை வைத்துக் கொள்ளலாமே'' என்றான்.

மிஸ் எமிலியின் அழகிய அதரங்கள் மடிந்து இகழ்ச்சி முறுவல் கோட்டின. ''அவசியமில்லையென்று நினைக்கிறார் ஸார்கேல்'' என்ற சொற்கள் வெகு விஷமமாக உதிர்ந்தன அவளுடைய உதடுகளிலிருந்து.

''எப்படித் தெரியும் உனக்கு? உன்னிடம் சொன்னாரா?'' இதயசந்திரன் குரலில் வீம்பும் உக்கிரமும் ஒலித்தன.

''இல்லை. நானே ஊகித்தேன்'' என்றாள் எமிலி மேலும் விஷம ஒலியைக் குரலில் காட்டி.

''என்ன ஊகித்தாய்?''

''அவர் படைக்கு நர்ஸ் தேவையில்லை என்பதை.''

''ஏன்?''

''அவர் படையில் அதிக வீரர்கள் காயமடையலோ இறக்கவோ பிரமேயமிருக்காது.''

''எப்படித் தெரியும் உனக்கு?''

''அவர் என்னை இங்கு அனுப்பி வைத்ததிலிருந்து.''

மிஸ் எமிலி வேண்டுமென்றே இப்படிப் பதில் சொல்லுகிறாளென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான் தமிழன். ஸார்கேல் படைப் பிரிவில் ஆள் சேதம் ஏற்படாது, காயமேற்படாது, தன் படைப் பிரிவில்தான் ஏற்படுமென்றால், தனக்கு அவரைப்போல் படையை நடத்திச் செல்ல முடியாதென்று அர்த்தமென்பதை உணர்ந்ததாலும், தன்னை அவமதிக்கவே மிஸ் எமிலி அப்படிப் பேசுகிறாளென்பதைப் புரிந்து கொண்டதாலும், அவளைக் கூடார வாயிலிலேயே நிற்க வைத்துப் பேசுவது சரியல்லவென்று மெள்ள அவனுக்கு உறைக்கத் துவங்கியதாலும், இதயசந்திரன் மெள்ள எழுந்து கூடார வாயிலுக்கு வந்து எமிலியை ஏற இறங்கப் பார்த்தான் ஒருமுறை. அவள் அழகு சித்தத்தைக் கலக்குவதாயிருந்தது. கௌனுடன் அவள் நின்று கொண்டிருந்த தோரணை மட்டுமின்றித் தலையில் அவள் அணிந்திருந்த நர்ஸ் வெள்ளைக் குல்லாயும், காதுக்கு மேல் செருகியிருந்த சிவப்புக் காட்டு மலரும் அவள் அழகை ஆயிரம் மடங்கு உயர்த்தியிருந்தது. அவள் கண்களில் அப்பொழுதும் ஒரு கடுமையிருந்தாலும் அந்தக் கடுமையினூடே அலை நகைப்பதாகவும் தோன்றியது தமிழனுக்கு. அதிக நேரம் அவளைப் பார்த்தால் தன் நிலை என்ன ஆகுமோ என்ற பயத்தால், ''சரி! உனக்கு என்ன வேண்டும்?'' என்று வினவினான்.

''படைகள் நகரும்வரை தனிக் கூடாரம் வேண்டும்'' என்று கூறினாள் எமிலி.

''எதற்கு தனிக் கூடாரம்'' என்று கேட்டான் தமிழன் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக.

மிஸ் எமிலி விஷம நகை காட்டினாள். ''உங்கள் கூடாரத்தில் தங்கலாமென்றால் தனிக் கூடாரம் தேவை யில்லை'' என்ற எமிலி அவனைத் தாண்டிக் கூடாரத்துக் குள் செல்லக் காலடி எடுத்து வைத்தாள்.

''இரு இரு எமிலி. உனக்குத் தனிக் கூடாரமே தருகிறேன்'' என்று அச்சத்துடன் கூறிய இதயசந்திரன், ''சுகாஜி, சுகாஜி'' என்று கூவினான் இரைந்து. சற்று எட்ட இருந்த ஒரு கூடாரத்திலிருந்து வந்து சுகாஜியிடம், ''தர்ஸுக்கு ஒரு தனிக் கூடாரம் அடித்துக் கொடு. வேறு எந்த சௌகரியங்கள் வேண்டுமோ செய்து கொடு'' என்று உத்தரவிட்டான் அவசர அவசரமாக.

அவன் உத்தரவிடுவதற்குள் வாயிலிலேயே மிஸ் எமிலியை நிற்க வைத்துப் பேசிக்கொண்டிருந்த காலத்துக்குள், மகாராஷ்டிர வீரர்கள் கூட்டம் அவளுக்குப் பின்னால் கூடிவிட்டது. அழகிய பெண்ணொருத்தி வண்டியிலிருந்து குதித்ததுமே காவற் பணியிலிருந்த புரவி வீரர் இருவர் புரவிகளை நடத்தி வண்டிக்கருகில் வந்தனர். பக்கக் கூடாரங்களில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த மற்றும் சில வீரரும் எழுந்து அவளுக்குப் பின்புறத்தில் சற்று எட்ட நின்றுகொண்டு அவளைப் பார்த்து வாயைப் பிளந்தனர். இவையனைத்தையும் கவனித்த இதயசந்திரன் பெருமூச்சு விட்டான். இனிமேல் தன் படையில் நிம்மதியும், ஒழுங்கும் இருக்குமா என்ற சந்தேகம் அவன் மனத்தில் எழுந்து பிசாசைப் போல் பேருருவம் எடுத்தது. மிஸ் எமிலிக்குக் கூடாரம் தயார் செய்யச் சொன்னதுமே சுகாஜி மாத்திரமின்றி மற்றும் பல வீரரும் விரைந்ததையும், போர்ப் பொருட்சாலையிலிருந்து திரைச் சீலைகளும், கூடாரத் துணிகளும் ஆணிகளும் நீண்ட கழிகளும், வெகு துரிதமாகத் தன் கூடாரத்துக்குப் பக்கத்தில் வந்துவிட்டதையும் கண்ட இதயசந்திரன் சங்கடம் பெரிதும் அதிகமாகவே, அவன் மீண்டும் தனது கூடாரத்திற்குள் நுழைந்தான். மிஸ் எமிலி வெளியிலிருந்த சுகாஜியை நோக்கி,

''வண்டியில் இரண்டு பெரிய கள்ளிப் பெட்டிகளிருக்கின்றன. அவற்றை ஜாக்கிரதையாக இறக்கிக் கூடாரத்தில் வையுங்கள். பெட்டிகளுக்குள் கண்ணாடிக் குப்பிகளிருக்கின்றன. ஜாக்கிரதை'' என்று எச்சரித்துவிட்டு இதய சந்திரன் கூடாரத்துக்குள் நுழைந்தாள். அந்தக் கூடாரத்தின் நட்ட நடுவிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு கூடாரத்தின் உட்பகுதியைச் சுற்றுமுற்றும் நோக்கினாள். கூடாரம் ஓரளவு பெரிதாகவே இருந்தது. மூன்று பகுதிகளிலிருந்த மூன்று திரைச் சீலைகள் கூடாரத்தில் மூன்று அறைகள் இருப்பதை நிரூபித்தன. அவற்றைக் கண்ட மிஸ் எமிலி மெல்ல முறுவல் கொண்டு, ''மூன்று அறைகள் இருக்கின்றனவே'' என்றாள் மெல்ல.

''ஆம்.'' இதயசந்திரன் பதில் அந்த ஒற்றைச் சொல்லுக்கு மேல் ஓடவில்லை. அவன் கூடாரத்தின் ஒரு பகுதியிலிருந்த ஒரு நாற்காலிமீது ஒரு கையை மட்டும் ஊன்றிச் சாய்ந்துகொண்டே பதில் கூறினான் அவளுக்கு.

''இந்த அறைகளில் ஒன்றிருந்தாலே போதும் எனக்கு'' என்று கூறினாள் எமிலி மீண்டும்.

இதயசந்திரன் பதில் கூறவில்லை. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்ததால் பெருமூச்சு மட்டும் விட்டான்.

அதைக் கவனித்தாலும் கவனிக்காதது போலவே கூறினாள் மிஸ் எமிலி, ''இங்கு நான் வந்தது உங்கள் அதிர்ஷ்டம்'' என்று.

எரிச்சல் மிக அதிகமானதால் இதயசந்திரன், ''என்ன அதிர்ஷ்டமோ?'' என்று கேட்டான்.

கவர்னர் ஏஸ்லாபியின் பிரத்தியேக நர்ஸ், பிரிட்டிஷ் பம்பாய் பாசறையின் ஆஸ்பத்திரி அதிகாரிக்கு அடுத்த பதவி வகிப்பவள். பல பேருக்குக் காய சிகிச்சை செய்திருப்பவள். உங்களுக்குக் கிடைப்பது அதிர்ஷ்ட மல்லவா! இதனால் படைப் பிரிவுக்கு எத்தனை லாபம்

எத்தனை உயிர்கள் மீட்கப்படும் என்பதை எண்ணிப் பார்த்தீர்களா?'' என்று சற்று சுய ஸ்தோத்திரத்தில் இறங்கினாள் எமிலி.

இதயசந்திரன் சரேலென்று வெடித்தான். ''பார்த்தேன் பார்த்தேன். நீ வந்து இறங்கியபோதே படை வீரர்கள் உனக்குப் பின்னால் வந்து பல்லிளிப்பதைப் பார்த்தேன். உனக்குக் கூடாரமடிக்க உத்தரவிட்டதும் எத்தனை பேர் பறந்தார்களென்பதையும் பார்த்தேன், இனி இங்கு உன் உத்தரவுதான் செல்லும். என் உத்தரவு செல்லாது'' என்று இரைந்தான்.

மிஸ் எமிலி சிரித்தாள் கலகலவென்று. ''இரண்டு பேரும் சேர்ந்து உத்தரவிட்டால் போகிறது'' என்று கூறவும் செய்தாள் சிரிப்புக்கிடையே. பிறகு நாற்காலியிலிருந்து எழுந்து கூடாரத்துக்கு வெளியே சென்றாள். அவளது கூடாரம் அநேகமாகத் தயாராகியிருந்தது. அழகாகவும் தயாராகியிருந்தது. அதன் வாயிலில் ஒரு வண்ணச்சீலை தொங்கிக் கொண்டிருந்தது வீரர்களுக்குச் சற்றுக் கலையுணர்வும் இருப்பதை உணர்ந்து கொண்ட எமிலி அந்தக் கூடாரத்தை நோக்கி நடந்தாள். கூடாரத்துக்குள் அவள் நுழைந்ததும் அப்படியே பிரமித்துப் போனாள். உட்புறம் இரண்டு அறைகளாகத் திரைச் சீலைகளால் பிரிக்கப்பட்டிருந்தது. அங்கு சீலைகளை அப்பொழுதே கட்டிமுடித்த வீரனொருவன் ஒரு சீலையை அகற்றிக் காட்டினான் உள்ளறையை. அந்த உள்ளறையில் ஒரு சிறு மடக்கு மேஜையும், மடக்கு நாற்காலியும் போடப்பட்டிருந்தன. சாதாரணமாக பிரிட்டிஷ் மேஜர்களுக்குத்தான் ராணுவத்தில் இந்த வசதியளிக்கப்படுமென்பதை அறிந்திருந்த எமிலி, நன்றி ததும்பும் கண்களை அந்த வீரர்கள் மீது திருப்பினாள். ''இவை ஏது?'' என்றும் கேட்டாள்.

''இந்த மாதிரி எவ்வளவோ பிரிட்டிஷ் கப்பல்களிலிருந்து கிடைத்திருக்கின்றன. தோர்லாவாடா பொருள்

கூடத்தில் இருக்கின்றன'' என்று கூறினான் இரு வீரரில் ஒருவன்.

தனது நாட்டாரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சாமான்கள் அவை என்பதை அறிந்ததால் மனம் சிறிது வருந்தினாலும் அதை அடக்கிக் கொண்டாள் எமிலி.

இரட்டைக் குதிரை வண்டி கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. பெட்டிகள் வெகு கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இறக்கப்பட்டன. உள்ளே கொண்டு வந்து மிஸ் எமிலி காட்டிய இடத்தில் பெட்டிகளை வைக்கவும் செய்தார்கள் வீரர்கள்.

''இந்தக் கூடாரத்தை அடுத்தாற்போல், அதாவது பின்புறத்தில் நான்கு குச்சிகளை நட்டு அவற்றைச் சுற்றி ஒரு படுதாவைக் கட்டுங்கள்'' என்றாள் எமிலி.

''எதற்கு அது?'' ஏதும் புரியாமல் கேட்டான் சுகாஜி.

''நான் குளிக்க'' என்ற எமிலி அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள்.

சுகாஜி அந்தப் புன்முறுவலைக் கண்டு மதி மயங்கி நின்றான். பிறகு துரிதமாகவே வெளியே சென்றான். அடுத்த சில நிமிடங்களில் கூடாரத்தின் பின்புறம் யாரோ கடப்பாறை கொண்டு குழி தோண்டுவது காதில் விழவே தனது நீராட்ட அறை தயாராகிறது என்று தீர்மானித்துக் கொண்டாள் மிஸ் எமிலி. கால் ஜாமம் கழித்துக் கூடாரத்துக்குப் பின்புறம் சென்று அந்த அறைக்குள் நுழைந்த எமிலி வியப்பில் ஆழ்ந்து போனாள். குளிக்க நல்ல மறைவு மட்டுமல்ல, ஒரு மரக் குவளையும் வைக்கப்பட்டிருந்தது.

அதற்குப் பிறகு அவள் கூடாரத்தைவிட்டு வெளியே வரவில்லை. கூடாரத்தின் ஒரு மூலையில் வைக்கப் பட்டிருந்த ஹரிக்கேன் விளக்கைச் சிறிது தூண்டிவிட்டுத் தரையில் சேலை விரித்துப் படுத்துக் கொண்டாள். ஏதேதோ எண்ணங்கள் அவள் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

யம்பாயின் நினைப்புகளெல்லாம் எழுந்து தாண்டவமாடிக் கொண்டிருந்தன. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அர்த்த ராத்திரியும் நெருங்கிக் கொண்டிருந்தது. உறக்கம் அறவே வராததால், மிஸ் எமிலி தன்மீது ஒரு போர்வையை எடுத்து நன்றாகப் போர்த்திக் கொண்டு வாயில் திரைச்சீலையை நீக்கிக் கூடார வாயிலுக்கு வந்தாள். அப்பொழுது ஒரு புரவி மெல்ல வந்து இதயசந்திரன் கூடார வாயிலில் நின்றதையும், அதிலிருந்து யாரோ இறங்கியதையும் கண்டாள். இறங்கியவரின் முகத்தில் சரேலெனக் கூடாரத்தின் பக்கத்திலிருந்த பந்தத்தின் ஒளி வீசவே மிஸ் எமிலியின் முகத்தில் திடீரெனத் துயரத்தின் சாயை படர்ந்தது.

பந்தத்தின் வெளிச்சத்தில் தெரிந்தது மஞ்சுவின் மலர் முகம். அவள் கண்களில் பளிச்சிட்டது இணையிலா வேட்கை. சரேலென்று வாசல் திரைச்சீலையை விலக்கிக் கொண்டு உள்ளே சென்றாள் மஞ்சு. எமிலியின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. மஞ்சு வெகு வேகமாகத் தள்ளிச் சென்ற இதயசந்திரனின் வாசல் திரைச் சீலை இருபுறமும் ஆடி ஆடி நின்றது. எமிலியின் இதயமும் அந்தத் திரைச்சீலையைப் போலவே ஆடியது. ஆனால் நிற்கவில்லை. 'உரிமையுள்ளவள், கொடுத்து வைத்தவள்' என்ற சொற்கள் அவள் மனத்தில் எழுந்து பெரிதாக ஒலித்தன.

அத்தியாயம் 22

பத்துநாள் திட்டம்

இதயசந்திரன் கூடாரத்துக்குள் மஞ்சு எத்தனை ஆனந்தத்திலிருப்பாள், எத்தனை விதமான இன்பங்களை அனுபவிப்பாள் என்பதை எண்ணிப் பார்த்ததால் இதயம் விம்மத் துன்பப் பெருமூச்செறிந்த மிஸ் எமிலி, தனது கூடாரச் சீலையைச் சரேலெனத் தொங்கவிட்டு உள்ளே சென்று தரையிலிருந்த சீலையில் மீண்டும் படுத்துக் கொண்டாளாயினும் அவளுக்கு உறக்கம் அடியோடு வரவில்லை. இதயசந்திரன், கவர்னர் ஏஸ்லாபியைப் பார்க்க வந்த நாளாக அவனுக்கும் தனக்கும் ஏற்பட்ட இணைப்பைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்ததன்றி இணைப்பெல்லாம் மேலொடு நின்றுவிட்டதேயொழியப் பூர்த்தி பெறவோ, பூரணத்துவம் அடையவோ இயலாது போய்விட்டதை நினைத்து ஏங்கினாள் இங்கிலாந்தின் ஏந்திழை. அவனும் தானும் சேர்ந்து கவர்னர் நடன விருந்தில் இணைந்தாடியதும், காயமடைந்த நிலையில் தனது பணைத்த மார்பில் அவன் தலை புரளக் கிடந்ததும் அவள் மனத்திலே வலம் வந்ததால் ஒரு துயரப் புன்முறுவல் அவள் இதழ்களிலே இடம் பெற்றது. இத்தகைய நினைப்புகளில் ஆழ்ந்த கடைசியில் நித்திரை வசப்பட்ட மிஸ் எமிலி, மறுநாள் காலையிலும் மஞ்சு இதயசந்திரன் கூடாரத்தின் வாயிலில் நின்றிருந்ததைப் பார்த்து 'ஒருவேளை இவளும் படையுடன் வருவாளோ' என்று நினைத்தாள் ஒரு கணம். அதைப் பற்றி அறிய வேண்டுமென்ற அவா இருந்ததால் தனது கூடார வாயிலில் நின்ற வண்ணம் மஞ்சுவைப் பார்த்து முறுவல் கோட்டினாள்.

மஞ்சு அன்று காலையில் மிகவும் களைப்பும், அதனாலேயே அழகும் பொருந்திய வதனத்துடனும், சற்றே கலைந்த குழலுடனும் நின்றிருந்தாள். அன்றும் மாலுமி உடையே அணிந்திருந்ததால் அவள் மேல்சட்டையும் கீழ்ச் சராயுங்கூட மிகவும் கசங்கிக் கிடந்தன. அடுத்த கூடாரத்திலிருந்து மிஸ் எமிலி தன்னை நோக்கியதையும் புன்முறுவல் செய்ததையும் கண்ட மஞ்சு அதன் காரணத்தை உணர்ந்ததால் சிறிது வெட்கச் சாயை அவள் முகத்தில் படர்ந்தது. அதைத் தொடர்ந்து புன்முறுவல் ஒன்றும் இதழ்களில் தவழ்ந்தது.

இருவரும் பரஸ்பர புன்முறுவலுக்குப் பிறகு ஏதும் பேசாமல் சில வினாடிகள் நின்றிருந்தாலும் மிஸ் எமிலியே கேட்டாள் கடைசியாக. ''இப்பொழுதுதான் வந்தீர்களா?'' என்று ஏதுமறியாதவள்போல.

மஞ்சுவின் முகத்தில் குபீரென்று வெட்கத்தின் சாயை படர்ந்தது. ''இல்லை'' என்ற ஒரு சொல் மட்டும் உதிர்ந்தது அவள் உதடுகளிலிருந்து.

''நேற்று இரவு நான் உங்களைப் பார்க்கவில்லையே'' என்றாள் மீண்டும் எமிலி.

''நேரங்கழித்து வந்தேன்'' என்று இழுத்தாள் மஞ்சு.

''ரொம்ப நேரமோ?''

''ஆம்.''

''என்னை எழுப்பக் கூடாதோ?''

''எதற்கு?''

''என்னுடன் படுத்துக் கொண்டிருக்கலாமே.''

இதைச் சொன்ன எமிலியும் சிரித்தாள், கேட்ட மஞ்சுவும் நகைத்தாள். இந்தச் சிரிப்பைக் கேட்டதாலோ

என்னவோ கூடாரத்துக்குள்ளிருந்த இதயசந்திரனும், ''என்ன சிரிப்பு அங்கே?'' என்று வினவிக்கொண்டே வெளியில் வந்தான். அடுத்த கூடாரத்தில் மிஸ் எமிலி நிற்பதைக் கண்டதும் சிறிது நேரம் அசைவற்று நின்றான். பிறகு உள்ளே சென்று விட்டான்.

மிஸ் எமிலி கேட்டாள், ''மஞ்சு! ஏன் உபதனபதி உள்ளே சென்று விட்டார்?'' என்று.

''என்னைக் கேட்டால்?'' என்று கூறிய மஞ்சு புன்முறுவலும் செய்தாள்.

''பின் யாரைக் கேட்பது?''

''சுகாஜியைக் கேட்கலாமே?''

''சுகாஜி நேற்றிரவு அவருடன் தங்கவில்லையே!'' இப்பொழுதும் இரு மங்கையரும் நகைத்தார்கள். பிறகு மஞ்சு தளர்நடை நடந்து மிஸ் எமிலியின் கூடாரத்துக்கு வந்தாள். அவளுடனே பல் துலக்கி முகங்கழுவி நீராடவும் செய்தாள். பிறகு மிஸ் எமிலியைக் கேட்டாள், ''உன்னிடம் ஏதாவது அதிகப்படி சேலையிருக்கிறதா?'' என்று.

''இல்லையே மஞ்சு.''

''வேறு ஏதாவது நான் அணியும்படியாக...''

''ஏன், நீ ஏதும் கொண்டு வரவில்லையா?''

''இல்லை. திடீரெனப் புறப்பட்டு வந்தேன்.''

''என்ன அத்தனை நேரம்? என்ன கொள்ளை போகிறது இங்கே?''

''போ எமிலி.''

''சரி சரி. இரு'' என்று கூறிய மிஸ் எமிலி தான் அணியும் ஒரு பிரிட்டிஷ் சராயையும் ஜாக்கெட்டையும்

எடுத்துக் கொடுத்தாள். அவற்றை அணிந்து அலங்காரம் செய்து கொண்ட மஞ்சு, ''மிஸ் எமிலி! என்று இந்தப் படை புறப்படும் தெரியுமா?'' என்று வினவினாள், கலையுடன்.

''இன்னும் பத்துநாள் ஆகும்போல் தெரிகிறது'' என்றாள் மிஸ் எமிலி.

''எப்படித் தெரியும் உனக்கு?''

''படை பிரிந்து இரண்டு நாட்களே ஆகின்றன. அதற்குள் அணி அணியாக உட்பிரிவுகளைச் செய்து அவற்றை வருவதாகக் கேள்வி.''

''யார் சொன்னார்கள் உனக்கு?''

''கொலாபாவில் பேசிக் கொண்டார்கள்.''

''இங்கு என்ன பேசிக் கொள்கிறார்கள்?''

''இங்கு இன்னும் யாருடனும் நான் பேசவில்லை.''

''இன்று விசாரித்து வை. இன்றிரவும் வருகிறேன்.''

மிஸ் எமிலி நகைத்தாள். ''இன்றிரவும் என்ன, நாங்கள் இங்கிருக்கும் வரை ஒவ்வொரு இரவும் வருவாயென்று எனக்குத் தெரியாதா மஞ்சு?'' என்றும் கூறினாள் நகைப்பினூடே.

மஞ்சு அவள் கன்னத்தைப் பிடித்து இழைத்தாள். ''தெரியும் தெரியும் உனக்கு'' என்று இன்பத்துடன் கூறவும் செய்தாள். பிறகு அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

''மஞ்சு!'' எமிலியின் குரல் எச்சரிக்கையுடன் எழுந்தது.

''ஏன் எமிலி?'' என்றாள் மஞ்சு, எமிலியைத் தழுவிய நிலையில்.

''என்னை எதற்காகக் கட்டிக் கொள்கிறாய்?''

''போ எமிலி!''

''அவர் பார்த்தால் என்ன நினைப்பார்?''

''என்ன நினைப்பாராம்?''

''சிறுவார்.''

''ஏன்?''

''அவர் இருக்கும்போது என்னை...'' மிஸ் எமிலி வார்த்தையை முடிக்கவில்லை. முடிக்க முடியவில்லை. அவள் வாயை மஞ்சு பலமாகப் பொத்தினாள்.

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. கடைசியில் மிஸ் எமிலியை விட்டு விலகி நின்று கேட்டாள் மஞ்சு, மிஸ் எமிலி! நீ எனக்கு ஒரு வாக்குத் தரவேண்டும்!''

மிஸ் எமிலியின் முகத்தில் சிந்தனை நிலவியது. ''என்ன வாக்கு மஞ்சு?'' என்ற கேள்வியும் எழுந்தது சந்தேகத்துடன்.

''மிஸ் எமிலி...'' மஞ்சுவின் குரலில் சற்று வேதனை படர்ந்திருந்தது.

''சொல் மஞ்சு.'' மிஸ் எமிலியின் குரலில் அன்பும் பரிதாபமும் கலந்து கிடந்தன.

மஞ்சு சிறிது யோசித்தாள். ஒருமுறை எமிலியை ஏறெடுத்து நோக்கினாள், பிறகு கண்களை மீண்டும் நிலத்தில் நாட்டினாள். தழுதழுத்த துன்பக் குரலில், ''எமிலி! எனக்கு உடன்பிறந்தார் யாருமில்லை. தாய் தந்தையரைக் கூட எனக்குத் தெரியாது. நீதான் எனக்கு உடன் பிறந்தவள். நீ அவருடன் போர் முனைக்குச் செல்கிறாய்...'' என்று கூறித் தாமதித்தாள்.

''ஆம் மஞ்சு'' என்ற இரண்டே சொற்கள் ஆதரவுடன் உதிர்ந்தன மிஸ் எமிலியின் அழகிய உதடுகளிலிருந்து.

''அதிகமாகப் போனால் நீ கூறியபடி இன்னும் பத்து நாட்கள் நான் அவரைக் காண வந்துபோவேன். படை

நகர்ந்து விட்டால் நீதான் அவருடன் இருப்பாய். போர் முனையில் அவருக்கு ஆபத்து நேராமல் நீ பார்த்துக் கொள்ளவேண்டும்'' என்று கெஞ்சும் குரலில் கேட்டாள் லார்கேலின் மகள்.

ஜலதீபத்தின் தலைவியெனப் பிரசித்தி பெற்ற மஞ்சு, பல கப்பல் போர்களைக் கண்ட அந்தப் பெண் மாலுமி, எத்தனையோ பேர் அழிவதையும் கப்பல்களும் கோட்டைகளும் சூறையாடப்படுவதையும் அலட்சியமாகப் பார்த்த அந்த ஏந்திழை, அன்று கோழைபோல் மனம் தளர்ந்து பேசுவதைக் கண்ட மிஸ் எமிலி வியப்படையவில்லை— 'எதுவும் தனக்கென்று வரும்போது யாரும் கோழைதான்' என்று மட்டும் எண்ணினாள். இருப்பினும் கேட்டாள், ''மஞ்சு! உபதளபதி போருக்குச் செல்வது இது முதல் தடவையல்லவே'' என்று.

''அல்ல.'' மஞ்சவின் குரல் அப்பொழுதும் தழுதழுத்துக் கிடந்தது.

''பல கடற்போர்களைக் கண்டவராமே?''

''ஆம்.''

விஜயதுர்க்கத்தை விட்டு வரும் வழியில் காதரைன் வந்த கப்பல்களைப் பிடித்தவரும் அவர்தானாமே?''

''ஆம்.''

''அப்படிப்பட்டவரைப் பற்றி உனக்கு என்ன பயம்?''

மஞ்சு உடனடியாகப் பதில் சொல்லவில்லை, ''அப்பொழுது நிலை வேறுஎமிலி'' என்றாள் முடிவில் மெதுவாக.

''எப்படி?''

''அப்பொழுது அவர் என் காதலர்.''

''உம்...''

''இப்பொழுது கணவர்.''

''இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?''

''எங்கள் நாட்டில் நிரம்ப உண்டு மிஸ் எமிலி. இதோ பார்'' என்று தனது கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்து எமிலியிடம் காட்டினாள் மஞ்சு.

''கயிறு!'' என்றாள் எமிலி.

''வெறும் கயிறல்ல. எங்கள் இணைப்பின் சின்னம்'' என்று கூறிய மஞ்சு, ''இதன் புண்ணியம், இதன் தன்மை, இது அளிக்கும் அந்தஸ்து இது இல்லாவிட்டால் ஏற்படும் இழிவு சொல்லத் தரமல்லாதது எமிலி. இதைக் காக்க அவரைக் காக்க வேண்டும்!'' என்றும் சொன்னாள். இதைச் சொன்னபோது மஞ்சுவின் கண்களில் நீர்த் துளிகள் தெரித்தன.

மிஸ் எமிலி, தன் கைத்துணியால் அவள் கண்களைத் துடைத்தாள். ''கவலைப்படாதே மஞ்சு. என் உயிரைப் போல் அவரைக் காப்பாற்றி வந்து உன்னிடம் சேர்க்கிறேன். இன்னும் பத்து நாட்களிருக்கின்றன. இதற்குள் ஏன் மனத்தை அலைக்கழித்துக் கொள்கிறாய்? இன்றிரவு வா, மறுபடியும் பேசுவோம்'' என்றாள் எமிலி.

மஞ்சுவும் அதை நம்பினாள். இன்னும் பத்து நாட்களுக்குப் பிறகு யோசித்தால் போகிறது என்றுதான் நினைத்தாள். ஆனால் அந்த இரு மங்கையரின் திட்டமும் எதிர்பார்ப்பும் அன்றிரவே குலைந்து போயின. அன்று மாலையே கனோஜி ஆங்கரே திடீரெனத் தனது மகனான சேகோஜியுடனும் மற்ற படைத் தலைவர்களுடனும் திடீரென இதயசந்திரன் படைத் தளத்துக்கு வந்தார். அங்கிருந்த மஞ்சுவைப் பார்த்து, ''நீ இங்குதானிருக்கிறாயா?'' என்று அலட்சியமாகக் கேட்டுவிட்டு ''சரி; நல்லதாகப் போய்விட்டது. இன்னும் சிறிது நேரத்தில் இங்கு மந்திராலோசனை தொடங்கும். தயார் செய்துகொள்''

அடுத்த சில நிமிடங்களுக்குள் இதயசந்திரன் கூடாரத்தில் மஞ்சங்களும், நடுவில் ஒரு மேஜையும் கொண்டு வந்து போடப்பட்டன. கனோஜி, நடு ஆசனத்தில் அமர்ந்து மற்றப் படைத் தலைவர்களையும் உட்கார ஆக்ஞாபித்தார். பிறகு சேகோஜியை நோக்கி, ''சேகோஜி! நமக்கு வந்திருக்கும் தகவலைச் சொல்'' என்று உத்தரவிட்டார்.

கனோஜி ஆங்கரேயின் புதல்வனும், கடற்போர் நிபுணனென்று பெயர் வாங்கியவனுமான சேகோஜி படைத் தலைவர்களை நோக்கி, ''உபதளபதிகளே! பாஹிராவ் பிங்களேயின் படை பூனாவை விட்டுக் கிளம்பி விட்டது,'' என்று அறிவித்தான் திடமான குரலில்.

உபதளபதிகளின் முகத்தில் ஈயாடவில்லை. இதய சந்திரனும்கூட பேரதிர்ச்சியடைந்தான். இத்தனை சீக்கிரம் பூனாவுக்கு பிங்களேயால் வர முடியுமென்றே அவன் நினைக்கவில்லை. பூனாவைவிட்டு நகர்ந்து விட்டாரென்பது அவனுக்கு ஏதோ நடக்கக் கூடாத ஒரு காரியம் போல் தோன்றவே, ''ஆச்சரியம்'' என்ற ஒரே சொல்லைக் கூறினான்.

சேகோஜி இதயசந்திரனை உற்று நோக்கினான். ''இதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஸதாராவிலிருந்து பூனா வர ஒரு வார காலந்தான் ஆகும். அங்கிருந்து போர்காட் வழியாக இங்கு வர இன்னொரு வாரம் பிடிக்கும். அல்லது இரண்டொரு நாள் அதிகமாகும். நாங்கள் ஆங்காங்கு ஒற்றர்களை வைத்திருப்பதால் உடனடியாகச் செய்தி கிடைத்திருக்கிறது. ஸதாராவிலிருந்து பேஷ்வா பிங்களே புறப்பட்ட நாள் முதல் நடப்பதெல்லாம் ஸார்கேலுக்குத் தெரியும்'' என்று கூறவும் செய்தான்.

''இதைப்பற்றி என்னிடங்கூட ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே'' என்று கேட்டாள் மஞ்சு.

''நீ அகப்படவில்லை. நேற்றிரவு கூட நீ கொலாபாவில் காணோம்'' ஏன்று

கனோஜி, படைத் தலைவர்களை நோக்கி, ''இன்று முதல் நமது கப்பல்கள் எதுவும் கடலில் உலாவ வேண்டா மென்று சேகோஜிக்கு உத்தரவிட்டிருக்கிறேன். எல்லாக் கப்பல்களும் தரையில் இழுத்து விடப்படவேண்டும். நாம் நிலப்போரில் இறங்குவதால் கடற்புறத்தில் போர் உதவாது. கப்பல்கள் தரையில் இழுத்து விடப்பட்டால் அவற்றை மாற்றார் மரக்கலங்கள் அணுகுவது கஷ்டம். துணிந்து அவர்கள் படகுகளில் இறங்கி வந்தாலோ அல்லது அவர்கள் மரக்கலங்களை கரையருகே கொண்டு வர முயன்றாலோ ஆங்காங்கு கோட்டைகளிலுள்ள பீரங்கிகளும் பாதுகாப்பை முன்னிட்டுக் கடற்கரையில் வைக்கப்படும். பீரங்கிகளும் எதிரி மரக்கலங்களையும் படகுகளையும் தவிடுபொடியாக்கி விடும். ஆகையால் கடலில் தற்காப்பு முறையும் தரையில் முன் சென்று தாக்கும் முறையும் கையாளப்படும்'' என்றார்.

இங்கு ஒரு சந்தேகம் கிளப்பினான் இதயசந்திரன். ''நாம்தான் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டோமே, கடலில் நமக்கு ஏது பயம்?'' என்று வினவினான்.

''பிரிட்டிஷார் எதிரிகளாயில்லாதது பெரும் பாதுகாப்பு நமக்கு. இருப்பினும் போர்ச்சுகீஸியர் இருக்கிறார்கள், ஜன்ம வைரிகளான ஸித்திகளிருக்கிறார்கள், இவர்களையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை'' என்ற கனோஜி ஆங்கரே தமது பையிலிருந்து ஒரு தேசப்படத்தை எடுத்து விரித்து, ''இங்கு கவனியுங்கள்'' என்று கூறி எழுந்து நின்றார். படைத்தலைவர்கள் அனைவரும் எழுந்து நின்று தலை குனிந்து களனித்தார்கள். படைகள் நகர வேண்டிய வழிகள், தாக்க வேண்டிய இடங்கள் முதலியவற்றைச் சுட்டிக் காட்டினார் ஸார்கேல். முடிவில் இதயசந்திரனை நோக்கி, ''உன் படை நாளைக்கே நகரட்டும். பிங்களே வரும் வழியில் குறுக்கே செல்லாதே, பின்னால் சென்று கல்யாண் கோட்டையில் உட்கார்ந்து

அவர் திரும்பிச் செல்லும் மார்க்கத்தைத் துண்டித்துவிடு. அவர் திரும்பியதும் தாக்கு'' என்று கட்டளையிட்டார் இரைந்த குரலில். பிறகு நிமிர்ந்து நின்று கூறினார், ''படைத் தலைவர்களே! இன்னும் பத்தே நாட்கள், நாம் ராஜ்மச்சியிலிருப்போம். ஏன் லோஹ்கட்டிலும் இருப் போம்'' என்ற அவர் குரலில் வெற்றி ஒலித்தது.

அந்த வெற்றிக் குரல் படைத்தலைவர்கள் அனைவரை யும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. ஆனால் மஞ்சு வின் மனோநிலை வேறாயிருந்தது. அன்று காலையில் தான் அவள் கணவனுடன் பத்துநாளிருக்கத் திட்டம் போட்டாள். பத்துநாள் திட்டம் பஞ்சாய்ப் பறந்தது.

அத்தியாயம் 23

என்றும் புது மலர்

கனோஜி ஆங்கரே திடீரென அன்று மாலையில் தனது படைத்தளத்தில் தோன்றியதும், துரிதமாக மந்திராலோசனையில் இறங்கியதும், போர் முறையைக்கூட ஓரளவு மாற்றிவிட்டதும் பெரு விந்தையாயிருந்தது இதயசந்திரனுக்கு. மஞ்சுவுக்கோ அது பெரும் வேதனையாயிருந்தது. சில நாட்களுக்கு முன்பு கொலாபாவிலும் மற்றத் துறைமுகங்களிலும் கப்பல்களைக் காத்து நிற்கவும், கடலில் சஞ்சரித்துக் கோட்டைகளை மாற்றார் கப்பல்கள் அணுகாமல் பாதுகாக்கவும் உத்தரவிட்ட மகாராஷ்டிரக் கடற்படைத் தளபதி, திடீரென ஒவ்வொரு துறைமுகத்திலும் கப்பல்களைத் தரைக்கு இழுக்கவும், பீரங்கிகளைக் கொண்டு அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் உத்தரவிட்ட்தை நினைத்து, இந்த மாற்றத்துக்கு என்ன காரணமிருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்த்தும் விடை காணவில்லை தமிழன். ஆனால் மஞ்சுவுக்கோ, பத்து நாளைக்குப் பின் நகர வேண்டிய படையை உடனடியாகப் புறப்பட உத்தரவிட்டு விட்டாரே தந்தை என்ற நினைப்பு உள்ளூரப் பெரும் குமுறலையும் எரிச்சலையும் விளைவித்தது. ஆனால் அதைப்பற்றிக் காரணம் கேட்க அவளுக்குத் துணிவு இல்லை.

இதயசந்திரன் மட்டும், ''தாங்கள் முன்பு இட்ட உத்தரவுக்கும் இன்றைய உத்தரவுகளுக்கும் சில மாறுபாடுகள் இருக்கின்றனவே?'' என்று வினவினான்.

அப்பொழுதுதான் தேசப் படத்திலிருந்து கண்களை [illegible] உட்கார்ந்துவிட்ட

கனோஜி, ''என்ன மாறுபாடுகள் இருக்கின்றன?'' என்று பதில் கேள்வி போட்டார்.

''நமது கடலோரக் கோட்டைகளைப் பாதுகாக்கப் போர்க்கலங்கள் சித்தமாயிருக்கவும் உலாவவும் கட்டளை யிட்டீர்கள். இப்பொழுது அவற்றைத் தரையில் இழுத்து விடக் கட்டளையிடுகிறீர்கள்...'' என்று கூறி வாசகத்தை முடிக்காமல் கனோஜியை நோக்கினான் இதயசந்திரன்.

வெற்றிக் கோஷமிட்ட உபதலைவர்கள் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு பிரமை பிடித்த கண்களைத் திருப்பினார்கள் தமிழனை நோக்கி. கனோஜி முடிவான உத்தரவு பிறப்பித்த பிறகு அவரை மறுத்துப் பேசுவதோ அல்லது விளக்கம் கேட்பதோ பெரும் அபாயமென்பதை உணர்ந்திருந்த உபதலவைர்கள் அடுத்து என்ன நடக்குமோ என்று எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார்கள். கனோஜியைத் தூக்கியெறிந்து பேசும் சுபாவமுள்ள மஞ்சுகூட அதிர்ச்சியுற்றுக் கண்களைத் திருப்பினாள் தந்தைமீது.

கனோஜியின் பயங்கர விழிகள் தமிழனை வியப்புடன் நோக்கின ஒரு விநாடி. பிறகு அந்த விழிகளில் சிறிது கோபம் துளிர்த்தது. என்ன காரணத்தினாலோ, இன்னுமொரு விநாடியில் கோபம் இகழ்ச்சிக்கு இடம் கொடுத்தது. ''தரைப்படை உபதளபதிக்கு விளக்கம் தேவையோ?'' என்று வினவினார்.

சுற்றிலுமிருந்தவர் கண்களிலிருந்த பிரமையையும் மஞ்சுவின் விழிகளில் தெரிந்த அச்சத்தையும் கவனித்தான் இதயசந்திரன். இரண்டு ஆண்டுகளில் காணாத ஒரு புதுக் கனோஜியைத் தான் காண்பது அவனுக்குப் புரிந்தது. மந்திராலோசனையில் யார் எதைச் சொன்னாலும் செவிமடுக்கும் சுபாவமுள்ள கனோஜி ஒரு முறை முடிவெடுத்து விட்டால் அதை மாற்றுவது பிரம்மனால்கூட முடியாதென்பதையும், அதற்குக் குறுக்கே பேசுபவன் நிலையும் விரும்பத்தக்கதல்லவென்பதையும் சந்தேகமறத் [illegible]

அவனுக்கு. இருப்பினும் துணிவை விடாமல், ''உத்தரவின் மாறுதலின் அடிப்படை புரியவில்லை'' என்றான்.

கனோஜி தமிழனை உற்றுப்பார்த்தார் மறுபடியும். ''உனக்கு அண்டோனியோ கார்டிம் ப்ரோஸ் என்பவரைத் தெரியுமா?'' என்று வினவினார் சர்வசாதாரணமாக.

''தெரியாது'' என்றான் தமிழன் சற்றுக் குழப்பத்துடன்.

''போர்ச்சுக்கீஸியரின் கடற்படைத் தளபதி அவர்'' என்றார் ஸார்கேல்.

''அவருக்கென்ன?'' என்று கேட்டான் இதயசந்திரன் புரியாமல்.

''ஒன்றுமில்லை. கொலாபாவை நொறுக்க வருகிறார்.''

''கொலாபாவை நொறுக்கவா?''

''ஆம். ஆறு பெரும் போர்க் கப்பல்களுடனும் பல காலிவாத்துக்களுடனும் போர்ச்சுக்கீஸியக் கவர்னர் அவரை அனுப்பியிருக்கிறார் கொலாபாவைக் கைப்பற்ற, நமது கப்பல்களை அழித்துவிட; அண்டோனியோ ப்ரோஸ் சாமானியத் தளபதியல்ல. கடற்போரில் அவருக்கினை யானவர் உலகத்திலேயே நான்கைந்து பேர்கள்தான்'' என்று சுட்டிக் காட்டினார் கனோஜி.

இதயசந்திரன் திக்பிரமையடைந்தான். பெரும் ஆபத்து கொலாபாவுக்கு ஏற்பட்டிருப்பது அவனுக்குப் புரிந்தது. தானும் கனோஜியும் தரைப்போருக்குச் செல்லும் சமயமாகப் பார்த்துப் போர்ச்சுக்கீஸியர் கடலில் தாக்க முன் வந்ததை எண்ணியதால் என்ன செய்வதென்றறி யாமல் திகைத்தான். ''தரையில் நாம் முன்னேறாவிட்டால் பிங்களே நம்மைத் தாக்குவார். கடலில் தயாராக இல்லையேல் அண்டோனியோ கொலாபாவை முறியடிப் பார். தர்மசங்கடமான நிலையாயிருக்கிறதே!'' என்று கூறினான் வாய்விட்டு.

''இதயசந்திரா!'' என்றழைத்தார் கனோஜி.

''ஸார்கேல்!''

''பெரும் ஆபத்துக்கள் நேரிடும்போது குழம்பாதிருப் பவனே வீரன் எனப்படுகிறான். இப்பொழுது நிலைமை சிக்கலானதுதான், ஆனால் மீள முடியாத நிலை அல்ல. பிரிட்டிஷார் நம்மிடம் ஒப்பந்தம் செய்துகொண்ட சீற்றத்தில் போர்ச்சுக்கீஸியக் கவர்னர் நம்மீது தமது கப்பற்படைத் தளபதியை ஏவியிருக்கிறார். அடுத்தபடி லித்திகளும் வருவார்கள். யார் வந்தாலும் நமது போர்க் கலங்களை ஒன்றும் செய்ய முடியாது. அவை கரையில் கிடக்கும். அவற்றை அணுகி வந்தால் போர்ச்சுக்கீஸியப் பெருங் கலங்கள் மணலில் சிக்கிச் செயலற்றுவிடும். அசைய முடியாத நிலையில் நமது கடற்கரை பீரங்கிகளுக்கு இலக்காகும். கடற்கரை பீரங்கிகளையும் நல்ல உயர்ந்த பாறைகளில் தகுந்த இடங்களில் அமைத்திருக்கிறேன். ஐம்பது கஜ தூரத்திற்குள் வரும் எந்தக் கப்பலும் அவற்றின் குண்டு வீச்சுக்கு இலக்காகும். கொலாபாவை எதிரிகள் அணுகக்கூட முடியாது'' என்று விளக்கிய கனோஜி, ''இதயசந்திரா! இப்பொழுது கடலில் பின் வாங்கியிருக்கிறோம் தற்காப்புக்காக. தரையில் முன்னேறு கிறோம் புதுக் கோட்டைகளைப் பிடிக்க. இப்பொழுது கடலாதிக்கத்தை நிலைப்படுத்திக்கொண்டு தரைப்பக்கம் திரும்பியிருக்கிறேன். தரையை நிலைப்படுத்திக் கொண்டால் மீண்டும் கடல் வழிகளில் உலாவுவோம், அப்பொழுது கடலிலும் தரையிலும் நமது ஆதிக்கம் இருக்கும்'' என்று உணர்ச்சிப் பெருகச் சொன்னார்.

இதயசந்திரன் அவர் கூறியதை அசைவற்றுக் கேட்டுக் கொண்டான். அவரது போர்த் திறமையும் கூரிய அறிவும் பிரமிக்கத் தக்கதாயிருந்தன. சாதாரணமாக வேடிக்கைப்

பேச்சும் அசர நகைப்பும் உள்ள கனோஜி ஆங்கரே சமயம் வந்தால் இணையிலாத் தலைவனாக மாறும் விந்தையை அன்று கண்டான் அவன். அத்தகைய ஒரு பெரிய தலைவனிடம் பணி புரிய நேரிட்டது தனது பாக்கியமென்று கருதினான். உணர்ச்சிப் பெருக்கால் பேசும் சக்தியையும் இழந்தான்.

அவன் மௌனத்தைக் கவனிக்கவே செய்த கனோஜி, அவனை நோக்கி மீண்டும் கூறினார், ''இதயசந்திரா! தரையில் நீ கல்யாண் நகரத்தைக் கைப்பற்றியதும் நானும் நீயும் பிங்களேயை முன்னும் பின்னும் தாக்குவோம் என்பதை முன்பே கூறியிருக்கிறேன். அங்கிருந்து நம்மிருவர் படையும் இணைந்து ராஜ்மச்சியையும் கைப்பற்றி விட்டால் கொங்கணியின் நிலப்பரப்பு பூர்ணமாக நமது கையிலிருக்கும்'' என்று.

பதிலுக்கு அர்த்தமில்லாமல் தலையை மட்டும் அசைத்தான் இதயசந்திரன். கனோஜி ஆங்கரே கூடாரத்துக்கு வெளியே வெறித்துப் பார்த்தார். அந்த வெறித்த பார்வையுடன் பேசவும் பேசினார். ''ராஜ்மச்சி, பம்பாய்க்கும் பூனாவுக்கும் இடையே கண்டாலாவுக்கு அருகில் இருக்கிறது. போர்காட் கணவாயின் பிரதான வழியில் ராஜ்மச்சியும் லோஹ்கட் எனும் இரும்புக் கோட்டையும் இருக்கின்றன. இரண்டும் கொங்கணியை நோக்கும் சிகரங்கள். இரண்டையும் ஆள்பவன் கொங்கணியை ஆள்கிறான். ராஜ்மச்சி உண்மையில் எத்தனை உயரத்திலிருக்கிறது! தெரியாமலா சத்ரபதி சிவாஜி அதற்கு, 'ராஜ்மச்சி அரசர் உப்பரிகை' எனப் பெயர் சூட்டினார். அந்த உப்பரிகையிலும் லோஹ்கட்டிலும் நான் உட்காருகிறேன் வெகு விரைவில்'' என்று இரைந்தே கூறினார். பிறகு சரேலென்று எழுந்திருந்து மந்திராலோசனை முடிந்து விட்டது என்பதற்கு அறிகுறியாக மஞ்சுவிடம் வந்து, ''உனக்குத்தான் கஷ்டம்'' என்று கூறிவிட்டுக் கூடாரத்தை விட்டு வெளியே சென்றார். மற்ற உபதலைவர்களும் அவரைத் தொடர்ந்தனர். கூடாரத்தை விட்டு இருவர் மட்டும் அசையவில்லை. ஒருத்தி மஞ்சு, இன்னொருவன் தமிழன்.

கல்யாண், ராஜ்மச்சி, லோஹ்கட் இவற்றை இதய சந்திரன் பார்த்ததேயில்லை. அந்த மூன்று இடங்களைப் பற்றிக் குறிப்பிட்ட கனோஜி ராஜ்மச்சியையும் லோஹ்கட்டையும் பற்றித் திரும்பத் திரும்பக் கூறியதையும் அவற்றைப் பற்றிப் பேசுகையில் ஒரு வேகம் அவரிடமிருந்ததையும் எண்ணிப் பார்த்து, 'அவை இரண்டும் மிக முக்கியக் கோட்டைகளாகவும் போர் அரண்களாகவும் இருக்க வேண்டும்' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

இத்தகைய எண்ணங்களில் திளைத்திருந்த அவன், மஞ்சு, மேஜையைச் சுற்றிவந்து வாசல் சீலையை அவிழ்த்து விட்டதையோ தனக்குப் பின் வந்து நின்றுகொண்டு தன்னைச் சுற்றி இரு மலர்க் கரங்களை ஓடவிட்டதையோ உணர்ந்தானில்லை. அவன் தலைமீது தனது தலையை வைத்து மஞ்சு, ''என்ன, உங்களைத்தான்?'' என்று மெல்ல அழைத்த பின்புதான் அவன் சுரணையடைந்தான். ''என்ன மஞ்சு?'' என்று கேட்கவும் செய்தான்.

''ஒரே அடியாகத் தந்தையைப்போல் நீங்களும் கனவில் லயித்துவிட்டீர்களே? இப்பொழுதே ராஜ்மச்சில் இருப்பதாக நினைப்போ?'' என்று கேட்டாள். தலையை அவன் தலைமீது உருட்டவும் செய்தாள்.

அவள் தலை உருண்டது, அவன் தலைக்கு எத்தனையோ இதமாயிருந்தது. அவள் இரு கைகளையும் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான் இதயசந்திரன். ''ஆம் மஞ்சு! உன் தந்தை அந்தக் கோட்டையைப்பற்றிக் கூறியது என்னை அசர வைத்து விட்டது. அத்தனை பெரிய கோட்டையா அது?'' என்று கேட்கவும் செய்தான்.

''ஆம். அது கொங்கணியைச் சேர்ந்ததல்லவென்றாலும் ஸஹ்யாத்திரியின் முக்கிய பீடமான போர்காட்டி

விருப்பதால் மிக உயரத்திலிருந்து கொண்டு சதா கொங்கணியைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. பெரிய வழவழத்த கரிய பாறைகளையுடைய மலை உச்சியி லிருக்கும் ராஜ்மச்சிலிருந்து நீங்கள் கொலாபாவைப் பார்க்கலாம். ஸால்ஸெட்டி தீவுகளைப் பார்க்கலாம் பம்பாயைக் கூடப் பார்க்கலாம்'' என்றாள் மஞ்சு.

''அதைப் பிடிப்பது சுலபமா?''

''மிகக் கஷ்டம்.''

''அதைப் பிடிக்கத் திட்டமிட்டிருக்கிறாரே உன் தந்தை?''

''கஷ்டம் என்று யாராவது சொன்னால் போதும் அந்த அலுவலில்தான் தந்தை இறங்குவார். இது கஷ்ட மென்பது அவருக்கே தெரியும். அப்படியிருக்க, இறங்காம லிருப்பாரா?''

இதைச் சொன்ன அவளைத் தனது நாற்காலியைச் சுற்றி இழுத்து, அதன் கையில் தனக்கு எதிர்புறமாகத் திரும்பி உட்கார வைத்துக் கொண்ட இதயசந்திரன் அவளைப் பல வினாடிகள் உற்றுப் பார்த்தான்.

அவன் கண்கள் சென்ற இடங்களை எண்ணி நாணப் புன்முறுவல் செய்தாள் அவள். ''என்ன அப்படிப் பார்க் கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஏன் பார்க்கக் கூடாதா?''

''பாருங்கள் பாருங்கள். நான் என்ன புதியவளா?''

''புதியவள்தான் மஞ்சு.''

இதைக் கேட்ட மஞ்சு நகைத்தாள்.

இதயசந்திரன், ''ஏன் நகைக்கிறாய் மஞ்சு?'' என்று வினவினான்.

''என்னைப் புதியவள் என்று கூறினீர்களே?''

''ஆம், கூறினேன்.''

''நான் பழையவள் தானே?''

''அதுதான் இல்லை.''

''என்ன சொல்கிறீர்கள்?''

இதயசந்திரன் அவள் தலையைக் குனிய வைத்து காதில் ஏதோ சொன்னான். அவள், ''சீச்சி! மோசம் நீங்கள்... ஆனாலும் மோசம்'' என்று கூறி வேறுபுறம் திரும்பினாள்.

''காதலில் பழைமையேது மஞ்சு? நித்தம் நித்தம் புதிய வேதனை. புதிய சாதனை. இவற்றின் இணைப்புத்தான் காதல். என் கண்ணுக்கு நீ என்றும் புதுமலர். அந்த மலரை...'' என்ற இதயசந்திரனை மேலே பேசவிடாமல் வாயைப் பொத்தினாள் மஞ்சு.

பிறகு இருவரும் மௌனமே சாதித்தனர். இருவர் உள்ளங்களிலும் மறுநாள் பிரிவே மேலோங்கி நின்றது.

இருவரும் அன்று உணவருந்தவில்லை, இரவு வீணாகவுமில்லை.

அத்தியாயம் 24

இயற்கையின் நீதி

இரவில் நிகழ்ந்த இன்பத்திளைப்பின் காரணமாக உடல் எத்தனையோ களைத்திருந்தும், அதை லட்சியம் செய்யாமல் வெள்ளி முளைப்பதற்குப் பல நாழிகைகளுக்கு முன்பாகவே கூடாரத்துக்கு வந்துவிட்ட இதயசந்திரன், வாயிலிலிருந்த காவலனை விளித்து சுகாஜியை அழைத்து வர உத்தரவிட்டான்.

சுகாஜி வந்ததும், ''சுகாஜி! டமாரம் சப்திக்கட்டும், படை நகரச் சித்தமாகட்டும். இரு புரவி வீரர்களை அனுப்பி விடிந்த ஒரு நாழிகைக்குள் படை கல்யாண் நகரத்தை நோக்கி நகரவேண்டும் என அறிவித்துவிடு'' என்று இதயசந்திரன் உத்தரவிட்டான்.

சுகாஜி தனது புரவி மீதேறிக் காற்றிலும் கடுகி, படைத்தளத்துக்குள் நுழைந்து சென்றான். அடுத்த சில நிமிடங்களில் இரு டமாரங்கள் டமடமவென ஒலி எழுப்பவே படைத் தளம் மிகத் துரிதமாக உயிர் பெற்றெழுந்து, படுத்திருந்த புரவிகள் எழுப்பப்பட்டதால் எங்கும் கனைப்பு ஒலிகளும் வீரர்கள் ஒருவரையொருவர் மராட்டி பாஷையில் விளித்ததால் ஏற்பட்ட குரலோசைகளும், ஆயுத வண்டிகளும், உணவுப் பொருள் வண்டிகளும் பூட்டப்பட்டதால் உண்டான நானாவித சப்தங்களும் கடை இரவின் அமைதியைக் கிழித்தன. சுகாஜியின் ஆணையின் காரணமாகப் படைகளைத் துரிதமாக அணிவகுப்பதற்கு தளத்துக்குள் பாய்ந்து சென்ற இரண்டு புரவி வீரர்களின் குதிரைகளின் குளம்பொலிகளும், துப்பாக்கிகளில் குண்டுகள் போடப்பட்டுக் 'குதிரை'களை இழுத்துச் சரி பார்க்கப்பட்டதால் ஏற்பட்ட டக்டக் என்ற ஒலி

களும், அணிவகுத்த வீரரின் பாதரட்சை சப்தங்களும் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டிருந்தன. தூங்காங்கிருந்த கூடாரங்களின் முளைகள் எடுக்கப்பட்டுக் கூடாரங்கள் சுருட்டப்பட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டன. எங்கும் ஏற்பாடுகள் பரம துரிதமாக நடந்தன.

மற்றவர் துரிதத்துக்கு வழி காட்டும் முறையில் உதனபதி இதயசந்திரன் போருடை அணிந்து, இடைக் கச்சையில் இரு கைத் துப்பாக்கிகளைச் செருகிக் கொண்டு, வாள் பக்கவாட்டில் தொங்க, செருப்பு சரக் சரக்கென்று ஒலி செய்ய, கூடாரத்துக்கு வெளியில் வந்து கூடாரத்தையும் பிரித்துச் சுருட்டுமாறு உத்தரவிட்டான். அவர்கள் சுருட்ட முற்பட்டதும் மஞ்சுவைக் கூடாரத்துக்குப் பின்புறம் சற்றுத் தூரத்திலிருந்த மரத்தின் மறைவுக்கு அழைத்துச் சென்று ஒரு முறை அவளை இறுகத் தழுவினான். ''வருகிறேன் மஞ்சு! சீக்கிரம் சந்திப்போம்'' என்றும் கூறினான்.

மஞ்சு பதில் சொல்லவில்லை. ஒருமுறை அப்புறமும் இப்புறமும் பார்த்தாள் மருண்ட மானைப்போல். பிறகு அவன் இதழ்களைத் தன் இதழ்களால் மூடினாள் மூர்க்கத்தனமாக. சட்டென்று விலகி ஓடி, சற்று எட்ட இருந்த தனது புரவிமீது ஏறி, கண் தலை தெரியாமல் அதை விரட்டிக் கொண்டு கொலாபாவை நோக்கிப் பறந்தாள்.

இதயசந்திரன் நின்ற இடத்திலேயே நின்றான். அவள் அளித்த இதழ் அமுதம், அவன் உயிருக்குள்ளும் பாய்ந்து விட்டதாகத் தோன்றியது அவனுக்கு. பிறகு உணர்ச்சிகளை உதறிக்கொண்டு தனது புரவியிருக்குமிடம் வந்தான். அப்புரவியின் முதுகைச் சற்றுத் தட்டிக் கொடுத்துவிட்டு, நாற்புறமும் நோக்கினான். எங்கும் படை நகரத் தயாராயிருந்தது. சற்று முன்பு அந்த வெளியிலிருந்த நூற்றுக் கணக்கான கூடாரங்கள் மறைந்துவிட்டன, பக்கத்திலிருந்த மிஸ் எமிலியின் கூடாரங்கூட மறைந்துவிட்டது.

சற்று தூரத்திலிருந்த ஓர் ஒற்றைப் புரவிக்கூண்டு வண்டியில் ஏறிக் கொண்டிருந்தாள் எமிலி. உடைப் பெட்டிகளுடனும் மருந்துப் பெட்டிகளுடனும் உட்கார்ந்து கொண்ட அவள், தன்னை கூர்ந்து நோக்கிய உபதளபதியைப் பார்த்துப் புன்முறுவலும் கோட்டினாள்.

படை நகரத் தயாரானதும் சுகாஜி, உபதளபதியிடம் வந்து, ''எல்லாம் சித்தமாகிவிட்டது தளபதி'' என்று அறிவித்தான்.

''கூடாரங்களை என்ன செய்தாய்?'' என்று கேட்டான் இதயசந்திரன் சுகாஜியை நோக்கி.

''பிரித்துச் சுருட்டி வண்டிகளில் ஏற்றி விட்டேன். இரண்டு கூடாரங்களைத் தவிர மற்றவை கொலாபாலை நோக்கிச் செல்லும்'' என்றான் சுகாஜி.

''நல்லது. துரிதமாகச் செல்லவேண்டிய படைக்குக் கூடாரங்களின் மிகுதி பெறும் இடையூறு'' என்ற இதயசந்திரன், சட்டென்று தனது புரவியின்மீது ஏறிக்கொண்டான். ஒரு புரவி மீதிருந்த இரு டமாரங்கள் மீண்டும் சப்திக்க, படை ஒரே சீராக நகர்ந்தது.

அணிவகுத்த படை செல்வதை சுகாஜியுடன் பார்த்துக் கொண்டே நின்ற இதயசந்திரன் முதலில் புரவிப்படையும் பிறகு பீரங்கி வண்டிகளும், கடைசியாக மிஸ் எமிலியின் வண்டியும் சென்றதைக் கண்டுவிட்டுத் திருப்தியடைந்து சுகாஜியை நோக்கித் திரும்பினான். ''நன்று சுகாஜி! நன்று! படை அணிவகுப்பு கனகச்சிதமாக இருக்கிறது'' என்று அவனைப் பாராட்டிவிட்டுப் புரவியைத் தட்டிவிட்டான். சுகாஜியும் புரவியில் தளபதியைப் பின் தொடர்ந்தான்.

இதயசந்திரன் தனது படையைச் சிறிது தூரம் வரை ஸஹ்யாத்ரி மலைப்பகுதிக்குச் செலுத்தி, பிறகு மீண்டும் சமவெளிக்கு வந்தான். மறுபடியும் சிறிது தூரம் மலை

வழிகளில் அழைத்துச் சென்றான். கனோஜி அவனுக்குக் கூறியபடியே மலைப்பகுதியில் சென்றாலும், சமவெளியில் வந்தாலும் கல்யாண் நகரத்தைக் குறி வைத்தே சென்றான் இதயசந்திரன். அப்படிச் சென்றாலும் நடுப்பகல் உணவுக்குத் தவிர வேறு இடைவேளை எதுவும் படைக்கு அளிக்காததாலும் முதல் நாளே பாதி தூரத்தைக் கடந்து விட்ட இதயசந்திரன் ஓர் உச்சியை அடைந்ததும் அங்கிருந்த காட்டில் படைகளை இரவுக்குத் தங்க உத்தர விட்டான். ''சுகாஜி! படைகள் தங்கட்டும்; இளைப் பாறட்டும். ஆனால் நள்ளிரவு தாண்டியதும் இரண்டு நாழிகைக்குள் மீண்டும் புறப்பட வேண்டுமாதலால் கூடாரங்களை அடிக்க வேண்டாம். மரத்தடிகளில் தங்கட்டும். வண்டிகளை மட்டும் அவிழ்த்து விட்டுக் குதிரைகளைத் தேய்த்து விடுங்கள்'' என்று உத்தர விட்டான். அவற்றைப் படை வீரர்களுக்கு அறிவிக்க சுகாஜி சென்றதும், குதிரையிலிருந்து இறங்கிய இதயசந்திரன், ஒரு மரத்தடியில் சென்று உட்கார்ந்து கொண்டான். அவன் உட்கார்ந்த சில விநாடிகளுக்குள் அவன் மரத்தை அணுகிய மிஸ் எமிலி சற்று எட்ட இருந்த இரண்டு மூன்று குண்டு கற்களை இணைத்து அடுப்பு மூட்டி உணவு தயாரிக்கத் துவங்கினான்.

காட்டில் ஏற்பட்டிருந்த பல பந்தங்கள் ஆங்காங்கு ஒளி வீசின. இதயசந்திரன் இருந்த இடத்திலிருந்து சற்று எட்ட அவனுக்காக நடப்பட்டிருந்த ஒரு பந்தம் அவன் கைத்துப்பாக்கிகள் மீதும் வாளின்மீதும் கழுத்திலிருந்த ஆபரணத்தின்மீதும் ஒளி வீசி அவற்றுக்குத் தனிமெருகைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆங்காங்கு வீரர்கள் நடமாட்டமும் குதிரைகளின் கனைப்பும் அந்தக் காட்டிற்குக் கூடத் தனிப்பட்ட உயிரைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றில் எந்த ஒலியையும் காதில் வாங்காமல் இதயசந்திரன் மஞ்சுவின் நினைப்பில் ஆழ்ந்திருந்தான். முந்திய இரவு அதே நேரத்தில் கிடைத்த

இன்ப நாடகம் அவன் சித்தத்தில் வலம் வந்து கொண்டிருந்தது. அதன் விளைவாகச் சற்று எட்ட குந்திய நிலையில் உணவு தயாரித்த மிஸ் எமிலியைக்கூட அவன் கண்கள் காண மறுத்தன.

ஆனால் உணவு தயாரித்த நிலையிலும் மிஸ் எமிலி அவன்மீது ஒரு கண்ணை வைத்துக் கொண்டுதானிருந்தாள். அவன் நினைப்பு மஞ்சுவைச் சுற்றி ஓடுகிறது என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டாள் அவள். அதே சமயத்தில் பம்பாய் நிலைமையும் அவளுக்கு நினைப்பு வரத்தான் செய்தது. மயங்கிய நிலையில் பம்பாயில் உபதளபதி தனது மார்புமீது படுத்துக் கிடந்ததை அவள் இப்பொழுது நினைத்துப் பார்த்தாள். தன்னுடன் அவன் நடன மண்டபத்தில் இணைந்தாடிய நிலையையும் மணமேடையில் கண்டாள். அப்பொழுதெல்லாம் அவன் தன்னிடம் மயங்கியதை எண்ணியதால் 'எப்படியும் இரண்டு மூன்று நாளைக்குள் இவர் கொஞ்சம் மாறாமலா போகிறார்?' என்று தனக்குள் ஒரு கேள்வியும் எழுப்பிக் கொண்டாள்.

அந்தக் கேள்வியுடன் ஏதேதோ எண்ணங்கள் கலந்து மோத, தயாரித்த உணவை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு உபதளபதியை அணுகிய மிஸ் எமிலி, ''உணவு வந்திருக்கிறது'' என்று கூறித் தட்டை நீட்டினாள் அவனை நோக்கி.

பதிலேதும் கூறாமல் தட்டை அவன் வாங்கிக் கொண்டதும் மீண்டும் அடுப்பண்டை சென்று அதன் பக்கத்திலிருந்த இன்னொரு தட்டில் தனக்கும் உணவு வைத்துக் கொண்டு ஒரு குப்பியில் குடிநீரும் எடுத்துக் கொண்டு உபதளபதிக்கு எதிரில் வந்து உட்கார்ந்து சாப்பிடத் துவங்கினாள். இருவரும் உணவை மௌனமாகவே முடித்துக் கொண்டு கை கழுவி நீர் அருந்தியதும், தட்டுகளைச் சுத்தம் செய்து பழையபடி பையில் அடைத்து விட்டுத் திரும்பி வந்து இதயசந்திரன் பக்கத்தில் மரத்தின்

இன்னொரு பகுதியில் எமிலியும் சாய்ந்து, கால்களை மடித்து அரைவாசி உட்கார்ந்தபடியும் அரைவாசி படுத்த படியும் இருந்தாள்.

இப்படியே பேச்சு ஏதுமின்றி அவ்வப்பொழுது இருவரிடமிருந்தும் ஓரிருமுறை வெளி வந்த பெருமூச்சைத் தவிர வேறு ஒலி ஏதுமின்றி உட்கார்ந்திருந்த அந்த இருவரில் முதன் முதலாக இதயசந்திரனே அவளை நோக்கித் திரும்பி, ''படுத்துக் கொள்வதுதானே மிஸ் எமிலி?'' என்று கூறினான். கூறியது மட்டுமல்ல அவளைப் பார்க்கவும் செய்தான்.

மிஸ் எமிலி அரைவாசி உட்கார்ந்திருந்த அந்த நிலை மிக ஒய்யாரமாயிருந்தது பார்ப்பதற்கு. சற்று எட்ட இருந்த தீபம் அவள் தேகத்தில் லேசாக விழுந்திருந்ததால் அவள் வெண்ணிற மேனியின் திறந்த பாகங்கள் பொன்னைப்போல் காட்சியளித்தன. குத்திட்ட கால்களின் விளைவாக தொடைப் பகுதியில் பெரிதும் இறங்கிவிட்ட கௌன் அவள் வழவழப்பின் வனப்பைப் பளபளக்கச் செய்தது. குழல்கள் மிக மிருதுவாகத் தெரிந்தன. கௌனுக்குள் விம்மிக் கிடந்த மார்பக எழுச்சிகளும் இதய சந்திரனிடம் ஏதோ செய்தி சொல்ல ஆசைப்பட்டன போல் எட்டிப் பார்த்தன. முழங்காலும் அதற்குக் கீழே இருந்த ஒரே சீரான வழவழத்த ஆடு சதையும் இதய சந்திரன் உள்ளத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

அவன் கண்கள் சென்ற இடங்களை மிஸ் எமிலி கடைக் கண்ணால் கண்டு உள்ளூர நகைத்துக் கொண்டாள். வெளிக்குத் தெரியும்படி ஒரு புன்முறுவல் மட்டும் வெளியிட்டாள். அதைக் கண்ட இதயசந்திரனுக்குக் காரணமில்லாமல் கோபம் வந்தது.

''நான் ஒரு கேள்வி கேட்டேன்'' என்று உஷ்ணம் சொட்டும் சொற்களை உதிரவிட்டான் உபதளபதி.

''என்ன கேள்வியோ?'' என்றாள் மிஸ் எமிலி.

''படுத்துக் கொள்வதுதானே என்று கேட்டேன்'' என்றான் இதயசந்திரன்.

''ராணுவ விதிகளில் உபதளபதி படுத்துக் கொள்ளச் சொன்னால் படுத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒன்றா?'' என்று வினவினாள் எமிலி. சற்று நகர்ந்து அவன் தோள்மீது தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

இதயசந்திரன் பெரும் சங்கடத்துக்குள்ளானான். ''எமிலி எமிலி'' என்று பரிதாபத்துடன் குரல் எழுப்பினான்.

இருமுறை அவன் உச்சரித்த பெயரில் 'மிஸ்' விட்டுப் போயிருந்ததை அவள் கவனித்தாள். அன்பு சொட்டும் குரலில் அதைச் சொல்லவும் சொன்னாள், ''இதுதான் சரி'' என்று.

''எதுதான் சரி எமிலி?'' என்று இதயசந்திரன் கேட்டான்.

''இப்பொழுது கூப்பிடும் முறை.''

''என்ன முறை?''

''மிஸ் இல்லாத முறை.''

''எமிலி!''

''இப்படிக் கூப்பிட்டால் என்ன அழகாயிருக்கிறது!''

''அழகாயிருக்கலாம் எமிலி, ஆனால் முறையாகாது.''

''ஏன்?''

''நான் மணமானவன்.''

''அதனாலென்ன?''

''இன்னொரு பெண்ணுக்கு இடம் கொடுப்பதோ உரிமையுடன் அழைப்பதோ...''

அவன் வாசகத்தை முடிக்கும் முன்பே மிஸ் எமிலி கலகலவென நகைத்தாள். இதயசந்திரன் அவளைத் திரும்ப நோக்கினான். முரட்டுத்தனமாக அவள் கைகளைப் பிடித்து அழுத்தி, ''ஏன் நகைக்கிறாய்?'' என்றான்.

எமிலி அவன் கைகளை அழுத்தியதை லட்சியம் செய்ய வில்லை. இன்னும் அழுத்திப் பிடித்தால்கூட நல்லது என்று நினைத்தாள். மெள்ள அழைத்தாள் அவனை, ''உபதளபதி'' என்று.

''ஏன் எமிலி?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

''நீங்கள் சொல்வது மனித நீதிக்கு ஒத்ததுதான். ஆனால், இயற்கையின் நீதி வேறு'' என்றாள்.

''அதென்ன நீதியோ?'' என்று கேட்டான் இதய சந்திரன்.

''விதிவசத்தால் ஆணும் பெண்ணும் தனித்துவிடப் படும்போது ஏற்படும் நீதி. அது மனித சட்டங்களுக்குப் புறம்பானது. எதிலும் கட்டுப்படாதது'' என்று கூறினாள் எமிலி.

அத்துடன் அவன் தோளிலிருந்து தலையை எழுப்பிக் கன்னத்துடன் கன்னத்தை இழைத்தாள். ஒரு விநாடி வாளாவிருந்தான் இதயசந்திரன். பிறகு மெள்ளச் சொன் னான்: ''எமிலி, எதுவாயிருந்தாலும் என்னை நம்பிய மஞ்சுவை நான் கைவிடலாமா? அவளுக்குத் துரோகம் செய்யலாமா?''

''நீங்கள் அவளுக்கும் துரோகம் செய்ய வேண்டாம், எனக்கும் துரோகம் செய்ய வேண்டாம்'' என்றாள் எமிலி இன்பமும் துன்பமும் கலந்த குரலில்.

''என்ன சொல்கிறாய் எமிலி?'' என்று வினவினான் உபதளபதி.

''மஞ்சுவை நீங்கள் மீண்டும் சந்திக்கும்போது நானிருக்க மாட்டேன்'' என்றாள் எமிலி.

''ஏனப்படிச் சொல்கிறாய் எமிலி?''

''நான் சொல்லவில்லை.''

''வேறு யார் சொல்வது?''

''என் மனம்.''

''மனமா?''

ஆம். இதுவரை அது என்னிடம் பொய் சொன்னதில்லை'' என்று கூறினாள் எமிலி. பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ, திடீரென எழுந்து அவனைப் பிரிந்து சற்று தூரத்திலிருந்த தனது வண்டிக்குள் சென்று படுத்துக் கொண்டாள். இதயசந்திரன் மனம் ஒரே நிலையில் இல்லாததால் காட்டில் அங்குமிங்கும் நடந்தான்.

கடைசியில் அவள் வண்டியிருந்த இடத்துக்குச் சென்று வண்டிக்குள் தலையை நுழைத்து, ''எமிலி!'' என்றழைத்தான். பதில் ஏதும் கிடைக்கவில்லை. இரு மலர்க் கரங்கள் எழுந்து அவன் கழுத்தை வளைத்துக் கொண்டன.

அத்தியாயம் 25

பயங்கரத் தலையீடு

மறுநாள் பொழுது புலருவதற்கு நான்கு நாழிகைகளுக்கு முன்பாகவே சுகாஜியிருந்த இடத்துக்குச் சென்ற இதயசந்திரன் அவனைத் தட்டி எழுப்பி, ''படைகள் இன்னும் ஒரு நாழிகைக்குள் நகரவேண்டும்'' என்று அதட்டிச் சொன்னான். உபதளபதி அப்படி அதட்டியதை அதுவரையில் பார்த்தோ கேட்டோ அறியாத சுகாஜி கண்களை நெருடிக் கொண்டு எழுந்து நின்று சற்று ஏறெடுத்து உபதளபதியை நோக்கினான். ''சொல்வது விளங்குகிறதா இல்லையா? சீக்கிரம் வேலையைக் கவனி'' என்று மறுபடியும் உஷ்ணத்துடன் உத்தரவிட்டு, அவ்விடத்தில் நிற்காமல் சரேலெனத் திரும்பிச் சென்றுவிட்ட இதயசந்திரனை நோக்கிக் கொண்டே, நின்ற இடத்தில் நின்ற சுகாஜியின் கண்கள், சற்றுத் தூரத்திலிருந்த வண்டியிலிருந்து மிஸ் எமிலி இறங்கியதையும், அவள் இதழ்களில் புன்சிரிப் பொன்று தவழ்ந்து கொண்டிருந்ததையும் கவனித்தன. அது மட்டுமின்றி, அவள் கலைந்த குழல்களையும் ஆடையையுங் கூடக் கவனிக்கவே செய்தன. வண்டியிலிருந்து இறங்கிய மிஸ் எமிலி நின்றவண்ணம் தலைக் குழல்களைக் கோதி நன்றாக எடுத்துச் சுருட்டிக் கொண்டையிட்டுக் கொண்டாள். கௌன் மேல்பாகத்திற்கு இரண்டு மூன்று பித்தான்களைப் போட்டுக் கொள்ளவும் செய்தாள். பிறகு சற்றே கைகளை மேலே தூக்கி உடலையும் சிறிது நெளித்து வண்டியின் முகப்பில் உட்கார்ந்து கொண்டாள். அவள் பேரானந்த நிலையில் இருந்ததைப் புரிந்து கொண்ட சுகாஜி மிகுந்த கோபத்துடன் சற்று எட்ட இருந்த தனது புரவியிடம் சென்று அதன் மீது கடுவேகத்தில் தாவி ஏறி, தனது மடியிலிருந்த கைத்

துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தில் இருமுறை சுட்டான். பிறகு புரவியைக் கடிய வேகத்தில் செலுத்தினான் படைத் தளத்தின் ஊடே. ''ஊம்! எழுந்திருங்கள்! புறப் படுங்கள்'' என்று கூவிய அவன் குரல், அந்தக் காலை மெங்கும் ஒலித்தது. அடுத்த வினாடி புரவிகளின் கனைப்பு ஒலிகளும், அவற்றின் மீது சேணம் போடும் வீரர்களின் கோஷங்களும், பீரங்கி வண்டிகள் இழுபடும் ஒலிகளும் காதைப் பிளந்தன. அவர்கள் புறப்படு முன்பாகலே பயணத்திற்குச் சித்தமாகிவிட்ட இதயசந்திரன் தனது புரவியில் முன் சென்று அணிவகுத்து நின்ற படைகளை பின்னால் வருமாறு வாளை உருவித் தலைக்கு மேல் வீசிச் சைகை காட்ட, படை நகர்ந்தது.

படை நகர்ந்த நிமிஷத்திலிருந்து பகல் உணவுக்காகக் கொடுத்த இடைவேளை போக வேறு ஓய்வேதும் கொடுக் காமலே படையை நடத்திச் சென்ற இதயசந்திரன், மாலை முதிர்ந்த பின்னும் பாசறை அமைக்க அனுமதி கொடுக்க வில்லை. அதைப்பற்றி சுகாஜி மெல்லப் பிரஸ்தாபித்த போது, ''அடுத்த பாசறை கல்யாண் நகரில் அமைக்கப் படும்'' என்று சீறி விழுந்தான் தளபதி. இதயசந்திரன் சில வேளைகளில் புரவியை தனித்து நிறுத்திக் கொண்டு அணிவகுத்துச் சென்ற படையைப் பார்வையிட்டபோதும் சரி, புரவியில் படையின் பக்கவாட்டில் சவாரி செய்த போதும் சரி, தன்னை அடியோடு கண்ணால் பார்க்காத தைக் கண்ட எலிமி அதைப் பற்றி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள். ஒரிரு முறை அவள் வண்டிக்கு அருகில் அவள் வந்தபோது வெளியே தலையை நீட்டி, ''உபதளபதியின் கண் இந்த ஏழைமீது திரும்பாது போலிருக்கிறது'' என்று கேட்டாள் அவள் விஷமமாக. பதிலுக்கு இதயசந்திரன் அவளை முறைத்துப் பார்த்தான். வண்டியை ஓட்டியவனையும் எரித்து விடுவதுபோல் பார்த்து, ''கவனித்து அணி வகுப்புக் கலையாதவாறு செலுத்து வண்டியை'' என்று எரிந்து விழுந்து விட்டுப்

புரவியைக் கன வேகத்தில் தட்டிவிட்டான். இப்படிச் சிதைந்த சித்தத்துடனும் கெடுபிடியுடனும் கோபத்துட னும் தனது உப தலைவர்களை அதட்டிப் படையை மறுநாள் இரவு கல்யாண் நகருக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினான். அந்த நகரத்தை ஏறெடுத்துப் பார்த்த பின்புதான் அதில் எத்தனை ஆபத்திருக்கிறதென்ப தைப் புரிந்து கொண்டான் கனோஜியின் உபதளபதி.

கல்யாண் நகரத்தைச் சுற்றிலும் பெருங்கோட்டை எதுவுமில்லாததையும், உள்ளேயுள்ள சிறு கோட்டை சுவர்கூட எந்தவிதமான பாதுகாப்பையும் அளிக்க முடியாதென்பதையும், அம் மாநகரைப் பார்த்த மாத்திரத்தில் புரிந்து கொண்ட இதயசந்திரன், அந்த நகரத்தின் ஒரு புறத்தில் பெரும் சமவெளியிருப்பதால் பேஷ்வா தன்னை நோக்கி வந்தால், தான் அவருக்கு ஈடு கொடுப்பது அத்தனைச் சுலபமல்லவென்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டான். அந்த உணர்வின் காரணமாக உடனடியாக அந்த நகரத்தில் தனது படை யைத் திடமாக அமைத்துக்கொள்ள முடிவுசெய்த உபதளபதி, நகரத்தின் முகப்பில் தனது முரசுகளைப் பலமாகக் கொட்டச் செய்தான். முரசுகளைக் கேட்ட ஒரு நாழிகைக்குள் அவனைச் சந்திக்க வந்த கல்யாண் நகர தேஷ்முக் அவனது விருப்பத்தை அறிய விரும்பிக் கை கட்டி வாய் புதைத்து நின்றார். இதயசந்திரன் புரவியிலிருந்து இறங்காமலே அவரை நோக்கி வினவி னான், ''நீர்தான் கல்யாண் தேஷ்முக்கா?'' என்று.

''ஆம்'' என்றார் தேஷ்முக் பணிவுடன்.

''இங்கு ஷாஹு மகாராஜாவின் காவற் படைவீரர் எத்தனை பேர் இருக்கிறார்கள்?'' என்று வினவினான்.

''இருநூறு பேர் இருக்கிறார்கள். பொக்கிஷத்தைக் காப்பதும், பொது மக்களுக்குச் சாதாரணப்

பாதுகாப்பளிப்பதும் அவர்கள் கடமை'' என்றார் தேஷ்முக்.

''சரி. அவர்களை இங்கு அனுப்பும். இன்னும் இரண்டு நாழிகை நேரத்தில் எனது படை நகரத்துக்குள் நுழையும். நகரத்தில் உமது காரியாலயத்தை அடுத்துள்ள கட்டிடங்களும், நகரத்தின் வெளித் தெருக்கள் நான்கும் காலியாகட்டும். எனது படைகள் அவற்றில் தங்கும். நகர மக்களுக்கு எந்தப் பயமும் வேண்டாமென்று முரசு கொட்டுங்கள். எனது படையுடன் உக்கிரான வண்டிகள் வந்திருக்கின்றன. அவற்றில் உணவுப்பொருள்கள் குறைந்தால் அதை நிரப்ப ஏற்பாடு செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டான் உபதளபதி.

தேஷ்முக் நிலத்தில் படியும்படி பணிந்தார் உபதளபதிக்கு. பிறகு தமது காவலாட்களுடன் செல்லப் புரவியில் ஏறினார். அவர் புரவி ஓர் அடி எடுத்து வைக்குமுன்பாக ''நான் தங்க ஏதாவது பெரிய கட்டிடம் இருக்கிறதா இந்த நகரின் நடுவில்?'' என்று வினவினான் உபதளபதி.

''பேஷ்வா தங்கும் இடமே இருக்கிறது. அதை ஒழித்துக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் தேஷ்முக். அடுத்த நான்கு நாழிகைக்குள் இதயசந்திரன் படை துப்பாக்கி ரவை ஒன்று கூடச் செலவழிக்காமலும், துளி ரத்தம் சிந்தாமலும் கல்யாண் நகரத்தை ஆக்ரமித்துக் கொண்டது. நகரத்தின் நடுப்பாகத்திலிருந்து மக்களுக்கு எந்தவித தொந்தரவும் வைக்காமல் அங்கிருந்த இரண்டு தெருக்களிலும், நகரத்தின் வெளித் தெருக்கள் நான்கிலும் படைகளைத் தங்கச் செய்த இதயசந்திரன் நகர மத்தியி லிருந்த பேஷ்வாவின் பெருமாளிகையில்தான் தங்கினான். அவனைக் கேட்காமலும் அவனை லட்சியம் செய்யாமலும் எமிலியும் அந்தக் கட்டிடத்துக்குள் தனது மருந்துப் பெட்டிகளோடு வந்து சேர்ந்தாள். அவள் வண்டி

வாசலில் வந்து நின்றவுடனேயே பெரிதும் நிலைகுலைந்த இதயசந்திரன் சுகாஜியையும் அந்தக் கட்டிடத்திலேயே தங்கும்படி பணித்தான்.

படைகள் அவன் திட்டபடி நகரத்தின் மத்தியிலும் வெளிப்புற வீதிகளிலும் தங்கியதும் தனது உபதலைவர் களை வரவழைத்து அன்றிரவே மந்திராலோசனை நடத்தி னான் இதயசந்திரன். ''வெளிப்புறத் தெருக்களில் நமது படைகளிருப்பதால் இந்த நகரத்திலிருந்து செய்தி யாரும் வெளியே கொண்டு செல்ல முடியாதென்றாலும், நாம் இதை ஆக்ரமித்துக் கொண்டதைக் கொங்கணிக்குள் நுழைந்துவிட்ட பேஷ்வா அறிய அதிக நேரம் பிடிக்காது. ஆகவே. வீரர்கள் சிலர் எப்பொழுதும் நகரத்திலிருந்து அரை காத தூரத்துக்குச் சென்று கண்காணித்து வரட்டும். பேஷ்வாவின் படை ஒருவேளை திரும்பினால் நமக்குச் செய்தி துரிதத்தில் கிடைக்கவேண்டும். படைவீரரும் சன்னத்தமாக இருக்கட்டும், எந்த நிமிடத்திலும் முன்னேறி எதிரியைச் சந்திக்க'' என்று மற்ற உபதலைவர் களை எச்சரித்துவிட்டு, சுகாஜியுடன் தான் மட்டும் சென்று நகரத்தைச் சுற்றிப் பார்த்தான் இரண்டு நாழிகை நேரம். ஆங்காங்கிருந்த தனது படைப் பிரிவுகள் மிக எச்சரிக்கை யுடனிருந்ததைப் பார்த்து மகிழவும் செய்தான். நடுநிசி நேரத்தில் மீண்டும் தனது இருப்பிடத்துக்குச் சென்று சுகாஜியை உணவருத்தி, நித்திரை செய்ய அனுமதி கொடுத்து அனுப்பிவிட்டு, தனது அறைக்குச் சென்று ராணுவ உடையை கழற்றிப் படுக்கைமீது எறிந்துவிட்டு, நடு முற்றத்திலிருந்த பீப்பாய்களிலிருந்த நீரை எடுத்துத் தலையில் ஊற்றிக் கொண்டான். நீராடி முடித்து, தலை துவட்டி, தனது அறைக்கு மீண்டும் அவன் வந்தபோது அவனது ராணுவ உடைகள் சீராக மடித்துப் படுக்கையின் ஓர் ஓரத்தில் வைக்கப்பட்டிருந்தன. நீராடிய பின்னர் அணியச் சாதாரண புத்துடையொன்றும் கட்டிலின் மேலிருந்தது.

இந்த ஏற்பாடுகள் யாருடையவையென்பது அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. இருப்பினும் அந்த ஏற்பாட்டைச் செய்தவர் அங்கில்லாத தைரியத்தில் புத்தாடை அணிந்தான். அவன் ஆடையணிந்து முடிந்ததும் வீரனொருவன் ஒரு தட்டில் சிறிதளவு உணவும் ஒரு குவளையில் காய்ச்சிய பாலும் கொண்டு வந்தான். இதயசந்திரன் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். 'நல்லவேளை! தட்டையும் பாலையும் அவள் கொண்டுவராதிருந்தாளே!' என்று தன்னைப் பெரிதும் திருப்தி செய்து கொண்டு பாலை மட்டும் குடித்து விட்டு உணவை நிராகரித்து, வீரனை வெளியே அனுப்பிக் கதவைத் தாளிட்டுப் படுத்தான்.

கதவுத் தாழ் நன்றாகப் பொருந்தியதென்றாலும் கட்டிலில் படுத்த பின்பு அவன் இதயத் தாழ்கள் திறந்தன. இரண்டறைகள் தள்ளி எமிலி படுத்திருக்கிறாளென்ற கள்ள நினைப்பு அவன் மனத்தில் மெல்ல மெல்ல எழுந்தது. சே சே! நான் மஞ்சுவுக்குச் சொந்தம். எமிலியை நினைப்பதும் தவறு! என்று யாரோ தன்னைக் கேள்வி கேட்டது போல் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். ஆனால் முந்திய நாளிரவு வண்டியில் விளைந்தது அவன் நினைப்பில் எழுந்தது. அவளைப் பார்க்க அவன் வண்டிக்குள் தலை நீட்டியதும் அவள் மலர்க் கரங்கள் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டதும் அவன் மனத்தில் எழுந்தது. அக்கரங்கள் கழுத்தை வளைத்ததோடு இல்லாமல் அவளை நோக்கி இழுக்க முயன்றதும் அவன் சித்தத்தில் வளைய வந்தது. அவன் முகம் அவள் மார்பை எட்டியபோது அவள் கௌனின் பித்தான்கள் திறந்து கிடந்தன. அப்படி மார்பு உடை திறந்திருந்தது மார்பின் விம்மலாலா அவள் சாகசத்தாலா என்பது இந்த இரவில் கூடப் புரியவில்லை அவனுக்கு. திண்ணிய அழகில் புதைந்த தன் முகம், அதைத் தொடர்ந்து வண்டிக்குள் தானும் நுழைந்த வேகம், பிறகு விளைந்துவிட்ட விபரீதம், அத்தனையும் அவன் மனத்தில் எழுந்து அவன் உணர்ச்சிகளை

வாட்டின. வண்டிக்குள் நுழைந்தபோது அவள்தான் சொன்னாளே, 'அஞ்சாதீர்கள்' என்று. 'எதற்காக அதைச் சொன்னாள்?' என்று கேட்டுக் கொண்டான் இன்று. 'மஞ்சுவுக்குத் துரோகமல்ல இது. நீங்கள் அவளிடம் திரும்பும்போது நான் உங்களுடன் இருக்கமாட்டேன்' என்றாளே எமிலி. ''அதெப்படி அத்தனை திட்டமாகச் சொன்னாள்?'' என்றொரு கேள்வியும் எழுப்பினான்.

கேள்விகள் எழ எழ அவன் பலவீனம்தான் அதிகமாயிற்று. அந்தப் பலவீனத்தின் காரணமாக எழுந்து அறைத்தாழை அகற்றி வெளியே நடந்து எமிலியின் அறையை நோக்கிச் சென்றான். அறை தாழிடப்பட்டிருந்தது. அதைத் தட்டத் தைரியமில்லாமல் நின்றான் சில வினாடிகள். உள்ளிருந்து துன்ப முனகல் ஒன்று கேட்டது. அதற்குமேல் பொறுக்காத உபதளபதி கதவைத் தட்டினான் இருமுறை. எமிலி நிதானமாகவே கதவைத் திறந்தாள். அவனைப் பார்த்ததும் ஏதும் பேசாமல் நின்றாள். உபதளபதியின் முகத்தில் அசடு வழிந்தது. ''இங்கு முனகல் கேட்டதே'' என்றான் மெல்ல.

''அப்படியா!'' என்றாள் எமிலி அவனை நோக்கி.

அவன் அவளை நன்றாக நோக்கினான். அவள் கண்கள் சிவந்திருந்தன. நீண்ட நேரம் அழுதிருப்பதன் அறிகுறி தெரிந்தது. ''எமிலி! அழுதாயா?'' என்று வினவினான் உபதளபதி அனுதாபம் மிகுந்த குரலில்.

''ஆம்'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினாள் அவள்.

''ஏன்?''

''பெண் ஜென்மம் அதற்காக ஏற்பட்டது.''

''சே சே! பைத்தியம்.''

''அழுவதற்கு அதுவும் காரணம்.''

''எது?''

''பைத்தியம்.''

''என்ன பைத்தியம்?''

''பெண்களுக்கு புருஷர்களின் மீது ஏற்படும் பைத்தியம்'' இதைச் சொல்லிவிட்டு உள்ளே செல்ல முயன்ற எமிலியை கையைப் பிடித்து நிறுத்தினான் இதயசந்திரன். நிறுத்தியதன்றித் தன்னை நோக்கித் திருப்பவும் செய்தான்.

அப்பொழுதும் அவள் கவுனின் மேல்பகுதிப் பித்தான்கள் போடப்படவில்லை. திறந்த உடையிலிருந்து உள்ளழகுகள் லேசாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. ''சரி! உள்ளே வாருங்கள்'' என்று கூறித் தனது கையை விடுவித்துக் கொண்டு உள்ளே நடந்தாள் அவள். உடன் வந்த இதயசந்திரனை நோக்கித் திரும்பி அவள் தோள்மீது தனது ஒரு கையைப் போட்டுக் கொண்டாள். ''உங்கள் இடது கையால் என் இடையை சுற்றி வளைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

இதயசந்திரன் அவள் சொன்னபடியே செய்தாலும், ''இதெல்லாம் எதற்கு எமிலி'' என்று கேட்டான்.

''நான் மீண்டும் வாழப் பார்க்கிறேன்'' என்றாள்.

''நீ சொல்வது புரியவில்லை'' என்றான் இதயசந்திரன்.

''நான் பம்பாய்க்குச் செல்லப் பிரியப்படுகிறேன்'' என்ற அவள், தன் உடலை அவன் உடலுடன் இழைத்தாள்.

''செல், அனுப்பி வைக்கிறேன்.''

''தனித்தல்ல, உங்களுடன்.''

''எப்பொழுது?''

''இப்பொழுது.''

''என்ன உளறுகிறாய்?''

மிஸ் எமிலி தன் முகத்தை அவன் மார்புமீது படிய வைத்துக் கொண்டாள். தலைக்குக் கீழிருந்த அவள் உடல் பூராவும் நெளிந்து அவன் உடலுடன் இழைந்தது. அந்த நிலையில் தொடர்ந்து, ''உபதளபதி! மனம் எங்கும் நம்மை அழைத்துச் செல்லும். பம்பாயில் கவர்னரின் நடன மண்டபத்துக்கு இப்பொழுது நாம் செல்கிறோம். உங்களுடன் நான் வாழ்ந்தது அந்த மண்டபத்தில்தான். அங்குதான், அந்த நடனத்தில்தான், உங்கள் உணர்ச்சித் துடிப்பை நான் கண்டேன். உங்களை அதற்குப் பிறகு என்னால் மறக்க முடியவில்லை. ஆகவே நகருங்கள். நடன முறையில் இணைந்து வாருங்கள்'' என்று கூறிய எமிலி நகர்ந்தாள் ஆங்கில நடன பாணியில்.

கவர்ச்சியான அவள் உடலின் அழகு பூராவும் அவன் மீது இழைந்தது. இதயசந்திரன் மெல்ல மீண்டும் பம்பாயின் நடன மண்டபத்திற்குச் சென்றான். அறைக் கதவு திறந்திருந்ததைக்கூட கவனியாமல் அவர்கள் இருவரும் இணைந்து மெய்மறந்து அந்த அறையைச் சுற்றிச் சுற்றி நகர்ந்தனர். இடையிடையே எமிலி தன் இதழ்களை அவன் இதழ்களுடன் இழைத்தாள். அவன் இதழ்களும் தாழ்ந்து அவள் மலரிதழ்களைச் சந்தித்தன. பிறகு கழுத்திலும் புதைந்தன. நாழிகைகள் பறந்தன, நடனம் முடியவில்லை. பலபடி அவள் அசைந்தாள். அவனை முன்னோக்கி அசைத்தாள். பின் வாங்கி அசைந்தாள். அவள் குழல் பிரிந்து கிடந்தது. விழிகள் மூடிக் கிடந்தன. கைகள் செயல்பட்டன. இருவருக்கு மட்டுமே சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தில் அவர்கள் இருந்தார்கள்.

இருவர் உள்ளங்களிலும் வேட்கையுமிருந்தது, வேதனையுமிருந்தது. இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். நடனமாடிய நிலையில் அவளை அவன் கட்டிலுக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தான். அவன் கழுத்தைக்

கரங்களால் வளைத்த அவள், அவன் காதுக்கருகில் சொன்னாள், ''பத்தே நாட்கள் எனக்கு'' என்று.

அவன் புரிந்து கொண்டான். பதில் சொல்லவோ அவளைப் பிரிந்து செல்லவோ திராணியில்லாமல் திகைத்தான். இந்தச் சமயத்தில்தான் அந்தத் தலையீடு வந்தது. அவன் ஆயுளில் நினைத்திராத, முற்றும் எதிர்பாராத, அவன் மனத்தைக் காதல் மயக்கத்திலிருந்து இரத்த வெறிக்குக் கொண்டு சென்ற எதிர்பாராத தலையீடு அது. அந்தத் தலையீடு அவன் சுய நிலையையும் சுய அறிவையும் அடியோடு பறித்துச் சென்றது.

அத்தியாயம் 26

பழைய கதை; புதிய நிலை

அந்தப் பயங்கரத் தலையீடு இதயசந்திரன் இன்பத்தைத் தகர்த்தது. இணையிலா வெறியை ஊட்டியது. கல்யாண் நகரத்திலிருந்து தொலை தூரத்திலிருந்த வேறிடங்களுக்கு அவனை அப்படியே அள்ளிச் சென்றது! பழைய இடங்கள், பழைய முகங்கள், பழைய நிகழ்ச்சிகள் ஆகிய பலவற்றுக்கு அவனை அழைத்துச் சென்றது. 'உபதளபதி!' என்ற ஒரு கரகரத்த கடுமையான குரல் இத்தனையையும் செய்தது. அந்தக் குரலைக் கேட்டதும் எமிலியின் இடையிலிருந்த கையை எடுக்காமலே குரல் வந்த திசையை நோக்கியதும் அசைவற்றுப் பல வினாடிகள் நின்றுவிட்டான் கனோஜியின் உபதளபதி.

அந்த அறைக்கு வெளியே மிக ஒல்லியும் உயரமுமான வீரன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் இடைக் கச்சையிலிருந்து மிகவும் அகலமுள்ள பட்டாக்கத்தி யொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அவன் முகத்தின் குறுக்கே ஆழமான வெட்டு காயமொன்று பளீரெனத் தெரிந்தது— அறையிலிருந்து திறந்த கதவின் வழியாக வந்த விளக்கு வெளிச்சத்தில்!

அன்று அந்த இரவில் அழகிய மங்கையொருத்தி தனது உடலில் சாய்ந்திருந்த நிலையையும் தனது இடது கை அவளுடைய வழவழத்த இடையை இறுக அணைத்திருந்த இன்பத்தையும் அடியோடு மறந்தான் இதயசந்திரன், அந்த மனிதனை நோக்கிய வினாடியில். அவன் மனத்திலிருந்த கல்யாண் நகரம் மறைந்தது. அவன் தங்கியுள்ள மாளிகையும் மறைந்தது, தஞ்சை தோன்றியது. தஞ்சை அரண்மனையும் தோன்றியது. அந்த அரண்மனை அறை

யில் நின்றிருந்தாள் சத்ரபதியின் இளைய மகன் ராஜாராமின் ரகசிய ராணி. அவள் கூறினாள் இதய சந்திரனை நோக்கி: ''வீரனே! என் செல்வனை எடுத்துச் சென்றவன் இடுப்பில் அகலமான வாள் தொங்கிக் கொண்டிருக்கும். அதைவிட அகலமான வாளை நீ பார்த்திருக்க மாட்டாய். அவன் முகத்தின் நடுவில் குறுக்கே ஆழமான வெட்டுக் காயமிருக்கும். முகத்தில் கொலைக் களை கடர் விடும். மிக மெல்லிய தேகமுள்ளவன். அவனை வாட் போரில் சமாளிக்க முடியாது. அவனைக் கண்டுபிடித்தால் என் மகனிருக்கும் இடம் தெரியும். அவன் பெயர் தெரியாது'' என்று அவள் கூறினாள். தொடர்ந்து, ''மகனைக் கண்டுபிடித்தால் அவனை அழைத்துவா, முடியாவிட்டால் அழித்துவிட்டு வா! ஹிந்து சாம்ராஜ்யம் எப்பொழுதோ ஒரு தலைமுறையில் ஏற்படுகிறது. அது என் மகனால் அழிய வேண்டாம்'' என்றும் சொன்னாள். முகத்திரையின்றி முதன் முதல் பார்த்தான் அவன் அவளை. அந்தச் சுந்தர சோக முகம், அவள் உதிர்த்த துன்பச் சொற்கள் அனைத்தும் கண்முன் எழுந்தன உபதளபதிக்கு. அப்பொழுதும் ராணி அவன் கண்முன்பு நின்றாள்.

அந்தக் காட்சி அகன்று அஞ்சன்வேல் கோட்டை எழுந்தது— அவன் கண் முன்பாக. அந்தக் கோட்டையில் தளையிலிருந்த அவனை நோக்கித் திரை முகப் பெண் ஒருத்தி வருகிறாள். அவளைத் தொடர்ந்து முகவெட்டுக் காயமுள்ள ஒரு மனிதனும் வருகிறான். பிறகு கழுகுப் பாறையில் தான் கிடக்கிறான். அங்கு ஏதேதோ முகங்கள் ஏதேதோ பேச்சுக்கள்! பிறகு ஜலதீபத்தில் மஞ்சுவின் அருகில் இருக்கிறான் இதயசந்திரன். இப்படியாகப் பழைய இடங்களும், பழைய காட்சிகளும் தோன்றிய அந்த நினைகளில்கூட முகவெட்டுக் காயமுள்ள மனிதனை மட்டும் அவன் மறக்கவில்லை. சென்ற இரண்டு ஆண்டுகளில் அவன் மயங்கியது உண்டு மங்கையரிடம், பார்த்தது உண்டு பெரும் போர்களை. ஆனால் உள்ளுர அவன்

வந்த பணி மட்டும் இதயத்தின் ஒரு மூலையில் இருந்து கொண்டிருந்தது. அந்த முகவெட்டு வீரனைக் கண்டு பிடிக்கும் வேட்கை மட்டும் தமிழக வீரனுக்கு இடைவிடாமல் இருந்து கொண்டே இருந்தது. ஆனால் அந்தச் சந்திப்பு இந்த நிலையில், இந்த இடத்தில் கல்யாண அரண்மனையில் போருக்குச் சற்று முன்பு ஏற்படும் என்று மட்டும் இதயசந்திரன் இதயம் சொப்பனத்திலும் எண்ணிப் பார்க்கவில்லை. ஆகவே, 'உபதளபதி' என்று விளித்த அந்த வீரனை அவன் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான் நீண்டநேரம். அவனைப் பார்க்கப் பார்க்க அவன் ரத்தம் கொதித்தது. வாளிருக்க வேண்டிய இடத்திற்குச் சென்ற கையும் துடித்தது. ஆனால் கை சென்ற இடத்தில் வாளில்லாததால் கையைக் கீழே தொங்கப்போட்டான். பிறகு எமிலியை நோக்கி, ''நீ படுத்துக்கொள்'' என்று கூறிவிட்டு அறைக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்து, ''டேய்! யாரங்கே?'' என்று கூவிக் காவலரை விளித்தான்.

அந்தக் கூவல் பயனளிக்கவில்லை. அழைப்புக்கு யாரும் வரவில்லை. இன்னொரு முறை குரல் கொடுக்க இதயசந்திரன் முயன்றதும், ''யாரையும் அழைத்துப் பயனில்லை. வெளிக் கட்டிலிருந்த வீரர்களை நான் அனுப்பிவிட்டேன்'' என்று மீண்டும் ஒலித்தது கரகரத்த கடுமையான குரல்.

இதயசந்திரனின் கோபம் எல்லை கடந்தது. ''யார் நீ?'' என்ற கேள்வியும் எழுந்தது உக்கிரத்துடன்.

இதயசந்திரன்தான் பதட்டத்தையும் கோபத்தையும் காட்டினானேயொழிய, அந்த மனிதன் எந்தவிதப் பதட்டத்தையும் காட்டவில்லை. ''ஸார்கேலின் தூதுவன்'' என்றான் அடக்கத்துடன்.

''என் காவல் வீரர்களை அனுப்ப உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?'' என்று சீறினான் இதயசந்திரன்.

பதிலுக்குத் தன் மடியிலிருந்த புலி நக ஆபரண மொன்றை எடுத்து அந்த மனிதன் நீட்டினான் இதய சந்திரனிடம். ''நீங்கள் தற்காப்புக்காகவும், என்னைக் கண்டுபிடிக்கவும் தஞ்சையிலிருந்து கொண்டு வந்த ஆபரணத்தின் இன்னொரு பகுதி இது'' என்று சர்வ சாதாரணமாக அறிவிக்கவும் செய்தான்.

இதயசந்திரன் அந்த ஆபரணத்தை வாங்கி நீண்ட நேரம் கவனித்தான். தான் கொண்டு வந்த ஆபரணத் துக்கும் அதற்கும் எந்தவித வித்தியாசமுமில்லையென்பதை உணர்ந்து பிரமித்தான். அது போலி ஆபரணமல்ல, தன்னிடம் தஞ்சை ராணி கொடுத்ததுபோல் இன்னோர் ஆபரணம் என்பதை புரிந்துகொண்டதால் பெரும் குழப்பத்துக்கும் உள்ளானான். ''இது ஏது உனக்கு?'' என்று குழப்பத்தின் ஊடே கேட்கவும் செய்தான்.

அந்த மனிதன் நின்ற இடத்தைவிட்டு அசையாமலே கூறினான்: ''சிவாஜி மகாராஜா ஒரு புலி நக ஆபரணத்தை மட்டும் தரிக்கவில்லை. இரண்டு தரித்திருந்தார், ஒன்று ராஜாராமின் கிளையிலும் இன்னொன்று ஸாம்பாஜியின் கிளையிலும் இருந்தது. பின்னால் அதுவும் ராஜாராமிடம் வந்து சேர்ந்தது. ஒன்று நேர்கிளைக்கு— தாராபாயிடம் கொடுக்கப்பட்டது. இன்னொன்று ரகசிய ராணிக்குக் கொடுக்கப்பட்டது. ஒன்றை ரகசிய ராணி உனக்குக் கொடுத்தாள். ரகசிய ராணிக்கு மகனொருவன் இருப்பதை ராஜாராம் மரணத் தறுவாயில் தனது மந்திரியிடம் அறிவித்தார். மந்திரி தாராபாயிடம் கூறினார். தாராபாய் பதக்கத்தை எனக்கு அனுப்பி அதன் ஆணையாக அரச குமாரனை அபகரித்து வர எனக்குக் கட்டளை அனுப்பி னார். கட்டளை திடீரென்று வந்தது பன்ஹாலாவிலிருந்து ஓர் ஒற்றன் மூலம். அரச மகனை அபகரித்துக் கிளம்பினேன். இன்னொரு வீரன் அதைத் தடுத்தான். அவனைக் கோடரி கொண்டு குத்திவிட்டு வந்தேன்.''

சிறிதும் பதற்றமில்லாமலும் சர்வ சகஜமாகவும் பழைய வரலாறு கூறிய அந்த வீரனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை இதயசந்திரனுக்கு. பதக்கத் தைக் காட்டியதும் அவன் வீரர்கள் அகன்றதில் வியப்பேதுமில்லை இதயசந்திரனுக்கு. சிவாஜி மகாராஜா வின் புலி நக ஆபரணத்துக்கு அடிபணியாதவனைச் சிரச்சேதம் செய்ய கட்டளையிருந்தது மகாராஷ்டிரத்தில். பதக்கத்தைக் கொண்டு வந்திருப்பதால் அவனைச் சிறை செய்யவோ கொலை செய்யவோ அதிகாரமும் தனக்கில்லை யென்பதைப் புரிந்து கொண்டான் இதயசந்திரன். 'இவனை எதற்காக இந்தச் சமயத்தில் கனோஜி அனுப்பினார் இங்கே?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவிக்கவும் செய்தான். கடைசியாக அந்த வீரனை ஏறெடுத்து நோக்கினான். தஞ்சை அரண்மனையிலிருந்த ராஜாராமின் ரகசிய மனைவி கூறியதுபோல் அவன் முகத்தில் கொலைக்களை சுடர் விட்டதாகத் தோன்றியது தமிழனுக்கு. மெள்ளச் சமாளித்துக் கொண்டு கேட்டான் தமிழன், ''அரசமகன் என்ன ஆனான்?'' என்று.

முகவெட்டுக் காயமிருந்த வீரன் பதில் பட்டென்று வந்தது, ''சொல்ல எனக்குக் கட்டளையில்லை'' என்று.

''யார் கட்டளை வேண்டும் அதற்கு?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

''அதைச் சொல்லவும் உரிமையில்லை எனக்கு?'' என்றான் அவன்.

அவன் திமிர் இதயசந்திரனை அசர வைத்தது. ''இப்பொழுது எதற்காக வந்தாய்?'' என்று வினவினான் கடைசியில்.

பதிலுக்குத் தனது அருகிலிருந்த ஒரு நீண்ட செய்திச் சீலையை எடுத்து நீட்டினான் அந்த வீரன் இதயசந்திர னிடம். பிறகு கை நீட்டிப் பதக்கத்தைக் திரும்ப பெற்றுக்

கொண்டான். செய்திச் சீலையை விளக்கிருந்த இடம் கொண்டு சென்று பிரித்துப் படித்தான் தமிழன். அதில் கனோஜி கையொப்பம், முத்திரை, அவற்றுடன் செய்தி யிருந்தது. ''இதை நீ எந்த நேரத்தில் பெறுகிறாயோ அந்த நேரத்திலிருந்து பன்னிரண்டு நாழிகைக்குள் பிங்களேயால் தாக்கப்படுவாய். ஆகவே, இதைக் கண்டதும் நீயே புறப்பட்டுக் கல்யாண் நகருக்கு வெளியில் அவரைச் சந்தித்து விடு.

கனோஜி

(மகாராணி தாராபாயின் ஸார்கேல்)''

செய்தி சுருக்கமாயிருந்தது. கட்டளை திட்டமா யிருந்தது. இந்தத் திட்டத்தில் வந்துள்ள தூதனின் பங்கு என்ன என்பதைப் புரிந்து கொள்ளத் துடித்த இதய சந்திரன் கேட்டான், ''கடிதத்தைத் தவிர வேறு ஏதாவது செய்தி உண்டா?'' என்று.

''உண்டு.''

''என்ன?''

''உங்களுக்கும் பேஷ்வாவுக்கும் ஏற்படும் இந்தப் போர் மகாராஷ்டிரத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் என்று சொல்லச் சொன்னார் ஸார்கேல்.''

''உம்.''

''தவிர, கல்யாணுக்கு உங்களை அனுப்பியதற்கு காரணம் இருக்கிறது என்று சொல்லச் சொன்னார்.''

''என்ன காரணம்?''

''கல்யாண், உலகம் கொண்டாடும் ஒரு தமிழனின் ஜன்ம பூமி.''

''என்ன? இது தமிழனின் ஜன்ம பூமியா?''

''ஆம்.''

''யார் அவன்?''

பதில் சொல்லுமுன்பு தலை தாழ்த்தினான் அந்த வீரன். பிறகு மந்திரம் உதிர்ப்பதுபோல் சொல்லை உதிர்த்தான். *''சாணக்கியர்'' என்று.

இதயசந்திரன் பிரமை பிடித்து நின்றான் பல வினாடிகள். ''எந்தச் சாணக்கியர்? சந்திரகுப்தனின் அமாத்யரா! அர்த்த சாஸ்திரத்தின் ஆசிரியரா!'' என்று வினவினான் பிரமிப்புடனும் வியப்புடனும்.

கல்யாண் நகரைப் பற்றி நினைத்ததும் கொலைக்களை சொட்டிய அந்த வீரன் முகத்திலும் உணர்ச்சி பெருகியது. ''ஆம், உபதளபதி! அதே சாணக்கியர்தான். கல்யாண் ஒரு அற்புத நகரம். பழம்பெருமை பெற்றது. ஒரு காலத்தில் இது சோளங்கி ராஜபுத்திரர்களின் தலைநகரா யிருந்தது. இந்த நகரத்தில் அந்தக் காலத்தில் ஜெயிக்கப் பட்ட எதிரிகளின் ரத்தினங்கள் இறைந்து கிடந்ததாகக் கவி கிருஷ்ணராஜி 'ரத்னமாலா' என்ற கிரந்தத்தில் வர்ணிக்கிறார். அத்தகைய சிறப்புடைய நகரத்தில், சோளங்கி ராஜபுத்திரர் தலைநகரத்தில் இணையிலா ராஜதந்திரியும் தமிழருமான சாணக்கியரின் சொந்த நகரத்தில் தமிழனான நீங்களும் இருக்கிறீர்கள். ஆகவே, போருக்குப் புறப்படுங்கள். தமிழனான சாணக்கியர் காட்டிய திறமையை நீங்கள் காட்ட முடியுமென்று ஸார்கேல் நம்புகிறார். அந்த நம்பிக்கைக்குப் பாத்திர மாகுங்கள்'' என்று கூறினான் அவன் உணர்ச்சியுடன்.

இதயசந்திரன் உள்ளத்தில் பெருமிதம் எழுந்தது. வந்த வீரனிடம் பகையும் எழுந்தது. ஆகவே கூறினான்

---

* கன்ஹாரி குகைக் கல்வெட்டுகளின் XIV— XV-ம் பகுதிகளில் சாணக்கியன் கல்யாண் நகரில் பிறந்தவன் எனக் காணப்படுகிறது.

"In the inscription he is called DAMILA" —Hand Book of Bombay Presidency— by J MURRAY p p. 166–67

அந்த வீரனை நோக்கி, ''சாணக்கியன் தமிழனென்பதை அறியப் பெருமிதமடைகிறேன். ஆனால் சாணக்கியன் பகையை மறக்கவில்லை. பகைவரைப் பூண்டோடு அழித்தான். இந்தப் போர் முடிந்ததும் நீ எங்கிருந்தாலும் தேடி வருவேன். என் வாள் உன் உயிரையோ அல்லது உன் வாள் என் உயிரையோ குடிக்கும் வரையில் நான் உறங்க மாட்டேன்'' என்றான் உணர்ச்சி பொங்கிய குரலில். மேலும் இரைந்தே சொன்னான்: ''ஒரு பேதையிடமிருந்து, பாலகனைப் பிரித்தாய். அவன் கதியையும் சொல்ல மறுக்கிறாய். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றுக்கே உன்னைக் கொல்லலாம். ஆனால் நிச்சயமாக நம்பு. இதயசந்திரன் அந்த அரசகுமாரனின் கதியை அறியாமல் மகாராஷ்டிரத்திலிருந்து அகலமாட்டான்'' என்று.

பிறகு அந்த வீரனையும் அழைத்துக்கொண்டு மாளிகையிலிருந்து வெளியே சுகாஜியை அழைத்து, ''சீக்கிரம் படையைச் சன்னத்தம் செய். கால்பகுதி கல்யாண் நகரைக் காக்கும். முக்கால் படை வெளியே நகரும். முரசு ஏதும் கொட்டவேண்டாம். வீரர்களைக் கொண்டு ரகசியமாக உத்தரவைப் பரப்பு. இன்னும் இரண்டு நாழிகைக்குள் படை நகர வேண்டும்'' என்று உத்தரவிட்டான். தானும் போருடை அணிந்து மிஸ் எமிலியிடம் விடைபெற்றுப் புறப்பட்டான். இரண்டே நாழிகை! படை ஊர்ந்தது நகருக்கு வெளியே.

அத்தியாயம் 27

கல்யாண் சமவெளிப் போர்

நடுநிசி வந்துவிட்டதை நட்சத்திரங்கள் கண் சிமிட்டி அறிவித்த காலத்தில் கல்யாண் நகரிலிருந்து மிகுந்த எச்சரிக்கையுடனே கிளம்பினான் தமிழனான இதய சந்திரன். சுமார் ஆயிரத்து சொச்சம் காலாட்படை வீரரை மட்டும் கல்யாண் நகரப் பாதுகாப்புக்காக நிறுத்தி விட்டு முரசறைவிப்போ வேறு சத்தங்களோ எழாத வண்ணம் அம் மாநகரை விட்டு வெளியே சென்ற இதய சந்திரன், அடுத்த ஒரு நாழிகை வரை ஏதும் பேசாமல் மௌனமாகவே புரவியில் அமர்ந்து சென்றான். தன் பக்கத்தில் ஒல்லியாய் ஆஜானுபாகுவாய்ப் புரவியிலமர்ந்து வந்து கொண்டிருந்த அந்த முகவெட்டுத் தழும்புள்ள வீரனை ஒருமுறை கூடத் திரும்பிப் பார்க்காமலும், அவன் தன்னுடன் வந்ததை அறவே வெறுத்துக் கொண்டும், படைகளின் முகப்பில் சென்ற இதயசந்திரன் மனம் பெரும் எரிமலையாயிருந்தது. எந்த ஒரு மனிதனைச் சந்திக்கவும் அவசியமானால் கொன்றுவிடவும் அவன் மகாராஷ்டிரம் வந்தானோ எந்த ஒரு மனிதன் ஓர் அபலையின் கண்ணீருக்குக் காரண பூதனோ, அதே மனிதன் கனோஜியிடமிருந்து கடிதத்துடனும் புலி நக ஆபரணத்துடனும் தன்னை நாடி வந்ததே பெரும் எரிச்சலாயிருக்க, அவன் தன்னுடன் போர் முனைக்கும் பிடிவாதத்துடன் வந்தது அந்த எரிச்சலை உச்சநிலைக்கே கொண்டு சென்றது. போதாக்குறைக்கு அந்த மனிதன் தன் பக்கத்திலேயே வந்து கொண்டிருந்தது, இதயசந்திரன் உள்ளத்தை எரிமலையாக்கியிருந்தது.

இவனைத் தனக்குத் தெரியுமென்று கனோஜி ஆங்கரே சென்ற இரண்டு ஆண்டுகளாகத் தன்னிடம் ஏதுமே சொல்

லாதது பெரும் விந்தையாயிருந்தது தமிழனுக்கு. இவன் கனோஜியின் கையாள் என்றால் தஞ்சை அரண்மனையி லுள்ள அபலையின் அன்பு மைந்தனைத் தூக்கி வந்ததில் கனோஜிக்கும் பங்கிருக்குமென்று அவன் உள்ளம் எடுத்துக் காட்டியது. போருக்குச் செல்லும் நிலையில் இத்தனை மனக் கசப்பையும் மனக் குழப்பத்தையும் கனோஜி விளை வித்து விட்டது போருக்கே நல்லதுதானா என்று தனக்குத் தானே கேட்டுக்கொள்ளவும் செய்தான் தமிழன். 'தனது படையைப்போல் மூன்று பங்கு படைக்குமேல் அழைத்து வந்திருக்கும் பேஷ்வாவுடன் மோதுவதும் போர் புரிவதும் தெள்ளிய சிந்தனையிருந்தாலே அசாதாரணமான காரியம். குழப்பமடைந்த மனநிலையில், மன உளைச்சலில், நான் எப்படி நிதானமாகச் சிந்திக்க முடியும்? படைகளை நடத்த முடியும்?'' என்று எண்ணி எண்ணிப் பெரும் துயரத்துக்கும், கனோஜி மீது ஆத்திரத்துக்கும் உள்ளா னான் தமிழன். அந்தச் சமயத்தில் அசம்பாவிதமாக ஒரு கேள்வியைத் தொடுத்தான் முகவெட்டு வீரன். ''பேஷ்வாவை எங்காவது மலைச்சரிவில் சந்திக்கப் போகிறீர்களா அல்லது சமவெளியில் சந்திக்கப் போகிறீர் களா?'' என்று வினவினான்.

உபதளபதியின் கண்கள் சீற்றத்துடன் திரும்பின அவன் மீது ஒரு முறை. ஏதோ சொல்ல வாயெடுத்த உதடு கள் சொற்களை உதிர்க்கவில்லை. உபதளபதி வேறு புறம் திடீரெனத் திரும்பி, சற்று எட்ட வந்து கொண்டிருந்த சுகாஜியைத் தன்னருகில் சைகை செய்து வரவழைத்து அவன் காதில் கிசுகிசுவென ஏதோ கூறினான். சரியென்ப தற்கு அறிகுறியாகத் தலையசைத்த சுகாஜி, மீண்டும் படையின் பின் வரிசைக்குள் சென்று அங்கிருந்த இரண்டு மூன்று வீரர்களிடம் ஏதோ கூற, அந்த வீரர்கள் புரவியில் வெகு வேகத்தில் முன் வரிசைக்கு வந்து கண்ணிமைக்கும் நோக்கில் முகவெட்டு வீரனைச் சூழ்ந்து கொண்டனர்.

அதைக் கண்டு வெகுண்ட முகவெட்டு வீரன் தனது அகன்ற வாளிடம் கையைக் கொண்டு போக முயற்சித்த சமயத்தில் இதயசந்திரன் சொற்கள் கடுமையுடன் ஒலித் தன. ''கையை வாளின்மேல் வைக்காதே, வைத்த மறு வினாடி நீ பிணமாகிவிடுவாய்'' என்று. அதனால் மேலும் வெகுண்டு திருப்பிய முகவெட்டு வீரன் கண்களை, உப தளபதியின் கைத் துப்பாக்கியின் பயங்கரக் குழல் உற்று நோக்கிக் கொண்டிருந்தது. முகவெட்டு வீரன் முகத்தில் ஏற்கனவேயிருந்த கொலைக்களை அதிகமாகச் சுடர் விட்டது. ''கனோஜியின் தூதன் நான்'' என்று கூறினான் சினத்துடன் அவன்.

''உன்னிடம் கடிதம் கொடுத்தபோதே தூது முடிந்து விட்டது'' என்று சுட்டிக் காட்டினான் இதயசந்திரன் வெறுப்புடன்.

''என்னுடன் சிவாஜி மகாராஜாவின் ஆபரணம் இருக்கிறது. அதிருக்கும்வரை என்னை யாரும் தொட முடியாது'' என்று அறிவித்தான் முகவெட்டு வீரன்.

''அந்தக் கஷ்டத்தை நீக்கிவிடுவோம்'' என்ற இதய சந்திரன் கைத்துப்பாக்கியை அந்த வீரன் முகத்துக்குக் குறிவைத்த வண்ணமே தனது புரவியை அவன் புரவியுடன் இணைத்து அவன் கச்சையிலிருந்த புலிநக ஆபரணத்தை எடுத்துத் தன் கச்சையில் செருகிக்கொண்டான். அடுத்த வினாடி முகவெட்டு வீரனைச் சூழ்ந்திருந்த வீரர்களையும் நோக்கி, ''தூதுவரைப் படையின் கடைசியிலிருக்கும் வண்டியொன்றில் அடைத்து வையுங்கள்'' என்று கூறி விட்டு, ''சுகாஜி! நீ வா என்னுடன்'' என்று அவனை அழைத்துக்கொண்டு முன்னேறினான்.

அந்த முகவெட்டு மனிதன் தனது பக்கத்திலிருந்து நீங்கியதே பெரும் சுமை மனத்திலிருந்து இறங்கியது போலிருந்தது இதயசந்திரனுக்கு. சிவாஜி மகாராஜாவின்

புலி நக ஆபரணம் சுச்சையில் ஏறியது மிதமிஞ்சிய தைரியத்தை அளித்ததன்றி, 'அப்சல்கானை அழித்த கையி லிருந்த சுங்கணமல்லவா இது? இந்தச் சமயத்தில் எனக்கு இது கிடைத்தது அதிர்ஷ்டந்தான்' என்ற எண்ணத்தை யும் மகிழ்ச்சியையும் உபதளபதியின் உள்ளத்தில் தோற்று வித்தது. அடுத்த இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் போர்-காட்டை அடுத்த கல்யாண் சமவெளியில் ஊர்ந்து வந்த பேஷ்வாவின் பெரும் படையைப் பார்த்தபோது பெரும் மகிழ்ச்சியுடனேயே அதைப் பரிசீலித்தான் உபதளபதி.

சுமார் பதினையாயிரம் வீரர்களிருந்த அந்தப் பெரும் படை ஏதோ பெரும் பிசாசு ஒன்று படுத்துக்கொண்டிருப் பது போன்ற பிரமையை அளித்தது இதயசந்திரனுக்கு. அந்தப் படை அதிக அரவமேதுமின்றி மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்ததால் பொழுது புலருமுன்னே கல்யாண் நகரை விழுங்கிட பேஷ்வா பிங்களே திட்டமிட் டிருக்கிறாரென்பதைப் புரிந்து கொண்டான் தமிழக வீரன். அந்தப் பெரும் படை தனது படையைவிட மிக அதிகமா யிருந்தாலும் அதில் பலவீனம் அதிகமிருப்பதை அதன் அமைப்பிலிருந்தே புரிந்து கொண்டான் உபதளபதி. பேஷ்வா பிங்களே சம்பிரதாய மார்க்கத்தில் பீரங்கிப் படையை முன் பகுதியில் வைத்துப் படை அமைப்பு செய் திருந்ததையும், அதையடுத்துப் புரவிப் படையும், புரவிப் படையை அடுத்துக் காலாட் படையுமிருந்ததையும் கவனித் தான். போர் நேருக்கு நேர் நடந்தால் பேஷ்வா படை யின் முகப்பிலுள்ள பீரங்கிகள் தனது படையில் பாதியை அழித்துவிட முடியுமென்பதையும், பிறகு பீரங்கிப் பிரயோகத்தை நிறுத்திப் புரவிப் படையினர் வாட்களை யும், கைத்துப்பாக்கிகளையும் கொண்டு பாய்ந்தால், எண்ணிக்கையின் அதிகத்தாலேயே பேஷ்வா தன்னை நசுக்கி விட முடியுமென்பதையும் புரிந்து கொண்டான் உபதளபதி. இப்படித்தான் பேஷ்வாவைச் சந்திக்கும் சமயத்தில் பின்புறத்தில் தாக்குவதாக முன்பு

கனோஜி கூறியிருந்ததும் அவனுக்கு நினைவு வந்தது. அவர் அனுப்பிய செய்தியில் அதைப்பற்றி ஏதும் தகவலில்லாததை எண்ணிப் பார்த்து, 'கனோஜி எப்படி வருவார்? எப்போது வருவார்?' என்ற கேள்வியையும் உள்ளூர எழுப்பிக் கொண்டான்.

பிறகு ஒரு முடிவுக்கும் வந்து கையை பேஷ்வாவின் படைகளை நோக்கிக் காட்டி, ''பார்த்தாயா சுகாஜி அந்தப் படையை?'' என்று வினவினான்.

சுகாஜி கூறினான் சாதாரணமாக, ''பார்த்தேன்'' என்று.

''என்ன புரிந்து கொண்டாய்?'' என்று எழுந்தது அடுத்த கேள்வி உபதளபதியிடமிருந்து.

''நமது படையைவிட அது மூன்று மடங்குக்கு மேல் பெரியது'' என்றான் சுகாஜி.

''உம்.''

''பீரங்கிகள் முதல் வரிசையில் இருக்கின்றன. நாம் அப்படையை அணுகினால் பீரங்கிகளின் குண்டுகளால் அழிக்கப்படுவோம்'' என்றான்.

''உம்.''

''மீதியுள்ளவர்களை அடுத்துவரும் புரவிப் படை அழிக்கும்.''

''உம்.''

''ஸார்கேலுக்குச் செய்தி கொண்டு விரையவும் ஆளிருக்காது.''

நிலைமையை மிக நன்றாக சுகாஜி புரிந்து கொண்டு விட்டதுபற்றி மகிழ்ச்சியடைந்த உபதளபதி தன் கையில் வைத்திருந்த துரதிஷ்டிக் கண்ணாடியைக் கண்ணில்

பொருத்தி எதிரிப்படையை நீண்ட நேரம் ஆராய்ந்தான். படையின் நடுவில் புரவி வீரர்களுக்கிடையில் பெரும் புரவியொன்றின்மீது தலையில் முண்டாசுடனும் கழுத்தில் பெரும் நவரத்ன மாலையுடனும் அமர்ந்திருந்த பேஷ்வா பிங்களேயையும் பார்த்தான். பேஷ்வா பரம உற்சாகத்தி லிருப்பதை அவர் முகம் காட்டியது. 'நல்லது பேஷ்வா, நல்லது' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட இதய சந்திரன், தூரதிருஷ்டிக் கண்ணாடியை சுகாஜியிடமும் கொடுத்து, ''சுகாஜி! இதன்மூலம் எதிர்ப்படையைப் பார்'' என்றான். சுகாஜி பார்த்து முடிந்ததும் கூறினான், ''சுகாஜி! நமது படையிருக்குமிடம் சிறிது மேடு, அவரது படை நகர்ந்து வருவது பூர்ணமான சமவெளி. நமது புரவிப் படையை இரண்டாகப் பிரித்துவிடு. நீ ஒரு பகுதியைப் பக்கவாட்டில், இடது புறமாக அழைத்துக் கொண்டு பேஷ்வாவின் பீரங்கிப் படைக்கும் சற்றுப் பின்னால் சென்று விடு. நான் ஒரு பகுதியைப் பக்கவாட்டில் வலது புறமாக அழைத்து வருகிறேன். எதிரியைத் தாக்கும் சமயம் வந்ததும் நான் ஆகாசத்தில் கைத்துப்பாக்கியால் சுடுகிறேன். உடனே நான் வலது புறத்திலும் நீ இடது புறத்திலும் வெகு வேகத்துடன் பேஷ்வாவின் புரவிப் படையை ஊடுருவுவோம். பீரங்கிகள் நேர் எதிர்ப்புறம் வாயை வைத்துக் கொண்டிருப்பதால் நம்மீது எதிரி குண்டு வீச முடியாது. பீரங்கிகளைத் திருப்பிக் குண்டு வீசினால் நம்மோடு பேஷ்வா படையும் நாசமடையும்'' என்று.

சுகாஜி புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையசைத்தான். ''பீரங்கிகளை அடுத்துள்ள புரவிப் படையின் கடை வரிசையைத் தாக்கு. பீரங்கிகளைத் திருப்பினால் முதலில் பேஷ்வா புரவிப்படைதான் பாதிக்கப்படும்'' என்றும் வினவினான் இதயசந்திரன்.

சுகாஜி அதற்கும் தலையசைத்தான். ''நமது பீரங்கிப் படையையும் இரண்டாகப் பிரித்துவை. காலாட்படைகள்

பின்னாலிருக்கட்டும். நம்மையும் மீறி எதிரிகள் முன்னேறினால் பீரங்கிகள் அவர்கள்மீது சீறட்டும். காலாட்படை துப்பாக்கிகளைக் கொண்டு புரவிகளைச் சுடட்டும், புரவி பிழைத்த வீரர்கள் ஓடி வரும்போது காலாட்கள் வாட்களேந்தி பாயட்டும்'' என்றான். உள்ள படையைக் கொண்டு எதிரியை எத்தனைத் திறமையாக எதிர்க்க முடியுமோ அத்தனைத் திறமையான திட்டத்தை இதய சந்திரன் வகுத்து விட்டதைக் கேட்டதால் சுகாஜி பெருமையும் புளகாங்கிதமும் அடைந்தான். ''உயிரிருந்தால் மீண்டும் சந்தித்துத் தங்களை அடிபணிகிறேன் உதளபதி!'' என்று கூறிவிட்டுச் சென்றான் சுகாஜி.

இரவு நான்காம் ஜாமத்தை எட்டிக் கொண்டிருந்தது. அடுத்து நிகழப் போகும் பயங்கரத்தை நினைத்தோ என்னவோ விண்மீன்கள் லேசாக நடுக்கம் காட்டின. தூரத்தேயிருந்த இரண்டொரு மலைக்காடுகளிலிருந்து துஷ்ட மிருகங்களின் அலறல்கூடக் கேட்டது. ஆனால் எந்தச் சத்தத்தையும் காட்டாமல் மெல்ல இரு பிரிவுகளாக ஊர்ந்த இதயசந்திரன் புரவிப்படையின் இரு பகுதிகளும் பேஷ்வா படையின் விலா பக்கங்களை அணுகிக் கொண்டிருந்தன. வருகிற ஆபத்தை அறியாத பேஷ்வா மிகக் கம்பீரமாகத் தமது படையை நடத்திக் கொண்டு முன்னேறினார். திடீரென துப்பாக்கி வெடியொன்று கேட்டதும், அதைத் தொடர்ந்து தடதடவென பக்கவாட்டு மேட்டு நிலங்களிலிருந்து காற்றிலும் வேகமாக வந்த இரு புரவிப்படைகள் தனது விலாப் பகுதிகளில் பாய்ந்து விட்டதையும் கண்ட பேஷ்வா திகிலடைந்தார்.

அத்தகைய பெரும் படைக்குத் தலைமை தாங்கி வந்தது பேஷ்வா பிங்களேயைத் தவிர வேறு யாராயிருந்தாலும் அப்படித் திகிலடையக் காரணமிருக்காது. பேஷ்வா மட்டும் தனது புரவிப்படையைப் பக்கவாட்டில் படரவிட்டு எதிரியின் புரவிப்படைகளைத் தாக்கி

யிருந்தால் அவரது படை ஊடுருவப்பட்டிருக்காது. எதிர் யின் கதியும் அதோகதியாக முடிந்திருக்கும். ஆனால் பேஷ்வா பிங்களேக்கு சாமர்த்தியம் லவலேசமுமில்லை யென்பதை இதயசந்திரன் கண்ணிமைக்கும் நேரத்தில் புரிந்துகொண்டான். பிங்களேயைப் பற்றிக் கனோஜி போட்ட மதிப்பு எத்தனை சரியானது என்பதையும் நினைத்துப் பார்த்தான்.. அந்த நினைப்புகளால் மிகுந்த தைரியமும் ஆவேசமும் கொண்டு வெகுவேகமாக பேஷ்வாவின் புரவிப்படையின் கடைப் பகுதியைத் தாக்கி ஊடுருவினான். நேர் எதிர்ப் பக்கத்தில் சுகாஜியும் நுழைந்தான்.

திடீரென்று மூண்டுவிட்ட அந்தப் போர் ஒரு நாழிகைக்குப் பயங்கரமாக நடந்தது. இதயசந்திரனும் சுகாஜியும் புரவிப்படையின் கடைசிப் பகுதியை ஊடுருவியதும் பேஷ்வா பிங்களே முதலில் தனது பீரங்கிகளைத் திருப்பப் பார்த்தார். அதனால் தனது படைக்கு ஹானி ஏற்படுமென்று அறிந்ததால் புரவிப்படைப் போரையே சிறிது நேரம் அனுமதித்தார். இதயசந்திரன், சுகாஜி இவர்கள் வேகம், எதிர்பாராத தாக்குதல், அந்தத் தாக்குதலால் புரவிப் படையிலிருந்து காலாட்படை பிரிக்கப்பட்டது. இந்த ஆரம்ப அனுகூலங்களால் பேஷ்வா பாதிக்கப்பட்டாலும், வெகு சீக்கிரம் பேஷ்வாவின் படையின் எண்ணிக்கை பலம் தன்னை ஆக்ரமிப்பதை இதயசந்திரன் புரிந்துகொண்டான். அடுத்த ஒரு நாழிகை நேரந்தான் போரைத் தான் சமாளிக்க முடியும் என்றும், இறுதியில் பேஷ்வாவின் கையே ஓங்குமென்பதும் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கவே அவன் வெகு மும்முரமாகவே போரிட்டான். அவன் கை வாள் வெகு வேகமாகச் சுழன்றது. பலரை வெட்டியது, பலர் மார்பில் பாய்ந்தது, பலர் வாட்கரங்களைச் செயலறச் செய்தது. இப்படிப் போரிட்டுக் கொண்டே எதிர்ப் படையை ஊடுருவி அவன் பாதி தூரம் வருவதற்

ம், சுகாஜியும் பாதி தூரம் ஊடுருவி வந்து அவனைச் ந்திப்பதற்கும் சரியாயிருக்கவே, இருவருமாகச் சேர்ந்து ஊடுருவிய இடைவெளியை அதிகப்படுத்த மும்முரமாகப் போரில் இறங்கினார்கள். அல்விருவர் தலைமையில் அவர்கள் படை வீரர்கள் வெறி கொண்டவர்களைப் போல் கூச்சலிட்டுக் கொண்டும் சிரித்துக் கொண்டும் பயங்கரமாகப் போரிட்டனர்.

ஆனால் நேரம் ஏற ஏற இதயசந்திரன் படை வேகம் குறையலாயிற்று, அவன் திட்டப்படி பக்கவாட்டில் எட்ட வந்த அவன் பீரங்கிகள் எதிரிகள்மீது குண்டு வீசியுங்கூட எண்ணிக்கையின் உக்கிரம் வீரத்தை மெல்ல சளைக்கவே செய்தது. அதை உணர்ந்த இதயசந்திரன் ''ஹர் ஹர் மகாதேவ்'' என்ற வீரக் கூச்சல் எழுப்பினான். அதைத் தொடர்ந்து அவன் படையில் மட்டுமல்ல, பக்கவாட்டி லிருந்த மேட்டு நிலத்திலிருந்தும் அதே கூச்சல் எழும்பி வானையே பயங்கரமாகப் பிளந்தது. அந்த ஒலியைக் கேட்ட பேஷ்வா திரும்பிப் பார்த்தார். கனோஜியின் வெண்ணிறப் புரவி காற்றிலும் கடுகி வந்து கொண் டிருந்தது. தூரத்தில் அதைத் தொடர்ந்து வந்தன ஆயிரம் புரவிகளுக்கு மேல். இன்னொரு ஆயிரம் புரவிகள் சற்றுத் தள்ளி வந்தன மற்றொரு வரிசையில். அந்த இரண்டு வரிசைப் புரவிகளும் பேஷ்வாவின் காலாட்படைக்குள் இரண்டிடங்களில் புகுந்து ஊடுருவிச் சென்றன.

அந்த இரண்டு வரிசைப் புரவிகள் புகுந்த அதே நேரத்தில் மேட்டுப் பகுதியிலிருந்து பெரும் பீரங்கிகளின் குண்டுகள் பேஷ்வா பீரங்கிப்படைமீது விழுந்தன. பீரங்கி களை இழுத்து வந்துவிட்ட நிலத்தில் நின்ற சில மாலுமிகள் பெரிதாகக் கூவினர், நகைத்தனர். பீரங்கி களைத் திருப்பித் திருப்பிக் குண்டு மாரி பொழிந்தனர். பெரும் படையிருந்தும் கனோஜி, இதயசந்திரன் இருவரின் பெரும் போர்த் தந்திரத்தாலும் பேஷ்வாவின் படை

அவ்விருவராலும் நான்காகப் பிரிக்கப்பட்டதாலும், கனோஜியின் படை வேகத்தைக் கண்டு அவர் படை திகிலும் குழப்பமும் அடைந்துவிட்டதாலும், கல்யாண் போரைப் பேஷ்வா பிங்களே அன்று இழந்தார். ஆகவே, கனோஜி அவரைச் சிறை செய்து தன் பின்னால் வரும்படி அழைத்ததும் பேசாமல் அவருக்குப் பின்னால் புரவியைச் செலுத்தினார் பேஷ்வா. அப்படிச் சென்றபோது பின்னால் ஒருமுறை திரும்பிப் பார்த்தார் பேஷ்வா. எங்கும் பீரங்கிக் குண்டுகளின் புகைச்சலும், நாசமடைந்த படையின் விபரீத நிலைகளும் அவர் கண் முல்பு எழுந்தன. மாண்டுகொண்டிருந்த வீரர்களின் மரண ஓலிகள் அவர் காதில் ஈயமெனப் பாய்ந்தன. பேஷ்வாவின் நாசியிலிருந்து சோகப் பெருமூச்சொன்று வெளிவந்தது. மகாராஜா ஷாஹுவின் கொங்கணி வெற்றிக் கனவு அந்தப் போரில் சீரழிந்துவிட்டதை உணர்ந்து கொண்டார் பிங்களே. மகாராஷ்டிரத்தின் எதிர்காலம் கனோஜியின் கையில் சிக்கிவிட்டதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டார்.

அத்தியாயம் 28

மருத்துவ மனை

சரக்கில்லாத மனிதன் சரக்கில்லாத எழுத்தைப் போன்றவன். சந்தர்ப்பத்தால் உயர்நிலையடைகிறான், உண்மையான சோதனை வந்ததும் விழுந்து விடுகிறான். பேஷ்வா பாஹிராவ் பிங்களே அப்பேர்ப்பட்ட மனிதர் களில் ஒருவர். பதவியின் பெயரும் அலங்காரங்களும் அவருக்கு உதவியிருக்கக் கூடுமானால் அவர் அழைத்து வந்த சைன்னியத்தின் பலத்திற்கு அவரை யாரும் முறியடித் திருக்க முடியாது. கனோஜியின் பின்னால் யுத்தரங்கத் திலிருந்து கைதியாக, பரம பரிதாப நிலையில் அவர் சென்றிருக்க அவசியம் நேர்ந்திருக்காது.. மகாராஜா ஷாஹுவின் தயவால் தகுதிக்கு மேற்பட்ட பதவியை ஏற்றுக் கொண்ட காரணத்தால், வெறும் படாடோபத் தின் காரணமாகப் பிங்களே அன்று கனோஜியின் பின்னால் புரவியில் தலைகுனிந்த வண்ணம் சென்றார். அப்படிச் சென்றபோது அவர் முகத்தில் வெறுப்பும் வியப்பும் கலந்து கிடந்தது. 'இத்தனை பெரிய சைன்னி யத்தை இந்தக் கடற்கொள்ளைக்காரன் எப்படி மொத்தம் நாலாயிரத்துச் சொச்சம் வீரர்களைக் கொண்டு முறியடித்து விட்டான்?' என்று எண்ணிப் பார்த்ததால் வியப்பிருந்தது அவர் இதயத்தில். 'கேவலம் ஒரு கொள்ளைக்காரனிடம் சிக்கிக் கொள்ளும் தலையெழுத்து எனக்கு ஏற்பட்டதே!' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டதால் வெறுப்பு விரிந்தது வியப்புக் குறியுடன் கலந்து. இத்தனையிலும் பேஷ்வா தமது கம்பீரத்தை மாத்திரம் சிறிதளவும் விடாமலும், உள்ளூர இருந்த பிடிவாதத்தின் காரணமாக உதட்டை நன்றாக மடித்துக் கொண்டு தமது மீசையை அவ்வப்பொழுது தடவி விட்டுக் கொண்டும் புரவியில் சென்றார்.

முன் சென்ற கனோஜி அவரைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. போர்க்களத்தை விட்டுப் புறப்பட்டுப் போவதற்கு முன்பு ஆணையை இதயசந்திரனுக்கு இடவும் இல்லை. காலப் பிரமாணம் தவறாத இசைவல்லவனைப் போல் சரியான சமயத்தில் போர் அரங்கத்தில் தோன்றிப் போரை முடித்தார். பிங்களேயைப் பிடித்தார். புறப்பட்டார் கல்யாண் நகரை நோக்கி. இதயசந்திரனும் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்பட்டானில்லை. சுகாஜி புரவியில் அவசரத்துடன் வந்து ''ஸார்கேல் கிளம்பி விட்டார்'' என்று அறிவித்ததும், ''சரி. அவர் போகட்டும், நீ வா, நமக்கு வேலையிருக்கிறது'' என்று கூறினான். பிறகு பிரிட்டிஷார் செய்தி அறிவிக்கும் ஒரு ஒலிப்பெருக்கிக் குழாயை வாயில் வைத்துக்கொண்டு, பேஷ்வாவின் வீரர்களே! உடனடியாக ஆயுதங்களைக் கீழே போட்டு விடுங்கள். பீரங்கி வீரர்கள் பீரங்கிகளை விட்டு முன்னால் வந்து விடுங்கள்'' என்று அறிவித்தான் பெரிதாக. மற்றும் இரு வீரர்களிடம் அதேமாதிரி குழாய்களைக் கொண்டு செய்தியை முழக்கினான். பிறகு சுகாஜியை அழைத்து, ''சுகாஜி! உயிரிழந்தோரை அந்த இடங்களிலேயே அடக்கம் செய்துவிட ஏற்பாடு செய். குற்றுயிரும் குலை உயிருமாயிருப்பவர்களைப் புரவிகள்மீது குறுக்கே படுக்க வைத்தோ, நமது ஆயுத வண்டிகளில் ஏற்றியோ நேராக கல்யாண் நகருக்கு அனுப்பிவிடு. எதிரிகளின் பீரங்கி வண்டிகளை நமது வீரர்கள் ஏற்றுக்கொள்ளட்டும். மீதி ஆயுதங்களைக் கட்டுக் கட்டாகக் கட்டி வண்டிகளில் போட்டுக் கொண்டு வரச் சொல்'' என்று உத்தரவிட்டுத் தனது புரவியை மேட்டு நிலத்துக்குச் செலுத்தி அங்கு நின்ற வண்ணம் ஏற்பாடுகளைக் கவனிக்கலானான்.

சுகாஜி உபதளபதியின் உத்தரவை மிகத் திறமையுடன் நிறைவேற்றினான். படுகாயமுள்ளவர்களை முதலில் வண்டிகளிலும் புரவிகளிலும் நகருக்கு அனுப்பி வைத்தான். பிறகு சரணடைந்த எதிரிப் படை வீரரை தனது வீரர்

களின் பெரும் வளையத்துக்குள் கொண்டு வந்தான். பீரங்கிகளைத் தனது படை பீரங்கிகளுடன் சேர்த்துக் கொண்டான். பீரங்கிகளை இழுத்துச் செல்லவும் உத்தரவிட்டான். அத்தனையும் ஒரு பெரும் ஊர்வலம் போல் கல்யாண் நகரை நோக்கி நகர்ந்தது. பேஷ்வா படைகளுக்குப் பெரும் சோக ஊர்வலம் அது. கனோஜின் படைகளுக்கு அது வெற்றி விருந்து. கனோஜியின் வீரர்களில் பலர் மாலுமிகளானபடியாலும் பல கப்பல்களையும் ஊர்களையும் கொள்ளையடித்துப் பழகியவர்களானபடியாலும், பெரும் கூச்சல் போட்டுக் கொண்டும் களிவெறிகொண்டு ஆடிக்கொண்டும் சென்றார்கள். பேஷ்வாவின் உக்கிராண வண்டிகளிலிருந்து மதுக் குப்பிகளைப் பல வீரர்கள் எடுத்துக் குடித்துவிட்டு வெறி பிடித்துச் சிரித்தார்கள். தோல்வியடைந்த வீரர்களில் சிலரை கனோஜியின் மாலுமிகள் கட்டிக் கொண்டு முத்தமும் இட்டார்கள். ''பேஷ்வாஜி! பேஷ்வாஜி'' என்று கேலிக் கூச்சலும் போட்டார்கள்.

மேட்டு நிலத்தில் புரவியில் நின்று இத்தனையும் கவனித்த இதயசந்திரனுக்கு அந்த நிகழ்ச்சிகள் பெரும் வெறுப்பைத் தந்தன. ஆனால் அவை அவன் காணாத காட்சியல்ல. கப்பல்கள் அகப்பட்டாலும் கனோஜியின் வீரர்கள் செய்யும் அட்டகாசத்தின் மற்றொரு காட்சிதான் அந்த நிலப்போரின் முடிவிலும் அவன் கண்டது. இருப்பினும் பகைவனுக்கு அருளும் இந்துக்களின் பண்பாடு உள்ள அவன் இதயம் அந்தக் காட்சிகளை வெறுக்கவே செய்தது. ஆயினும் அவன் செய்வதற்கு ஏதுமில்லை. அங்கு கனோஜியின் படை வீரரை ஏதும் சொல்லவோ கட்டுப்படுத்தவோ தனக்கு அதிகாரமில்லையென்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஆயினும் அவன் இதயத்துள் இன்னொரு பயமும் கவிந்து கொண்டது. கனோஜியின் வீரர்கள் கல்யாண் நகரத்தைச் சூறையாடிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம்தான் அது.

அந்த அச்சத்தைத் தானும் ஏற்றுக் கொண்டது போலவும் அதனால் கோபம் கொண்டவன் போலவும் சிவந்த முகத்துடன் கதிரவன் தோன்றினான்.

பீரங்கிப் புகைச்சலாலும், பலவிடங்களில் கிடந்த தனித் தனிப் பிணங்களாலும் மிகுந்த பயங்கர சொரூபத்துடனிருந்தது கல்யாண் சமவெளி. தவிர, தரையில் தோய்ந்து காயாமலிருந்த மனித ரத்தமும் புரவிகள் ரத்தமும் சூரியனின் ரத்த நேத்திரங்களுடன் கலந்துவிட்டன போல் கதிரவன் செவ்வொளியில் பளபளத்தன. புரவியில் அமர்ந்த வண்ணம் அந்தக் காட்சியைப் பார்த்த இதயசந்திரன், ''ஹிந்து சமுதாயத்தை வேறு யாரும் அழிக்க வேண்டியதில்லை. ஹிந்துக்களே பரஸ்பரம் தங்களை அழித்துக் கொள்வார்கள்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அதைச் சொல்லிக் கொண்டதன் விளைவாகப் பெருமூச்சொன்றும் அவனிடமிருந்து எழுந்தது.

போர்வெளியைச் சுத்தப்படுத்தித் தனது கடன்களை முடித்துக் கொண்டு இதயசந்திரன் கல்யாண் நகருக்குத் திரும்பும்போது உச்சிவேளை வந்துவிட்டது. போர் நடந்த போது ஏகாக்ர சித்தனாய் அதில் லயித்துவிட்ட இதயசந்திரனுக்குத் தனது கடமை முடிந்ததும், தான் வண்டியிலடைத்த முகவெட்டு வீரனின் நினைப்பு வந்தது. அதுவும் தான் தங்கியிருந்த இருப்பிடத்துக்கு வந்த பிறகு தான் அவன் நினைப்பு வந்தது. உடனே சுகாஜியைக் கேட்டான், ''சுகாஜி, கனோஜியின் தூதன் என்ன ஆனான்?''

அப்பொழுதுதான் விழித்துக் கொண்ட சுகாஜியும், ''அடடே! போர் மும்முரத்தில் அவனைக் கவனிக்காமல் விட்டு விட்டேனே!'' என்று கூறினான் பதைபதைத்து.

''வா, அவனை முதலில் கண்டுபிடிப்போம்'' என்று [illegible] சென்று மிஸ்

எமிலியைத் தேடினான். எமிலி அங்கில்லையென்றும், மருத்துவமனையில் இருப்பதாகவும் அங்கிருந்த வீரர்கள் கூற, ''மருத்துவமனையா! எங்கேயிருக்கிறது அது?'' என்று வியப்புடன் வினவினான் இதயசந்திரன்.

''உதனபதி போருக்குச் சென்றதும் இங்குள்ள நகரத்து நலவர்களை மிஸ் எமிலி அழைத்து, காயமடைந்தவர்கள் வந்தால் சிகிச்சை செய்ய இடம் கேட்டார்கள். நகரத்து நலவர்கள் கல்யாண் நகரின் ஒரு கோடியிலிருந்த இரண்டு சத்திரங்களைக் காட்டினார்கள். அந்தச் சத்திரங்களைச் சுத்தி செய்து பாய்களை விரித்துக் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தாள் வெள்ளைக்காரி. அதன் முகப்பில் 'ஹாஸ்பிடல்' என்றும் எழுதிவிட்டாள். அங்கு மிஸ் எமிலியின் அனுமதியின்றி யாரும் நுழையவும் கூடாதென்று உத்தரவும் இட்டிருக்கிறார்கள்'' என்று விளக்கினார்கள் இரு வீரர்கள்.

''சுகாஜி! நான் சென்று எமிலியைப் பார்க்கிறேன். நீ சென்று ஸார்கேலிடம் பிடிபட்ட வீரர்கள், ஆயுதங்கள் இவற்றின் எண்ணிக்கையையும் மற்ற விவரங்களையும் கூறு'' என்று உத்தரவிட்டு அங்கிருந்து புறப்பட்டு மருத்துவமனைக்குச் சென்றான். நகரக் கோடிக்கு அவன் சென்றதும் தூரத்திலேயே ஒரு பெருந் துணியில் 'ஹாஸ்பிடல்' என்று எழுதியிருந்தது. அதை அவன் புரவி அணுகியதும் அங்கிருந்த நகரவாசிகள் இருவர் குதிரை லகானைப் பிடித்து அவனை இறங்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

''என்னை இறங்கச் சொல்ல யாருக்கு அதிகாரம் இருக்கிறது?'' என்று வியப்புடன் கேட்டான் இதயசந்திரன்.

''இது ஹாஸ்பிடல், இங்கு டாக்டர் உத்தரவுதான் செல்லும்'' என்றான் ஒருவன்.

''யாரது டாக்டர்?''

''மிஸ் எமிலி.''

''நர்ஸ் எப்பொழுது டாக்டர் ஆனாள்?''

நகரவாசிகள் இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தார்கள். அந்தச் சமயத்தில் உள்ளிருந்து எழுந்தது எமிலியின் கணீரென்ற குரல், ''யாரங்கே சத்தம் போடுவது?'' என்று. குரலைத் தொடர்ந்து எமிலியும் வந்தாள் வெளியே. இரைந்து கொண்டிருந்தது இதய சந்திரன் என்று அறிந்துங்கூட சற்று உஷ்ணத்துடனேயே கேட்டாள், ''எதற்குச் சத்தம் போடுகிறீர்கள்?'' என்று.

''என்னை உள்ளே வரத் தடைசெய்ததற்கு?'' என்றான் தமிழன்.

''உள்ளே என்ன வேலை உங்களுக்கு?'' என்று கேட்டாள் எமிலி.

''ஒருவனைப் பார்க்க வந்திருக்கிறேன்'' என்றான் இதயசந்திரன்.

அவன் பார்க்க வந்திருப்பது யாரை என்பதைப் புரிந்து கொண்டாள் எமிலி. அவள் முகத்தில் சிந்தனை படர்ந்தது. பிறகு மெள்ளச் சொன்னாள், ''யாரை என்பது புரிகிறது எனக்கு'' என்று.

''அவன் இங்குதானிருக்கிறானா?''

''ஆம்.''

''நான் உடனே பார்க்கவேண்டும் அவனை.''

''முடியாது''

''ஏன்?''

மீண்டும் சிந்தித்தாள் எமிலி பிறகு, ஒரு முடிவுக்கு வந்து, ''சரி வாருங்கள்; புரவி இங்கே இருக்கட்டும்,'' என்று கூறவே இதயசந்திரன் புரவியை விட்டு இறங்கி அவளைத் தொடர்ந்து சத்திரத்துக்குள் சென்றான். முதல் சத்திரத்தில், எங்கும் காயமடைந்த வீரர்கள் முனகிக் கொண்டிருந்தார்கள். சிலர் மயக்க மருந்தின் விளைவு தெளியாமல் பிணம் போல் கிடந்தார்கள். மற்றும் சிலர்

அவனைப் பரிதாபத்துடன் பார்த்தார்கள். அந்தக் கூட்டத்தில் அவன் படை வீரரும் இருந்தார்கள், எதிரி வீர்களும் இருந்தார்கள். அவன் வீரர் சிலர் அவனை வணங்க கையை எடுத்து, முடியாமல் திணறினார்கள். இன்னும் சிலர் பார்வையாலேயே வணங்கினார்கள்.

சாதாரண சமயமாயிருந்தால் இதயசந்திரன் அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்திருப்பான். ஆனால் அந்த முகவெட்டு வீரனைப் பார்க்கும் ஆவலாலும் அக்கறையாலும் அவர்களைப் பார்த்து தலையை மட்டும் அசைத்துக் கொண்டு சென்றான். எமிலி இதயசந்திரனைச் சத்திரத்தின் ஒரு கோடியிலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றாள். அங்கிருந்த ஒரு கட்டிலில் கிடந்தான் அந்த முகவெட்டு வீரன் பல காயங்களுடன். முகத்திலும் தலை யிலும் பல இடங்களில் பெரும் கட்டுகளிருந்தன அவனுக்கு. கண்கள் மூடிக்கிடந்தன. மூச்சிருப்பது மட்டும் தெரிந்தது, எழுந்து தாழ்ந்த மார்பிலிருந்து.

மிஸ் எமிலியை நோக்கித் திரும்பிய இதயசந்திரன், ''இவன் பிழைப்பானா?'' என்று வினவினான்.

''சொல்ல முடியாது'' என்றாள் மிஸ் எமிலி.

''பிழைக்க வேண்டும்'' என்று சீறினான் இதய சந்திரன்.

''இவன் என்ன அத்தனை முக்கியம்?'' என்று வினவினாள் மிஸ் எமிலி.

''ஒரு சாம்ராஜ்யத்தின் பெரும் ரகசியம் இவன் இதயத்தில் புதைந்து கிடக்கிறது. என் ஆணையொன்றும் அதில் சிக்கியிருக்கிறது,'' என்று ஆவேசத்துடன் கூறினான் தமிழன்.

அத்தியாயம் 29

புனிதத் தொழில்

அந்த முகவெட்டு வீரன் இதயத்தில் ஒரு சாம்ராஜ்
யத்தின் பெரும் ரகசியம் புதைந்திருப்பதாக இதயசந்திரன்
கூறியதைக் கேட்ட மிஸ் எமிலி, மிதமிஞ்சிய வியப்படைந்
தாளாகையால், இதயசந்திரனை மலர்ந்த கண்களைக்
கொண்டு ஏறெடுத்து நோக்கினாள். அந்த வீரன் மிக
முக்கியத்துவம் வாய்ந்தவனென்பதை முந்திய இரவு
நிகழ்ச்சியிலேயே அவள் புரிந்து கொண்டிருந்தாலும்,
பெரும் சாம்ராஜ்ய ரகசியம் அவனிடமிருக்குமென்று
அவள் ஊகிக்கக் காரணமுமில்லை; சந்தர்ப்பமுமில்லை.
தானும் இதயசந்திரனும் இணைந்தாடிய சமயத்தில்
முன்னறிவிப்பு ஏதுமின்றித் திடும்பிரவேசமாக அந்த
முகவெட்டு வீரன் உள்ளே நுழைந்ததையும், அவனை
மிகுந்த கோபத்துடன் இதயசந்திரன் சந்தித்ததையும்,
பிறகு இருவரும் வெளியே போய்விட்டதையும் பார்த்
திருந்தாளாகையால் இதயசந்திரனையும் இஷ்ட விரோத
மாக இழுத்துச் செல்லும் அளவுக்கு அவனுக்குத்
திராணியும் திறமையும் இருந்ததை அவள் உணர்ந்து
கொண்டிருந்தாளேயொழிய, ஒரு பெரிய சாம்ராஜ்ய
மர்மத்தை ஏந்திய மனிதனாக அவனை அவள் எடை
போடவில்லை. அவன் பெருங்காயங்களுடன் வண்டியில்
போட்டு எடுத்து வரப்பட்டபோது அவனை இதயசந்திர
னுக்காக எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமென்று
தனியாகப் படுக்க வைத்துக் காயங்களுக்குக் கட்டும்
போட்டிருந்தாள் எமிலி. சில இடங்களில் தஸ்திர
சிகிச்சையும் செய்திருந்தாள். அவன் பிழைப்பானா
இல்லையாவென்று அவளே சந்தேகித்திருந்த நிலையில்
அவனுடைய புது மர்ம வெடியை வீசியதும்

தமிழனை நோக்கிய அவள், ''இவனிடமா? பெரும்
சாம்ராஜ்ய மர்மம் சிக்கியிருக்கிறதா?'' என்று கேள்வி
யொன்றையும் விடுத்தாள்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த
இதயசந்திரனை நோக்கி, ''ஏன் அந்த மர்மத்தை நான்
அறியக் கூடாதோ?'' என்று இன்னொரு கேள்வியும்
கேட்டாள்.

இதயசந்திரன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை.
நீண்டநேரம் சிந்தித்துவிட்டுச் சொன்னான், ''எமிலி!
இவனால்தான் நான் கொங்கணிக்கே வந்தேன். வந்தபின்
பல தொல்லைகள் என்னைப் பிடித்துக்கொண்டன...''
என்று.

எமிலி மெல்ல நகைத்தாள். ''ஆம். ஆம். நான்கு
தொல்லைகள்'' என்றும் கூறினாள் நகைப்புக்கிடையே.

இதயசந்திரன் எண்ணமெல்லாம் அந்த முகவெட்டு
வீரன்மீது புதைந்திருந்தபடியால் அவள் பேச்சிலிருந்த
ஏளனத்தை அவன் கவனிக்கவில்லை. ஆகவே, ''நான்கு
தொல்லைகளா?'' என்று சாதாரணமாகவே கேட்டான்.

''ஆம். முதல் தொல்லை பானுதேவி, இரண்டாவது
தொல்லை மஞ்சு, மூன்றாவது தொல்லை காதரைன்,
நான்காவது தொல்லை...'' என்று எமிலி வாசகத்தை
முடிக்காமல் விட்டாள்.

''உம்.'' இதயசந்திரன் அந்த உங்காரத்திற்கு மேல்
சொற்களேதும் கொட்டவில்லை.

''நான்காவது தொல்லை பக்கத்திலிருக்கிறது''
என்றாள் எமிலி நகைத்துக் கொண்டே.

இதயசந்திரன் கை, அவள் இடையில் தவழ்ந்து,
அவளை நெருங்கி இழுத்தது. ''எமிலி! இவனை எப்படி

யாவது பிழைக்கச் செய்துவிடு'' என்றதன் உணர்ச்சி யுடன்.

''முயன்று பார்க்கிறேன்'' என்றாள் எமிலி.

''இவனுக்குக் காயங்கள் அதிகமா எமிலி?''

''மிக அதிகம், நெற்றியில் மட்டும் ஆறு லெட்டுக் கர்யங்கள் இருக்கின்றன. இரண்டு இடங்களில் தையலும் போட வேண்டியிருந்தது. உடம்பிலும் பல காயங்கள். இவன் போரின் மும்முரமான இடத்தில் இருந்திருக்க வேண்டும். உண்மையில் பெருவீரன் இவன்.''

''இவனைச் சிறைப்படுத்தி வண்டிக்குள் அடைத்தேன். இவன் எப்படிப் போரின் மும்முரமான இடத்துக்கு வந்தான்?''

''இப்பேர்ப்பட்டவனை அடைத்து வைப்பது கஷ்டம். உங்கள் வீரர்களையும் மீறி இவன் போரில் நுழைந் திருப்பான்.''

மிஸ் எமிலி சொன்னது சரியாகத்தானிருக்குமென்று புரிந்தது இதயசந்திரனுக்கு. 'இத்தகைய ஒரு பெரிய வீரன் மட்டும் கொலைகாரனாக இல்லாமல் தஞ்சையிலுள்ள ராணிக்கு அநீதியும் இழைக்காமல் இருந்தால் மகாராஷ் டிரத்துக்கு எத்தனை பயன்பட்டிருப்பான் ஆக்க வழியில்?' என்று எண்ணிப் பெருமூச்சுவிட்ட இதயசந்திரன், மிஸ் எமிலிக்கு மெல்ல மெல்லத் தன் கதையைச் சொன்னான். கதையின் விவரத்தைக் கேட்கக் கேட்கப் புல்லரித்தது. உடலுடன் உணர்வுடன் இதயசந்திரனை நோக்கிய எமிலி, கடைசியாகச் சொன்னாள், ''உபதளபதி! இவனைக் காப்பாற்ற எப்படியும் முயலுகிறேன். தெய்வத்தின் துணை மட்டும் தஞ்சை ராணிக்கு இருந்தால் இவன் கண்டிப்பாய் பிழைப்பான்'' என்று.

அந்த உறுதிமொழியைப் பெற்றதாலும், அந்த முகூ லெட்டு வீரனிருந்த நிலையில் அவன் எங்கும் ஓடிவிட

முடியாதென்று தீர்மானித்ததாலும் இதயசந்திரன் மிஸ் எமிலியிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு கனோஜி ஆங்ரேயைக் காணச் சென்றான். அவன் எந்த மாளிகை யில் தங்கியிருந்தானோ அந்த மாளிகையிலேயே கனோஜி யும் தமது பாசறையை அமைத்திருந்தார். அவனும் எமிலி யும் முதல் நாளிரவு எந்த அறையில் இணைந்தாடினார் களோ அந்த அறையையே தமது அறையாக்கிக் கொண் டிருந்தார் ஸார்கேல். இதயசந்திரன் அந்த அறைக்குள் நுழைந்த போது ஸார்கேல் போர் உடையைக் களையாம லேயே தமது உபதலைவன் ஒருவனுடன் ஏதோ தர்க்கித்துக் கொண்டும் கையிலிருந்த துப்பாக்கியால் மடியில் கிடந்த தேசப் படத்தில் சில இடங்களைச் சுட்டிக்காட்டிக் கொண்டுமிருந்தார். போர் அரங்கத்திலிருந்து வந்தவர், நீராடவோ உண்ணவோ இல்லையென்பதை அவருடைய மண் படிந்த உடையிலிருந்தும் கலைந்து கிடந்த முரட்டுக் குழல்களிலிருந்தும் சுன்னத்தில் ஓரிடத்தில் தீற்றியிருந்த துப்பாக்கி மருந்திலிருந்தும் புரிந்து கொண்ட இதய சந்திரன் சிறிது நேரம் மௌனமாகவே நின்றான். உபதலைவனுக்குப் பல இடங்களைக் காட்டி உத்தரவு களைப் பிறப்பித்த பிறகு தலைநிமிர்ந்த கனோஜி, ''ஓ! உபதளபதியா! வா!'' என்றழைத்துச் சிரித்தார்.

அவர் சிரிப்பதற்குக் காரணமேதும் அறியாத இதய சந்திரன் கேட்டான், ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று.

கனோஜியின் முகத்தில் சிரிப்பு மறைந்து, கடுமை மண்டியது. ''போர் முடிந்ததும் உபதளபதியின் முதல் வேலையென்ன?'' என்ற அவர் கேள்வியிலும் கடுமை யிருந்தது.

''தளபதியிடம் போரின் விளைவுகளைக் கூற வேண்டும்'' என்றான் இதயசந்திரன் நன்றாக நிமிர்ந்து நின்று.

''அந்தப் பணியை நீ ஏன் செய்யவில்லை?'' என்று சிறினார் ஸார்கேல்.

''விளைவு தளபதிக்கே தெரிந்ததால்தான்'' என்று பணிவுடன் கூறினான் இதயசந்திரன்.

''வெற்றியை நான் கூறவில்லை. போர் முடிந்ததும் கைப்பற்றப்பட்ட எதிரி வீரர்களின் எண்ணிக்கை, அவர்களைக் காவலில் வைத்திருக்கும் இடம், முறை, அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போர்த் தளவாடங்களைப் பற்றிய புள்ளி விவரம்...'' என்று கூறிக்கொண்டுபோன கனோஜி, பேச்சை முடிக்கவில்லை. அவனை உற்று மட்டும் பார்த்தார். அவரது பயங்கர மீசை மிகப் பயங்கரமாக ஒருமுறை அசைந்தது.

இதயசந்திரன் பதில் சொல்ல முடியாமல் தலை வணங்கி நின்றான். கனோஜியின் முகத்தில் சுடர் விட்ட கோபம் திடீரென மறைந்தது. மெள்ள அவனிடம் வந்து தோள்மீது கையை வைத்தார். அவன் காதுக்கருகில் குனிந்து, ''அவளை என்ன செய்தாய்?'' என்று கேட்டார் மெல்ல.

திடுக்குற்றுத் தலை நிமிர்ந்த இதயசந்திரன், ''எவளை?'' என்று வினவினான்.

''அந்த நர்ஸை?'' என்று கனோஜி அர்த்தபுஷ்டியுடன் புன்முறுவல் கோட்டினார்.

''நீங்கள் கேட்பது சரியல்ல'' என்று சீறினான் இதயசந்திரன்.

''பயப்படாதே. மஞ்சுவிடம் நான் சொல்லமாட்டேன்''— ஸார்கேல் மிக ரகசியமாக அவனைத் தூண்டினார்.

''ஸார்கேல்.''

''தமிழா!''

''இது தங்களுக்குத் தகுதியல்ல.''

''எது?''

''போரில் வெற்றிக் களிப்பிலிருக்கும் நாம், கல்யாணைக் கைப்பற்றி பேஷ்வாவையும் சிறை செய்திருக்கும் நாம், இப்பொழுது பேச வேண்டியது கேவலம் ஒரு நர்ஸைப் பற்றியல்ல'' என்றான் இதயசந்திரன், உணர்ச்சி வேகத்துடன்.

''நர்ஸ் கேவலமா?'' என்று பதில் கேள்வி போட்ட கனோஜி, ''அப்படியானால் நீ என்னிடம் வருவதை விட்டு நர்ஸிடம் ஏன் சென்றாய்?'' என்று வினவினார் கண்ணைச் சிமிட்டி.

இதயசந்திரன் இதயத்தை வியப்பு ஆக்கிரமித்துக் கொண்டது. தான் எமிலி இருக்குமிடம் சென்றதை அதற்குள் இவர் எப்படி அறிந்தார் என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். தன்னை உபதளபதியாகவும் ஆக்கி விட்டுத் தன் மீது வேவு பார்க்கவும் கனோஜி ஆள் வைத்திருக்கிறாரோ என்ற எண்ணமும் ஏற்பட்டதால் அவரைக் கேட்கவே கேட்டான், ''என் மீது வேவு பார்க்கிறீர்களா ஸார்கேல்?'' என்று.

''எதற்காக வேவு பார்க்க வேண்டும்?'' என்று கேட்டார் ஸார்கேல்.

''இல்லாவிட்டால் நான் எமிலியைத் தேடிச் சென்றது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''போர் முடிந்து ஒரு ஜாமம் ஆகிறது...''

''ஆம்.''

''என்னைத் தேடி வரவில்லை.''

''ஆம்.''

''வேறு யாரைத் தேடிப் போவாய்?'' இதைச் சொன்ன ஆங்கரே நகைத்தார்.

இதயசந்திரன் பிரமை பிடித்து நின்றான் சில வினாடிகள். பிறகு கூறினான், ''நான் எமிலியைத் தேடிப் போனதற்குக் காரணமுண்டு'' என்று.

''காரணமில்லாமல் எந்த வாலிபனும் வயதுப் பெண்ணைத் தேடிப் போகமாட்டான்'' என்று கனோஜி ஒப்புக் கொண்டார்.

''அவளால் சிகிச்சை செய்யப்பட்ட ஒருவனை நாடிப் போனேன். அவன் யார் என்பது உங்களுக்குத் தெரியும்'' என்ற இதயசந்திரன், அவரை உஷ்ணத்துடன் நோக்கவும் செய்தான்.

அவன் எதைக் குறிப்பிட்டாலும் என்ன உஷ்ணத்தைக் காட்டினாலும் கவலைப்படாத கனோஜி, ''நீயும் அவளிடம் சிகிச்சை செய்து கொள்வதுதானே?'' என்று கேட்டார்.

''எனக்குத் தேவையில்லை.''

''ஏன்?''

''காயம் அதிகமில்லை.''

கனோஜி அவனை ஏறெடுத்து நோக்கினார். ''ஆம் ஆம்! உடற்காயம் அதிகமில்லை'' என்றார்.

''உள் காயம் கிடையாது ஸார்கேல்'' என்று அழுத்திச் சொன்னான் இதயசந்திரன்.

''ஏன், வசப்பட்டு விட்டாளோ?'' என்று கேட்டார் ஸார்கேல்.

இதயசந்திரன் கோபத்துடன் தன் தோள் மீதிருந்த அவர் கையை எடுக்க முயன்றான். அந்தக் கை இரும்பு போல் அவன் தோளை அழுத்திக் கொண்டிருந்தது. தான் முதன் முதலாகக் கொங்கணி வந்தபோது தாமினி காட்டில் அவர் கை உரலுக்குக் குறுக்கே ஒரு நாளிரவு இரும்பு உலக்கையென விழுந்து கிடந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தான். உயிரின் மேல் ஆசையிருந்தால் எழுந்திருக் காதே என்று அவர் எச்சரித்தது அந்தச் சமயத்திலும் காதில் ஒலிப்பது போலிருந்தது தமிழனுக்கு. அந்தக் கனவில் லயித்துவிட்டவன் கையை அகற்ற எடுத்துக் கொண்ட முயற்சியைக் கைவிட்டான். ''ஸார்கேலின் ஆணை என்ன மேற்கொண்டு?'' என்று வினவினான்.

பதிலுக்கு கனோஜி அவன் தோள் மீதிருந்த கையை அகற்றிக்கொண்டார். ''நீ போய் நீராடி உணவருந்தி வேறு அலுவல்களிருந்தால் முடித்துக்கொண்டு இரவு முதல் ஜாமத்தில் இங்கு வந்து சேர். முக்கியமான அலுவலிருக் கிறது உனக்கு'' என்று கூறிவிட்டு அவனைச் செல்ல அனுமதித்தார். இதயசந்திரன் தனது அறைக்குச் சென்று போராடைகளைக் களைந்து, நீராட்ட அறைக்குச் சென்றான். நீராடி உணவருந்தியதும் சுகாஜியுடன் நகரத்தைச் சுற்றிச் சிறை முகாமையும், கைப்பற்றப்பட்ட தளவாடங்களையும் பார்த்துக் கணக்கெடுத்துக் கொண் டான். மாலை நெருங்கியதும் மருத்துவமனைக்கு மீண்டும் சென்று எமிலியைச் சந்தித்து அந்த முகவெட்டு வீரன் நிலை பற்றி விசாரித்தான். அப்பொழுதுதான் மருத்துவ மனை விளக்குகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. மிஸ் எமிலியும் கையில் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி எடுத்துக் கொண்டு ''வாருங்கள் பார்ப்போம்'' என்று கூறி, அவனை அழைத்துக் கொண்டு, முகவெட்டு வீரன் படுத்திருந்த அறைக்குச் சென்றாள்.

அவர்கள் சென்ற சமயத்தில் அந்த முகவெட்டு வீரனின் உதடுகள் காய்ந்திருந்தன. முகத்தில் சுரத்துக் கான வியர்வைத் துளிகள் முத்து முத்தாகத் தெரிந்தன. மிஸ் எமிலி மெழுகுவர்த்தியைச் சற்று உயரமான ஒரு கட்டையில் வைத்தாள். பிறகு அறை மூலையிலிருந்த ஒரு பெட்டியிலிருந்து கொஞ்சம் பஞ்சு கொண்டு வந்து, அவன் முக வியர்வையைத் துடைத்தாள். பிறகு நாடியை நீண்ட நேரம் பார்த்தாள். அடுத்தபடி அவன் மார்பில் கை வைத்து இதயத் துடிப்பைக் கவனித்தாள். கடைசியாக ஒரு குப்பியிலிருந்து சிறிது பிராந்தியைப் புகட்டினாள் அவன் உதடுகளில்.

மெல்ல மெல்லக் கண் விழித்தான் நோயாளி. அவன் கண்கள் மிஸ் எமிலிமீது சில விநாடிகள் நிலைத்தன. பிறகு இதயசந்திரன் கண்களைச் சந்தித்தன. இதயசந்திரன் அவன் காதுக்கருகில் குனிந்து, ''உன்னால் பேச முடியுமா?'' என்று வினவினான்.

நோயாளியின் இதழ்கள் அசைந்தன. 'முடியும்' என்ற சொல் மெல்ல வெளிவந்தது.

''பலமான காயமடைந்திருக்கிறாய்'' என்றான் இதயசந்திரன்.

அந்த வீரன் இதழ்களில் பெருமை நிரம்பிய இளநகை அரும்பியது. தலை லேசாக அசைந்தது, இதயசந்திரன் சொன்னதை ஆமோதிக்கும் வகையில். ''இப்பொழுது சொல் ரகசியத்தை. அந்தப் பையன் எங்கிருக்கிறான்?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

அந்த வீரன் உதடுகள் அசைந்த நிலையிலிருந்து அவன் தனது சக்தியெல்லாம் திரட்டுவதாகத் தெரிந்தது. கடைசியில் அவன் மிகச் சிரமப்பட்டு மெதுவாகச் சொன்னான், ''அதைச் சொல்லக் கூடியவர் ஒருவர்தான். அவர்தான் ஸார்கேல்'' என்று. அதைக் கூறியதும் அவன் மீண்டும் மயக்கமுற்றான்.

''அவனுக்கு மீண்டும் சிறிது பிராந்தி கொடு'' என்றான் இதயசந்திரன் எமிலியை நோக்கி.

''இனிமேல் கொடுப்பதற்கில்லை.''

''ஏன்?''

''தாளமாட்டான்.''

''பரவாயில்லை.''

இதைக் கேட்ட மிஸ் எமிலி இதயசந்திரனை எரித்து விடுவதுபோல் பார்த்தாள். ''எதை நோயாளிக்குக் கொடுத்தலாம், எதைக் கொடுக்கக் கூடாது என்று இங்கு

தீர்மானிக்கக் கூடியது நான் ஒருத்திதான்'' என்று கூறவும் செய்தாள் சினத்துடன்.

''நான் உத்தரவிடுகிறேன்'' என்று சீறினான் இதயசந்திரன்.

''ஆஸ்பத்திரிக்குள் நான்தான் உத்தரவிட முடியும்!'' என்று அவளும் சீறினாள் பதிலுக்கு.

''ஏன்? நீ என்ன இந்த ஊர் ராணியா?''

''ராணியைவிட உயர்ந்தவள். நர்ஸ் தொழில் புனிதமான தொழில். அந்தத் தொழில் புரிய நாட்டைவிட்டு ஆறாயிரம் மைல் வந்திருக்கிறேன். உங்கள் தொழிலைப் போல் காயம் விளைவிக்கும் தொழிலல்ல என் தொழில். காயத்தை ஆற்றும் தொழில். ஏசுநாதரின் கருணைத் தொழில்'' என்று கூறிய எமிலி, தன் உடலின் குறுக்கும் நெடுக்கும் கையால் சிலுவை முத்திரையைக் காட்டினாள். அவன் வெளியே செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கையையும் வாயிற்படியை நோக்கி நீட்டினாள்.

அத்தியாயம் 30

கனோஜி அஞ்சிய மாமனிதன்

எந்தக் காரியத்தைக் கொண்டும் முகவெட்டு வீரனுக்குப் பிராந்தி கொடுக்க முடியாதென்றும், திரும்பவும் அவனை விழிக்கச் செய்ய இயலாதென்றும் மில் எமிலி திட்டவட்டமாகக் கூறியதன்றி, உடனடியாக வெளியே செல்லுமாறு வாயிலையும் சுட்டிக் காட்டியதைக் கண்டதால், உள்ளத்தில் கோபம் சுடர் விட்டெரிய அந்தச் சுடரின் ஒளி முகத்திலும் பிரதிபலிக்க அவளைச் சுட்டு விடுபவன்போல் சில வினாடிகள் பார்த்துக் கொண்டு நின்ற இதயசந்திரன், சரேலென அசுர வேகத்துடன் திரும்பி, அந்த இடத்தைவிட்டு வெகு வேகமாக வெளியே நடந்தான். ஆஸ்பத்திரியை விட்டு வெளிப் போனதும் அங்கிருந்த புரவிமீது தாவிக் கண்மண் தெரியாமல் அதைக் கல்யாண் நகர் வீதிகளில் விரைய விட்டான். செல்ல வேண்டிய திசையைப் பற்றியோ, அடைய வேண்டிய இடத்தைப்பற்றியோ எண்ணாமல் கண்டபடி புரவியை விரட்டிய இதயசந்திரன் பல தெருக்களைக் காரணமின்றிச் சுற்றினான். ஆங்காங்கிருந்த பல வீரர்கள்மீதும் உபதலைவர்கள் மீதும் காரணமின்றி எரிந்து விழுந்தான். கடைசியாகத் திரும்பத் தனது இருப்பிடம் வந்தான்.

நகரத்தின் நடுவிலிருந்த தனது மாளிகைக்கு வந்ததும் புரவியிலிருந்து குதித்துத் தனது அறைக்குச் சென்றுவிட்ட தமிழன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு தடாலென்று தனது படுக்கையில் விழுந்தான். உள்ள உடையைக் களையாமலும், மாற்றுடை அணியாமலும், தான் தமிழகத்திலிருந்து எந்தப் பணியை நிறைவேற்ற வந்தானோ அந்தப் பணியைப் பற்றிய புலன் தன் கைக்கு எட்டியும் செவிக்கு எட்டாத நிலை ஏற்பட்டதை நினைத்துத் தன்னைத் தானே வெறுத்துக் கொண்டும், தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டும் படுக்கையில் உடைத்தான் ஸார்கேலின் உபதளபதி. 'என்னதான் காயமடைந்திருந்தாலென்ன? இன்னும் ஒருமுறை பிராந்தி கொடுத்திருந்தால் அவன் கண்ணைத் திறந்திருப்பான்; பேசியுமிருப்பான்! என்ன துணிவுடன் மறுத்து விட்டாள் எமிலி, என்று உள்ளூர எண்ணமிட்டதால் ஒரு முறை புரண்டு படுத்தான் பஞ்சணையில் அவன். ''உடலையே எனக்கு அர்ப்பணம் செய்து விட்டவள். என்னை உயிருக்கு உயிராய் நேசிப்பவள், இவளுக்கென்ன அத்தனை அனுதாபம் என் எதிரியின்மீது?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'பம்பாய் கவர்னர் இவளை நான் இழுத்துக் கொண்டு ஓடிவிட்டேன் என்று வதந்தி கிளப்பி விட்டதால் இவள் திரும்பவும் வெள்ளையர் இருக்குமிடம் போக முடியாது. என்னைத்தானே நம்பியிருக்க வேண்டும்? அப்படியிருக்க என் விருப்பத்துக்கு எதிராக நடக்க இவளுக்கு எத்தனைத் துணிச்சல்! புனிதத் தொழிலாம் புனிதத் தொழில் அந்த நர்ஸ் தொழில்! பூ!' என்று எரிச்சலுடன் பலவிதமாக எண்ணமுமிட்டான். என்ன நினைத்தும் தன்னிஷ்டம் நிறைவேறாது எமிலியின் ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்டவரை, அவள் தொழில் சம்பந்தபட்டவரை என்பதை, எண்ணி எண்ணி வருந்தினான். கோபித்தான், படுக்கையில் புரண்டான். பிறகு திடீரென்று ஒரு முடிவுக்கு வந்து, ''சரி, ஸார்கேலையே கேட்டு விடுகிறேன்'' என்று படுக்கையிலிருந்து எழுந்திருந்தான். ஸார்கேல் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லியிருந்தது நினைப்புக்கு வரவே, அறைக் கதவைத் திறந்து கொண்டு அவர் அறைக்குச் சென்றான். அறை காலியாயிருக்கவே ஸார்கேல் எங்கேயென்று அங்கிருந்த காவலனை விசாரித்தான். மாடியிலுள்ள மகாலில் இருப்பதாகக் காவலன் கூறியதன்றி உங்களை அங்கே வரச் சொல்லி உத்தரவு'' என்றும் கூறினான்.

மாடி மகாலை இதயசந்திரன் அடைந்தபோது அங்கிருந்த உள்ள நிலைமை அவனை அசர வைத்தது. ஸார்கேல் பூரண போருடை அணிந்து நாற்காலியொன்றின் மீது ஒரு காலை வைத்து, ஒரு காலைத் தரையில் ஊன்றி, எதிரே மேஜை மீதிருந்த மகாராஷ்டிர தேசப் படத்தை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய உபதலைவர் நால்வரும்கூட அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தான் வந்ததை அவர்கள் யாருமே கவனிக்காததால் மெல்லப் பூனைபோல் நடந்து மேஜைக்கருகில் வந்த இதயசந்திரனும் படத்தை பார்த்தான். ஸார்கேல் திடீரென்று இரண்டு இடங்களில் தனது விரல்களை ஊன்றினார். பிறகு மூன்றாவது இடமொன்றில் விரலை நன்றாக அழுத்தினார். அந்த இடம் மகாராஜா ஷாஹூவின் தலைநகரான ஸதாரா!

கனோஜியின் எண்ணம் திண்ணமாகத் தமிழனுக்குப் புரிந்ததால் அவன் முகத்தில் விவரிக்க இயலாத பீதி விரிந்தது. ஸதாராவைக் கைப்பற்றுவது கனோஜியின் திட்டம் என்பதை புரிந்துகொண்ட இதயசந்திரன், 'இது நடக்கிற காரியமா?' என்று நினைத்தான். எதற்கும் திடுக்கிடாத அவன் நெஞ்சுகூட அந்தச் சில வினாடிகளில் திடுக்குற்று மார்பு டக்டக்கென்று வெகு வேகமாக அடித்துக் கொண்டது. அதனால் சற்றுப் பெரிதாக அச்சம் கலந்த மூச்சொன்றையும் வெளியிட்டான் தமிழன்.

கனோஜியின் இதழ்களில் புன்முறுவலொன்று தவழ்ந்தது. பார்வையைப் படத்திலிருந்து எடுக்காமலே கூறினார் கனோஜி, ''அசாத்தியம் என்று உலகில் எதுவும் கிடையாது. ஸதாரா பலமுறை கை மாறியிருக்கிறது. இன்னொரு முறை கைமாறுமானால் அதிசயமுகமாகாது'' என்று.

இதயசந்திரன் பதிலேதும் சொல்லவில்லை. கனோஜி பதிலை எதிர்பார்க்கவுமில்லை. ''இதோ இருக்கிறது ராஜ்மச்சிபர்வதக் கோட்டை. இதை முதலில் கைப்பற்றுவோம். அங்கிருந்து லோஹ்காட்டைக் கைப்பற்றுவோம். இரண்டையும் கைப்பற்றிவிட்டால் வடகொங்கணம் நமது கைக்குள். தென்கொங்கணம் ஏற்கனவே நம்மிடமிருக்கிறது. லோஹ்காட்டில் நாம் தங்குவோம். அங்கிருந்து ஸதாரா மீது படையெடுப்பதாதச் செய்தி அனுப்புவோம் மன்னனுக்கு'' என்று அறிவித்தார் கனோஜி, இரும்புடன் இரும்பு உராய்ந்தால் ஏற்படும் ஒலியுள்ள குரலில். இதைச் சொன்ன பிறகும் கனோஜி படத்தைவிட்டுக் கண்களை அகற்றவில்லை. ஏதேதோ மலைவழிகளையும் நிலைப் பக்குவங்களையும் பார்த்துக்கொண்டே இருந்தார். அவரே மேலும் சொன்னார். ''ராஜ்மச்சி ஒன்றே போதும் ஷாஹூவை மிரட்ட. எதற்கும் லோஹ்காட்டும் இருக்கட்டும். கோட்டைகள் ஒன்றுக்கிரண்டாக நமது கைக்குள் இருப்பதால் தவறில்லை'' என்று.

இதயசந்திரனுக்கு அவர் பேச்சு வியப்பாயிருந்தது. மிகப் பலமானதும், அணுக முடியாததும், பல்லிகூடக் கால் வைக்க முடியாத பெருமலைப் பாறையின்மீது நிர்ணயிக்கப்பட்டதும், ஸ்ரீவர்த்தனா, மனரஞ்சனா என்ற பெயருள்ளவையும் நன்றாக அரண் செய்யப்பட்டுள்ளவையான இரு உச்சிகளை உடையதுமான ராஜ்மச்சியை ஏதோ தமது கையிலிருப்பது போல் கனோஜி பேசுவது பெரு வியப்பாயிருக்கவே இதயசந்திரன் கேட்டான், ''ராஜ்மச்சி மிகப் பலமுள்ளது என்று நீங்களே கூறியிருக்கிறீர்களே?'' என்று.

மெல்லத் தமது கண்களைப் படத்திலிருந்து உயர்த்தினார் கனோஜி. இதயசந்திரன் இதயத்தையே ஊடுருவி விடுவது போல் பார்த்தார் ஒரு விநாடி. ''ஆமாம், சொன்னேன்'' என்று இகழ்ச்சியுடன் கூறவும் செய்தார்.

''இதற்கு ஆயத்தம் வேண்டாமா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

அதற்குக் கனோஜி கூறிய பதில் அவனைத் திகைக்க வைத்தது. ''இப்பொழுது என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது?''

''என்ன? இப்பொழுதே புறப்படப் போகிறீர்களா?'' என்று கேட்டான் இதயசந்திரன், குரலில் வியப்பு மண்ட.

''ஆம்'' என்றார் கனோஜி சர்வ சகஜமாக.

''இன்று காலையில்தானே கல்யாண் போர் நடந்திருக் கிறது!'' என்று இழுத்தான் இதயசந்திரன்.

''ஆம்''

''அதற்குள்...''

''என்ன அதற்குள்?''

''கைப்பற்றிய நகரைப் பலப்படுத்த வேண்டாமா? சிறைப் பிடித்தவர்களை என்ன செய்வதென்று தீர்மானிக்க வேண்டாமா? இனிமேல்தானே போர் வெற்றியால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டும்?''

கனோஜியின் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. ''அதற்கெல்லாம் நீதானிருக்கிறாயே?'' என்று கூறிய கனோஜி, மெள்ள நகைக்கவும் செய்தார்.

''நானா!'' என்று வாயைப் பிளந்தான் தமிழன்.

''ஆம்.''

''ஏன்?''

''கல்யாண் வெற்றி உன்னுடையது. அதன் பலன் களும் உன்னுடையவை.''

இதயசந்திரன் இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான். ''இல்லை ஸார்கேல்! சமயத்தில் நீங்கள் படைகளை வாயு வேகத்தில் கொண்டு வந்து பிங்களேயின் கடைசிப் பகுதிகளைக் கத்திரித்திராவிட்டால் இங்கு உங்கள் முன்பு நின்று கொண்டிருக்கமாட்டேன்,

பேஷ்வாவின் பெரும் படைகளினால் அழிக்கப்பட் டிருப்பேன்'' என்று கூறினான் தமிழன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு.

கனோஜி, மேஜையைச் சுற்றி வந்து அவன் தோள்மீது கையை வைத்தார். ''இல்லை தமிழா! உன் போர்த் திட்டத்தால்தான் பிங்களே தோல்வியுற்றார். நான் வருமுன்பே பிங்களேயின் பீரங்கிகளைத் திக்குமுக்காடச் செய்து விட்டாய். பிங்களேயின் படை விலாவில் சுகாஜி யும் நீயும் பாய்ந்தது இணையற்ற போர்த் தந்திரம். நீ பேஷ்வா கட்சியில்லாதது என் அதிர்ஷ்டம்'' என்று பாராட்டினார். இதயசந்திரன் மேற்கொண்டு பதில் சொல்லச் சந்தர்ப்பமளிக்கவில்லை ஸார்கேல். ''இதய சந்திரா! தரைப் படைக்கு எனக்கு ஒரு தளபதி வேண்டு மென்று எண்ணியதும் உன்னையே நினைத்தேன் நான். ஏனென்றால் தஞ்சையில் நீ இருந்திருக்கிறாய். பிரிட்டிஷ் படைகளில் சேவையும் செய்திருக்கிறாய். அவர்கள் குறைகளையும் நீ அறிந்திருக்கிறாயென்பதை உன் பேச்சி லிருந்தே ஊகித்தேன். ஆகவே உன்னை எனக்கு அடுத்த உபதளபதியாக்கினேன். இனி நான் தாமதிப்பதற்கில்லை. போரில் வெற்றியடைந்தவன் கையைக் கட்டிக் கொண்டு வெற்றி மகிழ்ச்சியில் திளைத்திருப்பது முட்டாள்தனம். கிடைத்த வெற்றி நொடிப் பொழுதில் போய்விடும். வெற்றியடைந்தவன் மேலும் துரிதமாக மற்ற இடங் களைத் தாக்கவேண்டும். எதிரிக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியைத் தரவேண்டும். அவன் முடியாதென்று நினைப்பதை முடிக்கவேண்டும். அவன் எதிர்பார்க்காத இடங்களைத் தாக்கவேண்டும். அவனைச் சிந்திக்கவே விடக் கூடாது. ஆகையால்தான் உடனடியாக நான் கிளம்புகிறேன். இன்னும் நான்கு நாளில் ராஜ்மச்சி என் கையிலிருக்கும். அடுத்த ஒரு வாரத்திற்குள் லோஹ்காட்டும் என் கைவசப்படும். சந்தேகமே வேண்டாம்'' என்று கூறிய ஸார்கேல், ''இதயசந்திரா! நான் என்னுடன்

பேஷ்வா பிங்களேயை அழைத்து செல்கிறேன். பிடிபட்ட படையில் ஒரு பகுதியை அழைத்துச் செல்கிறேன். மீதிக் கைதிகளை இங்கேயே வைத்திரு. கல்யாண் நகரின் பாதுகாப்பை வலுப்படுத்திவிடு. பிறகு என் செய்திக்காகக் காத்திரு'' என்றும் அறிவித்தார்.

இதயசந்திரன் தலை வணங்கினான் ஸார்கேலுக்கு. பிறகு ஏறிட்டு நோக்கினான் அவரை. அவர் முகத்தில் ஜெயஸ்ரீ ஜொலித்துக் கொண்டிருந்தாள். கறுத்து அடர்ந்த புருவங்களும், முரட்டுத் தலைமயிர்களும், பயங்கர மீசையும் அவர் காரியங்களை ஏற்கெனவே மனத்தில் சாதித்து விட்டதை அறிவுறுத்தின. கண்கள் ஈட்டிகளைப் போல் ஜொலித்தன. மகாராஷ்டிரத்தின் உன்னத ஸ்திதியைப் பற்றியே பெருங்கனவொன்று அதில் விரிந்து கிடந்தது. அந்த நிலையில் அவரை ஏதும் கேட்கத் தோன்றவில்லை இதயசந்திரனுக்கு. அவருடைய பெருந்தோரணை தன்னை மிகச் சின்ன மனிதனாக அடித்து விட்டதை உணர்ந்தான் தமிழன். மகாராஷ்டிரத்தின் மூன்றாவது வாரிசைப் பற்றி ஏதாவது கேட்கலமா என்று ஒரு கணம் எண்ணினான். பெரும் சாம்ராஜ்யப் போருக்குத் திட்டம் வகுத்துக் கனவு காணும் கனோஜியிடம் அந்த விஷயத்தைக் கேட்கவும் அவனுக்குச் சங்கோஜமாயிருந்தது. இருப்பினும், மெள்ளத் துணிவை வரவழைத்துக் கொண்டு ''தங்களிடம் தனிமையில் ஒரு விஷயம் பேச வேண்டும்'' என்று மெல்ல விண்ணப்பித்துக் கொண்டான்.

கனோஜி ஒரு விநாடி சிந்தித்தார். பிறகு மற்ற உபதலைவர்களை நோக்கி, ''புறப்படச் சித்தம் செய்யுங்கள். படைகளை அணிவகுத்து நிறுத்துங்கள். அணிவகுப்புக்கு நடுவில் பிங்களேயும் மீதிக் கைதிகளும் வரட்டும்'' என்று உத்தரவிட்டு அவர்களை அனுப்பினார். அவர்கள் அறையை விட்டு நகர்ந்ததும் கனோஜியின் சுட்டிக் கண்கள் தமிழனைக் கூர்ந்து நோக்கின.

''அவனுடன் பேசினாயா?'' என்ற சொற்கள் அவரது தடித்த உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

''ஆம்'' என்றான் இதயசந்திரன்.

''வாரிசைப் பற்றி என்னைக் கேட்க வேண்டுமென்று சொன்னானா?'' என்று மீண்டும் வினவினார் ஸார்கேல், தமிழனுக்கும் முகவெட்டு வீரனுக்கும் சம்பாஷணை நடந்த போது நேரிலிருந்தவர்போல்.

இதயசந்திரனுக்கு அவர் கேள்வி மிகவும் வியப்பாயிருந்தது. ஆகவே, ''ஆம்'' என்று அவன் சொன்ன பதிலிலும் வியப்பு ஒலித்தது.

''இதயசந்திரா! அந்த வாரிசைப்பற்றி எனக்கு பராபரியாகத்தான் தெரியும். ஒருவருக்குத்தான் முழு உண்மை தெரியும்'' என்றார்.

''யாரவர்?''

''நான் அஞ்சும் ஒரே மனிதர்.''

''நீங்களும் அஞ்சும் மனிதர் மகாராஷ்டிரத்தில் இருக்கிறாரா?''

''இருக்கிறார்.''

இதைச் சொன்ன ஆங்கரேயின் குரலில் மரியாதை கலந்த அச்சமிருப்பது தமிழனுக்குப் புரிந்தது. மெல்லக் கேட்டான், ''யார் அவர்?'' என்று.

மகாராஷ்டிர சாம்ராஜ்யத்திற்குப் பலமான அஸ்திவாரமிட்ட அந்த மாமனிதன் பெயரை மெல்ல உச்சரித்தார், யாரையும் லட்சியம் செய்யாத கனோஜி ஆங்கரே. ''பாலாஜி விசுவநாத்'' என்ற பெயர் அவர் வாயிலிருந்து மிகுந்த நிதானத்துடன் பக்தியுடன் உதிர்ந்தது.

அத்தியாயம் 31

வாளினும் வலிது

கனோஜியே அஞ்சிய அந்த பாலாஜி விசுவநாத் அப்படியொன்றும் பயங்கரத் தோற்றமுடையவரல்ல. ஒல்லியான தங்க நிற மேனியும், நீண்ட நாசியில், சாம்பல் நிற விழிகளும், கோபி சந்தனம் துலங்கிய விசாலமான நெற்றியும் உடைய பாலாஜி விசுவநாத்தைப் பார்ப்பவர்கள் யாரும் அவரைப் பெரிய வீரரென்றும் சொல்லமாட்டார்கள். இருப்பினும் கல்யாண் நகரும் அதைத் தொடர்ந்து ராஜ்மச்சி, லோஹ்காட் கோட்டைகளும் கனோஜியின் கைகளுக்கு மாறிய செய்தி கிடைத்ததும் மகாராஜா ஷாஹு தன் படைத்தலைவர்கள் யாரையும் யோசனைக்கு அழைக்கவில்லை. புரவியேறக்கூட அறியாத பாலாஜி விசுவநாத்தைத்தான் அழைத்தார். பெரும் மதில்களாலும், ஸ்தூபிகளாலும், வாயில்களாலும் பதினேழு விதமான பலத்தையும் அழகையும் பெற்றிருந்ததால் 'ஸாத்ஆரா' என்ற பெயருடையதாய், காலத்தில் ஸதாரா என்று பெயர் மருவிவிட்டாலும், மாறாத திடத்தையும் அழகையும் பெற்று மங்களதேவியென்ற மலைக் கோட்டையுடன் விளங்கியதால் மிக அழகாகவும் கம்பீரமாகவும் காட்சியளித்த ஸதாராவின் அடாலத் வாடாவில் (நீதி மண்டபம்) சிங்காதனத்தில் அமர்ந்திருந்த சிவாஜியின் நேர்வாரிசான ஷாஹு மகாராஜா எதிரே நின்ற பாலாஜி விசுவநாத்திடம் கடிதமொன்றை நீட்டி, "இதைப் படித்துப் பாருங்கள்" என்று கூறினார். மகாராஜா அதைக் கூறியபொழுது அவருடைய நாக்கு தழுதழுத்தது. குரல் லேசாக நடுங்கியது.

கடிதத்தைக் கையால் வாங்கிய பாலாஜி விசுவநாத்தின் சாம்பல் நிறக் கண்கள் கழுகின் கண்களைப்போல் ஒரு விநாடி பளபளத்தன, மகாராஜாவை நோக்கி. பிறகு கடிதத்தைப் பார்க்காமலே, "மகாராஜா! அச்சப்படும்படியாக இந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?" என்று வினவினார்.

ஷாஹுவின் அச்சம் நிறைந்த விழிகள் பாலாஜியை ஏறெடுத்துப் பார்த்தன. "என்ன எழுதியிருக்குமென்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்ற சொற்கள் உதிர்ந்தன மகாராஷ்டிர மன்னன் உதடுகளிலிருந்து. லேசான நடுக்கம் மன்னன் குரலிலிருப்பது பாலாஜிக்கு நன்றாகத் தெரிந்தது.

"கடிதத்தின் மேலிருப்பது கனோஜியின் முத்திரை. ஸதாராவின் மீது படையெடுக்கப் போவதாக எழுதியிருப்பார்" என்றார் பாலாஜி விசுவநாத் சர்வ சகஜமாக.

அந்த அடாலத் வாடாவில் அப்பொழுது மகாராஜா ஷாஹு, பாலாஜி விசுவநாத் இருவர் மட்டும் இருந்தார்கள். ஆகையால் மகாராஜா ஷாஹு சம்பிரதாயத்தை அடியோடு விட்டு ஆசனத்திலிருந்து துள்ளியெழுந்தார். பாலாஜியின் தோளில் கையை வைத்துக் கொண்டு, "பாலாஜி உங்களுக்கெப்படி கடிதத்திலிருப்பது தெரிந்தது? இன்னும் அதைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லையே!" என்றும் கூறினார் வியப்பும் அச்சமும் கலந்த குரலில்.

பாலாஜி விசுவநாத்தின் உதடுகளில் புன்முறுவலொன்று தவழ்ந்தது. "மகாராஜா! கல்யாண் போரில் கனோஜி நமது படைகளை முறியடித்துவிட்டார். பேஷ்வா பிங்களேயையும் சிறைப்படுத்தி விட்டார். கையோடு கையாக ராஜ் மச்சியையும், லோஹ்காட்டையும் தாக்கிப் பிடித்துவிட்டார். அடுத்து அவர் பிடிப்பதற்கு ஸதாராவைத் தவிர வேறு என்ன இருக்கிறது? மகாராஜாவின் தலைநகரத்தின் மேல் அவர் படை எடுக்காமல் என்ன செய்ய முடியும்?" என்று வினவவும் செய்தார் புன்முறுவலின் ஊடே.

அவர் புன்முறுவல் மகாராஜா ஷாஹுவுக்குப் பெரு வியப்பை அளித்ததால் அவர் முகத்திலிருந்த அச்சங்கூட ஒரு வினாடி மறைந்து விட்டது. ''பாலாஜி! கனோஜியின் இந்தப் படையெடுப்பை எப்படித் தடுக்கலாம்?'' என்று வினவினார் மகாராஜா ஷாஹு.

பாலாஜியின் சாம்பல் நிறக் கண்களில் மீண்டும் ஒளி தெரிந்தது. ''லோஹ்காட்டிலிருந்து கனோஜி கிளம்புமுன்பு அவரைத் தடுக்க வேண்டும்...'' என்று சொல்லத் துவங்கி, மேலும் ஏதோ சொல்லப்போன பாலாஜியை ஷாஹு இடைமறித்து, ''என்ன! என்ன! கனோஜி இப்பொழுது லோஹ்காட்டிலிருக்கிறாரா?'' என்று வினவினார் மிதமிஞ்சிய வியப்புடன்.

''ஆம், மகாராஜா'' என்றார் பாலாஜி சாந்தமாக.

''ராஜ்மச்சியில் இல்லையா அவர் இப்பொழுது.''

''இல்லை.''

''லோஹ்காட்டை நாம் தாக்கிப் பிடிப்பது சுலபமல்லவோ?''

''மிகக் கஷ்டம்தான்.''

''அப்படியென்றால்?''

''கஷ்டமென்பதற்காகக் காரியத்தைக் கைவிடக் கூடாது. கிடைத்துள்ள தோல்வியை எப்படி வெற்றியாக மாற்றலாம் என்பதிலிருக்கிறது நமது சாமர்த்தியம்.''

பாலாஜியின் இந்தப் பதிலிலிருந்த உறுதி ஷாஹுவுக்குச் சிறிது தைரியத்தை அளிக்கவே, ''பாலாஜி, நீங்கள்தான் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றார்.

பாலாஜி, பதில் ஏதும் சொல்லவில்லை. ''இந்தப் பணியை ஏற்க எனக்குத் தகுதியில்லை'' என்றார் சில விநாடிகள் சிந்தித்த பிறகு.

ஷாஹு மகாராஜாவின் முகத்தில் மீண்டும் அச்சம் நிலவியது. ''முடியும் பாலாஜி, முடியும். கனோஜியைத் தடுத்து நிறுத்துங்கள். உங்களை நான் எனது பேஷ்வாவாக நியமிக்கிறேன்'' என்று கெஞ்சினார், தான் மகாராஜா என்பதையும் மறந்து.

பாலாஜி விசுவநாத்தின் சாம்பல் நிறக் கண்கள் கூர்ந்து நோக்கின மகாராஜாவைப் பல விநாடிகள்: ''மகாராஜா! கனோஜி ஆங்கரேயை முறியடித்து ஒருவேளை அவர் சமரசம் பேச முன் வந்தால் உடன்படிக்கை செய்து கொள்ளும் அதிகாரம் மகாராஷ்டிர நாட்டில் பேஷ்வாவுக்கே உண்டு'' என்று சுட்டிக் காட்டினார்.

ஷாஹு மகாராஜாவின் முகத்தில் பிரமை பூர்ணமாகப் படர்ந்தது. சிப்ளன் உப்பளத்தில் சாதாரணக் குமாஸ்தாவாக இருந்து, தனது தலைமைக் கணக்கராக வேலைபார்க்கும் இந்தக் கொங்கணி பிராம்மணனைப் பேஷ்வாவாக்கினால் ஊர் சிரிக்குமே என்று நினைத்ததால் மகாராஜா பின்னடைந்து தமது சிங்காதனத்தில் மீண்டும் அமர்ந்தார்.

பிரமை பிடித்து அமர்ந்திருந்த ஷாஹு மகாராஜா பாலாஜியை நோக்கி, ''பாலாஜி! மகாராஷ்டிர அரசின் பேஷ்வா நிர்வாகத் தலைவராக மட்டுமல்ல, படைத் தலைவராகவும் இருக்க வேண்டும். போர்களை நிர்வகிக்கும் சக்தி வேண்டும்'' என்று சொன்னார்.

பாலாஜி மிகுந்த பணிவுடன் தலை தாழ்த்தினார். ''ஆம், மகாராஜா'' என்று ஒப்புக்கொள்ளவும் செய்தார்.

''அப்படியானால் யாரை அனுப்பலாம்?''

''யாராவது படைத்தலைவரை அனுப்புவோம்.''

''இங்கு வேறு தகுந்த படைத்தலைவர் ஏது?''

''இல்லை.''

''ஒருவர் இருந்தார். பேஷ்வா பிங்களே.''

''ஆம், இப்பொழுது கனோஜியிடம் இருக்கிறார்.''

பாலாஜி இதைச் சர்வ சகஜமாகத்தான் சொன்னார். இருப்பினும் ஷாஹு மகாராஜா சந்தேகமற உணர்ந்து கொண்டார், பாலாஜி தன்னைப் பார்த்து நகைக்கிறார் என்பதை. மகாராஜா ஷாஹு, பாலாஜியை ஏறெடுத்து நோக்கினார். பாலாஜியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. அந்தச் சாம்பல் நிறக் கண்கள் மட்டும் உயிர் பெற்று ஷாஹுவை நோக்கி நகைத்தன.

அந்த நகைப்பைத் தாளாத மகாராஜாவின் கண்கள் மீண்டும் நிலத்தில் தாழ்ந்தன, ''பாலாஜி விசுவநாத்! உங்கள் திறமை எனக்குப் புரியவில்லையென்று நினைக்க வேண்டாம். உங்களுக்குப் போர்ப் பயிற்சி ஒன்று மட்டுமில்லையே என்று நான் தயங்கினேன். உங்களை இன்றே பேஷ்வாவாக நியமிக்கிறேன். உங்கள் கையில் மகாராஷ்டிரத்தின் நலனை ஒப்படைக்கிறேன். இங்கிருந்து பெரும் படையுடன் கனோஜியை நோக்கிச் செல்லுங்கள்'' என்று கூறினார் மகாராஜா உணர்ச்சியுடன்.

பாலாஜி அந்த உத்தியோக உயர்வை சர்வ சாதாரணமாகக் கேட்டுக் கொண்டார். ''மகாராஜாவுக்கு ஒரு விஷயம் தெரியவில்லை'' என்று மெல்ல விண்ணப்பித்துக் கொண்டார்.

''என்ன பேஷ்வா?'' என்றார் ஷாஹு அப்பொழுதே அவரை பேஷ்வாவாக அங்கீகரித்து விட்டதற்கு அறிகுறியாக.

''இங்கு பெரும் படையேதும் கிடையாது. உள்ள சிறு படையும் பிரும்மேந்திர ஸ்வாமியிடமிருந்து வட்டிக்குக் கடன் வாங்கி, தங்கள் காவலுக்காகவும் கோட்டைக் காவலுக்காகவும் நான் சிருஷ்டித்தது'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலமாக பாலாஜி விசுவநாத் அடிக்கடி பிரும்மேந்திர ஸ்வாமியைத் தரிசிக்க பரசுராமபுரம் சென்றதும், வரும்போது பெரும் பணத்துடன் வந்து படை திரட்டியதும் மகாராஜாவுக்குத் தெரிந்ததுதான் என்றாலும் அது அத்தனை கணிசமான படையென்பதை அவர் அறியவில்லை. இருப்பினும், ''இப்பொழுது தாங்கள் திரட்டிய படையில் எத்தனை வீரர்கள் இருப்பார்கள்?'' என்று வினவினார்.

''சுமார் ஐயாயிரம் வீரர்கள் இருப்பார்கள்'' என்றார் பாலாஜி.

''பேஷ்வா பிங்களேயின் பதினையாயிரம் வீரர்களையே கனோஜி முறியடித்து விட்டாரே?'' என்று கேட்டார் மகாராஜா.

பாலாஜி மீண்டும் மன்னனை ஊடுருவிப் பார்த்தார். ''பிங்களே வீரர்களை மட்டும் உபயோகப்படுத்தினார்...'' என்று சுட்டியும் காட்டினார்.

ஷாஹுவின் கண்களில் வியப்புச் சுடர் விட்டது. ''வேறு யாரை உபயோகப்படுத்த வேண்டும்?'' என்று வினவினார் ஏதும் புரியாமல்.

''யாரை என்பதைவிட எதை என்பதைக் கேளுங்கள் மகாராஜா'' என்றார் பாலாஜி,

''எதை?''

''மூளையை!'' என்று பாலாஜி விசுவநாத் சிறிது அலுப்புடன் கூறினார். மேலும் சொன்னார்: ''மகாராஜா! பிங்களேயின் பதினையாயிரம் வீரர்களைக் கேவலம் ஐயாயிரம் வீரர்களைக் கொண்டு கனோஜி முறியடித்தாரென்றால், அங்கு வேலை செய்தது ஆள் பலமல்ல, அறிவின் பலம். தமது படையை எல்லோர் கண்களுக்கும் தெரியும்படியாக ஆர்ப்பாட்டமாகப் பிங்களே கொண்டு போனதும் பைத்தியக்காரத்தனம், எதிரி அதன் ஒவ்வொரு

திருப்பத்தையும் அறியும்படியாக நடந்து கொண்டதும் அசட்டுத்தனம். போர்களில் வெற்றியளிப்பது படை பலம் மட்டுமல்ல மகாராஜா. பிரும்மாண்டமான படை பலமுள்ள அவுரங்கசீப்பைத் தங்கள் பாட்டனார் ஆட்டிப் படைத்தது பெரும் படையாலல்ல, மலைவாசிகளைக் கொண்ட சின்னஞ்சிறு படைப்பிரிவுகளால்...''

இந்த இடத்தில் சற்று நிறுத்தினார் பேச்சை பாலாஜி விசுவநாத், தாம் சொன்னது ஷாஹுவின் புத்தியில் உறைக்கட்டுமென்று. ஷாஹுவின் கண்களில் பிரமிப்பு அதிகமாகியது. பாலாஜி விசுவநாத்தின் சொற்களில் நிரம்ப உண்மையிருப்பதைப் புரிந்து கொண்டார். ''என்று புறப்படப் போகிறீர்கள் பேஷ்வா?'' என்று வினவினார் மகாராஜா.

பாலாஜி விசுவநாத் சர்வ சகஜமாகக் கூறினார் ''இன்று மாலை'' என்று.

அதுவும் அதிர்ச்சியாயிருந்தது மன்னனுக்கு. ''அதற்குள் புறப்பட முடியுமா?'' என்று வினவினார் ஷாஹு.

''முடியும்'' என்ற பாலாஜி நீதி மண்டபத்தைக் காத்து நின்ற இரு வீரர்களை அழைத்து, ''உச்சி காலத்துக்குப் பிறகு முக்கிய மந்திரிகள், படைத்தலைவர்கள், பிரதானிகள் இவர்களை இந்த மண்டபத்துக்கு மன்னர் அழைப்பதாகப் பிரதானியிடம் கூறு'' என்று உத்தரவிட்டார், பிறகு மகாராஜாவை நோக்கி, ''மகாராஜா! நானும் உச்சி காலத்துக்குப் பிறகு வந்து இந்த மண்டபத்தில் மந்திரிகள், படைத்தலைவர்கள் முன்னிலையில் தங்கள் நியமனம் பெறுகிறேன்'' என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

அன்று உச்சிக் காலத்தில், அதே மண்டபத்தில் மந்திரிகளும், படைத் தலைவர்களும், வெளிநாட்டுத் தூதர்களும் அடங்கிய சபையில், மகாராஜா ஷாஹு பாலாஜி

விசுவநாத்தை பேஷ்வாவாக நியமித்தார். கனோஜியை வெற்றி கண்டு வரும்படி கட்டளையும் இட்டு, பேஷ்வாவுக்கான அதிகாரச் சின்னங்களையும் பாலாஜி விசுவநாத்துக்கு அளித்தார். மண்டபத்தில் நிறைந்திருந்த அனைவருக்கும் இந்த பேஷ்வா நியமனம் பெரும் அதிசயமாயிருந்தது. சரியாகப் புரவியேறத் தெரியாத புது பேஷ்வா, கனோஜியை எப்படி முறியடிக்க முடியுமென்று எண்ணி வியந்தனர். பலர் புன்முறுவலும் கோட்டினர். பிரதானி நியமனப் பத்திரத்தைப் படித்த பின்பு, அந்தப் பத்திரத்தை மகாராஜா தமது கரங்களால் பாலாஜியிடம் கொடுத்தபோது மண்டபத்தின் கோடியில் சிலர் முணு முணுக்கவும் செய்தனர்.

மண்டபத்திலிருந்தவர் மனத்திலிருந்த அனைத்தையும் பாலாஜி உணர்ந்திருந்தார். உணர்ச்சியைச் சிறிதும் வெளிக்குக் காட்டாத அவரது சாம்பல் நிறக் கண்கள் அந்தப் பெரும் அவையைத் தைரியத்துடன் அளவெடுத்தன ஒருமுறை. பிறகு மன்னனை நோக்கின. அவர் உதடுகள் கூறின, ''மகாராஜா! நான் திரும்பி வரும்போது கனோஜி தங்கள் அடிமையாயிருப்பார்'' என்று.

இதைக் கேட்ட அந்தச் சபையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. பலர் பாலாஜியின் துணிவை வியந்தனர். சிலர் அது வெறும் வீராப்பு என்று நினைத்தனர். பாலாஜி அவையின் சலசலப்பையோ முணுமுணுப்பையோ லட்சியம் செய்யாமல் தர்பாரிலிருந்து அகன்றார். மன்னரிடம் கூறியது போல் ஒரு சிறு படை பின்தொடர ஸதாராவிலிருந்து கிளம்பினார். இரவோடு இரவாகப் பயணம் செய்து மறுநாள் பகலில் பூனாவை அடைந்து பேஷ்வாக்களுக்கென்று தனியாக இருந்த அரண்மனையில் முகாம் செய்தார். அன்று மாலை விளக்கு வைக்கும் தருணத்தில் தன்னுடன் வந்த உபதலைவனை தனது அந்தரங்க அறைக்கு அழைத்தார். ''உபதளபதி! இப்பொழுது சக்தி

வாய்ந்த ஓர் ஆயுதத்தைக் கையாளப் போகிறேன்'' என்று கூறினார்.

''கனோஜிக்கு எதிராகவா பேஷ்வா?''

''ஆம்.''

''வாளையா?''

''அதை விட வலிமையுள்ளது.''

''எது பேஷ்வா?''

கையிலிருந்த மயிலிறகு எழுதுகோலைக் காட்டினார் பேஷ்வா. அதைக் கண்ட சேனாதிபதி பிரமித்தான். ''இதுவா!'' என்றும் கேட்டான் அதிர்ச்சியுடன்.

''ஆம். வாளைவிட வலிமையுள்ளது'' என்று கூறிய பேஷ்வா எதிரிலிருந்த துணியில் விடுவிடுவென்று எழுதத் தொடங்கினார். மகாராஷ்டிர சரித்திரத்தை மாற்றிய கடிதம் அது. ராஜதந்திரத்தின் சிகரம் அது. அது மகாராஷ்டிரத்துக்குத் தந்த பயனும் பலமும் வார்த்தைகளால் விவரிக்க இயலாதன. மயிலிறகு எழுதுகோலால் அன்று பாலாஜி தீட்டினார் இணையிலாத கடிதம். நிலை நாட்டினார் பின்னால் பல ஆண்டுகள் யாரும் அசைக்க முடியாத மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை.

அத்தியாயம் 32

கடிதமும் கதையும்

சத்ரபதி சிவாஜியால் சிருஷ்டிக்கப்பட்டு முளை விட்டு இலைவிட்டுச் செடியான மகாராஷ்டிர சாம்ராஜ்யம், சிவாஜியின் மகன் சம்பாஜியின் காலத்தில் துவண்டு, ஷாஹுவின் காலத்தில் அடியோடு வாடிவிடும் நிலையை அடைந்துவிட்ட சமயத்தில், பாலாஜி விசுவநாத், தீயும் பயிருக்குப் பெய்யும் மழையைப் போலத் தோன்றி அந்தச் சாம்ராஜ்யத்துக்கு மீண்டும் புத்துயிரூட்டி அது கப்பும் கிளையுமுள்ள பிரும்மாண்ட விருட்சமாக விரிவடைய வித்தை ஊன்றினார். அந்த வித்துத்தான் அவர் பூனாவில் பேஷ்வாவெனும் அந்தஸ்தில் முதன் முதலாகத் தீட்டிய கடிதம். அந்தக் கடிதத்தில் அவர் கனோஜியை நோக்கிப் போர் முரசு கொட்டவில்லை. அதற்காகக் கனோஜியிடம் பணிந்த முறையிலும் வாசகத்தை அமைக்கவில்லை. உறுதியும் ஆணையும், சமரசமும் அன்பும், கெடுபிடியும் ஆகிய பலவித ரகங்கள் இணைந்த வாசகத்தைக் கடிதத்தில் தீட்டினார். மற்றவர்கள் ஓர் அடி முன்னோக்கிப் பார்த்தால், பாலாஜி பல அடிகள் முன்னோக்கிப் பார்ப்பார் என்று அவர் காலத்தில் சகஜமாக மக்கள் பேசி வந்தார்கள். பூனாவில் அவர் கடிதத்தைத் தீட்டியபோது, முன்னும் பின்னும் பக்கங்களிலும் எல்லாத் திசைகளிலுமே தமது அறிவைச் சுழல விட்டார் பாலாஜி என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

பாலாஜி விசுவநாத் கனோஜியை அடக்கிவிடுவதாக மகாராஜா ஷாஹுவிடம் உறுதிமொழி கூறி, சின்னஞ்சிறு படையுடன் பூனாவுக்குக் கிளம்பியபோது அந்தப்

படையை வைத்துக்கொண்டு கனோஜியை அசைக்க முடியாதென்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்து தானிருந்தது. கனோஜியைப் படைபலத்தால் மட்டும் வெல்ல முடியாதென்பதை உணர்ந்ததாலும், அவருக்குப் போர்ப் பயிற்சி எதுவுமே கிடையாதாகையாலும், கனோஜியை வேறு வழிகளில் அசைக்கத் தீர்மானித்தார் பேஷ்வா பாலாஜி விசுவநாத். ஆகவே, கடிதத்தில் மயிலிறகை எந்த இடத்திலும் தடங்கலின்றிச் சிலையில் செலுத்தி, லிகிதத்தை முடித்த பாலாஜி அந்தச் சிலையை எடுத்து உபதளபதியின் கையில் கொடுத்து, ''படி இதை'' என்றும் கூறினார்.

கடிதத்தைப் படிக்கப் படிக்க உபதளபதியின் விழிகளில் வியப்பும் மலர்ந்தது, சில இடங்களில் குழப்பமும் விரிந்தது.

''ஸார்கேல் கனோஜி ஆங்கரே!

மகாராஷ்டிர சாம்ராஜ்யாதிபதியின் பிரதான படைத் தலைவர்களில் நீரும் ஒருவர். உமது தந்தையான துகோஜி பெரிய சிவாஜி மகாராஜாவிடம் ராஜபக்தியுடன் சேவை செய்தார். அப்பேர்ப்பட்ட தந்தைக்குப் பிறந்த நீர், சிவாஜியின் தலைப் பிள்ளையின் நேர்வாரிசு ஷாஹு மகாராஜாதான் என்பதை உணர்ந்துங் கூட, அந்த உண்மையான மகாராஜா மகாராஷ்டிரம் திரும்பியதும் அவருடன் விரோதம் பாராட்டியதன்றி, அவருடைய எதிரியோடு ஒத்துழைத்து வருகிறீர். சிவாஜி மகாராஜாவின் குடும்பத்தின் கீழ்க் கிளைகளோடு உறவாடுகிறீர். தவிர மன்னர் ஷாஹுவின் ஜில்லாக்கள் சிலவற்றையும் பிடித்துக் கொண்டீர். போதாக்குறைக்கு மகாராஜாவின் மாஜி பேஷ்வாவையும் சிறை

கடமையையும் ராஜபக்தியையும் காட்டுவது? இந்தக் கடிதத்தைக் கண்டதும் என்னைத் தாமதமின்றிச் சந்திக்கவும்.

இப்படிக்கு,

பேஷ்வா பாலாஜி விசுவநாத்.''

இந்தக் கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தான் உபதளபதி. பிறகு தலையை நிமிர்ந்து, ''பேஷ்வா! இக் கடிதத்தில் பணிவும் இருக்கிறது; மிரட்டலும் இருக்கிறது'' என்று கூறினான்.

பாலாஜி விசுவநாத்தின் சாம்பல் நிற விழிகள் எழுந்து உபதளபதியை நோக்கின. ''இரண்டும் கலப்பதற்குத் தான் ராஜதந்திரம் என்று பெயர்'' என்றும் அவரது உதடுகள் லேசாகச் சொற்களை உதிர்த்தன.

''பேஷ்வா.....'' என்று உபதளபதி துவங்கினான் மீண்டும்.

''என்ன உபதளபதி?'' என்று வினவினார் பாலாஜி.

''பிங்களேயை மாஜி பேஷ்வா என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்'' என்று சுட்டிக் காட்டினான் உபதளபதி.

''ஆம்.''

''இப்படி எழுத வேண்டியது அவசியமா?''

''அவசியமில்லாததை எழுதுவதில்லை நான். தவிர, உபதளபதி! கனோஜிக்கு யாரிடம் பேச வேண்டும் என்பதும் தெரிய வேண்டுமல்லவா?''

''ஆம், ஆம்.''

இதற்குமேல் உபதளபதியோ பாலாஜியோ நீண்ட நேரம் பேசவில்லை. கடைசியில் பாலாஜி கூறினார். ''உபதளபதி இதைச் சுருட்டி முத்திரை வையுங்கள். பிறகு

இதை எடுத்துக்கொண்டு இப்பொழுதே லோஹ்காட்டுக்கும் கிளம்புங்கள்'' என்று.

உபதளபதியின் முகத்தில் ஈயாடவில்லை, பாலாஜியின் உத்தரவு அவனைக் கல்லாகச் சமைத்துவிட்டது. ''பேஷ்வா! லோஹ்காட்டுக்கா! ஆங்கரேயிடமா?'' என்று அச்சம் நிரம்பிய குரலில் வினவவும் செய்தான் சில வினாடிகளின் அதிர்ச்சிக்குப் பிறகு.

''ஆம்'' என்றார் பாலாஜி விசுவநாத் சர்வ சகஜமாக.

''அங்கு கனோஜி என்னையும் சிறையிலடைத்து விட்டால்...?'' என்று தடுமாறிக் கேட்டான் உபதளபதி.

பாலாஜியின் உதடுகளில் புன்முறுவல் படர்ந்தது. ''பழைய பேஷ்வாவுடன் தங்கும் பேறு கிடைக்கும்'' என்று கூறினார் விஷமமாக.

உபதளபதி மீண்டும் ஓர் ஆட்சேபணை கிளப்பினான், ''நான் போய்விட்டால் தங்கள் படைகளுக்கு உபதளபதி யாரும் இல்லையே'' என்று சுட்டிக் காட்டினான்.

''போரிடுவதாயிருந்தால்தான் படையும் உபதளபதியும் தேவை'' என்றார் பேஷ்வா பாலாஜி விசுவநாத்.

''போரிடப் போவதில்லையா?''

''இல்லை.''

''ஏன்?''

''மகாராஷ்டிரர்கள் பரஸ்பரம் போரிட்டு மடிய வேண்டிய அவசியமில்லை'' என்ற பாலாஜி அதைப்பற்றி மேற்கொண்டு விவாதிக்காமல், ''உபதளபதி! கடிதத்தில் எழுதியிருப்பது மட்டுமல்ல செய்தி'' என்றார் மெதுவாக.

அதைச் சொன்னபோது அவர் முகத்தில் விவரிக்க இயலாத சாயை ஒன்று படர்ந்தது. அந்தச் சாயை அவர் எதிரேயிருந்த சாய்வு மேஜைப் பெட்டிக்குப் பக்கத்தி

லிருந்த விளக்கில் நன்றாகத் தெரியவும் செய்தது. உபதளபதியை நன்றாக நிமிர்ந்து நோக்கிய விழிகளில் அந்த ரகசியச் சாயை சுடர்விட்டது. பாலாஜி மெல்லக் கூறினார். ''உபதளபதி! என்னைச் சுற்றியுள்ளவர்களில் நீ வாலிபனென்பதாலும் அதிக அறிவாளியென்பதாலுமே இத்தப் பெரும்பணிக்கு உன்னைத் தேர்ந்தெடுத்தேன். நன்றாகக் கேள் நான் சொல்வதை. இந்தச் செய்திச் சீலையைக் கனோஜியிடம் கொடுத்ததும் வேறு செய்தி இருக்கிறதென்பதையும் சொல், அவர் என்னவென்று கேட்டால் கதை ஒன்று சொல்...''

இந்த இடத்தில் உபதளபதி குறுக்கிட்டு, ''கதையா!'' என்றான் வியப்புடன்.

''ஆம்'' என்றார் பாலாஜி லேசாகப் புன்முறுவல் காட்டி.

''கதை சொன்னால் அவர் கேட்பாரா?''

''கேட்பார். ஏனென்றால் அது பழங்கதை!''

உபதளபதியின் முகத்தில் வியப்பு பெரிதும் மண்டியது. ''பழங்கதையா! அது எதற்கு இப்பொழுது?'' என்ற அவன் கேள்வியிலும் வியப்பு நன்றாக ஒலித்தது.

பாலாஜியின் சாம்பல் நிறக் கண்கள் நகைத்தன உபதளபதியை நோக்கி. ''இந்தக் கேள்வி அடிக்கடி சமுதாயத்தில் எழுப்பப்படுகிறது அறிவிலிகளால். பழைய கதைகளில் சாசுவதமான உயிர் இருப்பதை அவர்கள் அறிவதில்லை. நான் அறிவேன். ஆகையால் பழங்கதை ஒன்று சொல்கிறேன். அதை அப்படியே போய்ச் சொல் கனோஜியிடம்'' என்ற பாலாஜி விசுவநாத்தின் முகத்தில் பழைய கனவு படர்ந்தது. கனவில் பேசுவதுபோல் அவர் சொற்களும் உதிர்ந்தன உதடுகளிலிருந்து. ''சுவர்ணதுர்க்கத்தில் ஒரு வாலிபன் இருக்கிறான் ஸித்திகளின் சிறையில். பெரிய

வீரன். நாளை அவனைச் சிரச்சேதம் செய்துவிட உத்திர வாகியிருக்கிறது. அதை அறிகிறான் அங்கிருந்த ஒரு குமாஸ்தா. குமாஸ்தா ஏதுமறியாதவனென்று அங்கிருந்த அனைவரும் நினைத்தார்கள். மறுநாள் சிரச்சேதம் செய்ய வீரனைத் தேடினார்கள். வீரனைக் காணோம். குமாஸ்தா வைத் தேடினார்கள், அவனையும் காணோம். ஆண்டுகள் ஓடின, சுவர்ண துர்க்கம் வீரன் வசமாயிற்று. வாலிபனுக் குப் பணம் இல்லை படையெடுக்க. அந்தப் பழைய குமாஸ்தா ஒரு மகானிடம் அவனை அழைத்துச் சென்றான். கடன் வாங்கிக் கொடுத்தான். அந்தப் பணத்தைக் கொண்டு வாலிபன் படை பெருக்கினான். அப்படையைக் கண்டு பலர் அஞ்சினார்கள். குமாஸ்தா அஞ்சவில்லை...'' என்றார் பாலாஜி. ''இந்தக் கதையை அப்படியே சொல் கனோஜியிடம்'' என்று உத்தரவும் இட்டார். அதற்குமேல் பேச இஷ்டப்படாமல் உபதளபதிக்குப் போக அனுமதியும் கொடுத்தார்.

உபதளபதி அவர் முன்பாகவே செய்திச் சீலையைச் சுருட்டி பேஷ்வாவின் முத்திரையை வைத்தான். பிறகு பேஷ்வாவின் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு வெளியே சென்றான். அதற்குப் பிறகு எந்தவிதத் தாமதமும் செய்யாமல் இரண்டு வீரர்களை உடனழைத்துக் கொண்டு புறப்பட்ட உபதளபதி மறுநாள் விடியற்காலை யிலேயே லோஹ்காட்டை அணுகினாலும் கனோஜி, அவனுக்கு மறுநாள் உச்சிவேளையில்தான் பேட்டி கொடுத் தார். லோஹ்காட்டின் நடுப்பாசறையில் அமர்ந்திருந்த கனோஜி, அந்தச் செய்திச் சுருளைப் படித்துவிட்டுப் பக்கத்திலிருந்த தமது உதவிப் படைத்தலைவனிடம் அதைக் கொடுத்தார். பிறகு பேஷ்வாவின் தூதனை நோக்கி, ''புதிய பேஷ்வாவின் படையில் உனக்கென்ன வேலை?'' என்று வினவினார்.

''உபதளபதி'' என்றான் தூது வந்த உபதளபதி.

''உனக்கடுத்தது எத்தனை பேர்?'' என்று வினவினார் கனோஜி.

''யாருமில்லை'' என்றான் பேஷ்வாவின் உபதளபதி.

கனோஜியின் பெரு விழிகள் அதிகமாக அகன்றன. ''ஓரே உபதளபதி! உன்னையும் அனுப்பி விட்டார் பாலாஜி?'' என்று வினவினார்.

''ஆம்'' என்றான் உபதளபதி.

கனோஜியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது சில வினாடிகள். அந்தச் சிந்தனையைத் தொடர்ந்து உதிர்ந்தன சொற்கள், ''சரி! அவர் வாயால் சொல்லச் சொன்னதைச் சொல்'' என்று.

உபதளபதி திக்பிரமையடைந்தான். பேஷ்வா வாயால் செய்தி சொல்லச் சொன்னது கனோஜிக்கு எப்படித் தெரிந்தது என்பது பரம விசித்திரமாயிருந்ததால் அவன் பிரமை தட்டிச் சில வினாடிகள் பேசவில்லை. மகாராஷ் டிரத்தின் மிகக் கூரிய அறிவுகள் மோதுவதை அவன் சந்தேகமறப் புரிந்துகொண்டதால் நிதானமாக சொன் னான்: ''ஸார்கேல்! அவர் ஒரு கதை சொல்லச் சொன்னார் உங்களுக்கு. செய்தி திட்டமாக எதுவும் இல்லை.''

கனோஜி தமது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, ''சொல் கதையை'' என்று உத்தரவிட்டார்.

உபதளபதி கனோஜியின் பக்கத்திலிருந்த அவரது உதவிப்படைத் தலைவர்களை நோக்கினான். உபதளபதி யின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட கனோஜி, ''எதுவா யிருந்தாலும் சொல். எனது உதவிப் படைத் தலைவர்கள் எனது நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமானவர்கள்'' என்று கூறினார்.

உபதளபதி அதற்குமேல் தயங்காமல் பாலாஜி சொன்ன கதையை மெதுவாகவும் உறுதி நிறைந்த சொற்க

ளாலும் கூறினான். கனோஜி அந்தக் கதையை மிக நிதானமாகவும் பதட்டம் ஏதுமில்லாமலும் கேட்டார். கடைசியில் மெல்ல நகைத்துக் கொண்டார். உபதளபதியை நோக்கிப் பின் வருமாறு கூறவும் செய்தார்: ''பாலாஜி விசுவநாத்திடம் சொல் உபதளபதி! பழைய கதையை வாலிபன் மறக்கவில்லை. ஆனால் புதுக் கதையில் அது எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது விளங்கவில்லை அவனுக்கு. பேஷ்வா அதை நேரிடையாகத்தான் விளங்க வைக்க வேண்டும். ஆகவே, பேஷ்வா மட்டும் தனித்து லோஹ்காட்டுக்கு வரட்டும்.''

இதைக் கேட்டதும் உபதளபதி திகைத்தான். பழைய பேஷ்வர்வோடு புதிய பேஷ்வாவையும் கனோஜி சிறை செய்துவிட்டால் என்ன செய்வதென்று திகைத்தான். எனினும் அந்தச் செய்தியை அப்படியே பேஷ்வாவிடம் ஒப்புவித்தான் மறுநாள். அந்தச் செய்தி பாலாஜிக்கு எந்தவித அதிர்ச்சியும் அளிக்கவில்லை. லோஹ்காட்டிலிருந்தவர்களுக்குத்தான் விளைவு அதிர்ச்சியாயிருந்தது. சாதாரணப் புரவிமீது துணைக்கு இரண்டு வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு முன் அறிவிப்பு ஏதுமில்லாமல் திடீரென பாலாஜி விசுவநாத் ஒருநாள் காலையில் லோஹ்காட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி அக்கோட்டைக்கு எட்டியது. அதைப்பற்றி ஒற்றர்கள் மூலம் அறிந்த கனோஜியும் லோஹ்காட்டிலிருந்து கிளம்பி, லோனாவாலாவுக்கு அருகிலிருந்த வால்வா என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு பாலாஜி வந்ததும் ஏதோ பெரும் படையெடுப்பு ஏற்பட்டதுபோல் கனோஜி பாசறை அமளி துமளிப் பட்டது. காவலர்கள் திகைத்தனர். அவர் வந்த செய்தியை கனோஜிக்கு அறிவிக்கப் புரவி வீரர்கள் பறந்தனர் பாசறைக்கு. எதிரியின் கோட்டைக்குள் சிறிதும் பயமின்றி நுழைந்த பாலாஜியின் துணிவை உலகம் வியந்தது. சரித்திரத்தில் அந்தச் சம்பவம் பொன்னெழுத்துக்களால்

பொறிக்கப்பட்டது. அவரைக் காண விரைந்து வாயிலுக்கு வந்த கனோஜிகூட அவரைக் கண்டதும் பேச்சு எதுவும் எழாமல் வாயடைத்து அதிர்ச்சியடைந்து அசைவற்றுப் புரவியில் உட்கார்ந்துவிட்டார் பல வினாடிகள். பாலாஜி விசுவநாத் மட்டும் எந்த உணர்ச்சிக்கும் இலக்காகவில்லை. தமது புரவியை வால்வாவுக்குள் செலுத்தி, கனோஜியைத் தம்முடன் வருமாறு சைகை காட்டி முன் சென்றார். யாருக்கும் அடங்காத அந்த முரட்டுக் கப்பற் கொள்ளைக்காரர், மகாராஷ்டிரத்தை நடுங்க வைத்த அந்த மாவீரர், தனது புரவியைத் திருப்பி, சாதாரணப் பணியாளைப்போல் பேஷ்வாவைத் தொடர்ந்தார்.

அத்தியாயம் 33

பாலாஜியின் ராஜ தந்திரம்

மகாராஷ்டிர மன்னன் ஷாஹூவின் பேஷ்வா எனும் நினைப்பினால் ஏற்பட்ட கம்பீரத்தால், பயம் சிறிதுமின்றிச் சிங்கத்தின் குகைக்குள் நுழைந்த பாலாஜி விசுவநாத் கோட்டையின் உட்புறத்தை நாலாபக்கங்களிலும் கவனித்த் வண்ணம் புரவியில் மிக அலட்சியமாக உட்கார்ந்து சென்றார். அவரது சைகைக்கு உட்பட்டு அவருக்குப் பின்னால் புரவியில் மிகுந்த பணிவுடன் சென்ற கனோஜி ஆங்கரே, பாலாஜி விசுவநாத்தின் அச்சமற்ற நெஞ்சத்தை உள்ளூரச் சிலாகித்துக் கொண்டும் வியந்து கொண்டும் சென்றார். இந்த விசித்திர ஊர்வலத்தைக் கண்ட வால்வான் வாசிகளும் கனோஜியின் வீரர்களும் பெரும் பிரமிப்பையும் வியப்பையும் அடைந்ததால் வாயடைத்துச் செயலற்று நின்றனர். அவர்கள் மன நிலையை அரை விநாடியில் எடை போட்டுவிட்ட பாலாஜி விசுவநாத் உள்ளூர நகைத்துக் கொண்டாலும் எந்த உணர்ச்சியையும் முகத்திலோ, ஒளி எப்பொழுதாவது துள்ளி விளையாடும் சாம்பல் நிறக் கண்களிலோ காட்டாமல் புரவியை அந்த நகருக்கு நடுவிலிருந்த பெரு மாளிகையை நோக்கி நடத்தினார். அந்த மாளிகையின் வாயிலை அடைந்ததும் அவருடன் வந்த இருவீரர் புரவியின் கடிவாளங்களைப் பிடித்துக்கொள்ள மெல்ல இறங்கிய பாலாஜி, மாளிகைக்குள் நுழைந்தார். கனோஜி தமது புரவியிலிருந்து அனாயாசமாகக் குதித்து அவருக்கு முன்பாக மாளிகைக்குள் சென்று அவருக்கு வழிகாட்டிச் சென்றார்.

மாளிகையில் மகாராஷ்டிர சாம்ராஜ்ய பேஷ்வாவுக்குரிய சகல போகங்களும் தயாராயிருந்தன. பேஷ்வாவுக்கென ஒழித்து விடப்பட்ட தனியறையில் தின்டு திவாசுகளும் சாய்வு மேஜைகளும் இரண்டு மூன்று சிறந்த ஆசனங்களும் போடப்பட்டிருந்ததன்றி, ஒருபுறம் திரைச் சீலையொன்றும் தொங்கவிடப்பட்டு அதற்குப் பின்னால் பேஷ்வாவின் பூஜைக்காகப் பொன் பாத்திரங்களும் வைக்கப்பட்டிருந்தன. காவலிருவர் வாயிலில் காவல் புரிந்து கொண்டிருந்தனர். அந்த அறைக்குள் நுழைந்த பேஷ்வா அங்கிருந்த ஏற்பாடுகளைக் கண்டு திருப்தியை முகத்தில் காட்டினார். அறையின் மூலையிலிருந்த திரைச் சீலையை நீக்கிப் பார்த்தபின்பு, மெல்லத் திரும்பி அறை நடுவில் நின்றிருந்த கனோஜியை நோக்கிப் புன்முறுவல் கோட்டி, ''இந்த ஏழைப் பிராமணனுக்கு ஸார்கேலின் வரவேற்பு பலமாயிருக்கிறது'' என்று கூறினார் பாலாஜி.

கனோஜியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''வரவேற்பு மகாராஷ்டிர சாம்ராஜியத்தின் பேஷ்வாவுக்கு'' என்று சுட்டிக் காட்டினார் தமது கரகரத்த குரலில்.

பாலாஜி விசுவநாத்தின் முகத்தில் புன்முறுவலின் சாயை அதிகமாகப் படர்ந்தது ''பொன்னால் செய்யப்பட்ட பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன பூஜைக்கு'' என்றார் பாலாஜி.

''ஆம். அவற்றைவிடச் சிறந்த பாத்திரங்கள் இங்கு இல்லை'' என்றார் கனோஜி ஆங்கரே.

''இவற்றை அப்புறப்படுத்திவிட்டு, ஒரு பித்தளை செம்பு, வெண்கல பஞ்ச பாத்திரம், உத்தரிணி, ஒரு பித்தளைத் தட்டு இவற்றைக் கொடுங்கள்'' என்றார் பாலாஜி.

கனோஜியின் முகத்தில் வியப்பு மண்டியது. ''பித்தளையா! வெண்கலமா?'' என்று கேட்டார் குரலிலும் வியப்பு தாண்டவமாட.

''ஆம். எனது பழைய நிலையை நான் மறக்கவில்லை. அந்த வாழ்வையே வாழப் பிரியப்படுகிறேன். பேஷ்வா பதவி நாட்டு உதவிக்குத்தான்'' என்று சொன்ன பாலாஜி, தமது சாம்பல் நிறக் கண்களால் கனோஜியை ஏறெடுத்து நோக்கினார். அந்த நோக்கில் பரிகாசமில்லை, பரிவு இருந்தது, கண்ணியம் இருந்தது.

கனோஜி புரிந்துகொண்டார் பேஷ்வா தம்மை இடித்துக் காட்டுகிறாரென்பதை. தமது பதவியையும் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்கு உபயோகப்படுத்த வேண்டும் என்ற குறிப்பும் அதிலிருந்ததை உணர்ந்து கொண்டார். எனினும் எதிர்த்து ஏதும் சொல்லாமல், ''அப்படியே பாத்திரங்களை மாற்றிவிடுகிறேன். நீங்கள் ஸ்நானம் செய்து வைதிகக் கடன்களை முடித்த பின்பு தங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறி, அந்த அறையை விட்டு அகன்றார்.

பாலாஜி விசுவநாத் கால தாமதம் சிறிதும் செய்யாமல் தமது நீராட்டத்தை முடித்துக் கொண்டு, நெற்றியில் முவ்வரி சந்தனம் தீட்டி, காலைச்சந்தி முதலிய கடன்களையும் முடித்துக் கொண்டார். பிறகு இராமாயணத்தை எடுத்துக்கொண்டு பாராயணம் செய்யத் துவங்கினார். பாராயணம் முடிந்ததும் கனோஜியைத் தமது அறைக்கு வருமாறு காவலனிடம் செய்தி அனுப்பினார். சுமார் அரை ஜாமத்திற்கெல்லாம் அந்த அறைக்குள் நுழைந்த கனோஜி என்றுமில்லாத கதையாக அன்று சற்று ஆசாரத்துடன் காணப்பட்டார். அவர் பூர்ண ஸ்நானம் செய்ததற்கு அறிகுறியாக அவரது முரட்டுத் தலைக் குழல்களில் ஒரிரு நீர்த்துளிகள் அப்பொழுதும் காணப்பட்டன. நெற்றியிலிருந்த சந்தன நேர்க்கோடுகள் இரண்டு, சற்று பளிச்சென்று காட்சியளித்தன. அவரது பயங்கர மீசையும் அகன்று நன்றாக முறுக்கி விடப்பட்டுச் சற்று ஒழுங்குட வயிரப் னிருந்தது. கனோஜியின் இடுப்பிலிருந்த செருகப்பட் பிடியுள்ள பிச்சுவா மட்டும் சாய்ந்து

டிருந்தாலும் அதிலும் ஓர் ஒழுங்கு தெரிந்தது. கனோஜியின் மேல் சட்டையும் அரை வேட்டியும் மிகத் துல்லியமாக இருந்தன. இத்தனை ஏற்பாட்டுடன் கனோஜி வந்திருந்துங்கூட, எதிரே ஒல்லியாய் வெள்ளை வெளேரென்று மெல்லிய உடையணிந்து, தங்கச்சுடர் விட்ட அழகிய மேனியுடன் உட்கார்ந்திருந்த பேஷ்வாவின் முன்பு அவர் சாதாரண வீரனாகவே விளங்கினார்.

பாலாஜி விசுவநாத் கனோஜியை மிக அன்புடன் வரவேற்று, தமக்கருகில் உட்கார வைத்துக்கொண்டார். ''கனோஜி! நீ சிறிதும் மாறவில்லை. அதே முரட்டுப் பையனாகத்தானிருக்கிறாய்'' என்று அன்புடன் சொற்களையும் உச்சரித்தார்.

''பாலாஜி! நீங்கள் மட்டும் என்ன மாறிவிட்டீர்கள்? உடம்பில் சிறிது கூடச் சதைப்பிடிப்பு இல்லை. எலும்புகளை எண்ணி விடலாம்'' என்றார் கனோஜி.

இதைக் கேட்ட பாலாஜி நகைத்தார். ''இந்தப் பலவீனத்தில்தான் உன்னுடன் போராட முடியவில்லை. உன்னை என் வழிக்குத் திருப்ப வந்திருக்கிறேன்'' என்றும் கூறினார் நகைப்புக்கிடையே.

இதைக் கேட்டதும் கனோஜியின் முகத்தில் உணர்ச்சி மாறியது. லேசாகக் கோபம் சுடர்விட்டது. ''பாலாஜி விசுவதாத்! எனக்கு இளவயதில் நீங்கள் செய்த உதவியை, நான் மறுக்கவில்லை, என்னை லித்திகளிடமிருந்து மீட்டு எனக்கு உயிரளித்ததற்காக என் உயிரைக்கூட அளிப்பேன். அதெல்லாம் நண்பர் பாலாஜி விஷயத்தில், பேஷ்வா பாலாஜியின் விஷயத்தில் அந்த உணர்ச்சிகளுக்கு இடமில்லை என் இதயத்தில்'' என்ற சொற்கள் சுடச்சுட வெளிவந்தன கனோஜியிடமிருந்து.

இந்த உஷ்ணத்தை பாலாஜி விசுவநாத் சிறிதும் லட்சியம் செய்தாரில்லை. அவரது சாம்பல் நிறக் கண்கள்

சர்வ சாதாரணமாக எழுந்து கனோஜியை நோக்கினான். ''நான் இங்கு நண்பன் பாலாஜியாக வரவில்லை. பேஷ்வா பாலாஜியாகத்தான் வந்திருக்கிறேன்'' என்ற சொற்கள் உறுதியுடன் உதிர்ந்தன அவரிடமிருந்து.

''இங்கு ஒரு பேஷ்வா சிறையிலிருக்கிறார்...'' என்று சுட்டிக்காட்டினார் கனோஜி.

''இன்னொரு பேஷ்வாவையும் அங்கு அனுப்ப யார் தடை செய்தது உன்னை?'' என்று கேட்டார் பாலாஜி.

கனோஜி மிகுந்த சங்கடத்துடன் அசைந்தார் இருந்த இடத்தில். ''பாலாஜி! என் பொறுமையை அதிகமாகச் சோதிக்காதீர்கள்'' என்றும் சொன்னார்.

''உன் பொறுமையைச் சோதிப்பதற்காக நான் வரவில்லை கனோஜி'' என்றார் பாலாஜி.

''பின்?''

''உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்.''

''என்னைக் காப்பாற்றவா?''

''ஆம்.''

''எதிலிருந்து?''

''ராஜத் துரோகத்திலிருந்து. அது மட்டுமல்ல, உன்னை எதிர்நோக்கி வரும் பேராபத்திலிருந்து.''

கனோஜி பாலாஜியை எரித்து விடுவதுபோல் பார்த்தார். ''எனக்கா? ஆபத்தா!'' என்று எரிச்சலுடன் கேட்டு கேலியாக நகைக்கவும் செய்தார்.

பாலாஜி விசுவநாத், கனோஜியின் எரிச்சலையோ நகைப்பையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் தமது கருத்தை விளக்கினார். ''கனோஜி, இப்பொழுது நீ புகழின் உச்சியிலிருக்கிறாய். ஷாஹுவின் பெரும் படையைக் கல்யாணில் முறியடித்து விட்டாய். ராஜ்மச்சியும் லோஹ்காட்டும் உன் கையிலிருப்பதால் வடகொங்கணத்

பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டதால் கடலில் இப்பொழுது உனக்கு அதிக ஆபத்துமில்லை. நிலைமை இப்படியே நீடிக்குமானால் நீ வடகொங்கணத்தின் முடிசூடா மன்னனாயிருப்பாய். ஆனால் நிலைமை இப்படியே நீடிக்காது'' என்றார் பாலாஜி.

கனோஜி, கேள்வி தொக்கி நின்ற பார்வையொன்றை வீசினார் பாலாஜிமீது. ''நிலைமை ஏன் நீடிக்காது இப்படியே? எனது தரைப்படை, கடற்படை இவற்றின் பலம் என்ன ஆயிற்று? எங்கே போயிற்று?'' என்று வினவினார்.

பாலாஜி தரையை நோக்கிய வண்ணம் சாந்தமாகக் கூறினார்: ''படை பலம் மட்டும் அரசுகளை நிலைக்க வைப்பதில்லை. பெரும் படை பலமுள்ள மொகலாய சாம்ராஜ்யம் சாதாரண மலைச் சாதியினரைக் கொண்டு சிவாஜி மகாராஜாவால் ஆட்டப்பட்டது. அரசுகளுக்கு வேர் மக்களிடமிருக்கிறது, சூழ்நிலையிலிருக்கிறது. இரண்டும் உனக்குச் சரியில்லை. காலம் உன்னை மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் எதிரியெனத் தூற்றும் சூழ்நிலை உனக்கு எதிராக உருவாகிறது. ஏற்கனவே போர்க்சுக்கீஸியர் தங்கள் கடற்படையைக் கொலாபா முன்பு கொண்டு வந்து முற்றுகையிட்டதாக என் ஒற்றர்கள் கூறுகிறார்கள். இப்பொழுது அங்கு ஸித்திரஸூல் யாகூத்கானின் போர்க் கப்பல்களும் நிற்கின்றன. உன் மரக்கலங்களை நீ தரையிலிழுத்து விட்டதால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் உன் மரக்கலங்கள் தரையிலேயே இருக்க முடியாது. அவற்றை நீ கடலில் செலுத்த முயன்றால் ரஸூல் யாகூத்கானின் பீரங்கிகள் அவற்றை அழித்துவிடும். தவிர, நிரம்ப நிலத்தைப் பிடித்திருக்கிறாய். அதை எப்படி நிர்வகிக்கப் போகிறாய்? மாலுமிகள் அதிகமாக அடங்கிய உன் படை, நில நிர்வாகத்துக்கு [illegible] கொள்ளையடிக்கும்

மாலுமிகளுக்கு இந்த நில வாழ்க்கையும் இதன் கட்டுப்பாடு களும் அதிக நாள் ஒத்துவராது. நீயாக அவர்களை மீண்டும் கடலுக்கு அனுப்பாவிட்டால் அவர்களாகப் போய் விடுவார்கள். இவையெல்லாம் உன் பலவீனங்கள். இன்னொரு பேராபத்தும் உன்னை எதிர் நோக்கியிருக் கிறது'' என்று வாசகத்தை முடிக்கவில்லை பாலாஜி. அவர் சாம்பல் நிறக் கண்கள் கனோஜியை நோக்கின அனுதாபத் துடன்.

கனோஜி பாலாஜியின் பேச்சால் வசீகரிக்கப்பட்டுச் சில விநாடிகள் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தார். பிறகு மெல்லக் கேட்டார், ''இன்னொரு பேராபத்து என்ன?'' என்று.

பாலாஜியும் மெல்லத்தான் பதில் சொன்னார். ஆனால் அது பெரும் அதிர்ச்சியாயிருந்தது கனோஜிக்கு. ''உன் நண்பர் கவர்னர் ஏஸ்லாபி இருக்கிறாரல்லவா?'' என்று துவங்கினார் பாலாஜி.

''ஆம்.''

''அவர் இங்கிலாந்துக்குப் போகிறார்.''

''என்ன!''

''ஆம் மாற்றிவிட்டார்கள்.''

''யாருடைய வேலை இது?''

''மிஸ்டர் ப்ரௌன்.''

''அடுத்த கவர்னர்?''

''பூன் என்று ஒருவர் வருகிறார்.''

கனோஜி அசைவற்று உட்கார்ந்தார். ''அப்படி யானால் எங்கள் ஒப்பந்தம்?'' என்று கேட்டார்.

''ஏஸ்லாபியுடன் சென்றுவிடும்'' என்று கூறிய பாலாஜி, ''கனோஜி! பிரிட்டிஷ்காரர்களை மட்டும் நான்

நம்புவதில்லை, மகாதந்திரசாலிகள். என்றாவது ஒரு நாள் மகாராஷ்டிரத்தை யாராவது உடைக்க முடியுமென்றால் அது அவர்களால்தான் முடியும்?'' என்று தெரிவித்துப் பெருமூச்சும் விட்டார் பேஷ்வா.

கனோஜிக்கு பாலாஜியின் விளக்கம் தெளிவாகப் புரிந்தது. ''மீண்டும் பிரிட்டிஷார் விரோதமென்றால், மறுபடியும் கடலில் போர். கடலில் போர் என்றால் தரை மீல் பலவீனம்'' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

அவர் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட பாலாஜி, ''அதனால்தான் உன்னைத் தரையி லும் வலுவாக்கப் பார்க்கிறேன். நீ நியாயமாகச் சேவை செய்ய வேண்டிய தரப்புக்குத் திரும்பு. ஷாஹுவின் ஸார்கேலாக இரு; இருந்தால்...'' என்று கூறி நிறுத்தினார்.

''இருந்தால்?'' கனோஜியின் கரகரத்த குரல் கடுமை யுடன் ஒலித்தது.

''கொங்கணம் முழுவதையும் உன் கையில் ஒப்படைக் கிறேன்'' என்றார் பாலாஜி சாவதானமாக.

கனோஜி உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்தார். சிறிது, அறையில் உலாவினார். சரேலென்று நின்று கேட்டார்: ''அப்படியானால் தாராபாயைக் கைவிடச் சொல்கிறீர்களா?'' என்று.

''வேண்டியதில்லை. தாராபாய் ஷாஹுவிடமிருக் கிறாள் கௌரவக் கைதியாக'' என்று மற்றொரு வெடி குண்டை வீசினார் பாலாஜி.

எதற்கும் அஞ்சாத, குழம்பாத, கனோஜியின் மனம் பெரிதும் குழம்பிக் கிடந்தது. பாலாஜி அவர் குழப்பத்தை நோக்கினார், இருந்த இடத்தைவிட்டு அகலாமல் பேசினார்.

''கனோஜி! மன்னர்கள், ராணிகள், வருவார்கள் போவார்கள், மகாராஷ்டிரம் போகாது. அதன் சிறப்பு

தான் நம் சிறப்பு. அதற்குத்தான் சத்ரபதி சிவாஜி போராடினார். நாமும் அதற்குத்தான் போராட வேண்டும். கைதியாயுள்ள தாராபாயின் பெயரை வைத்துக் கொண்டு நீ கொள்ளையடிப்பதைவிட மன்னரின் ஸார்கேலாக கொங்கணித் தரையையும் கடலையும் ஆள்வது உனக்கும் பெருமை. மகாராஷ்டிரத்துக்கும் பாதுகாப்பு. நன்றாக யோசித்துப்பார். நாளை மக்கள் உன்னை மகாராஷ்டிரத்தை பாதுகாத்த மாவீரனாகக் கொண்டாட வேண்டுமா? அல்லது அரசின் சிறு கிளையைப் பிடித்துக்கொண்டு சுயநலத்துக்குப் போராடிய கொள்ளைக்காரனாக நினைக்க வேண்டுமா? நன்றாகச் சிந்தித்துப்பார், உன் படையுடன் என் படையை இணைத்தால், ஸித்திகள் தரையிலும் கடற்பகுதியிலும் விரட்டப்படுவார்கள் என்பதை எண்ணிப்பார். உன் பொன்னான, சிறப்புத் தரும் எதிர்காலத்தையும், உன் பிற்காலத்தையும் எண்ணிப்பார்.''

இத்துடன் பேச்சை நிறுத்திய பேஷ்வா எதிரேயிருந்த மேஜைப் பெட்டியை அருகில் இழுத்து வைத்துக்கொண்டு அதன் மீதிருந்த காகிதங்களில் எழுத முற்பட்டார்.

''என்ன எழுதுகிறீர்கள்?'' என்று வினவினார் கனோஜி.

''நமது ஒப்பந்த நகல்'' என்று சர்வ சாதாரணமாக அறிவித்த பாலாஜி தொடர்ந்து எழுதலானார்.

அத்தியாயம் 34

அந்தத் தமிழனா!

பாலாஜி விசுவநாத் அதற்குப் பின்பு எதிரே நின்று கொண்டிருந்த கனோஜி ஆங்கரேயைச் சிறிதும் கவனிக்காமல் கையிலிருந்த மயிலிறகு எழுது கோலால் கடுக்காய் மை கொண்டு விடுவிடு என்று காகிதத்தில் எழுதிக் கொண்டு போனார். எந்த இடத்திலும் தாமதிக்காமல் புத்தி ஓடுகிற ஓட்டத்தில் பேனாவையும் ஓடவிட்ட பேஷ்வா, பல பக்கங்களை எழுதி முடித்த பின்னர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டுத் தமக்குப் பின்னாலிருந்த திண்டில் லேசாகச் சாய்ந்து, ''கனோஜி! இது முழுவதையும் நீ படிக்கிறாயா? அல்லது சுருக்கமாக நான் என் வாயால் சொல்லட்டுமா?'' என்று வினவினார்.

கனோஜி அந்தக் காகிதங்களைக் கையில் வாங்கிப் பார்த்தார். தாள்களைப் புரட்டினார். பிறகு அவற்றை பேஷ்வாவின் மேஜைப் பெட்டியின்மீது போட்டு, கலகல வென நகைத்தார். அந்த நகைப்பின் காரணம் பாலாஜிக்குப் புரிந்திருந்தாலும் அதை அவர் சற்றும் வெளிக்குக் காட்டாமல், புன்முறுவல் கொண்டு, ''ஏன் போட்டு விட்டாய் ஒப்பந்த நகலை?'' என்று வினவினார்.

''நான் வீரன். படைகளை நடத்துபவன்'' என்றார் கனோஜி.

''படைத் தலைவனாயிருந்தால் படிக்கக்கூடாதா?''

''படைத் தலைவர்களுக்கு வெட்டத் தெரியும், சுடத் தெரியும். வாசகங்களில் மறைக்கப்படும் அரசியல் சூதுவாதுகள் தெரியாது. உங்கள் ஆரம்ப வாசகத்திலேயே வரிகள் பத்துப் பதினைந்து இருக்கின்றன. அதைப் படித்து

ஆராய்ந்து அதன் சூட்சுமங்களையும் திரிசமன்களையும் புரிந்து கொள்வதற்குள் ஷாஹுலின் கோட்டைகள் நான்கைப் பிடித்து விடுவேன்'' என்று நகைத்தார் மீண்டும் கனோஜி.

பாலாஜி விசுவநாத் நமட்டு விஷமமாகச் சிரித்தார். ''அப்படியானால் உனக்கு வேண்டிய யாரிடமாவது நகலைக் காட்ட உத்தேசமா?'' என்று வினவினார் விஷமமாக.

''ஆம்'' என்றார் கனோஜி.

''யாரிடம்?'' என்று கேட்டார் பாலாஜி.

பதிலுக்கு பாலாஜியை விரலால் சுட்டிக் காட்டிய கனோஜி, ''நான் வாழ்க்கையில் நம்பக்கூடிய ஒரே ஒரு மனிதர் நீங்கள்தான். ஆகவே உண்மையைச் சொல்லுங்கள். இந்த ஒப்பந்தம் உங்களுக்குத் திருப்தியளிக்கிறதா?'' என்று வினவினார்.

பாலாஜியின் சாம்பல்நிறக் கண்கள் பளிச்சிட்டன. ''இருக்கிறது கனோஜி'' என்ற குரலில் அன்பு சொட்டியது.

''இதனால் என் மதிப்பு உயருமா? குறையுமா?'' என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார் கனோஜி.

''உயரும்.''

''எனது நலன்?''

''பன்மடங்கு உயரலாம்!''

''என் எதிரிகள்!''

''ஒன்று, உனது நண்பர்களாவார்கள், அல்லது அழிவார்கள்.''

''சரி பாலாஜி. சுருக்கமாக ஷரத்துகளைச் சொல்லுங்கள்.

பாலாஜி விசுவநாத் மேஜைப் பெட்டிமீது கிடந்த காகிதங்களைத் தொடாமலேயே கூறினார் கனோஜியை நோக்கி. ''கனோஜி! இந்தச் சாஸனத்தால் நீ ஷாஹுவின் ஸார்கேலாகிறாய். ஷாஹு மகாராஜா உன்னைக் கொங்கணியின் தலைவனாக அங்கீகரிக்கிறார். கொங்கணியைச் சேர்ந்த மூன்று பகுதிகளும் உன்னிடம் ஒப்படைக்கப்படுகின்றன. மகாராஷ்டிரத்தின் மேலைக் கடலோரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு பூர்ணமாக உன்னிடமே விடப்படுகிறது. பிராஞ்சிகளையும் ஹுப்ஷிகளையும் (வெள்ளைக்காரர்களையும் அபிசீனியரையும்) மண்ணாகச் செய்வது உன் பொறுப்பாகும். இப்பொழுது நிகழ்ந்த போருக்குப் பிறகு பிடிக்கப்பட்ட கோட்டைகளில் லோஹ்காட் உட்பட ஒன்பது கோட்டைகளை மன்னர் வசம் நீ ஒப்படைக்க வேண்டும். பதிலுக்கு மன்னர் உனக்கு ராஜ்மச்சி உட்பட நான்கு கோட்டைகளை மட்டுமின்றி, அவற்றைச் சூழ்ந்துள்ள நிலப் பிரதேசங்களையும் கொடுக்கிறார். நீ கேட்கும் போதெல்லாம் மன்னர் உனக்கு ராணுவ உதவியளிப்பார். இந்த ஒப்பந்தத்தில் மன்னர் உனக்குப் பத்துக் கடற்கரைக் கோட்டைகள், பதினாறு உள்நாட்டுக் கோட்டைகள் கொடுக்கிறார். இதனால் பிரதி ஆண்டு முப்பத்தாறு லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும்படியான நிலப்பகுதி உன் அதிகாரத்திற்கு மாற்றப்படுகிறது. இனிமேல் உன் குடும்பம் பரம்பரை பரம்பரையாக ஸார்கேல் பட்டத்தை வகிக்கும். இந்த ஒப்பந்தத்தில் நீ கையெழுத்துப் போடும் போது, 'ஷாஹுகார்ய துரந்தர் துகோஜி தனுஜன் மனா கனோஜி ஸார்கேலாஸ்ய முத்ரிகேயம் விராஜதே' என்று கையெழுத்திடுவாய், முத்திரையும் பொறிப்பாய்.

இதைக் கேட்ட கனோஜி ஆங்கரே பிரமித்துப் போனார். இந்த ஒப்பந்தத்தின்படி பம்பாயிலிருந்து கோவா வரையிலுள்ள கடற்கரைப்பகுதி தன்னிடமிருக்கும் என்பதை உணர்ந்ததால் பெரும் உணர்ச்சிவசமும் பட்டார். அப்பொழுது அவர் நினைத்ததெல்லாம் ஷாஹுவைப் பற்றியல்ல. ஒப்பந்த நகலில், 'ஷாஹு' 'மன்னர்' என்ற சொற்களெல்லாம், சம்பிரதாயச்

சொற்களென்பதையும் எல்லா முடிவும் தனது பால்ய நண்பர் பாலாஜியின் முடிவுதானென்பதையும் உணர்ந்தார். அந்த நகலில் குறிப்பிட்டுள்ள சில நிலப்பகுதிகள் ஜன்ஜீரா ஸித்திகளுக்குச் சொந்தமானவைதானென்பதை உணர்ந்ததால், 'பிறரிடமிருக்கும் நிலங்களை இவர் எப்படி எனக்குத் தானம் செய்ய முடியும்?' என்று யோசித்தார். அதைப் பற்றிக் கேட்கவும் கேட்டார். ''ஜன்ஜீரா பகுதியிலுள்ள நிலங்கள் ஸித்திகளின் ஆதிக்கத்திலிருக்கின்றனவே?'' என்று.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த பாலாஜி, ''உண்மை கனோஜி! ஆனால் இந்த ஒப்பந்தத்துக்குப் பிறகு ஸித்திகளின் பலம் மிக ஒடுங்கிவிடும். அப்படி ஒடுங்கா விட்டால் ஒடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறினார்.

கனோஜி தீவிர யோசனையில் இறங்கினார். பிறகு ஒப்பந்தத்தை ஒப்புக் கொள்வதற்கு அறிகுறியாகத் தலையசைத்தார். ''இந்த விதிகளை மன்னருக்கு அனுப்புங்கள்'' என்றும் கூறினார்.

பாலாஜி புன்முறுவல் பூத்தார். ''எதற்கு மன்னருக்கு அனுப்ப வேண்டும்?'' என்று கேட்டார் புன்முறுவலின் ஊடே.

''அவர் அங்கீகாரத்துக்கு...''

''மகாராஷ்டிர சம்பிரதாயப்படி பேஷ்வா, மன்னரின் பிரதிநிதி. பேஷ்வா கையெழுத்திட்டால் மன்னர் இட்டது போலத்தான்.''

''சரி, ஒப்பந்தத்தை லிகிதர்களை விட்டு எழுதச் சொல்லுங்கள். நீங்கள் கையெழுத்திட்டதும் நானும் கையெழுத்திடுகிறேன்.''

இந்தச் சமயத்தில் பாலாஜி ஒரு குண்டை எடுத்துப் போட்டார். ''இப்பொழுது கையெழுத்துக்கு அவசிய

கனோஜியின் விழிகளில் கேள்விக் குறியொன்று படர்ந்தது. ''பின் எப்பொழுது போடவேண்டும்?'' என்ற கேள்வியும் உதிர்ந்தது சந்தேகத்துடன் கனோஜியின் உதடுகளிலிருந்து.

''இன்னும் பதினைந்து நாள் கழித்து பௌர்ணமி அன்று'' என்றார் பாலாஜி.

''அன்று என்ன விசேஷம்?'' என்று கேட்டார் கனோஜி.

''அபிஷேகம்.''

''அபிஷேகமா? யாருக்கு?''

''குலாபிக்கு. மஹிஷேச்வரிக்கு'' என்ற பாலாஜி அம்பாளை நினைத்துத் தலைவணங்கினார்.

கனோஜி அதிர்ச்சியடைந்து நின்றார். தான் அஞ்சும் ஒரே தேவதையை— அம்பாளை பாலாஜி குறிப்பிட்டதை எண்ணி வியக்கவும் செய்தார். ''அப்படியானால்...?'' என்று பேசத் துவங்கி, பேச முடியாமல் நின்றார்.

''ஆம். ஒப்பந்தம் கொலாபாவில் அம்பிகையின் சந்நிதானத்தில் கையெழுத்தாகும். அதை மீற உனக்கோ ஷாஹூவுக்கோ சக்தியிருக்காது. அவள் அனுக்கிரகத்தால் மகாராஷ்டிரத்தின் சக்தி பெருகும். உன்னையோ, ஷாஹூவையோ பிறகு வெள்ளையரோ ஸித்தியோ எதிர்க்க முடியாது'' என்று கூறிய பாலாஜி, அன்று முதன் முறையாக உணர்ச்சிப் பெருக்கத்தைக் காட்டினார்.

கனோஜி பாலாஜி முன்பு மண்டியிட்டு உட்கார்ந்து அவர் பாதத்தைத் தொட்டார். ''மகாராஷ்டிரத்துக்கு முதன் முதலாக அறிவு மிகுந்த பேஷ்வா ஏற்பட்டிருக்கிறார். இனி வாழட்டும் மகாராஷ்டிரம். ஒழியட்டும் அதன் பூசல்கள். செழிக்கட்டும் ஹிந்து மதம்! ஜெய் குலாபி! ஜெய் பவானி!'' என்று உணர்ச்சி ததும்பும் குரலில் கூறி, பாலாஜியின் பாதங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

தம்மெதிரே மண்டியிட்டு வணங்கிய மகாராஷ்டிரத்தின் அந்த மகாவீரனை, கடற்போர் வித்தகனை, இணையிலாச் சிங்கத்தை, ஒல்லியும் பலமற்றவருமான அந்தச் சித்பவன் பிராமணன், பழைய சிப்ளன் உப்பளக் குமாஸ்தா ஏறிட்டு நோக்கினார். அவர் வதனத்தில் பெருமை சுடர்விட்டது. திடகாத்திரமாக, துணிவின் எல்லையாக, காதில் குண்டலமாட இடையில் ஒரு பிச்சுவா செருகிக் கிடக்கக் காட்சியளித்த அந்த மதோன்மத்தனைப் பார்த்து மகிழ்ச்சியுடன் தலையசைத்த பேஷ்வா பாலாஜி விசுவநாத் பெரும் சுமை தனது தலையிலிருந்து இறங்கி விட்டதற்கறிகுறியாகப் பெருமூச்சு விட்டார்.

அவரை வணங்கி எழுந்திருந்த கனோஜி ஆங்கரே கூறினார். ''இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற எனது படைத் தலைவர்களுக்கு இன்று முதல் செய்தியனுப்புகிறேன். அவர்களில் முக்கியமானவர்களை இங்கு வரவழைக்கிறேன்.''

அன்று முதல் பல திக்குகளிலும் தூதர்கள் கனோஜியின் செய்திகளைத் தாங்கிப் பறந்தனர். அடுத்த நான்கைந்து நாட்களில் பல படைத்தலைவர்கள் வால்வானுக்கு வந்தார்கள். இருப்பினும் கனோஜியின் முகத்தில் கவலை தெரித்தது. கவலைக்குக் காரணத்தை விசாரித்தார் பாலாஜி.

''ஒரு படைத்தலைவன் வரவில்லை'' என்றார் கனோஜி.

''யாரவன்?'' என்று வினவினார் பாலாஜி.

''கல்யாண் போரில் வெற்றி கொண்டவன்'' என்றார் கனோஜி.

பேஷ்வாவின் சாம்பல் நிறக் கண்கள் திடீரெனப் பளிச்சிட்டன. அவற்றில் ஏதோ ஓர் ஆவலும் தெரிந்தது.

''அந்தத் தமிழனா?'' என்ற கேள்வியில் அந்த ஆவல் அபரிமிதமாக ஒலித்தது.

அத்தியாயம் 35

நினைப்பும் பதிலும்

அழுத்தமான எண்ணங்களை உள்ளவரும், எந்த உணர்ச்சியையும் வெளிக்குக் காட்டாதவருமான பேஷ்வா பாலாஜி விசுவநாத்தே தமிழனைப்பற்றி ''அந்தத் தமிழனா!'' என்று வினவியதும், குரலில் ஆவலைக் காட்டியதும் சாதாரணமாகக் கனோஜிக்கு வியப்பைத் தந்திருக்குமாயினும் அந்தத் தருணத்தில் அலருக்கு அக் கேள்வி எந்தவித ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை. சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரும்மேந்திர ஸ்வாமியால் கடற்கரையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழன், மகாராஷ்டிர சரித்திரத்தில் ஒரு குறிப்பிடக் கூடிய பாத்திரமாகப் புகுந்து விட்டதாலும், மகாராஷ்டிரப் பெரும் தலைகளோடு மோதி விட்டதாலும், பேஷ்வா பாலாஜி அவனைப்பற்றி அறிந்திருந்ததில் வியப்பில்லை கனோஜிக்கு. ஆனால் எந்த விஷயத்திலும் ஆவலைக் காட்டாத பேஷ்வா, தமிழன் பெயரைக் கேட்டதும் அத்தனை ஆவலைக் காட்டுவானேன் என்று எண்ணினார். ஆகவே கேட்டார் பேஷ்வாவை நோக்கி, ''தமிழனைப் பற்றி உங்களுக்கு ஏற்கனவே தெரியும் போலிருக்கிறது'' என்று.

''ஆம் தெரியும்'' என்றார் பாலாஜி விசுவநாத், வெகு துரிதமாக உணர்ச்சிகளை உள்ளடக்கி, வெகு சாதாரணக் குரலில்.

''எவ்வளவு தூரம் தெரியும்?'' என்று வினவினார் கனோஜி சிரிப்புடன்.

பாலாஜி வெளிப்படையாக ஏதும் சொல்லவில்லை. ''எவ்வளவு தூரம் தெரியவேண்டுமோ அவ்வளவு தூரம் தெரியும்'' என்றார் பதிலுக்கு.

கனோஜி அதற்கு மேல் கேள்வி ஏதும் கேட்கவில்லை யென்றாலும் பாலாஜி விசுவநாத்தே கூறினார், ''எதற்கும் அந்தத் தமிழனையும் கொலாபாவிற்கு வரச்சொல்லி உத்தரவு அனுப்பு'' என்று.

''கொலாபாவில் அவனுக்கு என்ன வேலை? மஹிஷேச்வரி முன்பு கையெழுத்திடப் போவது நீங்களும் நானும்தானே?'' என்று கேட்டார் கனோஜி.

பாலாஜி விசுவநாத் தமது சாம்பல் நிற விழிகளை மெல்ல உயர்த்தினார் கனோஜியை நோக்கி. ''அவனை சீக்கிரம் தமிழகத்துக்கு அனுப்பிட வேண்டும்'' என்றார் சற்று யோசித்த பிறகு.

''ஏன் பேஷ்வா?'' என்ற கனோஜியின் கேள்வியில் வியப்பு அதிகமாக ஒலித்தது.

''அவன் இங்கிருந்தால் மகாராஷ்டிர அரசியலை இன்னும் குட்டை குழப்புவான்'' என்ற பேஷ்வாவின் பதிலில் கவலை ஒலித்தது.

கனோஜியின் பயங்கர விழிகள் நன்றாக மலர்ந்தன. ''இவனா! இந்தச் சாதாரண உபதளபதியா மகாராஷ்டிர அரசியலைக் குழப்புவான்?'' என்று வினவிய அவர் சொற்களில் அதிக வியப்பிருந்தது.

பாலாஜியின் முகத்தில் தீர்க்காலோசனை படர்ந்தது. ''கனோஜி...'' என்று மெல்லத் துவங்கிய பாலாஜி சற்று நிதானித்துவிட்டுக் கூறினார். ''தனி மனிதர்கள் வாழ்வைப் போலத்தான் அரசுகளின் வாழ்வும் யாருக்கும் புரியாத சக்திகளால் ஆட்டிப் படைக்கப்படுகின்றன. எப்படி உணவில் அகப்படும் சிறு துரும்பும் உள்ளே சென்றால் மனிதனைச் சித்திரவதை செய்துவிட முடியுமோ, அப்படியே நாம் நினைக்கும் சர்வ சாதாரண மனிதர்களும் அரசியலில் நுழைந்து அரசுகளைத் திக்குமுக்காட வைத்துவிட முடியும். அத்தகைய மனிதர்கள் ஏன்

வருகிறார்கள். ஏன் அரசியலில் புகுந்து விடுகிறார்கள், எப்படி விடுபடுகிறார்கள் என்பது யாருக்கும் புரிவதில்லை. மகாராஷ்டிர வாரிசுப் போருக்கும் இந்த மனிதனுக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை. இருப்பினும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டு இவன் இங்கு வந்திருக்கிறான். இவன் வரவால் பிரும்மேந்திர சுவாமியிலிருந்து, ராணி தாராபாய், ஷாஹூ அனைவருக்கும் கவலை ஏற்பட்டிருக்கிறது. இவன் காலம் அனுப்பிய தூதன். அதுவும் மிக வைராக்கிய முள்ளவன் என்றும் கேள்வி. மகாராஷ்டிரத்தின் கடைசி வாரிசைக் காணாமல் போகாமாட்டான். ஆகையால் அவனை சாதாரண உபதளபதி என்று புறக்கணிப்பதற் கில்லை.''

பாலாஜி இந்த இடத்தில் தமது பேச்சை சற்று நிறுத்தினார். கனோஜி தீவிர சிந்தனையின் வசப்பட்டார். கடைசியாக மெல்லச் சொன்னார், ''தஞ்சையிலிருந்து மகாராஜா ராஜாராமின் செல்வனைக் கொண்டு வந்தவன் இப்பொழுது தமிழனிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கி றான்'' என்று.

பாலாஜியின் கவலை அதிகமாயிற்று. ''அவன் ஒரு வேளை உண்மையை உளறி விடுவானோ?'' என்று வினவினார் குரலில் கவலை தெரிய.

''மாட்டான்.''

''ஏன்?''

''கல்யாண் போரில் அவன் பெருங் காயங்களடைந்து மரணப் படுக்கையிலிருக்கிறான்.''

''மயக்கமடைந்த நிலையில் ஏதாவது அவன் உளறலாம்.''

''முடியாது.''

''ஏன்?''

''அவன் பக்கத்தில் ஒரு பிரிட்டிஷ் நர்ஸ் இருக்கிறாள். யாரையும் அவன் பக்கத்தில் அண்டவிட மாட்டாள்.''

இதைக் கேட்டதும் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் பேஷ்வா. ''சரி, எதற்கும் தமிழனைக் கொலாபாவுக்கு வரச்சொல்லி உத்தரவு அனுப்புங்கள்'' என்றார்.

''அவன் வர மறுத்தால்?'' என்று கேட்டார் கனோஜி.

''கைது செய்து அழைத்து வரச் செய்யுங்கள்'' என்றார் பாலாஜி.

கனோஜி ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலை யசைத்தார். அவர் இதழ்களில் குறுநகை படர்ந்தது. அதற்குக் காரணம் பாலாஜி விசுவநாத்துக்குப் புரிந்திருந் தாலும் அதை அவர் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. 'இதயசந்திரனையாவது கைது செய்வதாவது? கல்யாண் நகரில் பிங்களேயை வெற்றி கொண்டவனைச் சிறை செய்தால் படைவீரர் நகைப்பார்கள். மகாராஷ்டிரமும் நகைக்கும்' என்று உள்ளூர நகைத்துக் கொண்டார் கனோஜி.

இந்த உரையாடல் நடந்த பதினைந்தாவது நாள் அதாவது 1714-வது ஆண்டு பிப்ரவரி 8-ந் தேதி கொலாபா வில் மகாராஷ்டிர மன்னர் ஷாஹுவுக்கும் கனோஜி ஆங்கரேக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. மன்னர் சார்பில் பேஷ்வாவும், ஆங்கரே தனது சார்பிலும் கையெழுத்துப் பொறித்த பிறகு அந்த ஒப்பந்தம் மஹிஷேச்வரியான குலாபியின் பாதங்களில் வைக்கப் பட்டது. கொலாபாவே அன்று மங்கலக் கோலம் பூண்டிருந்தது.

ஒப்பந்தத்தின் விளைவாகச் சிறைப்பட்டிருந்த மன்னர் வீரர்களும் விடுதலை செய்யப்பட்டிருந்தபடியாலும், அந்தப் படை வீரரில் ஆயிரம் பேரை பேஷ்வா அழைத்து வீந்திருந்த படியாலும், அந்த வீரர்களுடன் கனோஜியின் வரர்களும் மாலுமிகளும் கலந்து கொண்டு பலபடி அணிவகுப்பைச் செய்திருந்தபடியாலும், பெரிய போர்

அரணாகக் காட்சியளித்தது கொலாபா. எங்கும் வீரர்கள் ஆயுதங்களைத் தாங்கிக் காவல் புரிந்தனர். மாலுமிகள் படகுகளில் தங்கள் மரக் கலங்களுக்குப் போய்க் கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள்.

கொலாபாவில் கனோஜியின் இருப்பிடமான தோர்லா வாடாவில் அலங்காரம் மிகப் பலமாயிருந்தது. பெரிய மாவிலைத் தோரணங்களும் நவ்ரங் கோலங்களும் தோர்லா வாடாவின் வாயிற்புரத்தை அலங்கரித்தன. வாயிலில் நின்றிருந்த மாலுமிகளும், வீரர்களும் புத்தாடையணிந்து உருவிய வாள்களுடன் நின்றிருந்தார்கள். தோர்லாவாடா விலிருந்து குலாபி கோயிலுக்குப் போகும் வழியில் நீள வண்ணக் கோலங்கள் போடப்பட்டிருந்தன. அந்த வழியின் முடிவிலிருந்த குலாபியின் கோயிலுக்கு லட்ச தீபம் போட்டிருந்தார்கள். கையெழுத்தான ஒப்பந்தம் குலாபியின் காலடியில் வைக்கப்பட்டது. காலை வேளை யாகையால் தீபங்கள் எரியாவிட்டாலும் அவை வைக்கப் பட்டிருந்ததே பேரழகைக் கொடுத்தது பராசக்தியின் கோயிலுக்கு. கோயிலின் வாயிற்படியிலிருந்து உள்ளே கர்ப்பக்கிரகம்வரை கனோஜியின் உத்தரவின் மேல், முத்தினாலும் பவளத்தினாலும் கோலங்களைப் போட் டிருந்தார்கள். காலை மஞ்சள்வெயிலில் பிரகாசித்த அந்த முத்து பவள கோலத்தின் ஒளி அம்பாளின் அருள் விழி களின் நோக்கினால் யாரும் காணற்கரிய ஒரு புதுச் சோபையையும் அன்று பெற்றிருந்தது. கோலந் நிட்டிய பருவப் பெண்கள் கோலத்தின் இருபுறங்களிலும் அதைக் காத்து நின்றனர்.

அன்று அந்தப் பெரும் நிகழ்ச்சியின் காரணமாக கொலாபாவிலிருந்த பந்தய ஆடுகள், கோழிகள் இவற்றுக் கும் ஸ்நானம் செய்வித்து மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு இருந்தார்கள். காலை ஆரம்ப ஜாமத்திலேயே அபிஷேக ஆராதனை துவங்கிவிட்டதன் காரணமாக எழுந்த சங்குகள் ஒலிகளாலும் இதர வாத்திய ஒலிகளாலும்

கொலாபா பரிசுத்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. கடைசித் திருமஞ்சனம் சரியாக உச்சி வேளைக்கு நடக்கு மென்று அர்ச்சகர் செய்தி அனுப்பியிருந்ததால் அந்த வேளைக்கு ஒரு நாழிகை முன்னதாக கனோஜி பேஷ்வா வுடன் தோர்லாவாடாவிலிருந்து புறப்பட்டார். வீரர்கள் முன்னும் பின்னும் உருவிய வாட்களுடன் அணிவகுத்து வர பேஷ்வாவுடன் அம்பாள் கோயிலை அடைந்த கனோஜி பேஷ்வாவை முன்னால் விட்டுத் தாம் பின்னால் சென்றார்.

வாயிலிலிருந்தபடியே பேஷ்வா பாலாஜி விசுவநாத் கண்களைச் சிறிது நேரம் மூடிப் பராசக்தியைத் தியானித் தார். பிறகு முத்து பவள கோலத்தைக் காத்திருந்த யுவதி களைச் சுற்றிச் சென்று கர்ப்பக்கிரகத்தை அடைந்தார். குலாபியை அவரது சாம்பல்நிறக் கண்கள் ஏறெடுத்து நோக்கின. அன்று குலாபியின் அலங்காரம் கண்ணைப் பறித்தது. சிவந்த ஆடையும் சிவந்த புஷ்பங்களும் பரா சக்தியின் தேகத்தை மறைத்திருந்தன. கழுத்திலிருந்த ஓர் ஆபரணத்தின் சிவப்புக்கல் கர்ப்பக்கிரக விளக்கில் நெருப்புத் துண்டம் போல் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவள் மூக்கிலிருந்த வைரத்தில் யாரோ சுடர் ஏற்றி வைத்திருந்தார்கள்! இல்லையில்லை, சுடர் இல்லை அது. அந்த மூக்குத்தியின் ஒற்றை வைரம் விளக்கொளியில் அளிக்கும் பிரமை அது! அவள் கிரீடம்? அது கிரீடமா, ஆகாயமா? அதிலிருப்பவை நட்சத்திரங்களா, வைரக் கற்களா?

பிரமிப்பாயிருந்த இந்த அலங்காரத்தில் மனத்தைப் பறிகொடுத்த பேஷ்வா, மெல்ல மெல்ல சியாமளா தண்ட கத்தை முணுமுணுக்கலானார். அர்ச்சகர் சற்றே திரை யிட்டு அம்பாள் கிரீடத்தை மட்டும் எடுத்துவிட்டு அபிஷேக ஆடை அணிவகுத்துத் திரையைத் திறந்து அபிஷேகத்தைத் துவங்கினார்.

தைலகாப்பு, சந்தனக் காப்புகளுக்குப் பிறகு பால், தேன் அபிஷேகங்கள் நடந்தன. சுமார் அரை ஜாமம் அபிஷேகம் நடந்து மீண்டும் திரையிடப்பட்டு அலங்காரம் முடிந்தபின் அர்ச்சகர் திரையை விலக்கி ஆரத்தி எடுத்தார். தூர்ய வாத்தியங்கள் முழங்கின! சங்குகள் ஒலித்தன. பேஷ்வாவும் கனோஜியும் ஆரத்தியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். பிறகு கனோஜி ஒப்பந்தத்தை ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து பேஷ்வாவிடம் கொடுக்க பேஷ்வா அதை வாங்கி அர்ச்சகரிடம் நீட்டினார். அர்ச்சகர் அந்த ஒப்பந்தப் பேழையை அம்பாளின் அடிகளில் வைத்து அம்பாளுக்குக் குங்கும அர்ச்சனை செய்தார். முடிவில் கற்பூர ஆரத்திக்குப் பின் தேவி பிரசாதத்துடன் பேழை பேஷ்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

குலாபியின் அருளால் மகாராஷ்டிரம் பலனடையட்டும் என்றும் ஆசி கூறி அர்ச்சகர் பேழையை நீட்டினார் பேஷ்வாவிடம். பேஷ்வா பேழையை வாங்கிக்கொண்டு கனோஜியுடன் தோர்லாவாடா திரும்பினார். அவ் விருவருக்கும் மங்கள ஆரத்தி தயாராயிருந்தது தோர்லாவாடாவின் வாயிலில். ஆரத்தித் தட்டை இரு பெண்கள் ஏந்தி வந்தார்கள். அதிலொருத்தியைப் பார்த்ததும் கனோஜிக்கு அதுவரை இருந்த ஆனந்தமெல் லாம் எங்கோ பறந்தது. இரு பெண்களில் ஒருத்தி மஞ்சு. அவள் முகத்தில் மகிழ்ச்சியில்லை. காரணம் கனோஜிக்குப் புரிந்ததால் அவர் முகத்திலும் மகிழ்ச்சி மடிந்தது. குலாபியை நினைத்தார் மனத்தில். ''குலாபி! இவள் கதி என்ன?'' என்றும் வினவினார் உள்ளுர. பதில் அங்கு விளையவில்லை. விளைந்த இடம் கல்யாண்! விளைந்த முறை விசித்திரம்.

அத்தியாயம் 36

உருண்ட சகடங்கள்

மதிவதனத்தில் மகிழ்ச்சி குலைந்து துன்பம் தோய்ந்து கிடக்க, சதா சிரிப்புத் தவழும் சிவந்த அதரங்கள் உட்புறம் மடிந்து துடித்திருக்க, மங்கல ஆரத்தி எடுத்த மஞ்சுவை ஒரே விநாடி நோக்கிய கனோஜியின் பெரு விழிகளிலும் துன்பச் சாயல் படர்ந்ததென்றாலும், உள்ளூரத் துன்பச் சுமை பெரிதும் ஏறியதென்றாலும், அவையெதையும் அவர் அதிகமாக வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் பேஷ்வாவுடன் தோர்லாவாடாவுக்குச் சென்றார். அங்கு பேஷ்வாவின் தனியறையில் அவருடன் தனித்திருக்கும்போது அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவும் நினைத்தார் ஷாஹு காரிய துரந்தரமான கனோஜி ஆங்கரே. ஆனால் எதிலும் யாரையும் முந்திக்கொள்ளும் பாலாஜி விசுவநாத் இந்த விஷயத்திலும் முந்திக்கொண்டு, ''கனோஜி, சற்று முன்பு ஆரத்தி எடுத்த இரு பெண்களில் சற்று உயரமாயிருந்தாளே அவள்தானே உன் வளர்ப்புப் பெண்?'' என்று வினவினார்.

கனோஜி வியப்பைக் காட்டினார் ஒரு கணம். பிறகு சர்வ சாதாரணமாக, ''ஆம்'' என்று கொட்டினார்.

''ஜலதீபம் என்ற உன் கப்பலின் தலைவி அவள் தானே'' என்று இன்னொரு கேள்வியும் வீசினார் பாலாஜி.

''ஜலதீபத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினார் கனோஜி.

''ஜலதீபம், மஞ்சு, தமிழன் இந்த மூன்று பெயர்களை அறியாதவன் இன்று மகாராஷ்டிரத்தில் கிடையாது'' என்ற பாலாஜி, ''ஆமாம், உன் மருமகப் பிள்ளையைக் கோலாபாவுக்கு வரச்சொல்லி உத்தரவிடச் சொன்னேனே, வந்தானா அவன்?'' என்றும் கேட்டார்.

கனோஜி அசைவற்று நின்றார் பல வினாடிகள். பிறகு கேட்டார், ''என் மருமகப் பிள்ளையா?'' என்று.

''ஆமாம்.''

''யாரவன்?''

''அந்தத் தமிழன்.''

''அவன்...''

''மஞ்சுவின் கணவன். அவர்களிருவர் உறவும் பிரசித்தம். இன்று மங்கல ஆரத்தி எடுத்தவள் கழுத்தில் மங்கல சூத்ரம் இருக்கிறது.''

''இந்தக் கடைசி வார்த்தைகளைச் சர்வ சாதாரணமாகவும் மிக அனாயாசமாகவும் சொன்னார் பாலாஜி. கனோஜி அதை ஆமோதிக்கும் பாவனையில் தலையை அசைத்து விட்டுச் சொன்னார், ''அவள் விஷயம் எனக்குக் கவலையாயிருக்கிறது'' என்று.

''எதற்குக் கவலை?''

''தமிழன் இவள் கணவன்.''

''ஆம்.''

''அவன் பிடிவாதக்காரன்.''

''அதனால்!''

''மகாராஷ்டிரத்துக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டு வந்தானோ அதை நிறைவேற்றாமல் இருக்கமாட்டான். அதற்கு அவனுக்குத் தக்க வாய்ப்பு இருக்கிறது. அவனிடம் நிம்கர் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான்'' என்று கூறிய கனோஜி முதன்முதலாக அந்த முகவெட்டு வீரனின் பெயரையும் உச்சரித்தார்.

பாலாஜி சிந்தனையில் ஆழ்ந்தார். சிறிது நேரத் திற்குப் பிறகு, ''அவன்தான் மரண காயத்திலிருப்பதாகச் சொன்னார்களே'' என்று கேட்டார்.

''ஆம், ஆனால் எந்தக் காயத்தையும் ஆற்ற எமிலி இருக்கிறாள்'' என்றார் கனோஜி.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக பாலாஜி விசுவநாத் தலையசைத்தார். பிறகு, ''நிம்கர் பிழைக்க மார்க்கமிருக்கிறதா?'' என்றும் கேட்டார்.

''இருக்கிறது என்று நினைக்கிறேன்.''

''இருந்தால் தமிழன் விடமாட்டான் அவனை?''

''விடமாட்டான்.''

''இதற்கு மாற்று என்ன?'' என்று ஒரு கேள்வியைத் தொடுத்தார் பாலாஜி.

''இதயசந்திரனைச் சிறை செய்யலாம், முடிந்தால்?'' என்றார் கனோஜி.

''அவனுக்கு ஓர் உபதலைவன் இருக்கிறானல்லவா கல்யாண் நகரில்?'' என்று கேட்டார் பாலாஜி.

''இருக்கிறான். சுகாஜி என்று பெயர்.''

''தமிழனைச் சிறை செய்து அழைத்து வருமாறு அவனுக்குச் செய்தி அனுப்புங்கள்.''

''சரி அனுப்புகிறேன்'' என்று ஒப்புக் கொண்டார் கனோஜி.

ஆனால் அதே மாலையில் கல்யாண் நகரின் மருத்துவ மனையில் இவர்கள் எண்ணத்துக்கு நேர்மாறான நிகழ்ச்சி விளைந்து கொண்டிருந்தது. கனோஜியின் ஒற்றனான அந்த முகவெட்டு வீரன், படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு மிஸ் எமிலி கொடுத்த மருந்தை உறிஞ்சிக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே இதயசந்திரன் பூர்ண பயண உடை அணிந்து நின்றுகொண்டிருந்தான். மருந்தை முகவெட்டு வீரன் உறிஞ்சி முடித்ததும்,

''இன்றிரவு முதல் ஜாமம் முடிந்ததும் நாம் பயணப்படுகிறோம்'' என்று கூறினான் தமிழன் வரண்டு கிடந்த குரலில்.

இதற்கு அந்த வீரன் பதில் சொல்லவில்லை. எமிலி பதில் கூறினாள், ''இன்னும் பயணத்திற்கு இவர் தகுதியான நிலையில் இல்லையென்று உங்களிடம் ஏற்கனவே கூறியிருக்கிறேன்'' என்று. அவள் குரலில் அதிகாரம் இருந்தது.

இதயசந்திரன் எமிலியை ஏறெடுத்து நோக்கினான். ''எமிலி! இன்னும் என்னைச் சோதிக்காதே. உன் வார்த்தையைப் பதினைந்து நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றும் கூறினான் கெஞ்சும் குரலில்.

''நாட்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நோயாளியின் நிலை பற்றித்தான் கவலை'' என்றாள் எமிலி அவனை ஏறெடுத்து நோக்கி.

''இவனுக்கு நோயொன்றுமில்லை'' என்று வந்தது இதயசந்திரனின் பதில்.

''அதை நிர்ணயிக்க வேண்டியது நான்'' என்ற எமிலி, ''இவர் தேகத்தில் ரத்தம் பெரிதும் குறைந்திருக்கிறது. அரைக் காதம் பயணம் செய்தால் மீண்டும் மயக்கமாகி விடுவார்'' என்றும் சுட்டிக்காட்டினாள்.

இதயசந்திரன் அவளைச் சுட்டு விடுவதுபோல் பார்த்தான். ''தஞ்சையில் ஒரு தாய் தன் மகனுக்காக ஏங்கிக் கிடக்கிறாள் தெரியுமா உனக்கு?'' என்றும் கேட்டான்.

''காதில் விழுந்திருக்கிறது அந்தக் கதை. நீங்கள் மகாராஷ்டிரம் வந்த காரணமும் தெரிந்திருக்கிறது எனக்கு. ஆனால் ஒன்று, ஆயிரம் தாய்மார்கள் மகன்

களுக்காக ஏங்கிக் கிடந்தாலும் எந்த நோயாளியையும் அவர்களுக்காகச் சாக விடமாட்டேன்'' என்றாள் எமிலி.

''இதுதான் உன் முடிவா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''ஆம்'' என்றாள் எமிலி.

இதயசந்திரன் பதிலேதும் சொல்லாமல் வெளியே சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் தடதடவென நான்கு வீரர்கள் பின் தொடர உள்ளே நுழைந்த இதய சந்திரன், ''இவனைத் தூக்கிக்கொண்டு போய் வண்டியில் படுக்க வையுங்கள்'' என்று உத்தரவிட்டான். நான்கு வீரரும் அவனைத் தூக்கிக்கொண்டு சென்ற பின் எமிலியை அணுக இரண்டடி எடுத்து வைத்த தமிழனை, ''அப்படியே நில்லுங்கள்'' என்று எட்டவே நிற்க வைத்த எமிலி, ''புனிதமான இந்த ஆஸ்பத்திரியின் விதிகளை மீறுகிறீர்கள். உங்களை ஆண்டவன் காப்பாற்றட்டும்'' என்றாள். அவள் முகம் கல்லாயிருந்தது. அதில் சுரணை திடீரென்று அற்றுப்போய் விட்டதாகத் தோன்றியது இதயசந்திரனுக்கு. ஏதோ வெள்ளை உடையணிந்த தேவதை நிற்பதுபோல் அவள் நின்றிருந்தாள் அந்த அறையின் விளக்கொளியில்.

''எமிலி! உன் பிடிவாதம் இப்படிச் செய்யத் தூண்டுகிறது என்னை. அவன் நிலையைவிட என் நிலை மோசமானது. மிஞ்சினால் அவன் மரணமடைவான். நானோ எந்தக் கணத்திலும் சிறை செய்யப்படலாம் கனோஜியால். ராணுவ கட்டளைகளை மீறிவிட்டேன்'' என்ற இதய சந்திரன் சற்று பேச்சை நிறுத்தி மீண்டும் சொன்னான்: ''நான் இறப்பதைப் பற்றி என்றுமே கவலைப் பட்டதில்லை எமிலி! ஆனால் நான் தமிழகத்தில் ஒரு பெண்ணிடம் வைத்து வந்த ஆணையிருக்கிறது. அதை நிறைவேற்றாமல் சாக இஷ்டமில்லை. ஒன்று மட்டும்

உனக்கு உறுதி கூறுகிறேன். இவனைக் கூடிய மட்டும் புரவியேற விடாமல் வண்டியில் சௌகரியமாக அழைத்துச் செல்கிறேன். முடிந்த வரை காலா காலத்தில் உணவு, பிராந்தி முதலியவற்றையும் நீ கொடுக்கும் மருந்தையும் கொடுக்கிறேன். ஒரு குழந்தையைக் காப்பது போல் இவனையும் காப்பாற்றுகிறேன். அப்படி ஒருவேளை என் உபசாரங்களையும் மீறி இவன் இறந்தால் என் பணி முடிந்தபின்பு நான் மீண்டும் இங்கு வருகிறேன். என்னைச் சிறை செய்து நீயே ஒப்படைத்து விடு கனோஜியிடம்'' என்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டு எமிலி பதில் சொல்லவில்லை. அசையாமல் அடுத்த அறை சென்று இரண்டு குப்பிகளைக் கொண்டு வந்தாள். ''இது மருந்து, இது பிராந்தி. சாப்பிடும் முறை அவருக்குத் தெரியும்'' என்று கூறிக் குப்பிகளை எதிரேயிருந்த மேஜை மீது வைத்தாள்.

அவற்றை இதயசந்திரன், கையில் எடுத்துக் கொள்ளவில்லை. மேஜையைச் சுற்றி வந்து எமிலியைப் பிடிக்கப் போனான், இம்முறை எமிலி நகரவில்லை. அவனைத் தடுக்கவுமில்லை, சிலை போல் நின்றாள். அவளை இதயசந்திரன் இறுகத் தழுவினான். ஆனால், அவள் உடல் மரக்கட்டையாக இருந்தது. அந்த உடம்பில் உணர்ச்சிகள் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை அவளுக்கு. அவள் நிலை பெருவியப்பாக இருக்கவே பிரமை பிடித்து நின்ற அவள் பூவுடலைத் தழுவிய தன் கைகளை அகற்றினான். சென்ற பதினைந்து நாட்களிலும் அவள் ஆஸ்பத்திரி அலுவல் போக மீதி சமயங்களில் தனக்களித்த இன்பத்தையெல்லாம் எண்ணிப் பார்த்த இதயசந்திரன், 'ஒரே நாளில் இவள் எப்படி இத்தனை தூரம் மாறினாள்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

மிஸ் எமிலியின் கண்களை அவன் நன்றாக ஏறெடுத்து நோக்கினான். அவள் அழகிய உதடுகள் மெல்ல

அசைந்தன. ''என் உடல் இனி நோயாளிகளின் பணிக்காக ஏற்பட்டது வீரரே. நம்மிருவர் வாழ்க்கைக் கப்பல்கள் ஏதோ விதியை முன்னிட்டுச் சிறிது காலம் கூடின. இனிப் பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. செல்லுங்கள்'' என்றாள் மிக மெதுவாக, உறுதியாக.

''எமிலி! எமிலி!'' என்று நாத் தழுதழுக்க அழைத்தான் இதயசந்திரன்.

எமிலி அவனை நோக்கிக் கூறினாள், ''உங்கள் ஆணையை நிறைவேற்ற நீங்கள் சொல்லுங்கள். என் ஆணையும் நிறைவேறும்'' என்று.

''உன் ஆணையா?''

''ஆம். முன்பே கூறினேனே, நீங்கள் மஞ்சுவிடம் திரும்பும்போது நான் அங்கிருக்கமாட்டேன் என்று.''

''ஆம், சொன்னாய் எமிலி.''

''அது உண்மையாகட்டும். செல்லுங்கள் அவளிடம்'' என்றாள் எமிலி.

''உயிருந்தால் செல்வேன்'' என்றான் இதயசந்திரன்.

மிஸ் எமிலி புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். இதயசந்திரன் அவளை நீண்ட நேரம் நோக்கிக்கொண்டே நின்றான். பிறகு மேஜை மீதிருந்த இரு குப்பிகளையும் கையில் எடுத்துக்கொண்டு வாயிற்படியைத் தாண்டிச் சென்றான். வாயிலிலிருந்த வண்ணம் மீண்டும் அவளை ஒரு முறை நோக்கினான். அதே அறையில் விளக்கொளியில் அவள் வெள்ளை வெளேரென நின்றிருந்தாள் ஆடாமல் அசையாமல், சிலைபோல. சில விநாடிகளே அவளை நோக்கிய இதய சந்திரன், ''விடு வண்டியை'' என்று ஆணையிட்டுத் தனது பார்வையை ஓட்டினான்.

அறையிலிருந்த வெள்ளைச் சிலையாள் அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்றாள். அதுவரை சலனமற்ற கண்களில் மெல்ல மெல்ல நீர் திரண்டு இரு கன்னங்களிலும், ஒற்றைக் கோடாக வழிந்தோடியது. அப்பொழுதும் எமிலி அசையவில்லை. குலுங்கி அழவுமில்லை. உதடுகள் மட்டும் லேசாக இருமுறை உள்நோக்கி மடிந்து மீண்டும் முன் வந்து லேசாகத் துடித்தன. வெளியே வண்டியின் சகடங்கள் உருண்டோடும் ஒலி கேட்டது. அவை தனது வாழ்க்கையின் சகடங்கள் என்பதை உணர்ந்தாள் எமிலி.

அத்தியாயம் 37

சமுத்திரம் முழங்கால்...

தன்னிடம் கொள்ளை ஆசை வைத்திருந்த மிஸ் எமிலி மனம் முறிந்து வெள்ளைச் சிலையென ஆடாமல் அசையாமல் மருத்துவமனைக்குள் நின்றுவிட்டதை வெளியே வந்தபின்பு பார்த்த இதயசந்திரன் மனமும் வெடித்துவிடும் நிலையிலிருந்ததென்றாலும், கடமையை முன்னிட்டு அவன் இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு கையிலிருந்த குப்பிகளிரண்டையும் தனது புரவியின் பக்கவாட்டில் தொங்கிய தோல் பையில் அடைத்துவிட்டு, ''விடு வண்டியை'' என்று உத்தரவிட்டுத் தனது புரவியையும் தட்டிவிட்டான்.

வண்டி பல தெருக்களைக் கடந்து கல்யாண் நகரின் தலைமைத் தளத்துக்கு வந்ததும் அங்கிருந்த சுகாஜியை அழைத்து வரச்சொல்லி, 'சுகாஜி, நான் இவனை அழைத்துப் போகிறேன். இங்குள்ள படைகளுக்கு நீ தலைமை வகித்திரு. ஸார்கேலின் உத்தரவு எப்படியோ அப்படியே நடந்து கொள்'' என்று கூறினான்.

இந்த விபரீத உத்தரவைக் கேட்ட சுகாஜியின் முகத்தில் மிதமிஞ்சிய வியப்பு மண்டியது. ''இங்குள்ள படைகளுக்கு நான் தலைமை வகிப்பதா!'' என்ற அவன் கேள்வியில் வியப்பு மட்டுமின்றி, சற்றுக் கிலியும் ஒலித்தது.

அந்த இரண்டையும் கவனிக்கத் தவறாத இதய சந்திரன், ''சுகாஜி இதில் வியப்புக்குக் காரணமில்லை. படைத்தலைவன் இல்லாத காலத்தில் உப தலைவன் படைகளை நடத்துவது ராணுவ அமைப்பு விதிகளுக்குப் புறம்பானதல்ல'' என்று சர்வ சகஜமாகச் சுட்டிக் காட்டினான்.

இருப்பினும் சுகாஜியின் கிலி அகலாததால், ''உபதளபதியவர்கள் சொல்வது, போரிடும் சமயத்தில் பொருந்தும். படைத்தலைவன் காயப்பட்டோ, இறந்தோ விழுந்துவிட்டால் உடனடியாக அதற்கடுத்தவன் தலைமை யேற்றுப் படைகளை நடத்துவதுண்டு. அதற்கு இப்பொழுது சந்தர்ப்பமேதும் இருப்பதாகத் தெரியவில்லையே'' என்று தெரிவித்தான்.

சுகாஜியைப் பேச்சால் ஏமாற்ற முடியாதென்பதைப் புரிந்துகொண்ட இதயசந்திரன், ''சுகாஜி! நான் அவசர வேலையாக இந்தக் கைதியைக் கொலாபாவுக்குக் கொண்டு போகவேண்டியிருக்கிறது. ஆகவே, நீ இங்குள்ள படைகளைக் கவனித்துக்கொள். கொலாபாவிலிருந்து செய்தி அனுப்புகிறேன். அதன்படி நடந்துகொள்'' என்று கூறிவிட்டு, தன்னுடன் மருத்துவமனைக்கு வந்த வீரர்களை நோக்கி, ''நீங்கள் யாரும் அவசியமில்லை, வண்டியைச் செலுத்தும் வீரன் மட்டும் வந்தால் போதும்'' என்று உத்தரவிட்டான்.

சுகாஜி பிரமித்தான். உபதளபதி எதற்காகத் துணைக்குக்கூட வீரர்களை அழைத்துச் செல்ல மறுக்கிறார் என்பது அவனுக்குப் புரியவில்லை. இருப்பினும் அதைக் கேட்பதால் பயனில்லை என்று உணர்ந்து கொண்டதால் தலைவணங்கி, ''உத்தரவு'' என்றான்.

அதற்குமேல் அங்கு தாமதிக்காத இதயசந்திரன் வண்டியை விடச்சொல்லி அதன் பின்னால் தனது புரவியை நடத்தினான். வண்டி கல்யாண் நகரைத் தாண்டி கால் காத தூரம் வந்ததும் வண்டியோட்டிய வீரனை விளித்த இதயசந்திரன், ''உனக்கு வண்டியைச் செலுத்தக் களைப்பாயிருக்கிறதா?'' என்று வினவினான்.

''இல்லை, உபதளபதி'' என்றான் வீரன்.

''இருக்கிறது'' என்று வலியுறுத்தினான் இதய சந்திரன்.

''இல்லை. சிறிதளவும் களைப்பில்லை.''

''உபதளபதியின் கருத்தை எதிர்த்துப் பேசுவது ராணுவ விதிகளுக்குப் புறம்பானது'' என்றான் இதய சந்திரன் சற்றுக் கடுமையாக.

வண்டியோட்டிய வீரன் விழித்தான். ''உபதளபதி...'' என்று துவங்கவும் செய்தான்.

''பேசாதே. . வண்டியைவிட்டு இறங்கு'' என்று கட்டளையிட்டான் இதயசந்திரன்.

பிரமிப்பு உச்சநிலையை அடையவே வண்டியை நிறுத்திக் கீழே குதித்த வீரன், ''இனி என்ன செய்ய வேண்டும் பிரபு?'' என்று வினவினான்.

''திரும்பக் கல்யாண் நகருக்குப் போ'' என்று கூறிய தமிழன், புரவியிலிருந்து கீழே குதித்து அதன் சேணத்தை வண்டியின் பின்புறத்தில் கட்டிவிட்டுத் தான் ஏறி, சாரதி ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டு, வண்டிப் புரவியைச் சாட்டையால் தட்ட, வண்டி வேகமாகச் செல்லத் தொடங்கியது.

வண்டியிலிருந்து இறக்கப்பட்ட சாரதி வண்டி போவதைப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான். உபதளபதி எதற்காகத் தன்னை இறக்கிவிட்டுப் போகிறார் என்பது புரியவில்லையாதலால், அவன் சர்வ உணர்ச்சிகளும் அடங்கப் பல நிமிடங்கள் நின்றிருந்துவிட்டுக் கல்யாண் நகரை நோக்கித் திரும்பினான்.

ஆனால் இப்படி எல்லா வீரர்களையும் நீக்கிவிட்டுத் தன்னைத் தன்னந்தனியாக இதயசந்திரன் ஏன் அழைத்துப் போகிறான் என்பதை வண்டியில் படுத்திருந்த முகவெட்டு வீரனான நிம்கர் சந்தேகமற உணர்ந்து கொண்டதால் அவன் கடை இதழ்களில் சோகப் புன்முறுவலொன்று படர்ந்தது. தன்னிடமிருந்து தஞ்சை இளவலின் ரகசியத்

தைப் பறிக்க இதயசந்திரன் செய்யும் கடைசி முயற்சி அது என்பதையும் புரிந்துகொண்ட நிம்கர் சற்று லேசாக நகைக்கவும் செய்தான்.

அந்த நகைப்பு இதயசந்திரன் காதில் விழவில்லை. அவன் மனம் மிஸ் எமிலியையும் அவள் இணையில்லாத தியாகத்தையும் பற்றி நினைத்துத் துன்பத்தில் தோய்ந்திருந்தது. அப்பொழுது அவன் மனக் கண்ணில் மருத்துவமனையில் கடைசியாகக் கண்ட வெள்ளைச்சிலை எழுந்து நின்றது. கருணை துலங்கிய அதன் விழிகள் அப்பொழுதும் அவனை உற்றுப் பார்த்தன. 'இதே மாதிரி ஒரு புரவி வண்டியில்தான்— இதேமாதிரிக் காட்டு வழியில்தான்— அவளும் படையுடன் வந்தாள். வண்டியை அவிழ்த்துவிட்ட அந்த இரவில் வண்டிக்குள் தலையை நுழைத்ததும் எத்தனை ஆசையுடன் என் கழுத்தைத் தழுவினாள் அவள்! எத்தனை இன்பத்தை அளித்தாள்!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். 'அத்தகைய எமிலிக்குத் தன்னைவிட்டு மருத்துவமனையைப் பற்றிக் கொள்ளும் ஆற்றல் எப்படி வந்தது?' என்றும் கேள்வியை எழுப்பினான். தன்னைக் காப்பாற்ற கவர்னர் ஏஸ்லாபியால் அனுப்பப்பட்டவளும், அபவாதத்துக்கு ஆளானவளும், தூய்மையானவளுமான, எமிலிக்கு இணை எமிலிதானென்பதை மீண்டும் மீண்டும் மனப்பாடம் செய்வதுபோல் மனத்துக்குள் சொல்லிக்கொண்டான் தமிழன். மஞ்சு மட்டும் முன்னதாகத் தன் மனத்தை ஆக்ரமிக்காமலிருந்திருந்தால் நிச்சயமாக எமிலிதான் அந்த இடத்தைப் பிடித்திருப்பாளென்பதும் சந்தேகமறப் புரிந்தது அவனுக்கு. 'மிஸ் எமிலியைப் போன்றவர் வெகு சிலர். அவர்களுக்கு எந்த மானிடனும் தகுந்தவனல்ல. ஆகையால்தான் அவர்கள் ஏழைகளுக்கு உதவும் தெய்வீகப் பணியில் ஈடுபடுகிறார்கள்' என்றும் உள்ளூர எண்ணினான் இதயசந்திரன். அத்துடன் மகாராஷ்டிரம் வந்தது முதல் தன்மீது மோதிய சம்பவங்களெல்லாம் அவன் மனத்தில்

எழுந்தன. ஆனால் முகவெட்டு வீரனுடன் தான் துவங்கி யுள்ள இந்தப் பயணம் மகாராஷ்டிரத்தில் தனது கடைசிப் பயணம் என்பதும் சந்தேகமறப் புரிந்தது அவனுக்கு. அதை வாய்விட்டும் சொன்னான், ''இதுதான் கடைசிப் பயணம்'' என்று.

வண்டியின் மெத்தென்ற சயனத்தில் படுத்திருந்த நிம்கருக்கு இதயசந்திரனின் வார்த்தைகள் நன்றாகக் காதில் விழுந்தன. ''எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டு நகைக்கவும் செய்தான்.

புரவியின் லகானைப் பிடித்து வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த இதயசந்திரன் திரும்பி நிம்கரைப் பார்த்தான். ''நிச்சயமாகச் சொல்ல முடியும்'' என்றும் கூறினான்.

''நிச்சயம் முடியும் என்பது நம்மிருவர் வாழ்க்கையி லும் இல்லை'' என்றார் நிம்கர்.

''இப்பொழுது உண்டு.''

''இப்பொழுதா?''

''ஆம். உன்னைத் தேடித்தான் நான் மகாராஷ்டிரம் வந்தேன். உன்னைத் தேடித்தான் கனோஜியிடம் சேர்ந்தேன். பிரும்மேந்திர ஸ்வாமியின் உத்தரவால் நான் மாலுமியானதும் ஜலதீபத்தின் தளபதியானதும் பல போர்களில் ஈடுபட்டதும் பெரும் புகழ் பெற்றதும் எல்லாமே உன்னை நாடி வந்த காரணத்தினால்தான். ஆனால், நாடி வந்தவன் கிடைக்கவில்லை எளிதில். இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறாய். இப்பொழுது இந்தப் பயணத்தில் நீயும் நானும்தான் இருக்கிறோம். தஞ்சை அரண்மனைக் கதையில் சம்பந்தப்பட்ட நாம் இருவர்தான் இந்த பயணத்தைச் செய்கிறோம்.''

''ஆம்'' என்ற முகவெட்டு வீரன் நகைத்தான் லேசாக.

''எதற்கு நகைக்கிறாய்?'' என்று வினவினான் இதய சந்திரன்.

''இந்தப் பயணத்தின் முடிவில் நம்மிருவரில் ஒருவர் தானிருப்போம் என்பது உனது நினைப்பு.''

''சந்தேகம் வேண்டாம். தஞ்சை ராணியிடம், ஒன்று அவள் செல்வனைக் கொண்டு வருவதாகவும், இல்லையேல் வாரிசை அபகரித்துச் சென்றவனைக் கொன்று வருவதாக வும் ஆணையிட்டு வந்திருக்கிறேன்.''

''கொல்ல உனக்கு இது நல்ல சந்தர்ப்பம்.''

''நோயாளியாய் இருப்பவனைக் கொல்வது தமிழர் பழக்கமில்லை.''

''வேறு வாய்ப்பு?''

''உன் உடல் பூரண குணமடைந்தவுடன் கிடைக்கும். எமிலியிடம் நான் உறுதி கூறியபடி காலா காலத்தில் மருந்து கொடுத்து, உணவளித்து உன்னைத் தேற்றி, நீ பூரண வலுவடைந்த பிறகு, உன் வாளுடன் என் வாள் மோதும்.''

''அந்த மோதலில் நீ இறந்துவிட்டால்?''

''கடமையில் இறந்தவனாவேன்.''

இதற்குமேல் நிம்கர் ஏதும் பேசவில்லை. இதய சந்திரனும் மௌனமாகவே வண்டியைச் செலுத்தினான். சுமார் முதல் ஜாமப் பயணத்துக்குப் பிறகு வண்டி காட்டுப்பகுதியை அடையவே, அங்கு வண்டியை நிறுத்திப் புரவியை அவிழ்த்துவிட்ட இதயசந்திரன் தனது புரவியின் பக்கவாட்டுப் பையிலிருந்த குப்பிகளிரண்டையும் எடுத்து தரையில் வைத்து விட்டு வண்டியில் படுத்திருந்த நிம்கரை மெள்ளத் தாங்கிப் பிடித்துத் தூக்க முயன்றான். ''வேண்டாம். நான் அத்தனை பலவீனத்திலில்லை'' என்று தானாகவே எழுந்து உட்கார்ந்து கொண்ட நிம்கர், குப்பிகளைக் கொண்டுவரச் சொல்லி சிறிது மருந்தையும் சிறிது பிராந்தியையும் உட்கொண்டான்.

மீண்டும் அவற்றை மூடிய இதயசந்திரன், குப்பி களைப் பையில் வைத்துவிட்டு இன்னொரு பையிலிருந்து

ஒரு குப்பி நீரையும் உணவையும் எடுத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு மெல்ல உணவருந்தினான். புரவிகளுக்கும் தீனி வைத்துச் சற்று எட்ட இருந்த ஓர் அருவியில் நீர் குடிக்கச் செய்தான். சிறிது நேரம் சென்றதும் முகவெட்டு வீரனுக்கும் உணவளித்தான்.

இம்மாதிரியே சகல அலுவல்களையும் தானே செய்து முகவெட்டு வீரனுக்குப் பணி செய்து இரண்டு நாட்கள் பயணம் செய்த இதயசந்திரன், மூன்றாவது நாளிரவு கொலாபாவுக்குப் பாதை பிரியும் இடத்துக்கு வந்து சேர்ந்து, அங்கிருந்த மலைக்காட்டில் தங்கினான். அன்றிரவு நிம்கருடன் உணவருந்திய பிறகு, ''வீரனே, உன் உடல் வலு இப்பொழுது எப்படியிருக்கிறது?'' என்று வினவினான்.

''வலுவைப்பற்றிக் கவலைப்படாதே. இப்பொழுது கூட வாளெடுத்துப் போரிடத் தயாராயிருக்கிறேன்'' என்றான் நிம்கர்.

''அது முடியாது. உன் வலு பூர்ணமாக வந்தால்தான் நான் போரிடுவேன்'' என்றான் தமிழன்.

''இரவில் நீ உறங்கும்போது உன்னைக் குத்திப்போட்டால் என்ன செய்வாய்?'' என்று வினவினான் நிம்கர்.

''நீ செய்யமாட்டாய் அப்படி?''

''ஏன்?''

''அதற்கு இத்தனை நாள் வாய்ப்பு இருந்திருக்கிறது உனக்கு. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. நான் உயிருடன்தான் இருக்கிறேன்.''

''அளவுக்கு மீறி நம்புகிறாய் என்னை.''

''வீரனை வீரன் நம்புவதில் வியப்பில்லை.''

இதைக் கேட்ட நிம்கர் உண்மையாகவே வியப்பில் வசப்பட்டான். ''தமிழா, நீ ஒரு தனிப்பிறவி. உலகத்தில்

உன்னைப் போன்றவர் வெகு சிலர். பலபேரை நான் வெட்டிப் போட்டிருக்கிறேன் போரில். ஆனால் எதற்கும் நான் வருந்தியதில்லை. என் கையால் நீ இறந்தால் வருந்துவேன்'' என்று கூறினான்.

எந்தக் கொலைகாரனிடத்திலும் அடிப்படையாக ஏதோ ஒரு நல்ல குணமிருக்கிறது என்று நினைத்த இதயசந்திரன் அவனை நோக்கிக் கேட்டான், ''இத்தனை நல்ல குணமிருப்பவன் எதற்காகத் தாயிடமிருந்து மகனைப் பிரித்தாய்?'' என்று.

''ராணி தாராபாயின் கட்டளை'' என்றான் நிம்கர்.

''அது சரி, அந்தச் சிறுவன் எங்கிருக்கிறான் இப்பொழுது?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''சொல்வதற்கில்லை என்று முன்னமே கூறியிருக்கிறேன் உனக்கு'' என்று திட்டவட்டமாக அறிவித்தான் நிம்கர்.

இதயசந்திரன் கடைசியாக ஒரு கேள்வி கேட்டான், ''நான் உன்னை எங்கு அழைத்துப் போகிறேன் தெரியுமா?'' என்று.

''கொலாபாவுக்கு.''

''இல்லை.''

''வேறெங்கு?''

இதயசந்திரன் கூறிய பதில் அவனைத் திகைக்க வைத்தது. சட்டென்று துள்ளி எழுந்த நிம்கர், ''தமிழா, உனக்குப் பைத்தியமேதும் இல்லையே?'' என்று வினவினான் அதிர்ச்சி குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

பதிலுக்குச் சிரித்தான் தமிழன். ''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்...'' என்றும் கூறினான் சிரிப்பின் ஊடே.

அத்தியாயம் 38

கில்லா குர்லா

இதயசந்திரன் தன்னைக் கொண்டு செல்ல நினைக்கும் இடத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே முகவெட்டு வீரனின் முகத்தில் பெரும் கிலி பரவி முகம் ஏற்கனவேயிருந்த விகாரத்தைவிட அதிக விகாரத்தை அடைந்துவிட்டதென்றால் அதற்குக் காரணம் இருக்கத் தான் செய்தது. அத்தனைப் பயங்கரப் பெயர் அது. தன்னையும் தமிழனையும் நாசப்படுத்திவிடும் பெயர் என்பதையும் சந்தேகமற உணர்ந்தான் நிம்கர். 'ஜன்ஜீரா' என்ற பெயரைக் கேட்டால் குலை நடுக்கமெடுக்காதவர்கள் மேலைக் கடலோரத்தில் யாரிருந்தார்கள் கனோஜியையும் அவர் மாலுமிகளையும் தவிர? அந்தப் பெயரைக் கேட்டதால் அசந்துபோய், தான் வீசிய பார்வையைத் தொடர்ந்து இதயசந்திரன், சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்'' என்று கூறியதும் தமிழன் உள்ளம் ஜன்ஜீரா பயணத்தில் உறுதிப்பட்டு விட்டதென்பதைப் புரிந்து கொண்டான் நிம்கர்.

இதற்குப் பிறகு இருவரும் நீண்டநேரம் பேசவே யில்லை. இரவு முற்றிக்கொண்டிருந்தாலும் ஸஹ்யாத்ரியில் இரவுச் சாரல் காற்றுக் கிளம்பிவிட்டபடியாலும் இதய சந்திரன் வண்டியின் பக்கத்திலிருந்து எழுந்து சென்று சில சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து, தீ மூட்டி அதில் குளிர்காய உட்கார்ந்ததன்றி, ''நீயும் வா'' என்று நிம்கரையும் அழைத்தான். நிம்கர் வண்டியிலிருந்த பிராந்திக் குப்பியிலிருந்து சிறிது திராவகத்தை அருந்தி விட்டுத் தமிழனிடமிருந்து சற்றுத் தள்ளி நெருப்படியில் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது இருவரும் எந்தச்

சம்பாஷணையிலும் ஈடுபடவில்லை. ஒருவரையொருவர் அழித்துவிடும் நோக்கம் கொண்ட அந்த எதிரிகளிருவரும் சேர்ந்து சுள்ளி நெருப்பில் குளிர் காய்ந்துகொண்டிருந்த சமயத்தில் அவர்கள் இருவர் எண்ணங்களும் ஸஹ்யாத் திரியைவிட்டு எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்தன. அந்த இரவில் ஸஹ்யாத்திரியின் சரிவிலிருந்த அந்தக் காடு மிகுந்த பயங்கரச் சூழ்நிலையைச் சிருஷ்டித்திருந்தாலும், எங்கிருந்தோ துஷ்ட மிருகங்களின் உறுமல்களும் நரிகளின் ஊளைகளும் காதில் விழுந்துகொண்டிருந்தாலும், வீர்ரென்ற வாடைக் காற்று எங்கும் ஓங்காரத்தை எழுப்பி பராசக்தியின் சக்தியை எடுத்து விளக்கிக்கொண் டிருந்தாலும், ஸஹ்யாத்திரியைச் சற்று எட்டத் தாக்கிக் கொண்டிருந்த கடலலைகள்கூடப் பெருங் கோஷத்தை எழுப்பிக் கொண்டிருந்தாலும், அவ்விருவர் மனங்களும் அத்தனை ஒலிகளையும் பயங்கரத்தையும் அலட்சியம் செய்து அதனதன் வழியில் போய்க் கொண்டிருந்தன.

இதயசந்திரன் மனத்தில் தஞ்சையிலிருந்து கிளம்பியது முதல் ஏற்பட்ட பெரும் காப்பியம் வளைய வந்துகொண் டிருந்தது. கண்ணீருடன் தனக்கு ஆணையிட்ட தாய், கடற்கரையோரத்தில் தன்னைக் கண்டெடுத்த பிரும் மேந்திர ஸ்வாமி, தன்னை அரசியல் கருவியாக உபயோகப் படுத்த முனைந்த பானுதேவி, தன்னை அடிமையாக்கிக் கொண்ட கனோஜி, தன்னிடம் இன்பத்தை மட்டும் விரும்பிய காதரைன், தனக்காகத் தன் இனத்தையே தியாகம் செய்த எமிலி, எல்லோரையும் நினைத்துப் பார்த்த இதயசந்திரன், தனக்காகச் சகலத்தையும் அர்ப் பணம் செய்துவிட்ட மஞ்சுவையும் எண்ணிப் பார்த்தான். மஞ்சு நெஞ்சில் தோன்றியதும் அவன் முகத்தில் ஒரு கவிவு ஏற்பட்டது. கருணை சுடர் விட்டது, ஆவலும் உலாவியது. யாரைத் தியாகம் செய்தாலும் மஞ்சுவைத் தான் தியாகம் செய்ய முடியாது என்பதைப் புரிந்துகொண் டான் அவன். ''கடமை முடிந்து என் உயிரும் இருந்தால்

உன்னிடம் கண்டிப்பாய் வருவேன் மஞ்சு'' என்றும் சொல்லிக்கொண்டான் உள்ளூர. ஆனால் தற்சமயம் திரும்பிச் செல்வது அனேகமாக முடியாது என்பதையும் உணர்ந்துகொண்டான். அவன் ஜன்ஜீராவுக்குச் சென்று அங்கிருந்து தமிழகம் செல்வது அத்தனை சுலபமல்ல வென்றாலும், வேறு வழியில்லையென்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. மேலைக் கடற்கரையில் ஸித்தி களின் ஜன்ஜீராவைத் தவிர வேறு எந்தத் துறைமுகத்தில் காலை வைத்தாலும் அங்கு கனோஜியின் மாலுமிகளும் கப்பல்களும் இருக்குமாகையால், தான் திரும்பவும் கொலாபாவுக்குச் செல்லும்படியிருக்குமென்று அவனுக்குத் தெரிந்திருந்ததால், அவன் ஜன்ஜீரா பயணமே சரியென்ற முடிவுக்கு வந்தான். ஜன்ஜீராவிலோ, அல்லது ஜன்ஜீரா போவதற்குள்ளோ முகவெட்டு வீரனை எப்படியும் பேச வைக்கலாமென்று நினைத்தான் இதயசந்திரன். அப்படி யில்லாவிட்டால் தமிழகம் சென்றதும் நிச்சயமாக விஷயத் தைக் கக்க வைத்துவிடலாமென்ற முடிவுக்கும் தமிழன் வந்தான்.

— இதயசந்திரனின் நினைப்புகள் இப்படியிருந்த தென்றால் நிம்கரின் நினைப்புகள் வேறு துறைகளில் ஓடிக் கொண்டிருந்தன. ஸாத்ஸித்தியிடம் வேலைக்கு இருந்து கனோஜிக்காக வேவு பார்த்த தான், ஜன்ஜீராவில் ஸித்திரஸூல் யாகூத்கானிடம் சிக்கிக்கொண்டால் கதி என்னவென்பதைப் பற்றி அவன் சிறிதும் சந்தேகப்பட வில்லை. தான் திரும்பவும் ஸாத்ஸித்தியிடம் அனுப்பப் பட்டு, தளைகளில் உணவு நீரின்றி வதைக்கப்பட்டுக் கடைசியில் கழுகுப் பாறையில் தள்ளப்படுவது உறுதி யென்பதை எண்ணிப் பார்த்ததால், எதற்கும் கலங்காத நிம்கரும் சிறிது கலங்கினான். தமிழன் கதியும் அத்தனை திருப்தியானதல்லவென்பதை அவன் உணர்ந்தேயிருந்
தான். ஸாத்ஸித்தியிடமிருந்து தமிழன் தப்பியதும், ரஸூல் யாகூத்கானின் கப்பல்களை முகத்துவாரத்திலேயே

முழ்கடித்ததும் பிரசித்தமாயிருந்தபடியால் தமிழனுக்குக் கிடைக்கக்கூடிய சித்திரவதை எண்ணிப் பார்க்கவும் தகாதென்பதை நினைத்து நடுங்கினான் நிம்கர். ஜன்ஜீரா வுக்குச் சென்று எதைச் சாதிக்கப் பார்க்கிறான் தமிழன் என்பது புரியாததால் மெல்ல அவன் சம்பாஷணையைத் துவக்கி, ''ஜன்ஜீரா சென்று என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

இதயசந்திரன் கண்கள் சுள்ளிகளின் தீயொளில் வேல் களைப்போல் பிரகாசித்தன. ஆனால், அவன் சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான்: ''அங்கிருந்து தமிழகம் போவதாக உத்தேசம்'' என்று.

''என்னை அழைத்துக்கொண்டா?'' என்று கேட்ட நிம்கரின் குரலில் வியப்பிருந்தது.

''ஆம்'' என்ற இதயசந்திரன் இரண்டு மூன்று சுள்ளி களை எடுத்து நெருப்பில் போட்டான்.

''தமிழகம் அழைத்துப்போய் என்ன செய்யப் போகிறாய் என்னை?''

''தஞ்சையிலிருக்கும் அந்தத் தாயிடம் ஒப்படைப்பேன். தஞ்சை அரண்மனையில் நீ விசாரிக்கப்படுவாய்.''

''என்ன குற்றத்திற்கு?''

''ஒரு வீரனைக் குத்திக் கொன்ற குற்றத்திற்கு, குழந்தையைக் களவாடிய குற்றத்திற்கு.''

''அதற்கு மரண தண்டனை கிடைக்குமா?''

''ஆம்.''

இந்தப் பதிலைக் கேட்ட நிம்கர் முகத்தில் எந்தவிதப் பயக்குறியும் தெரியவில்லை. ''ஜன்ஜீராவிலிருந்து தமிழகம் போவது சுலபமென்று நினைக்கிறாயா நீ?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்று பதில் சொன்ன இதயசந்திரன் விளக்கினான்: ''நாம் உடனடியாக ஜன்ஜீரா செல்லப் போவதில்லை. மெள்ளத்தான் பயணம் செய்யப் போகிறோம். உன் உடல் வலு பூராவும் வரும்வரையில் ஜன்ஜீரா மார்க்கத்திலுள்ள சிறுசிறு குடிசைக் கூட்டங்களில் எங்காவது தங்குவோம். நீ பூர்ண சுகம் அடைந்ததும் நாமிருவரும் மாறுவேடமணிந்து ஜன்ஜீரா செல்வோம். அங்கிருந்து ஏதாவது ஒரு வர்த்தகக் கப்பலில் கார்வார் செல்வோம். அங்கிருந்து தமிழகம் செல்வது சுலபம்.''

இதைக் கேட்ட நிம்கர் சிறிது நேரம் மௌனம் சாதித்தான். ''முதல் திட்டத்தை ஏன் மாற்றிக்கொண்டு விட்டாய்?'' என்று கேட்டான், சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''எந்த முதல் திட்டம்?'' என்று வினவினான் இதயசந்திரன், சட்டென்று கண்களை உயரத் தூக்கி நிம்கரை நோக்கி.

''எனக்கு வலுவந்த பிறகு என்னிடம் வாட்போர் செய்வதாகக் கூறினாயே, அந்தத் திட்டம்'' என்று சுட்டிக் காட்டினான் நிம்கர்.

''அந்தத் திட்டத்தில் சில ஆபத்துக்கள் இருக்கின்றன...''

''இருவரில் ஒருவர் உயிர் போய்விடும்.''

''அதல்ல பெரிய விஷயம். தஞ்சை ரகசிய ராணியின் புதல்வனின் விஷயம் நம்மிருவரில் ஒருவர் மரணத்தோடு மறைந்து விடும். நீ மரணமடைந்தால் நிச்சயமாக மறைந்துவிடும். ஆகையால் உன்னைக் கொல்வதைவிடக் காத்து அழைத்துச் செல்ல அவசியமிருக்கிறது.'' இதை மிக உறுதியுடன் கூறினான் இதயசந்திரன்.

''ஜன்ஜீராவில் நாம் அகப்பட்டுக் கொண்டால்?'' என்று சிறிது நேரம் கழித்து வினவினான் நிம்கர்.

இதயசந்திரன் கண்களில் விஷமச் சாயை படர்ந்தது. ''இருவரும் அழிவோம்'' என்றான் சிறிது புன்முறுவலுடன்.

சாலைத் தமிழன் அத்தனை அலட்சியமாக நினைத்தது பெரும் ஆச்சரியமாயிருந்ததால் நிம்கர் மரியாதை நிரம்பிய கண்களை அவனை நோக்கி உயர்த்தினான். பிறகு கேட்டான், ''நாமிருவரும் அழிந்தால் யாருக்கு லாபம்?'' என்று.

''வீரத்துக்கு'' என்று கூறினான் இதயசந்திரன்.

''வீரத்துக்கா?'' என்று கேட்டான் நிம்கர் வியப்புடன்.

''ஆம்.''

''எப்படி?''

''இருவரும் கடமைக்காக அழிகிறோம். தஞ்சையிலுள்ள தாயின் துயரைத் துடைக்கும் முயற்சியில் நானும், தாராபாயின் ஆணையைக் காக்க நீயும் அழிவோம்.'' இதைச் சொன்ன இதயசந்திரன் லேசாக நகைத்தான்.

''ஏன் நகைக்கிறாய் தமிழா?'' என்று வினவினான் நிம்கர் ஏதும் புரியாமல்.

''இருவரும் சாவது மகாராஷ்டிரத்தின் கடைசி வாரிசுக்காக— அதாவது மகாராஷ்டிர நலனுக்காக. மகாராஷ்டிரனான நீ மகாராஷ்டிரத்துக்காகச் சாவது சரி. தமிழனான நான் எதற்குச் சாகவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை'' என்ற இதயசந்திரன் வண்டிக்குச் சென்று ஒரு கம்பளியை எடுத்து வந்து தரையில் போட்டு நெருப்பின் பக்கத்தில் படுத்துக்கொண்டான். படுத்த பின் அவனது கேள்விக்கு அவன் உள்ளமே பதில் கூறியது. மகாராஷ்டிரத்துக்கும் பாரதத்துக்குங்கூட மேலானது ஒன்றிருக்கிறது. அது மனித தர்மம். அந்தத் தர்மத்தை முன்னிட்டுத்தான், ஒரு தாயின் துயர் தீர்க்கும் புனிதப் பணியை முன்னிட்டுத்தான், தான் மகாராஷ்டிரம் வந்தோமென்பதை அவன் சந்தேகமறப் புரிந்துகொண்டான். அந்த

மனித தர்மத்துக்கு, அதாவது பச்சாதாபத்துக்கு, அதனால் விளையும் கருணைக்கு, கருணையால் விளையும் கடமைக்கு, எந்த அரசியலும் ஏதும் இணையில்லை யென்பதை இதயசந்திரன் படுத்திருந்த அந்த இரவில் உணர்ந்துகொண்டான். தவிர, அவன் தமிழகத்தை விட்டுக் கிளம்பி ஆண்டுகள் மூன்றாகி விட்டன. ஊர் நினைப்பும் நெஞ்சில் ஊறத் துவங்கியது. அதனால் ஏற்பட்ட இன்பச் சுனை அத்தனை துன்பத்திலும் அவன் உள்ளத்தையெல்லாம் இன்ப வெள்ளமாக அடித்தது. அந்த இன்ப வெள்ளத்தில் அப்படியே உறங்கி விட்டான் அவன்.

பொழுது புலர்ந்தது. மீண்டும் நிம்கருடன் பயணத்தைத் துவங்கி சுமார் மூன்று நாட்களில் நான்கு மலைகளைத் தாண்டி, குர்லா கோட்டைக்கருகிலுள்ள மலைக் காட்டுக்கு வந்து சேர்ந்தான். கில்லா குர்லா என்று மகாராஷ்டிரர்களால் அழைக்கப்படும் குர்லா கோட்டை அப்படிப் பெரிய கோட்டையல்லவென்றாலும், மலைப் பகுதியில் சற்று உள்ளடங்கியிருந்ததாலும், சமுத்திரம் அதைச் சுற்றி வளைத்துத் தீவாக அடித்திருந்ததாலும், கப்பல்களை அந்த இடத்தில் மறைத்து வைப்பதற்குச் சௌகரியமிருந்ததால் மேலைக் கடலோரத்தின் கேந்திரமான துறைமுகங்களில் அதுவும் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. கனோஜியின் ரகசிய முகத்துவாரக் கோட்டைகளில் ஒன்றான குர்லாவை மலைச் சரிவில் சென்று கொண்டிருந்த வண்டியிலிருந்தே பார்த்த இதயசந்திரன் நிம்கரை நோக்கி, ''வீரனே! குர்லா அதோ தெரிகிறது பார்'' என்றான்.

வண்டியில் படுத்திருந்த நிம்கர் எழுந்திருந்து எட்டிப் பார்த்து, ''ஆம்'' என்று ஏதோ சொல்லப் போனவன் பிரமிப்படைந்து, ''வியப்பாயிருக்கிறது தமிழா!'' என்றான்.

''ஆம்'' என்றான் இதயசந்திரன்.

''துறைமுகத்தில் கப்பலோ படகோ ஏதுமில்லையே!'' என்றான் நிம்கர்.

''இல்லை'' என்ற இதயசந்திரன் குரலிலும் வியப்பு இருந்தது.

''காரணம்?'' என்று கேட்டான் நிம்கர்.

''புரியவில்லை எனக்கு. இந்தத் துறைமுகம் எப்பொழுதும் இத்தனை நிர்க்கதியாக இருந்ததில்லை'' என்றான் இதயசந்திரன்.

''ஆம்'' என்று ஒப்புக்கொண்டான் நிம்கர். ''ஆளரவங் கூட ஏதுமில்லை. காவலரையும் காணோம்.''

''கொலாபாவுக்கும் இதற்கும் கடல் வழியில் பத்து மைல் தூரந்தானிருக்கிறது. கொலாபாவின் எல்லைக் கோட்டை இது. அப்படியிருக்க இதை ஏன் கனோஜி நிர்க்கதியாக விட்டுவிட்டார்?''

அந்தக் கேள்வி நிம்கர் நினைப்பிலும் எழுந்ததால் அவனும் பெரும் குழப்பத்துக்குள்ளானான். ''எதற்கும் இங்கு சற்றுத் தூரத்திலுள்ள குடிசைகளில் விசாரிப்போம்'' என்று கூறிய இதயசந்திரன், கூப்பிடு தூரத்தில் மலைச் சரிவுகளில் கட்டப்பட்டிருந்த குடிசைகளை நோக்கி வண்டியைச் செலுத்தினான். அங்குள்ள மலைவாசிகளுக்கும் ஏதும் தெரியாததால் மாலை வரையில் அங்கேயே தங்கிய இதயசந்திரன் இரவு மூண்டதும், ''வீரனே! கம்பளியை எடுத்துக் கொள். நாம் சென்று குர்லாவின் நிலைமையைப் பார்ப்போம்'' என்று கூறி, அவனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். மலைச்சரிவில் பல இடங்களில் மிகுந்த கஷ்டப்பட்டு இறங்கி, மலைக்கும் கோட்டைக்குமிடையில் கடல் விளைவித்திருந்த சிறு கால்வாயைக் கடந்து குர்லாவின் கரையில் காலடி எடுத்து வைத்தான்.

கோட்டை நிர்க்கதியாயிருந்தது. வாயிற் பெரும் கதவு தள்ளிய மாத்திரத்தில் திறந்தது. உள்ளே இருட்டு நிரம்பிக் கிடந்தது. ''நிம்கர்! விளக்கேற்ற இங்கு ஏதாவது வசதியிருக்க வேண்டும். பிறைகளைத் தடவிப் பார்'' என்றான் தமிழன். பிறையிலேயே தீப்பெட்டியிருந்ததால் மெள்ள அங்கிருந்த ஒரு விளக்கை ஏற்றினான் நிம்கர்.

விளக்கொளியில் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். விளக்கையெடுத்துக் கொண்டு கோட்டையின் உள்ளறைகளைப் பார்த்தும் ஏதும் புரியவில்லை அவர்களுக்கு. எல்லாப் பொருள்களும் கோட்டையில் வைத்தது வைத்தபடி இருந்தன. ஆனால், மனித சஞ்சாரம் மட்டும் இல்லை. நீண்ட நேர ஆராய்ச்சிக்குப் பிறகு, ''விளக்கை இழுத்து மறைத்து வைத்துவிடு. இங்குள்ள மஞ்சங்களில் படுப்போம். கதவைத் தாளிட்டுவிடு'' என்று உத்தரவிட்டான் இதய சந்திரன். நிம்கர் அவன் உத்தரவை நிறைவேற்றவே இருவரும் படுத்தனர் மஞ்சங்களில். பயண அலுப்பால் நன்றாக உறங்கியும்விட்டனர். நிர்க்கதியான அந்தக் கோட்டை பரம நிம்மதியை அளித்தது அவ்விருவருக்கும். ஆனால், அந்த நிம்மதி உடைந்தபோது பயங்கரமாகவும் விசித்திரமாகவும் உடைந்தது.

அத்தியாயம் 39

அவனை அறிந்தவர்

பொழுது விடிந்து நீண்ட நேரத்திற்குப் பின் கண் விழித்தபோதும் முழுச் சுரணை வரவில்லை தமிழக வீரனான இதயசந்திரனுக்கு. அரைத் தூக்கம் அப்பொழுதும் இருந்து கொண்டிருந்தபடியால் கண்களைப் பாதித் திறந்து மூடினான் ஒருமுறை. மறுமுறை கண்களைச் சரியாக விழிக்கச் செய்யக் கைகளைத் தூக்கி விரல்களால் இரப்பைகளைப் பிரிக்க முற்பட்டபோது தான், தான் பெரும் பலவீனமடைந்திருப்பதை அவன் உணர்ந்து கொண்டான். தவிர, இல்லாத பிரமையெல்லாம் மனத்தில் எழுந்து உலாவத் தொடங்கி விட்டதையும் அறிந்ததால், அத்தனை பலவீனத்திற்கும் மயக்கத்திற்கும் காரணம் என்ன என்பதை ஆராய முயன்று முடியாததால் சிறிது குழப்பத்துக்கும் உள்ளானான்.

அவன் படுத்திருந்த கில்லா குர்லாவின் அறை மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது. தரையும் மஞ்சமும் கூட மெல்ல மெல்ல அசைந்து கொண்டிருந்தன. கண்ணை அரைவாசி விரித்துப் பார்த்தபோது சற்றுத் தள்ளிப் படுத்திருந்த முகவெட்டு வீரனையும் காணோம், மஞ்சத்தையும் காணோம். போதாக்குறைக்குக் கீழே வைத்திருந்த விளக்கு அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. எல்லாம் ஏதோ மாயாஜாலமாக அவனுக்குத் தோன்றவே அவன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டான். கண்களைத் திறப்பதை விட மூடுவது மிகச் சுலபமாயிருப்பதையும் புரிந்து கொண்ட தமிழன் அதற்குக் காரணம் யாதாயிருக்கக் கூடும் என்ற ஆராய்ச்சியில்

இறங்க முற்பட்டான். மூளை சரியாக இயங்காததால் ஆராய்ச்சியும் பயனற்றதாயிருந்தது.

புலன்கள் பாதி அடங்கிக் கிடந்தன. இருப்பினும் யாரோ அந்த அறையில் வந்து போவதும், ஏதோ பேசுவதும் மட்டும் அவன் காதில் விழுந்தது. ''இப்பொழுது அவனை எழுப்ப வேண்டாம். மிகவும் களைத்திருக்கிறான்'' என்று ஏதோ ஒரு குரல் சொன்னது அவன் காதில் விழுந்ததானாலும், அது யார் குரல் என்பது புரியவில்லை அவனுக்கு. குரல் புத்தம் புதியதாய் இருப்பதாயும் தோன்றியது. உண்மையாகவே அது புத்தம் புதிய குரலா அல்லது தான் அரைத் தூக்கத்திலிருப்பதால் குரல்தான் புரியவில்லையா என்று எண்ணிப் பார்த்தான் இதயசந்திரன். எண்ணத்துக்கு விளக்கமில்லை. கண்ணுக்கு ஒளியுமில்லை. இந்த நிலையில் அவன் எத்தனை நேரமிருந்தானோ அவனுக்கே தெரியாது. நீண்ட நேரத்திற்குப் பிறகு யாரோ அவன் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்த பிறகுதான் கண் விழித்தான். அந்த நீரில் ஓரிரு துளிகள் உதட்டிலும் விழுந்து உப்புக் கரித்ததால் அது கடல் நீர் என்பதையும் புரிந்து கொண்டான்.

அந்தக் கடல் நீர், அவன் இதழ்களுக்கு அளவிலா இன்பத்தைக் கொடுத்தது. மூன்றாண்டு காலம் மாலுமியாகக் கடல் நீரைப் பலவிதங்களில் அனுபவித்திருந்த அவனுக்குச் சென்ற சில மாதங்களில் அதன் சுவையில்லாதிருந்து மீண்டும் கிடைத்ததால் உதட்டிலிருந்த துளிகளை மீண்டும் அமுதத் துளிகளைச் சுவைப்பது போல் நாக்கினால் உதடுகளைத் தடவிச் சுவைத்தான். கண்கள் மீது விழுந்த நீர்த்துளிகள் சில, கண்ணை விழித்ததும் உள்ளேயும் பட்டதால் கண்ணில் லேசாக எரிச்சல் கொடுத்தது. அந்த எரிச்சலே உடலின் மற்ற பகுதிகளின் சுரணையையும் தூண்டியதால், கண்களை அகல விரித்தான் இதயசந்திரன் கடைசியில். விரித்த பின்தான்

தான் இருப்பது குர்லா - கோட்டையின் அறையல்ல வென்பதையும், ஓடும் கப்பலின் அறையொன்றில் தான் படுத்திருப்பதையும் புரிந்துகொண்ட தமிழன் அறையைச் சுற்றி மிரள மிரள விழித்தான். கப்பல் யாருடையது? கப்பலுக்கு யாரால், எப்பொழுது, எப்படி, தான் கொண்டு வரப்பட்டோமென்பது பற்றி ஊகிக்க முயன்றும் முடியவில்லை அவனுக்கு. தன்னைக் கப்பலுக்கு எப்படியோ கொணர்ந்தவர்கள் முகவெட்டு வீரனையும் கொணர்ந்திருக்க வேண்டுமாகையால் அவன் எங்கேயிருக்கிறான் என்று எண்ணியும் பார்த்தான். ஒருவேளை தான் அயர்ந்து தூங்கிய சமயத்தில் அந்த முகவெட்டு வீரனே வெளியே சென்று ஏதாவது படகைப் பிடித்துக் கடலில் சென்ற மரக்கலமொன்றுக்குத் தன்னைக் கொண்டு வந்திருப்பானா என்ற சந்தேகமும் அவனுக்கு ஏற்பட்டது. எப்படியும் யாராவது அறைக்குள் வருவார்கள், அப்பொழுது விஷயத்தைப் புரிந்துகொள்ளலாம் என்று அவன் வாளாவிருந்துவிட்டான் முடிவாக.

நாழி ஏற ஏறச் சுரணை பூர்ணமாக வந்துவிட்டது அவனுக்கு. ஆனால் யாரும் அந்த அறைக்குள் வரவில்லை. எழுந்திருந்து, தானே போகலாமென்று எழுந்திருக்க முயன்று, முடியாததால் மீண்டும் தொப்பென்று படுக்கையில் விழுந்தான். இம்முறை அறைக் கதவு லேசாகத் திறக்கப்பட்டது. யாரோ ஒருவன் உள்ளே மெள்ள எட்டிப் பார்த்து, ''தண்ணீர் அடித்ததில் விழித்துக்கொண்டு விட்டார்'' என்று கூவினான் வெளியிலிருந்த யாரையோ பார்த்து. அதைக் கேட்டதும் வெளியில் யாரோ இரண்டு மூன்றுபேர் நகைத்தார்கள். அதில் ஒருவர் சிரிப்பு, அவனுக்கு மிகவும் நன்றாகத் தெரிந்த சிரிப்பு. அதைக் கேட்டதும் ஒரு வினாடி பிரமித்தான் அவன். அடுத்த விநாடி, படுத்தவண்ணமே இரைந்து கூவினான், ''பர்னாண்டே...''

கூச்சல் கப்பல் அதிரும்படியாயிருந்ததால் தடதட வென்று இரண்டு மூன்றுபேர் அறைக்குள் ஓடி வந்தார்கள். முதலில் வெகு வேகமாக நுழைந்த பர்னாண்டோ மிகுந்த மரியாதையுடன் இதயசந்திரனுக்குத் தலை வணங்கினான். ''என்ன உத்தரவு உபதளபதி'' என்றும் வினவினான்.

அந்தக் கேள்வியைக் கேட்ட அவன் இதழ்களில் புன்சிரிப்பு இருப்பதாகத் தோன்றியதால் உள்ளூரச் சினங் கொண்ட இதயசந்திரன் அதை வெளிக்குக் காட்டாமல் கேட்டான், ''இந்தக் கப்பல்?'' என்று.

''ஜலதீபம்தான்'' என்றான் பர்னாண்டோ மிகுந்த பணிவுடன்.

அதை ஓரளவு ஏற்கனவே ஊகித்துவிட்ட இதய சந்திரன், ''என்னை யார் இங்கு கொண்டு வந்தது?'' என்று வினவினான்.

''நாங்கள்தான்'' என்றான் பர்னாண்டோ.

''யார் உத்தரவின்மேல்?'' என்று மீண்டுமொரு கேள்வியை வீசினான் தமிழன்.

''தளபதியின் உத்தரவின்மேல்'' என்று கூறினான் பர்னாண்டோ.

''என்னுடன் இன்னொருவன் இருந்தான்.....''

''ஆம்.''

''அவன்?''

''பக்கத்தறையில் இருக்கிறான்.''

இதைக் கேட்ட இதயசந்திரன் அமைதிப் பெருமூச்சு விட்டான். ''சரி, தளபதியை அனுப்பு'' என்றும் உத்தர விட்டான். அந்த அமைதிப் பெருமூச்சைத் தொடர்ந்து தலை வணங்கி வெளியே சென்றான் பர்னாண்டோ. மிகுந்த அமைதி சூழ்ந்துகொண்டது இதயசந்திரன் சித்தத்தை. சுமார் இரண்டரை ஆண்டுகள்

இடைவிடாமல் தான் வசித்த, தன் வாழ்வைப் பல கோணங்களில் திருப்பிவிட்ட ஜலதீபத்தில் தான் படுத் திருந்தது பெரும் இன்பமாயிருந்தது தமிழனுக்கு. அதுவும் கரணை பூர்ணமாக வந்துவிட்டதால் தான் படுத்திருந்தது, தனது பழைய உபதளபதியின் அறையே என்பதையும் உணர்ந்துகொண்டான். எதிரே அந்தரத்தில் தெரிந்த விளக்கு உண்மையில் கப்பலின் மரத்தூணில் சம்பிரதாயப் படி கட்டப்பட்டிருக்கிறதென்பதையும் உணர்ந்து கொண்டான். கப்பல் தளபதி யாராயிருக்குமென்பதிலும் அவனுக்கு எந்தவிதச் சந்தேகமுமில்லை. ஆகவே, சிறிது நேரம் கழித்து மாலுமி உடையில் மஞ்சு உள்ளே நுழைந்த போது அவன் அவளை ஏறெடுத்து நோக்கினானே தவிர பேசவில்லை. நோக்கிய அவன் கண்களிலும் கோபம் துளிர்த்திருந்தது.

கீழே சராயும் மேலே வெள்ளைக்காரர் பாணியில் சட்டையணிந்து, அலைந்த தலைக்குழலை ஒரு பெரும் துணியைக் குறுக்கே கட்டி அடக்கி, அழகெல்லாம் உருவாய் உள்ளே நுழைந்த மஞ்சு அவனைச் சிரிப்பை உதிர்த்த கண்களால் நோக்கினாள். அவன் முகத்தில் கோபமும் வெறுப்பும் கலந்து தாண்டவமாடியதைக் கண்டதும் அவள் இதழ்களிலும் புன்முறுவல் லேசாகப் படர்ந்தது. அத்தனை மாலுமி உடையிலும் வெகு ஒய்யாரமாக உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்ட அவள் அவன் படுக்கையின் முகப்பில் உட்கார்ந்துகொண்டு, ''உங்கள் போக்கு தலைகீழாக இருக்கிறது'' என்று கூறினாள்.

''என்ன தலைகீழாக இருக்கிறது?'' என்றான் இதய சந்திரன் சினம் துளிர்த்த குரலில்.

''தளபதி, உபதளபதியை வரச்சொல்வதுண்டு. உபதளபதி, தளபதியை வரச் சொல்லி உத்தரவு அனுப்புவது எப்படி?'' என்று கேட்டாள் மஞ்சு.

இதயசந்திரன் அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. நீண்டநேரம் மௌனம் சாதித்தான். படுக்கையில்

உட்கார்ந்திருந்த அவள் உடல் தன்மீது படாதவண்ணம் சற்று நகர்ந்துகொள்ளவும் செய்தான். அதைக் கண்ட அவள் நகைத்தாள். அதனால் வெகுண்ட அவன் கேட்டான், ''எதற்கு நகைக்கிறாய்?'' என்று.

பதிலுக்கு அவள், ''உங்களுக்குப் பேசவும் வருமா?'' என்று கேட்டாள் சிரித்துக்கொண்டே.

அந்தக் கேள்வி அவனைத் தூக்கி வாரிப் போட்டது. இதே கேள்வியைத் தாமினிக் காட்டில் ஷாஹூவின் மருமகளும் கேட்டது நினைப்பிருந்தது அவனுக்கு. 'பெண்கள் புத்தி, பேச்சு எல்லாம் ஒரே வழியில்தான் இயங்கும் போலிருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆகவே வாய்விட்டும் சொன்னான், ''பேசவும் வரும்'' என்று. அத்துடன், ''அதுமட்டுமல்ல. இன்னும்...'' என்று கூறி, வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

''இன்னும்...?'' என்று கேள்வி எழுப்பினாள் அவள்.

இதயசந்திரன் பதில் சொல்லவில்லை. அவளே கேட்டாள், ''இன்னும் என்ன செய்துவிடுவீர்கள்?'' என்று. இதைக் கேட்டுவிட்டுப் பலமாக நகைக்கவும் செய்தாள்.

இதயசந்திரன் கோபம் எல்லை மீறிக்கொண்டிருந்தது. ''இந்தச் சிரிப்பு எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான் சுடும் குரலில்.

''எத்தனை நாட்களாக?'' என்று கேட்டாள் மஞ்சு.

''பல நாட்களாக?''

''அதாவது போருக்குப் போனதிலிருந்து?''

''திட்டமாக நாளைக் குறிப்பிட முடியாது என்னால்...''

''என்னால் முடியும்.''

''சொல்லேன்.''

''கொலாபாவிலிருந்து படை புறப்பட்ட நாளாக.''

''படை புறப்பட்டதற்கும் உன் சிரிப்பை நான் ரசிக்காததற்கும் என்ன சம்பந்தம்?''

''ரசிக்க வேறு சிரிப்பு இருந்தது, நர்ஸ் எமிலியின் சிரிப்பு'' என்றாள் மஞ்சு.

இதயசந்திரன் இதயம் எமிலியை நினைத்துப் பார்த்தது. அதே தோரணையில், அதே வெள்ளை உடையில் கல்யாண் மருத்துவமனையில் தியாகத்தின் உருவமாக, தெய்வச் சிலையாக, கருணையின் வடிவமாக, அப்பொழுதும் அவன் மனத்துள் எழுந்தாள் அவள். அவன் முகம் அவளை நினைத்ததால் பெரிதும் கனிந்தது.

அவன் முகக் கனிவை மஞ்சு கண்டாள். கண்டதால் பெருமூச்செறிந்தாள். ''நினைத்தேன் அப்பொழுதே'' என்று அவள் அழகிய உதடுகள் உதிர்த்த சொற்களில் சோகம் இழைந்தது.

அவள் மனப்போக்கை இதயசந்திரன் உணர்ந்துகொண்டான். ''மஞ்சு'' என்று மெல்ல அழைக்கவும் செய்தான்.

''என்ன?'' மஞ்சுவின் குரல் வறண்டு கிடந்தது.

''அந்தத் தெய்வத்தைப் பற்றித் தவறாக நினைக்காதே'' என்றான் இதயசந்திரன்.

''எமிலியைப் பற்றியா?'' என்று எரிச்சலுடன் வந்தது மஞ்சுவின் கேள்வி.

''ஆம்.''

''அவள் பரம உத்தமியோ?''

''தியாகி.''

''எதைத் தியாகம் செய்தாள்?''

''என்னை உனக்காக.'' இந்தச் சொற்களை உறுதியுடன் உதிர்த்தான் இதயசந்திரன். ''மஞ்சு! எமிலியைப் போன்ற ஜன்மங்களை உலகத்தில் நாம் காண்பது

அபூர்வம். அவள் சேவைக்காகப் பிறந்தவள். மலரும் மஞ்சமும் இன்பமும் நிலவும் மாளிகைக்காக ஏற்பட்ட வளல்ல எமிலி. முனகலும், அழுகையும் ரத்தமும் சுரவேகமும் கலந்த மருத்துவமனைக்காக ஏற்பட்டவள் அந்த உத்தமி. அவள் தன் உடலை நோயாளிகளின் பணிக்காக அளித்துவிட்டதாகச் சொன்னாள்...'' என்றும் உள்ளம் குழைய, சொற்கள் கனியக் கூறினான் இதயசந்திரன்.

மஞ்சு அவன் முகத்தைத் தன் விழிகளால் ஆராய்ந்தாள். உண்மையை ஊகிக்க அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. தன் கணவன் மனத்தில் நர்ஸைப் பற்றிய நினைப்பு ஆழப் புதைந்திருப்பதை உணர்ந்துகொண்டாள். ''ஓகோ! இப்பொழுதுதான் புரிகிறது'' என்று மெள்ளச் சொல்லவும் செய்தாள்.

''என்ன புரிகிறது மஞ்சு?'' என்று கூறிய இதயசந்திரன் மஞ்சத்தில் கிடந்த அவள் கையைப் பற்றினான்.

கையை அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டாள் அவள். ''நீங்கள் என்னை விட்டு ஓடிவிட நினைத்த காரணம் புரிகிறது'' என்று கூறவும் செய்தாள்.

இதயசந்திரன் மெல்லச் சமாளித்துக்கொண்டு மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்துகொண்டான். ''என்ன! உன்னை விட்டு ஓட நினைத்தேனா? எங்கு ஓட நினைத்தேன்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டான்.

''உங்கள் ஊருக்கு.''

''என் ஊருக்கா?''

''ஆம்.''

''யார் சொன்னது?''

''யார் சொன்னாலென்ன? உண்மை அதுதான்.''

''யார் சொன்னாலென்ன? உண்மை

மஞ்சு மஞ்சத்திலிருந்து எழுந்து நின்றுகொண்டாள். அவள் விழிகள் அவனை வெறுப்புடன் நோக்கின. ''கல்யாண் நகரிலிருந்து கொலாபாவுக்கு வர குர்லா கோட்டை வழியாகத்தான் வரவேண்டுமா?'' என்று வினவினாள். அத்துடன் இரைந்தும் தொடர்ந்தாள். ''கொலாபாவுக்குச் செல்வதாகக் கல்யாண் நகரில் கூறிவிட்டு மலைக்காட்டு வழியாக ஜன்ஜீரா சென்று தப்பி தமிழகம் ஓடிவிடலாமென நீங்கள் யுக்தி செய்தால், அதற்குமேல் யுக்தி செய்ய மகாராஷ்டிரத்தில் யாருமில்லையா? நீங்கள் கல்யாணிலிருந்து கிளம்பியது முதல் கண்காணிக்கப்படுகிறீர்கள் தமிழக வீரரே! உங்கள் யோசனை, நீங்கள் போகுமிடம், அவிழ்க்க முயலும் சிக்கல் அனைத்தையும் அறிந்த ஒருவர் உம்மை கூடியவரை போகவிட்டு வேடிக்கை பார்த்தார். சமயம் வந்தபோது பிடித்துவிட்டார்.''— இதை மிகுந்த உணர்ச்சியுடன் விடுவிடுவென்று கூறினாள் மஞ்சு.

இதயசந்திரன் இதயத்தில் ஆத்திரமும் வியப்பும் கலந்திருந்தது. தன்னை அணு அணுவாக எடை போடக் கூடியவர் கனோஜி ஆங்கரேதான் என்பதை உணர்ந்திருந்ததால் கோபம் தலைக்கேறக் கேட்டான், ''அந்த மேதாவி உன் தந்தை போலிருக்கிறது?'' என்று.

''இல்லை. அவருக்கும் மேற்பட்ட மேதாவி ஒருவர் இருக்கிறார்.''

''யாரது?''

''பேஷ்வா பாலாஜி விசுவநாத்.''

அத்தியாயம் 40

காந்தமும் இரும்பும்

மஞ்சுவின் செவ்விய உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டதும் பெரும் பிரமிப்பையும் ஓரளவு அச்சத்தையும்கூட அடைந்த இதயசந்திரன், ''பேஷ்வா பாலாஜி விசுவநாத், பேஷ்வா பாலாஜி விசுவநாத்'' என்று சந்தை சொல்லிக்கொள்ளும் வைதிக மாணவனைப்போல அந்தப் பெயரை இருமுறை உச்சரிக்கவே செய்தான். பேஷ்வா பாலாஜி விசுவநாத்தை அவன் பார்த்ததில்லை யென்றாலும் அவரைப் பற்றித் தரைப்படை வீரரும், கொங்கணி மக்களும், கடல் மாலுமிகளும் சொல்லிய விந்தைக் கதைகளையெல்லாம் நிரம்பக் கேட்டிருந்தான். அவர் சிப்ளன் உப்பளத்தில் சின்னஞ்சிறு குமாஸ்தாவா யிருந்தது, மெள்ள அந்த அலுவலிலிருந்து கொண்டே மகாராஷ்டிரர்களுக்காக வேவு பார்க்கத் தொடங்கியது, பிறகு மொகலாயர் அவரை சிறை பிடிக்க முயன்றபோது தப்பியோடிவிட்டது, கனோஜியை ஸித்திகளிடமிருந்து தப்ப வைத்தது, கடைசியாக அவர் மகாராஷ்டிர மன்னர் அரண்மனையில் கணக்காயராக அமர்ந்தது முதலிய பல சம்பவங்களை, படிப்படியாக அவர் வாழ்க்கையில் முன்னேறிய விந்தைக் கதைகளை அவன் கேட்டிருந்தான். அவர் நுண்ணிய அறிவும் முன்னோக்கிப் பார்க்கும் சக்தி யும் மகாராஷ்டிரத்தில் வீட்டுக்கு வீடு தெரியுமாகையால் மூன்றாண்டுகள் அங்கு அரும்பெரும் செயல்களைப் புரிந்த இதயசந்திரனுக்கு அவரைப்பற்றிய விவரங்கள் தெரிந் திருந்ததில் வியப்பென்ன இருக்கிறது? அவர்தான் தன்னைப் பிடிக்க ஏற்பாடு செய்தார் என்பதைக் கேட்ட வுடன் அவன் இதயத்தில் பிரமிப்பும் அச்சமும் உதயமான தில்தான் என்ன வியப்பிருக்க முடியும்?

இதயத்தில் ஏற்பட்ட பல உணர்ச்சிகளின் காரண மாகவும், தமிழகம் செல்லவும், தான் மகாராஷ்டிரம் வந்த காரியத்தை ஒரு வழியாக முடித்துக்கொள்ளவும், தான் போட்ட திட்டம் படுதூளாகிவிட்டதன் காரணமாகவும், நெஞ்சத்தில் பெரும் குமுறலை அடைந்த இதயசந்திரன், சுடும் கண்களை எதிரேயிருந்த மஞ்சுவின்மீது திருப்பி னான். மாலுமி உடையிலும் மஞ்சு அன்று மிக மனோகர மாயிருந்தாள். இப்படித்தான் இதயசந்திரன் அவளை முதன் முதலாகப் பரசுராமபுரம் மலைப்பாறையின் மறைவில் சந்தித்தான். அதே சராய், அதே சட்டை, அதே தலைக்கட்டு! இப்படித்தான் மறைந்து தன்னுடன் அமர்ந்து தனக்கு உதவி, படகில் அழைத்துச் சென்றாள் அவள் என்பதை எண்ணமிட்டான். அப்பொழுதைவிட இப்பொழுது அவள் அழகு சற்று அதிகப்பட்டிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. கண்களில் அன்றிருந்த துணிவு சற்று குறைந்து வெட்கம் ஏறியிருந்தது. உடலும் சற்றுச் சதை பிடித்து, மார்பும் முன்னைவிடச் சற்று அதிகமாக விம்மியிருப்பதாகத் தோன்றியது. அப்படி முழுப் புஷ்ப மாகப் புஷ்பித்துவிட்ட அவள் தேகத்தின் பொலிவு பன்மடங்கு அதிகப்பட்டு விட்டதை முகத்திலிருந்த தனி மெருகு துலங்க வைத்தது. சராய் நன்றாகப் பிடித்திருந்த தால் இடைக்குக் கீழிருந்த பரிமாணங்களும் செழித் திருந்ததை நிரூபித்தன. இத்தனைக்கும் காரணமும் அவனுக்குப் புரிந்துதானிருந்தது. அந்தக் காரணமும் அவள் கழுத்தில் மங்கல சூத்திரமாகத் துலங்கிக் கொண் டிருந்தது.

அந்த மங்கலக் கயிற்றில் அவன் கண்கள் நிலைத்ததும், அவற்றிலிருந்து சீற்றம் மறைந்து, சிறிது கனிவும் தெரிந்தது. 'என்ன இருந்தாலும், மஞ்சு என் மனைவி. என்னை விட்டால் இவளுக்கு யாரிருக்கிறார்கள்?' என்று உள்ளூரக் கேட்டுக் கொண்டான். ஒரு பெண் தனக்குச் சொந்தம் என்று ஏற்பட்டதும் ஆண்கள் கேட்டுக்

கொள்ளும் அசட்டுக் கேள்வி அது. அதுவரை வளர்த்த தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் இருந்தாலும், அவர்களையெல்லாம் அசட்டை செய்கிறது ஆண் மனம்; தனக்குத்தான் பொறுப்பிருப்பதாகத் துள்ளுகிறது. மண மான மறுகணம் இந்த விசித்திரம் ஏற்படுகிறது. காரணம் சமூக சம்பிரதாயமா? அல்லது இயற்கை விளைவிக்கும் விந்தையா? பதிலில்லாத புதிர், அவிழ்க்க முடியாத விந்தை! ஆனால் இது ஏற்படுகிறது ஆண் பெண் உறவில்!

இதன் விளைவாக, இதயசந்திரன் மனம் மஞ்சுவை நினைத்துக் கவனித்தாலும் அவள் தன்னைப் பிடிக்க வந்தவள். பாலாஜியிடம் ஒப்படைக்கப் பிடிக்க வந்தவள் என்ற எண்ணம் அவன் உள்ளேயிருந்த ஆத்திரத்தை முழுதும் அணைக்காததால் கடைசியாகக் கேட்டான், ''இப்பொழுது நீ பேஷ்வாவிடம் அலுவல் புரிகிறாயா?'' என்று.

மஞ்சுவின் விழிகள் அவன் முகத்தில் நிலைத்தன. ''இல்லை'' என்ற பதில் சுருக்கமாக உதிர்ந்தது அவள் உதடுகளிலிருந்து.

''பின் யாரிடம் பணி புரிகிறாய்?'' என்று அடுத்த கேள்வியும் பிறந்தது அவனிடமிருந்து.

''யாரிடமுமில்லை.''

''பின் எதற்காக என்னைப் பிடிக்க வந்தாய்?''

''என்னைவிட்டு ஓடாமல் தடுக்க.''

''அதற்காக?''

''பேஷ்வாவின் கட்டளையை நிறைவேற்ற ஒப்புக் கொண்டேன்.''

அவன் கேள்வியும் திட்டமாயிருந்தது, அவள் பதிலும் திட்டமாயிருந்தது. இருவர் சொற்களிலும் சூடும் இருந்தது. தான் சூட்டுடன் கேள்விகளைப் பிறப்பித்தது தவறாகப் படவில்லை தமிழனுக்கு. மஞ்சு சூடாகப் பதில் சொன்னது கோபத்தையே அளித்தது. ஆகவே இரைந்தான், ''கணவனிடம் பேசுகிறபடி நீ பேசவில்லை'' என்று.

''மனைவியிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைப்படி நீங்களும் நடந்து கொள்ளவில்லை'' என்றாள் அவளும் பதிலுக்கு.

இதயசந்திரன் அவள்மீது வெறுப்புத் ததும்பும் விழிகளை நாட்டினான். ''என்னை நீ கைப்பற்றியது திருட்டுத்தனத்தினால்'' என்றான்.

''நீங்கள் தமிழகம் ஓட முயன்ற முறைக்கு என்ன பெயர் சூட்டலாம்?'' என்று அவளும் கேட்டாள்.

இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை அவனுக்கு. மெள்ள மெள்ள அவன் குரலில் சுரம் இறங்கியது. ''காணாமற் போன மகனை நினைத்துத் தவிக்கும் ஒரு தாய்க்கு எனது கடமையைச் செய்ய நினைத்தேன்'' என்றான் சற்றுச் சினம் அடங்கிய குரலில்.

அதுவரை எட்ட நின்றிருந்த மஞ்சு மீண்டும் கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். அவன் கையிலொன்றை எடுத்துத் தன் கையில் வைத்து இறுகப் பற்றிக்கொண்டாள். ''குலாபி முன்பாகக் கைப்பிடித்த ஓர் அபலைக்கு நீங்கள் செலுத்த வேண்டிய கடமை ஏதுமில்லையா?'' என்று வினவினாள்.

அவள் கையின் ஸ்பரிசம் அவன் மனத்தை மேலும் இளக்கியது.

''மஞ்சு! உன்னைக் கைவிடும் நோக்கம் எனக்கு என்றும் இல்லை. இந்த முகவெட்டுக்காரனைத் தமிழகம் கொண்டு சென்று உண்மையைக் கக்கவைத்த பிறகு மீண்டும் உன்னிடம் வந்து விடத்தான் நினைத்தேன். ஆனால் நீ போக விடவில்லை'' என்று இப்படிச் சொல்லிக் கொண்டு சென்றவன், திடீரெனப் பேச்சை நிறுத்தி,

''ஆமாம் மஞ்சு! நீ என்னைப் பிடித்தவிதம் மிக விசித்திரமாயிருக்கிறது. நீ எப்பொழுது குர்லா வந்தாய்? எப்படி என்னைத் தூக்கிக் கொணர்ந்தாய்?'' என்று வினவினான்.

மஞ்சு அவனை நோக்கிக் குனிந்து, ''சொன்னால் மறுபடியும் சீறமாட்டீர்களே?'' என்றாள். அவன் பதில் சொல்லவில்லையானாலும் பதில் கிடைத்தது அவளுக்கு. அவள் வலது கன்னத்தில் அவன் இதழ்கள் ஆழப் புதைந்தால், அந்த இன்ப நிலையில் அவள் பல வினாடிகள் இருந்தாள். பிறகு, அவள் அவனை நோக்கி நகைத்தாள். ''இப்படி நீங்கள் என்னை ஏமாற்றி விடுவீர்கள் என்று தான் அவர் உங்கள் உதடுகளில் துளிகளை விடக் குப்பியைத் தந்தார்'' என்றாள்.

இதயசந்திரன் பிரமித்தான். ''என்ன! குப்பியா? துளிகளா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றாள் அவள் அவனை நோக்கிக் குனிந்த நிலையைச் சற்று அதிகப்படுத்திக்கொண்டு.

அவன் நகைத்தான்.

''ஏன் நகைக்கிறீர்கள்?''

''என்னை வீழ்த்த இத்தனை ஆயுதங்கள் உன்னிடம் இருக்க துளிகளை ஏன் வாங்கி வந்தாய்?'' என்று கேட்டான். அத்துடன் சொன்னான், ''துளிகளைக் கொடுத்தவர் யாராயிருந்தாலும் உன் வல்லமை அவர்களுக்குத் தெரியாது'' என்று.

மஞ்சுவின் கண்களில் காமம் சொட்டியது. அவள் உடல் அவன்மீது தவழ்ந்தது புஷ்பச் சரம்போல. பெண்களை ஜெயிக்க உங்களைவிட வல்லவர் கிடையாது'' என்றாள்.

இதயசந்திரன் அவள் முதுகை மெல்ல வருடினான். ''என்னை வெற்றி கொள்ள உன்னைப்போன்ற கள்ளி யாரும் கிடையாது'' என்றான்.

''கள்ளனுக்கேற்ற கள்ளி'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''கள்ளன் யார்?''

''நீங்கள்தான்.''

''எப்படி நான் கள்ளன்?''

''தந்தையில்லாத சமயம் பார்த்துக் குலாபி கோயிலில் திருட்டுத் தாலி கட்டுவதும்...''

''பிறகு...''

''பாறைக்கு அழைத்துப் போவதும்... கள்ளன் செயல் அல்லாமல்...'' மேலே வெட்கத்தால் அவள் பேசவில்லை.

கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் பிரிந்துவிட்ட தால் ஏற்பட்ட வேகம் அவ்விருவரையும் ஆட்கொண்டதால் இருவரும் பேசவில்லை. கடைசியில் அவன் அழைத்தான், ''அடி கள்ளி'' என்று.

''ஏன் கள்ளா'' என்ற அவள் நகைத்தாள், இன்பத்துக்குப் பின்விளைவாக.

''நான் பார்த்தபோது குர்லாவில் யாருமில்லையே? நிர்க்கதியாயிருந்ததே?'' என்றான் மெதுவாக இதயசந்திரன்.

''நிர்க்கதியான கோட்டைகளில்தானே நீங்கள் நுழைந்து பழக்கம்?'' மஞ்சு மேலும் நகைத்தாள்.

இதயசந்திரன் ஓரளவு சுயநிலையடைந்ததால் நகைக்கவில்லை. ''மஞ்சு! அங்கிருந்த காலிவாத்துகள், படகுகள் யாதாயின? காவல் வீரர்கள் என்ன ஆனார்கள்?'' என்றான்.

மஞ்சு நன்றாக எழுந்து ஆடையைத் திருத்திக் கொண்டே கட்டிலின் முனையில் உட்கார்ந்து கொண்டாள். ''பாலாஜி விசுவநாத்துடன் லோஹ்காட்டில் சமரசம் ஏற்பட்டதும் படைத் தலைவர்களையெல்லாம்

அங்கு வரச்சொல்லித் தந்தை உத்தரவு அனுப்பினாரல்லவா?'' என்று துவங்கினாள் மஞ்சு.

''ஆம். நான் போகவில்லை'' என்றான் இதயசந்திரன்.

''நீங்கள் மட்டும்தான் போகவில்லை. மற்றப் படைத் தலைவர்களெல்லாம் வந்திருந்தார்கள். ஆனால் நீங்கள் வராததைப் பாலாஜி கவனித்துக் கேட்கவும் செய்தாராம் தந்தையிடம். நீங்களாக வராவிட்டால் சிறை செய்து அழைத்து வரச் சொன்னாராம். ஆனால், தந்தை ஏதும் செய்யவில்லை. பிறகு பேஷ்வாவும் தந்தையும் கொலாபா வந்தார்கள்.''

''கேள்விப்பட்டேன், ஒப்பந்தம் ஏற்பட்டதும் எனக்குத் தெரியும்.''

''அங்கும் உங்களைப்பற்றி பேஷ்வா விசாரித்தார். பிறகு உங்களைச் சிறை செய்து கொலாபாவுக்கு அனுப்பும்படி சுகாஜிக்கு உத்தரவு அனுப்பப்பட்டது. உத்தரவைக் கொண்டு சென்ற தூதன் திரும்ப வந்தான். உத்தரவு வருவதற்கு முன்னால் நீங்கள் இந்த வீரனுடன் கொலாபாவுக்குக் கிளம்பிவிட்டதாகச் செய்தியும் கொண்டு வந்தான்...''

இந்த இடத்தில் மஞ்சு அவனை உற்று நோக்கி, ''இங்குதான் பாலாஜி தமது பிடிவாதத்தைக் காட்டினார். நீங்கள் நிச்சயமாகக் கொலாபாவுக்கு வரமாட்டீர்கள் எனக் கூறினார். வேறு எந்தத் துறைமுகத்திலும் உங்களை அடையாளம் கண்டுகொண்டு விடுவார்களாதலால் நீங்கள் ஜன்ஜீரா சென்று அங்கிருந்து மாறு உடையில் தமிழகம் செல்வீர்களென்று கூறினார். 'நிம்கர் உண்மையைக் கக்கும் வரையில் தமிழன் அவனை விட மாட்டான்' என்றும் திடவட்டமாகக் கூறினார் தந்தையிடம். உங்களைக் கண்காணிக்க ஜன்ஜீரா மலைப்பாதை வழிக்கு ஒற்றர்கள் அனுப்பப்பட்டார்கள். இரண்டு நாட்களுக்கெல்லாம் உங்கள் இருப்பிடம் கொலாபாவுக்கு

அறிவிக்கப்பட்டது. ஜன்ஜீரா சேருமுன்பு உங்களை மடக்கிவிட பேஷ்வா தீர்மானித்தார். மடக்கக்கூடிய இடம் குர்லாதானென்பதையும் சுட்டிக் காட்டினார்'' என்று கூறினாள்.

இந்த விவரங்களை இதயசந்திரன் பிரமிப்புடன் கேட்டான். ''இத்தனையும் கொலாபாவிலிருந்தா பேஷ்வாவால் முடிவு செய்யப்பட்டது?'' என்றும் கேட்டான்.

''ஆம், பேஷ்வா தோர்லாவாடாவை விட்டு நகரவில்லை. எனது தந்தை போர் முறைகளைத் தோர்லாவாடாவின் பெரிய அறையில் தேசப்படத்தை விரித்து நிர்ணயிப்பதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அதே இடத்தில் அதே படத்தை வைத்துக்கொண்டுதான் நீங்கள் செல்லும் பாதையை, தங்கக்கூடிய இடங்களைச் சுட்டிக் காட்டினார்.''

இந்த இடத்தில் நகைத்தான் இதயசந்திரன். ''உன் தந்தைக்குக் கொங்கணிப் பகுதியில் ஒவ்வொரு பகுதியும் தெரியும். அவருக்குச் சொல்லிக் கொடுத்தாரா பேஷ்வா?'' என்றும் கேட்டான் நகைப்பின் ஊடே.

மஞ்சு புன்முறுவல் கொண்டாள். ''என் தந்தைக்கும் பேஷ்வாவுக்கும் ஒரு வித்தியாசமிருக்கிறது'' என்றும் கூறினாள்.

''என்ன வித்தியாசம் மஞ்சு?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''உங்களைச் சிறை செய்ய தந்தைக்கு இஷ்டமில்லை. தெரிந்ததையெல்லாம் தெரியாதது மாதிரி நடித்தார். பேஷ்வா உங்களைப் பிடிக்க உறுதிகொண்டார். ஆகவே, முழுமூச்சோடு தூதுவர்களைக் கொண்டு உங்கள் பயணத்தைக் கவனித்தார்'' என்றாள் மஞ்சு.

''அப்படியா?''

''ஆம். அது தவிர, உங்களைப் பிடிக்க என்னை அனுப்பத் தீர்மானித்ததும் பேஷ்வாதான்.''

''ஏன் உன்னை அனுப்பினார்கள்?''

''பேஷ்வா உத்தரவிட்டபோது அவர் சாம்பல்நிறக் கண்கள் மின்னியதை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். தோர்லாவாடாவின் மந்திராலோசனை அறையில் என்னையும் நோக்கி என் தந்தையையும் நோக்கிய பேஷ்வா, 'இவளை அனுப்பு கனோஜி, தமிழனைப் பிடிக்க' என்றார். 'இவளையா அனுப்ப வேண்டும்' என்று கேட்டார் தந்தை. பாலாஜி பதில் சொன்னார். பதிலைக் கேட்ட தந்தை தோர்லாவாடாவே அதிரும்படியாக நகைத்தார். தந்தை எப்படி நகைப்பாரென்பதுதான் உங்களுக்குத் தெரியுமே.''

இதயசந்திரனின் விழிகள் அவளை வியப்புடன் நோக்கின. ''அப்படி என்ன பதிலைச் சொல்லிவிட்டார் பேஷ்வா?'' என்றும் வினவினான்.

மஞ்சுவின் விழிகளில் வெட்கச் சாயை படர்ந்தது. ''காந்தத்தைக் காட்டித்தான் இரும்பை இழுக்க வேண்டும் என்றார்'' என்றாள் மஞ்சு மெல்ல.

இருவர் கண்களும் கலந்தன. சிறிது நேரம் மௌனம். பிறகு இருவரும் சற்றுப் பெரிதாகவே நகைத்தார்கள்.

அத்தியாயம் 41

சுவாமியின் கவலை

காமத் திளைப்பாலும், 'காந்தம்— இரும்பு உவமையாலும் கலகலவென நகைத்த அவ்விருவரில் மஞ்சுவே முதலில் சிறிது நகைப்பை அடக்கிக்கொண்டு, ''இரைந்து நகைக்காதீர்கள். வெளியே கேட்கப் போகிறது'' என்று எச்சரித்தாள் வெட்கச்சாயை முகத்தில் படர.

அந்த வெட்கம் அவள் முகத்திலிருந்த பொலிவை ஆயிரம் மடங்காக அடித்திருந்தது. அவள் எழுந்து உட்கார்ந்திருந்த நிலையில் அவளுடைய இடைப்பகுதியில் சட்டை, சற்று மேலேறியிருந்த காரணத்தால் இடை வெளேரெனத் தெரிந்தது! அந்த இடையை ஒரு கையால் சற்று அழுத்தியே பிடித்தவண்ணம் சொன்னான் இதய சந்திரன், ''பேஷ்வா எமப் பேர்வழி'' என்று.

மஞ்சுவின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''அதில் சந்தேகமில்லை'' என்ற அவள் பதிலிலும் மகிழ்ச்சி ஒலித்தது.

''பேஷ்வாவும் நம்மைப் போலத்தான் போலிருக் கிறது'' என்று கூறி லேசாக நகைத்தான் இதயசந்திரன்.

மஞ்சுவின் விழிகளில் கேள்விக் குறி இருந்தது. ''எந்த விஷயத்தில்?'' என்று அவள் உதடுகளும் . கேள்வியை உதிர்த்தன.

''இந்த விஷயத்தில்தான்...''

''இந்த விஷயத்திலென்றால்?''

''காந்தம் இரும்பை இழுக்கும் விஷயத்தில்...'' இதைச் சொன்ன இதயசந்திரன் மீண்டும் நகைத்தான்.

''சே! சே! பேஷ்வாவை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்'' என்றாள் மஞ்சு, அவனை எச்சரிக்கும் பாவனையில்.

இதயசந்திரன் அந்த எச்சரிக்கையை லட்சியம் செய்யாமல் கேட்டான், ''பேஷ்வா என்ன துறவியா?'' என்று.

''துறவியாயில்லாவிட்டால் என்ன? அவர் ஒன்றும் உங்களையும் என் தந்தையையும் போன்றவரல்ல'' என்று கூறினாள் மஞ்சு.

''என்ன வித்தியாசமாம்?'' இதயசந்திரன் கேள்வியில் விஷமம் இருந்தது.

''பேஷ்வா வைதிகர்...''

''ரொம்பச் சரி.''

''தினம் மூன்று வேளை சந்தியாவந்தனமாத்தியான்னிகங்களைச் செய்யத் தவறுவதில்லை.''

''அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''உங்களையும் தந்தையையும்போல் இது விஷயத்தில்...உம்...வெறி பிடித்தவரல்ல'' இதைச் சொன்ன அவள் குரலில் கோபமும் வெறுப்பும் கேலியுடன் கலந்தொலித்தன.

இதயசந்திரன் சற்றுச் சிந்தித்தான். பிறகு கேட்டான்: ''மஞ்சு! ஒரு சந்தேகம் எனக்கு'' என்று.

''என்ன சந்தேகம்?'' என்று கேட்டாள் மஞ்சு சற்றுச் சந்தேகம் ஒலித்த குரலில்.

''பேஷ்வாவுக்குத் திருமணமாகிவிட்டதா?'' என்று வினவினான் இதயசந்திரன், சர்வ சாதாரணமாக.

''ஆகிவிட்டது.''

''குழந்தை இருக்கிறதா?''

''வீரப் புதல்வன் இருக்கிறான். பாஜிராவ் என்று பெயர்.''

''பின்...'' என்று இழுத்தான் இதயசந்திரன்.

''பின்...ன்...ன்...என்று இழுப்பானேன்? தெளிவாகத் தான் சொல்லுங்களேன்.''

''பேஷ்வா வைதிகராயிற்றே! மூன்று வேளை அர்க்யம் விடுகிறாரே!...'' என்று இழுத்தான் இதயசந்திரன்.

''உங்களுக்கு எப்பொழுதும் இந்த விஷமப் பேச்சுத் தான். பேஷ்வா சந்நியாசியென்றா சொன்னேன் நான்? உங்களைப்போல் கால காலமில்லாமல்'' என்று சொல்லிக் கொண்டு போனவள், ''இப்பொழுது பகல். இந்தச் சமயத்தில் இந்த அநியாயம்...'' என்று கூறிவிட்டுப் பொய்க்கோபம் காட்டிக் கதவிடம் சென்றாள்.

''எதற்கு அங்கு போகிறாய் மஞ்சு?'' என்று கெஞ்சினான் இதயசந்திரன்.

''கதவைத் திறக்க'' என்றாள் அவள்.

''எதற்குத் திறக்க வேண்டும்?''

''வெளியே இருப்பவர்கள் நகைக்காதிருக்க.''

''யார்... நமது மாலுமிகளா?''

''அவர்கள் மட்டுமல்ல.''

''வேறு யார்?''

மஞ்சு அவனை நோக்கி நகைத்தாள். ''இருங்கள் அழைக்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்து, ''ஹர்கோவிந்த்!'' என்று விளித்து மெல்ல ஏதோ சொன்னாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அறைக் கதவுக்கு வெளியே யாரோ திடத்துடன் நடந்துவரும் ஒலி கேட்டது. அந்த

மனிதரைக் கண்டு பெரும் பிரமிப்புக்குள்ளானான் இதய சந்திரன். தான் அடியோடு எதிர்பாராத அந்த மனிதர் அந்தக் கடலில் அந்த இடத்துக்கு வருவாரென்று சொப்பனத்தில்கூட அவன் நினைக்காததால் அவன் உன்னும் உணர்ச்சிகளும் திடீரென உறைந்துவிட்டனபோல் தோன்றின.

தங்கப் பூண் போட்ட நீண்ட தடியுடனும், காஷாயத் துடனும், முதன் முதலில் கொங்கணிக் கரையில் தான் கண் விழித்தபோது எப்படித் தோற்றமளித்தாரோ அதே தோரணையுடனும், அதே அருள் நோக்குடனும் பிரும் மேந்திர ஸ்வாமி அவன் முன்பு நின்றார். அவரைப் பார்த் ததும் பெரும் அதிர்ச்சியினால் படுக்கையிலிருந்து எழுந்த உட்கார்ந்த நிலையில் பல வினாடிகள் அசைவற்று நின்ற விட்ட இதயசந்திரன் மெல்லத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவர் காலடியில் விழுந்து வணங்கினான். பிரும்மேந்திர ஸ்வாமி தமது கையை அவன் சிரசின்மேல் வைத்து, "உன்னால் நாடு மங்களமடையட்டும்" என்ற ஆசி கூறினார்.

ஆசி பெற்று எழுந்ததும் இதயசந்திரனின் குழப்பம் நிறைந்த கண்கள் அவரை ஏறெடுத்து நோக்கின. அவர் செய்த ஆசியின் பொருள் அவனுக்குப் புரிந்திருந்தது. 'மகாராஷ்டிரத்துக்கு உபயோகப் படும்படியாகச் செய்' புரி' என்றுதான் அந்த ஆசிக்கு அர்த்தம் என்பதை அவன் அறிந்திருந்தான். அதன் உட்கருத்து அவனுக்குப் புலனானாலும், அதைவிட வேறு கேள்விகள் அவன் உள்ளே எழுந்தன. 'சுவாமி எப்படி திடீரென இங்கு வந்து சேர்ந்தார்? ஒப்பந்தம் ஏற்பட்ட போதுகூடக் கொலாபாவில் அவர் இருந்ததாகத் தெரியவில்லையே! ஜலதீபத்தில் அவர் வரவேண்டிய காரணம் என்ன?' என்ற கேள்விகள் இதயத்தில் எழுந்தாலும் அவற்றில் எதையும் கேட்கவில்லை அவன்.

ஆனால், எந்த மனிதன் மனத்திலோடும் விஷயத்தை யும் ணிக்கவல்ல பிரும்மேந்திர ஸ்வாமியே கூறினார்: 'தம்பி! விதி உன்னை மகாராஷ்டிர சரித்திரத்தில் புகுத்திவிட்டிருக்கிறதென்பதை நீ முதன் முதலாகக் கொங்கணி வந்தபோதே கூறினேன். அதன் கரம்தான் உன்னையும் என்னையும் இதே அரபிக்கடல் பகுதியில் இணைய வைத்திருக்கிறது. பரசுராமனுக்குப் பணம் வசூலிக்க நான் கனோஜியை நாடிக் கொலாபா வந்தேன். அங்கு ஏற்பட்ட ஒப்பந்தத்தை அறிந்தேன். ஆனால் பாலாஜி. ஒப்பந்தத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட உன்னால் ஏற்பட்ட கவலையில் ஆழ்ந்து கிடந்தார். உன்னைப் பிடிக்க மஞ்சுவை அனுப்பியபோது, 'நீங்களும் போய் வாருங்கள்' என்று என்னையும் கேட்டுக் கொண்டார்" என்று குறிப்பிட்டார்.

"அப்படியானால் என்னைச் சிறைப்பிடிக்க நீங்களும் உதவினீர்களா?" என்று வினவினான் இதயசந்திரன்.

பிரும்மேந்திர ஸ்வாமியின் அருள் விழிகள் அவன் கண்களை உறுதியுடன் சந்தித்தன. "இதயசந்திரா! உன்னைப் பிடிக்க பாலாஜிக்கு யாரும் உதவவில்லை" என்ற சொற்களும் தெளிவாக உதிர்ந்தன. அவர் உதடுகளிலிருந்து.

"அப்படியானால் நீங்கள்? மஞ்சு?" என்று வியப்புடன் வினவினான் இதயசந்திரன்.

"பாலாஜியின் கருவிகள். நாங்களெல்லாம் கைத் துப்பாக்கிகள். சுடும் கரம் அவருடையது" என்று தெளிவு படுத்திய சுவாமி மேலும் கூறினார்:

"இதயசந்திரா! நீ போகும் பாதை, இடம் அனைத்தை யும் திட்டமாகச் சுட்டிக்காட்டியவர் பேஷ்வாதான். நேபப்படத்திலேயே நீ போகும் பாதையையும் கோடிழுத் துக் காட்டி உன்னைப் பிடிக்க வேண்டிய இடம், முறை

அனைத்தையும் கூறியவர் அவர்தான். முதல் நாளே தோர்லாவாடாவில் விவரங்களைக் கனோஜியிடமும் மஞ்சுவிடமும் கூறிவிட்டார் பேஷ்வா. மறுநாள் எனக்கும் தெரிவித்தார். 'சுவாமி! குர்லா வரையில் அவள் செல்லட்டும். குர்லா கடலிலிருந்து உள்ளடங்கிய தீவுக் கோட்டையாதலாலும், அதன் வடபுறத்தில் மலை நன்றாகக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருப்பதாலும், அந்த மலைச் சுவருக்கு வடபுறத்தில் குர்லாவிலுள்ள காலிவாத்துக்களையும் படகுகளையும் இழுத்துவிடுங்கள். கோட்டையில் உள்ள நூறு மாலுமிகளும், மற்றக் காவலரும் குர்லாவை நெருங்கியுள்ள மலைக்காட்டில் பதுங்கட்டும். இதயசந்திரன் இரவைக் கழிக்க அங்கு வருவான்' என்று கூறினார்...''

இதைச் சொல்லிக் கொண்டுபோன சுவாமியை இடைமறித்த இதயசந்திரன் கேட்டான்: ''நான் அங்கு தங்க வராதிருந்தால்?'' என்று.

''நிச்சயமாய்த் தங்க வருவாய் என்று சொன்னார் பேஷ்வா. காயமடைந்த வீரன் இத்தனை நாள் குணப்பட்டிருப்பான் என்று பேஷ்வா சொன்னார். ஆகவே அவனை மலைக் குடிசைக்கருகில் வைத்துப் பாதுகாப்பதைவிடக் கோட்டைக்குள் வைத்துப் பாதுகாப்பது சௌகரியமாயிருக்கும்போது அதன் காரணத்தை அறியவும் வீரனாயிருப்பவனுக்கு வேகமிருக்குமென்றும், அந்தக் கோட்டைக்கு நீ வரத் தயங்கமாட்டாயென்றும் பேஷ்வா திட்டமாக அறிவித்தார்'' என்று விளக்கினார் பிரும்மேந்திர ஸ்வாமி.

''இத்தனை அறிந்த பேஷ்வா மலைப்பாதையில் வீரர்களை விட்டு என்னை மடக்கிச் சிறை செய்வதுதானே?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''இதை நானும் கேட்டேன். நீ வீரனாகையால் எப்படியும் போரிடத் தயங்கமாட்டாயென்றும், அப்படிப் போரிட்டால் நீயோ, உன் கைதியோ மடியவும் கூடுமென்றும் பேஷ்வா நினைத்தார். ஆகையால் இது சிறந்த வழி என்று கூறினார். 'இதயசந்திரன் குர்லாவில் இறங்கும்போது ஸ்வாமி தயவு செய்ய வேண்டும்' என்றார் என்னை நோக்கி. 'என்ன தயவு' என்று நான் கேட்டதற்கு, 'தங்களிடம் இல்லாத மூலிகை மகாராஷ்டிரத்தில் யாரிடமிருக்கிறது' என்று கேட்டுப் புன்முறுவல் கோட்டினார் பேஷ்வா'' என்று விவரித்த பிரும்மேந்திர ஸ்வாமி, ''இதயசந்திரா! அவர் சொற்படி காலிவாத்துக்களையும் படகுகளையும் மறைத்தோம். பார்வைக்குக் குர்லா கோட்டையை நிர்க்கதியாக்கினோம். வலை விரித்துக் கிடந்தது உனக்கு. அதில் வந்து நுழைந்தாய் நீ. நீ உறங்கிய அரை ஜாமத்திற்கெல்லாம் நானும் மஞ்சுவும் சாளரத்தின் மூலமாக உள்ளறைக்குள் வந்தோம். நீ சிலாம்புக் காயங்களால் முதல் நாள் சித்திரவதை அடைந்திருந்தபோது உன்னை உறங்க வைத்த அதே மயக்கத் துளிகளை அன்று கொண்டு வந்திருந்தேன். குப்பியிலிருந்த துளிகளிரண்டை உன் உதட்டில் விட்டாள் மஞ்சு. மெல்லச் சுவைத்து விழுங்கினாய். அதே மாதிரி உபசாரத்தை நான் உன் விரோதிக்குச் செய்தேன். சில வினாடிகளுக்குப் பிறகு உங்களிருவரையும் புரட்டிப் பார்த்தேன். நீங்கள் மயக்கத்தின் சுகானந்தத்தில் திளைத்து விட்டீர்கள். பிறகு உங்களை, மாலுமிகளை விட்டு ஜலதீபத்துக்குக் கொண்டு வருவது ஒரு பெரும் வேலையில்லையல்லவா?'' என்றும் கூறினார்.

இதயசந்திரன் முகத்தில் உணர்ச்சிகள் பல எழுந்து தாண்டவமாடின. பேஷ்வா எத்தனை தந்திரமாக, திட்டமாகப் பிடித்துவிட்டார் என்பது அவனுக்குப் பெரு விசித்திரமாயிருந்தது. அவனுக்குச் சந்தேகங்கள் பல அப்பொழுதுமிருந்தன. பல சின்னஞ்சிறு கணுக்கள் பிரும்மேந்திர ஸ்வாமியின் கதையில் சேராதிருந்ததுபோல் தோன்றியது அவனுக்கு. அத்துடன் படைத்தளத்தில்

கடமையிலிருந்து தப்பியோடிய தன்னைப் பேஷ்வா என்ன செய்வாரென்ற கேள்வியும் உள்ளத்தே எழுந்தது. 'பீரங்கி வாயில் வைத்துச் சுடுவாரா பேஷ்வா?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். அந்தச் சமயத்தில் பெரிதாக எங்கிருந்தோ இரு பீரங்கிகள் சப்தத்தின. இதய சந்திரன் சட்டென்று துள்ளி எழுந்தான் கட்டிலிலிருந்து. ''இதென்ன பீரங்கி சத்தம்?'' என்று வினவவும் செய்தான் சுவாமியை நோக்கி.

பிரும்மேந்திர சுவாமியின் முகத்தில் சிறிதே கவலை தெரிந்தது. ''கொலாபாவை அணுகிவிட்டோம்'' என்ற அவர் பதிலிலும் அந்தக் கவலை பிரதிபலித்தது.

அத்தியாயம் 42

சரண்

ஜலதீபம் கொலாபாவை அணுகியதும், பெரிதாக அலறிய இரு பீரங்கிகளின் ஒலியைக் காதில் வாங்கியதும், பிரும்மேந்திர ஸ்வாமியின் முகத்தில் விரவிய கவலையைக் கவனித்த இதயசந்திரன் அந்தக் கவலைக்குக் காரணத்தை உணர்ந்திருந்தானானாலும் அதைப்பற்றி ஏதுமறியாதவன் போலவே, ''சுவாமி, இந்தப் பீரங்கிகள் ஒலிப்பதற்குக் காரணம் என்ன?'' என்று வினவினான்.

சுவாமி மெல்லத் தமது கண்களை அவனை நோக்கி உயர்த்தி, ''இதயசந்திரா! இந்தப் பீரங்கிகள் கொலாபாவின் வடமேற்கிலிருந்து சுடப்பட்டிருக்கின்றன'' என்று சுட்டிக் காட்டினார்.

''ஆம் சுவாமி.'' இதயசந்திரனும் ஒப்புக்கொண்டான்.

சுவாமி மேலும் கேட்டார்: ''அங்கு பீரங்கிகள் எதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன?'' என்று.

''சுவாமி! கொலாபாவைச் சுற்றியிருக்கும் பிரதான கோட்டைச் சுவரின் வடமேற்கு மூலையில், மதிளுக்குமேல் சதா கடலைக் கண்காணிக்கும் காவலர் அறை இருக்கிறது. அறையின் இரு கண்களிலும் இரு பீரங்கிகளின் வாய்கள் சமுத்திரத்தை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. கார் காலத்திலும் மாரிக் காலத்திலும் கொந்தளிக்கும் கடலைப் பற்றிக் கொலாபா வரும் மரக்கலங்களுக்கு அபாயத்தை அறிவிக்கவும் எச்சரிக்கவும் இந்தப் பீரங்கிகளைச் சுடுவது வழக்கம்'' என்றான் இதயசந்திரன்.

சுவாமி பதிலேதும் சொல்லாமல் தானிருந்த இடத்தை விட்டு அகன்று வெளியே செல்லத் திரும்பி, ''வா, இதயசந்திரா!'' என்று அனையும் அழைத்தார்.

சுவாமியுடன் அறையிலிருந்து வெளிப் போந்த இதய சந்திரன், ஜலதீபத்தின் தளத்தில் நின்று எதிரே பிரும் மாண்டமாக எழுந்துநின்ற கொலாபா கோட்டையையும் சுற்றிலும் இரைந்துகொண்டிருந்த மேலைக் கடலையும் பார்த்தான். அப்பொழுது கதிரவன் கிளம்பி கிட்டத்தட்ட பத்து நாழிகைக்குள் ஓடிவிட்டனவாகையால் சூரிய ரச்மிகள் கடலலைகளில் நன்றாகப் பளபளத்தன. அப்படி சூரியன் நன்றாகக் கிளம்பினாலும்கூட சரத் ருதுவின் காரணமாக உஷ்ணம் அதிகமாகத் தகிக்காததால் கடல் நாரைகள் அப்பொழுதும் அலைகளில் தவழ்ந்தும் பறந்தும் மீன்களைப் பிடித்துக்கொண்டிருந்தன. பீரங்கிச் சத்தத் தின் விளைவாகக் கொலாபா கோட்டையின் உள் தோப்புகளிலிருந்து ஜிவ்வென்று மேலே பறந்த நானாவித பட்சி ஜாலங்களில் சில கடலை நோக்கிப் பறந்து வந்தன. சில கோட்டைச் சுவர்களில் உட்கார்ந்தன. இன்னும் சில குலாபியின் கோபுரத்தின்மீது அமர்ந்தன. எதற்கும் அசையாத கடல் கருடன்கள் இரண்டு கொலாபாவின் வடகிழக்கிலிருந்த பிரதான வாயிலான மஹாதர் வாஜாவின் கமான்மீது உட்கார்ந்து வெள்ளைக் கழுத்துக் களை அப்படியும் இப்படியும் ஆட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

ஜலதீபத்தின் தளத்தில் நின்று இத்தனையும் பார்த்த உபதளபதியின் நாசியிலிருந்து சாந்திப் பெருமூச்சொன்று வெளிவந்தது. சுற்றிலுமிருந்த கடலிலிருந்து வீசிய உப்புக் காற்றை நன்றாக முகர்ந்ததால் விம்மிய அவன் மார்பும் விகசித்த கண்களும், அவனுக்கு ஏற்பட்ட சந்துஷ்டியை நன்றாக வெளிப்படுத்தின. அலைகளில் எழுந்து தாழ்ந்து துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஜலதீபத் தின் எதிரில் ஆங்காங்கு நங்கூரம் பாய்ச்சி ஆடி நின்ற கப்பல்கள் ஜலதீபத்தை வரவேற்பனபோல் தலைகளை அசைத்தன. அந்தக் கப்பல்களிலிருந்து தரைக்குச் சென்று

திரும்பித் துறைமுகத்துக்குள் நுழைந்துகொண்டிருந்த ஜலதீபத்தைப் பார்த்தார்கள்.

ஏழெட்டு வர்த்தகக் கப்பல்களும் பத்துப் பன்னிரண்டு காலிவாத்துக்களும் இரண்டு குராப்புகளும் நின்றுகொண் டிருந்தனவாகையால், ஜலதீபம் அக்கப்பல்கள் அளித்த இடைவெளியில் சற்றுச் சிரமப்பட்டே சென்று, நங்கூரம் பாய்ச்சியது. அப்படி ஜலதீபம் நின்றுவிட்ட பிறகுங்கூட தளத்தில் நின்ற இடத்திலிருந்து இதயசந்திரன் அசையாமல் கொலாபாவின் அழகைப் பருகிக்கொண்டிருந் தான் நீண்ட நேரம். கொலாபாவின் பிரதான வாயிலான மஹாதர்வாஜாவும், அதையணைத்து நின்ற இரு பெரும் ஸ்தூபிகளும் அவற்றுக்குப் பின்னால் சற்றுத் தூரத்தி லெழுந்த கனோஜியின் ஐந்தடுக்கு மாளிகையான தோர்லா வாடாவும் அவன் கண்களுக்கு இன்பத்தை அள்ளிச் சொரிந்துகொண்டிருந்தன. அந்த இடங்களைக் காணக் காண அவை தன் வாழ்க்கையில் ஏற்படுத்திய திருப்பங் களையும், எண்ணிப் பார்த்தான் இதயசந்திரன். அதனால் சொல்லிழந்து செயலிழந்து நின்றான் அவன். அந்த நிலையைப் பக்கத்தில் நின்ற பிரும்மேந்திர ஸ்வாமியே சற்று அறுத்தார் ஒரு கேள்வியால். ''இப்பொழுது எதற்கு என்ன அபாயம் நேரிட்டுவிட்டது?'' என்று வினவினார் பிரும்மேந்திர ஸ்வாமி.

இந்தக் கேள்வி இதயசந்திரனைக் கொலாபாவிலிருந்து ஜலதீபத்துக்கு இழுக்கவே, அவன் சற்றுத் திரும்பிப் பக்கத் திலிருந்த ஸ்வாமியைப் பார்த்து, ''எந்த அபாயமும் நேரிடவில்லை'' என்றான்.

சுவாமி தமது கையைக் கொலாபாக் கோட்டையின் வடமேற்குப் புறத்தில் நீட்டி, ''அப்படியானால் அந்தப் பீரங்கிகள் ஏன் சுடப்பட்டன ஜலதீபத்தைப் பார்த்த வுடன்?'' என்று வினவினார்.

''எனக்குப் புரியவில்லை சுவாமி'' என்றான் இதய சந்திரன் ஏதும் புரியாமல்.

''கடலில் கொந்தளிப்பு ஏதுமில்லை'' என்றார் சுவாமி.

''இல்லை''

''ஆகாயமும் நிர்மலமாயிருக்கிறது.''

''ஆம்.''

''புரியவில்லை.''

''இல்லை.''

''எதிரிகள் யாரும் வரவில்லை.''

இந்த இடத்தில் இதயசந்திரன் பதில் சொல்லத் துவங்கிச் சற்று நிதானித்தான். பிறகு மெல்ல நகைத்தான். ''எதிரிகள் யாரும் வரவில்லை என்று சொல்ல முடியாது'' என்றும் கூறினான்.

''யார் எதிரி?'' என்று கேட்டார் பிரும்மேந்திர சுவாமி, அவன் கருத்துக்குக் காரணம் தெரிந்தும் தெரியாதவர்போல்.

''நான்தான்.''

''நீ எப்படி எதிரியாவாய்?''

''பேஷ்வாவின் உத்தரவுக்கு எதிராக நடப்பவனுக்கு என்ன பெயர்?''

சுவாமி அவனை நோக்கினார் ஒரு வினாடி. ''நீ இப்பொழுது எதிரியல்ல. கைதி'' என்று தெரிவித்தார். பிறகு, ''சரி, புறப்படத் தயார் செய்துகொள். பீரங்கி வெடித்ததற்கு விடை கொலாபா கோட்டைக்குள்தான் கிடைக்கும்'' என்ற சுவாமி கப்பல் தளபதியின் அறையை நோக்கி நடந்தார். அதுவரை எட்ட நின்று தளத்திலிருந்த பீரங்கிகளைத் துடைப்பதிலும் வேறு அலுவல்களிலும் மூவரும் இதயசந்திரனை நோக்கி வந்து குசலப் பிரச்னம் செய்தனர். அவர்கள் காட்டிய அன்பு அவன் உள்ளத்தைக் கரைத்தது. 'கடலின் நட்பே ஒரு தனி நட்பு. அதிலிருக்கும் அந்தரங்கம் தரையில் எங்கு இருக்கிறது?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் இதயசந்திரன். அதை நிரூபிக்கும் வகையில் ஹர்கோவிந்த் மெல்ல துவங்கினான், ''உபதளபதி, தங்களைக் குர்லாவில் பிடிக்கப்போகும் செய்தி எங்கள் யாவருக்கும் தெரியாது'' என்று.

இதயசந்திரன் அவனுக்குப் பதிலேதும் சொல்லாமல் புன்முறுவல் செய்தான். அதைக் கண்டு சற்று நிம்மதி யடைந்த இப்ரஹிம், ஜலதீபத்தைத் திடீரெனப் பயணத் திற்குத் தயார் செய்ய உத்தரவிட்டார்கள். ஜலதீபம் கிளம்பியதும் குர்லாவுக்குச் செல்லப் பணித்தார்கள். குர்லாவை அடைந்ததும் நங்கூரம் பாய்ச்சவில்லை. அங்குள்ள காலிவாத்துக்களை மலையின் வடக்குப் புறத்தில் மறைக்கும்படி மாலுமிகளுக்கு உத்தரவிட என்னையும் பர்னாண்டோவையும் அனுப்பினார்கள். கோட்டையி லிருந்த பணியாட்களையும் அப்புறப்படுத்தினார்கள். ஜலதீபத்தையும் வடக்குப் புறத்தில் மறைத்து நிறுத்தி னோம். எல்லா உத்தரவுகளையும் சுவாமியும் தளபதியும் தான் இட்டார்கள். உங்களுக்கு மயக்க மருந்து கொடுத்ததும் அவ்விருவர்தான். ஆனால் உங்களைத் தூக்கி வந்தது மட்டும் நாங்கள்'' என்று தட்டுத் தடுமாறிக் கூறினான்.

இதயசந்திரன் ஒரு கையை இப்ரஹீமின் தோளிலும் இன்னொரு கையை பர்னாண்டோவின் தோளிலும் போட்டு ஹர்கோவிந்தைப் பார்த்து, ''ஹர்கோவிந்த், நீராட்டத்துக்கு ஏற்பாடு செய். நான் சீக்கிரம் கோட்டைக்குப் போக வேண்டும்'' என்றான்.

அவன் கொண்டாடிய சொந்தத்தாலும், அன்புச் சொற்களாலும் சாந்தியடைந்த இப்ரஹீம், பர்னாண்டோ,

ஹர்கோவிந்த் மூவரும் தங்கள் அலுவல்களைக் கவனிக்கச் சென்றார்கள். இதயசந்திரன் வெகு சீக்கிரம் நீராட்டத்தை முடித்துக்கொண்டான். பிறகு உபதளபதி அறையிலிருந்த பெரிய மரப்பெட்டியிலிருந்த பல உடைகளை அலசிப் பார்த்து நல்ல மாலுமி உடையொன்றை எடுத்து அணிந்து கொண்டான். பிறகு இடுப்பில் கச்சையணிந்து மகாராஷ்டிர வளைவு வாளைப் பொருத்தி, இரு கைத்துப்பாக்கிகளையும் செருகிக் கொண்டான். பிறகு தலை சீவி நெற்றியில் சந்தனமணிந்து வெளியே ராஜகோலத்தில் வந்த இதயசந்திரனைப் பார்த்த பிரும்மேந்திர ஸ்வாமியே ஆச்சரியத்தில் திளைத்தாரென்றால் தளபதி உடையிலிருந்த மஞ்சுவைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? அவள் பெருவிழிகள் வியப்பால் மிகப் பெரிதாயின. அவற்றில் ஆவல் மலர்ந்து கிடந்தது. சுவாமிக்குப் பக்கத்தில் நீராடி மிகக் கம்பீரமாக முகவெட்டுடன் நின்றிருந்த நிம்கர்கூட இதயசந்திரனின் கோலத்தைப் பார்த்துப் பிரமித்தான்.

இதயசந்திரன் அந்த மூவரையும் ஒருமுறை நோக்கினான். அவன் விழிகள் கடைசியில் மஞ்சுவின்மீது நிலைத்தன. ''தளபதி! இப்படி வாருங்கள்'' என்ற அழைப்பிலும் மரியாதையும் உத்தியோக தோரணையுமிருந்தது.

மஞ்சு அவனை ஒரு விநாடி வியப்புடன் நோக்கினாள். பிறகு மெல்ல நடந்து அவனருகில் வந்தாள். ''எதற்கு அழைத்தீர்கள்?'' என்று கேட்கவும் செய்தாள்.

'நான் இப்பொழுது கைதிதானே?' என்று வினவினான் இதயசந்திரன்.

பதிலுக்கு மஞ்சு சுவாமியைப் பார்த்தாள். சுவாமியின் கண்கள் இதயசந்திரனை நோக்கின. சிறிது சிந்தனையில் திளைத்தன. ''ஆம், பேஷ்வாவின் உத்தரவுப்படி நீ கைதிதான்'' என்றார்.

அதைக் கேட்டதும் தனது இடைக் கச்சையிலிருந்து இரு கைத்துப்பாக்கிகளையும் எடுத்து, கச்சையை அவிழ்த்து, கச்சை, வாள், கைத்துப்பாக்கிகள் அனைத்தையும் மஞ்சுவிடம் நீட்டி, ''தளபதி! இவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறினான்.

கைதியென்ற முறையில் அவன் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதென்பது விதியென்பதையும் தளபதியென்ற முறையில் தன்னிடம் ஆயுதங்களைக் கொடுத்துச் சரணடைகிறானென்பதையும் புரிந்து கொண்டாளானாலும், அவற்றை அவள் கைநீட்டி வாங்கிக் கொள்ளவில்லை. ''சுவாமி! இவர் இப்படிச் சரணடைய வேண்டியது அவசியமா?'' என்று வினவினாள். அவள் சொற்கள் தடுமாற்றத்துடன் வெளிவந்தன.

பிரும்மேந்திர ஸ்வாமியின் நிலை சங்கடத்திலிருந்தது. பம்பாயில் பானுதேவிக்காக அவனை நிராயுதபாணியாக்கிச் சிறையில் வைத்தபோது கூட ஏற்படாத உணர்ச்சிப் பெருக்கு அவருக்கு அப்பொழுது ஏற்பட்டது. மேலைக் கடலின் மகாராஷ்டிர ஆதிக்கத்தை நிலை நிறுத்த பெரும் செயல்களைப் புரிந்த அந்த மகாவீரன் அன்று கையில் ஆயுதங்களை ஏந்தி நீட்டிக் கைதியாக முனைந்து நின்றது எதற்கும் அசையாத அவரையும் அசைய வைத்தது. ஆகவே, சற்று சங்கடத்துடனேயே சொன்னார் சுவாமி. ''உபதளபதி சொல்வது ராணுவ சட்டதிட்டப்படி நியாயமானது'' என்று.

மஞ்சுவின் விழிகள் இதயசந்திரன் விழிகளுடன் உறவாடின ஒரு விநாடி. பிறகு நடுங்கும் கைகள் அவன் கையிலிருந்த கைத் துப்பாக்கிகளையும் வாளையும், கச்சையுடன் வாங்கிக் கொண்டன. அவற்றை எடுத்துக் கொண்டு அவனைப் பார்க்காமல் தனது அறைக்கு ஓடிய மஞ்சு அறைக்குள் நுழைந்ததும் அந்த ஆயுதங்களையும் கச்சையையும் மார்பில் இறுக அணைத்துக் கொண்டாள்.

அவள் உடல் லேசாக ஆடியது. அவள் கண்களில் நீர் ஊற்றெடுத்துப் பெருகி அழகிய கன்னங்களில் வழிந்து தோடின. அந்த ஆயுதங்களை மார்பிலிருந்து எடுத்துப் பஞ்சணையில் வைத்துத் தரையில் மண்டியிட்ட மஞ்சு, 'இதென்ன விபரீதம்? கணவன் சிறைப்பட மனைவியா காரணமாக வேண்டும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அவள் மனம் சுக்குநூறாக உடைந்து விடும் போலிருந்தது. இதயசந்திரன் ஆயுதங்களைத் தனது பெட்டியில் பத்திரப் படுத்திவிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

இதயசந்திரனையும் அந்த முகவெட்டு வீரனையும் ஏற்றிச் செல்ல இரு படகுகள் தயாராயிருந்தன. அந்தப் படகுகளொன்றில் பதுமைபோல் இதயசந்திரனுடன் இறங்கி அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள் மஞ்சு. படகு நகர்ந்த பின்பும் அந்த நிலையிலேயே இருந்தாள் அவள். அவள் மட்டுமல்ல அந்தக் குழப்பமான மனநிலையில் இருந்தது; பின் படகில் வந்து கொண்டிருந்த முகவெட்டு வீரன் நிலையும் அப்படித்தானிருந்தது. படகிலிருந்த வரையிலும் சரி, படகுகள் கரையை அடைந்து மணலில் இழுக்கப்பட்ட பிறகும் சரி, அவன் தீவிர மௌனத்திலிருந்தான். பக்கத்திலிருந்த பர்னாண்டோ கேட்ட கேள்விக்குக்கூட அவன் பதிலேதும் சொல்லவில்லை. குழப்பத்துடன் தலையை அசைத்துவிட்டுக் கடற்கரை மணலில் எல்லோருக்கும் முன்பு நடந்தான். அவனைத் தொடர்ந்த இதயசந்திரன், மஞ்சு, பிரும்மேந்திர ஸ்வாமி மூவரும் மணலைக் கடந்து கோட்டைக்குள் நுழைந்ததும், மஹாதர்வாஜா வாயிலில் அவர்களை கனோஜி வரவேற்றார். அவர் முன்பு இதயசந்திரன் மண்டியிட்டு வணங்கினான். அவன் நிராயுதபாணியாயிருப்பதைக் கண்ட கனோஜியின் முகத்தில் சினத்தின் அறிகுறிகள் தெரிந்தன. ''இவனை யார் நிராயுதபாணியாக்கியது?'' என்றும் கேட்டார் அவர்.

''யாரும் ஆக்கவில்லை, அவரே ஆயுதங்களைக் கழற்றிக் கொடுத்துச் சிறைப்பட்டார்'' என்றாள் மஞ்சு.

''யாரிடம்?'' என்றார் கனோஜி.

''என்னிடம்.'' மஞ்சு சொன்னாள் வெட்கத்துடன்.

சாதாரண காலமாயிருந்தால் இதைக் கேட்டதும் கனோஜி இடியிடியென நகைத்திருப்பார் பெரிதாக. ''உன்னிடம்தான் இந்தத் தமிழன் ஏற்கெனவே சிறைப்பட்டுவிட்டானே'' என்றும் விஷமமாகப் பேசியிருப்பார். அன்று அவரிடம் அத்தகைய விஷமம் ஏதுமில்லை. முகத்தில் சிறிது கவலையும் இருந்தது. அவருடைய கண்களும் பிரும்மேந்திர ஸ்வாமியின் கண்களும் கலந்தன ஒரு விநாடி. பிறகு கனோஜி ஏதும் பேசாமல் கோட்டைமின் உட்புறம் சென்றார். மற்றவர்கள் அவரைத் தொடர்ந்தனர். இதயசந்திரன் கனோஜியின் மாற்றத்தைக் கவனித்தான். பிரும்மேந்திர ஸ்வாமியையும் கனோஜியையும் பெரும் கவலையில் ஆழ்த்தக்கூடிய ஏதோ ஒரு விஷயம் நடந்திருக்கிறது என்று மட்டும் அவனுக்குப் புரிந்ததேயொழிய அது என்னவாக இருக்கக்கூடும் என்பது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை. அன்று மாலை அது விளங்கியபோது அவனுக்கு அது பேரதிர்ச்சியாயிருந்தது.

அத்தியாயம் 43

குலாபியின் பிரசாதம்

கனோஜி ஆங்கரே வழிகாட்டி முன் செல்ல, அவருக்கு அடுத்தபடி இதயசந்திரன் நடக்க, இதய சந்திரனுக்குப் பின்னால் மஞ்சு, பிரும்மேந்திர சுவாமி, நிம்கர் மூவரும் தொடர்ந்துவர சென்ற இந்த ஊர்வலத்தை அன்று கொலாபா கோட்டை மக்கள், வழி நெடுகிலும் ஆங்காங்கு கும்பல் கும்பலாக நின்று கண்டனர். வழியின் கேந்திர ஸ்தானங்களில் காவல் புரிந்த கோட்டை வீரர் சிலர்கூடத் தங்கள் காவலைச் சிறிது தளர்த்தி, வாட்களைக் கீழே தாழ்த்தி, இதயசந்திரனுக்கு மரியாதை செய்யும் தோரணையில் அவனை உற்றுப் பார்க்கவும் செய்தனர். ஆலிபாக்கிலிருந்து கொலாபாவுக்குச் சாமான்களை விற்பனைக்குக் கொண்டு வந்து தோர்லாவாடாவையும் அடுத்திருந்த வீரர் விடுதிகளையும் நோக்கிச் சென்று கொண்டிருந்த வணிகப் பெண்மணிகளும் தலைகளிலிருந்த தயிர், பால் குடங்களுடனும், மூங்கில் கூடைகளுடனும் சற்று நின்று, அந்த ஊர்வலத்தைக் கவனித்தார்கள். கனோஜி ஆங்கரேயும் மற்றவர்களும் ஒரே சீராக நடந்த தோரணையும், யார் முகத்திலும் சிரிப்பில்லாத தோற்றமும் இதயசந்திரன் வரவில் ஏதோ விபரீதமிருப்பது போன்ற எண்ணம் பார்த்தவர்கள் சிந்தையில் உதயமான தால், அவர்கள் அதிக நேரம் பார்த்துக்கொண்டு நிற்காமல், சற்றுப் பார்த்துவிட்டுத் துரிதமாகத் தங்கள் வேலையைப் பார்க்கச் செல்வது போல் அபிநயித்தார்கள்.

சாதாரண மக்களின் வீரரின் வணிகப் பெண்களின் இந்தப் பார்வையெல்லாம் இதயசந்திரன் கவனிக்கவே செய்தானானாலும் அவற்றைப்பற்றி ஏதும் பொருட்படுத் தாமலே நடந்தான். தோர்லாவாடாவை அணுகிய பின்பும்

நிலை அதே மாதிரிதான் இருந்தது இதயசந்திரன் சம்பந்தப் பட்டவரை. தோர்லாவாடாவின் வாயிலில் வாள் தாழ்த்தி, சிரம் தாழ்த்தி வணக்கம் செய்த வீரர்களின் முகத்திலும் புன்சிரிப்பையோ, வேறு சந்தோஷத்தையோ காணவில்லை அவன். கனோஜியின் முகத்திலிருந்த கவலையே அவர் களுக்கும் இருந்ததால் ஏதோ விரும்பத்தகாத விவகாரம் தன்னைப்பற்றி நிகழ்ந்திருப்பதைப் புரிந்துகொண்டாலும், அது எதுவாயிருக்கும் என்ற சிந்தனை சிறிதளவுமில்லாமல், தன் இதழ்களில் புன்முறுவலைத் தவழவிட்டுக் கொண்டு தோர்லாவாடாவுக்குள் கனோஜியைத் தொடர்ந்து நுழைந்தான் தமிழன்.

உள்ளே நுழைந்ததும் கனோஜி தமது மௌனத்தைக் கலைத்து, ''இதயசந்திரா! நீ உனது பழைய அறைக்குச் செல் உன் மனைவியுடன்'' என்று கூறிவிட்டு இரு காவலரை அழைத்து, ''நிம்கரை மாளிகையின் கடைபகுதி யிலுள்ள சிறு அறையில் தங்க வையுங்கள். பேஷ்வா கூறும் போது அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்று உத்தர விட்டு, பிரும்மேந்திர சுவாமியை மட்டும் தம்முடன் அழைத்துக்கொண்டு தனது மந்திராலோசனை அறைக்குச் சென்றார். பிறகு அவரையோ சுவாமியையோ இதய சந்திரன் அன்று மாலை வரை சந்திக்கவே இல்லை. நேராகத் தனது பழைய அறைக்குச் சென்ற இதயசந்திரன் அந்த அறையின் மஞ்சங்களும் இதர ஆசனங்களும் பழைய படியே இருந்ததைக் கவனித்தான். அதே அறையில் காதரைன் தன்னிடமிருந்து பிரிந்த நிலையும் அவன் கண்முன் எழுந்தது. மனைவியாக இஷ்டப்படாமல் மனைவி பெறக்கூடிய சுகத்தை மட்டும் தன்னிடமிருந்து விரும்பிய காதரைனை நினைத்த அவன் அன்றும் பரிதாபப் பட்டான். அந்த அறையும் அறையைத் தாங்கிய ஐந்தடுக்கு உப்பரிகையுமுடைய தோர்லாவாடாவும் தோர்லாவாடாவைத் தாங்கிய கொலாபாவும் தன் வாழ்க்கையின் எத்தகைய கட்டங்களைத் தொட்டிருக்

கின்றன என்பதை நினைத்துப் பார்த்தான் அவன். தான் மாலுமித் தொழில் பயில இறங்கியது சுவர்ண துர்க்கத்திலென்றாலும் கொலாபாவே தனது பெயருக்கும் சிறப்புக்கும் அத்தாட்சியாக விளங்கியிருக்கிறதென்பதை எண்ணிப் பார்த்ததால் அதனிடம் அவனுக்கு ஒரு தனிப்பாசமும் ஏற்பட்டது அந்தச் சமயத்தில். 'இத்தனைக்கும் காரணம் நானா? மஞ்சுவா? கனோஜியா?'' என்று வினவிக்கொண்டான் ஒருமுறை. 'கனோஜிதான்' என்ற நினைப்பு உள்ளூரத் திடமாக எழவே, 'என்னை மாலுமியாக்கினார்; உபதளபதியாக்கினார். தரைப்படை தலைவராக்கினார். பெண்ணையும் கொடுத்தார்' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். இந்த நினைப்புகளுடன் அந்த அறை பூராவையும் இரண்டு மூன்று முறைகள் பார்த்து விட்டுப் பிறகு மஞ்சுவை நோக்கிச் சிரித்தான் கலகலவென்று.

அதுவரை அவன் அந்த அறையைப் பார்த்துப் பார்த்துச் சிந்தனையில் ஆழ்ந்து நின்றதை எண்ணிய மஞ்சு, அவன் திடீரெனச் சிரிப்பதைப் பார்த்து, ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் கவலை தோய்ந்த குரலில்.

''கதவைத் தாழிடு. சொல்கிறேன்'' என்று கூறிய இதயசந்திரனை ஒருமுறை தன் அகல விழிகளால் நோக்கிய மஞ்சு, சரசரவென நடந்து சென்று கதவைத் தாழிட்டு வந்தாள். ''சொல்லுங்கள்'' என்றும் கேட்டாள்.

''என்ன சொல்ல மஞ்சு,'' என்று வினவினான் இதயசந்திரன்.

''நீங்கள் நகைத்த காரணம்?'' என்றாள் மஞ்சு.

இதயசந்திரன் ஒரு விநாடி யோசித்தான். பிறகு பஞ்சணையில் உட்கார்ந்துகொண்டு எதிரே நின்று மஞ்சுவை நோக்கி, ''மஞ்சு! இந்தக் கொலாபாவுக்கு நான் வருவது இதல்ல முதல் தடவை'' என்றான் மெல்ல.

அவள் அதை எதற்காகப் புதிதுபோல் கூறுகிறான் என்பது புரியாவிட்டாலும் மஞ்சு, 'ஆம்' கொட்டினான் பதிலுக்கு.

''நான் வந்தபோதெல்லாம் இங்கு வீரர்கள் குதூகலமாக இருப்பார்கள். நகைப்பார்கள். மாலுமிகள் கூச்சல் தாங்க முடியாது. வணிகப் பெண்கூட வெட்க நகை நகைப்பார்கள்.''

''ஆம்.''

''உன் தந்தை நகைத்தால் இடி இடிப்பது போலிருக்கும்.''

''ஆம்.''

இதயசந்திரன் மீண்டும் மௌனம் சாதித்தான். ''அந்த இடிபோன்ற நகைப்பு, விஷமப் பேச்சு எதுவுமே உன் தந்தையிடம் காணோம் இன்று. வழியில் பார்த்தவர்களிடமெல்லாம் கலகலப்பு இல்லை. இந்தத் தீவுக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது, துன்பம் இதில் தோய்ந்து கிடக்க? உல்லாசம் இதைவிட்டு விலக என்ன நடந்துவிட்டது? தீவு போய் விட்டதா அல்லது நான்தான் போய்விட்டேனா?'' என்று கேள்விகளை அடுக்கினான் தமிழன்.

மஞ்சு மெல்ல நடந்து அவனருகில் வந்து நின்று கொண்டாள். ஒருமுறை பெருமூச்செறிந்ததால் அவன் முகத்துக்கு நேரிலிருந்த அவள் மார்பு ஒருமுறை ஏறி இறங்கியது. தனது இரு கைகளாலும், அவன் தலையைப் பிடித்து மார்பில் அணைத்துக்கொண்ட அவள் குனிந்து அவன் காதுக்கருகில் சொன்னாள்: ''உங்களைப் பிடிக்க நான் கிளம்பும்போது கொலாபாவும் இப்படி இல்லை, தந்தையும் இப்படியில்லை'' என்று.

அவள் மார்பில் புதைந்து கிடந்த தலையை நீக்கிக் கொண்டு தனது இரு கைகளாலும் அவளைப் பிடித்துச் சற்று எட்ட நிறுத்திய இதயசந்திரன், ''இன்று ஏன் இப்படி மாறிவிட்டது கொலாபா? உன் தந்தை ஏன் இப்படி மாறிவிட்டார்?'' என்று வினவினான்.

மஞ்சுவின் முகத்திலும் சிந்தனை படர்ந்தது. ''இன்று மாலைக்குள் எப்படியும் கண்டுபிடித்துவிடுகிறேன்'' என்றாள் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

அதுவரை எங்கெங்கோ அலைந்துவிட்ட அவள் மனம் இதயசந்திரன் உணவேதும் அருந்தவில்லையென்ற உணர்வை அடைந்ததால், ''இருங்கள் வருகிறேன்'' என்று கூறி வெளியே சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் உணவுத் தட்டுக்கள் இரண்டு மூன்றுடனும் ஒரு செம்பில் தண்ணீருடனும் வந்து சேர்ந்தாள். கதவை மீண்டும் சாத்திவிட்டுப் பரிமாறவும் தொடங்கினாள்.

''நீயும் சாப்பிடு, மஞ்சு'' என்று இதயசந்திரன் அவளையும் எதிரே உட்காரச் சொன்னான் ஓர் ஆசனத்தில்.

சரியென்று உட்கார்ந்து அவள் உணவுத் தட்டைத் தனது மடியில் வைத்துக்கொண்டு உணவைக் கலந்து வைத்து, ''சாப்பிடுங்கள்'' என்றாள்.

இதயசந்திரன் சாப்பிடவில்லை. அவள் மடியில் கையை வைத்தான், ''நீ முதலில் சாப்பிடு'' என்றான்.

''அது கூடாது'' என்றாள் மஞ்சு.

''ஏன்?'' என்று வினவிய இதயசந்திரனின் கை ஆகாரத்தைத் தொடவில்லையே தவிர, அவள் மடியை நன்றாகத் தொட்டுக்கொண்டிருந்தது.

''கணவன் உண்ட பின்புதான் மனைவி உண்ணலாம்'' என்று கூறிய மஞ்சு, ''உம்'' என்று அதட்டி அவன் கையை மடி ஆராய்ச்சியிலிருந்து விலக்கினாள்.

''சரி மஞ்சு! இரண்டு பேரும் ஒன்றாகச் சாப்பிடலாம்'' என்றான் தமிழன்.

''கூடாது. நீங்கள் சாப்பிட்ட பின்பு பாக்கியை நான் சாப்பிடுவேன்.''

''எச்சில் மஞ்சு.''

''இங்குதான் எச்சில் போலிருக்கிறது?''

''வேறெங்கு?''

''நல்ல கேள்வி.'' இதைச் சொல்லி அவள் நகைத்தாள் குழந்தையில் மண்டிக் கிடந்த துன்பத்தை மறந்து.

நகைத்ததால் விலகிய அவள் மெல்லிய செவ்விய பெரிய இதழ்களை அவன் கவனித்தான். அதில் ஊறிய அமுதத்தையும் கவனித்தான். அவள் கூறியதன் உண்மை, நகைத்ததன் உண்மை அவனுக்கு நன்றாகப் புரிந்தது. மேற்கொண்டு ஏதும் பேசாமல் தட்டிலிருந்து ஒரு கவளத்தை எடுத்துப் பலவந்தமாக அவள் வாயில் ஊட்டினான். முகத்தில் வெட்கம் பிடுங்கித் தின்ன அவள் கவளத்தைச் சுவைத்து விழுங்கினாள். பிறகு இதயசந்திரன், தானே ஒரு கவளம் எடுத்து விழுங்கினான். இப்படி அவளுக்கொரு கவளம் தனக்கொரு கவளமாக உண்டு முடித்த பின்பு நீர் கொண்டு அவள் வாயைத் துடைத்து, தானும் கை கழுவி வாயைத் துடைத்துக் கொண்டான். பிறகு தட்டு முதலியவற்றை அவளே அந்த அறை மூலையில் கொண்டுபோய் வைத்தான். மீண்டும் பஞ்சணையில் உட்கார்ந்ததும் ''பான்'' என்று கைநீட்டினான்.

அவள் வெற்றிலை மடித்துக் கொடுக்க அவன் அதை நன்றாகக் குதப்பி விழுங்கிவிட்டுப் பஞ்சணையில் நன்றாகக் கால் நீட்டிப் படுத்தான்.

மஞ்சு சில வினாடிகள் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு, ''நான் வெளியே சென்று வருகிறேன்'' என்று அனுமதி கேட்டாள்.

''எங்கு போகிறாய் மஞ்சு?''

''இந்த அரண்மனைக்கு வெளியே?''

''எதற்கு?''

''வீரர்களை விசாரிக்க.''

''கொலாபாவின் துன்பநிலை பற்றியா?''

''ஆம்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றாள் மஞ்சு.

அவள் சென்றபின் இதயசந்திரன் நன்றாகப் படுத்துறங்கினான். சுமார் நான்கு நாழிகைகளுக்குமேல், அவன் விழித்தபோது விளக்கு வைப்பதற்கு இரண்டு மூன்று நாழிகைகளே இருந்தபடியால் அறையைவிட்டு வெளியே வந்து தோர்லாவாடாவுக்குள்ளேயே இங்குமங்குமாக உலாவினான். அந்த அரண்மனையின் பல கட்டுக்களில் காவல் புரிந்து நின்ற வீரர்களுடன் சிரித்துப் பேசினான். அவர்களும் பதிலுக்குச் சிரித்தாலும், அந்தச் சிரிப்பு இயற்கையாயில்லாததையுங் துன்பத்தின் அஸ்திவாரத்தில் எழுவதையும் பார்த்தான். எது எப்படியிருந்தாலும் இரவுக்குள் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விடும் என்ற நினைப்பால் எதைப் பற்றியும் கவலைப் படாமல் தோர்லாவாடாவை விட்டு வெளிக் கிளம்பினான். கொலாபாவின் பல பாகங்களில் திரிந்துவிட்டு விளக்கு வைக்கும் நேரத்தில் குலாபியின் கோயிலுக்கு வந்தான்.

அவன் கோயிலை அணுகிய சமயத்தில் கோவில் சேவகர், தீபங்களை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். கோவில் மணியும் டணார் டணார் என்று அடித்தது. அதைக் காதில் வாங்கியதால் உள்ளே நுழைந்த இதயசந்திரன் ஜகன்மாதாவான அம்பிகையின் சன்னிதானத்தில் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்திருந்தான். குலாபியின் அருட்கண்கள் அவனை நோக்கின. பெரும் சாந்தி அவன் மனத்தில் நிலவியது. அர்ச்சகர் அவனை அன்புடன் வரவேற்றுக் குலாபிக்குக் கற்பூரம் ஏற்றிக் காட்டினார். இந்தச் சமயத்தில் குலாபியின் சிரத்திலிருந்து ஒரு செம்பருத்தி மலர் அவன் பாதத்தில் விழுந்தது. கற்பூரம் காட்டிய அர்ச்சகர் தட்டை ஒரே நிலையில் நிறுத்தினார். ''தமிழா! எடுத்துக்கொள் அந்த மலரை'' என்று உணர்ச்சியுடன் பெரிதாகக் கூறினார்.

அவர் உணர்ச்சிக் கூச்சலுக்கு அவனுக்குக் காரணம் தெரியவில்லையாயினும், நடுங்கும் கைகளுடன் குலாபியின் திருவடியிலிருந்த அந்த மலரை எடுத்துக் கண்களில்

ஒற்றிக் கொண்டான். அர்ச்சகர் நீண்ட நேரம் தட்டை ஏந்தி, குலாபியின் முகத்தைக் கவனித்துக்கொண்டே இருந்தார். கற்பூரத் தட்டுத் திடீரென நடுங்கத் துவங்கியது. அதை மெல்ல அம்பிகையின் காலடிப் பக்கத்தில் வைத்தார் அர்ச்சகர் குனிந்து. பிறகு எழுந்து நின்ற நிலையில் அவர் உடல் நடுங்கியது. மெல்ல அவர் வாயிலிருந்து சொற்கள் உதிர்ந்தன, ''இந்த மலரை அவளிடம் கொடு'' என்று.

தலையை அசைத்தான், வணங்கினான் இதயசந்திரன். ''தாயே, அப்படியே செய்கிறேன்'' என்றான் சற்று இரைந்து.

''இப்படிக் கொடுங்கள்'' என்று கேட்டது மஞ்சுவின் கொஞ்சும் குரல், அவனுக்குப் பின்னாலிருந்து. பதுமை போல் திரும்பி அவளிடம் மலரைக் கொடுத்தான் தமிழன். மஞ்சு மலரைக் கண்களில் ஒற்றிக்கொண்டு தலையில் சூடிக்கொண்டாள். அவள் மலரைச் சூடிய மறுவினாடி அர்ச்சகர் உடல் நடுக்கம் நின்றது. அவர் கண்களைத் திறந்து இதயசந்திரனைப் பார்த்து, ''தமிழா! இந்த மலருக்கு எத்தனையோ பிரபுக்கள், மன்னர்கள் ஏங்கி நிற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கிடைக்காதது உனக்குக் கிடைத்திருக்கிறது'' என்று கூறிவிட்டு, ''இதை அம்பிகை கொடுத்ததன் ரகசியம் தெரியுமா?'' என்றும் வினவினார்.

அவனுக்கு உண்மையில் பொருள் தெரியவில்லை. ஆனால் மஞ்சுவுக்குத் தெரிந்ததால் அவள் முகத்தில் வெட்கம் தாண்டவமாடியது. முகத்தை அவள் தொங்கப் போட்டுக் கொண்டாள். இரகசியத்தை மெல்ல விளக்கினார் அர்ச்சகர். அந்த விளக்கத்தில் பல விஷயங்கள் விளங்கின தமிழனுக்கு. கனோஜியின் கவலைக்குக்கூடக் காரணம் விளங்கிவிட்டது அவனுக்கு. குலாபியின் அருள் பிரசாதம், அவனைச் சூழ்ந்து கிடந்த இரகசிய இருளை ஒரு வினாடியில் கிழித்தெறிந்துவிட்டது.

அத்தியாயம் 44

மஞ்சுவின் ரகசியம்

உலக மாதாவின் தலை உச்சியிலிருந்து அவள் திருவடிகளில் செம்பருத்தி மலர் விழுந்த ரகசியத்தைப் பற்றி விளக்க முற்பட்ட அர்ச்சகர், ''தமிழா! மகாராஷ்டிர மன்னர்களுக்குக்கூடக் கிடைக்காத மாபெரும் பாக்கியம் உன்னைத் தேடி வந்திருக்கிறது. யாருக்காக அர்ச்சகன் கற்பூரத் தட்டை ஏந்துகிறானோ அந்தச் சமயத்தில் தேவி தனது தலையிலிருந்து செம்பருத்தி மலர் உதிர்ப்பாளானால் அந்த மனிதனுக்குப் பெரும் புகழும் வீரமும் சத்துவகுணமும் உள்ள மகன் பிறப்பான் என்பது மகாராஷ்டிரர்களின் நம்பிக்கை. இப்படி ஒரு மலரை நாடி அம்பிகைக்கு அபிஷேகம் செய்து நாள் கணக்கில் காத்திருந்தவர்கள் உண்டு. காத்திருந்து இந்தப் பிரசாதம் கிடைக்காது திரும்பியவர்களும் உண்டு. ஆனால் இந்த அருள் உனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தப் புஷ்பம் யாருக்குக் கிடைக்கிறதோ அந்த மனிதன் எங்கிருந்தாலும், அவன் குழந்தை எங்கு பிறந்தாலும் அந்தக் குழந்தையை ஓராண்டுக்குள் குலாபியின் திருவடியில் சமர்ப்பித்து அவள் அருளைப் பெற வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் அந்தக் குழந்தைக்குச் செயற்கை மரணம் கிடையாது. வாழ்க்கையில் சகல சௌகரியங்களும் உண்டு. இது இக்கோயிலின் ஐதீகம். ஆகவே, உனக்குப் பிறக்கும் குழந்தையை ஓராண்டுக்குள் இங்குக் கொண்டு வா'' என்று கூறினார்.

இதயசந்திரன் இதயத்தில் வியப்பு மிதமிஞ்சித் துவங்கியது. ''குரு மகராஜ்! எங்களிருவருக்கும் திருமணமே இரண்டு மாதங்களுக்கு முன்புதானே நடந்திருக்கிறது! அதற்குள்...'' என்று கூறிய இதயசந்திரனைத் தனது

கையால் உயர்த்தி மேலே பேசவொட்டாமல் தடை செய்த அர்ச்சகர், ''நான் ஆவேசத்திலிருந்தபோது என்மூலம் தேவி என்ன சொன்னாள்?'' என்று வினவினார்.

''இந்த மலரை அவளிடம் கொடு என்று கூறினாள் தேவி'' என்றான் இதயசந்திரன்.

''சூல் இல்லாத பெண்ணுக்குச் சிவந்த மலரைக் கொடுக்கமாட்டாள் தேவி'' என்று குறிப்பிட்டார் அர்ச்சகர்.

இதயசந்திரன் சட்டென்று திரும்பி மஞ்சுவை நோக்கினான். மஞ்சு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிலத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். இதயசந்திரனுக்கு மெள்ள மெள்ள உண்மை புலனாயிற்று. ஒரு விநாடி அவன் உள்ளமெல்லாம் உடலெல்லாம் புல்லரித்தது. மகிழ்ச்சி வெள்ளம் அவனை நின்ற இடத்தில் நிலைக்க வைத்தது. பல விஷயங்கள் பளிச்சிட்டன அவன் மனத்தில் அப்பொழுது. மஞ்சு சூல் எய்தியிருக்கும் உண்மை கனோஜிக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று ஊகித்தான் அவன். தவிர, தன்னை ராணுவக் கட்டளையை மீறிய குற்றத்திற்காக பேஷ்வா விசாரிக்க ஏற்படலாமென்றும், அப்படி விசாரித்துத் தனக்குத் தீவிரமான தண்டனையும் விதிக்கப்பட்டால் மஞ்சுவின் கதி என்ன ஆகுமோ என்ற திகில் கனோஜிக்கு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் முடிவு செய்தான் தமிழன். தவிர, பேஷ்வா தன்னை விசாரிக்கப் போகும் விஷயம் ஏற்கனவே கொலாபா தீவில் பரவியிருப்பதால்தான் தன்னை உயிர் போல் நேசிக்கும் கொலாபா வீரர்களும் மற்றோரும் அத்தனை கவலையோடு இருக்கிறார்கள் என்பது அவனுக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. அந்தக் கவலையோடு மக்களுக்கு மஞ்சுவின் நிலை பற்றிய கவலையும் கலந்துகொண்டிருக்க வேண்டும் என்பது புலனாயிற்று தமிழனுக்கு. அப்படி அந்த ரகசியம் உடைபட்டதும், அவன் மனத்திலிருந்து சந்தேகத் திரை விலகியதும், பழைய இதயசந்திரனாக

முயன்றான் அவன். இருந்தும் அது சாத்தியமில்லை யென்பதையும் தந்தையாகப் போகும் பொறுப்பும், ஒரு விதப் பயமும் தன் மனத்தை அழுத்துவதையும் புரிந்து கொண்டான். அத்தகைய கனத்த மனத்துடன் தேவியைத் தண்டனிட்டு அர்ச்சகரிடம் விடைபெற்றுக் கோயிலிருந்து வெளிப் போந்தான். மஞ்சு அவனை நிழல்போல் தொடர்ந்தாள்.

இதயசந்திரன் ஏதோ சிந்தனையுடன் போகிற வழி தெரியாமல் நடந்தான். மஞ்சுவும் ஏதும் பேசாமல் மௌனம் சாதித்துக்கொண்டு அவனுடன் நடந்தாள். மெல்ல இருவரும் கால் போன வழி நடந்து ஒரு பாறையருகில் வந்ததும் திடீரென நின்றுவிட்டனர். இதயசந்திரன் சரேலெனத் திரும்பி, ''மஞ்சு! இந்த இடம்...'' என்று தடுமாறிப் பேசினான்.

மஞ்சு பதில் சொல்லவில்லை, தலைகுனிந்து நின்றாள். நீண்டு கிடந்த பாறையும் அதை மறைத்துத் தங்களுக்கு மணவறை சிருஷ்டித்த பாறையும் தன்னைப் பார்த்து நகைப்பனபோல் தோன்றியது மஞ்சுவுக்கு. எதற்கும் அஞ்சாத, சிறிதும் வெட்கப்படாமல் கேலி செய்யக்கூடிய மஞ்சுவின் அந்த நிலை பார்ப்பதற்குப் பரிதாபமாயிருந்தால், இதயசந்திரன் சற்று திரும்பி அவளைச் சுற்றித் தன் கைகளைச் சுழலவிட்டுத் தன்னை நோக்கி இழுத்து அவளை அணைத்துக் கொண்டான்.

பழைய அந்த மணவறைப் பாறையில் இறங்கி உட்கார்ந்துகொண்ட அந்த இருவரில் இதயசந்திரனே முதலில் சொற்களை உதிர்க்கத் தொடங்கினான்.

''இதை என்னிடம் மறைத்தேவிட்டாயே மஞ்சு?'' என்றான் இதயசந்திரன் அவளுடைய கழுத்தில் இதழ்களைப் புதைத்து.

கன்னத்திலும் கழுத்திலும் புதைந்த இதழ்களால் மஞ்சுவின் உணர்ச்சிகள் பெரிதும் கொந்தளித்துக்

கொண்டிருந்தன. அவற்றை அவன் கேள்வி சிறிது சமனப் படுத்தவே லேசாக நகைத்தாள் அவள்.

''ஏன் நகைக்கிறாய் மஞ்சு?'' என்ற கேள்வியை உதடு கேட்டது. கைகள் அவளை இழுத்து மடியில் படுக்க வைத்துக் கொண்டன.

''எந்தப் பெண்ணாவது கணவரிடம் போய்...?'' என்ற மஞ்சு அப்படியே நிறுத்தினாள் பேச்சை.

''போய்...''

''இதைச் சொல்லுவாளா?''

''சொல்லாவிட்டால் அவனுக்கு எப்படித் தெரியும்?''

''அவன் தாய் சொல்லுவாள் அல்லது அவள் தாய் சொல்லுவாள் மறைமுகமாக.''

''இப்பொழுது இருவரும் சொல்லவில்லையே?''

''தாய்தான் சொல்லியிருக்கிறாள். தாயில்லாதவர்களுக்கு யார் தாயோ அவள்தான் சொல்லியிருக்கிறாள்'' என்று மஞ்சு மிக மெதுவாகப் பதில் சொன்னாள். அதைச் சொன்னபோது அவள் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர் திரண்டு ஒருமுறை கன்னத்தில் வழிந்தோடவும் செய்தது.

இதயசந்திரன் அவள் கண்களைத் தன் கையால் துடைத்தான். சகல உயிர்களுக்கும் தாயான ஜகன் மாதாவையே மஞ்சு குறிப்பிட்டதையும் அவளுடைய தாயற்ற தன்மையை எண்ணி அவள் மனம் சஞ்சலமடைந்து கிடப்பதையும் எண்ணியதால் அவன் மனத்திலும் பெரும் சோகம் ஏற்பட்டது. அந்தச் சோகத்தின் விளைவாக மடியில் கிடந்த அவளது உடலுக்கு அடியில் தனது இரு கைகளையும் கொடுத்துச் சற்று தூக்கித் தன் மார்புக்கருகில் அவள் முகமிருக்கும்படியாக வைத்துக் கொண்டு, ''மஞ்சு! உனக்கும் எனக்கும் எல்லோருக்கும்

தாய் அவள்தானே? நீ தாயற்றவள், தகப்பன் இருக்குமிடம் ரகசியமாயிருக்கிறது. துன்ப நிலைதான் மஞ்சு. அனாதைகளுக்கு நாதியான அம்பிகையிருக்கிறாள் உனக்கு'' என்று தைரியம் சொன்னதோடு நில்லாமல், ''மஞ்சு!'' என்று மெள்ள மறுபடியும் அழைத்தான்.

அவன் கைகள் திருஷ்டித்த தொட்டிலில் கிடந்த அவள் கண்களை அவன் கண்களுடன் உறவாடவிட்டாள் ஒரு வினாடி. ''என்ன?'' என்றும் செம்பவள உதடுகளைத் திறந்து கூட்டினாள் ஒருமுறை.

''இப்பொழுது...'' தினறினான் தமிழன்.

''இப்பொழுது?'' புன்முறுவல் கோட்டினாள் மஞ்சு.

''அதாவது... இப்பொழுது.''

''இப்பொழுது என்ன?''

''எத்தனை நாளாக...? இப்படி?''

மஞ்சு கண்களை வேறுபுறம் திருப்பிக்கொண்டு சொன்னாள்: ''நீங்கள் போருக்குச் சென்றீர்கள் அல்லவா'' என்று.

''ஆம்'' என்றான் தமிழன்.

''அதற்கு முன்பு?''

''அதற்கு முன்பு...?''

''புரியவில்லையா உங்களுக்கு?''

''என்ன புரியவேண்டுமென்கிறாய்?''

''அடக் கஷ்டமே! என்ன சொல்லுவது உங்களுக்கு?'' என்று கூறிய அவள், ''அதற்கு முன்பு குளித்ததுதான்'' என்று எரிச்சலும் மகிழ்ச்சியும் வெட்கமும் கலந்த ஒலியில் கூறினாள். பிறகு அவனிடமிருந்து திமிற முயன்றாள்.

அவன் கைகள் இரும்பாக அவளைச் சுற்றி இறுகின. 'ஏன் திணறுகிறாய்?'' என்ற கேள்வியும் எழுந்தது அவனிடமிருந்து ஆசையுடன்.

''நான் குழந்தையா என்ன, நீங்கள் தூக்கி வைத்துக் கொள்வதற்கு?'' என்றாள் அவள்.

அவன் கண்கள் மிருதுவடைந்தன. ''மஞ்சு, உன்னைக் குழந்தையென்று இனிமேல் சொல்லமுடியுமா?'' என்று வினவினான் விஷமத்துடன். ''அதிருக்கட்டும் மஞ்சு, நான்..... நமது...'' ஏதோ இழுத்தான்.

''சொல்லுங்கள்'' என்றாள் மஞ்சு.

''நமது குழந்தையை எடுத்துக்கொள்ள எத்தனை நாளாகும்?'' என்று கேட்டான் அவன்.

''ஓராண்டுக்கு மேலாகும்'' என்றாள் அவள் சிரித்து.

''ஆம், ஆம், ஆகும்?'' என்றான் தமிழன்.

''என்ன ஆம், ஆகும்?'' என்று கேட்டாள் அவள்.

''குழந்தை பெரிய வீரனென்று குலாபி சொல்லியிருக்கிறாள். ராமன் பன்னிரண்டு மாதங்கள் கழித்துப் பிறந்தது போல் இவனும் பிறப்பான் போலிருக்கிறது?''

''அப்படியானால் நீங்கள் தசரதனா?''

''ஆம்.''

''இருக்க முடியாது.''

''ஏன்?''

''அவர் குழந்தையில்லாமல் தவித்து ஆயிரக்கணக்கான வருஷங்கள் யாகம் செய்து பாயசம் வாங்கி மனைவிமார்களுக்குக் கொடுத்தார். நீங்கள் என்ன கஷ்டப்பட்டீர்கள்.''

துன்பமெல்லாம் காற்றில் பறக்க நகைத்த இதய சந்திரன் அந்த மணவறைப் பாறையில் அவளை படுக்க வைத்தான். அவளருகில் தானும் உட்கார்ந்து அவள்

உடலுக்குக் குறுக்கே தனது ஒரு கையைப் போட்டுக் கொண்டான். இன்னொரு கை பாறையில் ஊன்றி யிருந்தது. நீண்டநேரம் அந்த நிலையில் சிந்தனையி லிருந்தான் அவன். ''எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் மஞ்சு.

''பிடிக்க வேண்டிய கோட்டையெல்லாம் பிடித்தாகி விட்டது மஞ்சு'' என்றான் இதயசந்திரன், அவள் மலர் உடலை ஆராய்ந்த வண்ணம்.

அவள் மலர்க்கையொன்று எழுந்து அவன் கழுத்தை வளைத்தது. ''அதற்குள் கவலை வந்துவிட்டதா?'' என்று வினவினாள் அவள், புன்முறுவல் உதடுகளில் தவழ.

''கவலை எதற்கு?''

''குடும்பம் அதிகரித்தால் கவலைதானே?''

''எனக்கென்ன கவலை? குலாபியிருக்கிறாள், பார்த்துக் கொள்கிறாள்.''

''இப்படித்தான் மனிதர்கள் சொல்லுகிறார்கள். குலாபியிடம் முழுநம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. கவலையிலிருந்து மீள்வதில்லை அவர்கள்'' என்று சொன்ன மஞ்சு, அவன் கழுத்தை இழுத்துத் தன் மார்புமீது முகத் தைப் பதிய வைத்துக்கொண்டாள்.

இதயசந்திரன் உடலில் உணர்ச்சிகள் பெரிதாகப் பிரவாகித்தன. வேகமாகப் பிரவாகித்தன. இருப்பினும் அவன் மெள்ளத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவன் கைகள் அவளை அணைத்தாலும் முகம் அவள் மார்பிலிருந்து எழுந்தது. ஆசை உந்தினாலும் ஏதோ கிலேசமும் பயமும் அவனை ஆட்கொண்டிருந்தன. அந்த நிலையில் அவன் கண்களுடன் அவள் கண்கள் உறவாடின. ''என்ன இன்று இப்படியிருக்கிறீர்கள்?'' என்ற கேள்வி ரகசியமாக உதிர்ந்தது உதடுகளிலிருந்து. வானத் தாரகை

களின் வெளிச்சத்தில் அவள் உதடுகள் பளபளத்தன சரத்துடன். அந்த ஈரத்தைத் துடைக்கத் துடித்தன அவன் உதடுகளும். இருப்பினும் அவன் மனத்தில் அச்சம் நிலவியது. தன்னை ஆரத் தழுவிய அவள் கரங்களை மெல்ல விலக்க முயன்றான் இதயசந்திரன்.

''ஏன்? இதற்குள் கசந்துவிட்டதா?'' என்று அவள் கேட்டாள், வேட்கை குரலில் உந்த.

''கரும்பு என்று கசக்கும் மஞ்சு? ஆனால்...''

''ஆனால்...''

''நீ இருக்கும் நிலையில்...''

''சே! சே! ஒன்றும் ஆகாது. இப்பொழுதானே ஆரம்பம்...''

''நிச்சயமாக ஒன்றும் ஆகாதா மஞ்சு?''

''ஆகாது. எங்களுக்குத் தெரியாதா?''

''உங்களுக்கு என்றால்?''

''பெண்களுக்கு...''

''இந்த வயதிற்குள்...''

''இதில் வயது ஏது? இயற்கை சொல்லிக் கொடுக்கும் பாடம்.''

அதற்குமேல் அவள் ஏதும் பேசவில்லை. அவள் உடலின் மோகனாஸ்திரங்கள் அவனை ஆட்கொண்டன. ஆரம்ப நாள் மணவறைப் படலத்துக்கும் இன்றைக்கும் மிகுந்த வித்தியாசமிருந்தது. இருவர் உடல் கூற்றில், அனுபவத்தில், ஆசையின் வேகத்தில், இருவரிடமும் எச்சரிக்கையிருந்ததால் மிதமிருந்தது, மிதமிருந்ததால் ஆனந்தம் அபரிமிதமாயிருந்தது.

இருவரும் அனுபவத்துக்குப் பிறகும் நீண்ட நேரம் அந்தப் பாறையிலேயே படுத்துக் கிடந்தனர். அப்படிப்

படுத்துக் கிடந்த நேரத்தில் மறுநாள் நிகழக்கூடிய விசாரணையைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தான் இதய சந்திரன். அந்த முடிவு கொடுத்த திடத்துடன் தோர்லாவாடாவுக்கு மஞ்சுவுடன் வந்தான். முதல் ஜாமம் முடியும் நேரத்தில் வந்தவன், மஞ்சுவை அறைக்குப் போகச் சொல்லிவிட்டு நேராக கனோஜி ஆங்கரேயின் அறைக்குச் சென்றான். அங்கு மிகுந்த ஆலோசனையி லிருந்த கனோஜி ஆங்கரேயை நோக்கி, ''உங்கள் கவலைக்குக் காரணம் தெரிந்துவிட்டது எனக்கு. பேஷ்வாவின் விசாரணை எப்பொழுது?'' என்று வினவினான், முன்கூட்டி முகவுரை ஏதுமில்லாமலே.

கனோஜி ஆங்கரேயின் பெருவிழிகள் அவனை ஏறெடுத்து நோக்கின. அவர் பயங்கர மீசையும் சிந்தனை யுடன் ஒரு முறை எழுந்து தாழ்ந்தது. மேஜை மீதிருந்த இரு கால்களின் பாதங்களும் ஒன்றையொன்று தட்டிக் கொண்டன. ''விசாரணையை அவசரமாக நடத்த வேண்டுமா?'' என்று இகழ்ச்சியுடன் வினவினார் அவனை நோக்கி.

''ஆம்'' என்றான் உறுதியான குரலில் தமிழன்.

அந்தக் குரலில் உறுதியையும் அவன் நின்ற தோரணை யையும் கவனிக்கத் தவறவில்லை ஷாஹூகார்ய துரந்த ரான கனோஜி, ''விசாரணையின் முடிவு ஏதாகும் என்று தெரியுமா உனக்கு?'' என்று வினவினார்.

''தெரியும்'' என்றான் தமிழன்.

''என்னுடைய, அதாவது தளபதியினுடைய உத்தரவை மீறியிருக்கிறாய் நீ'' என்று சுட்டிக் காட்டி னார் கனோஜி.

''ஆம்.''

''உன் உபதளபதிப் பொறுப்பைவிட்டுப் படை யிலிருந்து ஓடப் பார்த்திருக்கிறாய்.''

''ஆம்.''

''இதற்கெல்லாம் என்ன தண்டனை தெரியுமா?''

''மரண தண்டனை'' என்றான் இதயசந்திரன் அலட்சியமாக.

அதுவரை கோபத்தைக் காட்டாத கனோஜியின் முகத்தில் கோபம் மெள்ள துளிர்த்தது. அதைப் பற்றிக் கவலைப்படவில்லையா நீ?'' என்று கேட்டார் கரகரத்த குரலில்.

''இல்லை.''

''முட்டாள்! நானும் கவலைப்பட்டிருக்க மாட்டேன் முன்பு. ஆனால் நீ இப்பொழுது என் மகளின் கணவன்!'' என்று இரைந்தார் ஆங்கரே.

''அவளைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றான் இதயசந்திரனும் சற்று இரைந்து.

''ஏன்?''

''அவளைக் காப்பாற்ற ஒருவன் ஏற்பட்டுவிட்டான்.''

''யாரவன்?'' என்று இடியென எழுந்தது கனோஜியின் ஆத்திரக் குரல். அவர் கால்கள் மேஜையிலிருந்து இழு பட்டன. எழுந்து நின்றார் ராட்சதன்போல.

இதயசந்திரன் கண்கள் அவரை நன்றாக ஏறெடுத்து நோக்கின. ''அவள் மகன்'' என்ற சொற்கள் வெளி வந்தன அவன் வாயிலிருந்து வேகத்துடன்.

கனோஜியின் அசுர விழிகளில் சீற்றம் சிறிது மறைந்து கவலை துளிர்த்தது. ''அப்படியானால் அவள் நிலை தெரியுமா உனக்கு?'' என்ற கேள்வியில் அந்தக் கவலை தெரியவும் செய்தது.

''தெரியும்.'' இதயசந்திரன் பதில் உறுதியுடன் வந்தது.

''இப்பொழுது தெரிகிறதா என் கவலைக்குக் காரணம்?'' என்று வினவினார் கனோஜி.

''தெரிகிறது ஸார்கேல். நீங்கள் உயிர்போல் நேசிக்கும் வளர்ப்பு மகள் சூலுற்றிருக்கும் தருவாயில் அவள் நிலை துன்பத்திலாழ்ந்து விடுமானால் அவள் வாழ்வே நாசமாகு மென்று அஞ்சுகிறீர்கள். ஆனால் ஒன்று பிரபு! வீரன் மனைவியின் மங்கலத்தைப் பிடித்திருப்பது மனிதர் கையல்ல. தேவியின் கை'' என்று தைரியமூட்டினான்.

அது பெரிய வேதாந்தம்தான். கனோஜியும் குலாபி யிடம் அத்தகைய தீவிர நம்பிக்கை உடையவர்தான். இருப்பினும் அவர் மனத்தில் சாந்தியில்லை. அவர் புத்தி வெகு துரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது. கடைசியில் அவர் ஒரு முடிவுக்கு வந்து, ''சரி நீ உன் அறைக்குப் போ! நான் பிறகு வருகிறேன்'' என்றார். அவர் இதயத்தில் ஏதோ ஒரு திட்டம் உருவாகிவிட்டதை இதயசந்திரன் புரிந்து கொண்டான்.

அத்தியாயம் 45

பாலாஜியின் கண்கள்

மஞ்சுவையும் தன்னையும் பற்றி கனோஜி ஆங்கரே ஒரு முடிவுக்கு வந்து விட்டாரென்பதை இதயசந்திரன் உணர்ந்தானானாலும், அது என்ன முடிவு என்பதை உணர்ந்து கொள்ள முடியாத காரணத்தால் அதைப் பற்றிய சிந்தனையுடனேயே அவன் தன் அறையை அடைந்தான். அந்தச் சிந்தனை அவன் சித்தத்தில் தீவிரமா யிருந்ததால், மஞ்சு கேட்ட கேள்விகளுக்குக்கூட அவன் சரியான விடை பகரவில்லை. ''இத்தனை நேரம் தந்தை யின் அறைக்குத்தானே போயிருந்தீர்கள்?'' என்ற கேள்விக்கு ஒரு வெற்று ''ஆம்'' மட்டும் சுருக்கமாகப் பதிலாக வந்தது அவனிடமிருந்து.

அந்த ஒற்றைச் சொல் பதிலும் அவன் முகத்திலிருந்த குழப்பமும் அவன் சித்தம் சிந்தனையிலாழ்ந்திருந்ததை எடுத்துக் காட்டவே, அதுவரை பஞ்சணையில் படுத்திருந்த அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''இப்படி வாருங்கள்'' என்று பஞ்சணையில் அவனுக்கு இடம் விட்டாள். பதுமைபோல் நடந்து தன்னிடம் வந்து உட்கார்ந்த அந்த ஆண்மகனை மஞ்சுவின் ஒரு கை தழுவியது. இன்னொரு கை அவன் கையொன்றை எடுத்துத் தன் மடியில் போட்டு அழுத்திக் கொண்டது. அந்த நிலையில் கேட்டாள் அவள், ''தந்தையிடம் என்ன கேட்டீர்கள்? அவர் என்ன சொன்னார்?'' என்று.

''நாளை விசாரணையைப் பற்றிக் கேட்டேன்'' என்றான் அவன் வரண்ட குரலில்.

''என்ன சொன்னார் தந்தை?'' என்று அவள் கேட்டாள் அவனை.

''நேரடியாகப் பதிலேதும் சொல்லவில்லை. விசாரணை மிக அவசரமோ என்று கேட்டார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் காணப்பட்டார்'' என்றான் இதயசந்திரன், குரலில் ஓர் அசந்துஷ்டியையும் அசட்டையையும் காட்டி.

''என்ன முடிவு என்று ஏதாவது கோடி காட்டினாரா?'' என்று வினவினாள் மஞ்சு.

இதயசந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்தான். ''உன் தந்தை சொல்ல இஷ்டப்படாததை அவரிடமிருந்து கிரகிக்கக்கூடிய மனிதன் உலகத்தில் இனிமேல்தான் பிறக்கவேண்டும்'' என்று பதில் சொன்ன இதயசந்திரன், ''மஞ்சு! படுத்துக்கொள். எல்லாம் நாளைக்கு வெட்ட வெளிச்சமாகிவிடும்'' என்று கூறித் தன் இரு கைகளாலும் அவளைப் பிடித்துப் படுக்க வைத்தான். அவன் கைகள் அவள் உடலை ஆதரவுடன் தடவிக் கொடுத்தன. இருமுறை அவள் வயிற்றின் அருகில் வந்தபோது, சற்று நிற்கவும் செய்தன. அதற்குள் சூல் நிலை திட்டமாகத் தெரியாத காலம் அது. இருப்பினும் அதில் ஒருவனோ ஒருத்தியோ உறைகிறது நிச்சயம் என்ற காரணத்தால் மிகுந்த எச்சரிக்கையை அவன் கை அடைந்தது, அங்கு வந்தபோது. மனம் அதைவிட எச்சரிக்கை அடைந்தது.

கண்ணை மூடி உறங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்த நிலையில் அவன் கையின் நிதானத்தையும், அதிலிருந்து அவன் மனத்தின் எச்சரிக்கையையும் நினைத்து, உள்ளூர நகைத்துக்கொண்டாள் மஞ்சு. 'இந்த ஆண்பிள்ளைகள் மிகவும் கோழைகள். உலகில் பிரதி தினம் அக்கம் பக்கத்தில் நூற்றுக்கணக்கில் குழந்தைகள் பிறப்பதை அறிந்தும் தங்கள் மனைவிக்கு அந்த நிலை வந்தால் என்ன பயம் பயப்படுகிறார்கள்?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அந்த நினைப்பு கொடுத்த சந்துஷ்டியில் மெல்ல உறங்கவும் செய்தாள்.

ஆனால் இதயசந்திரனுக்கு உறக்கம் அடியோடு பிடிக்காததால் அவன் அவள் உறங்கியதும் எழுந்திருந்து அந்த அறையில் அங்குமிங்கும் உலாவினான். பிறகு, நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். மறுநாள் விசாரணையில் தான் எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் நினைத்துப் பார்த்தான். கடைசியாக அதைப் பற்றி ஒரு முடிவுக்கும் வந்து, ''கனோஜியின் முடிவோ, யார் முடிவோ எப்படியிருந்தாலும் என் முடிவு ஒன்றுதான். நான் தமிழகத்தில் அந்தத் தாய்க்குக் கொடுத்து வந்த ஆணைக்குப் புறம்பான எந்தத் தீர்ப்பையும் ஒப்புக் கொள்வதில்லை'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இந்த உறுதி அளித்த சாந்தியில் கண்களையும் மூடினான்.

மறுநாள் விசாரணைக்கு அவன் அழைக்கப்பட்ட போதும் அந்த உறுதியுடனேயே சென்றான். இரவு நேரம் கழித்து உறங்கியுங்கூட அவன் விடியற்காலையே விழித்துக் கொண்டு கடற்கரை சென்று கடலில் நன்றாக நீந்தித் துளைத்து நீராடினான். பிறகு தோர்லாவாடா வந்து புத்தாடை புனைந்து குலாபியின் ஆலயம் சென்று தேவியைத் தரிசித்து, குங்குமப் பிரசாதம் பெற்றுத் தனது நெற்றித் திலகத்தின் மத்தியில் அதைச் சிறிது அணிந்து கொண்டு, மீதியைக் கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான். அங்கிருந்து மீண்டும் தோர்லாவாடாவுக்கு வந்து தனது அறையில் விசாரணைக்குத் தயாராக இருந்தான். அவன் நீராடி வந்த பிறகும் மஞ்சுவின் கண்கள் மூடியே கிடந்தன. அந்த உறங்கிய நிலையிலும் முகத்தில் சில வேளை கவலை ரேகையும் இன்னும் சில வேளை மகிழ்ச்சிச் சாயையும் மாறி மாறித் தெரிந்தன. ஒருமுறை இதழ்கள் நன்றாக விரிந்து புன்முறுவல் கோட்டின. உறக்கத்திலும் அவள் எத்தனை அழகாயிருக்கிறாள் என்பதைப் பார்த்துப் பார்த்து மனம் பூரித்தான் இதயசந்திரன். அவளும் நீண்ட நேரத்துக்குப் பின் கண் விழித்து அவனை நோக்கினாள்.

அவன் நீராடி ஆடையணிந்த தோரணையைக் கண்ட பிறகு துள்ளி எழுந்தாள் பஞ்சணையிலிருந்து. ''ஏன் என்னை எழுப்பக்கூடாதா?'' என்றும் வினவினான் கெஞ்சும் பாவனையில்.

''எழுப்ப அவசியமில்லை தேவி'' என்றான் இதய சந்திரன்

தேவியென்ற சொல் அவளுக்கு மிகவும் பிடித்தது. தன்னை பத்தினியென்ற முறையில் அவன் அப்படி அழைப்பது அதுவே முதல் தடவை என்று எண்ணியதால் பெருமிதம் அடைந்தாள் மஞ்சு. அந்தப் பெருமை குரலிலும் துலங்கக் கேட்டாள்: ''கற்புடைய பெண்கள் பின் தூங்கி முன் எழவேண்டாமா?'' என்று.

''அவரவர்கள் நிலையைப் பொறுத்தது'' என்ற இதய சந்திரன் அவளை ஆசையுடன் நோக்கினான்.

அவன் எந்த நிலையைக் குறிப்பிடுகிறான் என்பதை அறிந்த அவள் வெட்கப் புன்முறுவல் கோட்டினாள். திடீரென்று அந்த வெட்கம் மறைந்து அவள் வதனத்தில் கவலை படர்ந்தது. ''விசாரணை இன்றுதானே?'' என்று கேட்டாள், குரலிலும் கவலை தெரிய.

''ஆம்'' என்றான் இதயசந்திரன்.

''அதற்குத்தான் இத்தனை படாடோபமா?'' என்றாள் அவள் கோபத்துடன்.

''இதில் படாடோபமேதுமில்லை. அந்தஸ்தை உத்தேசித்துப் புத்தாடை அணிந்திருக்கிறேன்.''

''என்ன அந்தஸ்தோ?''

''ராஜாராம் மகாராஜாவின் அந்தரங்க ராணியின் தூதன் ஸார்கேல் கனோஜி ஆங்கரேயின் மருமகன்.''

''பேஷ்வா விசாரணை துவங்கும்போது, தான் இஷ்டப்படி நடத்தவல்ல ஒரு சாதாரண மாலுமியைப் பார்க்க மாட்டார். தஞ்சை அரண்மனையின் தூதனைப் பார்ப்பார்.'' இந்தச் சொற்களை மிகுந்த கம்பீரத்துடன் உதிர்த்த இதயசந்திரன், ''தேவி, நீ போய்ச் சீக்கிரம் நீராடி வா'' என்று உத்தரவிட்டான் அவளுக்கு.

மஞ்சு அவனைச் சில விநாடிகள் நோக்கிக் கொண்டு நின்றாள். பிறகு மெல்ல நடந்து அறையைவிட்டு நகர்ந்தாள். அந்த நடையிலும் அவள் மனத்திலிருந்த கவலைச் சமை நன்றாகத் தெரிந்தது இதயசந்திரனுக்கு. அவள் வெகு சீக்கிரத்தில் நீராடி, புத்தாடை புனைந்து திரும்பி வந்தாள். அன்று அவள் சீலை கட்டவில்லை. விலை உயர்ந்த ஆடைகளையும் அணியவில்லை. மாலுமிகள் அணியும் சராயையும் மேலே பிரிட்டிஷார் அணியும் சட்டையையும் அணிந்திருந்தாள். அந்தச் சட்டையும் சராய்க்குள் செலுத்தப்பட்டிருந்ததால் அவள் எழில்களை ஆடை மறைப்பதற்குப் பதில் அவற்றை நன்றாக எடுத்துக் காட்டவே செய்தது.

இதயசந்திரன் அவளை ஆசனத்தில் உட்கார்ந்தபடியே ஏறெடுத்து நோக்கினான். ''இதென்ன ஆடை மஞ்சு?'' என்று வினவினான்.

''உங்களை முதலில் சந்தித்தபோது புனைந்த ஆடை'' என்று சுட்டிக் காட்டினாள் அவள்.

''இப்பொழுது எதற்காக இதை அணிந்திருக்கிறாய்?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

''வாசிஷ்டி நதிக்கரை, படகு மறித்த கப்பல்— எல்லாவற்றையும் நினைவுபடுத்திக் கொள்கிறேன்'' என்றாள் அவள்.

இதயசந்திரனுக்கு அவள் மனப்போக்கு ஏதும் புரியாததால் தனது கச்சையிலிருந்த தேவி பிரசாதத்தை எடுத்து

அவள் நெற்றியில் தன் கையால் இட்டான். பிறகு சொன்னான் அவளை அணைத்தவண்ணம், ''மஞ்சு! நான் விசாரணைக்குச் செல்கிறேன், விசாரணையின் முடிவு எது வாயிருந்தாலும் நீ விபரீதமான செயல் எதிலும் இறங்க முயலாதே'' என்று.

மஞ்சுவின் விழிகள் அவனை உறுதியுடன் நோக்கின. ''விபரீதமான செயல் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று வினவினாள் அவள், சற்றும் சலிக்காத குரலில்.

''உனக்கோ நமது...''

''உம்... குழந்தைக்கோ...''

''தீங்கு வரக்கூடிய செயல்.'' இதைத் தட்டுத்தடுமாறிச் சொன்னான் அவன். அவன் மனத்திலோடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட அவள் சொன்னாள், ''நீங்கள் நினைப்பதுபோல் எதுவும் நடக்காது. மிஞ்சினால் பேஷ்வா உங்களைச் சிறையில் தள்ளலாம். அது விஷயமாகவும் நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்றாள் மஞ்சு.

அவள் குரலில் உறுதி நன்றாகத் தெரிந்தது. அவள் கண்களில் முந்திய நாளிலிருந்த அச்சமெல்லாம் பறந்தோடிவிட்டது. அதைக் கவனித்த இதயசந்திரன் கேட்டான், ''என்ன முடிவு மஞ்சு?'' என்று.

முடிவு என்ன என்பதை விளக்கவில்லை அவள். ''சமயத்தில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்'' என்று மட்டும் கூறினாள்.

'கனோஜியும் ஏதோ முடிவுக்கு வந்துவிட்டார், இவளும் ஏதோ முடிவுக்கு வந்திருக்கிறாள். தந்தையைப் போல் பெண். இருவரும் இஷ்டப்படாவிட்டால் ஒரு வார்த்தைகூடச் சொல்லமாட்டார்கள்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் இதயசந்திரன்.

அந்தச் சமயத்தில் அவனுக்கு அழைப்பு வந்தது பேஷ்வாவிடமிருந்து. மெல்லக் கதவைத் தட்டிய பின்பு உள்ளே நுழைந்த இரு காவலர், ''பேஷ்வா விசாரணை மண்டபத்துக்கு வந்துவிட்டார். தங்களை அழைத்துவர உத்தரவாகியிருக்கிறது'' என்று கூறினார். இதயசந்திரன் மஞ்சுவிடம் விழிகளாலேயே விடைபெற்றுக் கிளம்பினான் அந்த இரு வீரர்களுடனும்.

தோர்லாவாடாவின் முதல் மாடியிலிருந்த பிரும்மாண்டமான நடு மஹாலில் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மண்டபத்தின் தெற்குக் கோடிச் சுவரின் நடுமத்தியிலிருந்த மேடையில் நீதிபதிக்குத் திண்டு தலாசுகள் போடப்பட்டிருந்ததன்றி அவற்றின்மீது விலை உயர்ந்த பட்டு விரிப்புகளும் மூடப்பட்டிருந்தன. அந்த மேடையின் ஒரு புறத்தில் *சிட்னிஸ் ஒருவருக்குச் சிறு சாய்வு மேஜை எழுதுவதற்காகப் போடப்பட்டிருந்தது. மேடையின் இரு புறத்திலும் பூரண ராணுவ உடையணிந்து உருவிய வாட்களை ஏந்திய வீரரிருவர் நின்றிருந்தனர். அந்த மேடையிலிருந்து சற்றுத் தள்ளி ஒரு சிம்மாசனம் போன்ற தனி நாற்காலியொன்றும் இருந்தது. மண்டபத்திற்கு இருபுறமும் வாயில்களிருந்ததால் இரு புறத்திலும் காவலர் காத்து நின்றனர். மண்டபத்துக்குள் அழைத்து வரப்பட்ட இதயசந்திரன் மேடையின் நடுவில் திண்டில் சாய்ந்த வண்ணம் பேஷ்வாக்களுக்கு உரிய பூர்ண ராஜிய உடையில் பேஷ்வா பாலாஜி விசுவநாத் அமர்ந்திருந்ததைக் கவனித்தான். தூரத்தில் சிம்மாசனம் போலிருந்த நாற்காலி, பிரிட்டிஷ் கவர்னர்கள் உட்காரும் நாற்காலியென்பதையும், அது கனோஜி கொள்ளையடித்த பொருள்களில் ஒன்றென்பதையும் அறிந்ததால் சற்றுப் புன்முறுவல் கொண்டான் இதயசந்திரன். அந்த நாற்காலியில் அமர்ந்திருந்த கனோஜியும் அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தார்.

* சிட்னிஸ்: அரசாங்கத் தகவல்களை எழுதுபவர்.

அதற்குப் பிறகு அந்த மண்டபத்தைச் சுற்றும் முற்றும் பார்த்து அளவெடுத்த பின்பு, பேஷ்வா இருந்த மேடையை நோக்கிச் சென்ற இதயசந்திரன் அவரை நோக்கிச் சிரம் தாழ்த்தி வணங்கினான். பாலாஜி விசுவநாத்தின் சாம்பல் நிறக் கண்கள் மெல்ல எழுந்து அவன் முகத்தில் நிலைத்தன. அந்தக் கண்களைக் கண்டதால், அவற்றின் இணையிலா சக்தியால், அப்படியே கவரப்பட்டு நின்று விட்ட இதயசந்திரனின் வீரம், வேகம் அனைத்தும் அந்த சில நிமிடங்களில் எங்கோ பறந்தன. பாரதத்தின் சரித்திரத்தில் புது அத்தியாயத்தை எழுத முன்வந்த அந்த மாபெரும் மனிதர் முன்பு, தான் நிற்பதை உணர்ந்தான் இதயசந்திரன். அந்த உணர்ச்சியில் ஆழ்ந்து விட்ட அவனை, ''தமிழா!'' என்று அழைத்த பாலாஜியின் சொல்கூட பிரமிப்பிலிருந்து இழுக்கும் சக்தியை இழந்து விட்டது. இரண்டாவது முறை அவர் ''தமிழா!'' என்று சற்று அழுத்தி அழைத்த பின்புதான் அவன் சுயநிலை அடைந்தான். அதன் விளைவாக மீண்டுமொரு முறை தலை வணங்கி விசாரணைக்குத் தயாராக நின்றான்.

பாலாஜி மிக நிதானமான, ஆனால் தெளிவான, திட்டமான, சம்பிரதாயம் சிறிதும் வழுவாத முறையில் விசாரணையைத் துவங்கினார்.

அத்தியாயம் 46

நாளை தீர்ப்பு

நீதி மண்டபத்தின் ஒரு கோடியிலிருந்த மேடையில் நடுவே தனக்கு நேர் எதிரே திண்டு திவாசுகளில் சாய்ந்து கொண்டிருந்த பேஷ்வா பாலாஜி விசுவநாத் அதிக உயரமில்லாதவர் என்பதைப் பார்த்த உடனே அறிந்து கொண்ட இதயசந்திரன், அவர் கண்களைக் கண்ட பின்பு பெரும் புத்தி பலமும் இணையிலா உறுதியுமுள்ள ஒரு மனிதன் முன்பு தான் நிற்பதை உணர்ந்தான். பேஷ்வாவின் செக்கச் செவேலென்றிருந்த முகமும், அதன் மத்தியில் தீட்டப்பட்டிருந்த கோபி சந்தனமும் அவருக்கு ஒரு தெய்வீகக் களை அளித்ததையும் கவனித்தான் அவன். பேஷ்வா விசாரணையைத் தொடங்கியபோது வெளிப்பட்ட சொற்களில் ஒரு சாவதானம் இருந்தபோதிலும் சாம்ராஜ்யத்தை நிறுவக்கூடிய சக்தி சொற்களின் ஒலியில் இருந்ததையும் கண்டான் இதயசந்திரன். ஒரு சாதாரண சித்பவன் பிராம்மணன், கனோஜியிடம் கொங்கணிப் பகுதியில் தோல்வியடைந்து நடுங்கிக் கொண்டிருந்த ஒரு மன்னனின் மந்திரி, எப்படி கனோஜியைத் தமது இஷ்டத்துக்கு வளைத்தார் என்று கல்யாண் நகரிலிருந்த போது நினைத்ததுண்டு தமிழன். ஆனால் பேஷ்வாவை நேருக்கு நேர் அன்று கண்ட பிறகு, புஜ பலத்தையும் போர் அறிவையும்விடச் சிறந்த சக்தி ஒன்று உண்டு என்பதை அந்த நீதிமண்டபத்தில் புரிந்து கொண்டான்.

இப்படிப் பலப்பல எண்ணி, தம்மைப் பார்த்துப் பார்த்துப் பிரமித்துக் கொண்டிருந்த இதயசந்திரனை நோக்கிய பாலாஜி விசுவநாத், ''தமிழா! நீ எதற்காக இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறாய் என்பது உனக்குத்

தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று மெல்லச் சொற்களை உதிர்த்தார்.

இதயசந்திரன் பதில் மிகுந்த பணிவுடன் வெளிவந்தது, ''தெரியும்'' என்று.

''சத்ரபதி ஷாஹூ கார்யதுரந்தரும் அவரது ஸார்கேலுமான கனோஜி ஆங்கரேயின் உத்தரவுகளை இருமுறை நீ மீறியிருக்கிறாய்; ராணுவ சட்டத்திட்டங்களின்படி அது பெரும் குற்றம்'' என்று சுட்டிக்காட்டினார் பாலாஜி விசுவநாத்.

இதயசந்திரன் இதற்கு உடனடியாகப் பதில் கூறவில்லை. பேஷ்வாவையும் நோக்கி அவர் சொன்னதையெல்லாம் வெகு வேகமாக எழுதிக் கொண்டிருந்த சிட்னியையும் நோக்கினான். பிறகு மார்பில் இரு கைகளையும் கட்டிக் கொண்டு, ''இங்கு ஒரு தவறு இருக்கிறது'' என்றான் பேஷ்வாவை நோக்கி.

இதைக் கேட்ட காவலர் திகைத்தனர். சிட்னிஸ் எழுதுவதை நிறுத்தி வியப்புடன் நோக்கினான் இதயசந்திரனை. கனோஜி ஆங்கரேயின் பெருவிழிகளிலும் ஆச்சரியம் தென்பட்டது. பேஷ்வாவிடம் தவறு கண்டுபிடிக்கக்கூடிய துணிவு இதயசந்திரனுக்கு ஏற்பட்டதை நினைத்த ஆங்கரேயின் பெரிய மீசையும் ஒருமுறை அசைந்து நின்றது. ஆனால் பாலாஜி விசுவநாத் மட்டும் சிறிதும் அசையாமல் பழையபடியே கேட்டார், ''தவறு எங்கிருக்கிறது தமிழா?'' என்று.

''பேஷ்வாஜி! ஸார்கேல் கனோஜி ஆங்கரே ஒரே ஓர் உத்தரவை எனக்கு அனுப்பினார், நான் கல்யாணியில் இருந்தபோது. உடனடியாக என்னைப் புறப்பட்டு லோஹ்காட்டுக்கு வரும்படி உத்தரவிட்டார். நான் வரவில்லை. அதற்கு அவர் தண்டனை விதிக்கலாம். நாங்கள் விதிக்க முடியாது'' என்று பணிவுடன் விண்ணப்பித்துக் கொண்டான்.

பாலாஜி விசுவநாத்தின் சாம்பல்நிறக் கண்கள் அவனை ஏறெடுத்து நோக்கின ஒரு விநாடி. ''ஏன்?'' என்ற ஒற்றைச் சொல் கேள்வியை உதிர்த்தன அவர் செவ்விய உதடுகள்.

''பேஷ்வாஜி! அப்பொழுது அவர் சத்ரபதி ஷாஹூ கார்யதுரந்தரர் அல்ல. தாராபாயின் ஸார்கேல். ஆகவே, அந்தக் குற்றத்திற்குச் சத்ரபதியின் பிரதிநிதி என்னைத் தண்டிக்க முடியாது. ராணி தாராபாயின் பெயரால் கனோஜி ஆங்கரே அப்பொழுது என்னைத் தண்டித்திருக்கலாம். இப்பொழுது அவர்கூடத் தண்டிக்க முடியாது. தாராபாய்க்குச் செய்த அபவாதத்துக்கு ஷாஹூ மன்னரின் ஸார்கேலோ நீதிபதியோ என்னை எப்படித் தண்டிக்க முடியும்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

நீதி மண்டபத்தில் நிசப்தம் நிலவியது. பேஷ்வாவிடம் தமிழன் சட்டம் பேசுவதைக் கண்ட வீரர்கள் திக்பிரமையால் பேசாமல் நின்றனர். கனோஜியின் இதழ்களில் இளநகை அரும்பியது. பேஷ்வாவை அவர் கண்கள் ஆராய்ந்தன. ஆனால் பேஷ்வா அந்தக் கேள்வியால் சிறிதும் சலனப்பட்டதாகத் தெரியவில்லை. அவருடைய மென்மையான குரல் மீண்டும் ஒலித்தது. ''தமிழா! நீ சொல்வது ஒருவகைத் தர்க்கம்தான். அது சாதாரண நியாயத்துக்குப் பொருந்தும். ஆனால் ராஜ்ய நியாயங்கள் வேறு வகைப்பட்டவை. ஒரு நாட்டு அரசு என்பது தொடர்ச்சியாக ஏற்படுவது. ஓர் அரசு போய் இன்னொரு அரசு வரும்போது, பழைய அரசில் குற்றம் செய்தவர்களெல்லாம் விடுவிக்கப்படுவதில்லை, விசாரிக்கப்படுகிறார்கள். தவிர, யார் அரசர், யார் சொல்வதை நாம் கேட்க வேண்டும் என்ற நீதி தனிப்பட்ட வீரனுக்குக் கிடையாது. மேலிருந்து வரும் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவன் பொறுப்பு. நீ ராணுவத்தைச் சேர்ந்தவன். யார் அரசாள்கிறார்கள் என்று விசாரித்து ஒவ்வொரு ராணுவ

வீரனும் அவனிஷ்டத்துக்கு நடந்தால் படை நடக்காது. ஓர் அரசாங்கம் நடக்காது. ஆகவே, அரசு தொடர்ச்சியானது. ஓர் அரசில் செய்யப்படும் குற்றம் மறு அரசிலும் விசாரிக்கத் தக்கது என்பது நீதி தர்மம். நியாயத்தை யொட்டிக் காரியங்களைச் செய்யும் பிரிட்டிஷாரும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். 'கண்டின்யுவடி ஆஃப் கவர்ன்மென்ட்' என்று அவர்களும் கூறுகிறார்கள்! ஆகவே இதய சந்திரா! ஓர் அரசில் ஒருவன் செய்த குற்றம் அரசு மாறினாலும் படைத் தலைவர்கள் மாறினாலும் அவனை விடாது'' என்று அரசு நீதியை மெல்ல மெல்ல உரைத்த பாலாஜி விசுவநாத், ''இரண்டாவது முறை உன்னைச் சிறை செய்ய உத்தரவு அனுப்பினோம் சுகாஜிக்கு'' என்றார்.

''உத்தரவு வந்தபோது நான் கல்யாண் நகரில் இல்லை'' என்றான் இதயசந்திரன்.

''நீ கல்யாண் நகரைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள படைத்தலைவன்தானே?'' என்று கேட்டார் பாலாஜி.

''ஆமாம்.''

''பொறுப்பைக் கைவிட்டு ஓடும் படைத் தலைவனுக்கு என்ன தண்டனை தெரியுமா.''

''தெரியும். மரண தண்டனை. அவனைச் சுட்டு விடலாம். வெட்டுப்பாறைக்கும் அனுப்பலாம்'' என்றான் இதயசந்திரன். அவன் குரல் அச்சம் ஏதுமின்றிக் கம்பீரமாக ஒலித்தது அந்த மண்டபத்தில்.

பாலாஜியின் சாம்பல் நிறக் கண்கள் மீண்டும் அவனை ஏறெடுத்து நோக்கின. ''நீ ஒப்புக்கொண்ட இந்த ஒரு குற்றத்துக்கே அந்த ஒரு தண்டனை உண்டு. அது மட்டுமல்ல தமிழா! கனோஜி உன்னிடம் அனுப்பிய தூதனைக் காரணமின்றிக் கைது செய்தாய். உன்னுடன் அவனைப் பலவந்தமாக அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டு ஓடப் பார்த்தாய். நீ அழைத்துச் சென்ற அந்த நிம்கர், மகாராஷ்டிரத்தின் மாபெரும் வீரன். உயிரைப் பணயம் வைத்து லித்திகளிருக்குமிடத்தில் வேவு பார்த்தவன்'' என்று சுட்டிக் காட்டினார் பாலாஜி.

நிம்கரைப் பற்றி அவர் பெருமையுடன் பேசியதால் சற்று ஆத்திரமடைந்த இதயசந்திரன் தன் சுயநிலை மறந்தான். ''வீரன் என்ற பதத்தில் பராக்கிரமம் மட்டுமல்ல, கண்ணியமும் கலந்திருக்கிறது பேஷ்வாஜி'' என்று சீற்றத்துடன் சொற்களை உதிர்த்தான் இதயசந்திரன்.

''கண்ணியத்தில் நிம்கர் எப்பொழுது குறைந்தான்?''

''மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாளிகையில் தனது சகவீரனைக் கட்டாரி கொண்டு குத்தியபோது, ஒரு அபலையின் மகனைத் திருடிக்கொண்டு வந்தபோது'' என்றான் இதயசந்திரன். மேலும் சொன்னான்: ''பேஷ்வாஜி! சட்ட திட்டங்களின் நுட்பம் எனக்குத் தெரியாது. ஆனால், ஆண்டவனின் நியாயம் எது என்பது எனக்குத் தெரியும். அரசியல் சிக்கல்களைப்பற்றி எனக்குத் தெரியாது. அதில் சிக்கித் தவிக்கும் சில பேதைகளைப்பற்றி எனக்குத் தெரியும். மன்னர்களின் நோக்கங்கள் எனக்குத் தெரியமாட்டா. ஆனால், அவர்கள் காமத்துக்கும் ரகசிய இச்சைகளுக்கும் கள்ள விவாகத்துக்கும் பலியான ஓர் அபலையைப்பற்றித் தெரியும். ராஜாராம் மகாராஜா ஒருத்தியை மணக்கவேண்டுமென்றால் பகிரங்கமாக மணந் திருக்கலாம். அப்பொழுது அவர் செல்வனுக்கு அரசு அந்தஸ்து இருக்கும். அதுவும் இல்லை அவனுக்கு. தாய்க்கு ரகசிய ராணி பதவி. தனயனுக்கு ரகசிய சந்ததிப் பதவி. அதை அழிக்க ஒரு ராணி தாராபாய், அந்த ராணியின் கட்டளையை நிறைவேற்ற ஒரு நிம்கர். இதென்ன அரசியல்! இது என்ன நியாயம்?''

இதை மடமடவென்றும் உணர்ச்சி மிகுந்தும் சொல்லிச் சற்று நிதானித்த இதயசந்திரன், ''பேஷ்வாஜி! கண்களில் நீர் திரண்டு நின்ற அந்தக் காலை நீங்கள் பார்த்

திருந்தால் நான் வேகத்துடன் பேசுவதன் காரணம் உங்களுக்குப் புரியும். அவள் கரம் நீட்டி என்னை நோக்கி, ''இதயசந்திரா! என் மகன் போனாலும் பாதகமில்லை. மகாராஷ்டிர அரசு என்னால் குலைய வேண்டாம். அவனைக் கொண்டு சென்றவனைக் கண்டுபிடித்து அழித்து விடு'' என்றாள். அந்த ஆணையை மேற்கொண்டு இங்கு வந்தேன். அவளும் ராஜாராம் மகாராஜாவின் மனைவி. அவளும் இந்நாட்டு ராணிகளில் ஒருத்தி. அவள் பிரதிநிதி நான்'' என்றும் கூறினான் பெருமிதத்துடன், வேகத்துடன், தான் ஒரு கர்மவீரன் என்ற திடத்துடன்.

நீதி மண்டபத்தில் மேலும் பயங்கர அமைதி நிலவியது. அங்கிருந்த அனைவர் உள்ளங்களும் திக்கு திக்கென்று அடித்துக்கொண்டன. அலட்சியமாயிருந்தவர் இருவர். ஒருவர் கனோஜி; இன்னொருவர் பாலாஜி. பாலாஜியின் உதடுகள் மீண்டும் அசைந்தன. சொற்கள் உறுதியுடன் வந்தன. ''நீ சொல்லுவது உண்மைதான் தமிழா! தனி மனிதன் தர்மத்துக்கு உன் வேகம், உணர்ச்சி, நீதி அத்தனையும் இடம் கொடுக்கும். ஆனால் பெரும் அரசுகள் நிறுவப் படும்போது, வேறு தர்மங்கள் தலை காட்டுகின்றன. இந்த விஷயத்தை ராஜியரீதியில் பார்க்கும்போது ஒரு தனிப்பட்ட தாய், ஒரு தனிப்பட்ட வாரிசு. இவர்கள் கஷ்டங்களை, சுகதுக்கங்களை, அந்தஸ்துகளை நாம் பார்க்க முடியாது. ஏராளமான மக்களின் நலன்களைப் பாதுகாக்கத் தனிமனிதர்கள் பலியிடப்படுகிறார்கள். ஒரு ராஜ்யத்தைக் காக்க ஒரு நகரத்தையே பலி கொடுக்கலாமென்று தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது. இந்த மகாராஷ்டிர நாட்டில் இரண்டாம் முறையாக இப்பொழுது திடமான அரசு நிலைநாட்டப் படுகிறது. முதலில் சத்ரபதி சிவாஜி ஸ்தாபித்த அரசியல் சத்ரபதி ஸம்பாஜியின் காலத்தில் சிறிது உடைந்தது. இப்பொழுது சத்ரபதி ஷாஹுவின் காலத்தில் தலை தூக்குகிறது. நீ ஒரு தாயின் கண்ணீரைப் பற்றிப் பேசுகிறாய். சிவாஜி மகாராஜாவுக்கு முன்பு

மகாராஷ்டிரம் ஆயிரக்கணக்கான தாய்மார்களின் கண்ணீரைப் பார்த்திருக்கிறது. நீ ஒரு மகனைப் பற்றிக் கவலைப்படுகிறாய். மகாராஷ்டிரம் ஆயிரக்கணக்கான சிறுவர்களைப் பலி கொடுத்திருக்கிறது. சதா மொகலாயர் படையெடுப்பில் கற்பிழந்த கன்னியர், சேயிழந்த தாய்மார், கணவனிழந்த மங்கையர், கணக்கிடலங்க மாட்டார்கள். கண்ணீரும் கம்பலையும் துடைக்க வந்தார் சிவாஜி மகாராஜா. மகாராஷ்டிரம் ஒரு ராஜ்யமாயிற்று. அதை மீண்டும் உருப்படுத்த அதன் லட்சக்கணக்கான மக்களைப் பயமின்றி வாழ வைக்க, ஹிந்து தர்மம் செழிக்க, ஹிந்து மதம் அழியாதிருக்க, கோவில்கள் இடிபடாமலிருக்க நாம் முயல்கிறோம். இந்த முயற்சி அரசியல் தர்மம். அதற்குக் குறுக்கே தனி நபருக்கு வரும் இன்னல்கள் பெரிய தர்மத்தில் அடிபட்டுப் போகும். இந்தக் கண்ணைக் கொண்டு தஞ்சையைப் பார். மகாராஷ்டிரத்தைப் பார். ஏன், அகில பாரத ஹிந்துக்களைப் பார்'' என்ற பாலாஜி, ''இதயசந்திரா! இந்தத் தர்மப்படி, இந்தச் சட்டப்படி, நீ சத்ரபதி ஷாஹுவின் ராஜ்யத்துக்கு எதிராக, அதன் நன்மைக்கு எதிராக அலுவல் புரிந்தவன். இந்தக் குற்றத்துக்கு உனக்கு நான் தண்டனை விதிக்காமலிருக்க முடியாது'' என்றார்.

இதயசந்திரன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. ''அப்பொழுதும் நீங்கள் எனது ஆணையை நிறைவேற்றுகிறீர்கள்'' என்றான்.

''எப்படி!'' என்றார் பாலாஜி.

''நான் தஞ்சை இரகசிய ராணியிடம் சொல்லி வந்தேன், 'என் அலுவலை நிறைவேற்ற முடியாவிட்டால் உயிருடன் திரும்பமாட்டேன் தஞ்சைக்கு' என்று. அதன்படி ஆணையும் இட்டு வந்தேன். அதை பேஷ்வாவான தாங்களே நிறைவேற்றுகிறீர்கள்'' என்றான் இதயசந்திரன், இதழ்களில் இளநகை கூட்டி.

எதற்கும் அசையாத பேஷ்வா பாலாஜி விசுவநாத்தை யும் அந்தப் பதில் அசைய வைத்தது. சற்று ஆசனத்தில் நகர்ந்து அவனைக் கூர்ந்து நோக்கினார் தமது சாம்பல் நிறக் கண்களால். ''தீர்ப்பு நாளை சொல்கிறேன்'' என்று அவர் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களில் லேசாக உணர்ச்சியும் இருந்தது.

அந்தச் சொற்களை உதிர்த்ததும், அவன் செல்லலாம் என்பதற்கு அறிகுறியாகக் கையையும் ஆட்டினார் பாலாஜி. இதயசந்திரன் பேஷ்வாவுக்குத் தலை வணங்கி விட்டு நீதி மண்டபத்தை விட்டு வெளியே சென்றான். கனோஜி பாலாஜியை நோக்கினார். பாலாஜியின் முகம் உணர்ச்சியற்றுக் கல்லாயிருந்தது.

அத்தியாயம் 47

சுவாமியின் கடிதம்

மரணத்தைப் பற்றியோ மறுநாள் தீர்ப்பைப் பற்றியோ தனக்கேதும் கவலையில்லையென்பதை மறைமுகமாக உணர்த்திவிட்டு மிகுந்த கம்பீரத்துடன் தலை வணங்கி நீதி மண்டபத்திலிருந்தே இதயசந்திரன் வெளியேறிய பல வினாடிகளுக்குப் பிறகும் பேஷ்வா பாலாஜி விசுவநாத்தின் முகம் அடியோடு உணர்ச்சியற்ற கல்லாகவே காட்சியளித்தது. பிறகு, அவர் கையசைத்துப் பக்கத்திலிருந்த சிட்னியையும் நீதிமண்டபக் காவலரையும் வெளியே செல்லச் சைகை செய்தபோதுகூட அந்த முகம் சிலை முகமாகவே இருந்தது. எல்லோரும் மண்டபத்தை விட்டு அகன்று தாமும் கனோஜி ஆங்கரேயும் தனித்திருந்த சமயத்தில்தான் அவர் கண்கள் சற்றே எழுந்து ஸார்கேலின் கண்களைச் சந்தித்தன. அந்தக் கண்களிலிருந்து பேஷ்வாவின் உள்ளத்திலோடிய எண்ணங்களை அடியோடு புரிந்துகொள்ள முடியாத ஸார்கேல், தமது ஆசனத்தி லிருந்து எழுந்து மேடைக்கருகில் வந்து. அதன் முனையில் ஒரு காலை மடித்து மேலிட்டும் இன்னொன்றைத் தொங்க விட்டும் அரைகுறையாக உட்கார்ந்து கொண்டார். அப்பொழுதும் பாலாஜி ஏதும் பேசாததால், ''என்ன யோசிக்கிறீர்கள் பேஷ்வா?'' என்று வினவினார் மெல்ல.

பாலாஜி விசுவநாத் தமது தலைப்பாகையை எடுத்துப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பின்னாலிருந்த நீண்ட உச்சிக் குடுமியையும் ஒருமுறை சீர்படுத்தி முடிந்து கொண்டார். அவரது சாம்பல்நிறக் கண்கள் கனோஜி யின் மீது நன்றாகப் பதிந்தன. ''நான் யோசிப்பது என்னவென்று உண்மையில் உனக்குத் தெரியாதா

கனோஜி?'' என்று மென்மையான, ஆனால் உறுதியான குரலில் வினவவும் செய்தார்.

கனோஜியின் ராட்சத விழிகள் பேஷ்வாவை நோக்கின. ''பேஷ்வாஜி...'' என்று அவரது பெருத்த உதடுகள் அசைந்து வார்த்தையை உதிர்க்கத் துவங்கின.

பேஷ்வா அவரைச் சற்றே தடுத்து, ''பேஷ்வாஜி... எல்லாமிருக்கட்டும். நாமிருவரும் பழைய நண்பர்கள். அப்பொழுது பேசியதுபோல் பேசுவோம்'' என்று பாலாஜி விசுவநாத் கூறவே, சற்றுச் சங்கடப்பட்ட கனோஜி கூறினார், ''என்னால் முடியாது பாலாஜி. அந்த நிலையில் என்னால் பேச முடியாது. நீங்கள் இப்பொழுது சத்ரபதியின் பேஷ்வா. இந்நாட்டின் தலைவிதி உங்கள் கைகளில் இருக்கிறது'' என்று.

''அன்று?'' என்று மெல்லக் கேட்டார் பாலாஜி.

''என் கதி உங்கள் கையிலிருந்தது. அது தனிமனிதன் கதி. இன்று நாம் நாட்டின் கதியைப் பற்றிப் பேசுகிறோம்'' என்று கனோஜி சுட்டிக் காட்டினார்.

பாலாஜி அப்பொழுதுதான் உணர்ச்சியைச் சிறிது காட்டினார். ''நீ நாட்டைப் பற்றி நினைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது'' என்றார் மெல்லப் புன்முறுவல் கோட்டி.

கனோஜியின் பெரிய புருவங்கள் மேலே ஒரு முறை ஏறி இறங்கின. ''இதற்கு முன்பு?'' என்ற அவர் கேள்வியிலும் வியப்பிருந்தது.

''உன் நலனைக் கவனித்து வந்தாய்?'' என்றார் பேஷ்வா.

''அரபுக் கடல் மூலம் பிரிட்டிஷாரோ, போர்ச்சுக்கீஸியரோ, ஸித்திகளோ மகாராஷ்டிர நாட்டை ஆக்கிரமிக்காமல் பாதுகாத்தது சுயநலனா?'' என்று கேட்டார் கனோஜி.

''வெளிநாட்டார் கப்பல்களைக் கொள்ளையடிப்பது, கொள்ளையடித்த பொருள்களை விஜயதுர்க்கத்திலும், சுவர்ண துர்க்கத்திலும் கொண்டு சேர்த்துக்கொள்வது இவை நாட்டு நலனுக்கான செய்கையல்லவென்று நினைக்கிறேன்'' என்று பேஷ்வா விஷமமாகச் சொன்னார்.

''விஜயதுர்க்கமும் சுவர்ண துர்க்கமும் மற்றும் பல துறைமுகக் கோட்டைகளும் ராணி தாராபாய்க்குச் சொந்தமானவை. ராணியின் ஸார்கேல் கடல்யுத்தப் பொருள்களை அங்கு சேர்க்காமல் எங்கு சேர்க்க முடியும்?'' என்று கேட்டார் ஸார்கேல்.

''வெள்ளைக்காரர்களைச் சிறைப்பிடித்து, உதாரணமாக அந்தக் காதரைனைச் சிறைப்பிடித்து, முப்பதினாயிரம் ஈடு வாங்கிய பணம் உன் கஜானாவிலிருக்கிறதா? தாராபாயிடம் போய்ச் சேர்ந்ததா?''

''அந்தச் சமயத்தில் ராணி தாராபாய் சிறைப்பட்டுவிட்டார்கள். ஆகவே அவர் சார்பாக அவருடைய ஸார்கேல் அந்தப் பணத்தைப் பத்திரமாக வைத்திருக்கிறார்.''

பாலாஜியின் கண்களில் விஷமம் தெரிந்தது. ''இப்பொழுது அதே ஸார்கேல் சத்ரபதி ஷாஹூவின் ஸார்கேலாக மாறிவிட்டதால் அந்தப் பணம் ஸதாராவிலுள்ள கஜானாவுக்கு வந்து சேருமா?''

கனோஜியின் கண்களில் மிதமிஞ்சிய விஷமம் தாண்டவமாடியது. அடுத்த வினாடி அவற்றில் போலிப் பொறுப்புணர்ச்சி தெரிந்தது. ''கப்பல்களில் வசூலாகும் பணத்தை ஸதாராவுக்கு அனுப்புவதால் அரபிக் கடல் பகுதியில் சத்ரபதியின் நலன்கள் பாதிக்கப்படும். இங்கிருக்கும் பெரும் கடற்படையைச் சரியான நிலையில் வைத்திருக்க, அவற்றை ஒழுங்கான முறையில் பராமரிக்க, மேலும் கடற்படையை விஸ்தரிக்க, பெரும் பணம் செலவாகும். அந்தச் செலவைக் குறைத்தால், கடற்படை

யின் திறமை பாதிக்கப்படும். கடற்படையின் திறமை குறைந்தால் சத்ரபதியின் நலன் பாதிக்கப்படும். இப்பொழுது மகாராஷ்டிரமிருக்கும் நிலையில் நான் கடற் படைக்கு மன்னரிடம் பணம் கேட்பது தவறு. இங்கு கிடைப்பதை வைத்துக்கொண்டே நிர்வகிக்கப் பார்க்கி றேன். தவிர, நாமிருவரும் குலாபி முன்பு கையெழுத்திட்ட ஒப்பந்தப்படி கொங்கணியின் வருவாயெல்லாம் எனக்கென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குலாபி முன்பு செய்யப் பட்ட எந்த ஒப்பந்தத்தையும் நாம் மீற முடியாது'' என்ற கனோஜி, சொற்களிலும் பொறுப்பைக் காட்டினார்.

முகத்தில் அவர் பொறுப்புணர்ச்சியைக் காட்டினா லும் உள்ளூர அவர் தம்மைப் பார்த்து நகைக்கிறாரென்ப தைப் புரிந்துகொண்ட பேஷ்வா மெல்லப் புன்முறுவல் கோட்டினார். கனோஜியின் சட்டதிட்டப் பேச்செல்லாம் ஏற்கனவே கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைக் கபளீகரம் செய்வதற்கே என்பதைப் புரிந்துகொள்ள பேஷ்வாவுக்கு அரை வினாடிகூடப் பிடிக்கவில்லை. ஆகவே கேட்டார் பேஷ்வா, ''குலாபி முன்பு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீற மாட்டாய்?'' என்று.

''கண்டிப்பாக மாட்டேன்'' என்றார் கனோஜி.

''இதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது'' என்றார் பாலாஜி.

''இதிலென்ன மகிழ்ச்சி?'' என்று கேட்டார் கனோஜி, பாலாஜியின் சொல்லில் உள்ளர்த்தம் இருப்பதை ஊகித்து.

''நாளை தமிழனைப்பற்றித் தீர்ப்புக் கூறப் போகிறேன்'' என்று துவங்கினார் பாலாஜி.

''ஆம்.''

''அந்தத் தீர்ப்பை அமுலுக்கு வராமல் உடைக்கக் கூடியது நீதான்.''

''நானா!''

''ஆம். உன்னிடம் இங்கு படை வலுவிருக்கிறது. ஆனால் தீர்ப்புக்கு விரோதமாக நீ எதுவும் செய்ய முடியாது.''

''ஏன் செய்ய முடியாது?''

''குலாபி முன் ஒப்பந்தம் செய்திருக்கிறாய் சத்ரபதி ஷாஹுவின் கட்டளைகளை நிறைவேற்றுவதாக. அவரது நியாயத்தை இந்தப் பகுதியில் அமுல் நடத்துவதாக. ஆகவே நாளை தீர்ப்பை எதிர்த்துத் தமிழனைத் தப்புவிக்கவோ, ரகசியமாக விடுதலை செய்யவோ நீ முயல முடியாது. அப்படிச் செய்யப்படும் எதுவும் ராஜத் துரோகமாகும். அது மட்டுமல்ல, குலாபியின் முன் செய்த ஒப்பந்தத்தை மீறுவதாகும். தெய்வக் குற்றமாகும்.'' இதைச் சொன்ன பாலாஜி எழுந்து, மேடையை விட்டுக் கீழே இறங்கினார்.

கனோஜியின் முகம் உணர்ச்சிப் பிழம்பாக இருந்தது. ''இதை எதற்காகக் கூறுகின்றீர்கள் என்னிடம்?'' என்று கேட்டார் கனோஜி உஷ்ணத்துடன்.

பாலாஜி அவரை நோக்கிச் சாவதானமாகப் பதில் சொன்னார்: ''தமிழனைப் பிடித்து வந்தபோது, அவன் கொலாபாவில் வந்திறங்கியபோது உன் முகத்தில் மிகுந்த கவலையைக் கண்டேன். என்னையும் மீறி, கப்பல்கள் தரையை அணுகாதிருக்க வெடிக்கப்படும் இரு எச்சரிக்கை பீரங்கிகளையும் நீ இருமுறை பிரயோகித்து ஜலதீபத்தை அப்படியே திருப்பிவிட முயன்றாய். கடல் கொந்தளிப்போ, வேறு அபாயமோ இல்லாததால் அவர்கள் அந்தப் பீரங்கி வீச்சுக்குக் காரணம் தெரியாமல் குழம்பி வந்தார்கள் கொலாபாவுக்கு. அன்று உன் முகத்தில் கவலை மிதமிஞ்சிக் கிடந்ததை நான் கவனித்தேன். ஆனால், நேற்று முதல் திடீரென அந்தக் கவலை முகத்தி

லிருந்து அகன்றுவிட்டது. நீ ஏதோ முடிவுக்கு வந்து விட்டாயென்பதைப் புரிந்துகொண்டேன். உன் கடமையை உனக்கு வலியுறுத்தவே உன் வாயிலிருந்து குலாபியின் சன்னிதான ஒப்பந்தத்தின் புனிதத்தைப் பற்றி வரவழைத்தேன். ஆகவே தெரிந்து கொள் கனோஜி. நாளை தீர்ப்பு எதுவாயிருந்தாலும் உன்னையும் அது கட்டுப்படுத்தும். அதை மீறி நீ எந்த நடவடிக்கை எடுத்தாலும் அரச விரோதமாகும்; தமிழனைத் தப்புவிக்கவோ வேறுவிதத்தில் அவனுக்கு உதவவோ முயலாதே.''

இப்படிச் சொல்லிவிட்டு பாலாஜி மெல்ல நீதி மண்டபத்தை விட்டு வெளியே நடந்தார். தமது வாழ்க்கையில் முதன் முதலாகக் கனோஜி ஆங்கரே கல்லெனச் சமைந்து நின்றார். வெகு தந்திரமாக பாலாஜி விசுவநாத் தமது கைகளை அடியோடு கட்டிவிட்டதை உணர்ந்தார். இதயசந்திரனுக்குத் தான் உதவாவிட்டால் அவன் கதி அதோ கதிதானென்பதை உணர்ந்ததாலும், அதன் விளைவாகத் தமது மகளின் வாழ்க்கையும் அடியோடு அழிந்துவிடுமென்பதையும் உணர்ந்ததாலும், அடியோடு செயலற்று நேரம் போவது தெரியாமல் நின்றுகொண்டிருந்துவிட்டுக் கடைசியாகத் தடதடவென அசுர நடை நடந்து படிகளில் இறங்கித் தமது அறைக்கு வந்து சேர்ந்தார். அங்கு தமது ஆசனத்திலமர்ந்தவண்ணம் கொலாபா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டாலென்ன என்று நினைத்தார். சுதந்திரக் கடல் பறவையாக இருந்த தம்மை இந்த சித்பவன் பிராம்மணன் ராஜீய சிக்கல்களிலும் அதன் சம்பிரதாயச் சுழலிலும் சிக்க வைத்து விட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டார். அவர் பெரிய கைகள் ஒருமுறை பேஷ்வாவின் மென்னியைப் பிடிப்பது போல் ஒன்றுசேர்ந்து விரல்கள் நெரித்தன. ஆனால், குலாபி முன்பு செய்த ஒப்பந்தத்தைத் தாம் எந்தவிதத்திலும் மீற முடியாதாகையால் என்ன செய்வதென்று தெரியாமல் திணறினார். இதற்கெல்லாம் ஒரு முடிவு

கண்டுபிடிக்கக் கூடியவர் பிரும்மேந்திர சுவாமி என்பதை உணர்ந்தார். அந்த உணர்ச்சி இன்னொரு வியப்பைத் தந்தது அவருக்கு. தம்மிடம் இதயசந்திரனை ஒப்படைத்த பிறகு பிரும்மேந்திர சுவாமி காணப்படவில்லையென்பதையும், நீதி மண்டபத்துக்குக்கூட அவர் வரவில்லையென்பதையும் எண்ணிப் பார்த்தார். அந்த எண்ணத்தின் விளைவாக ஒரு காவலனை விளித்து பிரும்மேந்திர சுவாமி எங்கிருக்கிறாரென்பதைப் பார்த்து வரும்படி உத்தரவிட்டார்.

ஆனால், கனோஜியின் வீரர்கள் என்ன சல்லடை போட்டுச் சலித்தும் பிரும்மேந்திர சுவாமி அகப்படவில்லை. பிற்பகல் வரையில் தேடிவிட்டு சுவாமி அகப்படவில்லையென்பதைத் தெரிவித்த காவலரிடம், ''எங்கு போயிருக்கிறாரென்பதையாவது கண்டுபிடியுங்கள்'' என்று உத்தரவிட்டார் கனோஜி.

கொலாபாவிலிருந்து ஆலிபாக் கரைக்குச் செல்லும் படகொன்றில் சுவாமி காலையில் சென்றதாகவும், அங்கிருந்து ஒரு புரவியில் அவர் மலைக்காட்டை நோக்கி வேகமாகப் போனதாகவும் தகவல் கிடைத்தது. அவர் போவதைப்பற்றி ஏதாவது சொன்னாரா என்பதை மஞ்சுவிடமும், இதயசந்திரனிடமும் விசாரித்தார் கனோஜி. அவர்களுக்கு ஏதும் தெரியவில்லை. எக்காரணத்தாலோ சுவாமி அடியோடு மறைந்துவிட்டார் என்பதுதான் தெரிந்தது. பிறகு சுவாமியைப்பற்றி நினைப்பதைக் கைவிட்ட ஆங்கரே அடுத்த நாள் தீர்ப்பைப் பற்றிக் கவலைப் படலானார். அந்தக் கவலையை அன்றிரவு குலாபி கோயில் அர்ச்சகர் அகற்ற முயன்றார். ''மஞ்சுவுக்குக் குலாபியின் சிரசின் சிவப்பு மலர் கிடைத்திருக்கிறது. அவளுக்கு எந்தவிதக் கெடுதலையும் யாரும் செய்ய முடியாது. ஆயிரம் பேஷ்வாக்கள் சேர்ந்தாலும் அவள் வாழ்வின் வளத்தைத் தடுக்க முடியாது'' என்று கூறினார் அர்ச்சகர்.

அது சற்று ஆறுதலாயிருந்தது ஆங்கரேக்கு. ''எல்லாம் உன் செயல்'' என்று குலாபியை வணங்கிவிட்டுத் தோர்லா வாடாவுக்கு வந்தார் கனோஜி. அவர் வருமுன்பே பேஷ்வா பாலாஜிக்கு ஒரு கடிதம் வந்திருந்தது சுவாமி யிடமிருந்து. அக்கடிதத்தில் இதயசந்திரன் வழக்குத் தீர்ப்பைத் தாம் வரும் வரை ஒத்திப் போடும்படி பிரும்மேந்திர சுவாமி பாலாஜிக்குத் தெரிவித்திருந்தார்.

அத்தியாயம் 48

கோழையின் மகனல்ல அவன்

பிரும்மேந்திர சுவாமியிடமிருந்து கடிதம் வந்த அடுத்த நான்கைந்து நாட்கள் கொலாபா சுரணையற்றுக் கிடந்தது. இதயசந்திரன் வழக்கு சம்பந்தமான முடிவைப் பற்றியே விசாரணை நாள்வரை எல்லோரும் நினைத்தும் பேசியும் கொண்டிருந்ததால், அதில் எந்த முடிவும் ஏற்படாமல் போய்விட்டது. மக்களின் சலனப்பட்ட மனதிலைக்கு இடைக்கால அமைதியை அளித்ததானாலும், அந்த அமைதி பெரும் துன்பத்துக்கு முன் ஏற்படும் பொய்யான அமைதியாகவே இருந்ததால், கொலாபா வீரர்களும் மக்களும் செயலிழந்தும் பேச்சிழந்தும் காணப் பட்டார்கள்.

எல்லோர் மனநிலையையும் விட பாலாஜி விசுவநாத்தின் மனநிலை பெரிய சங்கடத்துக்குள் ஆழ்ந் திருந்தது. கனோஜியை அடக்க ஷாஹுவின் உத்தரவுப்படி ஸதாராவிலிருந்து புறப்பட்டு கொங்கணி வந்த தாம், ஏற்கனவே கொலாபாவில் நாள்படத் தங்கிவிட்டதாகவும் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்திரப்படுத்த ஸதாராவின் வேலை நிரம்ப இருப்பதாலும், இதயசந்திரனின் வழக்குக்கு ஒரு முடிவு காண முடியாமலிருப்பதை நினைத்துப் பெரும் கவலைக்குள்ளாயிருந்தார் பேஷ்வா. 'இந்தத் தமிழன் ஒருவனுக்காக நான் நிரந்தரமாகக் கொலாபாவிலேயே இருக்க முடியுமா? சுவாமி என்ன இப்படி இரண்டுங் கெட்டான் நிலைமையில் என்னை வைத்து விட்டார்?' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார் பாலாஜி. எது எப்படியிருந்தாலும் தாமோ மகாராஜா ஷாஹுவோ பிரும்மேந்திர சுவாமியின் கட்டளையை மீற முடியாதென்பது பேஷ்வாவுக்குத்

திட்டவட்டமாகத் தெரிந்திருந்தது. பிரும்மேந்திர சுவாமி மட்டும் பணம் திரட்டிக் கொடுக்காமலிருந்தால் மகாராஜா ஷாஹுவுக்கு மகாராஷ்டிரத்தின் சைன்னியம் ஏதும் உருவாயிருக்க முடியாதென்றும், அந்தப் பணம் முழுவதும் சுவாமியால் கடனாகவே கொடுக்கப் பட்டிருக்கிறபடியால் சுவாமி நினைத்தால் நாளைக்கே ஷாஹுவின் கஜானா காலியாகி விடுமென்றும், அப்புறம் ஷாஹு சந்தி சிரிக்க வேண்டியிருக்குமென்றும் பாலாஜி நன்றாக உணர்ந்திருந்தாராகையால் சுவாமியின் கட்டளைக்கு எதிராக ஏதும் செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தார்.

பாலாஜியின் போக்கைக் கனோஜியும் கவனிக்கத் தவறவில்லை. எந்த உணர்ச்சியையும் காட்டாத பாலாஜியின் முகம் குழம்பிக் கிடந்ததையும், மேலுக்கு அந்தச் சாம்பல் நிறக் கண்களில் உணர்ச்சி இல்லா விட்டாலும் உள்ளூர அவர் வெதும்பிக் கொண்டிருக் கிறாரென்பதையும் புரிந்து கொண்ட கனோஜிக்கு உள்ளூரச் சிறிது திருப்தி ஏற்படவே செய்தது. எதற்கும் அசையாத பாலாஜியையே ஒருவர் அசைத்து விட்டதை எண்ணி ஆனந்தமடைந்தார் ஆங்கரே.

பேஷ்வா அவர்கள் மறுநாள் நீராடிவிட்டுப் பட்டுத் துணி புனைந்து திறந்த மார்புடனும் முப்புரி நூலுடனும் தமது தங்கநிற மேனி சூரியவெளிச்சத்தில் பளபளக்க, அவர் முன்பு நன்றாகத் துலக்கப்பட்ட செம்பும் குவளை யும் ஜொலிக்க, உத்திரிணி கொண்டு காலை சந்தியா வதனம் செய்தபோது உத்திரிணி இரண்டொரு முறை பாத்திரத்தைவிட்டுப் பக்கத்திலிறங்கி தீர்த்தமெடுக்காமல் மேலே வந்ததையும், பிறகு பேஷ்வா முகம் சுளித்துப் பாத்திரத்தை நோக்கி உத்திரிணியில் நீர் எடுத்துக் கையில் வாங்கி, ஆசமனம் செய்ததையும் கண்ட ஸார்கேல் மெல்லப் புன்முறுவல் கொண்டார்.

சந்தியை முடித்த பிறகு அவரைச் சந்தித்த போதும் பாலாஜி ஏதோ தீவிர சிந்தனையில் ஆழ்ந்து கிடப்பதை உணர்ந்த கனோஜி, அதைப்பற்றிக் கேட்கவும் செய்தார். ''பாலாஜி!'' என்று பழைய நட்பு முறையில் அவரை அழைத்த கனோஜி, உங்கள் மனத்தில் ஏதோ குழப்பம் இருக்கிறதுபோல் தோன்றுகிறது'' என்று துவங்கினார் பேச்சை.

அப்பொழுது மேஜைப் பெட்டியில் கோழி இறகு கொண்டு காகிதத்தில் ஏதோ எழுதிக்கொண்டிருந்த பாலாஜி மெல்ல நிமிர்ந்து கனோஜியை நோக்கினாரானா லும் ஏதும் பேசவில்லை சில வினாடிகள். பிறகு சொன்னார், ''ஆம் கனோஜி. பெரும் குழப்பம்'' என்று.

''பாலாஜி எதற்கும் குழம்பாதவர் என்பது மகாராஷ்டிரத்தில் பிரசித்தம்'' என்று சுட்டிக்காட்டினார் கனோஜி.

''அந்தப் பிரசித்தியை மாற்றவேண்டிய அவசியமிருக் கிறது'' இதைச் சொன்ன பாலாஜியின் இதழ்களில் சோகப் புன்னகை ஒன்று அரும்பியது.

''விசித்திரமாயிருக்கிறது பாலாஜி'' என்றார் கனோஜி, தமது பெருவிழிகளை அவர்மீது நாட்டி.

''இதில் விசித்திரமென்ன இருக்கிறது'' என்று கேட்டார் பாலாஜி.

கனோஜி உட்கார்ந்திருந்த நிலையிலிருந்து நின்று பாலாஜியை நோக்கினார். ''பாலாஜி! பால்ய முதல் நாமிருவரும் நண்பர்கள். நான் பரம்பரைக் கடல் மாலுமி. நீங்கள் பரம்பரைக் குமாஸ்தா. நான் காளையைப்போல் பலமுள்ளவன், முரடன். நீங்கள் ஒல்லி, புரவிகூட ஏறத் தெரியாதவர். சிப்ளன் உப்பளக் குமாஸ்தா. ஆனால் ஸித்திகளிடம் சிக்கிய என்னை விடுவிக்க உங்களால்தான் முடிந்தது. ஸித்திகளின் கடற்படைப் பலம், தரைப் படைப் பலம் அனைத்தையும் உங்களைவிட அறிந்தவர்

யாருமில்லை. என்னை லித்திகளிடமிருந்து மீட்ட அந்தச் காலத்திலும் உங்கள் உள்ளத்திலோடும் உணர்ச்சிகளை யாரும் அறிய முடியாது. லித்திகளின் சிறையிலிருந்து பலமுறை நான் தப்பினேன் என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம், உங்களை முதல் முதலில் பிரும்மேந்திர ஸ்வாமி யின் பூஜா மண்டபத்தில பரசுராம பட்டணத்தில் நான் சந்தித்தபோது சுவாமி சொன்னது இன்னும் நினைவிருக் கிறது. 'உன் முகம் குமாஸ்தாவின் முகமல்ல. நாடாளும் சக்தியை உன் முகம் காட்டுகிறது. ஒரு நாள் இந்த நாட்டை நீ நிர்வகிப்பாய்' என்று சுவாமி தியான நிலை கலைந்ததும் கூறினார். நான் அப்பொழுது நம்பவில்லை. இப்பொழுது புரிகிறது அது எத்தனை உண்மை என்று. உங்கள் ஆழ்ந்த மனம், உணர்ச்சியற்ற முகம், சீரிய அறிவு இந்த மூன்றும் உங்களை மகாராஷ்டிரத்தையே ஆளும் ஸ்திதிக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இன்று நான் பார்க்கும் முகம் வேறு'' என்று மடமடவென்று பேசினார் கனோஜி.

பாலாஜி மௌனமே சாதித்தார் பல விநாடிகள். பிறகு அவரது சாம்பல் நிறக் கண்கள் கனோஜியை நோக்கி எழுந்தன. அவற்றில் அப்பொழுது ஒரு புத்தொளி இருந்த தைக் கவனித்தார் கனோஜி. ''கனோஜி! நீ சொல்வதெல் லாம் சரி. ஆனால் இந்த பாலாஜி சிறிது மாறியிருக்கிறார். அதை மாற்றியது அரசாங்கச் சுமை'' என்று பாலாஜி கூறிய சொற்களில் பொறுப்பு நிரம்பத் தொனித்ததைக் கண்டார் கனோஜி.

''அரசாங்கச் சுமை அடிப்படைக் குணங்களை மாற்றுமா?'' என்று கேட்டார் பாலாஜியை நோக்கி கனோஜி.

''மாற்றும் கனோஜி! அரசாங்கத்தை ஏற்பது வேறு. நிர்வகிப்பது வேறு. அரசை ஏற்பதில் பல தந்திரங்கள் கையாளலாம். தர்மாதர்மங்கள் அதிகமாகக் கவனிக்கப் படுவதில்லை. ஆனால் அரசாங்க நிர்வாகம் வரும்போது

தர்மம் பெரும் பொறுப்புக்களை ஏற்படுத்துகிறது. தர்மத் தின் அஸ்திவாரத்தில் இயங்காத அரசு இரண்டு தலைமுறைகளும் நிற்பதும் கஷ்டம். ஆகவே நீதியும் நெறியும் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன. இதில் சுய சாமர்த்தியத்துக்கு இடம் குறைவு. பொறுப்புக்குத் தலை வணங்க இடம் அதிகம். நீதிச்சுமை அத்தனை பாரமானது. அதில் எவன் குணமும் மாறித்தான் ஆகவேண்டும்!'' என்ற பாலாஜி மேலும் கூறினார்: ''உதாரணமாக, இந்தத் தமிழனை எடுத்துக்கொள். இவன் தளபதி உத்தரவுக்குக் கீழ்ப்படியாத, அரசாங்க விரோதமான காரியங்களைச் செய்திருக்கிறான். சாதாரணமாக நான் இவனுக்கு மரண தண்டனையோ, சிறைவாசமோ அல்லது குறைந்தபட்சம் தேசப் பிரஷ்ட தண்டனையோ விதித்திருக்க முடியும். ஆனால் விசாரித்த அன்று தீர்ப்புக் கூற எனக்கு உறுதி யில்லை. இவன் நாட்டுக்குச் சேவையும் செய்திருக் கிறான். பல கடல் போர்களில் வெற்றியடைந்து மகாராஷ்டிரர் கடலிலும் வல்லவர்கள் என்ற பெருமையை வாங்கித் தந்திருக்கிறான். ஆகவே அவன் சேவையும் குற்றத்தையும் எடை போட வேண்டியிருக்கிறது. பார்த்தாயா என் நிலையை?'' என்று.

பாலாஜியின் நேர்மையை நினைத்து வியந்தார் கனோஜி. பிறகு ஒரு சந்தேகம் கேட்டார்: ''இவன் செய்துள்ள சேவையை முன்னிட்டு இவனைத் தேசப் பிரஷ்டம் செய்தாலென்ன?'' என்று.

பாலாஜியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''அவன் போகமாட்டான் இந்த நாட்டை விட்டு. தமிழன் தனது ஆணையைக் காப்பாற்ற இங்கு உயிரையும் விட்டாலும் விடுவானே தவிர தஞ்சை ராணியின் மகனைப் பார்க்காமல் கிளம்பமாட்டான். எந்த நாட்டின் நிலை யிலும் ஒரு கர்ம வீரன் இருக்கிறான். அவர்களில் இவன் ஒருவன்'' என்று கூறிய பாலாஜியின் சொற்களில் இதய

சந்திரனைப் பற்றிப் பெருமிதமிருந்ததைக் கவனித்தார் கனோஜி.

இருவரிடையும் மீண்டும் மௌனம் நிலவியது. கடைசியில் கனோஜி கேட்டார்: ''தஞ்சை ராணியின் மகன் எங்கிருக்கிறான்?'' என்று.

''என்னால் சொல்ல முடியாது கனோஜி'' என்றார் பேஷ்வா.

''உங்களுக்குத் தெரியுமல்லவா அவன் இருப்பிடம்?''

''தெரியும்!''

''பின் ஏன் சொல்ல மறுக்கிறீர்கள்?''

''தடை இருக்கிறது அதற்கு!''

''என்ன தடை? யார் விதித்தது அந்தத் தடையை?''

''யார் விதித்தால் நாம் ஒப்புக்கொள்வோம் அந்தத் தடையை?''

''சத்ரபதி ஷாஹுவா?''

இல்லையென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார் பேஷ்வா. ''இப்படியொரு வாரிசு இருப்பது ஷாஹுவுக்குத் தெரியாது, தெரிந்தால் அந்த வாரிசு இத்தனைநாள் அரசாங்க சிறையில் இருப்பான். அவன் இருப்பிடத்தைச் சொல்லக் கூடாதென்று தடுத்திருப்பவர் சுவாமிதான்'' என்று பேஷ்வா கூறினார்.

கனோஜி அதற்குமேல் அதைப் பற்றிப் பேசவில்லை. நீண்ட நேரம் யோசித்துவிட்டு, ''இதயசந்திரனை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று வினவினார்.

''எனக்குத் தெரியாது'' என்றார் பாலாஜி.

''நீங்கள்தானே விசாரித்தீர்கள்?''

''ஆம்.''

''ஆம்.''

''அப்படியானால்...?''

''சுவாமி சொல்லச் சொல்லுகிற தீர்ப்பைத்தான் நான் சொல்ல வேண்டும்?''

''ஏன்?''

பேஷ்வாவின் சாம்பல் நிறக் கண்களில் ஒளி நன்றாகச் சுடர்விட்டது. ''பிரும்மேந்திர ஸ்வாமி மகாராஷ்டிரத்தின் நலனுக்காக, சாம்ராஜ்யத்தின் விஸ்தரிப்புக்காக, சிறப்புக்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இன்று ஷாஹு, மன்னராயிருப்பது அவரால். ஸித்திகள் போரிடாதிருப்பது அவரால். தீர்ப்பை அவர் ஒத்திப் போடச் சொன்னால் அதில் ஏதோ முக்கிய காரணம் இருக்கவேண்டும். எதையோ நாடி அவர் அவசரமாகச் சென்றிருக்கிறார். அவர் திரும்பி வரும்போது விஷயங்களுக்கு விளக்கம் கிடைக்குமென்று நம்புகிறேன்'' என்றார் பேஷ்வா.

அன்று முதல் அதைப்பற்றிப் பேசாவிட்டாலும் இருவர் இதயமும் கனத்துக் கிடந்தது. ஆனால் எதைப் பற்றியும் கவலைப்படாத இதயசந்திரன் அடுத்து நாலைந்து நாட்களை மஞ்சுவுடன் தோர்லாவாடாவிலும் கனோஜியின் அனுமதியுடன் ஜலதீபத்திலும் கழித்தான். அவனது நேசக்கரங்களில் மஞ்சு கிடந்த நேரங்களில் அவள் மனம் சொர்க்கத்திலிருந்தது. ஆனால் அவள் மனத்தில் மகிழ்ச்சி வெள்ளத்தின் இடையே சிறிது பயமெனும் பிசாசும் தலை தூக்கியது. தீர்ப்பு என்ன ஆகுமோ என்ற பயம் அவளை வாட்டிக் கொண்டிருந்தது. ஒரே ஒருமுறை அவள் கேட்டாள், ஜலதீபத்தின் தளபதி அறையில் அவனுடன் தனித்திருந்தபோது, ''நாம் இப்படியே தப்பி விட்டாலென்ன?'' என்று.

''வீரப் புதல்வியான மஞ்சுவின் புத்தியாயிருந்தாலும் அது பெண் புத்திதானே?'' என்றான்.

''பெண் புத்திக்கு என்ன?''

''சபலபுத்தி. சந்தர்ப்பம் கிடைத்தால் திரும்பும்.''

''இப்பொழுது என்ன திரும்பிவிட்டது?''

''ஓடப் பார்க்கிறது.''

''தப்புவது தவறா?''

''உனக்கல்ல தவறு.''

''வேறு யாருக்கு?''

''என் மகனுக்கு'' என்ற இதயசந்திரனின் முகத்தில் கம்பீரச் சாயை படர்ந்தது. ''கோழையின் மகன் என்ற அவப்பெயர் அவனுக்கு உதவாது'' என்றான் இதய சந்திரன்.

''அப்படியானால் என்ன செய்ய உத்தேசம்?''

''பிரும்மேந்திர ஸ்வாமி வரும் வரையில் காத்திருக்க உத்தேசம்'' என்றான் அவன்.

''அவர் என்ன கொண்டு வரப் போகிறார் உங்களுக்கு?'' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

ஆனால் பிரும்மேந்திர சுவாமி கொண்டுதான் வந்தார். ஆறு நாட்கள் கழித்து வந்தபோது வெறுங்கையுடன் வரவில்லை அவர். கொலாபாவை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தக்கூடிய விவரங்களுடன் வந்தார்.

அத்தியாயம் 49

திரை வேண்டும்

ஆறு நாட்கள் கழித்து, அதாவது ஏழாவது நாள் இரவின் இரண்டாம் ஜாமத்தில்தான் பிரும்மேந்திர சுவாமி கொலாபாவுக்கு வந்து சேர்ந்தார். வந்தபோது அவர் தமது வரவைப்பற்றி யாரும் அறியாத வண்ணம் மிக ரகசியமாகவே கொலாபாவை அடைந்தார். கொலாபாவுக்கு எதிரிலிருந்த ஆலிபாக்குக்கு மூடு வண்டியொன்றில் இரவின் முதல் ஜாமத்திலேயே வந்தாரானாலும் ஊரடங்கி இரண்டாம் ஜாமம் நன்றாகத் துவங்கும் வரை காத்திருந்த பிறகே அவர் தம்முடன் வந்திருந்த இருவருடன் ஒரு படகில் ஏறிக்கொண்டார். அவர் படகுத் துறையிலிருந்த படகோட்டி ஒருவனைப் படகைத் தளையிலிருந்து அவிழ்க்கச் சொன்னதும் அவன் வியப்புடன் கேட்டான், ''இந்த நேரத்திலா அக்கரை போகப் போகிறீர்கள்?'' என்று.

''ஆம். படகுத் தளையை அவிழ்த்துக்கொள். படகைத் தள்ளி நீரில் இறக்கு'' என்று உத்தரவிட்டார் சுவாமி.

படகுக்காரன் சிறிது யோசித்துவிட்டு, ''சுவாமி! கடல் அலை பெரிதாகிக் கொண்டிருக்கிறதைக் கவனித்தீர்களா? இதில் சென்றால் படகு கவிழ்ந்தாலும் கவிழும்'' என்றான்.

''கவிழாது. சொல்கிறபடி செய்'' என்றார் சுவாமிகள்.

படகுக்காரன் அதற்குமேல் ஏதும் சொல்ல முடியாமல் படகுத் தளையை அவிழ்த்துப் படகை நீருக்குள் தள்ளினான். அதில் தாமும் ஏறி, தம்முடன் வந்த இருவரையும் அவர்கள் கொண்டு வந்திருந்த இரு பெட்டிகளையும்

ஏற்றிக்கொண்ட சுவாமி, துடுப்புகளைத் தாமே இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு படகில் ஏறிவந்த படகோட்டியை நோக்கி, ''நீ தேவையில்லை, இந்தப் படகு உனக்குக் காலையில் வந்து சேரும்'' என்று கூறிவிட்டுத் துடுப்புகளைத் துழாவிப் படகைச் செலுத்தி விட்டார். அலைகள் பெரிதாகிக்கொண்டிருந்ததைக் கண்டு, சுவாமியும் அவருடன் வந்தவர்களும் அக்கரைக்குப் போய்ச் சேரவேண்டுமே என்ற பீதியும் ஆரம்பத்தில் கொண்டான் அந்தப் படகோட்டி. ஆனால், அந்தப் பீதி வெகு விரைவில் அகன்றது அவன் மனத்திலிருந்து. நீண்ட நாள் படகோட்டப் பயின்ற மாலுமியைப் போல் அலை மோதலின் வகை பார்த்துப் படகை மிக லாகவமாக செலுத்துவதைக் கண்ட படகோட்டி பிரமிப்பின் உச்ச நிலையை அடைந்தான்.

இடையேயிருந்த முக்கால் மைல் கடல்நீரைத் தாண்டிக் கொலாபாவின் கரையை அடைந்த சுவாமிகள், முதலில் தம்முடன் வந்தவர்களைக் கரையில் இறங்கச் சொல்லி, பிறகு தாம் இறங்கிப் படகைக் கரையில் இழுத்துப் படகிலிருந்த இரு பெட்டிகளையும் இறக்கினார். பிறகு கரையோரத்திலிருந்து சற்று எட்டியிருந்த குடிசைகளிலிருந்த இரண்டு பணியாட்களை அழைத்து வந்து பெட்டிகளை எடுத்துக்கொண்டு வரும்படி பணித்து, தம்முடன் வந்தவர்களுடன் முன்னே நடந்தார். கரையில் இறங்கியவர் நேரே தோர்லாவாடாவுக்குச் செல்லாமல் குலாபியின் கோயிலை நோக்கிச் சென்று, அந்தக் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த அர்ச்சகர் வீட்டை அடைந்து, அர்ச்சகரை வெளியிலிருந்தே அழைத்தார். வெளியே வந்த அர்ச்சகர் சுவாமியைக் கண்டதும், ''வரவேண்டும். வரவேண்டும். சுவாமியைத்தான் எல்லோருமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்று கூறியவர், சுவாமியின் ஒரு பார்வைக்குக் கட்டுப்பட்டு, ''நான் வரட்டுமா தங்களுடன்?'' என்று

''எங்கு?'' சுவாமியின் குரல் கண்டிப்புடன் வந்தது.

''தோர்லாவாடாவுக்கு'' என்றார் அர்ச்சகர்.

''அங்கு போக நான் இங்கு வருவானேன்?'' என்று கேட்டார் சுவாமி கடுமையுடன்.

''சுவாமி தங்கவேண்டியது தோர்லாவாடாவில் தானே'' என்று மென்று விழுங்கினார் அர்ச்சகர்.

''அப்படி ஏதாவது கண்டிப்பு இருக்கிறதா கொலாபாவில்?''

''இல்லை. இருந்தாலும் அது அரண்மனை...''

''சன்னியாசிகள் அரண்மனையில்தான் தங்க வேண்டுமா?''

இந்தச் சமயத்தில் அர்ச்சகரும் சிறிது விஷமத்தைக் காட்டி, ''தாங்கள் மற்ற சன்னியாசிகளைப்போல் அல்லவே?'' என்றார் மெதுவாக.

''வேறு எப்படியோ?''

''சுவாமிக்கு அரசியல் சம்பந்தம் பொருளாதார சம்பந்தம் பலவும் இருப்பதாகச் சொல்கிறார்கள்.''

இதைக் கேட்ட பிரும்மேந்திர சுவாமி முதன் முதலாகப் புன்முறுவல் கொண்டார். ''கோவில் அர்ச்சகருக்கும் அரசியலில் சம்பந்தமிருப்பதாகத் தெரிகிறது'' என்று கூறவும் செய்த பிரும்மேந்திர சுவாமி, ''இன்று நாம் அரண்மனையில் உறைவதாக உத்தேசமில்லை. நீங்கள் தயவு செய்தால், கோவிலுக்கு வரும் யாத்திரிகர்கள் விடுதியில் தங்க உத்தேசம்'' என்று தெரிவித்தார்.

''அபசாரம்! அபசாரம்! சுவாமிக்கு அடிமை தயவு செய்வதாவது! இந்தக் கொலாபாவே சுவாமிக்குச் சொந்தம். இதோ சாவிகளை எடுத்து வந்துவிட்டேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று பெரும் சாவிக்கொத்து ஒன்றுடன் வந்தார் அர்ச்சகர்.

பிறகு அவர்களை அழைத்துக்கொண்டு தமது விடுதிக்குப் பக்கத்தில் கோவிலில் பிரதான வாசலுக்கு எதிரேயிருந்த ஒரு பெரிய வீட்டைத் திறந்து உள்ளே சென்று தீபத்தைக் கொளுத்தினார். தீபம் கொளுத்தப்பட்டதும் தம்முடன் வந்த இருவருடன் உள்ளே நுழைந்த பிரும்மேந்திர சுவாமிகள் அர்ச்சகரைப் போகச் சொல்லி விட்டுத் தம்முடன் வந்தவர்களுக்கு உட்புறமிருந்த ஒரு பெரும் அறையைக் காட்டி, ''இதில் நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். இதோ நான் பெட்டிகளை அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்று பணியாளை விளித்து, பெட்டிகளைக் கொண்டுபோய் வைக்குமாறு பணித்தார்.

பணியாள் உள்ளே சென்றதும் சுவாமிகள் அந்தப் பெரு விடுதியின் வாயிலிலேயே நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தார். உள்ளேயிருந்தவர்கள் வாயிற்கதவைச் சாத்தித் தாளிட்டதும் எழுந்த சுவாமி, தீர்க்காலோசனையுடன் குலாபியின் கோயிலை ஒருமுறை பிரதட்சணம் வந்து, விடுதியை அடைந்து, வாயில் தாழ்வரையில் படுத்துக் கொண்டார். சுவாமி படுத்தவுடன் நன்றாக நித்திரையில் ஆழ்ந்துவிட்டாரானாலும் ஒரே ஒரு ஜாமம் மட்டுமே தூங்கிவிட்டு நான்காம் ஜாம ஆரம்பத்திலேயே விழித்துக் கொண்டார். தாம் விழித்துக்கொண்டது மட்டுமின்றிப் பக்கத்து வீட்டிலிருந்த அர்ச்சகரையும் எழுப்பி, ''என்னுடன் வந்திருக்கும் இருவரும் நீராட ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார்.

''இதற்குள்ளாகவா?'' என்று கேட்டார் அர்ச்சகர்.

''ஆம். பொழுது விடிவதற்குள் அவர்கள் நீராட வேண்டும்'' என்று கூறிய சுவாமி ''அதற்குள் நானும் கடற்கரை வரை போய் வருகிறேன். நான் வரும்வரை வீட்டுக்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம்'' என்று கண்டிப்பாக உத்தரவிட்டுக் கடற்கரையை நோக்கிச் சென்றார்.

கடலில் சுவாமி நன்றாக நீராடினார். அத்தனைக் காலையில் அத்தனைக் குளிரில் அவர் அலட்சியமாகக் கடலில் நீந்தியும் மூழ்கியும் நீராடுவதை இரண்டொரு முறை படகுகளில் மீன் பிடிக்கக் கிளம்பியவர்கள் கண்டு பிரமித்தனர். யார் பிரமிப்பையும் லட்சியம் செய்யாத பிரும்மேந்திர சுவாமி நன்றாக நீராடி வஸ்திரத்தைப் பிழிந்து உடுத்தி, துண்டொன்றினால் தலை, உடல் துவட்டி வெகு வேகமாக நடந்து கோவில் விடுதிக்கு வந்து சேர்ந்தார்.

தாம் வருவதற்குள் தம்முடன் வந்தவர்கள் நீராடிப் புத்தாடை புனைந்து விட்டதையும் கூடத்தில் தமது ஹோமத்துக்கான சாமக்கிரியைகளை வைத்திருப்பதையும் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தார். பிறகு தமது மடி சஞ்சியிலிருந்து காவி உடை எடுத்துப் புனைந்து, நெற்றியில் சந்தனம் தீட்டி, கூடத்திலிருந்த விளக்கைத் தூண்டி விட்டார். பிறகு சந்தனத் தூள்களுக்குத் தீயிட்டு, மூட்டையிட்டு ஹோமம் வளர்த்தி பூஜையைத் துவங்கினார். அவர் உதடுகள் மந்திரங்களை முணுமுணுத்தன. பிறகு வேத ரிக்குகள் ஸ்வரங்களுடன் உதிர்ந்தன, பெரிய குரலில். அக்னி, ஹவிஸை வாங்கிக்கொண்டு, பிரதட்சிணமாக எரிந்தது.

அந்த நல்ல சகுனத்தைக் கண்டு சுவாமி மகிழ்ச்சியடைந்தார். மெல்ல மெல்லப் பொழுதும் விடியலாயிற்று. குலாபி கோயிலின் உதய கால மணி டணார் டணார் என்று அடித்தது. குலாபிக்கும் அர்ச்சகர் பூஜை துவங்கிவிட்டதை நினைத்த பிரும்மேந்திர சுவாமி துர்க்கா மந்திரங்களைச் சொல்லி அக்னியில் ஹோமம் செய்தார். பிறகு தம்முடன் வந்த இருவரையும் அக்னிக்குத் தண்டனிடச் சொல்லி, இருவருக்கும் தமது பையிலிருந்து குங்குமப் பிரசாதமும், ஹோமத்திலிருந்து ஒரு சிறு மூட்டையை எடுத்து அதன் நுனியிலிருந்த அக்னியை அலட்சியமாகக் கையால் நெருடி, ஹோம சாம்பல்

பிரசாதமும் அளித்தார். அதை அவர்கள் தரித்துக் கொண்டதும், ''இனி நீங்கள் மறைவிலிருங்கள். என்னைத் தேடிப் பலர் வருவார்கள். அவர்கள் கண்களில் பட வேண்டாம்'' என்றார்.

இருவரும் தலைவணங்கி அறைக்குள் சென்ற பின்னர், சுவாமி, ஹோமத்தை முடித்துக் கொண்டு குலாபி கோயிலுக்குச் சென்றார். அங்கு குலாபியின் முகோல்லாச அர்ச்சனை செய்யச் சொல்லி நீண்ட நேரம் தியானத்தி லிருந்தார்.

இதற்குள் கொலாபாவில் பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டதால் எங்கும் மக்கள் அரவம் கேட்கத் தொடங்கியது. அதுவரை உதய காலப் பறவைகள் காடுகளில் கிளப்பிக் கொண்டிருந்த கிலகிலா சப்தங் களை, அலுவலுக்குச் செல்லும் சாதாரண மக்கள் அரவமும், கொலாபாவின் காவல் வீரர்களின் எச்சரிக்கை கோஷங்களும் மறைக்கத் துவங்கின. கடற்கரையில் படகுகள் செல்லும் சப்தமும், சிறிது அடங்கிவிட்ட அலைகள் தரையில் சர்ரென்று மோதும் இன்ப நாதமும் கேட்டன. பிரும்மேந்திர சுவாமி தியானத்திலிருந்து மீண்டு குலாபியின் பிரசாதத்துடன் கோயிலிலிருந்து வெளிப்போந்த போது அவரை இரு கோவில் காவலர் பார்த்து விட்டதால், அவர் வந்துவிட்ட விஷயம் வெகு துரிதமாகத் தோர்லாவாட்டாவுக்கு எட்டிவிட்டது.

சாதாரணமாக, விடியற்காலையில் எழுந்து நீராடி சந்தியை முடித்துப் பூஜையில் உட்காரும் பழக்கமுள்ள சித்பவன் பிராம்மணனான பாலாஜிக்கே அவர் வரவு முதலில் உணர்த்தப்பட்டதால், அதைப் பற்றிக் கனோஜிக் கும் அறிவிக்குமாறு பாலாஜி கட்டளையிட்டார். கட்டளையிட்டுத் தூதனை அனுப்பிய பிறகு பாலாஜி தீவிர சிந்தனையில் இறங்கினார். இத்தனை மர்மமாக இரவில் வந்து கோயில் விடுதியில் சுவாமி தங்கவேண்டிய அவசியமென்னவென்று பாலாஜி சிந்தித்துப் பார்த்தார்.

திடீரென பாலாஜியின் மனத்தில் ஒரு விஷயம் பளிச்சிட்ட தால் அவர் சாம்பல் நிறக் கண்களில் புத்தொளி படர்ந்தது. 'ஒருவேளை அப்படியிருக்குமா?' என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்ட பாலாஜி, 'ஒருக்காலும் இருக்காது. அது சாத்தியமில்லை' என்று தாமே முடிவு கட்டிக் கொண்டார். 'எப்படியும் சுவாமியைச் சந்தித்தால் விஷயம் தெரிந்துவிடுகிறது' என்று தம்மைத் தாமே சாந்தப்படுத்திக் கொண்டாலும், அந்தச் சந்தேகம் திரும்பத் திரும்ப அவர் மனத்தில் எழுந்து சுழன்று கொண்டே இருந்தது. 'சரி, கனோஜி வரட்டும். சுவாமி யிடம் போவோம்'' என்று தீர்மானித்துக் கொண்டார் பேஷ்வா.

ஆனால் கனோஜி கொஞ்சத்தில் வரவில்லை. முதல் நாளிரவு சற்று மதுபானத்தை அதிகமாகச் செலுத்தி யிருந்த கனோஜியைக் காவலரால் எழுப்ப முடியவில்லை. பாலாஜி விசுவநாத்தின் தூதைக் கொண்டு சென்றவனை முதலில் சந்தித்த கஹினா, ஸார்கேல் நன்றாக உறங்குகிற தென்றும், எழுந்ததும் விஷயத்தைக் கூறுவதாகவும் சொல்லியனுப்பிவிட்டாள். கதிரவன் நன்றாக எழுந்த பின்பு எழுந்த கனோஜி, பாலாஜியின் செய்தியை கேட்டதும் சிறிது உணர்ச்சியைக் காட்டினார். பிரும்மேந்திர சுவாமி வந்து கோவில் விடுதியிலிருப்பதை கேட்டதும் ஒருமுறை மனத்துள் குலாபியை நினைத்தார். பிறகு எழுந்திருந்து நீராட்டத்துக்குச் சென்றார். நீராடி புத்தாடை புனைந்து, சந்தனத் திலகமிட்டு, ஓ பிச்சுவாவை மட்டும் இடைக் கச்சையில் செருகி கொண்டு பாலாஜியின் இருப்பிடம் சென்றார்.

அவருக்காகவே காத்திருந்த பாலாஜி உடனடியாக கிளம்பவே இருவரும் குலாபியின் கோவிலை நோக்கி நடந்து கோவில் விடுதிக்கு வந்து, கூடத்தில் ஹோம குண்டத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுவாமியை வணங்கி எழுந்திருந்தனர். அவர்களை உட்காரச் சொல்லி

கையால் சைகை செய்த சுவாமி அவர்களுக்கு ஹோமப் பிரசாதமும் குங்குமமும் அளித்தார். கடைசியாக பாலாஜியைப் பார்த்து, ''இன்று நீங்கள் விசாரணையை வைத்துக் கொள்ளலாம்'' என்றார்.

பாலாஜியின் சாம்பல் நிறக் கண்கள் சுவாமியை நோக்கின. ''விசாரணை முடிந்துவிட்டது. தீர்ப்புத் தான் பாக்கி'' என்றார் அவர்.

''எதையும் புனர் விசாரணை செய்ய நீதி சாஸ்திரம் இடங் கொடுக்கிறது.''

''அதற்கு முக்கிய புதுக் காரணங்கள் வேண்டும்'' என்றார் பாலாஜி.

''இருக்கின்றன.''

''புது சாட்சியங்கள்?''

''இருக்கின்றன.''

பாலாஜியின் சாம்பல் நிறக் கண்களில் திடீரெனப் புத்தொளியொன்று தோன்றி மறைந்தது. ஆனால் கேள்வியொன்று சாதாரணக் குரலில் எழுந்தது. ''திரை வேண்டுமா?'' என்று கேட்டார் பேஷ்வா.

''வேண்டும்'' என்று சர்வ சகஜமாகச் சொன்னார் சுவாமி.

அத்தியாயம் 50

படிந்த கறை அழிவதில்லை

பேஷ்வா பாலாஜி விசுவநாத்தின் விசித்திரக் கேள்வியும் பிரும்மேந்திர சுவாமியின் சகஜமான பதிலும் கனோஜி ஆங்கரேயைச் சிறிதும் அசர வைக்கவில்லை. அவர் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் விளைவிக்கவு மில்லை. ''திரையிட்ட விசாரணையை எப்பொழுது துவங்கலாம்'' என்று மட்டும் கேட்டார் கனோஜி ஆங்கரே தமது கரகரத்த குரலில்.

''எப்பொழுது வேண்டுமானாலும் துவங்கலாம். நேரம் காலம் உங்களிருவர் சௌகரியத்தையும் பொறுத்தது'' என்று சொன்னார் சுவாமி.

கனோஜியின் பெருவிழிகள் சுவாமியை ஒருமுறை உருண்டு பார்த்தன. ''சாட்சிக்குப் போடவேண்டிய இரு ஆசனங்களும் பெருந்தோரணையில் இருக்கவேண்டியது தானே?'' என்று மீண்டும் வினவினார் கனோஜி, தமக்கும் விஷயம் புரிந்துவிட்டதென்பதை உணர்த்த.

பிரும்மேந்திர சுவாமியின் கண்களில் சற்று வியப்பின் சாயை படர்ந்தாலும் அவரளித்த பதிலில் அந்த வியப்பு ஒலிக்கவில்லை. ''இரண்டு ஆசனங்களுக்கும் சற்று வித்தியாசமிருந்தால் போதும்'' என்று மட்டும் தெரிவித்தார் சுவாமி.

அந்தச் சம்பாஷணையில் பாலாஜி விசுவநாத் கலந்து கொள்ளாவிட்டாலும், சுவாமி கொலாபாவில் வந்து இறங்கியது முதல் நடந்திருக்கக்கூடிய அனைத்தையும் கனோஜி அறிந்திருக்கிறாரென்பதை உணர்ந்துக் கொண்டார். ஆனால் இதைப்பற்றி ஏதும் கேட்காமல்

சுவாமியிடம் விடைபெற்றுக் கொண்டு கனோஜியை அழைத்துக்கொண்டு கிளம்பிய பாலாஜி வெளியே வந்ததும், ''சுவாமி ஒரு பெண்ணை அழைத்து வந்திருப்பா ரென்பதை நான் ஊகித்தேன். நீ இரு ஆசனங்களைப் பற்றிக் குறிப்பிட்டது எனக்கு விந்தையாயிருக்கிறது'' என்று கூறினார் தமது நண்பரைப் பார்த்து.

கனோஜி லேசாக நகைத்தார். ''சுவாமி ரகசியமாகத் தான் இவர்களை அழைத்து வந்திருக்கிறார். ஆனால் இரு பெட்டிகளையும் அவரது சஞ்சியையும் கூடத்தின் மூலையில் வைத்தது தவறு. தவிர அவர் அழைத்து வந்திருப்பவர்களும் பெட்டியை அரைகுறையாகத் திறந்து வைத்திருக்கக் கூடாது'' என்ற கனோஜியின் சொற்களி லும் ஏளன நகைப்பு ஒலித்தது.

பாலாஜி ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். அத்துடன், ''பெண்கள் யாரென்பது தெரியுமா உனக்கு?'' என்று வினவவும் செய்தார்.

''ஒருவர் இன்னாரென்று தெரியும். அரசியல் சிக்கலை யும் இதயசந்திரன் விசாரணைக் குழப்பத்தையும் அவிழ்க்க அந்தப் பெண் தேவை. இன்னொருவர் இன்னாரென்று தெரியவில்லை'' என்றார் கனோஜி.

''பணிப் பெண்ணாயிருக்கலாம்'' என்று சுட்டிக் காட்டினார் பாலாஜி.

''இருக்காது. இரண்டு பெட்டிகளிலிருந்து எட்டிப் பார்த்த சேலைப் பகுதிகளில் சரிகை பட்டையாக இருந்தது. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே ரகம், பணக்காரர் அணிவது'' என்று திட்டவட்டமாகக் கூறினார் கனோஜி.

அதற்கு மேல் இருவரும் ஏதும் பேசாமல் மௌன மாகவே நடந்தனர். தோர்லாவாடாவை அடைந்ததும், ''இன்று பிற்பகல் விசாரணை துவங்குவோம்'' என்று அறிவித்துவிட்டு பாலாஜி தமது அறையை நோக்கி

நடந்தார். கனோஜியும் தமது மனைவிமார் இருந்த பின்கட்டை நோக்கிச் சென்றார். அங்கிருந்த தமது பெரும் அறையொன்றை அடைந்ததும் காவலனொருவனை விளித்து ஜலதீபத்திலிருந்து மஞ்சுவையும் இதயசந்திரனை யும் அழைத்துவர உத்தரவிட்டார். பிறகு இரண்டு காவலர் பின்தொடர கொலாபாவின் காவலைப் பார்வையிடச் சென்றார். காவலைப் பார்வையிடுவது, கடலில் நின்றிருக்கும் கப்பல்களைக் கவனிப்பது, குலாபியை தரிசனம் செய்வது முதலிய தினசரிக் கடமை களை முடித்த பின்பு தோர்லாவாடா வந்து, அங்கு ஏற்கனவே வந்துவிட்ட இதயசந்திரனுடனும் மஞ்சு வுடனும் உணவருந்தினார். அப்பொழுதான் அறிவித்தார் அவர்களுக்கு அன்று பிற்பகல் விசாரணை தொடங்கப்படும் என்பதை.

இதயசந்திரன் விசாரணையைப் பற்றி எந்தக் கவலை யும் கொண்டதாகத் தெரியவில்லை. ''அப்படியா?'' என்று ஒரு சொல் மிக அலட்சியமாக அவன் வாயிலிருந்து வெளிவந்தது.

ஆனால் மஞ்சு மட்டும், தான் என்னதான் மாலுமியா யிருந்தாலும், கப்பல் தலைவியாயிருந்தாலும், போரில் வல்லமையுடையவளாயிருந்தாலும், பெண்தான் என்பதை அந்தச் சமயத்தில் நிரூபித்தாள். அவள் முகத்தில் கவலைக் குறி தோன்றியது. ''மீண்டும் விசாரணையா?'' என்ற அவள் கேள்வியிலும் அந்தக் கவலை நன்றாக ஒலித்தது.

''ஆம், மஞ்சு'' என்றார் கனோஜி.

''விசாரணைதான் முடிந்து விட்டதே'' என்று கூறினாள் மஞ்சு.

''மறுபடியும் விசாரணை நடக்கப் போகிறது.''

''காரணம்?''

''புது சாட்சிகள் வந்திருக்கிறார்கள்.''

''புது சாட்சிகளா?''

''ஆம்.''

''யாரவர்கள்?''

''இரு பெண்கள்.''

''பெண்களா!''

''ஆம். உனது கணவனை ஏற்கனவே அறிந்தவர்களாயிருக்க வேண்டும்'' என்று கூறிக் கடகடவென நகைத்தார் கனோஜி.

அந்தச் சிரிப்பு நரக வேதனையாயிருந்தது மஞ்சுவுக்கு. கணவனின் நிலை ஆபத்திலிருக்க, தந்தை, பெண்களைப் பற்றிப் பேசுவதும் நகைப்பதும் எரிச்சலைத் தந்தது அவளுக்கு. ''வயது ஏற ஏற உங்களுக்குப் பெண் பித்து அதிகமாகிறது'' என்று சீறினாள் மஞ்சு.

''இந்த முறை எனக்காக வரவில்லை இந்தப் பெண்கள், உன் கணவனுக்காக வந்திருக்கிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினார் கனோஜி.

''எங்கிருந்து வந்திருக்கிறார்கள்?'' என்று மீண்டும் கேட்டாள் மஞ்சு கடுங்கோபத்துடன்.

''தெரியாது. ஆனால் அழைத்து வந்திருப்பார் சுவாமிகள்'' என்று கூறிய கனோஜி, அதற்கும் மேல் ஏதும் கூறாமல் உணவை முடித்துக் கொண்டு, ''நாம் பிற்பகல் சந்திப்போம் விசாரணை மண்டபத்தில்'' என்று கூறி சயன அறையை நோக்கிச் சென்றுவிட்டார்.

மஞ்சு உணவருந்தித் தனது தட்டில் கைகழுவிய பிறகும் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தாள். புதிதாக வந்த பெண்களைப் பற்றியோ, அவர்கள் வருகைக்கும் இதயசந்திரனுக்கும் தந்தை தொடர்பு ஏற்படுத்திப் பேசியதைப் பற்றியோ அவள் கவலைப்படவில்லை. விசாரணையில் முடிவு ஏது ஆகுமோ என்ன

ஆகுமோ என்று மட்டும் திகில்பட்டாள் அவள். பாலாஜி விசுவநாத் நெறி தவறாதவர், நியாயம் செலுத்துவதில் தயாதாட்சண்யம் பார்க்காதவர் என்பதை மஞ்சு உணர்ந்திருந்ததால் இதயசந்திரனின் குற்றங்களுக்கு ஏதாவது மாற்று கண்டுபிடிக்கப்பட்டாலொழிய அவனுக்குத் தண்டனை நிச்சயமென்பது அவளுக்குத் தெரிந்தது. தவிர, இதயசந்திரனும் கள்ளனைப்போல் தப்பி ஓட ஒருக்காலும் முயலமாட்டானென்பதையும் அவள் உணர்ந்திருந்ததால் பெரும் வேதனை அவள் இதயத்தைச் சூழ்ந்து கிடந்தது. எப்படியும் விசாரணையில் முடிவு தெரிந்துவிடும் என்ற எண்ணத்தில் அவள் பகலின் முதல் பகுதியைக் கழித்தாள். ஆனால் ஓர் ஆறுதலிருந்தது அவளுக்கு. தனது தந்தை அடியோடு கவலையொழிந்திருந்ததற்கும், பழையபடி வேடிக்கையாகக்கூடப் பேசத் தொடங்கி விட்டதற்கும் தகுந்த காரணமிருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால், அவள் நினைத்தது சரியல்ல என்பதை கனோஜியின் முகம், அவர் தமது அந்தரங்க அறையை அடைந்ததும் நிரூபித்தது. அதுவரை முகத்தின் மீதிருந்த அசட்டையெனும் சாயை அவர் அறைக்குள் நுழைந்ததும் அகன்றது. கவலை முகத்தைப் பரிபூரணமாக மூடிக் கொண்டது. அறை நடுவிலிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து நீண்ட நேரம் ஏதோ யோசித்தார் அவர். பிறகு திடீரென எழுந்து தோர்லாவாடாவிலிருந்து கிளம்பி மேற்கு நோக்கி நடந்து, சற்று எட்ட பந்தய ஆடுகளும் கோழிகளுமிருந்த கொட்டகைக்குப் பக்கத்திலிருந்த ஒரு விடுதிக்குள் நுழைந்தார். அங்கு உணவருந்திக் கொண்டிருந்த நிம்கர் அவரைக் கண்டதும் சரேலென்று எழுந்து நின்றான்.

''சீக்கிரம் உணவருந்து'' என்று கூறிய கனோஜி அவன் உணவருந்தி முடிக்கும் வரையில் அந்த அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தார். அவன் உணவருந்தி முடித்தபின், ''உடைகளை அணிந்துகொள்'' என்று உத்தரவிட்டார்.

பதிலேதும் சொல்லாமல் நிம்கர் உடைகளை அணிந்து கொண்ட பின்பு தமது பின்னால் அவனை வரும்படி கூறி கனோஜி முன்னே நடந்தார். கொலாபாவின் மலைப் பாறைகளில் சற்றுச் சுற்று வழியாகவே நடந்த கனோஜி, அவனை அழைத்துக்கொண்டு கொலாபாவின் கிழக்குப் பகுதியான நீர்க்கரையை அடைந்தபின், ''நிம்கர்! படகிலேறி அலிபாக் சென்று அங்கிருந்து ஒரு புரவியை எடுத்துக்கொண்டு பன்ஹாலா சென்றுவிடு'' என்று கூறினார்.

நிம்கர் அவர் உத்தரவுக்கும் அவசரத்துக்கும் காரணம் தெரியாமல் விழித்தான். பிறகு சினத்துடன் கேட்டான், ''திருடன்போல் நான் ஏன் ஓடவேண்டும்?'' என்று.

கனோஜி, அவன் சொற்களின் உஷ்ணத்தைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ''நான் கொள்ளைக்காரன். நீ எனக்கு வேவு பார்ப்பவன். என் தூதன். கொள்ளைக்காரன் தூதன் கொள்ளைக்காரனாகவோ திருடனாகவோ இருப்பதில் வியப்பில்லை'' என்ற கனோஜி, ''கொலாபாவிலிருந்து நீ செல்வது உனக்கு நன்மையளிக்கும்'' என்று சொன்னார்.

நிம்கரின் முகம் இன்னும் பயங்கரமாக மாறியது. ''நான் மறுத்தால்?'' என்று வினவினான்.

''கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவாய்,'' என்று கூறிய கனோஜியின் குரலில் கடுமை சற்று தெரிந்தது.

''யாரைக் கொலை செய்தேன் நான்?'' என்று கேட்டான் நிம்கர்.

''தஞ்சை அரண்மனையில் வீரனொருவனைக் கட்டாரியால் குத்திக் கொன்றிருக்கிறாய்.''

''அது என் தவறல்ல.''

''வேறு யார் தவறு?''

''மகாராஷ்டிரத்தின் தவறு. குழந்தையைத் தெரியாமல் கொண்டு வரும்படி உத்தரவு வந்தது. குழந்தையை எடுத்துக்கொண்டு கிளம்பிய போது அந்த வீரன் தடுத்தான். குரல் கொடுத்துக் காவலரை அழைக்க முயன்றான். அதனால் கட்டாரியால் குத்தினேன். இல்லையேல் விஷயம் அம்பலமாகி இருக்கும். மகாராஷ்டிரத்தின் ரகசிய வாரிசு வந்து சேர்ந்திருக்காது'' என்று மிகுந்த உஷ்ணத்துடன் கூறினான் நிம்கர்.

''நீ குத்தியவனுக்குத் தற்காப்புக்கு சமயமிருந்ததா?'' என்று கேட்டார் ஸார்கேல்.

''இல்லை. சூழ்நிலை அதற்கு இடங்கொடுக்கவில்லை.''

''இடங்கொடுக்கவில்லை என்பதற்கு யார் சாட்சி?''

இந்தக் கேள்வியைக் கேட்டுத் திகைத்தான் நிம்கர். கடைசியில், ''ஆண்டவன் சாட்சி'' என்று கூறினான்.

''ஆண்டவன் சாட்சி சொல்ல இப்பொழுது வரமாட்டான். மனிதப்பிறவியில் யாராவது இருக்கிறார்களா?'' என்று கேட்டார்.

நிம்கரின் முகத்தில் முதன் முதலாகக் கவலை தெரிந்தது. ''அந்தப் பழைய கதையை இப்பொழுது யார் கிளறப் போகிறார்கள்?'' என்று கேட்டான்.

கனோஜி அவனை உற்றுப் பார்த்தார் சில வினாடிகள். பிறகு சொன்னார், ''நிம்கர்! மகாராஷ்டிரத்தில் சிறந்த வீரர்களில் நீ ஒருவன். மகாராஷ்டிர அரச குலத்துக்குப் பெரும் சேவை செய்திருக்கிறாய். ஆனால் குத்திக் கொலை செய்வது யார் செய்தாலும் குற்றம். தேசபக்தன் செய்தாலும் குற்றம். வாழ்க்கையில் எப்பொழுதோ ஏற்படும் மாசு, எப்பொழுதோ படிந்த கறை நம்மை விடுவதில்லை. எப்படியும் தொடர்ந்து வந்து ஒரு நாள் பிடித்துக்

கொள்கிறது. அந்த நாள் இன்று உனக்கு. மகாராஷ்டிரத்துக்கும், ராணி தாராபாய்க்கும் நீ செய்த சேவையை முன்னிட்டு உன்னைக் காப்பாற்றுகிறேன் நான். இப்பொழுது போய்விடு. பிறகு சந்திப்போம்'' என்று மேலும் தொடர்ந்து சொன்னார் கனோஜி. ''பேஷ்வாவை உனக்குத் தெரியும். நீதி தவறாதவர். உன் குற்றம் அவருக்குத் தெரியாது. தெரிந்திருந்தாலும் நம்பவில்லை யென்பதும் அவர் உன்னிடம் காட்டும் பரிவிலிருந்து தெரிகிறது. ஆனால் குற்றம் நிரூபிக்கப்பட்டால் நீயென்ன, அவர் மகனாயிருந்தாலும் மரண தண்டனை விதிப்பார்.''

நீண்ட யோசனைக்குப் பிறகு கனத்த மனத்துடனும் துயரம் தோய்ந்த முகத்துடனும் படகில் ஏறிச் சென்றான் நிம்கர். கனோஜி திரும்ப தோர்லாவாடாவை நோக்கி நடந்தார். அவர் மனத்திலிருந்த பெரும் சுமை இறங்கி யிருந்ததை அவர் முகம் காட்டியது. அவர் நடையும் அலட்சியமாக இருந்தது. பிற்பகலில் பாலாஜி மீண்டும் விசாரணை துவங்கியபோது அந்த அவட்சியத்துடனேயே நீதிமண்டபத்தில் நுழைந்தார் கனோஜி.

அத்தியாயம் 51

மறு விசாரணை : மாதரசிகள் இருவர்!

கனோஜி ஆங்கரே விசாரணை மண்டபத்துக்குள் நுழையும்போது பிற்பகல் பெரிதும் ஏறிவிட்டதால் விசாரணைக்குச் சகல ஏற்பாடுகளும் முடிந்து பேஷ்வாவும் விசாரணையைத் தொடங்கத் தயாராகவே இருந்தார். பேஷ்வா மேடை மீதிருந்த நீதி ஸ்தானத்தில் அமர்ந்திருந்ததையும், அவருக்கெதிரே போடப்பட்டிருந்த வியாக்கிரா சனத்தில் ஜபமணி மாலைகளுடனும், காஷாயத்துடனும் மிகக் கம்பீரமாக பிரும்மேந்திர சுவாமியும் உட்கார்ந் திருந்ததையும், அந்த நீதி மண்டபத்தின் கால் பாகத்துக்குத திரை போடப்பட்டிருந்ததையும் கண்ட மகாராஷ்டிர ஸார்கேல், தாம் மட்டுமே கால தாமதம் கழித்து வந்திருப்பதை உணர்ந்து கொண்டார். ஒரு முறை பேஷ்வாவையும், மற்றொரு முறை பேஷ்வாவின் இடது பக்கத்தில் துவங்கி நீதி மண்டபம் நெடுகிலும் சென்ற திரையையும் உற்றுப் பார்த்த கனோஜி ஆங்கரே, பேஷ்வாவுக்கும் சுவாமிக்கும் தலை வணங்கிச் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். அப்படி அமர்ந்து கொண்டவர் அந்த நீதி மண்டபத்தின் வாயிற்படிக்கருகிலிருந்த இரு காவலரைத் தவிர வேறு காவலரே இல்லாததையும், விசாரணை நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பெடுக்க வேண்டிய சிட்னிஸும் மேடையில் இல்லாததையும், பேஷ்வாவே கையில் எழுதுகோலுடனும் எதிரே மேஜைப் பெட்டியுடனும் உட்கார்ந்திருந்ததையும் கவனித்து, விசாரணை மிக ரகசியமாகவே நடக்குமென்பதை உணர்ந்தார். அவர் இத்தகைய சிந்தனை

களில் மூழ்கியிருந்தபோது இதயசந்திரனும் நுழைந்தான். அந்த மண்டபத்திற்குள், மஞ்சு பின்தொடர. கனோஜியின் புருவங்கள் மஞ்சுவைக் கண்டதும் சற்று மேலேறி இறங்கின. மஞ்சுவுக்கும் இந்த விசாரணைக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும் என்பதை ஊகிக்க முடியாததால் பேஷ்வாவை நோக்கிக் கேட்டார்: ''இவள் இந்த விசாரணைக்கு அவசியமா?'' என்று.

''ஆம்'' என்றார் பேஷ்வா எந்த உணர்ச்சியையும் குரலிலோ முகத்திலோ காட்டாமல்.

''இதயசந்திரனின் வழக்குக்கும் என் மகளுக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்கு அறிவிக்கப்படவில்லையே இதுவரையில்'' என்றார் கனோஜி.

''எனக்கும் இது முன்னதாகத் தெரியாது'' என்று குறிப்பிட்ட பேஷ்வா, ''சற்றுப் பொறுத்தால் ஸார்கேலுக்கும் இந்த வழக்குக்கும்கூடச் சம்பந்தமிருப்பது தெரியும்'' என்று ஒரு வெடிகுண்டை வீசினார். மேற்கொண்டு ஏதும் பேசாமல் சம்பிரதாய முறையில் விசாரணையைத் தொடங்கி, ''இதயசந்திரா! படைத் தலைவரும் ஷாஹு காரியதுரந்தரருமான கனோஜி ஆங்கரே லோஹ்காட் வரும்படி அனுப்பிய உத்தரவுக்குக் கீழ்ப்படியாதது, கல்யாண் நகர் உன் பாதுகாப்பில் இருக்கையில் சுய காரியத்தை முன்னிட்டு அங்கிருந்து ஓடி விட்டது, கடமையைச் செய்ய வந்த கனோஜியின் தூதன் நிம்கரைக் கைது செய்து கடத்திச் சென்றது, ஆகிய மூன்று குற்றங்கள் உன்மீது சாற்றப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு என்ன சமாதானம் கூறுகிறாய்?'' என்று வினவினார்.

இதயசந்திரன் நின்ற நிலையில் கண்களைக் கம்பீரமாக உயர்த்தி பேஷ்வாவை நோக்கினான். ''பேஷ்வாஜி! ஒரு முறை சமாதானம் சொல்லிவிட்டேன். இது புனர் விசாரணையைப்போல் தெரிவதால் மீண்டும் சொல்கிறேன். என்னை லோஹ்காட்டுக்கு அழைத்தபோது

கனோஜி ஆங்கரே ராணி தாராபாயின் ஸார்கேல். ஆகவே ஷாஹு காரியதுரந்தரரோ, சத்ரபதி ஷாஹுவின் பேஷ்வாவோ அதுபற்றி என்னை விசாரிக்க முடியாது. இந்தக் கொலாபாவில் குலாபியின் சந்நிதியில் ஸார்கேலும் பேஷ்வாவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்பு நிகழ்ந்துள்ள விஷயங்கள்தான் என்னைக் கட்டுப்படுத்தும். ஆகவே, கல்யாண் நகரப் பாதுகாப்பைக் கைவிட்டுப் போனது என்னைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், நான் மீண்டும் எண்ணிப் பார்த்ததில் அதுவும் என்னைக் கட்டுப்படுத்தாது என்று தோன்றுகிறது'' என்ற சொற்கள் தெளிவாகவும் கணீரென்றும் உதிர்ந்தன அவன் உதடுகளிலிருந்து.

பேஷ்வாவின் சாம்பல் நிறக் கண்கள் மெல்ல மேஜைப் பெட்டியிலிருந்து எழுந்து இதயசந்திரனை நோக்கின. ''அது புது வாதமா?'' என்று அவர் உதடுகள் மெல்ல வினவின.

இதயசந்திரன் பேஷ்வாவை நோக்கிச் சொன்னான்: ''பேஷ்வாஜி! இந்த நீதி மண்டபத்துக்கு நான் வாதம் செய்ய வரவில்லை. சிந்தனையில் எழும் உண்மைகளைக் கூறவந்தேன். கனோஜி அவர்கள் போர் முடிந்த பின்பு கல்யாண் நகரைக் காக்கும்படி எனக்கு உத்தரவிட்டார், அவருக்கு அடுத்த தலைவன் நான் என்பதால். அது சரியானால் என்னுடைய உபதலைவனும், மகாவீரனும், போர்களைக் கண்டவனுமான சுகாஜியிடம் நான் பொறுப்பை ஒப்படைத்தது எப்படித் தவறாகும்?'' என்று.

பேஷ்வாவின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. அவன் சொன்னதை அப்படியே எழுதிக் கொண்டார் மயிலிறகுப் பேனாவால். பிறகு சொன்னார்: ''இதயசந்திரா! பொறுப்பில் தராதரம் உண்டு. எந்தப் பொறுப்பை யாரிடம் யார் ஒப்படைக்கலாம் என்ற நியதியும் உண்டு. கனோஜி உன்னிடம் கல்யாண் நகர்

பாதுகாப்பை ஒப்படைத்து அதை நீ உன் உபதலைவனிடம் ஒப்படைத்து, அவனுக்கும் ஏதோ முக்கிய அலுவலிருந்து அவன் தனக்குக் கீழிருப்பவனிடம் அந்த அலுவலை ஒப்படைத்து, இப்படி எல்லோருக்கும் அலுவல்களிருந்து, கடமையை அடுத்தவனிடம் ஒப்படைப்பதானால் அரசாங்கம் நடக்காது, ராணுவ நிர்வாகம் நடக்காது. ஆகையால் உன் வாதம் நிராகரிக்கப்பட்டது'' என்று. ''அடுத்து, நிம்கரைக் கடத்திச் சென்றதைப்பற்றி உன் கருத்து என்னவோ?'' என்றும் வினவினார் பேஷ்வா.

''கடமையைச் செய்தேன், என் நாட்டில் இருக்கும் ஒரு ராணிக்கு. கடமையைச் செய்தேன், தனயனை இழந்து தவிக்கும் ஒரு தாய்க்கு. கடமையைச் செய்தேன், நான் வாளின்மேல் இட்ட ஆணைக்கு'' என்ற இதயசந்திரன் நன்றாக நிமிர்ந்து மிகக் கம்பீரத்துடன் நின்றான். அவன் சொற்கள் அவன் கடமை உணர்ச்சியை ஆதரிப்பனபோல நீதி மண்டபத்தின் பெரும் சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தன.

பேஷ்வாவின் கண்கள் பிரும்மேந்திர சுவாமியை நோக்கின. பிரும்மேந்திர சுவாமி தலையை அசைத்தார். பேஷ்வா மீண்டும் இதயசந்திரனை நோக்கி, ''இதய சந்திரா! நீ மகாராஷ்டிரத்துக்குப் பெரும் சேவை செய் திருக்கிறாய். அந்தச் சேவையை உத்தேசித்து உன்னை மன்னித்து விடுதலை செய்தால் நீ மீண்டும் தமிழகம் சென்றுவிடுகிறாயா?'' என்று வினவினார் மெதுவான குரலில்.

இதயசந்திரனின் பதில் திட்டமாக இருந்தது. ''மாட்டேன் பேஷ்வா!'' என்றான் அவன்.

''ஏன்? இங்கென்ன வேலை உனக்கு? மனைவி கிடைத் திருக்கிறாள், பெரும் புகழ் கிடைத்திருக்கிறது, இணையற்ற கடல் வீரனாக. இரண்டையும் ஏற்றுத்

தஞ்சை திரும்ப உனக்குக் கசக்கிறதா?'' என்று கேட்டார் பேஷ்வா.

இதயசந்திரன் சிறிது சிந்தித்தான். பிறகு திரும்பித் தன் பின்னாலிருந்த மஞ்சுவைக் கையைப் பிடித்துத் தன்னருகில் அழைத்து நிறுத்திக்கொண்டான். பிறகு மிக உறுதியும் நிதானமும் நிறைந்த குரலில் பேசத் தொடங்கினான். ''பேஷ்வாஜி! இதோ என் மனைவி மஞ்சு. தாயற்றவள், தகப்பனை அறியாதவள், என்னையே கதியெனக் கொண்டவள். இவளுக்காக என் உயிரைக் கொடுப்பேன். நான் மகாராஷ்டிரத்துக்குச் செய்த சேவைக்கு இதைவிடச் சிறந்த பரிசு கிடைக்காது. இவள் என் இதயம். அடுத்து அதோ கனோஜி ஆங்கரே இருக்கிறார், அவர் இல்லையேல் நான் மாலுமியல்ல; உபதளபதியுமல்ல. புகழ் எனக்குக் கிட்டியிருக்காது. இதோ பிரும்மேந்திர சுவாமி. இவர் என்னைக் கடற் கரையிலிருந்து அன்று கண்டெடுத்திருக்காவிட்டால் நான் அன்றே விண்ணுலகம் போயிருப்பேன். இன்று இந்த விசாரணைக்கு அவசியமிருக்காது. பிரும்மேந்திர சுவாமி யைப் போன்ற மகான்களின் உறவு, கனோஜியைப் போன்ற இணையில்லா வீரர்களின் அன்பு இதோ என் பக்கத்திலிருக்கும் மலரின் காதல், இவற்றைவிட மனிதன் வேறு எதையும் விரும்ப முடியாது. ஆனால் மனைவி, புகழ் இரண்டையும் விடப் பெரிது ஒன்றிருக்கிறது வீரன் வாழ்வில். அதுதான் அவன் இடும் ஆணை. அந்த ஆணை, ஆணை தரும் கடமை, இவற்றிலிருந்து அவன் மீள முடியாது. மகாராஷ்டிரத்தின் ரகசிய வாரிசைக் கண்டு பிடித்துத் தருவதாக ஆணையிட்டேன், ராஜாராம் மகா ராஜாவின் ரகசிய ராணியிடம். இல்லையேல் வாரிசைக் கொண்டு சென்றவனைக் கொன்றுவிடுவதாக ஆணை யிட்டேன். அதுவும் முடியாவிட்டால் நான் மாண்டு விடுவேன் அந்த முயற்சியில் என்று கூறினேன். இந்த நிலை யிலிருந்து நான் மாறமுடியாது. வாளின்மேல் இட்ட

ஆணையைக் கைவிட்டவன் என்று தமிழ்நாடு தூற்ற நான் வாழமுடியாது. ஆகவே, நீங்கள் என்னை வலுக்கட்டாயமாகத் தமிழ்நாட்டில் கொண்டுபோய் விட்டாலும் திரும்பி வருவேன், வாரிசைக் கண்டுபிடிக்க, அல்லது நிம்கரைக் கண்டுபிடிக்க, இதில் சந்தேகமே வேண்டாம்...''

இந்த இடத்தில் இதயசந்திரன் சற்றுப் பேச்சை நிறுத்தினான்: மஞ்சுவின் கை அவன் கையை உறுதியாகப் பிடித்துக் கொண்டது. பேஷ்வா அவர்களிருவரையும் பார்த்தார் ஒரு விநாடி. பிறகு கேட்டார்: ''இதயசந்திரா! நீ தேடி வந்த மகாராஷ்டிர வாரிசுக்கு ஆபத்து ஏதுமில்லை. தகுந்த இடத்தில் நலமுடன் இருப்பதை அறிந்தால் சென்று விடுவாயா சொந்த ஊருக்கு?'' என்று.

''அதற்குத் தகுந்த ருசு வேண்டும் பேஷ்வா. ஒருமுறை நான் நேரில் வாரிசைப் பார்க்கவும் வேண்டும்'' என்றான் இதயசந்திரன்.

''இதற்கு முன்னால் அந்த வாரிசைப் பார்த்திருக்கிறாயா?'' என்று வினவினார் பேஷ்வா.

''இல்லை. வாரிசும் ராணியும் மிக ரகசியமாக உறைந்தார்கள் தஞ்சையில். இந்த வாரிசைத் தேடும் பணி கிடைக்காவிட்டால் ராணியையும் நான் பார்த்திருக்க மாட்டேன்'' என்றான் இதயசந்திரன்.

''ஆகையால் நீ வாரிசைப் பார்த்துப் பயனில்லை. ஆகவே, ருசுக்களைக் கொண்டு திருப்தியடைந்தால் என்ன?'' என்று மீண்டும் வினவினார் பேஷ்வா.

இதயசந்திரன் ஒரு விநாடி யோசித்துவிட்டுக் கூறினான்: ''ருசுவைப் பொறுத்தது.''

பேஷ்வா பிரும்மேந்திர சுவாமியை நோக்கி, ''சுவாமி தான் தமிழனுக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பிரும்மேந்திர சுவாமி தமிழனை நோக்கி ஏதும் சொல்லவில்லை. நீதி மண்டபத்தின் கூரையை நோக்கினார். அங்கிருந்த இந்து தெய்வங்களின் வண்ணச் சித்திரங்களைப் பார்த்தார். பிறகு, ''பரசுராமன் சித்தம். சொல்கிறேன் நானறிந்த கதையை'' என்று துவங்கிக் கூறலானார்.

''மகாராஷ்டிர அரியணையில் ஷாஹூ திடமாக உட்கார முடியுமா என்று இருந்த காலம். ராஜாராமின் ராணி தாராபாய் சிறைப்பட்டாலும் அவருடைய சகாவான கனோஜி, கடல் பகுதியை அவள் பெயரால் ஆண்டு வந்த காலம். அந்தக் காலத்தில் கொங்கணியின் தரையில் விழுந்தான் இந்த வாலிபன், பலத்த காயங்களுடன் நிர்க்கதியாக. வலம்புரிச் சங்குகள் பொறுக்கக் கடலுக்குச் சென்ற என் காலடியில் கொங்கணி மாதா இவனைக் கிடத்தினாள். இவனை நானும் பானுதேவியும் கூடாரத்துக்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்தோம். இவன் கொண்டு வந்திருந்த வாளும், சத்ரபதி சிவாஜியின் புலிநக ஆபரணத்திலொன்றும் கடற்கரையிலிருந்து கிடைத்தன. ஆகவே, இவன் சாதாரணமாகக் கொங்கணிக்கு வந்தவனல்ல என்பதை முடிவு செய்தேன். பிறகு, இவன் பானுதேவியிடம் தனது கதையைக் கூறினான். அதை ஒட்டுக் கேட்ட கனோஜி என்னிடம் கூறினார். பிறகு விசாரித்ததில் இவன் மகாராஷ்டிரம் வந்த காரணம் தெரிந்தது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மகாராஷ்டிரம் பிளவுபட்டிருந்த காலத்தில் மீண்டும் ஒரு வாரிசு தோன்றினால் அது மீண்டும் மொகலாயர் வசமோ, ஸித்திகள் வசமோ அல்லது போர்ச்சுக்கீஸியர் வசமோ சிக்கிவிடலாமென்று அஞ்சினேன். ஆகவே, கனோஜியிடம் இவனை ஒப்படைத்து விட்டு, இந்த வாரிசை எப்படியாவது கண்டுபிடித்துவிடுவதென்று முடிவு செய்தேன். ஸாத்ஸித்தியிடம் இவன் குறிப்பிட்டதுபோல் ஒருவன் இருக்கிறானென்பதை எனது

ஒற்றர்களால் அறிந்து அவனை வரவழைத்தேன் பரசுராமபுரத்துக்கு.

''அந்த வாரிசைதான் அஞ்சன்வேல் அழைத்து வந்ததாகவும் அங்கு ஸாத்ஸித்தி தன்னைத் தங்கும்படி கட்டளையிட்டதால் வாரிசைத் தன் மகனென்று சொல்லிச் சில நாட்கள் வைத்திருந்து பிறகு இரண்டு வீரர்களுடன் ராணி தாராபாயிடம் அனுப்பிவிட்டதாகவும் சொன்னான் நிம்கர். பிறகு அவன் ஸாத்ஸித்தியின் மதிப்புக்குப் பாத்திரமாக அங்கேயே தங்கிவிட்டதாகவும் பிறகு கனோஜியின் ஒற்றனாகிவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். பிறகு வாரிசைத் தேட எனது சீடர்களை அனுப்பினேன். அந்தச் சிறுவன், பன்ஹாலாவில் ராணி தாராபாயிடம் சிறையிருப்பதாக அறிந்தேன். ஆகவே ராணி தாராபாய்க்குக் கடிதம் அனுப்பி அந்தச் சிறுவனுக்கு ஏதும் ஆபத்து வரக்கூடாதென்று எச்சரித்தேன். இந்த நிலையில் தமிழன் பிரதாபம் மகாராஷ்டிரத்தில் ஓங்கிக்கொண்டிருந்தது. ராணி தாராபாயும் ஷாஹுவிடம் தோற்று ஸதாரா கொண்டுவரப்பட்டாள். பிறகுதான் நான் ஸதாரா வந்து அப்பொழுது பேஷ்வா பதவிக்கு வராமல் வெறும் கணக்காயராயிருந்த பாலாஜியிடம் விஷயத்தைக் கூறினேன். பாலாஜி ஷாஹுவிடம் ரகசியத்தைக் கூறித் தஞ்சைக்குச் செய்தி அனுப்பி அந்த ரகசிய ராணியை வரவழைத்தார். தனயனுடன் சேர்ந்த அந்த ராணியிடம் மகாராஷ்டிர அரியணைக்குப் போட்டியிடுவதில்லை யென்ற பிரமாணத்தை வாங்கிக்கொண்டார் ஷாஹு. அதுமட்டுமின்றி, அவள் ராணியென்பதை யாருக்கும் சொல்லக்கூடாதென்றும் சாதாரண மகாராஷ்டிர பிரபு வம்ச விதவையாக தனயனுடன் பன்ஹாலாவில் உறைய வேண்டுமென்றும் பவானியின் பெயரால் சத்தியம் வாங்கிக் கொண்டு, தாயையும் மகனையும் பன்ஹாலாவில் இருக்க ஏற்பாடு செய்தார். தாயும் மகனும் இப்பொழுது நலம். தாய் மகனுடன் சேர்ந்துவிட்டதால் இனி இங்கு இதய சந்திரனுக்கு வேலையில்லை.''

பிரும்மேந்திர சுவாமி இந்த நீண்ட கதையைச் சொல்லி ஆசனத்தில் சாய்ந்து, ''பரசுராம்! பகவான்!'' என்று ஆசுவாசப் பெருமூச்சும் விட்டார்.

இதயசந்திரனின் நிலைமை மிக சங்கடத்தில் இருந்தது. பிரும்மேந்திர சுவாமியின் சாட்சியத்தை, கதையை, எதிர்த்து எதுவும் சொல்லத் திராணியில்லாததால் மெல்லக் கேட்டான்: ''அந்தத் தாயை நான் பார்க்கலாமா?'' என்று.

பேஷ்வா பதிலேதும் சொல்லாமல் கையைத் தட்டினார். இரு காவலர் உள்ளே நுழைந்ததும் திரையை அகற்றக் கட்டளையிட்டார். திரை அகல அங்கு பெரும் ஆசனமொன்றில் உட்கார்ந்திருந்த தஞ்சை ராணியைக் கண்ட இதயசந்திரன் பெரும் பிரமிப்புக்குள்ளானான். ஆனால், அவன் பிரமிப்பைவிட அதிகப் பிரமிப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது கனோஜி ஆங்கரேக்கு. ராணியின் ஆசனத்திலிருந்து இரண்டடி தள்ளியிருந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்த மற்றொரு ஸ்திரீயைப் பார்த்த கனோஜியின் பெருவிழிகள் பேரதிர்ச்சியுற்று அவளையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன. எதற்கும் அஞ்சாத கனோஜியின் இதயத்திலும் ஏதோ அச்சம் புகுந்துவிட்டதை நீதி மண்டபத்தில் இருந்த அனைவருமே உணர்ந்தனர். அந்த அச்சத்துடன் அவர் முகத்தில் சினம் நுழைந்துப் பரவுவதும் அனைவருக்கும் தெரிந்தது.

அத்தியாயம் 52

பாலாஜியின் தீர்ப்பு! கனோஜியின் தவிப்பு!

திரைக்குப் பின்னால் தங்கச் சிங்கப் பிடிகள் கொண்ட பெரிய ஆசனமொன்றில் அமர்ந்திருந்த தஞ்சை ரகசிய ராணியைக் கண்டதும் இதயசந்திரன் சித்தம், பிரமிப்பு, மதிப்பு, அனுதாபம் ஆகிய பலவகை உணர்ச்சிகளுக்கு இலக்காகி விட்டதால் அவன், கனோஜிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, அச்சம், சினம் முதலிய எதையும் கவனிக்கச் சக்தியற்றவனானான். ஆகவே, அந்த மண்டபத்திலிருந்த பேஷ்வா, பிரும்மேந்திர சுவாமி ஆகியிருவரைக் கவனியாமலும் மஞ்சு பிடித்திருந்த தன் கையை விடுவித்துக் கொண்டும் தஞ்சைத் தாயினருகே சென்று அவள் திருவடிகளில் பணிந்தான். பிறகு எழுந்து நின்று அவளை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மௌனமாக நோக்கினான்.

தஞ்சை ராணியின் முகத்தில் துன்பமும் இன்பமும் கலந்த உணர்ச்சி பிரதிபலித்தது. வெள்ளை வெளேரென்ற அவள் சரீரத்தை அதிக விலையற்ற ஒரு வெண்பட்டுப் புடவையே மூடி நின்றது. ஒரு விலையுயர்ந்த கோமேதகக் காதணியும் கழுத்தில் ஒரு நவரத்ன மாலையும் தவிர வேறெந்த அணிகலனும் இல்லை அவள் அழகிய அங்கத்தில். விசாலமாயும் வெண்மையாயுமிருந்த அவள் நெற்றியும், வளைந்த கறுத்த புருவங்களும், துன்பத்திலும் பெரிதாகக் கவர்ச்சி சிந்திய கண்களும், ராஜாராம் அவளிடம் காதல் கொண்டதிலோ அவளைக் கைப்பிடித்ததிலோ விசித்திரமேதுமில்லையென்பதை நிரூபித்தன. அழகின் உருவாய், அடக்கத்தின் சின்னமாய்,

துன்பத்தின் எடுத்துக்காட்டாய் அமர்ந்திருந்த தஞ்சை ரகசிய ராணியைக் கண்ட அந்தச் சமயத்தில் இதய சந்திரனின் மனம் பெரிதும் நெகிழ்ந்தது. கண்களில் நீர் திரண்டு விட்டது போலும் தோன்றியது. பேசக்கூட அவனுக்குச் சக்தியில்லை. ஆகவே அவளே பேசினாள். ''வீரனே! உன் கடமையை நீ முடித்துவிட்டாய். இனி உன் ஆணை உன்னைக் கட்டுப்படுத்தாது'' என்று தெள்ளைக் குரலில் கூறினாள்.

''தாயே! கடமையை முடித்தவன் நானல்ல. தங்கள் தனயனைத் தங்களுடன் சேர்த்தவன் நானல்ல. அதைச் செய்தவர் பிரும்மேந்திர சுவாமி'' என்றான் தடுமாறிய குரலில் இதயசந்திரன்.

ராஜாராமின் ரகசிய மனைவி அவனை அன்புடன் நோக்கினாள். ''இதயசந்திரா, அனாதையாகத் தஞ்சையில் இருந்தேன். நானிருப்பதோ, என்னை வதுவை கொண்டதோ யாருக்கும் தெரியக்கூடாதென்பது என் கணவரின் கட்டளை. அந்தக் கட்டளைப்படி நடந்தேன்! ஆகவே, என் தனயனை அவன் உண்மைப் பெயர் கொண்டு அழைக்க முடியாதவளானேன். அவனை வளர்த்தேன் இதயசந்திரா! ஆனால் அவன் காணாமற் போனதும் அவனைத் தேடிச் செல்ல நீதான் முன் வந்தாய். தனித்திருக்கும் உன் தாயை விட்டு இன்னொரு தாயின் மகனுக்காக இல்லாத ஆபத்துக்களுக்கெல்லாம் இலக்கானாய். மகாராஷ்டிரத்துக்கும் எனக்கும் நீ செய்துள்ள சேவை மகத்தானது'' என்றும் கூறினாள் அன்புடன்.

இதயசந்திரன் வதனத்தில் உணர்ச்சி சற்று அதிகமாகப் பிரதிபலித்தது. ''தாயே மகாராஷ்டிரத்துக்குச் சேவை செய்தது உண்மை. ஸார்கேலின் உதவியால் பெரும் போர்களில் ஈடுபட்டேன். அவரும் அவர் மகளும் கற்பித்த பாடங்களால், அளித்திருந்த பயிற்சியால், கிடைத்த சந்தர்ப்பங்களால் பெரும் புகழ் எய்தினேன். அந்தப்

போர்களால், என் செயல்களால், எனக்கும் லாபம்; மகாராஷ்டிரத்துக்கும் லாபம். தங்களுக்கு என்ன லாபம்? தனயன் தரணியாளப் போகிறானா? தாங்கள்தான் ராணியாக வாழப் போகிறீர்களா?'' என்று கேட்டான் உணர்ச்சிமிக்க குரலில்.

தஞ்சை ரகசிய ராணி மிக அமைதியான குரலில் சொன்னாள்: ''மறந்து பேசுகிறாய் தம்பி! தம்பியென்று அழைக்கிறேனே என்று பதட்டப்படாதே. எனக்கொரு உடன் பிறந்தவனிருந்தால் அவன் எனக்காக எதை யெல்லாம் செய்யக் கடமைப்பட்டவனோ அத்தனையும் செய்திருக்கிறாய் நீ. அதைவிட அதிகமாகச் செய்திருக் கிறாய். ஆனால் நீ எனக்கு உடன்பிறந்த தம்பியில்லா விட்டாலும் மனத்துக்கு உற்ற தம்பிதான். கேள் தம்பி! உணர்ச்சியில், நானிருக்கும் நிலை கண்ட வேகத்தில் பலபடி பேசுகிறாய். பழைய விஷயங்களை மறந்து விட்டாய். உனக்கு நான் என்ன சொல்லியனுப்பினேன்? 'என் தனயனைக் கண்டுபிடித்து வா, இல்லையேல் அவனை அழித்துவிடு. இவனும் ஒரு வாரிசு என்ற முறையில் மகாராஷ்டிரம் பிளவுபடக்கூடாது' என்று சொல்லியனுப்பவில்லை உனக்கு? அதுதான் தம்பி, என் லட்சியம். இந்து சாம்ராஜ்யங்கள் ஏற்படுவதை விட அழிவதுதான் வரலாற்றில் அதிகமாயிருக்கிறது. ஆகவே, எனது மாமனார் ஸ்தாபித்த மகாராஷ்டிரம் உடைவதை நான் விரும்பவில்லை. ஆகவே, என் மகனுக்கும் அரசுப் பதவியை விரும்பவில்லை. ஆகவே, சத்ரபதி ஷாஹூ எனக்கு விதித்த நிபந்தனைகளை ஏற்பது சிறிதும் கஷ்ட மில்லை எனக்கு. மனதார ஏற்றேன், மீண்டும் சாதாரணப் பிரஜையாக மறைந்து வாழும் ஆக்ஞையை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றேன், என் மகனுக்கு மணிமுடி கூடாதென்ற உத்தரவை...''

இங்கு தஞ்சை ரகசிய ராணி சற்று நிதானித்தாள். ''இதயசந்திரா! மணிமுடியில் என்ன இருக்கிறது? அரசுப்

பதவியில்தான் என்ன இருக்கிறது? பெரும் பொறுப்பு இருக்கிறது, ஆபத்திருக்கிறது. அலைபோல் அடங்காக் கவலையிருக்கிறது. அதை ஏற்கத் திறமை வேண்டும், நிதானம் வேண்டும். சகிப்புத்தன்மை வேண்டும், கூரிய அறிவுவேண்டும். இத்தனையும் இருக்கிறது சத்ரபதி ஷாஹூவிடம். சத்ரபதி மொகலாயர் அரண்மனையில் வளர்ந்தவர். ஆகவே, இப்பொழுது மொகலாய வல்லரசைச் சமாளிக்கக் கூடியவர் அவர்தான். அவர் மகாராஷ்டிரத்தை ஆள்வதுதான் சரி. எனவே, நான் இந்த முடிவுக்கு வந்துவிட்டேன். இந்த நிலைக்கு நீயும் உன் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள். திரும்பித் தஞ்சைக்குச் செல். இங்கு உன் கடமை முடிந்துவிட்டது'' என்றாள் உறுதியான குரலில்.

தஞ்சை ரகசிய ராணியின் கண்கள் சற்று மென்மை யடைந்தன திடீரென்று. எட்ட நின்றிருந்த மஞ்சுவைக் காட்டி, ''அவளைக் கூப்பிடு'' என்றாள் இதயசந்திர னிடம்! இதயசந்திரன் சைகை காட்ட அருகே வந்த மஞ்சுவை நீண்டநேரம் நோக்கிய ராணி, அவள் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தாள். பிறகு தன் கழுத்தி லிருந்த நவரத்ன மாலையை எடுத்து அவள் கழுத்தில் போட்டாள். ''பெண்ணே! இது பெரும் பரிசல்ல. தஞ்சை யின் இணையற்ற வீரனையே உனக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறேன். இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள். ஒரு தாயின் துயர் துடைக்க உன் கணவன் எத்தனை ஆபத்துக்களை நாடினான் என்பதை இது அடிக்கடி உனக்கு நினைவுறுத்தும்'' என்று கூறி ஆசீர்வதித்தாள்.

இதயசந்திரனுக்கும் ராணிக்கும் நிகழ்ந்த உரையாடலைக் கேட்ட பிரும்மேந்திர சுவாமி உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தார். பாலாஜியின் சாம்பல் நிறக் கண்கள்கூட உணர்ச்சியைக் காட்டின. அவர் முகத்தில் பெரும் பாரம் தலையிலிருந்து இறங்கிவிட்டதற்

கான அறிகுறியிருந்தது. அந்த மண்டபத்திலேயே அப்பொழுது சாந்தி நிலவியிருந்தது.

அந்த சாந்தியை பாலாஜியின் குரல் மெல்ல உடைத்தது. ''தமிழா! இப்படி வா!'' என்று அவனை அருகில் அழைத்த பாலாஜி, ''தமிழா! தஞ்சையின் விமலாதேவி உன் கடமை முடிந்துவிட்டதென்று கூறுவதால் இனி நீ தமிழ்நாடு செல்லலாமல்லவா?'' என்று வினவினார். தஞ்சைத் திருமகளை பாலாஜி ராணியென்று குறிப்பிடவில்லையென்பதையும், முதன் முதலாகப் பெயர் சொல்லியழைக்கிறார் என்பதையும் இதயசந்திரன் புரிந்து கொண்டான். தஞ்சைத் தேவியை பேஷ்வா ராணியென்று ஒப்புக்கொள்வது ராஜீய தர்ம விரோதம் என்பதும் தெரிந்தது அவனுக்கு. ஆகவே பேஷ்வாவுக்குத் தலை தாழ்த்தி, ''ஒரு தாயின் கடமையை முடித்துவிட்டேன் பேஷ்வாஜி. இனி தஞ்சையில் காத்திருக்கும் என் தாயைக் கவனிக்கச் செல்வதுதான் முறை'' என்று கூறினான்.

பேஷ்வாவின் சாம்பல் நிறக் கண்கள் அவனை அன்புடன் நோக்கின. அவர் விடுவிடுவென்று எதையோ மயிலிறகு பேனாவினால் எழுதினார். பிறகு அதைப் படித்தார், அதிகாரமும் கண்ணியமும் நிறைந்த குரலில். ''இதயசந்திரா, உன்மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. தளபதி ஆணைக்குப் படிந்து லோஹ்காட் வராத குற்றம் ஒன்று, கல்யாண் நகரப் பாதுகாப்பைக் கைவிட்டுச் சென்ற குற்றம் இரண்டு. இந்த இரண்டு குற்றங்களுக்கும் தீவிர தண்டனை உண்டு. ஆனால் மகாராஷ்டிரத்துக்கு நீ செய்துள்ள சேவையை முன்னிட்டு, லோஹ்காட்டுக்கு உன்னை வர உத்தரவு அனுப்பிய சமயத்தில் ஸார்கேல் சத்ரபதி ஷாஹுவின் பணியில் இல்லாத காரணத்தாலும் அந்தக் குற்றத்திலிருந்து உனக்கு விடுதலை அளிக்கிறோம். ஆனால் கல்யாண் நகரப் பாதுகாப்பை விட்டு ஓடியது பெரும் குற்றம். அந்தக் குற்றம் செய்யப்பட்ட போது கனோஜி

ஆங்கே சத்ரபதி ஷாஹுவின் கார்யதுரந்தரர். ஆகவே, அந்தக் குற்றம் அவரது உபதளபதியான உன்னைப் பாதிக்காமல் விடாது. அதற்காக உன்னை மகாராஷ்டிரத்திலிருந்து ஓராண்டு காலம் தேசப் பிரஷ்டம் செய்கிறேன். அதற்குப் பின் நீ இங்கு வருவதை சத்ரபதி ஷாஹுவின் அரசாங்கம் அனுமதிக்கும்.'' இந்தத் தீர்ப்பைப் படித்து முடித்து விட்டுப் பின்னாலிருந்த திண்டில் சாய்ந்தார் பேஷ்வா. தீர்ப்பை ஏற்கும் முறையில் தலை வணங்கினான் தமிழக வீரன்.

அதுவரை வாளாவிருந்த பிரும்மேந்திர சுவாமி மட்டும் ஒரு சந்தேகம் கேட்டார்: ''தேசப் பிரஷ்டத்திற்கு ஒரு வருஷம் என்ன கணக்கு?'' என்று.

''அடுத்த ஆண்டில் பெரும் கடற் போர்களும் நிலப் போர்களும் மகாராஷ்டிரத்தில் நடக்கும். நம்முடன் அமைதியை விரும்பிய பம்பாய் கவர்னர் ஏஸ்லாபி மாற்றப்பட்டு இங்கிலாந்து செல்கிறார். யாரோ ஒருவர் பூன் என்பவர் கவர்னராக வருகிறாராம், இங்கு பிரிட்டிஷ் கடற்படை பலத்தை நிலை நிறுத்த. போர்ச்சுக்கீசியரும் ஏதேதோ போர் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகப்படி கப்பல்களை அனுப்பப் போர்ச்சுகலுக்குத் தகவல் போயிருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். பிரிட்டிஷ்காரர்களின் கணக்குப்படி 1715—1716 ஆம் ஆண்டுகள் மகாராஷ்டிரத்தின் கதியை, ஏன், பாரதத்தின் கதியை நிர்ணயிக்கும். ஆகவே, அப்பொழுது கனோஜிக்குத் தகுந்த உபதளபதி தேவையாயிருக்கும்'' என்று கூறிய பாலாஜி, சற்றுப் புன்முறுவல் கொண்டு, ''சுவாமி! அது ஒருபுறமிருக்க, யார் தண்டனையையும் குறைக்கவோ தண்டனையை ரத்து செய்யவோ பேஷ்வாவுக்கு அதிகாரமுண்டு. தேச நலனுக்கு அவசியமானால் எதையும் செய்யத் தயங்குவது அரசியலில் விவேகமாகாது'' என்றும் குறிப்பிட்டார்.

பிரும்மேந்திர சுவாமி புரிந்துகொண்டார், பாலாஜி விசுவநாத் சுய அன்புக்கும், அரசியல் தர்மத்துக்கும் சட்டத்துக்கும் ஒரு முக்கோணப் பாலம் அமைத்துக் கொள்வதை. குற்றம் செய்பவனைத் தண்டிப்பது தர்மம், நீதி. அந்த நீதியைக் கருணையுடன் கலந்து அவர் வழங்கியிருக்கிறார் என்பதால், தாம் எதிர்பார்த்த அளவுக்குப் பாலாஜி உயர்ந்துவிட்டதை எண்ணி, ''பாலாஜி, நீ தீர்க்காயுசா யிருந்து மகாராஷ்டிரத்தை உயர் நிலைக்குக் கொண்டுவரப் பரசுராமன் உனக்கு அருள் புரியட்டும்'' என்று வாழ்த்தினார்.

சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தார் கனோஜி ஆங்கரே. நீண்ட நேரம் தஞ்சை ராணியுடன் வந்த அந்த மாதரசி யைப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியாக அந்த மண்டபத்தை ஊடுருவியது அவர் கேள்வியொன்று. ''நீ அவள்தானே?'' என்ற கேள்வியில் சினமும் உணர்ச்சியும் மேலோங்கி நின்றன.

ஆனால் அந்த மாதரசி, அவர் சினத்தைச் சிறிதும் லட்சியம் செய்தாளில்லை. ''ஆம்'' என்று அலட்சியமாகப் பதில் சொன்னாள் அவள். அவள் விழிகள் கொல்லும் வேல்களென ஆங்கரேயை நோக்கின. ''அவளைக் கொன்றது நீ'' என்று சுடுசொற்களையும் உதிர்த்தன அவள் உதடுகள்.

அத்தியாயம் 53

கடலில் பிறந்த காவியம்

கடலின் பேராபத்துக்களையோ கடலைப் போல் பாரத மண்ணில் விரிந்து கிடந்த மொகலாய சாம்ராஜ்யத்தையோ கரை கடந்து எங்கிருந்தோ வந்த பிரிட்டிஷ் போர்ச்சுகீஸிய நாடுகளின் வர்த்தக ராணுவ தளங்களையோ, எதையுமே கண்டு அஞ்சாதவரும். கடலலை களைப்போல் அலட்சியமாக நகைக்கக் கூடியவருமான கனோஜி ஆங்கரே, தமது சுபாவத்துக்கு முழு விரோத மாய்க் கல்லெனச் சமைந்து நீண்ட நேரம் உட்கார்ந்து விட்டார். அப்படி உட்கார்ந்து விட்டது அவர் மட்டு மல்ல, எந்தப் பேரிடி விழுந்தாலும் இமையைக்கூட அசைக்கும் பழக்கமற்ற பாலாஜி விசுவநாத்தும், கனோஜி யின் கதையில் சிறிதும் சம்பந்தப்படாத தஞ்சை ராணியும், தமிழக மகாவீரன் இதயசந்திரனும், பெண்ணாகப் பிறந்தும் துணிவுள்ள மாலுமியாக வாழ்ந்த மஞ்சுவுங்கூட கனோஜின் நிலையையே எய்தினர். யாரும் எதிர்த்துப் பேச அஞ்சும் கனோஜியை நோக்கி ஒரு சாதாரணப் பெண் சுடுசொற்களை உதிர்த்தது அனைவரையுமே மிதமிஞ்சிய பிரமிப்புக்குள்ளாக்கியதால் அந்த மண்டபத்தில் பூர்ண நிசப்தமே நிலவியது பல விநாடிகள். அந்த நிலையில், அந்த நீதி மண்டபத்திலிருந்த பாத்திரங்களில், எந்தக் குழப்பத்துக்கும் உள்ளாகாமல் உட்கார்ந்திருந்தவர் பிரும்மேந்திர சுவாமி ஒருவர்தான். அவர் மட்டும் அந்தப் ணையும் நோக்கி, கனோஜியையும் நோக்கினார்.

யார் நோக்கையும் கவனிக்கும் நிலையிலில்லை, மகா ஷ்டிரக் கடல் வீரனான கனோஜி ஆங்கரே. அந்த நீதி ூடபத்தில் அவரைப் பார்த்த விழிகள் பல. நினைத்த

நெஞ்சங்கள் பல. குழம்பிய சித்தங்கள் பல. ஆனால் மூவர் குழம்பவில்லை. ஒருவர் கனோஜி ஆங்கரே, இன்னொருவர் அந்த மாதரசி, மூன்றாமவர் பிரும்மேந்திர சுவாமி. மற்றவர்களுக்கும் ஓரளவு புரிந்தது கனோஜியின் ரகசியக் கதையொன்று அவிழ்க்கப்படுகிறதென்று. ஆனால் எது என்ன கதை, ஏது கதை, என்பது மட்டும் அவர்களுக்குப் புரியாத புதிராயிருந்தது. கனோஜியின் மனத்திலே பல புதிர்கள் எழுந்துகொண்டிருந்தன. கடந்த கால நிகழ்ச்சி கனை ஒட்டி மனம் நடந்துகொண்டிருந்தது. மற்றவர் களையும் மௌனத்திலாழ்த்தித் தானும் மௌனமாகி விட்ட கனோஜி ஆங்கரேயை நோக்கி அந்த மாதரசி மீண்டும் சொன்னாள் சில வினாடிகள் கழித்து, ''அவளைக் கொன்றது நீதான். உன் செய்கையால் இதயம் வெடித்து இறந்தாள் அந்த உத்தமி'' என்று. இம்முறை அவள் சொற்கள் கடினத்துடன் உதிர்ந்தன.

அதற்கும் வாய் திறக்கவில்லை மகாராஷ்டிர ஸார்கேல். அவர் சித்தத்திலே எழுந்தது ஜன்ஜீராத் தீவும், அதன் கரைப்புற நகரான தண்டா ராஜபூரும். வடமேற்கி லிருந்த மலைவாயில் வழியாகக் கடலலைகள் ஜன்ஜீராத் தீவுக்குள் பெருவேகத்தில் நுழைவது அவர் கண்ணில் எழுந்தது. அந்த அலைகள் எத்தனை உயரம்! அதோ ஜன்ஜீராவைச் சுற்றியுள்ள கடலகழியில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் அந்தப் பெரிய கப்பல்களின் தளத்தின்மீதே பாய்கின்றனவே அந்தப் பெரிய பேரலைகள்! அப்பப்பா! 'ஹோ' என்ற இரைச்சல் காற்று, ஊழிக் காற்றைப் போலல்லவா வேகத்துடன் அடிக்கிறது! ஜன்ஜீராவின் பிறைச் சந்திரக் கொடி என்ன வேகமாகத் துடிக்கிறது அந்தக் காற்றில்! ஜன்ஜீராவின் கடலகழியும் வடமேற்கு வாயிலுக்கு அப்பாலுள்ள கடல்வெளியும் ஒரேயடியாகப் பிரளயம் போல் கலந்து விட்டனவே!

எங்கும் சப்தம், எங்கும் அலைகளின் எழுச்சி, எங்கும் பிரளய நிலை. அந்தக் கடலில் நீந்தி வருகிறான் ஒரு

வாலிபன். வேறு யாராயிருந்தாலும் கொந்தளித்த அந்தக் கடலில் சூறாவளி எழுப்பிய அலைகளின் பயங்கரத்தில் மூழ்கியிருப்பார்கள், அல்லது மலைப் பாறைகளில் தூக்கி யெறிந்து தாக்கப்பட்டு, மண்டை பிளக்கப்பட்டு இறந்திருப்பார்கள். ஆனால் அந்த வாலிபனின் திண்மைக் கரங்கள் அந்தக் கடற் புரட்சியில் அனாயாசமாக நீந்தி வருகின்றன. ஜன்ஜீரா முகப்பு மலைக்கு வந்ததும் மெல்ல அதன் பாறைகளில் தொற்றி ஏறுகிறான் அந்த வாலிபன். தொற்றி ஏறியதும் ஈரம் சொட்டும் உடையுடனும் விறைக்கும் உடலுடனும் பாறையில் குப்புறப் படுத்து எதிரே தெரிந்த ஜன்ஜீராவைப் பார்க்கிறான். ஜன்ஜீரா வின் காவல் விளக்குகள் பாதி மறைக்கப்பட்டுத் தங்கள் ஒளியை ஜன்ஜீரா கோட்டையைச் சுற்றி மட்டுமே வீசிக் கொண்டிருக்கின்றன. பூர்ண கவசமணிந்த கடல்புறக் காவலர் ஜன்ஜீராவின் கடல்வாயில் வரையிலும் காத்துப் பாராக் கொடுக்கின்றனர். வாலிபன் படுத்துக் கிடந்த பாறையிலிருந்து இருபதடி தள்ளியிருந்த உச்சியிலும் இரு காவலர் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். ஸித்தி களின் இருப்பிடமும் மொகலாயரின் பிரதான கடல் கோட்டையுமான ஜன்ஜீராவின் பலேகில்லா என்ற பிரசித்தி பெற்ற பீரங்கி, கடல் வாயிலை நோக்கிக் கொண்டிருக்கிறது. எங்கும் அந்த நள்ளிரவிலும் காவலர் திரிந்துகொண்டிருக்கிறார்கள். சில படகுகளும் அந்தக் கடலகழியில் ஊர்ந்து தண்டா ராஜபூருக்கும் ஜன்ஜீராத் தீவுக் கோட்டைக்குமாகப் போய் வந்துகொண்டிருக் கின்றன. கரையில்கூடக் காவலர் பலர் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வாலிபன் அத்தனை யும் பார்க்கிறான். பார்த்தும் கலங்காது பாறையிலிருந்து மெல்ல எழுந்து மலையின் இருளடர்ந்த பாகத்தில் நடக்கிறான் பிசாசுபோல. ஒருமுறை நின்று தனது ஆடையைப் பிழிந்துவிட்டு இடைக் கச்சையிலிருக்கும் இரு கைத்துப்பாக்கிகளையும் பார்க்கிறான். ''இல்லை, வெடி மருந்து நனையவில்லை'' என்று சொல்லி, திருப்தியடைந்து

கொள்கிறான். மெல்ல மெல்ல நடந்து மலைவழியில் வந்து தண்டா ராஜபூர் கரையை அடைந்துவிடுகிறான். கரையில் ஒருபுறத்தில் ஒரே ஒரு காவலனிருக்கிறான். அவனை மெல்லப் பூனைபோல அணுகிய வாலிபன் அவன் தலையில் ஓங்கி, கைத்துப்பாக்கியால் அடிக்கிறான் அடி சரியாக விழாததால் ''ஐயோ'' என்று அலறியபடி அந்தக் காவலன் தனது கைத்துப்பாக்கியால் சுட முயல்கிறான். அவன் துப்பாக்கியைவிட வேகமாகச் சுழலுகிறது வாலிபனின் கைத்துப்பாக்கி. காவலன் மடிந்து விழுகிறான். துப்பாக்கிகளின் சூடு மற்றக் காவலரை எச்சரிக்க, வாலிபன் துரத்தப்படுகிறான். கரடு முரடான மலைப் பாதைகளில் தாவித் தாவி ஓடி மலைக் காட்டுக்குள் பிரவேசிக்கிறான் அந்த வாலிபன். இருள் எங்கும் கவிந்திருக்கிறது. ஆனால் வீரர்களை ஏமாற்றிக் கொண்டு வெகு வேகமாக ஓடுகிறான். ஓடிய நிலையில் மலைக் காட்டுக்குள்ளிருந்த வீடுகளிலொன்றில் மறைகிறான். கதவடைக்கிறான். அங்கு இரு பெண்கள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களை வாயைத் திறக்க வேண்டா மென்று சைகை காட்டுகிறான். அவனைத் துரத்திய காவலர்களை நீண்ட நேரம் காணாததால் சுயநிலை யடைந்த வாலிபன் மெல்லத் திரும்பி அந்த இரு பெண் களைப் பார்க்கிறான். அதிலொருத்தியின் அழகு இணையற்றதாயிருக்கிறது. அவளுடைய பெருவிழிகள் அவனுடைய மனத்தைக் கவர்கின்றன. ''நீ யார்?'' என்று மந்திரச் சொற்களை உதிர்கின்றன அவள் செவ்விய உதடுகள்.

''கனோஜி ஆங்கரே!'' என்று வாலிபன் கூறுகிறாள்...

ஆங்கரேயின் நினைப்பு, கதையின் இந்த இடத்திற்கு வந்ததும் அவர் மனம் உணர்ச்சிவசமாகவே இரைந்தே தமது பெயரைச் சொன்னார் ஸார்கேல். அதுவரை வாளாவிருந்த பிரும்மேந்திர சுவாமி அவரது கனவை

உடைக்கக் கேட்டார், ''மீதிக் கதையை நான் சொல்லட்டுமா?'' என்று.

கனோஜியின் பெருவிழிகள் அவரை உற்று நோக்கின. ''நான் ஜன்ஜீராவை வேவு பார்க்கச் சென்ற கதை உங்களுக்குத் தெரியுமா?'' என்ற கேள்வியில் அவரது உணர்ச்சி ஓங்கி நின்றதை பிரும்மேந்திர சுவாமி கவனித்தார். ஆகவே சொன்னார், ''தெரியும்'' என்று.

''அப்படியானால்...?'' என்று துவங்கிய கனோஜி வாசகத்தை முடிக்கு முன்பே பிரும்மேந்திர சுவாமி கூறினார், ''அந்தப் பெண் ராஜாராமின் மந்திரி பிரஹ்லாத் நீராஜியின் தூரத்து உறவினள். உன்னைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாள். உன் கடல் வீரச் செயல்கள் அப்போதுதான் மகாராஷ்டிரத்தில் பரவ முற்பட்ட காலம். ஆகவே நீ கனோஜியென்றதும் உன்னை லித்திகளின் கண்களில் படாமல் மறைத்தாள். நீ அங்கு மறைந்திருந்த நாட்களில்தான் அந்தச் சம்பவம் நடந்து விட்டது'' என்று. மேலும் சொன்னார் சற்று உஷ்ண மான குரலில்: ''கனோஜி! நீ எப்பொழுதும் பெண் பித்துப் பிடித்தவன். உன் வீரத்தில் உன் பயங்கரச் சிரிப்பில் மயங்கிய அந்தப் பெண் உன்னிடம் தன்னை அர்ப்பணித் தாள். எந்தக் கரைக்கருகே தங்கினாலும் அந்தக் கரையில் அகப்படும் பெண்களை ஆண்டு அனுபவிக்கும் உன் குணம் தண்டா ராஜபூர் காட்டிலும் விடவில்லை. அங்கு பத்து நாட்கள் இருந்துவிட்டுத் திரும்பி விட்டாய். மீண்டும் வருவதாக சத்தியம் செய்தாய். திரும்பவில்லை நீ.''

இந்தச் சமயத்தில் அந்த மாதரசி தொடர்ந்தாள். சுவாமியைவிட அதிக உஷ்ணமான குரலில், ''ஒரு மகாராஷ்டிர மாலுமியின் இச்சைக்கு அவன் இச்சகப் பேச்சை நம்பி, தன்னையே கொடுத்தாள் மங்கலதேவி. நாட்கள் சென்றன. அவளை அனுபவித்துச் சென்றவன் வரவில்லை. அவள் கருவுற்றாள். கருவுற்றது தெரிந்து

கலங்கினாள். உயிரை விட்டுவிட முயன்றாள். நான் மன்றாடவே கருவிலுள்ள உயிரை முன்னிட்டுத் தனது உயிரைத் தரித்துக் கொண்டாலும் மனம் உடைந்து பிணம் போல் நடமாடினாள். அந்த மலைக்காட்டில் வீடுகள் தூர தூர இருந்தாலும் இதை எத்தனை நாள் மறைக்க முடியும்? எட்ட இருந்த வீடுகளுக்கும் விஷயம் தெரியவே மங்கலதேவியும் நானும் அங்கிருந்து புறப்பட்டு, பரசுராம புரம் வந்து சுவாமியின் ஆசிரமத்தில் தங்கினோம். தக்க காலத்தில் ஒரு பெண் மகவை ஈன்று மடிந்தாள். மங்கல தேவி மடியுமுன்பு சுவாமியிடம் தனது ரகசியத்தைச் சொன்னாள். அவளைக் கெடுத்தவன் பெயரையும் சொன்னாள். ஆனால் அந்தக் குழந்தை யாருடையது என்று தெரிய கூடாதென்றும் பிரமாணம் வாங்கிக் கொண்டாள் சுவாமியிடம்...''

பிரும்மேந்திர சுவாமி இங்கு இடைமறித்து, ''அந்தப் பெண் குழந்தை மிக அழகாயிருந்தது. ஆசிரமவாசிகள் எல்லாருமே அதை நேசித்தார்கள். அதை அனாதைக் குழந்தையாகவே வளர்த்தோம், அவள் தாயின் விருப்பப் படி. அதன் ஆறாவது வயதில் அதன் தந்தை என் ஆசிரமத்திற்கு வந்தார். குழந்தை அவர் மீசையைப் பிடித்து இழுத்தது. ''நீ எத்தனை பெரியவன்? ராட்சதனா?'' என்று கேட்டது குழந்தை. தந்தை நகைத் தார். தன்னிடம் குழந்தையைக் கொடுக்கும்படி கேட்டார்...'' என்றார் சுவாமி.

அவர் வாசகத்தை முடிக்கவில்லை. கனோஜி ஆசனத்திலிருந்து துள்ளி எழுந்தார். மஞ்சுவை அவர் விழிகள் உற்று உற்றுப் பார்த்தன சில வினாடிகள். பிறகு இரண்டு எட்டில் சென்று மஞ்சுவை அணைத்துக்கொண் டார் இறுக. ''மஞ்சு! மகளே! நீ என் மகளா! என் சொந்த மகளா?'' என்று தழுதழுத்த குரலில் அந்த மண்டபமே அதிரும்படியாகக் கேட்டார். துயரத்தைக் கண்டிராத அவர் கண்களில் நீர் சுரந்து கன்னங்களில் வழிந்து ஓடியது.

அவளை அணைத்த வண்ணம் அப்படியே தரையில் உட்கார வைத்துக்கொண்டு தானும் உட்கார்ந்தார். ''குழந்தாய்! உன் தாயின் மரணத்துக்கு நான் காரண மில்லை. அவளைப் பிரிந்ததும் ஸித்திகளுடன் பெரும் போராட்டங்கள் நிகழ்ந்தன. மூன்று மாதங்கள் கடலிலேயே திரிந்தேன். திரும்ப நான் தண்டா ராஜபூர் போகும் நிலையில் இல்லை. இருப்பினும் எனது ஒற்றர் களை அனுப்பி விசாரித்தேன். அந்த வீடு காலி செய்யப் பட்டதாக அக்கம்பக்கத்தார் தெரிவித்தார்கள். அவள் எங்கு போனாள் என்பது தெரியவில்லை மஞ்சு. ஆனால் அவள் இன்னும் என் மனத்திலிருக்கிறாள். இந்த மனத்தி லிருந்து எத்தனையோ பெண்கள் மறைந்து விட்டார்கள். ஆனால் அவள் மறையவில்லை. என் உயிரின் பக்கத்தில் அவள் இன்னும் அமர்ந்திருக்கிறாள். எங்கள் காதலின் மலர் நீ. தவிர மஞ்சு, இதைக் கேள்! கடலில் சதா செல்லும் மாலுமி எங்காவது பெண்ணை அழைத்துக் கொண்டுபோய் வளர்ப்பானா? உன்னைத் தவிர வேறு யாரையாவது நான் வளர்த்திருக்கிறேனா? என்னையும் அறியாத ரத்தபாசம் உன்னை இழுத்தது மஞ்சு! புரிகிறதா உனக்கு?'' என்று குழந்தைபோல் பேசினார்.

மஞ்சுவின் கண்களில் நீர் வழிந்துகொண்டிருந்தது. என்ன சொல்வதென்று அவளுக்கு விளங்கவில்லை. கடைசி யில் சொன்னாள், ''நான் போர்க் காலத்தில் விளைந்தவள். போர்க் காலத்தில் வளர்ந்தவள். என் அதிர்ஷ்டம் தாயை அறிய முடியவில்லை. உங்கள்மேல் என்ன குற்றம்?'' என்று. உட்கார்ந்த நிலையில் அவள் தலையை மார்பில் அணைத்துக் கொண்டார் கனோஜி சில வினாடிகள்.

தந்தையும் மகளும் யாருமற்றவர்போல் தரையில் உட்கார்ந்திருந்த காட்சி அங்கிருந்த அனைவர் மனத்தை யும் கரைத்தது. பாலாஜியே அந்தக் காட்சிக்கு ஒரு முடிவு கட்டினார். ''தீர்ப்பு முடிந்துவிட்டது'' என்று கூறி

எழுந்தார் தமது ஆசனத்திலிருந்து. அத்துடன் சொன்னார் அதிகார தோரணையில், ''ஸார்கேல்! நான் வந்த வேலை முடிந்துவிட்டது. நாளைக் காலையில் ஸதாரா கிளம்பு கிறேன். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று. அத்துடன் கம்பீரமாக மேடையை விட்டு இறங்கி வெளியே நடந்தார். பிரும்மானந்தர் சைகை செய்ய, தஞ்சை ராணியும் மங்கலதேவியின் தோழியும் இதய சந்திரனுங்கூட மண்டபத்தை விட்டு வெளியேறினர். கடைசியாக பிரும்மேந்திர சுவாமி மட்டும் அவர்களுக்கு ஆசிகளை முணுமுணுத்துவிட்டுக் கிளம்பினார்.

அடுத்த பத்தாவது நாள் பௌர்ணமி வந்தது. அன்று கொலாபா பெரும் கொண்டாட்டத்திலிருந்தது. அன்று மாலையில் குலாபிக்கும் கும்பாபிஷேகமும் பூஜையும் நடந்தது. சன்னிதானத்தில் வணங்கி நின்ற மஞ்சுவுக்கும் இதயசந்திரனுக்கும் ஆசீர்வாத மந்திரங்களைச் சொல்லி விபூதி குங்குமப் பிரசாதங்களும் புஷ்பங்களும் கொடுத்தார் அர்ச்சகர். அவர்களுக்குப் பின்னால் நின்றிருந்த கனோஜி மட்டும் சுரணையற்று நின்றிருந்தார். குலாபி கோயில் பூஜை முடிந்தபிறகு, கனோஜி அவர்களிருவரையும் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். அந்தத் தம்பதிகளை வழியனுப்ப ஆண்களும் பெண்களுமாகப் பெருங்கூட்டம் நின்றிருந்தது. பிரும்மேந்திர சுவாமி, தஞ்சை ராணி, மஞ்சுவின் தாயின் தோழி, கனோஜியின் மகிஷிகள் மூவர் ஆகியோரும் வந்திருந்தனர். இதயசந்திரனும் மஞ்சுவும், கனோஜியையும் அவர் மனைவிமார்களையும் தஞ்சை ராணியையும் மங்கலதேவியின் தோழியையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டனர். அவர்களைத் தாங்கிச் செல்ல ஜலதீபம் தூரத்தில் தயாராக நின்றிருந்தது. அதிலிருந்த புஷ்பாலங்காரங்களும் தீபாலங்காரங்களும் கடலுக்கே தனி அழகை கொடுத்துக் கொண்டிருந்தன. அவர்களை அழைத்துச் செல்ல ஹர்கோவிந்த் தயாராக நின்றிருந்தான் ஒரு பெரும் படகில். அவனை

நோக்கித் தழுதழுத்த குரலில் பேசினார் ஆங்கரே. ''ஹர்கோவிந்த்! இவர்களைக் கார்வார் துறைமுகத்தில் இறக்கிவிடு. அங்கிருந்து இவர்கள் தஞ்சை செல்வார்கள். இவர்கள் கார்வாரில் இறங்கியதும் நீ தான் ஜலதீபத்தின் தளபதி. கப்பலுடன் திரும்பி விஜயதுர்க்கம் வந்துவிடு. அங்கு சந்திப்போம்'' என்று உத்தரவிட்டார்.

ஹர்கோவிந்த் தலைவணங்கினான். படகில் இதய சந்திரனும் மஞ்சுவும் ஏற, படகு நகர்ந்தது. கனோஜி நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. படகு ஜலதீபத்தை அடைந்தது! ஜலதீபம் நங்கூரமெடுத்து நகர்ந்த பின்பும் கடற்கரையிலேயே நின்றிருந்தார். இங்கிருந்து அதோ போவது ஜலதீபமல்ல; மஞ்சுதான். மஞ்சு வேறு ஜலதீபம் வேறு அல்ல... எத்தனையோ காவியங்கள் இந்தக் கடலில் பிறந்திருக்கின்றன. ஆனால் ஜலதீபத்தைப் போன்ற ஒரு காவியம் இதுவரை பிறந்ததில்லை'' என்று கடலை உற்றுப் பார்த்த வண்ணம் வார்த்தைகளை உதிர்த்தார் ஸார்கேல்.

ஜலதீபத்தின் தளபதி அறையில் இதயசந்திரனும் சொன்னான். ''மஞ்சு! நம் கதை எப்படியிருக்கிறது பார்த்தாயா?'' என்று.

மஞ்சு நகைத்தாள். ''பார்த்தேன். கதையின் முடிவு தான் நீங்கள் எதிர்பாராதது'' என்றாள்.

''எப்படி?'' என்று கேட்டான் அவன்.

''ஒருத்தி மகனை அழைத்துப்போக வந்தீர்கள்...''

''உம்.''

''இப்பொழுது உங்கள் மகனை அழைத்துப் போகிறீர்கள்!''

''என் மகனா?'' என்று துவங்கிய இதயசந்திரன், ''ஓ! அதைச் சொல்கிறாயா?'' என்று அவனும் நகைத்து அவளை இறுகப் பிடித்தான்.

மஞ்சு வெட்கத்துடன் சிரித்தாள். ''நல்ல கதை'' என்றாள் அந்தச் சிரிப்புக்கிடையே.

சிரிப்பை உணர்ச்சிகள் ஆக்ரமித்து இன்ப அலைகள் உருண்டெழுந்தபோது, ''வாழ்வே ஒரு கதை'' என்று அவள் இதழ்கள் முணுமுணுத்தன.

(முற்றும்)